LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, 23rd January 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : I will take up the questions relating to the Hon. Chief Minister first.

பாரதப் பிரதமரின் காந்தி கிராம விஜயம்

*72 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா?

1963-ல் பாரதப் பிரதமர் நேரு அவர்கள் காந்தி கிராமத்திற்கு விஜயம் செய்ததை ஒட்டி, எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? என்னென்ன காரணங்களுக்காக?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Eighty-eight members of the Praja Socialist Party who proposed to stage demonstration before the Prime Minister during his visit to Gandhigram on 1st December 1963, were arrested under section 151, Cr.P.C., as there was information that they would defy the prohibitory order in force in the area, and this might have led to counter-demonstrations by other parties, and possible breach of the peace.

திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் : தலைவர் அவர்களே, கருப்பு கொடி காட்ட வேண்டுமென்று ஆயத்தமாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் கைது செய்வதாக உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த எந்த சம்பவங்களில் யார் யார் குற்றங்கள் செய்கிறார்களோ அதற்கேற்றவாறு போலீசார் நடவடிக்கை உடனுக்குடன் எடுக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், நேரு அவர்களின் வருகையை ஒட்டி ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களை முன்கூட்டியே கைது செய்து வைக்க வேண்டும் என்பது சர்க்காரின் உத்தேசமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்சியைப் பற்றிக் கவலை இல்லை. ஒரு குறிப்பிட்ட கட்சியாக இருக்கிறார்கள் என்பதற்காக கைது செய்யவில்லை. பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் நடப்பவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

STATE LEGISLATURE 19 MAY 1964

[23rd January 1964

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, the opening of the Radhakrishnan Library at Tiruttani has been postponed on account of the illness of Pandit Nehru. May I know whether he has fully recovered from his illness and when he will declare open the library?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Prime Minister's further programme has not been fixed.

திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் : நேரு விஜயத்தின் காரணமாக பிரஜா சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களை எல்லாம் கைது செய்வது என்பது தீர்மானமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் எவ்வளவு பேர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இன்றைக்கு பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அம்பலத்தில் இருக்கிறது.

Elementary school at Pudupatti

* 74 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether it is a fact that the children of an elementary school in Pudupatti in Madurai district were affected by food poisoning in October 1963; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement * is placed on the table of the House.

Ombudsman

* 79 Q.—SRI S. MADHAVAN :
SRI RAMA ARANGANNAL : } Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to set up an organisation on the lines of the 'Ombudsman' in Scandinavian countries to check administrative excesses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

Separatist ideas in text-books.

* 80 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether any communication has been received from the Union Government regarding publication of lessons or passages preaching separatist tendencies and if so, the action taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes. The rules relating to the Text Book Committee have been suitably amended to exclude books which are likely to promote separatist tendencies or over-emphasise provincialism. The Government have also constituted a screening Committee which will weed out such books.

* Printed as **Appendix I on pages 109–110.**

23rd January 1964]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் அப்படிக் குறிப்பிட்டு நம் மாநில சர்க்காருக்கு எழுதினார்களா ? எந்த புத்தகத்தில், எந்த பாகத்தில் அல்லது பகுதியில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விவரங்கள் சொல்வதற்கில்லை. என்னிடம் இல்லை. ஏதோ ஒரு நூல் கவனத்திற்கு வந்தது ; 'நமது குறிக்கோள்' என்பது புத்தகத்தின் பெயர். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதிலே மத்திய சர்க்கார் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த அரசாங்கமே தானாகவே நடவடிக்கை எடுக்கிறது. எந்த புத்தகமாவது ஆட்சேபகரமாக கருதப்பட்டால் அதை இந்த அரசாங்கமே கவனித்து வருகிறது. யாரோ பத்திரிகைக்காரர் எடுத்துக் காட்டி கண்ணைத் திறந்து விட்டார்கள் என்பதில்லை. அப்படி சொல்வது தவறு. எவ்வளவு கவனமாக இருந்தாலும் யாருக்கும் தவறுதல் ஏற்படும். இப்பொழுது அம்மாதிரிப் பரிசீலனை இந்த அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது. அதோடுகூட இப்பொழுது ஸ்க்ரினிங் கமிட்டியும் போட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே தமிழ் நாடு தமிழ் நாகரிகம், தமிழ் வாணிபம், தமிழ் இசை என்று கூறிக்கொள்ளும் ஒரு இனத்தின் பெருமையைக்கூட அடக்க வேண்டும். அதற்கும் தடை விதிக்க வேண்டும் என்பது கருத்தா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை. எதையும் 'ஓவர் எம்பஸிஸ்' பண்ணுவது கூடாது. அவ்வளவுதான்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, தமிழ் இலக்கியத்திலே, இமய வரம்பன், கரிகால் சோழன், சேரன் செங்குட்டுவன் இவர்கள் வட நாட்டின் பேரில் படை எடுத்துச் சென்றதும், செங்குட்டுவன் வடநாட்டு மன்னன் கனக விசயன் தலையில் வைத்து கல் ஏற்றி வந்தான் என்பதும் வரலாறு; இவை வடநாட்டினருக்கு பெருமையாக இருக்கவில்லை என்பதற்காக இந்த வரலாறுகள் தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய பழைய பெருமையையே பேசிக்கொண்டு இருந்தால் மட்டும் போதாது. வரலாறுகளில் தவிர்க்க வேண்டும் என்பவற்றை தவிர்க்கத்தான் வேண்டும். வரலாறுகளை எழுதலாம், ஆனால் அவை பிரிவினையை வளர்க்கும் வகையில் இருந்தால் அனுமதிக்கப்படமாட்டாது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மாநில உரிமையை வலியுறுத்தும் கொள்கைகள் புத்தகத்திலிருந்து எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார். சில விஷயங்களுக்கு மாநிலங்களுக்கு தனி உரிமை வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். இரண்டும் ஒன்றிற்கொன்று முரணாக இருக்காதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாநில உரிமை ஒன்று; மாநில உணர்ச்சி ஒன்று. உணர்ச்சி இருக்கலாம் ஓரளவுக்கு. ஆனால், அகில இந்திய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக அமைவதானால், அப்பொழுது அது தடை செய்யப்படவேண்டும்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : தலைவர் அவர்களே, சில சந்தர்ப்பங்களில் சரித்திரத்தை மறைக்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்கள் ; அப்படி சரித்திரத்தை மறைப்பது சரியா, மறைக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சரித்திரத்தை மறைக்க வேண்டும் என்று ஒருக்காலும் நான் சொல்லவில்லை. ஆனால் சந்தர்ப்பங்களை விமரிசனம் செய்யும்போது, சரித்திரம் எப்படி இருந்தாலும் பிரிவினை உணர்ச்சியை மாணவர்கள் மனதில் ஊட்டும் பகுதிகளை தவிர்க்க வேண்டுமானால், தவிர்க்க வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : வரலாறுகளிலே சில தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் கூறிய வரலாறுகளை எடுத்துக்கூறும் நூல்களெல்லாம் தமிழ் இலக்கியங்கள். அந்த இலக்கியங்களைப் படிக்கும் நோக்கில் அந்த நிகழ்ச்சிகளைக் கூறத் தான் வேண்டியிருக்கும். அந்த வரலாறுகளை மறுக்க வேண்டும், கைவிட வேண்டும் என்று சொன்னால், இலக்கியங்களைக் கைவிட வேண்டும் என்று தமிழக அரசு கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இலக்கியம் வேறு ; சரித்திரம் வேறு. மாணவர்களுக்கு எந்தக் கருத்தைப் புகுத்துவது என்பது தான் இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம். ஏதோ வட நாட்டானை அடிமைப்படுத்தி ஒரு கல்லை எடுத்துத் தலையிலே வைத்துக் கொண்டுவந்து காட்டினான் என்பதை இப்பொழுது வற்புறுத்துவது சரியல்ல. அதே மாதிரி, ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வது சம்பந்தமாகச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் இடையே சண்டை மூண்டது என்றும் சரித்திர வரலாறு இருக்கலாம். அப்படிப்பட்டவைகளையெல்லாம் இலக்கியம் படித்த கனம் அங்கத்தினர் போன்றவர்கள் உணர்ந்திருக்கலாம். அதையெல்லாம் மாணவர்களுக்கு வற்புறுத்தக்கூடாது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 'திராவிடம்', 'திராவிட நாடு' என்ற சொற்களைப் பள்ளிப் புத்தகங்களில் சேர்க்கக் கூடாது என்று அரசாங்கம் தடையிட எண்ணம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படியொன்றும் அரசாங்கம் உத்தரவிடவில்லை. நான் முன்பே கூறியது போல, நம்முடைய நாட்டுக்கு மொத்தத்திலே திராவிடம் என்ற பெயர் இருக்கிறது. 'திராவிடம்' என்பது ஒன்று. 'திராவிட நாடு' என்பது வேறு. திராவிடநாடு என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினருடைய திட்டம். அதை இன்னும் கைவிடவில்லை என்று அந்தக் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். அதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, 'திராவிடம்' என்பதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பொருள் கொள்ளுகிறார் என்று அறியலாமா ?

23rd January 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் என்ன என்ன பொருள் வேண்டுமோ அவ்வாறு வைத்துக்கொள்ளலாம். இதற்கு விளக்கம் வேண்டியதில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, 'திராவிடநாடு வேறு' "திராவிடம் வேறு" என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திராவிடம் என்பதற்கு அவரவர் இஷ்டப்படி பொருள் கொள்ளட்டும் என்றார்கள். அமைச்சர் அவர்கள் திராவிடம் என்பதற்கு என்ன பொருள் கொள்ளுகிறார் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திராவிடநாடு என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியம்—பிரிவினை மனப்பான்மையை வற்புறுத்துவது. ஆகையால், 'திராவிடநாடு' என்ற வார்த்தையை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். 'திராவிடம்' என்கிற சொல் நம் தேசீய கீதத்திலே வந்திருக்கிறது. அது தென் பகுதியைப் பொதுவாகக் குறிக்கிறது. 'சிந்து' என்றும் அந்தக் கீதத்தில் கவிஞர் பாடியிருக்கிறார். இப்பொழுது அந்த 'சிந்து' இல்லை. இருந்தாலும் அதை அப்படியே வைத்துக்கொள்ளுகிறோம் என்று சொன்னேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : திராவிடம் என்ற வார்த்தையைச் சில பெரியவர்கள் ஆராய்ந்து, 'திரு இடம்' என்று இருந்தது, 'திராவிடம்' என்று மாறிவிட்டதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அதெல்லாம் படித்திருக்கிறார்கள். நான் அதைப் படிக்கவில்லை. ஆனால், 'திராவிடம்' என்றால் பொதுவாக 'தமிழ்' என்று எடுத்துக் கொள்ளுகிறார்கள். தெலுங்கைச் சேர்த்துக்கொண்டால் அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

கனம் சபாநாயகர் : 'விடம்' என்ற சொல்லுக்கு 'விஷம்' என்ற பொருளும் உண்டு. இப்படியெல்லாம் ஆராய்ச்சி செய்தால் 'திருவிஷம்' என்றெல்லாம் வந்துவிடுமே !

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாங்கள் கூறியபடி, 'விடம்' என்பதற்கு 'விஷம்' என்று பொருள்கொண்டு, 'தீராவிடம்' என்று கூட வைத்துக்கொள்ளலாம்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, 'நாகநாடு' என்று ஒரு மாநிலம் நம்முடைய துணைக் கண்டத்தில் இருக்கிறது. 'நாகநாடு' என்கிறபோது பிரிவினையைக் குறிப்பிடாமலிருக்கும்போது, 'திராவிடநாடு' என்பது மட்டும் எப்படிப் பிரிவினையைக் குறிப்பிடுவதாக ஆகும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 'தமிழ்நாடு' என்று சொல்வது போல, 'நாகாலாண்டு' என்று இருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்திருக்கிறோம். தமிழ்நாடு என்று சொல்வதுபோல்தான் நாகாலாண்டு அல்லது நாகநாடு என்று இருக்கிறது.

[23rd January 1964

காவிரிப் பாலம்

* 71 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாகக் கட்டித் திறக்கப் பட்ட பாலத்தின் எஸ்டிமேட் எவ்வளவு ?

(இ) மேற்படி பாலத்தின் அடித்தளத்தை கான்ட்ராக்டரும் மேல் தளத்தை டிபார்ட்மெண்டும் கட்டியதற்கு காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The cost of bridge work including approach roads and railway overbridges is estimated as Rs. 86 lakhs.

(b) The whole work (both substructure and superstructure) was entrusted to the Contractor originally. However, after completion of substructure work, as the contractor suspended the superstructure work, and did not resume it, his contract was terminated and the work was executed departmentally.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் காண்டிராக்ட் வேலை நடந்துகொண்டிருக்கும்போது பல ஆயிரக்கணக்கான சிமெண்டு மூட்டைகளைக் கள்ள மார்க்கெட்டில் அந்தக் கண்டிராக்டர் விற்றார் என்பதற்காக, இந்த வேலை அவரிடமிருந்து மாற்றப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபோன்ற புகார் ஒன்றும் என்னிடம் இல்லை. ஆனால், அந்தக் காண்டிராக்டர் காலா காலத்தில் பெரிய பாலத்தைக் கட்ட முடியாது என்ற சூழ்நிலையை அதிகாரிகள் பார்த்ததற்குப் பிறகு அந்தக் காண்டிராக்டை ரத்து செய்துவிட்டு, விரைவாகப் பூர்த்தி செய்திருப்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பெரும்பாலான காண்டிராக்டுகளில் அடித்தளத்தைக் காண்டிராக்டர்கள் செய்கிறார்கள். மேல் தளத்தை டிபார்ட்மென்ட் செய்கிறது. இப்படி மாறுதல் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபோன்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. அ. துரையரசன் : தலைவர் அவர்களே, அறந்தாங்கிக்குப் பக்கத்தில் காரைக்குடி ரோடில் புதிதாகக் கட்டப்படுகிற பாலத்தில் 135 மூட்டை சிமின்ட்டை கடந்த சித்திரை 1-ந் தேதியன்று நானே முன்நின்று பிடித்துத் தந்தேன். அது சம்பந்தமாக அரசு இது வரைக்கும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னுடைய கவனத்திற்கு கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினால் பார்த்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கலாம்.

23rd January 1964]

புலவர் கா. கோவிந்தன் : வேலைகளுக்காக காண்டிராக்ட் விடுகிற நேரத்தில் அவர்களுக்கு சிமெண்ட் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது. குறிப்பிட்ட வேலைக்குத் தேவையான சிமெண்ட்டுக்கு மேற்பட்டு, இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக எஸ்டிமேட் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட கண்டிராக்டர்கள் கள்ளமார்க்கெட்டில் சிமெண்ட் விற்கத் துணிகிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து, கண்டிராக்டர்கள் கொடுக்கும் எஸ்டிமேட்டைவிடக் குறைத்து சிமென்டு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது காவிரியாற்றுக்குக் கட்டப் பட்ட பாலம் சம்பந்தப்பட்ட கேள்வி. ஆனால், கனம் அங்கத்தினர் அவருடைய கருத்தை இந்த சட்டசபையில் சொல்லத் தொடங்கியிருக்கிறார். இங்கு சொல்வதோடு நில்லாமல் இந்த நல்ல கருத்தை எழுதியனுப்பும் பட்சத்தில் அதை நான் பரிசீலனை செய்யத் தயாராயிருக்கிறேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, காண்டிராக்டை ரத்து செய்த காரணத்தால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டதா? எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது? அந்தக் காண்டிராக்டர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எவ்வளவு நஷ்டம் அல்லது எவ்வளவு லாபம் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், நான் தெரிந்துகொண்ட வரையில், அந்தக் காண்டிராக்டை ரத்து செய்த காரணத்தால் துரிதமாக அந்தப் பால வேலை பூர்த்தியானது. நஷ்டம் அதிகமாக இருக்காது என்று நினைக்கிறேன். அப்படியிருந்தாலும் காண்டிராக்டரிடமிருந்து அரசாங்கம் வாங்க முயற்சி எடுக்கும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திலுள்ள சட்டதிட்டப்படி, அப்படி ஒரு காண்டிராக்டை இடையிலே ரத்து செய்தால் அந்த காண்டிராக்டர் மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதெல்லாம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது விவரம் என்னிடம் இல்லாததால் உடனே பதில் சொல்வதற்கில்லை.

சிறிய சர்க்கரை ஆலைகள்

* 73 கேள்வி.—திரு. ம. கமலநாதன்
திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறிய அளவில் சர்க்கரை உற்பத்தி செய்ய தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் யாருக்கேனும் வழங்கப்பட்டிருக்கிறதா ?

21st January 1964] *[திரு. செ. மாதவன்]*

பிரச்னை குழு ஒரு அறிக்கையை மன்றத்தில் சமர்ப்பித்தது, அதில் சட்டமன்ற உறுப்பினர்களை கெட்ட எண்ணத்தோடு (மாலஃபைடி இன்டென்ஷன்) போலீசார் கைது செய்தால் அது உரிமைப் பிரச்னையாக வரும் என்று ஒரு குறிப்பை (அப்ஸர்வேஷனை) அந்தக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு பார்க்கும்போது, நேற்று நடைபெற்றிருக்கின்ற நிகழ்ச்சியை தாங்கள் உன்னிப்பாக கவனித்தால், போலீசார் வேண்டுமென்றே திட்டமிட்டு, கெட்ட எண்ணத்துடன், குறிப்பிட்ட சட்டமன்ற அங்கத்தினரை அவமதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சட்டமன்றத்திற்கு புறப்படுகின்ற நேரத்தில் போலீசார் கைது செய்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். காரணம் அவர்கள் மீது சாட்டப்பட்டிருக்கின்ற குற்றம் காஞ்சிபுரத்தில், 19-ம் தேதி (19—1—1964) மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் இருந்ததற்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி காஞ்சிபுரத்தில் நடைபெற்ற போது போலீசாரும் இருந்திருக்கிறார்கள். அங்கே ஒன்றும் செய்யவில்லை. பின்னால் அந்த உறுப்பினரை இங்கே வருவதற்கு அனுமதித்திருக்கிறார்கள், சட்டமன்ற நிகழ்ச்சியில் பங்கு கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்களை வருவதற்கு அனுமதித்துவிட்டு, மற்ற அங்கத்தினர்கள் தங்கக் கூடிய விடுதிக்குள்ளும் அனுமதித்துவிட்டு, இங்கே புறப்படும் போது, இந்த மன்றம் கூடுவதற்குச் சில நிமிட நேரத்திற்கு முன்னால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக இது உரிமைப் பிரச்னையாக வரும் என்று நான் கருதுகிறேன். அதோடு திட்டமிட்டு கெட்ட எண்ணத்தோடு ('மாலஃபைடி இன்டென்ஷன்') கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இதை உரிமைப் பிரச்னையாக கருதி உரிமைப் பிரச்னை குழுவுக்கு அனுப்பி, இதைப்பற்றி நன்றாக பரிசிலனை செய்து சட்டமன்ற அங்கத்தினர்கள் எப்போது கைது செய்யப்படலாம், எதற்காக கைது செய்யப்படலாம், எந்த இடத்தில் கைது செய்யப்படலாம் என்பனவற்றையெல்லாம் திட்டவட்டமாக, புதிய பாரம்பரியமாக ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும். அதற்காக நான் கொடுத்திருக்கின்ற பிரச்னையை உரிமைப் பிரச்னை குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** *கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னையைப் பொறுத்த அளவில், சிவில் வழக்கு, கிரிமினல் வழக்கு இவைகளில் இருக்கின்ற வித்தியாசத்தைக் கவனிக்க வேண்டும். இப்போது பிரச்னையில் இருப்பது கிரிமினல் வழக்கைப் பற்றியது. கிரிமினல் வழக்கு என்றால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லக்கூடிய பிரச்னை ஒன்றும் இதில் இல்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டில்கூட, சபையில் உட்கார்ந்திருக்கின்ற நேரத்தில் தலைவரின் அனுமதியின் பேரில் அரஸ்ட் செய்திருக்கிறார்கள். எந்த இடத்தில் அரஸ்ட் செய்தார்கள் என்கின்ற பிரச்னையைப் பொறுத்தவரையில், கிரிமினல் வழக்காக இருந்தால், எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் அரஸ்ட் செய்யலாம். எப்போது அரஸ்ட் செய்யலாம் என்கின்ற பிரச்னையைப் பொறுத்த அளவில், அது போலீசார் கவனிக்க வேண்டிய விஷயம். வழக்கு எற்*

பட்டால், அதைப்பற்றி இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள் யார் மீது குற்றத்தைக் கண்டுபிடிக்கிறார்களோ, அவர்கள்மீது போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள். நடவடிக்கை எடுந்துக் கொள்ள முற்படும் போது ஆள் கிடைக்காமல் போய் விடலாம். எங்கே கிடைக்கிறார்களோ அப்போது அரஸ்ட் செய்யலாம். அவ்வளவுதான் நடை பெற்றது. ஆகவே இதில் உரிமைப் பிரச்னை ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-30 a.m. MR. SPEAKER : The hon. Member has stated that two hon. Members of the Assembly have been arrested, that they were arrested when they were proceeding to attend the Assembly, that they were arrested within the precincts of the Legislators' Hostel and thereby prevented from doing their duty and that the fact of arrest has not been communicated to this House.

The matter was raised yesterday and I had postponed the matter. The intimation of arrest was received yesterday and the fact of arrest has been communicated to the House yesterday itself. According to Rule 245 of the Madras Legislative Assembly Rules, the fact of arrest has to be intimated immediately to the Speaker. The arrest was effected at 1-45 p.m. yesterday and the intimation of arrest was received at 3-40 p.m. the same day. The rule states that the intimation should be immediate which means within a reasonable time. Intimation at 3-40 p.m. of the arrest at 1-45 p.m. seems to be reasonable.

The hon. Members have been arrested under Section 120 (B), Indian Penal Code read with Section 188, Indian Penal Code and Section 30 (2) of the Police Act and Section 5 of the Prevention of Insults to the National Honour Act and Sections 109 and 147, Indian Penal Code. The arrest, therefore, is for the criminal offence. Article 195 of the Constitution defines certain privileges, etc. of Members. The Legislature is empowered to enact other privileges and till they are enacted, they should be the same as those of the House of Commons and its Members, etc., on the date of the commencement of the Constitution. The Members of the House of Commons enjoy freedom from arrest. But this freedom is restricted to Civil Process only and not to Criminal or other cases. The arrest of the two Members is not for a civil cause, it is for a criminal offence. The privilege of freedom from arrest does not, therefore, apply to it. The arrest of Members is not, therefore, a breach of privilege.

It has been stated that the Members were arrested when they were proceeding to the Assembly. The privilege of freedom from arrest applies to civil cases not only during meeting days but 40 days before the session and 40 days after the session. Since the arrest is not under civil process, the immunity of 40 days does not apply in this case. In criminal cases, whether the Member was on his way to Assembly or not, it is immaterial.

The Member has stated that they were arrested within the precincts of the Hostel. A Member, whether under civil process or

21st January 1964] [Mr. Speaker.]

for a criminal charge or under Preventive Detention, cannot be arrested within the precincts of the House, without the previous permission of the Speaker. The precincts of the House have been defined as the Secretariat Building, the Committee Room in the Old Legislators Hostel and Library in the Cellars under the Rajaji Hall and the passages and steps leading to them, and one hour before the House or the Committee meets and one hour after the House or the Committee adjourns. Hostel has not been included within the definition of precincts of the House. Arrest in the Hostel does not amount to a breach of privilege. It must also be stated that in England the arrest of Lord Cochrane while in the Chamber of the House of Commons on a criminal charge on a day when the House was to meet has not been held to be a breach of privilege. Further sanctity is attached to the building only when the House meets and not when it does not meet. Otherwise, it would be confusing what the House is, and where the House is. May observes that the House will not allow even the sanctuary of its walls to protect a Member from the process of criminal law.

Another point raised by theMember is that they were prevented from doing their duties. The privilege of freedom from arrest is not allowed to interfere with the course of criminal justice. The privilege of Parliament is granted in regard to the service of the Commonwealth and is not to be used to the danger of the Commonwealth. There is the fundamental principle that all citizens, including Members of the Assembly, have to be treated equally in the eyes of law. In the present case, the Members cannot claim a higher right than ordinary citizens when they commit a criminal offence. Members of the Legislature have certain rights in connection with the duties they have to perform inside the House. The other citizens do not have such rights. But, as far as the laws of the land are concerned, Members have no higher rights than other citizens. A citizen who violates the law of the land has to answer for it. In the same way, a Member of the Legislature has to respect the law of the land, and if he violates, then, like any other citizen he has to take the consequences. Members cannot violate the law and claim privilege. Privilege of Legislature does not help the Members who offend the laws of the land. Further, the acts said to have been committed by the Members have no relation to the work they do in the House. As the Members have been arrested under penal law, the privilege of the Legislature cannot help them.

There is, therefore, no privilege in cases other than civil but the House is entitled to receive intimation of the arrest. Failure to intimate will constitute a breach of privilege. In this case, the fact of the arrest has been intimated and, therefore, there is no *prima facie* case.

V—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

Mr. SPEAKER : May I know from the hon. the Leader of the Opposition how long he will take for his speech?

Sri V. R. NEDUNCHEZHIYAN : Forty-five minutes to one hour.

[21st January 1964

MR. SPEAKER : If it is one hour, then we may have to sit throughout tomorrow. The hon. the Leader of the Opposition may restrict it to 45 minutes, and he may start at 12-45 p.m. and finish by 1-30 p.m. The Hon. the Leader of the House will reply to the debate tomorrow morning.

May I know how long will the hon. Member, Sri Saw. Ganesan take for his speech?

SRI SAW. GANESAN : Thirty to forty minutes.

MR. SPEAKER : The hon. Member, Sri Saw. Ganesan will start at 12 noon. Then we have only two hours and twenty minutes for other hon. Members to speak. We have got about 18 hon. Members to speak. So, I will have to reduce the time limit for each hon. Member to five or seven minutes.

Now, the hon. Member, Sri Mookiah Thevar will speak.

திரு. கே. மூக்கையா தேவர் : தலைவர் அவர்களே, நமது கவர்னர் பெருமான் அவர்கள் நம்மிடையே இருந்து, நம்மை விட்டுப் பிரிகிற முறையில் நன்றியோடு தமிழ்நாட்டு மக்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்று பெருமையோடு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். கவர்னர் அவர்களைப் பொறுத்த வரையில் மிகவும் நல்லவர், இருந்த இடம் தெரியாமல் அவர்கள் வரையில் நல்ல முறையில் அன்போடும், பாசத்தோடும் இருந்துவிட்டுச் சென்றிருக்கிறார் . . .

THE HON. SRI M. BHAKTAVASALAM : I would like to submit that the Governor's retirement has not been announced at all.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : I am sorry. அப்படித் தொடர்ந்து இருப்பாரானால் வரவேற்கத் தக்கது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அவர்களுடைய உரையில் நமது மாகாணத்தில் முதல்வராக இருந்து இன்று நமது நாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஆகியிருக்கிற கனம் காமராஜ் அவர்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அது ஒரு பெரிய நிகழ்ச்சி, பதவியை விட்டு கட்சிக்குச் சென்றிருப்பது ஒரு பெரிய மாறுதல், அது ஒரு முக்கிய நிகழ்ச்சி என்று குறிப்பிட்டிருக்கிறார். உண்மையில் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்த நாட்டின் அதுவும் ஒரு தேசிய சபையின் தலைவராக அவர் வந்திருப்பதைக் குறித்து பெருமைப் படக்கூடிய ஒரு நிகழ்ச்சிதான்.

ஆனால், அதுதான் உண்மையா என்றால், இல்லை. கட்சியிலே தியாகத்திற்குச் சிறந்தவர். நாட்டிற்கு பாடுபடவேண்டுமென்பது தான் சிறந்ததாக இருக்கலாம். அவர் பாடுபட்டிருப்பதெல்லாம் அதிகமாக கட்சிக்குத்தான். அவர் அதிகமாக கட்சிக்குத்தான் பாடுபட்டிருக்கிறார்களே தவிர, நாட்டிற்கு என்று நாம் சொல்லிக் கொள்ளுகிற அளவிற்கு, அதிக பெருமைப்படுகிற அளவிற்கு அவர்

21st January 1964] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

சேவைகள் செய்யவில்லை. இனிதான் செய்வதற்கு ஒரு வாய்ப்பாக என்ன பதவி வருமோ, அதையும், பொருத்து பார்க்கவேண்டியிருக்கிறது. அவர்கள் வடக்கே சென்று நமக்கு செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது.

இப்பொழுது விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது, அதைக் கட்டுப்படுத்த வழியில்லை என்று திரும்பத் திரும்ப இது ஒரு 'ஸீஸனல் ஸ்லோகன்' மாதிரி ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் பேசப்படுகிற பேச்சாக இருக்கிறதே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. அதுவும், அறுவடை காலத்தில் இந்த விலையைப்பற்றி, கட்டுப்படுத்துவதுபற்றி பேசுகிற காரணத்தினால், விவசாயிகளுடைய முதுகு ஒடிபடுகிறது, விலைகள் வீழ்ச்சி ஏற்படுகிறது. அதற்குப் பின்னால் ஒரு வருஷத்திற்கு இந்தப் பேச்சே வருவதில்லை. விலை உயர்வுக்குக் காரணம், நமது திட்டங்கள், திட்டங்களுக்காக வாங்கப்படுகிற கடன்கள், கடன்கள் போதாது என்று அச்சடிக்கப்படுகின்ற நோட்டுகளின் பெருக்கத்தினால்தான் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. எந்தத் துறையில் யாராயிருந்தாலும், அவர் மில்லராயிருந்தாலும் சரி, டீலராக இருந்தாலும் சரி, விவசாயியாக இருந்தாலும் சரி, உத்தியோகம் பார்ப்பவர்களாக இருந்தாலும் சரி, சராசரி ஒவ்வொருவருடைய வாழ்க்கைத்தரமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. யார்மீதும் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை, விதை நெல் சம்பந்தமாகவோ, அரிசி சம்பந்தமாகவோ மில்லர்கள், டீலர்கள் இடையிலே தரகர்கள் இருப்பதினால்தான் விலைவாசி உயர்கிறது என்று அவர்கள் தலையிலே பழியை சுமத்துவதில் பிரயோசனம் இல்லை. வியாபாரி என்று வைத்துக்கொண்டு, நஷ்டத்திற்கா விற்போம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்த விலைவாசி உயர்வுக்குக் காரணம் விலையை நிர்ணயிப்பவர்கள் மத்திய சர்க்காரைச் சேர்ந்தவர்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் முதல் முறையாக பார்க்கும்பொழுது நான் உண்மையிலேயே ஆசைப்பட்டேன். விவசாயத்திலே நம்பிக்கை உடையவர் அவர், சுத்தத் தமிழர் என்று சொன்னால் அவரைத்தான் சொல்லவேண்டும், அந்த அளவுக்கு எடுத்த எடுப்பில் அவர் பேசியபொழுது அரிசி விலையை உயர்த்த வேண்டும் என்று மத்திய சர்க்காரை கேட்கப் போவதாகச் சொன்னார் என்று பத்திரிகையில் பார்த்தேன். மறுநாள் பார்த்தால் திடீரென்று மாறிவிட்டார். என்ன காரணம் என்று தெரியவில்லை. விவசாயத்தில் நம்பிக்கை உடையவர் தெய்வத்தினிடம் தனிப்பட்ட ஒரு நம்பிக்கை உடையவர், தமிழ் நாட்டுப் பெருமையைக் காப்பாற்ற வேண்டும், மத்திய சர்க்காரை தட்டிக் கேட்பதற்கு தகுதியும், ஆற்றலும் அவருக்கு இருக்கிறது என்று நினைத்தோம். இனியும் சந்தர்ப்பம் இருக்கிறது, செய்வார் என்று நினைக்கிறேன். மத்திய சர்க்காரை அணுகி அரிசி விலையை அதிகப்படியாக ஆக்கினால் ஒழிய, இதற்கு வழியில்லை. அரிசி விலை மட்டுமல்ல, சர்க்கரையை எடுத்துக் கொண்டாலும் சரி, யு.பியில் ஒரு விலை இருக்கிறது, இங்கு ஒரு விலை இருக்கிறது. தேசீய ஒற்றுமை என்று நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். தேசீய ஒற்றுமையைப் பற்றி நேரு அவர்கள் காமராஜ் அவர்களை யோசனை கேட்கிறார்கள். ஆகவே, அவர் நினைத்தால் நிச்சயம் நடக்கும். நமது நாட்டில்

பஞ்சம் இல்லாமல் நல்ல ஆட்சி மனப்பூர்வமாக நடத்த வேண்டும். உண்மையில் கட்சி ஆசை, வோட்டு வாங்கும் ஆசை, பண ஆசை, சிலரை மட்டும் திருப்தி பண்ணும் நிலைமை இதெல்லாம் மாறி, உற்பத்தி பெருகவேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கு பெரிய திட்டங்கள் தேவை. அம்மாதிரி திட்டங்களுக்கு வழி இல்லை என்று சொல்லுவது தவறு, அது வருந்தத்தக்கது. நான் பெருமைக்காகச் சொல்லிக்கொள்ளவில்லை. டாக்டர் லோகநாதன் அவர்கள் 'அப்ளைட் எகனுமிக்ஸ்' என்று நம் மாகாணத்தைப் பற்றி, என்னென்ன காரியங்களை செய்யலாம் என்று ஜனத் தொகையை அடிப்படையாக வைத்து அவர் திட்டம் தயாரித் திருக்கிறார். அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நமது லைப்ராரியில் அந்தப் புஸ்தகம் இருக்கிறது. பெரிய திட்டங்களுக்கு சந்தர்ப்பம் இல்லை, அதற்கு வாய்ப்பு, வழி இல்லை என்று சொல்ல வில்லை.

எல்லா மாகாணங்களிலும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்திருக் கிறார். எல்லா மாகாணங்களைப்பற்றியும் அவர் எழுதியிருக்கிறார். என்ன வாய்ப்புகள், வசதிகள் இருக்கின்றன விவசாயத்தைப் பெருக்குவதற்கு என்று கணக்கெடுத்திருக்கிறார். 'வெஸ்டு ப்ளோயிங் ரிவர்ஸ், ஈஸ்டு ப்ளோயிங் ரிவர்ஸ்' என்று குறிப்பிட்டு மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளில் உள்ள தண்ணீர் சம்பந்தமாக கேரளாவுக்குப் போக, அவர்கள் எடுத்துக்கொண்டதுபோக அவர் களுடன் நல்ல முறையில் பேச்சு வார்த்தை நடத்தினேமானால், நம் மாகாணத்தில் 5½ லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு அந்தத் தண்ணீ ரைக்கொண்டு தண்ணீர் பாய்ச்சுவதற்கு வழிவகை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல கிழக்கு நோக்கி ஓடும் ஆறுகளில், கோதாவரி, கிருஷ்ணாவில் ஓடுகின்ற தண்ணீரை யும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார். பெரிய சகோதரர், சிறிய சகோதரர் என்று பேசிக்கொள்ளக்கூடிய அளவுக்கு நமது முதல் அமைச்சராக இருந்து விட்டுச் சென்ற வரும் ஆந்திரமாநில முதல் அமைச்சரும் வேண்டியவர்கள். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் அந்த செல்வாக்கை உபயோகப் படுத்தி, கிருஷ்ணா, கோதாவரியிலிருந்து கடலில் வீழ்ந்து வீணா கப் போகும் தண்ணீரை, உப்பு நீராகி ஒன்றுக்கும் உபயோக மில்லாமல் போகக்கூடிய தண்ணீரை பேச்சுவார்த்தைகள்மூலம் பேசி, நமது மாகாணத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இம்மாதிரி கணக்குப்போட்டு லோகநாதன் அவர்கள் குறிப்பிட் டிருக்கிறார்கள். அவர்கள் உபயோகப்படுத்திக்கொண்ட தண்ணீர் போக மீதி தண்ணீரை நாம் உபயோகப்படுத்திக் கொண்டால், 15-லிருந்து 20 லட்சம் ஏக்கரா நிலங்களுக்கு தமிழ் நாட்டில் தண்ணீர் பாய்ச்சலாம், அதற்கு வழி வகை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இம்மாதிரி அண்டை மாநிலங்களில் ஓடுகின்ற நதிகளின் தண்ணீரைக்கொண்டு நம் மாநிலத்தில் குறைந்தது 20 லட்சம் ஏக்கரா நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியும். அவர்கள் தேவைக்குப் போக நாம் உபயோகப்படுத்திக் கொள்ள வழிவகை இருக்கிறது. மத்திய சர்க்காரை அணுகி 'நான் ஏழை மக்களை பாதுகாக்கவேண்டும். நான் பதவியில் இருந்து பிரயோசனம் இல்லை, நீங்கள் செய்கிறீர்களா, பதவியை

21st January 1964] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

விட்டுப் போகட்டுமா' என்று கேட்டு அவர்கள் ராஜிநாமா செய்திருந்தால், காமராஜ் அவர்களின் கால் தொட்டு நாம் கும்பிட்டிருப்போம். காமராஜர் அவர்கள் இங்கு இருக்கும்பொழுது நம் மாநிலத்திற்கு சிறுகச் சிறுக ஏதோ செய்துகொண்டிருந்தார். இப்பொழுது அதையும் விட்டுவிட்டு, வடக்கே போய் அவர்களுக்கிடையே உள்ள சண்டைகளை தீர்ப்பதற்குப் போயிருக்கிறார். தமிழர் பெருமையைப்பற்றி ஆட்சேபணை இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் இரவு, பகல் என்று பாராமல் பாடுபடக்கூடியவர். தயவு செய்து ஏழை மக்களின் கஷ்டத்தைத் தீர்க்க வழி வகைகள் செய்யவேண்டும். சென்னை நகரத்தில் வாத்தியார்களாயிருந்தாலும் சரி, என்.ஜி.ஓ.-வாக இருந்தாலும் சரி, சென்னை நகரம் ஏ நகரமானாலும் சரி, பி நகரமானாலும் சரி, சொர்க்கலோகமானாலும் சரி, அவர்களுக்கு நிச்சயமாக சம்பளம் உயருவதில்லை. அவர்கள் 75 ரூபாயை வைத்துக் கொண்டு எப்படி காலம் தள்ளுவார்கள். அதில் ரூபாய் 15, 20 பிடித்தம் போய்விடும். ரூபாய் 50-க்குக் குறைந்து வீடு வாடைக்கு கிடையாது. அவர்கள் எப்படி நகரத்தில் வாழ்க்கை நடத்துகிறார்களோ தெரியவில்லை. வரண்ட பிரதேசம் செழிப்பான பூமி ஆவதற்கு பாடுபடவேண்டும். அதற்காக அண்டை மாநிலங்களை அணுகவேண்டும். மத்திய சர்க்காரை அணுக வேண்டும். 'வீணாக சமுத்திரத்தில் போய் விழுந்து விரயமாகக் கூடிய தண்ணீரை, உப்புத் தண்ணீராகக்கூடிய தண்ணீரை எங்களுக்கு விடுங்கள்' இல்லாவிட்டால் நாங்கள் ராஜிநாமா செய்துவிடுவோம்' என்று பேசுங்கள் அது ஒன்றே போதும் நாட்டைக் காப்பதற்கு அதைச் செய்யவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதுவாவது மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. நமக்குள்ளேயே இருப்பதைப் பார்க்கலாம். அமைச்சர் திரு. ராமையா அவர்கள் தனி அக்கரை எடுத்துக்கொண்டு ஏற்கனவே உள்ள திட்டத்தை நேரிடையாக பார்வையிட்டு மேலும் அதை அபிவிருத்தி செய்ய முடியுமா என்று பார்க்கிறார். 'வைகை ஸிஸ்டம் இஸ் எ குளோஸ்டு ஸிஸ்டம்' அதற்கு மேல் வழி வாய்ப்பு இல்லை, இனி ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது, ஒரு சொட்டு தண்ணீர்கூட விடாமல், ஒழுங்காக உபயோகப் படுத்தியாகிவிட்டது, மேற்கொண்டு உபயோகப்படுத்துவதற்கு கண்டிப்பாக வழியில்லை என்று சொன்ன காலத்தைப் போக்கி, இன்னும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு வழிவகை இருக்கிறது என்பதை காண்பித்தார். அதில் ஒரு கால்வாயை நல்ல முறையில் வெட்டுவதன் மூலமாக 20,000 ஏக்கருக்குத் தண்ணீர் கிடைக்கும். அதற்கு மேலாக வருஷத்தில் மழை அதிகமாகப் பெய்வதில்லை. இருந்தாலும் கூட, 2, 3 மழை பெய்யும்பொழுது, திடீரென்று வெள்ளப்பெருக்கு ஓடுகிறது. இராமநாதபுரம் மக்களுக்கு அது உபயோகமாக இருக்கும். அந்த வெள்ளப் பெருக்கு வீணாகப் போய் கடலில் விழுகிறது. வைகை ஆற்றில் ஒரு அணை கட்டியிருக்கிறார்கள் கீழே. மேலே ஒரு அணை கட்டினால், வரு

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [21st January 1964

ஷத்தில் 3, 4 தடவை வெள்ளப்போக்கு வரும்பொது, அந்தத் தண்ணிரை உபயோகப்படுத்தி ஏறக்குறைய 30,000, 40,000 ஏக்கர் தண்ணீர் பாய்வதற்கு வசதி ஏற்படும். ஈஸ்டு ராமனுத புரத்தில் உசிலம்பட்டியில் 15 வருஷங்களாக மழை கிடையாது. பஞ்சத்தினுல் மக்கள் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள். அந்த அளவுக்கு கஷ்டமான நிலே அங்கே இருக்கிறது. அதுமட்டுமல்ல இந்த வருஷத்தில் மழை இல்லாமல் தண்ணீர் மிகவும் குறைவாக இருந்தது, திடீர் என்று கடவுள் துணையால் நிரம்பி இருக்கிறது. அந்த நிலேயில் தண்ணீர்விடவேண்டுமென்று கேட்கிருேம். 10,000 ஏக்கர் தண்ணீர் இல்லாமல் வரண்டு போயிருக்கிறது. நேற்று கூட கலெக்டர் அவர்கள் இரண்டு லட்சம் மூட்டை அளவு உள்ள சாகுபடி செத்து விட்டது என்று கணக்குச் சொல்லியிருக்கிருர்கள். தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. தண்ணீர் வீணுகப் போய்க் கொண்டிருக்கிறது. தண்ணீர் வீணுக வெறும் மணலில் போய் விழும். அம்மாதிரி வீணுகப்போகிற தண்ணீரை தயவு செய்து 10 நாட்களுக்கு விடுங்கள். ஏறக்குறைய 2 லட்சம் டன் மூட்டை தானியம் மிச்சமாகும், ஏராளமாக வரி சர்க்காருக்கும் கிடைக்கும். இதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னெரு முக்கிய விஷயம் சட்ட எரிப்பைப் பற்றியது. அரசியல் சட்டம் புனிதமானது என்று சொல்லுவதில் எங்களுக்கு ஆட்சேபனே இல்லே. நாங்கள் நாட்டுப் பிரிவினே பற்றிப் பேசுகிறவர்கள் அல்ல. சட்ட எரிப்பு, ஒழிப்பு, அழிப்பு என்பது ஏற்கனவே பல முறை இந்த நாட்டில் நடந்திருக்கிறது. பல பெரியார்கள் எல்லாம் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிருர்கள். சென்ற ஆண்டில் கூட நடந்திருக்கிறது. அது நம்முடைய நாட்டில் ஒரு "டிரெடிஷன்' ஆகப் போய்விட்டது. இன்று சட்ட எரிப்பைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஆட்சியாளர்கள் அன்று சும்மா விட்டுக் கொண்டிருந்தார்கள். அன்று அவர்கள் சவுகரியத்திற்காக நடந்தது; இன்று வேண்டாமென்று சொல்கிருர்கள். எப்போதுமே தேசத்தையும் சட்டத்தையும் தெய்வமாகக் கருதி, தாயாகக் கருதி மதிக்கத் தக்க அளவுக்கு நாம் நடந்து கொள்ளவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. பி. பாலகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின்மீது நன்றி தெரிவித்து பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்று எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையிலே எங்களுடைய தலேவர், மக்கள் தலேவர் ஸ்ரீமான் காமராஜர் அவர்களேப் பாராட்டிப் பேசியிருப்பதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காமராஜர் அவர்களுடைய தன்னலமற்ற தியாகத்தையும், சேவையையும் பற்றி ஊர் பாராட்டுகிறது, கிராமம்

21st January 1964] [திரு. ஏ. பி. பாலகன்]

பாராட்டுகிறது, நகரம் பாராட்டுகிறது, ராஜ்யம் பாராட்டு கிறது, ஏன் உலகமே பாராட்டுகிறது. இம்மாதிரி ஒப்புயர் வற்ற தலைவர் கிடைத்துவிட்டார் என்று தேசமக்கள் அனை வரும் மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் மதிப்புக் குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களில் ஒரு சிலர் அவரைப் பாராட்டுவதை விட்டு எதிர்க்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. ஒருசமயம் தங்களிடம் இம் மாதிரி குணாதிசயம் படைத்த தலைவர் இல்லாத குறையை மக்கள் அறிந்து கொள்வதன் காரணமாக ஏற்படும் பல வீனத்தை அகற்றுவதற்காகத் தவறான பிரச்சாரங்களைச் செய் கிறார்களோ என்றுதான் தோன்றுகிறது. இது சரியல்ல.

அடுத்தபடியாக, எனது தொகுதியில் கடனா நதி, ராம நதி என்ற இரு நதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகி உருண்டோடி வரும் விஷயத்தைப் பற்றி இந்த மன்றத்தில் முன்பே எடுத்துக்கூறி இருக்கிறேன். என்னுடைய தொகுதியில் சுமார் 15 பஞ்சாயத்துக்கள் அடங்கிய பிர தேசங்கள் வரட்சியாக இருக்கின்றன. சாகுபடிக்கு லாயக் கான சுமார் 10,000 ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இது பற்றித் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறியதன் காரண மாக ராம நதியில் சுமார் 18 லட்சம் செலவில் அணை கட்டு வதாக இருந்ததை மாற்றியமைத்து அதை போல் மூன்று பங்கு பெரிய அளவில் நீர்த் தேக்கம் கட்டுவ தற்கு முடிவு செய்ததற்காக கனம் அமைச்சர் அவர் களுக்கும் அதிகாரிகளுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த அளவு பெரியதாகக் கட்டினாலும் என்னுடைய தொகுதியிலுள்ள 10,000 ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இல்லை. இந்தத் தரிசு நிலங்களில் சுமார் 750 ஏக்கர் நிலங்களுக்குத் தான் தண்ணீர் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படியானால் இன்னும் 9,250 ஏக்க ருக்குத் தண்ணீர் வசதி கிடைக்கவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. 1963-ம் ஆண்டில் பெய்த மழையின் காரணமாகப் பெருக்கெடுத்து ஓடிய தண்ணீர் அனாவசியமாகக் கடலில் சென்று கலந்ததைப் பார்த்த மக்கள் இந்தத் தண்ணீரைத் தேக்கி தரிசு நிலங்களுக்குப் பாசனத்திற்கான தண்ணீர் வசதி கொடுக்க ஏன் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத் துக் கொள்ளவில்லை என்ற உணர்ச்சி மக்கள் மத்தியிலே நிலவி வருகிறது. இதையெல்லாம் அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி கடனா நதியிலுள்ள அணையை பெரிதாக கட்ட வேண்டுமென்று எடுத்துச் சொன்னதின் பேரில் கனம் அமைச்சர் ராமையா அவர்களும், பிரதம எஞ்சினியர் அவர் களும் அந்த இடத்தை வந்து பார்க்க வந்தார்கள். ராமநதி யில் தற்போது பெரிதாக கட்ட திட்டமிட்டிருப்பதைவிட அதிகப் பெரியதாக அணை கட்ட முடியாது என்ற காரணத் தால், கடானா நதியிலாவது 89 லட்சம் ரூபாய் செலவில் அணை கட்டுவதற்குப் பதிலாக அதைப்போன்று மும்மடங்கு பெரியதாக அந்த அணையை கட்டினால் தண்ணீரை ஸ்டோ

[திரு. ஏ. பி. பாலகன்] [21st January 1964

ரெஜ் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று எடுத்துக் கூறினேன். அவ்வாறு பெரிதாகக் கட்டி, கடனு நதி அணையையும், ராமநதி பாசன வாய்க்காலையும் இணைக்க புதிய வாய்க்கால் வெட்டி இரண்டையும் இணைத்து விட்டால் தரிசு நிலங்களுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைப்பதோடு இப்போது உள்ள ஆயக்கட்டுகளையும் இருபோக நஞ்சைகளாக மாற்ற முடியும். இம்மாதிரி செய்வதன்மூலம் தாம்பிரபரணி சிஸ்டத்தில் இருப்பவர்களுக்கும்கூட நன்மை ஏற்படும். மணிமுத்தாறு, பாபநாசம் போன்ற அணைகளில் இருந்து தண்ணீர்ப் பற்றுக் குறை காலங்களில் அதிகமான தண்ணீரைத் திறந்துவிடுகிற மாதிரி இந்த அணைகளைப் பெரிதாக்கினால் தேவைக்கேற்ற முறையில் தண்ணீர் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்குமென்ற காரணத்தால் கடனு அணையையும் ராமநதி அணையையும் புதிய வாய்க்கால் மூலம் இணைப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. மா. இராசாங்கம்**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கடைசி நாளாக நடந்து கொண்டிருக்கும் கவர்னர் பெருமான் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் நடந்து கொண்டிருக்கும் விவாதத்தின் போது என்னுடைய கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ள முற்படுகிறேன். வழக்கம்போல் கவர்னர் பெருமானுடைய உரை ஒரு சடங்காகத்தான் அமைந்திருக்கிறதே தவிர, மக்களுடைய சங்கடங்களைப் போக்குவதாக அமையவில்லை. சில சங்கடங்களைப் பற்றிப் பேசப்பட்டிருந்தாலும், அக் கவர்னர் பெருமான் உரை மக்களுடைய கண்ணீரைத் துடைக்கும் ஒரு கைக்குட்டையாக இருக்கிறதே தவிர, கண்ணீருக்குக் காரணமான அழுகையை அமர்த்துகின்ற அறிக்கையாக அது அமையவில்லை!

கவர்னர் பெருமான் அவர்கள் அறிக்கையின் முன் பகுதியிலே பெருமளவிற்கு திரு. காமராஜ் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். காமராஜ் அவர்களைப் பாராட்டுவதிலே ஏதோ வித்தியாசம் இருப்பதாக எனக்கு முன் பேசிய அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். அப்படி ஒன்றும் வித்தியாசம் இல்லை, எல்லோருமே பாராட்டுகிறோம்; நானும் பாராட்டுகிறேன். இருந்தாலும் எந்த ஒரு பாராட்டுக்கும் அளவு இருக்கிறது; இடம் இருக்கிறது. கவர்னர் பெருமான் உரை காமராஜ் அவர்களுக்குக் கட்டியம் கூறுகிற அளவுக்கு அமைந்திருப்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்களாகிய நாங்கள் வரவேற்கமுடியாது என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10.00 a.m. அடுத்தபடியாக கவர்னர் உரையிலே தமிழ் நாட்டுக்குடிமகன் ஒவ்வொருவனுடைய கண்களும் ஒரு பிரச்சனையை எதிர்பார்த்துக் காத்திருந்தன.. அந்தப் பிரச்சனை பற்றிக் கவர்னர் பெருமானும் பேசியிருக்கிறார். அந்தப் பிரச்சினை தீர நிவாரணங்கள் தரப்போவதாகவும் சொல்லியிருக்கிறார். அந்தப்

21st January 1964] [திரு. மா. இராசாங்கம்]

பிரச்சனைதான் அத்தியாவசியமான பண்டங்களின் விலை ஏற்றம். விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க 500 நியாயவிலைக் கடைகளை திறந்து இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏதோ ஒரு பெரும் தொகை போல நினைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்துத் தேவையை எண்ணிப்பார்க்கிறபொழுது, இந்த 500 நியாயவிலை கடைகள் கடலிலே கரைத்த பெருங்காயத்திற்கு ஒப்பாகும், என்பதை உங்கள் மூலமாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விலைவாசி ஏற்றத்தை தடுக்கவேண்டும் என்று உளமார உங்களுக்கு விழைவு இருக்குமானால் அதற்கு ஒரு வழியில்லாமலில்லை.

கனம் சபாநாயகர்: சர்க்காருக்கு என்று சொல்லவேண்டும். 'உங்களுக்கு' என்று சொன்னால் அது சபாநாயகரைக் குறிக்கும்.

திரு. மா. இராசாங்கம்: விலைவாசியைத் தடுக்கவேண்டும் என்ற ஆசை சர்க்காருக்கு இருக்குமேயானால், அதைத் தடுப்பதற்கு வழி இல்லாமல் இல்லை. அதற்கு வழியிருக்கிறது. அறுவடை காலங்களிலே வியாபாரிகள் விவசாயிகளிடம் நெல்லை குறைந்த விலைக்கு வாங்கி, அதைப்பதுக்கி வைத்திருந்து, பிறகு விளைச்சலற்ற காலத்தில் விலையை ஏற்றி விற்கிறார்கள். அந்த நேரத்தில் அரசாங்கம் புத்திசாலித்தனமாக விழித்துத் தலையிட்டு, இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று நியாய விலையை நிர்ணயம் செய்யவேண்டும். அப்படி நிர்ணயிக்காமல், "குறைந்த விலைக்கு விற்பதற்கு நாங்கள் நியாயவிலைக்கடைகளைத் திறந்து வைக்கிறோம்" என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் வியாபாரிகள் நினைத்த விலைக்கு விற்கலாம் என்று சொல்லுவதானது தொடையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவதாக இருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலை உயராமல் தடுத்து நிறுத்த வேண்டும். அதிக விலைக்கு விற்கும் வியாபாரிகளைக் கண்டித்து வைக்கவேண்டும். வியாபாரிகளுக்கும் சர்க்கார் நல்லவர்களாக இருக்கப்பார்க்கிறார்கள். அதே நேரத்தில் ஏழை எளியவர்களுக்கும் நல்லவர்களாக இருக்கப்பார்க்கிறார்கள். "A man cannot serve to two masters" என்று ஏசுநாதர் சொன்னார். ஒன்று மக்களுக்கு நல்லவர்ளாக இருங்கள் அல்லது வியாபாரிகளுக்கு நல்லவர்களாக இருந்து விட்டுப் போங்கள். இரண்டு பேருக்கும் நல்லவர்களாக ஏக காலத்தில் இருக்க முடியாது.

அடுத்தபடியாக சிறு தொழில்கள் பற்றி கவர்னர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன; திரவியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவை அத்தனையும் அலுவலகங்களில் தேங்கிக் கிடக்கிற காரணத்தினால், பொது மக்களோடு நேரடித் தொடர்பு கொள்ளாததினால், பயனற்றதாக கிடக்கின்றன. பசு நல்ல பசுதான்; அதேபோன்று திட்டங்களும் நல்ல திட்டங்கள்தான்; பசுவுக்கு பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை போட்டுதான் பார்க்கிறோம்; ஆனால் பால் பீச்ச வேண்டாமா? பால் பீச்ச வேண்டுமென்றால் அது பதப்பட வேண்டும். அதே மாதிரி திட்டம் பலனளிக்க வேண்டுமென்றால்

[திரு. மா. இராசாங்கம்] [21st January 1964

மக்களோடு நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு தொடர்பு இல்லை என்றால், பிண்ணாக்கு, பருத்திக்கொட்டையும் தின்றுவிட்டு பால் பீச்சாத மலட்டுப் பசுதான் சிறு கைத்தொழில் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே சிறு கைத் தொழில் திட்டம் பொது மக்களோடு நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவதாக குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த உபகாரச் சம்பளம் அவர் களுக்கு காலாகாலங்களில் கிடைப்பதில்லை. ஆகவே உபகாரச் சம்பளம் அபகாரச் சம்பளமாக இருக்கிறது. மாணவர்கள் பணத்தைக் கட்டிக்கொண்டே இருக்க வேண்டும். எப்பொழுது சலுகைச் சம்பளம் வருகிறதோ அப்பொழுது கட்டிய பணத்தைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். மாணவர்களுக்கு முதலில் பணத்தைக் கட்டுவதற்கு வசதி இருக்கு மேயானால், அவர்களுக்கு உபகாரச சம்பளம் கொடுப்பதில் அர்த்த மில்லை. ஆகவே காலாகாலத்தில் அது அவர்களுக்கு கிடைப்பதற்கு வழிவகையைச் செய்ய வேண்டும். உபகாரச் சம்பளத்தை எதிர் பார்த்து வந்த ஏழை மாணவர்கள், அது பிந்திக் கிடைப்பதால் பெருங் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். வகுப்பிற்குப் போட்டுக் கொண்டு போகச் சட்டையில்லாத காரணத்தால் அறையைப் பூட்டிக் கிடந்த மாணவர்களை நான் அறிவேன். பத்து வருடம், 11 வருடம் பள்ளிகளில் படித்து, முன்பேயே இன்ன சாதியைச் சேர்ந்தவர் என்று சொல்லியிருந்தும், மாணவர்கள் கல்லூரிக்கு வரும்பொழுது என்ன சாதி என்று கேட்கிறார்கள். உலகத்திலே மதம் மாறுவதற்குத் தான் வழியிருக்கிறதே தவிர, இப்படி அடிக் கடி சாதி மாறுவதற்கு வழியில்லை என்பதனை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு அவ்வாறு மதம் மாறுகிற காரணத்தினால் பொருளாதாரத்தில் மாற்றம் ஒன்றும் ஏற்படுவ தில்லை. ஆகவே தவறுதலாக அவர்கள் பொருளாதார நிலை உயர்ந்துவிட்டதாக நினைத்து, அவர்களுக்குக் கொடுக்கும் சலுகை களைக் குறைத்துவிடக் கூடாது, என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுக்கபடியாக, ஆட்சிமொழியாக இந்தி வருவதால் தமிழ் அழிந்துவிடாது என்று நமது ஈரோட்டு இரண்டாவது பெரியார் ஒருவர் சொன்னார்கள். நிச்சயமாக அழியத்தான் செய்யும். சிந்து சமவெளியிலே செழித்திருந்ததாகச் சொல்லப்படும் தமிழ் அங்கே அழிந்துவிட்டதுபோல, சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவிருந்த சேரநாட்டில் சமஸ்கிருத மொழி கலந்த காரணத்தால் அங்கும் தமிழ் அழிந்திருக்கிறது. இப்பொழுது தமிழ் மொழி எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண் டும். இப்பொழுது ஆலயங்களில் ஆராதனைக்கு சமஸ்கிருத மொழி யிருக்கிறது. அரசியல் ஆதிக்கமிருக்கிற காரணத்தால் இந்தி ஆட்சிபீடத்தில் இருக்கிறது. அறிவு ஆதிக்கமிடும் கல்லூரிகளில் ஆங்கிலமிருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ் தங்குவதற்கு எங்கே இடம்? ஆகவே தமிழை இந்த இடத்திலே விட்டால் அது எங்கே போகும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். சென்னை

21st January 1964] [திரு. மா. இராசாங்கம்]

யிலேயிருக்கிற அளவிற்குத்தான் இன்று தமிழ் இருக்கிறது. கவிஞர் ஒருவர் கூறியதை நான் இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். "தவழ்ந்துவரும் தென்றலிலே குளிமையா இல்லை, தென்னந்தோப்பினிலே நிழலா இல்லை, ஆனால் தமிழகத்துத் தமிழ் வீதியிலேயே தமிழ்தான் இல்லை" என்ற நிலைமை இருக்கிறது. ஒரு காலத்திலேயே திராவிடம் முழுவதும் பரவியிருந்த தமிழானது இன்று சென்னை மாநிலத்தோடு சுருங்கி இருக்கிறது. இந்தியை புகுத்தினால் அது மதுரையோடு சுருங்கிவிடும். இன்னும் நாம் தமிழுக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்று சொன்னால், அது தமிழ்ச்சங்கத்தோடோ அல்லது புலவர்களுடைய அலமாரிகளோடு நின்றாலும் நின்றுவிடும். தமிழின் இலக்கிய வளம் என்ற உயிர்நாடித் துடிப்பு அடங்கி ஒடுங்கிவிடுகிற நிலைமைக்கு வந்துவிடும் என்பதை என்னால் சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, என் தொகுதியில் குழாய் திட்டங்கள் போட்டு இருக்கிறார்கள். அது நல்ல திட்டம்தான். உடுகரைக் குழாய்களுக்குப் பதிலாக செமன்ட் குழாய்களை பதித்திருக்கிறார்கள். அதனால் அடிக்கடி வெடிப்பு ஏற்படுகிறது. தொடர்ந்தாற்போல் தண்ணீர் கிடைப்பதில்லை. முன்பு எல்லாம் கிணறுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தவர்கள் இப்பொழுது குழாய்களுக்கு வந்து, தண்ணீர் வரும் என்று தவமிருந்துவிட்டு, தண்ணீர் வராமல் போவதினால் கஷ்டப்படுகிறார்கள். தூர் எடுக்காததினால், கிணறுகளும் சரியாக இல்லை; குழாய்களும் சரியாக இல்லை. இது அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை. பம்பைப் பதித்திருக்கிறார்களா என்றால் இல்லை—வம்பைத்தான் பதித்திருக்கிறார்கள் என்று நான் சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு மூன்று தினங்களுக்கு முன் கல்லூரி மாணவர்கள் முதலமைச்சரைப் பார்க்க வந்தார்கள். அவர்களுக்குப் பேட்டி தாராதது மட்டுமல்ல, அவர்கள் மனம் புண்படும்படி கோபப்பட்டிருக்கிறார். இது அரசியல் நாகரிகம் ஆகாது.

(மணியடிக்கப்பட்டது.)

*திரு. வெ. எல்லம நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாகாணத்திலே சென்ற பத்து ஆண்டுகளாக நல்ல முறையிலே நிர்வாகத்தை நடத்திச் சென்ற நமது ஒப்பற்ற தலைவர் திரு. காமராஜ் அவர்களை கவர்னர் அவர்கள் அவருடைய உரையிலே பாராட்டியிருக்கிறார். இது குறிப்பிட வேண்டிய ஒன்று என்பதை பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலுள்ள பலரும் அதை ஆதரித்து இருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி நாம் அதிகமாக விவாதிக்கவேண்டிய அவசியமில்லை. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ஒரு பெரியாரை நாம் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும், அவர் ஒரு ஒப்பற்ற தலைவர் என்பதை உலகமே ஏற்றுக் கொண்டுவிட்டது.

[திரு. வெ. எல்லம நாயுடு] [21st January 1964

அடுத்தபடியாக, நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கம் செய்துள்ள வேலைகள் செய்துக் கொண்டிருக்கிற வேலைகள் செய்யப்படவேண்டிய வேலைகள், இவற்றைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அநேகமாக பூர்த்தியடைந்துவிட்டன என்ற முறையிலே பேசியிருக்கிறார்கள். இன்னும் கூட பெரிய என்ஜினியர்களின் ஆலோசனைகளுக்கு இணங்கி ஒரு சில திட்டங்களை நாம் எடுத்துக் கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கோவை ஜில்லாவிலே நொய்யல் நதித்திட்டம் என்று ஒன்று பல வருஷங்களுக்கு முன்பு எஞ்சினியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சர்வே செய்யப்பட்டு இருந்தும் இன்னும் ஏனோ அமுலுக்கு கொண்டுவராமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கோவை நகரத்தைப் பொறுத்தவரையிலும் சுற்றிலும் உள்ள பெரிய பஞ்சாயத்துக்களில் கூட, பல்லடம் தாலுகா போன்றவை கூட குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த நொய்யல் நதித் திட்டத்தை எடுத்துக்கொண்டு அரசாங்கம் அதை உடனடியாக நல்ல முறையில் செயல்படுத்தினால் கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில் குடி தண்ணீர் பிரச்சனை ஓரளவுக்கு தீரும். கோவைக்கு மேற்கே 18-வது மைலில் அணை கட்டலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தண்ணீர் கொடுத்து கோவையைச் சுற்றிலும் தண்ணீர் கொடுக்க முடியும். இது சம்பந்தமாக கோவை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு அறிக்கையை அரசாங்கத்திற்கும் முதல் அமைச்சரிடமும் கொடுத்திருக்கிறோம். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் சம்பந்தமாக உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உங்கள் மூலமாக கேட்டுக் கொள்ளுகிறேன். சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு எஞ்சினியர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள். அணை கட்ட சாத்தியக்கூறு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இடவசதி போதாது என்றும் அதற்காக பாரஸ்ட் இலாகாவைச் சேர்ந்த நிலம் கிடைக்குமானால் இந்த திட்டத்தை அமுல் ஆக்கலாம் என்ற யோசனையை தெரிவித்தார்கள். அதை ஒரு மாதத்திற்கு முன்பு கூட்டுறவு அமைச்சர்—காட்டிலாகாவையும் அவர்களே பார்க்கிறார்கள்—அங்கு வந்த பொழுது விவசாயிகள் அவர்களிடம் இதைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களும் தான் இதை நேரிடையாக பார்த்து கூடுமானால், இடவசதி அளிக்க சாத்தியக்கூறு இருக்குமானால் நிலத்தைக் கொடுக்கிறேன் என்று பெரிய மனது வைத்து கூறினார்கள். ஆகவே பொதுப்பணித்துறை அமைச்சரும், காட்டிலாகா அமைச்சரும் சேர்ந்து இந்த திட்டத்தை அமுலாக்கி விவசாயிகளுக்கு நன்மை அளிக்க இந்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விலைவாசி கட்டுப்பாடு. விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகின்றன. அதைத் தடுக்க ஏதாவது செய்தாக வேண்டும் என்ற முறையில் கூட்டுறவுத் துறையிலும் மற்ற வகைகளிலும் பல காரியங்களை சர்க்கார் செய்து வருகிறார்கள். விவ

சாயிகளைப் பொறுத்தவரையில் விலை குறைந்துவிடும் காலத்தில் நாம் அதற்கு ஒன்றும் செய்வது இல்லை. அரசாங்கமானது விலை உயர்வை கண்டு மட்டும் நடவடிக்கை எடுப்பதோடு நின்றுவிடாமல் ஒரு குறைந்தபட்ச விலையையும் நிர்ணயிக்க வேண்டும். அப்பொழுது தான் விவசாயிகளுக்கு ஊக்கம் குன்றுமல் இருக்கும். அதோடுகூட விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள், உரம், இயந்திரங்கள் முதலியவற்றை மலிவான விலையில் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தால் சுலபமாக இருக்கும். சபாநாயகர் அவர்களே, தாங்கள் கொடுத்திருக்கும் குறைந்த நேரத்திலே சில குறைகளை சொல்ல விரும்புகிறேன்.

நமது மாநிலத்திலே பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. ஆரம்ப பள்ளிகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கூட கோவையில் சொன்னார்கள். ஆரம்ப பள்ளிகளில் உள்ள கஷ்டங்களைப்பற்றி. அவர்களுக்கு கொடுக்கப்படும் தொகை போதுமானதாக இல்லை. ஆதலால் பள்ளிகளில் அதிகமாக பிள்ளைகளை வைத்துக் கொண்டு, 40, 50, 70, 80 கூட ஒரு வகுப்பில் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்க முடிவதில்லை. ஆகவே அதற்கு உரிய முறையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஆரம்ப பள்ளி ஆசிரியர்களுக்கு அரசாங்கமே ஊதியம் முழுவதும் கொடுப்பது நலமாக இருக்கும். பஞ்சாயத்து யூனியன்களுக்குள்ள வருமானம் எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ஒரே மாதிரியாக இல்லை. சில யூனியன்களிலே ஆயிரக்கணக்கான ரூபாய் தேங்கிக் கிடக்கிறது. சில யூனியன்களிலே ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கவும் போதுமானதாக இல்லை. ரோடுகளை செப்பனிடுவதற்கும் வசதி இல்லை. அதற்காக பஞ்சாயத்து யூனியன்களை ஜனத்தொகை அடிப்படையிலோ, பிரதேச அடிப்படையிலோ அமைத்துக் கொள்ளுவது நலமாக இருக்குமா என்று யோசிக்க வேண்டும். வருவாய் எல்லோருக்கும் ஓரளவு சரிசமமாக அமைய வேண்டும் என்பது நோக்கமாக இருக்க வேண்டும்.

திரு. மு. பொ. வடிவேல்: மதிப்பிற்குரிய சட்டமன்ற தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விலைவாசி ஏற்றம் குறித்து ஆளும் கட்சிக்காரர்களும், எதிர்தரப்பில் உள்ளவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த எற்றத்திற்கு என்ன காரணம் என்று சிந்திக்க வேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் கிடைப்பதில் அதிக சிரமம் இருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான வண்டிக் கட்டு, அச்சு, கொழு முதலியவை கிடைப்பது அரிதாக இருக்கிறது. அவர்களுக்கு அவசியமாக வேண்டியவற்றை அவர்கள் கள்ள மார்க்கெட்டில்தான் அதிக விலைக்கு வாங்கும் நிலைமை இருக்கிறது. அவைகளையெல்லாம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே விநியோகிக்க வேண்டும். இன்றைக்கு காய்கறிகள் விலை கூட மிக அதிக

TRUTH ALONE TRIUMPHS

[திரு. மு. பொ. வடிவேல்] [21st January 1964

மாக இருக்கிறது. இவைகளெல்லாம் பயிரிடுபவர்களுக்குப் பரிசு வழங்க வேண்டும். பள்ளிகளில் கூட காய்கறிகள் உற்பத்தி செய்வதை மேற்கொள்ள வேண்டும். இன்றைக்கு கத்தரிக்காய் ஒரு வீசை 1¼ ரூபாய் அல்லது 1½ ரூபாய் விற்கிறது. இன்னும் விலை ஏறிக்கொண்டே போகிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்று அரசாங்கம் சிந்திக்க வேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளையெல்லாம் பஞ்சாயத்துகள் மூலமாக வழங்குவதாக இருக்கிறது. அதற்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது நல்ல முறையிலே செயல்படுகிறதா என்று பார்த்தால் இல்லையென்றே சொல்ல வேண்டும். உதாரணமாக ஒரு போஸ் கலப்பை கொடுக்கிறார்கள் என்றால் அதை அரை விலைக்கு, ரூபாய் 8-க்கு கொடுக்கிறோம் என்கிறார்கள். சாதாரணமாக கொழுவுக்கு ரூபாய் 3-ம், பிரேம் போட ரூபாய் 5-ம் ஆகும். ஆக அதன் விலை ரூபாய் 8 தான். அதை 16 ரூபாய் என்று சொல்லி அரை விலைக்கு 8 ரூபாய்க்கு பாதி விலைக்கு தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். அடுத்தபடியாக தேனீப் பெட்டி கொடுக்கிறார்கள். அதற்கு விலை ரூபாய் 25 என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக செய்தால் அந்த பெட்டியை 10 ரூபாய்க்கு செய்து விடலாம். ஆனால் மக்களிடம் அதை அரை விலைக்கு கொடுப்பதாக சொல்லி 12 ரூபாய் 90 புது பைசாவுக்கு கொடுக்கிறார்கள். இம்மாதிரி அரை விலைக்கு கொடுப்பதற்காக பஞ்சாயத்துக்களுக்கு கொடுப்பதற்கு 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாவற்றையும்விட ரசாயன உரத்திற்கு ஒதுக்கி அதைப் பாதி விலைக்கு கொடுக்க முன் வந்தால் நலமாக இருக்கும்.

தலைமுறை தலைமுறையாக பட்டா மாற்றுவதில் மக்களுக்கு பெருத்த கஷ்டம் இருக்கிறது. சுதந்திரம் வந்து இன்றைக்கு 16 ஆண்டுகள் ஆகியும் விவசாய மக்களுக்கு பட்டா மாறுதல் செய்வதில் பெரும் தொல்லைகள் தீரவில்லை. ஒருவனுடைய தாத்தாவுக்கு தாத்தா பேரில் பட்டா இருக்கும். அது மாறுபடாமலே இருக்கும். இன்றைக்கு அவன் கடன் உதவி கோரி மனு போட்டால் அவனால் கடனை பெற முடியவில்லை. பட்டா அவன் பேரில் இல்லை என்ற காரணத்திற்காக அவனுடைய விண்ணப்பம் தள்ளப்படுகிறது. பட்டா மாறுதலை அரசாங்கம் எளிதாகச் செய்து அவ்வப் பொழுது அது நடைபெறும் முறையை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பி பாகம் செய்து கொண்டால், பத்திரம் தாக்கல் ஆன உடனேயே பட்டா மாறுதல் செய்ய உடனடி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது சம்பந்தமாக தக்க நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பயிர்களுக்கு பாதுகாப்பு (கிராப் இன்ஷூரன்ஸ்) செய்யப்பட வேண்டும். விலைவாசிகள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அரசாங்கமே கொள்முதல் செய்து தானியங்களை உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கும் மக்களுக்கும் வினியோகிக்க முற்படாமல் விலைவாசியைக் கட்டுப்

21st January 1964] [திரு. மு. பொ. வடிவேல்]

படுத்த முடியும் என்பதனை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பத்தாவது வரை இலவசக் கல்வி வழங்குகிறது அரசாங்கம். அதை வரவேற்கலாம். ஆனால், பத்தாவதுவரை படித்து விட்டவர்களின் நிலை என்னவென்று பார்த்தால், பஸ் ஸ்டாண்டில் மூட்டை தூக்குவது, காப்பி ஓட்டல்களில் மேஜை துடைப்பது போன்ற துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. ஒரு நல்ல அரசு மக்களைப் படிக்க வைத்துவிட்டால் மட்டும் போதாது. படித்தவர்களுக்கும் வேலை உத்தரவாதம் கொடுக்கக்கூடிய நிலைமையையும் ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

இந்தியை இந்த நாட்டில் புகுத்துகிறார்கள் என்றெல்லாம் பேசப் படுகிறது. நாம் ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள நிலைமையைப்பற்றி பேசினால், அது மத்தியச் சர்க்காருக்குச் சொந்தமானது என்று ஒரே வரியிலே பேசித் தீர்த்துவிடுகிறார்கள். மத்திய சர்க்காருக் குச் சொந்தமானது என்று சொன்னாலும்கூட, அது நம்மையும் பாதிக்கக்கூடிய அளவிலே இருக்கிறது. அண்மையில் ரயில்வே ஸ்டேஷன்களில் எல்லாம், 'ஆனே பார்ஸல் கர்' 'ஜானே பார்ஸல் கர்', 'படே ஸ்டேஷன் மாஸ்டர் கர்' 'சோடே ஸ்டேஷன் மாஸ்டர் கர்' என்று இந்தி சொற்கள் எழுதப்பட்டு வருகின்றன.

அண்மையில் தமிழ் நாட்டுக்கு சட்டக் கமிஷன் வந்தது. சட்டத்துறையிலே கூட, ஒரே மாதிரியான வார்த்தைகளைப் பரப் பினால்தான் நாடு முழுவதும் ஒருமைப்பாடு ஏற்படும் என்ற கருத்தை வலியுறுத்தும் வண்ணம், தமிழ்மொழியில் இந்தி வார்த்தையைப் பயன்படுத்தவேண்டும் என்று அண்மையில் தமிழ் நாட்டுக்கு வந்திருந்த சட்டக் கமிஷன் வற்புறுத்தியதாக நிச்சய மாகத் தெரிய வருகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களைகூட அந்த சட்டக் கமிஷன் சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது. இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், அது இந்தியைப் பரப்பிய தாக ஆகாதா? அதற்கு இந்த அரசாங்கத்தின் பதில் என்ன என்பதைத்தான் நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன்.

ஈரோடு கனம் உறுப்பினர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் கூட, 'இந்தி வந்தால் தமிழ் கெடும்; என்னுடைய பிள்ளை கூட இந்தி படிப்பதில்லை' என்று சொன்னார்கள். அப்படியிருக்கும் போது, ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கூட இந்தியை நிச்சய மாக வரவேற்பார்களா . . .

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் சென்ற ஆண்டு பேசியபோது, 'இந்தி தமிழ் நாட்டில் வந்தால் தமிழ்மொழி அழியும்' என்று சொல்லியது கிடையாது . . .

கனம் சபாநாயகர் : சென்ற ஆண்டு பேசியது இப்போது ஞாபகம் இருக்கிறதா?

[21st January 1964

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : ரிகார்டிலே இருக்கிறது. 'சில மாணவர்களுடைய அபிப்பிராயம்' என்று சொன்னேன். 'பல மாணவர்கள் இந்தி தேவை என்று பெரிதும் விரும்புகிறார்கள்' என்றும் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. பொ. வடிவேல் : அடுத்து, வடாற்காடு மாவட்டத்தில் பாலார் பேஸின் ரூல்ஸ் பெரிய தலைவலியாக இருக்கிறது. முன்பெல்லாம், பாலார் பேசின் ரூல்ஸ் 660 கெஜம் அல்லது இரண்டாயிரம் அடிக்கப்பாலிருக்கும் இடத்திற்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. தற்சமயம் பாலாற்றிலிருந்து 12, 15 மைலுக்கு அப்பால் வாணியம்பாடியில் மலைக் காடாக இருக்கும் பகுதிக்கும் இந்த விதிகள் கட்டுப்படுத்துவதால் ஏழை எளிய விவசாயிகள் பம்ப் செட் போட முடியாத நிலைமை இருக்கிறது. திருப்பத்தூர் தாலுக்கா பி. டபிள்யூ. டி. இன்ஜினீர் அலுவலகம் மேட்டூர் அணையில் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திற்கு விவசாயிகள் போய் அனுமதி பெற்று வருவதற்குக்கூட பெருத்த கஷ்டமாக இருக்கிறது. பாலார் பேஸின் ரூல்ஸைத் தயவு செய்து முதல் அமைச்சர் அவர்கள், வாணியம்பாடி பக்கத்தில், பாலாற்றிலிருந்து 12, 15 மைலுக்கு அப்பாலிருக்கும் இடங்களைப் பொறுத்தவரையில் ரத்து செய்து, அங்குள்ளவர்களுக்குச் சுலபமாக சர்டிபிகேட் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், இப்பொழுது 70, 80 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. 45 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை வந்தபோது, ஜில்லா முழுவதிலும் அதிகப்படியாக இருக்கும் ஆசிரியர்களை யூனியனுக்கு மாற்றலாம் என்றும், அதுவரை புது நியமனம் செய்யக்கூடாது என்றும் புதிதாக உத்தரவு வந்திருப்பதால் நிறுத்தப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடம் திறந்து ஏழு மாதம் ஆகியும் இதே நிலை இருந்து வருகிறது. ஆகவே, இதையும் கல்வி அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரை நிகழ்த்தியமைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் உரையில், இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர் திரு. காமராஜ் அவர்களைப் பாராட்டி ஒரு பாராவிலே சில விவரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவ்வாறு அவர் கூறியதைப்பற்றிக்கூட இந்தச் சபையிலே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது; அதிருப்தி தெரிவிக்கப்பட்டது; ஒரு வகையிலே அதை கேலியாகக் கூடக் கருதும் வண்ணம் சில நண்பர்கள் பேசினார்கள். கவர்னர் அவர்கள் பேசியதைவிட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள், ஐந்தாண்டுகள் இந்த மன்றத்திலே அங்கத்தினராக இருந்தபோது பேசிய சில விஷயங்களை இங்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

21st January 1964] *[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]*

6—5—1957 அன்று கவர்னர் உரையின்மீது நடந்த விவாதத்தில் திரு. அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டதாவது—

"சமுதாய நலத் திட்டத்தை நம்முடைய மாகாண முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய சொந்தப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்யவேண்டுமென்ற—செய்கிறார்கள் என்று அல்ல—அக்கறை கொண்டவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகையால், அவரிடத்தில் இந்த இலாகா ஒப்படைக்கப் பட்டிருப்பதைப்பற்றி நான் உண்மையிலேயே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் . . . "

4—7—1957 அன்று வரவு செலவுத் திட்டத்தின் மீது நடந்த விவாதத்தில் அவர் பேசுகையில்,

"நமது முதலமைச்சர் காமராஜ் அவர்கள் நிபுணர் அல்ல. நிபுணர் அல்லாத ஒரு காரணத்தால் நாட்டு மக்கள் அவர்களிடத்தில் இன்றையதினம் நிறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்—நிபுணர்கள் புள்ளி விவரங்களை நம்புவார்கள்—நிபுணரல்லாத இவர் நாட்டு மக்களுடைய பசித்த வயிற்றினையும், காய்ந்த தலையினையும் கவலை படிந்த முகத்தினையும் பார்த்துத்தான் நாட்டு நிலையைத் தெரிந்துகொள்ளுகின்றார் . . ."

என்று குறிப்பிட்டார்கள்.

17—7—1957 அன்று அவர் பேசியதாவது—

"நாட்டை ஆளுகிற இன்றைய அமைச்சரவை உண்மையிலேயே நாட்டு மக்களுக்கு மிக அதிகமாகச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது மாத்திரமல்ல. அதற்கேற்ற திறமை அவர்களிடத்திலே இருக்கிறது . . ."

அதே போல, *26—7—1957* அன்று . . .

கனம் சபாநாயகர்: அதெல்லாம் இல்லை என்று அவர்கள் சொல்லவில்லை. 'கவர்னர் உரையில் திரு. காமராஜ் அவர்களைப் பற்றிச் சொன்னது சரி இல்லை' என்று அவர்கள் சொல்கிறார்கள். அவ்வளவுதான்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் அவர்களுடைய பேச்சுக்களிலே, கவர்னர் அவர்கள் பாராட்டியதை விட இன்னும் அதிகமாக, திரு. காமராஜ் அவர்களை மட்டுமல்ல மந்திரி சபையையே கூட, மிகவும் பாராட்டிப் பேசிய விவரங்கள் இருக்கின்றன. எனவே, ஏதோ காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற வகையிலே அந்தப் பாராட்டுதலை வழங்கியிருப்பதாகக் கருதக்கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்திய தேசீய காங்கிரஸின் தலைவர் அவர். இந்திய தேசீய காங்கிரஸ் சாதாரண அரசியல் கட்சிகளின் வரிசையில் இருப்பதல்ல என்பதை

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [21st January 1964

நீங்கள் உணரவேண்டும். அதை உணருவதினால் உங்கள் கட்சிக்குப் பலம் ஒன்றும் குறைந்து விடாது. உண்மையை உணரச் சரித்திர பூர்வமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். காங்கிரஸ் மகாசபை ஏற்பட்ட வரலாறு, அது இந்த நாட்டுக்கு சாதித்துள்ள சாதனைகள், இன்றும் அந்தச் சபைக்குப் பரத கண்டத்தில் இருக்கக்கூடிய ஒரு பரந்த இணைப்பு. இவைகளையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு பேச வேண்டும். புவனேசுவரத்திற்குச் செலவழித்துக் கொண்டு உங்களில் சிலரால் ஒருகால் வரமுடியாது என்று கருதினால் நாங்கள் கூட கொடுத்திருக்கலாம். இதை ஏன் சொல்கிறேன் என்றால், புவனேசுவரத்திற்கு வந்து அங்கு என்ன நடந்தது என்பதை நண்பர்கள் நேரில் பார்த்திருப்பார்களானால், கேரளத்திலிருந்து காஷ்மீரம் வரையில் ஒவ்வொரு பிரதேசத்தினரும் அங்கு வந்து கொடியின்கீழ் நின்று இருந்த காட்சியைப் பார்த்திருப்பார்கள். தேசிய கொடியின்கீழ் நிற்பவர்கள் யார்? என்று 1920-ஆம் வருஷத்திலே பாரதியார் பாடினார். பல்வேறு பண்பாடு நாகரிகம், கலாசாரம் ஜாதி, மதம் சமயம் கோட்பாடுகளை அனுசரிக்கக்கூடிய அத்தனை பேர்களும் புவனேஸ்வரத்தில் கொடியின் கீழ் நின்று வணங்கினார்கள். கொடியை உயர்த்தினார்கள். இது மட்டுமல்ல. மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்கள். காங்கிரசினுடைய பெருமையைச் சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. அது ஒரு தேசீய சபையாக இந்தியாவின் பிரதிபிம்பமாக இருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சியைக் காட்டக்கூடிய வகையில், இந்தியாவுக்கு ஒரு பிரதிநிதித்துவம் வாய்ந்த பலவகைக் கடமைகளை ஏற்றுக்கொண்டிருக்கிற, சாதித்துக்கொண்டு வருகிற இன்னும் நம் முன்னே தோன்றக்கூடிய பல்வேறு பிரச்னைகளுக்கும் தீர்வு காண்பதற்குள்ள பொறுப்புக்களை வகித்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு பெரிய மகாசபை என்பதற்காகத்தான் சொல்கிறேன். அந்த ஸ்தாபனத்தின் தலைவர் என்ற முறையில் அவர்கள் அந்த வார்த்தைகளைச் சொன்னார் என்று வைத்துக் கொள்ளாவிட்டாலும் கூட, திரு. காமராஜ் அவர்கள் சாதித்துள்ள விஷயங்களை அவரவர் மனத்திற்கேற்பப் பாராட்ட முடியாவிட்டாலும்கூட, அவர் சொன்ன பரந்த நோக்கத்தை மனத்திலே வைத்துக்கொண்டு, அந்த வார்த்தைகளை எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் சொல்லாமலிருந்திருந்தால் நம்முடைய மரபுக்கு ஏற்றதாக இருந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவ்வாறு சொல்வது சரியா? என்று பார்க்கவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என்று ஒரு காலத்தில் எதிர்த் தரப்பில் கூறப்பட்டது. கவர்னர் அவர்கள் திட்டத்தைப் பற்றியும் அதற்கு வேண்டிய வருவாயைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய கட்சித் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள், நம்முடைய தமிழ்நாட்டு அரசாங்கத்திற்குத் திட்டத்தை வகுப்பதற்காக என்று ஒரு குழு இருந்ததே அந்தக் குழுவினுடைய முதல் கூட்டத்திற்கு வந்தவர் அடுத்த கூட்டத்திற்கு ஏன் வரவில்லை? "எத்தனையோ கோடி ரூபாய் திட்டத்திற்கு வேண்டும் என்று சொன்னீர்களே! அந்த ரூபாய்க்கு வழிவகை என்ன? திட்டம்

21st January 1964] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

என்ன? திட்டத்தைக் கொடுத்தீர்களா? என்று நிதி அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அடுத்த கூட்டத்திற்கு வந்தார்களா? நடைபெற்றது என்ன என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். 10-30 a.m.

கனம் சபாநாயகர் : நீங்கள், நீங்கள் என்று சொன்னால் அது சபாநாயகரைத் தான் குறிக்கும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கனம் சபாநாயகர் மூலமாக அவர்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசி உயர்வைப் பற்றியும் அவர்கள் இதே சபையில் பேசியதைப் பார்க்கிறோம். விவசாயிகளிடத்தில் ஒன்று சொல்கிறார்கள். இங்கே ஒன்று சொல்கிறார்கள். பார்லிமெண்டில் ஒன்று சொல்கிறார்கள். இப்படி அந்தக் கட்சியினர் சொல்கின்ற கருத்துக்களை ஒன்றுக்கொன்று மாறுபடுகிறது என்பதை உதாரணங்களுடன் என்னால் எடுத்துக் காட்ட முடியும். ஒரு வேளை அவர்கள் சொல்வது எங்கள் மனத்திற்குத்தான் புலனாகவில்லை என்னவோ. காரண காரியங்களை ஆராய்ந்து பேசினால் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். விலைவாசிகளைப் கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கமும்தான் பலவகையில் முயன்று வருகிறது. இன்னும் முடிந்தால் அவர்கள் ஆக்க ரீதியில் என்ன என்ன யோசனைகளைச் சொன்னாலும் அதை அரசாங்கம் யோசனை செய்யும். எங்களுக்குப் புலனாகாத விஷயங்களை ஒருகால் அவர்களும் சொல்லக்கூடும் என்றே நாங்கள் நம்புகிறோம். நேற்றையதினம் இங்கு ஒரு அங்கத்தினர் பேசினதாகப் பத்திரிகையில் பார்த்தேன். விலைவாசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிற யோசனைகளை ஏற்றுக்கொள்ளாது, எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகளினால் விலைவாசிச் சரிவு ஏற்படும், விலைவாசி குறைந்துவிடும்படியான நிலை ஏற்படும் இது திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டம் தட்டும் முயற்சி என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. இப்படி ஒரு பக்கம் விலை குறைய வேண்டும் என்பதும், ஒரு பக்கம் விலை குறைகிறதே என்பதும் ஆக குறைகளைச் சொல்லி, குற்றங்களைச் சொல்லி பொதுமக்களிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தி, அதன்மூலமாக கட்சியை வளர்த்துக் கொள்ளவோ அல்லது அதன் மூலமாகக் கட்சியைக் கொஞ்ச நாளைக்கு வாழ்ந்து கொண்டிருக்கும்படி வைத்துக்கொள்வதற்கோ தான் இப்படியெல்லாம் அங்கலாய்த்துக் கொள்கிறார்களே தவிர அதில் உண்மை ஒன்றும் இல்லை என்பதை அவர்களே யோசித்துப் புரிந்து கொள்ளவேண்டுமென்று உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் தமது தலைமைப் பதவியைவிட்டு, முதல் மந்திரிப் பதவியைவிட்டு விலகியதன் நோக்கம் நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பது தான். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்து வருகிறது. நாடு தொழில் வளர்ச்சி அடைந்தாலும், விஞ்ஞான வளர்ச்சி அடைந்தாலும் மக்களுடைய பண்பாடு வளரவில்லையென்றால் பயன் இல்லை. நல்ல பண்புகள்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [21st January 1964

வளர்ந்து வரவேண்டும். ஒற்றுமை உணர்ச்சி வளர்ந்து வரவேண்டும். அதற்குமாறான உணர்ச்சிகள் வளர்த்து விடப் படுவது என்றால் அது சரியானதாக ஆகாது. ஜனநாயக முறையை இந்த நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டு மென்றால் மக்களுக்கு நல்ல பண்பாடுகளை எடுத்துச் சொல்லி வளர்க்கவேண்டும். அரசியலிலும், சமுதாயத்திலும் தனிப்பட்ட மக்களுடைய பண்பிலும் நல்ல ஒழுக்கம் வளர்ச்சி ஏற்பட்டால் தான் நன்மை வருங்காலத்தில் பிறக்கும். இந்த ஒரு நோக்கத்தை செயல்படுத்துவதற்காகவே நமது மாபெரும் தலைவர் காமராஜர் அவர்கள் தமது பதவியைத் துறந்து நேரடி நிர்மாணப் பணியில் இறங்கியிருக்கிறார்கள். அதை இந்தச் சமயத்தில் நாம் நினைவில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு கவர்னர் பெருமான் உரைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

* **திரு. அ. ராகவ ரெட்டி:** கனம் சபாநாயகர் அவர்களே, முக்கிய மாக தமிழில் பேசுவது எனக்கும் கொஞ்சம் கஷ்டமாக இருக்கு மாதலால் எனக்குக் கொஞ்சம் அதிக நேரம் தரவேண்டுமென்று முதலில் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: அப்பொழுது கனம் அங்கத்தினர் கொஞ்சம் சுருக்கமாகவே பேச வேண்டும். அல்லது ஆங்கிலத்தில் பேச லாம். அதிகமான அங்கத்தினர்கள் இன்னும் பேசவேண்டியிருப்ப தால் அதிக நேரம் கொடுப்பதற்கு இல்லை.

திரு. அ. ராகவ ரெட்டி: எப்போதும் விவசாயத்தைப் பற்றிப் பேசுவதே எனக்கு வழக்கம். ஆனால் இந்தத் தடவை நெல் காய்க்கும் மரங்கள் எப்படி இருக்குமென்று கேட்கக்கூடியவர்கள் கூட விவசாயிகளுடைய கஷ்டங்களைப் பற்றியும் விவசாயத்தைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். (கனம் திரு. வெ. ராமைய்யா நெல் காய்க்கும் மரம் எப்படி இருக்கும்?) விவசாயம் என்றால் என்ன என்று தெரியாதவர்கள் என்பதற்காகச் சொன்னேன். அவர் கள் அத்தனை பேருக்கும் விவசாயிகள் சார்பில் என் நன்றியைத் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை.

நமது அரசாங்கம் விவசாயத்தைப் பெருக்கவேண்டும். உற் பத்தியைப் பெருக்க வேண்டுமென்று பல திட்டங்களைப் போட்டு இருக்கிறோம். பல காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர நடைமுறையில் பார்க்கும் போது பத்து ஆண்டுகளுக்கு முன்னால் விவசாயிகள் எந்த நிலையில் இருந்தார்களோ அதே நிலையில் தான் இன்றும் இருக்கிறார்கள். சில இடங்களில் அணைக்கட்டுகள் கட்டியிருக்கலாம். ஆனால் எல்லா இடங்களுக்கும் சர்க்கார் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யவில்லை என்று சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக நம்முடைய பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் இவற்றை அமைத்தபோது அவர்கள் நேரிடையாக விவசாயத்தில் உற்பத்தி யைப் பெருக்க பல திட்டங்களை வகுத்தோம்.

21st January 1964] *[திரு. அ. ராகவ ரெட்டி]*

(திரு. எம். தண்டாயுதபாணி தலைமை)

எவ்வளவு அவர்கள் பங்கு கொள்ள வேண்டுமோ, அவ்வளவு பங்கு கொள்ளவில்லை. சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஏற்கனவே அவை மைனர் இர்ரிகேஷன் கீழ் இருந்தது. மைனர் இர்ரிகேஷன் மூலம் முன்பு செய்யப்பட்ட வேலைகள் கூட இப்போது பணம் இல்லை என்ற காரணத்தைச் சொல்லி அவர்கள் செய்வதில்லை. காலத்தைப் போக்கிவிடுகிறார்கள். விவசாயிகளுக்கு முக்கியமாகக் கடன் வசதி செய்ய வேண்டும் என்று விரும்புகிற சர்க்கார் அதை இப்போது கூட்டுறவு சங்கங்களிடத்தில் ஒப்படைத்துவிட்டார்கள். நான்கைந்து ஆண்டுளுக்கு முன் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மார்வாடிக் கடை இருந்தது என்றால் அதைவிடப் பெரிய மார்வாடிக் கடையாகக் கூட்டுறவு சங்கங்கள் இப்போது இருக்கின்றன. ரிசர்வ் பாங்கிடமிருந்து ஒண்ணரை சத விகிதத்திற்கு மத்திய பாங்க் கடன் பெறுகிறது என்றால் அந்தப் பணத்தை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்கிற சங்கங்கள் ஏழரை சதவிகிதத்திற்குக் கொடுக்கிறார்கள். ஒரு விவசாயி நூறு ரூபாய் கடன் வாங்க வேண்டுமென்றால் முதலிலேயே 15 ரூபாயை பிடித்துக் கொண்டு 85 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 100 ரூபாய்க்கு ஏழரை சதவிகிதம் வட்டி வீதம் கொடுக்க அவன் சம்மதிப்பதாக எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். இது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அதுவும் இந்தக் கடனை ஆறு மாதத்தில் திருப்பிக்கொடுக்காவிட்டால் பன்னிரண்டரை சதவிகிதம் வட்டி போடுகிறார்கள். ஆகவே தான் எப்படிப் பார்த்தாலும் இதனால் விவசாயிகளுக்குச் சௌகரியம் ஏற்படவில்லை. இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் கடன் வசதி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலைப் புதுச் சட்டத்தின்படி நடத்த வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் தேர்தலை எவ்வளவு தூரம் சட்டப்படி நடத்தினார்கள். கூட்டுறவு இயக்கங்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றுதான் தலைவர்கள் சொல்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சிக்காரர் ஒருவர் இருந்தால் கூட அவரை அங்கே இல்லாமல் செய்துவிடுகிறார்கள். இதற்கு சர்க்கார் அதிகாரத்தையே பயன்படுத்தும் முறை எங்கள் ஜில்லாவில் நடந்திருக்கிறது. முறையாக எதுவும் நடக்கவில்லை. கூட்டுறவு மத்திய பாங்குகள் அந்தந்தத் தேர்தலை நடத்த அதிகாரம் வைத்து இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒழுங்காக நடத்தவில்லை. செங்கல்பட்டு ஜில்லாவில் அப்படி நடந்துவிட்டு இருக்கலாம். மற்ற ஜில்லாக்களில் நடக்கும் தேர்தலையாவது சட்டப்படி நடக்கும் படியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான்கு நாட்களுக்கு முன்பு எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. என்னுடைய பையன் ஒருவனுக்கு நான் இல்லாத சமயத்தில் கால் அடிபட்டதால் அவனை சென்னையிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில்

[திரு. அ. ராகவ ரெட்டி] [21st January 1964

சேர்த்துவிட்டார்கள். எனக்குத் தெரிந்திருந்தால் நான் அவனை புத்தூருக்குக் கொண்டு போயிருப்பேன். இதுதான் முதல் தடவையாக என்னுடைய குடும்பத்தில் உள்ள ஒருவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் எந்த மாதிரி நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்கள் என்னுடைய பையனுக்கு எக்ஸ்ரே எடுத்து ஏதோ கட்டுக்கட்டியிருக்கிறார்கள். அவனை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு இரண்டு நாட்கள் அலைய வேண்டியதாகி விட்டது. சம்பந்தப்பட்ட டாக்டரைப் பார்க்கப்போனால் அவர் அங்கே இல்லை. அவர் ஒரு மணிக்கு வருவார் என்று சொன்னார்கள். அவர் ஒரு மணிக்கும் வரவில்லை; சாயந்திரம் போனால் அப்போதும் வரவில்லை. இப்படி இரண்டு நாட்கள் சுற்றிக் கடைசியாக 19-ம் தேதி மாலை அந்தப் பையனை அப்புறப்படுத்தி வெளியே கொண்டு வர முடிந்தது. மக்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாயை வரியாக வசூலித்து அந்தப் பணத்தை டாக்டர்களிடத்தில் கொடுத்து ஆஸ்பத்திரியை நடத்தச் சொன்னால் அது இம்மாதிரி இருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள பெரிய ஆஸ்பத்திரியிலேயே இந்த நிலைமை என்றால் மற்றச் சிறு ஆஸ்பத்திரிகளில் எல்லாம் எப்படி இருக்கும் என்பதை நினைக்கக் கூட முடியாத நிலைமை இருக்கிறது. ஆஸ்பத்திரி எப்படி நடக்கிறது என்று அமைச்சர்கள் திடீரென்று சென்று பார்க்க வேண்டும். டி.எம்.எஸ். அங்கு சென்று என்ன நடக்கிறது என்று பார்க்கவேண்டும். அதையெல்லாம் செய்யாமல் நம்முடைய அரசாங்கம் இவ்வளவு ரூபாய் செலவழித்து விட்டோம், திட்டங்களைப் போட்டுவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. ஒதுக்கப்படுகிற பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை ஆரணியாறு நீர்த் தேக்கத் திட்டம் போடப்பட்டு கடந்த பத்தாண்டுகளாக அதற்கான வேலை ஏதும் தொடங்காமல் அப்படியே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு அதைப் பற்றிக் கேட்டபோது 'எமர்ஜென்சி' என்று சொன்னார்கள். நீர்த் தேக்கத் திட்டங்கள் எமர்ஜென்சி காரணமாகப் பாதிக்கப்படாது என்று தெரிகிறது. கனம் அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து கூடிய சீக்கிரத்தில், இந்த வருஷத்திலாவது பட்ஜெட்டில் அந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெரியபாளையம் என்ற இடத்தில் ஆரணியாற்றின் குறுக்கே ரோட்டில் சரியான பாலம் இல்லாமல் இருக்கிறது. அதன் காரணமாக வருஷந்தோறும் மழை காலத்தில் அரசாங்க பஸ்களும் மற்ற பாசஞ்சர் பஸ்களும் விழுவது வழக்கமாக இருக்கிறது. இந்த ஆண்டு கூட ஒரு அரசாங்க பஸ் விழுந்து விட்டது. நான் கிராமத்திலுள்ள 500 பேரை அழைத்துக்கொண்டு உயிருக்குக் கூடப் பயப்படாமல் ஆற்றில் குதித்து ஜன்னல் வழியாக அந்த பஸ்ஸில் இருந்த 65 பேரையும் ஒவ்வொருவராக வெளியே கொண்டு வந்தோம். ஆகவே, இந்த மாதிரி விபத்துக்

21st January 1964] [திரு. அ. ராகவ ரெட்டி]

களைத் தவிர்க்க இந்த ஆண்டிலேயே அங்கு ஒரு பாலத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி அ. கிருஷ்ணவேணி : கனம் தலைவர் அவர்களே, கனம் கவர்னர் பெருமான் அவர்களின் உரையை வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே முன்னாள் முதல் மந்திரியும், இந்நாள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவருமான காமராஜ் அவர்கள் கடந்த பத்தாண்டுகளாக நல்ல முறையில் பெரிய திட்டங்களை வகுத்து நாட்டைச் சகல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படச் செய்ததையும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதையும் குறிப்பிட்டு அந்த அரும்பெரும் தலைவரைப் பாராட்டியிருக்கிறார்கள். அவருடைய சேவை இந்தச் சபையிலுள்ள எல்லோராலும் பாராட்டத்தக்கதாகும்.

நம்முடைய தலைவர் காமராஜ் அவர்கள் மிக முக்கியமான முதியோர் பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். முதியோர் பென்ஷன் திட்டத்திற்காகக் கடந்த ஆண்டு ஒரு கோடியே முப்பத்து ஐந்து லட்சம் ரூபாய் செலவாகியிருப்பதாகவும், 62,000 முதியோர்கள் இதனால் பயன் பெற்றிருப்பதாகவும் கவர்னர் பெருமான் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நான் அரசாங்கத்தை மிகவும் பாராட்டுகிறேன்.

என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியிலுள்ள மக்கள் மிகவும் ஏழ்மையான மக்கள் என்பது மதிப்புக்குரிய முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு உள்ள எவ்வளவோ முதியோர்கள் பென்ஷனுக்காக மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விசேஷ சலுகை அளித்து பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி, சேடப்பட்டி பிர்க்காக்களில் பணி புரியும் ஹரிஜன ஆசிரியர்களுக்குக் குடியிருக்க வீடு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சில ஆசிரியர்கள் தாங்கள் மேல் சாதி என்று சொல்லி சில வீடுகளில் வசித்து வருகிறார்கள். ஆனால் சில நாட்களில் அவர்கள் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தவுடனே அந்த வீட்டுக்காரர்கள் மேற்படி ஆசிரியர்களை வீட்டைக் காலி பண்ணும்படிக் கூறிவிடுகிறார்கள். ஆகவே, ஹரிஜன் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட் மூலம் அந்த ஹரிஜன ஆசிரியர்களுக்குக் குடியிருக்க வாடகைக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும்படி மதிப்புக்குரிய போலீஸ் அமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உசிலம்பட்டி, பேறையூர், சாப்டூர் ஆகிய ரஸ்தாக்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. இந்த ரஸ்தாக்களில் ஓடை உடைப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. சென்ற

[திருமதி அ. கிருஷ்ணவேணி] [21st January 1964

மாதம் ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த சேடப்பட்டி பகுதியில் சில கிராமங்களில் பெரும் மழையின் காரணமாகப் பெரிய பெரிய கண்மாய்களில் உடைப்புகள் ஏற்பட்டு அங்கெல்லாம் பயிரும், பருத்திச் செடிகளும், ஏழை மக்கள் இருக்கக் கூடிய வீடுகளும் தரைமட்டமாகி விட்டதைப் பார்ப்பதற்கு அமைச்சர் கக்கன்ஜி அவர்களுடன் காரில் சென்றோம்.

அப்போது அமைச்சர் அவர்கள் அந்த ரஸ்தாவின் நிலையை நன்கு அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். சேடப்பட்டிக்கும் உசிலம்பட்டிக்கும் நடுவில் சின்னக்கட்டளை என்ற கிராமம் இருக்கிறது. அதற்கு வடபுறம் அமைச்சர் அவர்கள் காரை நிறுத்தி நடந்து அந்த ஓடையைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. ஆகவே இந்த ஆண்டிலாவது அந்த ஓடைகளில் பாலம் கட்டி நல்ல முறையில் மராமத்து செய்யவேண்டுமென்று கனம் மராமத்து அமைச்சர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, நம் நாட்டில் ஹரிஜன மாணவிகளுக்கும் வெல்பேர் ஸ்கூல்களில் படிக்கும் மாணவிகளுக்கும் சீருடை வழங்கிவருவதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அந்த ஸ்கூல்களில் படிக்கும் ஏழை மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது. அவர்கள் கந்தல் துணியைக் கொண்டு கோவணம் கட்டிக் கொண்டு செல்கிறார்கள். ஆகவே மாணவிகளுக்கு சீருடை கொடுப்பது போல் இந்த ஏழை மாணவர்களுக்கும் சீருடை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர், தேனீயில் தொழில் பேட்டை கட்டி திறப்பு விழா நடக்க இருக்கிறது. ஆனால் அங்கு நான்கு தொழில் கூடங்கள்தான் கட்டப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகப்படியான கூடங்கள் கட்ட தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசாங்கத்தினிடம் இருந்து பண உதவி பெற்று நடத்தப்படும் தொழிற்சாலைகளில் நூற்றுக்கு ஐந்து ஹரிஜனங்களுக்குக் கூட வேலை கிடைப்பதில்லை. ஆகவே இனிமேலாவது அரசாங்க உதவி பெற்று நடத்தப்படும் தொழிற்சாலைகளில் 20 சத விகிதமாவது ஹரிஜன வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும்படி அந்த தொழிற்சாலை முதலாளிகளுக்கு அரசாங்கம் உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இங்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. செ. சினிவாசன்: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து பேசும் வகையில் நான் ஒரு சில கருத்துக்களை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் விலைவாசிகள் ஏறிக் கொண்டேயிருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பதோடு நாம் திட்டங்களுக்காக செலவிடப்படும் பணம் அதிகமாக லட்சிய அளவிற்கு மேல் போய்க் கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது விலைவாசிகள் எல்லா நாட்டிலும் ஏறிக் கொண்டி

ருப்பதை கண்கூடாக நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். திட்டம் உச்சபட்ச அளவை மீறிப் போகிறது என்று பெருமிதப்படும் இந்த நேரத்தில் ஒரு சில தொகுதிகளில் இத்திட்டங்கள் எந்த முறையில் இருக்கின்றன என்பதை பார்க்கக்கூடிய அளவில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளாமல் இருக்கமுடியாது. குறிப்பாக கிழக்கு ராமநாதபுரம் வட்டத்தில் நூற்றுக்கணக்கான சதுர மைல்களில் ரோடு வசதி என்றால் என்ன, எங்கே இருக்கிறது என்று கேட்கக்கூடிய படுமோசமான நிலை இருக்கிறது. இப்போது ரெவின்யூ அமைச்சராக இருக்கும் கனம் ராமைய்யா அவர்கள் கண்கூடாக அதை நேரிலேயே பார்த்தும் இன்னும் அத்திட்டத்திற்காக பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப் படாதது உண்மையிலேயே ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது. வருகிற பட்ஜெட்டிலாவது குறிப்பாக அங்குள்ள ரோடுகள் விஷயத்தில் கவனம் செலுத்தி அதிகமாக முன்னேறாத, அதிகப்படி போக்குவரத்து வசதியில்லாத பகுதிகளுக்கு பணம் ஒதுக்குமாறு உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் என் தொகுதியான பரமக்குடி தொகுதியானது அநேகமாக அகில இந்தியப் புகழ் வாய்ந்தது என்று கூடச் சொல்லலாம். ஏனெனில் 1958-ல் நடந்த வகுப்புக் கலவரம், ஓரளவிற்கு அதிகப்படுத்தப் பட்டது என்றாலும், அங்கு சரியான போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால் அந்த ஜாதிக் கலவரம் பெரிதாகக் காட்டப்பட்டது என்று நான் கருதுகிறேன். பெரும்பான்மையாக பின் தங்கிய வகுப்பினர் குடியிருக்கும் இந்தப் பிரதேசத்தில் போக்குவரத்து வசதியையாவது நம் திட்ட காலத்திற்குள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் இந்த வருடம் பருவநிலை சரியாக இருப்பதினால் சரியானபடி விளைச்சல் இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என் பகுதியைப் பொறுத்தவரையில் அது சரியான கணக்காகாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் ஆனியில் பெய்த மழைக்குப் பிறகு புரட்டாசியில்தான் மழை பெய்தது. மழையின் கணக்கு ரெவின்யூ அதிகாரிகளிடமும் இருக்கிறது. அப்படி பின்னால் பெய்த மழையினால் விவசாயிகளுக்கு எந்த விதமான நன்மையும் கிடையாதென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பல சங்கங்களில் இருந்து மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதை தயவுசெய்து ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கவனித்து அங்குள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் இந்த மாநிலத்தில் எலக்ட்ரிசிட்டி வசதி பெருமளவில் பெருகியிருப்பதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அந்த அறிக்கையை வரவேற்கும் இந்த நேரத்தில் கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் இன்னும் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு மின்சார

[திரு. செ. சீனிவாசன்] [21st January 1964

வசதி கொடுக்கப்படவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எந்தவிதமான ஆற்றுப் பாசன வசதியும் இல்லாது, வேறு எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாது கிணற்று விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள் கிழக்கு ராமநாதபுரம் விவசாயிகள். ஆகவே அவர்களுக்கு கிணற்று விவசாயத்திற்கு விரைவில் மேலும் நல்ல பல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டு மென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருப்பதுபோல் எல்லோருக்கும் சம வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்ற குறிக்கோளை அடைய ஏதுவாக பல திட்டங்கள் போடப்பட்டிருப்பதைக் குறித்து யாரும் பெருமிதம் கொள்ளாமல் இருக்கமுடியாது. ஆனால் தொழில் வாய்ப்பு கிட்டிய சிலருக்கு தொழில் வாய்ப்புக்கு சந்தர்ப்பம் கொடுத்தபோதிலும் அது கைகூடும் நிலையில் அது கிடைக்காமல் போவதைப் பார்க்கிறோம். சாதாரணமாக பஸ் ரூட்கள் கொடுக்கும்போது புதிதாக வருகிற நியூ என்ட்ரென்ட்ஸ்க்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சர்க்காரிலிருந்து ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதை நம்பி பல புது பஸ்களை பல முதலாளிகள் வாங்கி அவற்றை ரூட்டில் விடும்போது பெரிய "ப்ளீட் ஓனர்ஸ்" பெரிய பஸ் முதலாளிகள் இங்கு வந்து ஸ்டே வாங்கி வைத்து காரை ஓட்ட விடாதபடி செய்து விடுகிறார்கள். இப்படி யிருந்தால் சம வாய்ப்பு எப்படி ஏற்படும்? இதை எல்லாம் நன்கு அலசிப் பார்த்து தொழில் வாய்ப்பு கொடுக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இப்போது ஸ்காலர்ஷிப் முதலியவைகள் வழங்குவதற்காக 1,500 ரூபாய் என்று தீர்மானித்திருக்கிறோம். இது மிகவும் குறைந்த அளவாக இருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் 3,000 ரூபாயாக உயர்த்தவேண்டும். அப்போது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

11–00 உ.ப. *திரு. ம. கமலநாதன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரை மீது நடைபெறும் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித் துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களின் உரையில் முதல் முதலாக திரு. காமராஜ் அவர்களுடைய ராஜினாமாவைப்பற்றி குறிப்பிட் டிருக்கிறார்கள். அதில் திரு. காமராஜ் அவர்களுடைய ராஜினாமா வைப் பற்றியும், அவர் செய்த தியாகத்தைப் பற்றியும், வெகுவாக புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள். பாராட்டுக்கு உரியவர் திரு. காமராஜ் என்றாலும், பாராட்டவேண்டிய இடம், முறை இவை களைப் பற்றித்தான் எதிர்க்கட்சி அங்கத்தினர்களாகிய நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் யோசித்துப் பார்த் தால், காமராஜ் அவர்களுக்கு ஒரு பிரமோஷன் கிடைத்திருக்கிறது என்றுதான் நாங்கள் கருதிக்கொண்டிருக்கிறோம். தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர், அகில இந்திய காங்கிரஸ் தலைவரைப்பற்றி பாராட்டிப் பேசினால் பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் காமராஜ் அவர்களை பாராட்டி, வரிசை வரிசையாக காமராஜ்

21st January 1964] [திரு. ம. கமலநாதன்]

அவர்கள்பற்றி துதிப்பாடிக்கொண்டு, லாலி பாடிக்கொண்டிருந்தால் அதில் என்ன பொருள் இருக்கிறது? உண்மையிலேயே அறிஞர் அண்ணு அவர்களை நமது முதலமைச்சர் அறிஞர் அண்ணு என்று அழைக்கும்போதுதான் நாங்கள் அதை அதிகப் பெருமையாகக் கருதுகிறோம். அதல்லாமல் நாங்களே அறிஞர் அண்ணு என்று சொல்லிக்கொள்வதில், பெருமைப்பட்டுக்கொள்வதில் பொருள் ஒன்றுமில்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் தனது உரையில் திரு. காமராஜ் அவர்களைப் பாராட்டியிருக்கின்ற ஒரே காரணத்தினல், கடந்த நான்கு நாட்களாக, ஆளும் கட்சியினர் அவர்களைப் பாராட்டிப் பேசுவதாக இருந்தாலும் சரி, எதிர்கட்சியினர் அதை எதிர்த்துப் பேசினுலும் சரி, காமராஜ், காமராஜ் ஒவ்வொருவருடைய காதிலும் கேட்கும்படியாகவும், எடுத்த பேப்பரில் எல்லாம் நான்கு நாட்களாக செய்திகள் வந்தவண்ணமாகவும் இருக்கின்றன. இதைப் பார்த்தால் வேண்டுமென்றே, காமராஜ் அவர்களுக்கு தனியாக பெரிய விளம்பரம் கொடுக்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் கவர்னர் அவர்களது உரையில் இடம் பெற்றிருக்கிறது. அண்மையில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு எல்லாம் ஒரு சட்டம் வந்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பதவியில் இருக்கும் நேரத்தில் அவர்களுடைய படத்தைத் திறக்கக்கூடாது என்று பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் சட்டம் வந்திருக்கிறது. ஆனல் பதவியில் இருந்து கொண்டிருந்த கனம் காமராஜ் அவர்களுடைய சிலையை மட்டும் திறந்து வைக்கிறார்கள். இதற்கு எந்தவிதமான சட்டமும் தடை விதிக்கவில்லை. தனிப்பட்ட ஒருவருக்கு மட்டும் எப்படி சட்டம் வளைந்து கொடுக்கிறது என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

அண்மையில் செய்தித்துறை அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் தனது தலை தீபாவளியை மாமனர் வீட்டில் கொண்டாடப் போகும் நேரத்தில் இரண்டு நாட்கள் எங்கள் யூனியன் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். சாதாரணமாக அமைச்சர் அவர்களுடைய சுற்றுப் பிரயாண பிரோகிராம் எம்.எல்.ஏ. என்ற முறையில் வந்ததே தவிர, யூனியன் தலைவர் என்ற முறையில் எனக்கு எந்தவிதமான செய்தியும் தெரிவிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் அங்கு வருவதோ அல்லது எந்தெந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் பங்கு கொள்கிறார், என்னென்ன கட்டிடங்களை எல்லாம் திறந்து வைக்கிறார்கள் என்கின்ற விவரங்களோ ஒன்றும் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆணையாளர் அவர்களிடத்தில் கேட்டதற்கு அவரிடமும் அபிஷியல் பிரோகிராம் மட்டுமே தனக்குத் தெரியும் என்று தெரிவித்தார்கள். அங்கேயுள்ள பஞ்சாயத்து தலைவர்கள், 'அமைச்சர் அவர்கள் வருகிறார்களே, கட்டிடம் எல்லாம் முடியவில்லையே எப்படி வரவேற்பது?' என்று கேட்டார்கள். நான் அதற்கு 'எப்படியும் வரவேற்பு கொடுங்கள்' என்று சொன்னேனே தவிர கொடுக்கக்கூடாது, என்று சொல்லவில்லை. இருந்தும் அவர்கள் எல்லாம் தயாராக இல்லை. எப்படியாவது பிரோகிராமைத் தள்ளி வைக்கும்படி கலக்டர், சப்-கலக்டர் இவர்களுக்கு தந்தி மூலமாக தெரிவித்தார்கள். பின்னல் அது முடியாமற் போகவே

[திரு. ம. கமலநாதன்] [21st January 1964

கலெக்டர் தாசில்தார் மூலமாக எல்லா பஞ்சாயத்து தலைவர்களுக்கும் எனக்கும் சொல்லி அனுப்பினார்கள். பின்னால் எப்படியும் வரவேற்பு கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே பெரிய அளவில் எதையும் செய்ய முடியாமல் சீக்கிரமாகவே எல்லா காரியங்களையும் கவனிக்க வேண்டியிருந்தது. முதல் வரவேற்பு நடந்த இடத்தில் நான் பேசினேன். "மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களே, உங்களை எப்போதும் நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் எதிர்க் கட்சியை சேர்ந்தவர்கள் என்றாலும்கூட அங்கு வருகின்ற அமைச்சர்களுக்கு நல்லமுறையில் வரவேற்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முறையில் பெரிய அளவில் கொடுக்கவேண்டும் என்று எண்ணியிருந்தும், நேரம் போதாததால் பெரிய அளவில் வரவேற்பு கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது" என்று தெரிவித்தேன். அதற்கு பதில் அளித்த அமைச்சர் அவர்கள் "உங்கள் வரவேற்பையோ அல்லது உங்களது மாலையையோ நம்பி நான் இங்கு வரவில்லை" என்று சொல்லுகிறார் என்றால் எப்படி அவர்களுக்கும் எங்களுக்கும் நல்லுறவு ஏற்படும் என்று தெரியவில்லை. பஞ்சாயத்து யூனியன் சட்டம் வந்தவுடன் இச்சட்டம் சர்வ கட்சியினராலும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் என்று இதன் முன்னுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் கட்சி அபிப்பிராய பேதங்களை பஞ்சாயத்தைப் பொறுத்தளவில் கொண்டுவரவேகூடாது என்றிருக்கும்போது, எதிர்க்கட்சிக்காரர்களை நசுக்க வேண்டும், எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கின்ற இடத்தில் எல்லாம் தங்கள் கட்சியை வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வது மிக மிக வருந்தத்தக்கதாகும். அதுவுமின்றி, அமைச்சர் வந்து திறந்து வைக்கின்ற கட்டிடங்களை எல்லாம் பார்த்தால், முடிவு பெறாத கட்டிடங்கள், ஃபைனல் பில் பெறாத கட்டிடங்கள், இவைகள்தான். ஆனால் ஊத்தங்கரை பஞ்சாயத்து யூனியனை அறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைக்கவேண்டும் என்று சொன்னபோது வேலை முடிவு பெறாத கட்டிடம் திறக்கக்கூடாது என்று சொல்லி மறுக்கப்பட்டது. ஆனால் அமைச்சர் அவர்களுடைய சுற்றுப் பிரயாணங்களில் வேலை முடிவு பெறாத கட்டிடங்களை எல்லாம் திறந்து வைக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. அறிஞர் அண்ணாவுக்கு ஒரு சட்டம். அமைச்சருக்கு ஒரு சட்டம். இனிமேலாவது இப்படிப்பட்ட அநியாயங்களை தயவுசெய்து செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இங்கு சட்டமன்றத்தில் சுமார் 150 பேர்களாவது இந்த உரையின் மீது பேசியிருப்போம். இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நாங்கள் பேசுகின்ற குறைகளைக் கேட்பதற்கு ஒரே ஒரு அமைச்சர் தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். மற்ற அமைச்சர்கள் யாரையும் காணவில்லை. இங்கு நாங்கள் எங்கள் தொகுதியிலுள்ள மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்காக வந்திருக்கிறோம். நாங்கள் சொல்லுகின்ற குறைகளைக் கேட்டு அவற்றிற்கு என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்பதை குறித்து வைத்துக்கொள்வதற்கோ அல்லது,

21st January 1964] [திரு. ம. கமலநாதன்]

இந்தக் குறைகளுக்கு என்ன பதில் சொல்வது என்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்கோ எந்த அமைச்சரும் இங்கே இருப்பதாகத் தெரியவில்லை. சுருக்கெழுத்தாளர் ஒருவர்தான் எங்கள் பேச்சை முழுவதும் சரியாக கேட்டுக் கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஏதோ நாங்கள் ஏதாவது பேசினால் எங்கள் தொகுதியிலுள்ள மக்கள் பேப்பரில் வருகின்ற 'கமலநாதன் ஆல்ஸோ ஸ்போக்' என்ற செய்தியைப் பார்த்துவிட்டு, இவர்கள் எதற்கு சட்டமன்றத்திற்கு போகிறார்கள் என்று எண்ணக்கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது. ஆகவே எந்த அளவுக்கு அமைச்சர்கள் நல்லமுறையில் வழிகாட்ட முடியுமோ அந்த அளவுக்கு அரசாங்கத்தில் உள்ளவர்கள் நடந்து காண்பிக்க வழிமுறைகள் செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ந. சௌந்திரபாண்டியன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். நம் நாடு ஒரு விவசாய நாடு. விவசாயம் முன்னேற்றம் அடைந்தால்தான் நாட்டுமக்கள் நலமாக வாழமுடியும் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. கிராமங்களில் குறிப்பாக குடிசைத் தொழில்களை நல்ல முறையில் கொண்டு வரவேண்டும். நம்முடைய அரசு பெரும்பகுதி விவசாயத்திற்காக செலவு செய்த போதிலும், அரசினால் கொடுக்கப்படுகின்ற உதவி நேரடியாக விவசாயிக்குப் போய் சேருகிறதா என்று பார்த்தால் கிடையவே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆதலால், அரசாங்கம் கொடுக்கின்ற கடன் மற்றுமுள்ள உதவித்தொகை இவைகள் எல்லாம் நேரடியாக மக்களுக்கு கிடைக்கும் வகையில் அரசு முயற்சி செய்யவேண்டும் என்று தங்கள் மூலமாக நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கிராமங்களில் சிறு கைத்தொழில்கள் பெருகினால்தான் கிராமத்திலுள்ள பொருளாதாரம் விரிவு அடையுமென்பது நம்முடைய கருத்து. இவற்றிற்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக சொல்ல முடியாது. ஆகவே அரசு இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாயத்திற்கு முக்கியமானது மின்சாரம். மின்சார உற்பத்தியைப் பொறுத்தளவில், மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலம் முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. இருந்த போதிலும்கூட நான்குநேரி தாலுகாவைப் பொறுத்த அளவில் மின்சார இணைப்புகள் மறுக்கப்பட்டு வருகிறது. காரணம் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதாது, மேலும் கூடுதலாக நிதி ஒதுக்குவதாக இருந்தால்தான் மின்சாரம் விஸ்தரிக்க முடியும், இல்லாவிட்டால் முடியாது என்று மறுக்கிறார்கள்.

இதே நிலைமை இன்னும் 2 அல்லது 2½ மாதங்கள் வரையில் நீடிக்கும் என்று தெரிகிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தயவு

செய்து இதிலே கவனம் எடுத்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிற்றாறு-பட்டணங்கால் திட்டத்தை உடனடியாக வேலை துவக்கி இராதாபுரம் கால்வாய்க்கு முக்கியத்துவம் கொடுத்து வேலை துரிதமாக நடப்பது பற்றி எனது தொகுதி மக்கள் சார்பாக அமைச்சரவைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை உடனடியாகப் பூர்த்தி செய்ய என்னென்ன வழிமுறைகள் செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மணிமுத்தாறு திட்டத்தின் கீழ் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கும் குளங்களுக்கு கால்வாய்கள் நல்ல முறையில் இல்லை. அந்தக் கால்வாய்களை வெட்ட உடனடியாக உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

விஜயநாராயணம் குளத்துக்கு கீழேயுள்ள குளங்களுக்கு கால்வாய் வெட்ட 40,000 ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. மாதங்கள் வருஷங்களாகியும் மதிப்பீடு அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து மதிப்பீட்டை நன்கு கவனித்து உடனடியாக வேலையை எடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நல்லதொரு நன்மையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் அடுத்து வரும் நிதி ஆண்டிலாவது இந்த வேலையை துரிதமாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளியூர் பெரியகுளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அதைப் பற்றி அமைச்சர்களுக்கு நன்கு தெரியும். அந்தக் குளத்தின் கரைகள் பழுது அடைந்து குளமும் தூர்ந்து போயிருக்கிறது. அதைச் செப்பனிடவேண்டிய பணி பொதுப்பணித் துறையைச் சேர்ந்தது. அதையும் நல்ல முறையில் செப்பனிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புலிமான் குளம் அணைக்கட்டு, கோவன் குளம் அணைக்கட்டு, கருமாண்டி அம்மன் அணைக்கட்டு என்று பல அணைக்கட்டுகள் இருந்தாலும் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் இருக்கின்றன. அவைகளைப் பற்றி நான் இந்த மன்றத்திலேயே பல முறை சொல்லியிருக்கிறேன். அவைகளையும் நல்ல முறையில் பழுது பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குடமாடியில் ஒரு அணை கட்டுவதாக இருக்கிறது. அந்த அணையையும் கட்ட தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கை அணை கட்டுவதாக இருக்கிறது. அது நல்ல முறையில் பரிசீலிக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதியிலிருக்கிற காவல் கிணறு,

21st January 1964] [திரு. ந. சௌந்திரபாண்டியன்]

வடக்கன் குளம், கால்கரை தனக்கர் குளம், இராதாபுரம் இடங்களை இதில் உட்படுத்த வழிவகை செய்ய அமைச்சர் அவர்கள் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுக வேலையைப் பொறுத்தவரையில் அது விரைவாக நடைபெறுவது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். இணைப்புகள் கொடுக்க கடற்கரை பக்கமாகப் போடப்பட்டிருக்கும் ரோடை அகலப்படுத்திக் கொடுத்து வேண்டிய பாலங்களையெல்லாம் கட்டிக் கொடுத்தால், அதோடு ரோடுக்கும் தார் போட்டுக் கொடுத்தால் கன்னியாகுமரி-தூத்துக்குடி பாதையும், நாகர்கோவில்-தூத்துக்குடி பாதையும் பலன் அளிப்பதாக இருக்கும். அதை விரைவுபடுத்தி அடுத்து வரும் நிதி ஆண்டிலாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. எவ்வாறு நடைபெறவேண்டும், எப்படி நடைபெற வேண்டும் என்று அரசாங்கம் ஆர அமர யோசித்து நல்ல முறையில் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் என்ன முறையில் நடைபெறவேண்டும் என்று ஆலோசிக்க ஒரு உயர்தரக் கமிட்டி நியமித்தாவது பொது மக்கள், அறிவாளிகள், அதிகாரிகள் ஆகியவர்களின் கருத்தை அறிந்து நிர்வாகத்தை மாற்றி அமைத்து நல்லதொரு பஞ்சாயத்து நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தபால்-தந்தி இலாகா மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருந்தாலும் கிராமாந்திரங்களில் தபால்-தந்தி வசதி குறைந்த அளவில் இருக்கிறது. நாடு முன்னேறிக்கொண்டிருக்கும்போது கிராமாந்திரங்களில் இத்தகைய தபால்-தந்தி வசதி மிகவும் தேவையானது. முக்கியமாக 5,000 ஜனத்தொகைக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு தபால்-தந்தி வசதி, டெலிஃபோன் வசதி ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும்படி நமது மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசிகளைப் பொறுத்த வரையில் விலைவாசிகள் உயர்ந்து போவது வாஸ்தவமாக இருந்தாலும், குறிப்பாக விவசாய மக்களைப் பார்க்கும்போது, அவர்களுடைய அன்றாடச் செலவுகளைப் பார்க்கும்போது அது உயர்ந்துகொண்டே போகிறது. அரிசி விலையை மாத்திரம் குறைத்தால் போதாது. எல்லாப் பண்டங்களின் விலையையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. முருகையன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று கவர்னர் உரையின் மீது நடைபெறும் விவாதத்திலே என்னுடைய கருத்துக்களை நான் இங்கு வழங்கக் கடமை பட்டிருக்கிறேன்.

திரு. காமராஜரைப்பற்றியும் அவருடைய சாதனைகளைப் பற்றியும் கவர்னர்பிரான் அவர்கள் உரையில் குறிப்பிட்டதை நாங்கள் முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். இங்கு பேசிய கனம் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், 'அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் அங்கத்தினராக வீற்றிருக்கும்போது காமராஜரைப்பற்றி பாராட்டிப் பேசியிருக்கிறார்' என்று அவருடைய பேச்சிலிருந்து சில வாசகங்களைப் படித்துக் காட்டினார்கள். அண்ணா அவர்கள், திரு. காமராஜர் இந்த மன்றத்திலே முதல் அமைச்சராக இருக்கிறார் என்று பாராட்டினார்களே யல்லாது, அவர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருக்கிறார் என்றோ தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்ற காரணத்திற்காகவோ பாராட்டவில்லை.

சோஷலிஸ பாணியை நிறைவேற்ற ஆவடியிலே ஆரம்பித்து புவனேஸ்வரில் கொண்டு விட்டிருக்கிறார்கள். ஆவடியில் ஆரம்பித்த சோஷலிஸத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்று அதற்குள்ள விளக்கங்களைத் தராது, புவனேஸ்வர் சோஷலிஸத்தைப் பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படுகிற பண விரயங்களை, கால தாமதங்களைப் பார்க்கும்போது, உணவு உற்பத்திக்காக ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு நிறைவேற்றியாகிவிட்டது. ஆனால் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களை நிறைவேற்றிய பிறகு பூர்ண வெற்றி அடைந்திருக்கிறதா என்று பார்த்தால் உள்ளபடியே ஒப்புக்கொள்ள முடியாது. தொழிலாளர்களுடைய நலனுக்காக வேண்டி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும், தொழில் பேட்டைகள் நிறுவ மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் தீட்டி ஏட்டளவில் வைத்துக்கொண்டு செல்லுகிறார்களே தவிர நிறைவேற்றுகிறார்களா என்று பார்த்தால் இல்லை என்று தான் என் போன்றவர்களுக்கு விளங்குகிறது.

கவர்னர்பிரான் அவர்கள் உரையில் பருவ நிலை விவசாயிகளுக்கு மிகவும் சாதகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், புதுக்கோட்டை ஆலங்குடி போன்ற பகுதிகளைப் பொறுத்த வரையில் பருவ நிலை எந்த விதத்திலும் விவசாயிகளுக்கு சாதகமாக இல்லை என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அங்கு புன்செய் நிலத்தில் பயிரிடுகிற விவசாயிகள் விவசாயம் ஆரம்பிப்பதற்கு பருவ மழை இல்லாத காரணத்தினால் பயிர்கள் பாதிக்கப்பட்டு, பிறகு கடந்த 1963-ம் ஆண்டு, நவம்பர், டிசம்பர் திங்களில் பெய்த மழை காரணமாக நன்செய் விவசாயிகளில் ஒரு சிலர் கொஞ்சம் வேளாண்மை இட்டிருப்பதும் பாதிக்கப்பட்டு விவசாயிகளெல்லாம் அதிக வேதனைப் பட்டிருக்கிறார்கள். அதற்குள் சர்க்கார் ஒரு தாக்கீது அனுப்பியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். 1372, 1373-ம் பசலிகளுக்கு நிலத்திற்கு சர்சார்ஜ் வரியையும் நில வரியையும் வசூலித்து

21st January 1964] [திரு. பி. முருகையன்]

மார்ச்சுக்குள் அனுப்பவேண்டும் என்ற முறையில் நிபந்தனை அனுப்பியிருப்பதாகவும், சர்க்கார் கடன்களை இரண்டு தவணைகளையும் ஒரே தடவையாகக் கட்டவேண்டுமென்று நிபந்தனை விதித்து ஏழை மக்களிடம் டிமாண்ட் பிறப்பித்து வசூலிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. வருவாய்த் துறை அமைச்சர் எங்கள் பகுதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் அவர்கள் இதைப்பற்றி நல்ல முறையில் சிந்தனை செய்து புதுக்கோட்டை பகுதியில் வாழ்கிற பிற்பட்ட மக்களுக்கு வாழ்வளிக்கவேண்டுமென்று வேண்டி, விரும்பி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் அக்கினியாறு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அங்கு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. உள்ளபடியே நான் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தங்கள் மூலம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக அக்கினியாற்றில் சமீபத்தில் கரமக்குடிக்கு அருகாமையில் ரிசர்வ் ஸ்கீம் என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, அதற்கான வேலைகளெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தினால் ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், பெரிய நிலச்சுவான்தாரர்களுக்குத்தான் இதனால் நன்மை ஏற்படுகிறது. அக்கினியாறு அணைத் திட்டத்தினால் பாயக் கூடிய ஆயக்கட்டு பகுதி கூட பெரும்பாலும் 2, 3 ஏரிகளின் ஆயக் கட்டுகள் அதாவது கரம்பக்குடி குளம், குமரகுளம், தென்னதிரயன் குளம், திருமணஞ்சேரிக்குளம் போன்ற குளங்களின் ஆயக் கட்டுக்கள் அப்படியே அடிபடுகின்றன. ஆயக்கட்டுக்கு நஷ்டம் ஏற்படுகின்ற விஸ்தீரணத்தைவிட, பாசன வசதி விஸ்தீரணம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதியோர்களுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகையைப் பற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சில முதியோர்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவித் தொகை என்ன காரணத்திற்காகவோ ஆறு மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டு, இப்பொழுது மீண்டும் அவைகளைப் பரிசிலனைக்கு வைத்திருக்கிறார்கள். துரிதமாக நடவடிக்கை எடுத்து, அந்த முதியோர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டம் சரியாக நடைபெறவில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் மதிய உணவுத் திட்டம் நல்ல முறையில் நடக்கவில்லை. சில ஆசிரியர்கள் கேர் பால் பவுடரை எடுத்துக்கொண்டு வந்து விற்கிறார்கள் என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. பால் பவுடர் விற்கப்படும் பொழுது கமிஷனர் அவர்களிடம் சொன்னால், அதை கவனிப்பதில்லை. 'நாங்கள் சென்று பார்த்தால் ஸ்டாக் ரிஜிஸ்டரில் சரியாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள், அதனால் நாங்கள் அவர்கள்

[திரு. பி. முருகையன்] [21st January 1964

மீது எந்தவித்மான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது' என்று சொல்லுகிறார். இதைப் பார்க்கிற பொழுது உள்ளபடியே எங்களுடைய மனம் வேதனைப்படுகிறது. சர்க்காரால் கொடுக் கப்படுகிற, அதுவும் அமெரிக்க சர்க்காரால் கொடுக்கப்படுகிற இந்தப் பால் பவுடரை ஆசிரியர்கள் தப்புத் தவறான முறையில் விற்றுவருவதை கமிஷனர் அவர்கள் நல்ல முறையில் கண்கா ணித்து, நல்ல நிலைமையை உருவாக்கவேண்டுமென்று தங்கள் மூல மாக அமைச்சர்களுக்குச் சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வி. ராமநாதன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்று, நன்றிதெரிவித்து, என்னுடைய கருத்துக்களைத் தெரி விக்க முற்படுகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரை யிலே பத்து வரிகளிலே இந்த மாமன்றத்தில் முன்னாள் முதல் அமைச்சராகவும், இன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், என்னாளும் மக்கள் தலைவராகவும் உள்ள கர்மவீரர் காமராஜ் அவர்களைப்பற்றி சிறப்பாகக் கூறியிருக்கிறார். திரு. காமராஜ் அவர்கள்பற்றி கூறியிருப்பது குறித்து, எதிர்க்கட்சி நண்பர்கள் பலர் பலவிதமாகப் பேசினார்கள். ஒரு சிலர் வரவேற்றுப் பேசினார்கள், ஒரு சிலர் எதிர்த் துப் பேசினார்கள். அவர்களுக்குள்ளேயே கொள்கைக் குழப் பம் இருப்பதை இந்த மாமன்றத்தில் நாம் தெரிந்து கொண்டுவிட்டோம். கடந்த பத்து ஆண்டுகளாக நமது முதல் அமைச்சராக இருந்து, உலகம் வியக்கக்கூடிய அளவுக்கு, காமராஜ் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தயாரித்து, உலகம் வியக்கக்கூடிய அளவுக்கு தன்னுடைய பதவியைத் துறந்ததைவிட, பெரிய தியாகம் இந்த நாட்டிலே எது வேண்டும்? இருபதாவது நூற்றாண்டிலே நம்முடைய தமிழ் நாட்டில் மட்டு மல்ல, பாரத நாட்டில் மட்டுமல்ல, உலகம் போற்றி வியக்கக்கூடிய அளவுக்கு, உலகத்திலே எந்த நாட்டிலும் யாரும் செய்ய முடியாத அளவுக்கு பதவியைத் துறந்திருக்கிறார் என்றால், இதைவிட பெரிய தியாகத்தை இந்த 20-வது நூற்றாண்டில் செய்தவர் யாராவது இந்த உலகத்தில் இருக்கிறார் என்று யாராவது கூறமுடியுமா என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களுடைய பேருரை சிறந்த முறையிலே அமைந் திருக்கிறது. கடந்த பத்து ஆண்டுக் காலமாக காமராஜ் அவர்கள் ஆற்றிய பணிகள் பற்றியும் கூறி இருக்கிறார். காலத்தை உணர்ந்து அவர்கள் ஆற்றிய உரை தெளிவாக இருக்கிற காரணத்தினால், காலத்தை உணர்ந்து செயல்படுகிற எங்களுக்கெல்லாம் அது காலக்கண்ணாடியாகத் தெரிகிறது. ஆனால், இன்று ஒரு அரசியல் கட்சியை வைத்துக்கொண்டு, சினிமாவிலே காட்டுகின்ற ஜால வித்தையைப் போல, திராவிட நாடு ஜால வித்தை காட்டியவர் களுக்கு கவர்னர் உரை ஜாலக்கண்ணாடியாகத் தெரியலாம். உண் மையில் காலத்தை உணர்ந்து செயல்படுகிற எங்களுக்கெல்லாம் அது காலக்கண்ணாடியாகத்தான் தெரிகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ராஜாங்கம் அவர்கள் பேசும்பொழுது கவர்னர் பெருமான் உரை ஏழைகளுடைய கண்ணீரைப் போக்குவதாக இல்லை என்று கூறினர். ஏழைகளுடைய கண்ணீரைப் போக்குவதாக இல்லாவிட்டாலும், கண்ணீர்த்துளிகளைப் போக்குகிற உரையாக இருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 291 கோடி ரூபாய்க்குப் பதிலாக, திட்டச் சாதனை 325 கோடி ரூபாய் அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கிறேன் என்று கூறியிருக்கிருர்கள். என்னுடைய தொகுதியிலே குறிப்பாக குடகனுறு திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இது நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. சமீபத்தில் அதனுடைய பரிசிலனை முடிவடைந்திருக்கிறது. விரைவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஐம்பது ஆண்டு காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்களுடைய குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் துரிதமாக முற்படும் என்று எதிர்பார்க்கிறேன். அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குளித்தலையில் ஒரு ஆஸ்பத்திரி இல்லாத குறை பெருங்குறையாக இருக்கிறது. அது தாலுக்கா தலைநகரமாக இருக்கிறது. எமர்ஜென்ஸி காலமாக இருப்பதால் அங்கே ஒரு ஆஸ்பத்திரியைத் திறக்காமல் இருக்கிருர்கள். கூடிய விரைவில் 50 பெட்கள் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றை குளித்தலையில் ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியிலே கிருஷ்ணுபுரம் பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அந்த யூனியனுக்கு ஒரு கட்டிடம் கட்டுவதாக இருந்தது, எமர்ஜென்ஸி காரணமாக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் சன்னம் சன்னமாகப் போதுமான கட்டிடங்களைக் கட்டுவோம் என்று கூறினுர்கள். கூடிய விரைவிலே கிருஷ்ணுபுரம் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்குமாறு அரசாங்கத்தை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரூரில் ஒரு பாலிடெக்னிக் தேவை. கரூர் தாலுக்கா தலைநகரம் அங்கு நான்கு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கரூரில் பிர்காவுக்கு இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, கரூரில் ஒரு தொழிற் பள்ளி அவசியம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூடிய விரைவிலே இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[21st January 1964

* **திரு. இரா. நாராயணன் :** பெருமைக்கு உகந்த தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் பேரில் நான்கு நாட்களாக நடந்து வரும் இந்த விவாதத்திலே எனக்கும் பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் சர்க்காரை, எதற்காக ஏற்படுத்தினோம் என்பதை வெள்ளைக்கார ஆட்சி காலத்திலிருந்து இன்று வரையிலும் நாம் உணர்ந்திருக்கிறோம். நம்முடைய சுதந்திர சர்க்காரிலே மக்களுக்காக நாம் சர்க்கார் நடத்தி வருகிறோம். இந்த நேரத்திலே நாம் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசுவதற்காக நாம் இந்தச் சட்டமன்றத்தில் வந்திருக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியிலுள்ள குறைபாடுகளை அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அரசாங்கம் அது சம்பந்தமாக ஆக்க வேலைகளிலே ஈடுபடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் இந்தச் சட்ட மன்றத்திலே நாம் வந்திருக்கிறோம். சமுதாய நலத் திட்டங்களை இந்த நாட்டில் நல்ல முறையில் நடத்தி வருகிறோம், ஏழை எளியவர்களுக்கு, விவசாயிகளுக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தி வந்திருக்கிறோம் என்று கவர்னர் உரையிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்த நாட்டிலே அதிக வரியைப் போட்டு, அந்த நேரத்தில் விவசாயிகள் படும் கஷ்டத்தை இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது. குடிநீர் வசதி இல்லாமல், சுகாதார வசதி இல்லாமல், கட்டுவதற்கு சேலைகள் கூட இல்லாத நேரத்திலே, தொழிலாளிகளும், மற்ற விவசாயிகளும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, நடக்காத பள்ளிக்கூடத்தைத் திறக்கவும், கட்டாமல் இருக்கக்கூடிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா செய்வதற்கும் இந்த நெருக்கடி நேரத்தில் அமைச்சர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே, இது தகுதியா என்று உங்கள் மூலம் அமைச்சர்களைக் கேட்கிறேன். மக்கள் வேதனைப்படும் இந்த நேரத்தில் ஊரில் ஒரு சிறிய நீர்ப்பாசன திட்டத்திற்குக் கூட வழிவகை செய்யவில்லை. என்னுடைய தொகுதியில் சின்னாறு நீர்த் தேக்கம் என்ற ஒரு நீர்த் தேக்கத்தை 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டினார்கள். எழுநூற்றியைம்பது ஏக்கருக்குப் பாயும் என்று சொல்கிறார்கள். இரு நூற்றியைம்பது ஏக்கர்களுக்குக் கூடப் பாயவில்லை. சர்க்காருடைய திட்டம் என்ன வாயிற்று என்று கேட்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு திட்டங்கள் போடத் தெரியுமா, அப்படி

11-30 a.m. அவர்கள் திட்டங்கள் தீட்டிக் கொடுத்தால் அவற்றை ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று ஆளும் கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் சொன்னார்கள். நாங்கள் திட்டங்கள் தீட்டிக் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம் என்று நான் அவர்களுக்கு சொல்லிக் கொள்ளுகிறேன். எங்களை ஆளும் கட்சிக்காரர்கள் கலந்து ஆலோசிக்க முன் வந்தால் எங்களுடைய அறிஞர் அண்ணா அவர்களும், கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்களும் நல்ல பல திட்டங்களைத் தீட்டித் தர தயாராய் இருப்பார்கள். இன்று சிறுசிறு குட்டைகளுக்குக் கூட வழி வாய்க்கால் இல்லாமல் இருக்கிறது. பெரம்பலூர், உடையார் பாளையம், ஜெயங்கொண்டம் ஆகிய தாலூக்காக்களில்

21st January 1964] [திரு. இரா. நாராயணன்]

அங்குள்ள ஏரிகள் வறண்டு போய் பாழடைந்து கிடக்கின்ற நேரத்திலே, நாங்கள் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நல்ல முறையில் நடத்துகிறோம் என்று அரசாங்கம் சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நம்முடைய அரசாங்கம் உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தது. அது என்னவாயிற்று? ஏழை எளியவர்களுக்கு அந்த நிலம் எல்லாம் வழங்கப்பட்டதா? உச்ச வரம்புச் சட்டம் வருவதற்கு முன்னாலேயே, பணக்காரர்கள் எல்லாம் யார் யார் பெயரில் என்ன விதமாக மாற்றங்கள் செய்ய முடியுமோ அந்த விதத்திலே மாற்றங்கள் செய்துவிட்டார்கள். இந்த ஆட்சி பணக்காரர்களின் கையிலேயே இருக்கிறது. ஏழை எளியவர்கள் கையில் இல்லை. பணக்காரர்களாக இருக்கக்கூடியவர்கள்தான் ஆட்சி பொறுப்பில் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்கமுடியும்? பணக்காரர்கள் எல்லோரும் கரும்பு பயிரிட்டு வருகிறார்கள். ஒருவருக்கு 10 ஏக்கரா நிலமிருந்தால் அதில் முழுவதிலும் கரும்பு பயிரிடுகிறார்கள். நெல் பயிரிடும் வழக்கம் போய்விட்டது. இதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். ஒருவருக்கு 10 ஏக்கரா நிலமிருந்தால், 5 ஏக்கரில்தான் கரும்பு பயிர் செய்யலாம். பாக்கி 5 ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் உணவுப் பஞ்சம் நாட்டிலே இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள் மீது வரிமேல் வரி விதித்திருப்பதால் விவசாயிகள் விவசாயத்தை பெருக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் ஆதரவு கொடுக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் என்று ஒரு யூனியனை ஏற்படுத்தினார்கள். அந்த யூனியன் மூலமாக கிணறுகள் வெட்டுவதற்கு கடன் தருகிறோம் என்று வாய் அளவில் சொல்லுகிறார்கள். நிலச் சீர்திருத்த லோன் என்று சொல்லி முதலிலே ரூ. 1,500 கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டு பிறகு ரூ. 250-க்கு மேற்படக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது எப்படி நிலச் சீர்திருத்தம் செய்ய முடியும்? அவர்களுக்கு ஏன் ரூ. 1,500 கடன் கொடுக்கக் கூடாது. அவர்கள் நல்ல முறையில் கடனைத் திருப்பிக்கொடுப்பார்கள். இப்பொழுது கூட அரிஜனங்களுக்கு மாடு வாங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்கள் பயன் படுத்த முடியவில்லை என்பதற்காக அதை நீக்கிவிடவில்லையா? அரிஜனங்களுக்கு நிலத்தை அடமானம் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு அவர்கள் பயிரிட முடியாமல் எவ்வளவு அவஸ்தைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அரிஜனங்கள் அந்த நிலங்களிலேயே பிரவேசிக்க அரசாங்கம் வழி வகை செய்யவில்லை. அரிஜனங்களுக்கு நிலம் ஒதுக்கிக் கொடுக்கிறார்களே அந்த நிலங்களுக்கு நஷ்ட ஈடு செலுத்தியும் அதை நல்ல முறையில் பயன்படுத்த முடியவில்லை. நம்முடைய அரசாங்கம் மக்களுக்கு நல்ல முறையில் தொண்டு ஆற்றவேண்டும். மக்களுடைய கஷ்டங்களை நிவர்த்திக்க முயல் வேண்டும். இப்பொழுது நம்முடைய நாட்டிலே மழையில்லாத நேரத்திலே,

மைசூர் ராஜ்யத்திலே நல்ல மழை பெய்து காவேரி ஆற்றில் வெள்ளம் வந்து எவ்வளவோ வீடுகளும் மாடுகளும் சேதத்திற்கு உள்ளாகியது. அந்தச் சேதத்தை தடுக்க நம்முடைய கலெக்டர்களும், அரசாங்கமும் எவ்வளவோ பணத்தை செலவழித்தது. துறையூருக்கு மேற்கே மோகனூரில் ஒரு அணைக்கட்டு கட்டினால் உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுக்காக்களில் பாசன வசதி ஏற்படும். கிணறுகள் வெட்டுவதற்கு ரூ. 2,000, ரூ. 3,000 என்று கடன் கொடுத்தும்கூட, தண்ணீர் கிடைக்கவில்லை. விவசாயிகள் வருஷந்தோறும் 2 ஜோடி மாடுகள் ரூ. 1,000-க்குக் குறையாமல் வாங்க வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். பெரிய நகரங்களில் ஒருவிதமாகவும், சிறு கிராமங்களில் ஒரு விதமாகவும் நம்முடைய ஆட்சியாளர்கள் ஆட்சி செலுத்தி வருகிறார்கள். இந்த ஆற்று நீரை வாய்க்கால்கள் மூலமாகச் சிறிய ஏரிகளுக்குப் பாய்ச்சுவதற்குக் கொண்டுவந்தால் 20,000 ஏக்கருக்கு பாசனத்திற்கு வழிவகை ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது கவர்னர் பெருமான் அவர்களின் உரைக்கு நன்றிச் செலுத்தி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமது கவர்னர் பெருமான் விவசாயத்தைப் பற்றியும், மின்சாரத்தைப் பற்றியும், அரிசிக் கொள்முதலைப் பற்றியும் விரிவாக அவருடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். விவசாயம் முன்னேற்றம் அடையவேண்டுமென்றால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். விலைவாசி குறைய வேண்டும் என்று சொன்னால் நெல்காரர்களுக்குக் கிரயம் கொடுக்காமல் இருந்து சாப்பிடுகிற ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஒன்றுக்கு 3 படி, 4 படி என்று அரிசி கொடுத்தால் விலைவாசி குறையும் (சிரிப்பு). அப்படிக் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் தர்மபுரம் ஆதினமோ அல்லது திருவாடுதுறை ஆதினமோ இனமாகக் கொள்முதல் செய்தால் ஒரு தொந்தரவுமிருக்காது. ஆனால் மில்காரர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. போன ஆண்டு ½ லட்சம் டன் கொள்முதல் செய்தார்கள். இந்த ஆண்டு ஒரு லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டுமென்று திர்ணயம் செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் 20 சதவிகிதம் என்றும், திருச்சி மாவட்டம், மற்ற மாவட்டங்களில் 15 சதவிகிதம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அறுவடைக் காலங்களில் விவசாயிகளுக்கு விலை குறைவாகக் கிடைக்கிறதென்று ஒருபுறத்தில் சொல்லுகிறார்கள். மற்றொரு புறத்தில், வியாபாரிகளும் என்னைப்போன்ற மில்லர்களும் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த மாகாணத்தில் எவ்வளவோ வியாபாரிகள் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதை அரசாங்கம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறது. இரும்புத் தொழில், செமென்ட் தொழில், எக்ஸ்போர்ட் இம்போர்ட் தொழில், இன்னும் திரு. கலியாண சுந்தரம் குறிப்பிட்டதுபோல பல தொழில்களில் எவ்வளவோ பேர் கொள்ளை

யடித்துக் கொண்டிருக்கிறார்கள். கோட்டா லைசென்சு வாங்கிக் கொடுத்து, ஒரு ரூபாய் சாமானை 10 ரூபாய்க்கு விற்றாலும் அரசாங்கம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. எல்லா விதமான வியாபாரங்களையும் எடுத்துக் கொண்டால், எங்கள் ரைஸ் மில்களையும் எடுத்துக் கொள்வதில் ஒன்றும் வந்துவிடாது. நாங்கள் 8,000 பேர்கள் இருக்கிறோம். 3½ கோடி மக்கள் வாழும்போது, நாங்களும் வாழ முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியாவது மலிவாக அரிசி கொடுக்க வேண்டுமென்று நினைத்து ஒவ்வொரு ஆண்டும் நியாயவிலைக் கடைகளைத் திறப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அரிசி கொடுக்கும் எங்கள் ஜில்லாவில் திறப்பதில்லை. பெரிய நகரங்களில் 10 கடைகள் திறக்கலாமென்று சொல்லுகிறார்கள். மேலும் 10 கடைகளைத் திறக்கிறார்கள். நமது மாகாணத்தில் கொள்முதல் செய்யும் ஒரு லட்சம் டன் எங்கே போகிறது? 10 குவிண்டாலுக்கு மேல் விலைக்குப் போட்டால் பிராசிக்யூஷன் செய்யப்படுமென்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே லெவி என்ற முறையை வைத்து, எங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைத் தரவேண்டும், பாக்கியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருந்தார்கள். இந்த ஆண்டு "கம்பல்சரி" என்று போட்டு, 25 குவிண்டாலாக ஆக்கியிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆந்திரத்திலிருந்து வருகிற நெல்லுக்கும் அரிசிக்கும் விதிவிலக்கு அளித்துவிட்டோம் என்று சொன்னார்கள். 10 குவிண்டால், 25 குவிண்டால் என்று இல்லாமல், குறைந்தது 100 குவிண்டாலாகவாவது இருக்க வேண்டும். முதல் அமைச்சர் அவர்களிடம் எங்களுக்கு இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நாங்கள் முயற்சித்தோம். ஆகவே அதை 100 குவிண்டாலாக உயர்த்திக் கொடுத்தால் நலமாக இருக்கும். அது எங்கள் வியாபாரத்தை பாதிக்காத முறையில் அமையும்.

பிரைவேட் லாண்டுகளை முனிசிபாலிடி வைத்துக்கொண்டு எந்த விதமான வசதியும் செய்யாமல் இருக்கிறார்கள். மின்சார வசதியோ தண்ணீர் வசதியோ கிடையாது. ஒரு பக்கத்தில் தண்ணீர் இருக்கிறது. ஆனால், மற்றொரு பகுதியில் தண்ணீரே கிடையாது. இம்மாதிரிதான் மண்ணச்சநல்லூர் முதலிய இடங்களில்

(மணியடிக்கப்பட்டது.)

* திரு. நா. ராஜாங்கம்: கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் பேருரையின் மீது நடைபெறும் இந்த விவாதத்தில் எனக்கும் பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் கூறிக் கொள்கிறேன். சென்ற ஆண்டு எந்தக் குறையை கவர்னர் உரையில் கூறினேனோ, அதே குறையை மீண்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவாக்குவதே கவர்னர் உரை ஆகும். அரசாங்கம் கடந்த ஆண்டில் என்ன செய்தது, நடப்பு ஆண்டில் என்ன செய்ய இருக்கிறது, அது சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கை என்ன

[திரு. நா. ராஜாங்கம்] [21st January 1964

என்பதைக் கொண்டதே கவர்னர் உரையாக இந்தச் சபைக்கு முன் வருகிறது. இதுவே சட்டசபை சம்பிரதாயம். இந்த உரையில் ஹரிஜன நலம், முன்னேற்றம் இதுபற்றி வெகுவாக சொல்லப்படவில்லை. மகாத்மா காந்தி சாகிற வரையில் எந்த ஒன்றை தன் உயிர்க் கொள்கையாக கொண்டிருந்தார்களோ, காங்கிரஸ் கட்சிக் கொள்கை எதுவாக இருந்தாலும் அந்தக் கொள்கை பற்றி விரிவாக எதையும் இங்கே காணோம். இதையேதான் சென்ற ஆண்டிலும் நான் குறிப்பிட்டேன். ஒரு வேளை ஹரிஜன முன்னேற்றத்திற்காக செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்தாகி விட்டது, இனிமேல் ஹரிஜனங்களுக்குச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை என்ற நோக்கத்தில் ஒருகால் குறிப்பிடவில்லையோ என்னவோ.

(கனம் சபாநாயகர் தலைமை.)

ஆகவே ஹரிஜனங்களைப்பற்றி எதும் குறிப்பாகச் சொல்லப்படாமல் இருப்பதைக் கண்டு இந்த ஆண்டும் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

உரையின் ஆரம்பத்திலே 10 வரிகளுக்குமேல் முன்னாள் முதலமைச்சருக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு சிலர் அப்படிப் போற்றுவது சரியல்ல என்று விவாதித்தார்கள். நான் இதில் விவாதிக்க விரும்பவில்லை. இதுவரை நாம் நடத்தி இருக்கிற ஐந்தாண்டுத் திட்டங்களில் முக்கியமாக மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்தான் அதிகப் பலனைக் கொடுத்திருக்கிறது என்று கூறுகிறார்கள். ஏன் மூன்றாவது திட்டத்தில்தான் அதிக பலன் இருப்பதாக நினைக்கவேண்டும்? பெரிய தொகையை செலவழிக்கிறோம் என்பதனாலோ என்னவோ? பின்னால் நான்காவது திட்டத்தில் இதைவிட பெரும் தொகை ஒதுக்க முடியுமோ முடியாதோ? திட்டத்தின் எந்தப் பகுதியும் மதிப்பீட்டுத் தொகையைவிட அதிகத் தொகையே செலவழித்து முடிக்கப்பட்டு வந்திருக்கிறது. எந்த ஒரு திட்டமும் மதிப்பீட்டின் அடக்கத்திலே செய்ய முடியவில்லை. மூன்றாவது திட்டம் பெரிய திட்டம் என்றால் சென்ற இரண்டு திட்டங்களில் செய்யாத, அல்லது செய்ததைவிட அதிகமாக எதைச் செய்து இருக்கிறோம் என்று புரியவில்லை. குறிப்பாகப் பார்த்தால் என்னுடைய பகுதியிலே இரண்டு திட்டங்களிலே செய்யப்படாத ஒன்று, மூன்றாவது திட்டத்திலே விசேஷமாகச் செய்யப்பட்டது என்று ஒன்றும் இல்லை. ஒரு ஆண்டுக்கு முன்பு இந்தச் சட்டசபையில் சொன்னேன். எங்கள் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் ஊரைப் பற்றியே சொன்னேன். காடாம்புலியூர் பிர்க்கா, நெய்வேலி ஓரமாக இருக்கிறது. அந்த பிர்க்காவில் சுமார் 46 கிராமங்களுக்குத் தண்ணீரே கிடையாது. விருத்தாசலம் எம்.எல்.ஏ. பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். தன் ஊரைப் பற்றி சொல்லுகிறாரோ என்று பார்க்கிறார். அந்த பிர்க்காவிலே ஒரு கிணறு வெட்ட வேண்டும் என்றால் 40, 50, 60 அடி வரை வெட்டியாக வேண்டும். கிணற்றுக்குள்ளே பார்த்தால் போட்ட

21st January 1964] [திரு. நா. ராஜாங்கம்]

வாளியோ குடமோ ஒரு பூச்சி போல காணப்படும். அவ்வளவு ஆழத்தில் தண்ணீர் இருக்கும். அங்கு ஏதோ வாட்டர் ரிஸர்வாயர் போட்டுத் தண்ணீர் கொடுக்கலாம் என்று யோசிக்கிறார்கள் போல் தோன்றுகிறது. ஆனால் அது நடைபெறாது. காடாம்புலியூரில் அமைத்த வாட்டர் டாங்கு தண்ணீர் இல்லாமல் அப்படியே கிடக்கிறது. கடிலம் நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரலாமா என்று யோசிக்கிறார்கள். எனக்குப்பட்ட கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நெய்வேலியில் தண்ணீர் ஏராளமாக வெளிப்படுத்தப்படுகிறது. அப்படி வெளிப் படுத்தப்படும் தண்ணீரை வடிகாலில் இருந்து வடக்கு முகமாக ஒரு மைலுக்குக் குழாய் மூலம் அல்லது வாய்க்கால் மூலம் தண்ணீரை விட்டால், மேற்கூறிய 46 கிராமங் களுக்கும் தண்ணீர் கிடைக்கும். நெய்வேலியில் இருந்து கழிந்து வரும் தண்ணீர் பரவனாற்றுக்குப் போய் வீணாகிறது. கருகுறிச்சி ஐயனார் கோயில் பக்கத்தில் ஒரு கலுங்கு கட்டி வீணாகப் போகும் தண்ணீரை திருப்பிவிட்டால் பல ஏக்கரா நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும்.

போக்குவரத்து சம்பந்தமாகச் சொல்லும்பொழுது எங்கள் பகுதியில் பெரியக்குப்பம் மேற்புறம் உப்பனாறு இருக்கிறது. அதைக் கடந்து செல்ல படகு இருந்தால்தான் முடியும். பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றி வரும் நமது சர்க்கார் போக்கு வரத்து சௌகரியம் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு இந்த இடத்தில் ஒரு பாலம் கட்டிக் கொடுத்தால் நலமாக இருக்கும். அது சர்க்கார் ரிகார்டுகளிலே பக்கிம்காம் கெனால் என்று இருக்கிறது. அதை அந்த பகுதி மக்கள் சாதா ரணமாக உப்பனாறு என்று சொல்லுகிறார்கள். அதற்கு ஒரு புறத்திலே கடலும் மறுபுறத்தில் ஆறுமாக இருக்கிறது. இடையிலே 20, 30 கிராமங்கள் இருக்கின்றன. இவைகளின் போக்குவரத்து சௌகரியத்துக்காக அந்த இடத்திலே ஒரு பாலம் கட்டிக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால் சொல்லு கிறேன், இந்த பணியை ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்து உடனடியாகச் செய்ய வேண்டும் என்று . . .

(மணியடிக்கப்பட்டது)

*** திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்** : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச முன் வந்திருக்கிறேன். ஏற்காடு, சேர்வராயன் மலை ஜாதி மக்களுக்குப் பிற்போக்கான மக்களுக்கு எந்த விதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. அந்த மலைப் பிரதேசத்திலே 64 கிராமங்களில் மக்கள் ரொம்ப வசதி குறைப் பாட்டில் இருக்கிறார்கள். அங்கு எங்குமே சாதாரணமாகத் தண்ணீர் கிடையாது. மானத்தைப் பார்த்துத்தான் வெள்ளாமை செய்யவேண்டும். மழை பெய்தால்தான் விவசாயம். நெல், அரிசிச்

[திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்] [21st January 1964

சோறு சாப்பிட வேண்டும் என்றால் சேலத்திற்குச் சென்று வாங்கி வந்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் அரிசிச் சோறே கிடையாது. அந்த மானம்பார்த்த சீமையில் சாதாரணமாகக் கேழ்வரகு, சோளம், தினை முதலிய பயிர்கள்தான் விவசாயம் செய்ய முடியும். அங்கு மின்சாரமே கிடையாது. போக்குவரத்து வசதியும் கிடையாது. மலைஜாதி மக்கள் இருபது வருஷங்களாக நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டு வந்திருந்தாலும், அந்த நிலங்களுக்குப் பட்டா இல்லாமலே இருக்கிறது. பாட்டன் தலைமுறையிலிருந்தே பட்டா இல்லாமல் இருக்கிறது. மலைப் பகுதிகளில் இருக்கும் அந்த விவசாய நிலங்களை இப்பொழுது யூனியனுக்குச் சேர்த்துவிட வேண்டுமென்ற ஒரு அறிக்கை இருக்கிறது. இத்தனை வருஷங்களாகப் பயிரிட்டுக் கொண்டுவந்த அந்த மலை ஜாதி மக்களை நிலத்தைக் கொடுத்துவிட்டுப் போக வேண்டுமென்று சொன்னால் அவர்களை எங்கே கொண்டு போய்க் கொல்வது? அவர்கள் வாழ்க்கைக்கு என்ன செய்வார்கள்? இது மிகவும் கவலை தரக் கூடிய பிரச்னையாக இருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அந்த நிலங்களை பஞ்சாயத்து யூனியனில் சேர்த்துக்கொண்டு என்ன செய்யப்போகிறார்கள்? ஏதோ மரம், செடி வைக்கலாம் என்றாலும், பஞ்சாயத்து யூனியன் என்ன முறையில் நிர்வாகம் நடத்துகிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு ரோடு போடவேண்டுமென்றால், அதற்கு 15,000 ரூபாய் செலவானால் 20,000 ரூபாய் செலவானதாகக் கணக்கு எழுதுகிறார்கள். ஒரு கிணறு வெட்ட இரண்டாயிரம் ரூபாய் செலவானால், மூவாயிரம் ரூபாய் செலவானதாகக் கணக்கு எழுதிவிடுகிறார்கள். அதுபோல, இந்த நிலங்களைப் பஞ்சாயத்து யூனியன் எடுத்துக் கொண்டாலும், வசதி உள்ளவர்களுக்குத்தான் உபயோகப்படுமே தவிர, ஏழை எளிய மக்களுக்கு ஒன்றுமே உபயோகம் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு கூறிக்கொள்ளுகின்றேன். ஆகவே, யார் யார் எந்த எந்த நிலம் வைத்துக் கொண்டிருந்து பயிரிட்டுக்கொண்டு வருகிறார்களோ அவரவர்களுக்கே அந்த நிலத்தைக் கொடுத்துப் பயிரிட்டு வர வசதி செய்ய வேண்டும், அப்பொழுதான் மலை ஜாதி மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும் என்று நான் அரசாங் கத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் குளகூர் கிராமத்திலிருந்து கரடியூர் வரையில் இரண்டு மைல் தூரத்திற்கு ரோடு இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது. அந்த இரண்டு மைலுக்கும் ரோடு போட்டுக் கொடுத்தால், அங்கிருந்து நாகலூர், ஏற்காடு முதலிய ஊர்களுக்குப் போக வசதியாக இருக்கும். ஏழு மைலுக்குப் பஸ் வசதி இருக்கிறது. இந்த இரண்டு மைலுக்கும் ரோடு போட வேண்டுமென்று இரண்டு வருஷமாக நான் கேட்டுக் கொண்டிருக் கிறேன். அந்த ரோடு யூனியன் போடுவதா, அரசாங்கம்

21st January 1964] [திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்]

போடுவதா என்று தெரியாமல் இருக்கிறது. எது எப்படியிருந்தாலும், குளகூரிலிருந்து கரடியூர் வரையில் ஒரு ரோடு போட்டுக் கொடுக்குமாறு நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொட்டச்சேரியிலிருந்து பிளாகாடு வரையில் ஐந்து மைல் ரோடு போட வேண்டுமென்று நான் 1959-ம் வருஷத்திலிருந்து சட்டசபையில் பேசி வருகிறேன். அதுபற்றி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. யூனியனைக் கேட்டால், 'பணம் இல்லை, சட்ட சபையிலே ஒதுக்கச் சொல்லுங்கள்' என்று சொல்லுகிறார்கள். சட்டசபையில் பேசினால், அதுபற்றியே கவனிக்கமாட்டேன் என்கிறார்கள். நான் மீண்டும் கனம் சபாநாயகர் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கொட்டச்சேரியிலிருந்து பிளாகாடு வரையில் ஒரு ரோடு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓமலூர் ஒரு பெரிய நகரம். ஐயாயிரம் ஜனத்தொகை கொண்ட ஒரு நகரம். அந்த ஊரில் உள்ள ஆஸ்பத்திரியில் ஆண் டாக்டர் தான் இருக்கிறார். பெண் டாக்டர் இல்லை. முதலமைச்சர் அவர்கள் அந்த ஊருக்கு இரண்டு மாதங்களுக்கு முன் வந்திருந்தார். அவர் யூனியன் ஆபீசைத் திறக்க வந்திருந்தபோது, அவரை இதுபற்றி நான் ஞாபகப்படுத்தினேன். பிரசவத்திற்கு இன்ஜெக்ஷன் போட வேண்டுமானாலும் ஆண் டாக்டரைக் கூப்பிட வேண்டுமென்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கனம் சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்களுக்குக்கூட இரண்டு வருஷங்களாக எழுதி இருக்கிறேன். நேரடியாகவும் சொன்னேன். அந்த அம்மையார்கூட அதுபற்றி இன்னும் கவனிக்கவில்லை. அமைச்சர் அவர்களுக்கும் இது ஞாபகம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஓமலூர் ஆஸ்பத்திரியில் ஒரு பெண் டாக்டரைக் கட்டாயம் உடனடியாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

காட்டையாம்பட்டி, டேனிஸ் பேட்டையிலிருந்து ஓமலூர் வரவோ, தீவட்டிப்பட்டியிலிருந்து வரவோ பஸ் கிடைப்பதில்லை. உடனடியாக ஒரு பஸ் விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியில் ராமமூர்த்திநகரம், வட்கம்பட்டி, கணவாய்புத்தூர், லோக்கூர் வரையில் உள்ள ரோடுக்கு இன்னும் சல்லிபோடவில்லை. 1957-ம் வருஷத்திலிருந்து இன்னும் சல்லி போடப்படாமல் இருக்கிறது. உடனடியாகச் சல்லி போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியில் பனமரத்துப்பட்டிப் பகுதியில் ஒரு குறைபாடு இருக்கிறது. சேலத்திலிருந்து பனமரத்துப்பட்டி வழியாக ஒரு பஸ் போகிறது. கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்கள் வந்தபோது அது ஏற்பட்டது. ஐம்பதாயிரம் ஜனத்

தொகை உள்ள இடமாக இருப்பதால் இன்னொரு பஸ் விடவேண்டு மென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. ஏ. பெருமாள் : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது ஒரு சில கருத் துக்களைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வசதி, உர விநியோகம் முதலியவை பற்றி உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயி களுக்கு விதை விநியோகமோ, உர விநியோகமோ, கடன் வசதி களோ, சரிவர நடைபெறுகிறதா என்று பார்த்தால், என்னுடைய திருச்சுழி தொகுதியில் ஆறு மாதங்களுக்கு முன்னால் கடனுக்காக மனுச் செய்து ஒரு வருஷம் ஆகியும் இன்னும் சாங்ஷன் செய்யப் படவில்லை. மறு விவசாயத்திற்குப் பயன்படுவதற்குக்கூட வழி இல்லாமல் அங்கிருக்கும் டிபார்ட்மெண்டில் காகிதக் கட்டாகத் தான் இருக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் உண்டாகவில்லை என்று நான் கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாகச் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்கு வதற்காகப் பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தச் சலுகைகள் சர்க்காருடைய இலாக்காக்களின் மூலம் நேரடியாகக் கிடைத்து வந்தபோது வசதியாக இருந்தது. ஆனால், பஞ்சா யத்து யூனியன் மூலமாகக் கொடுக்கப்படும் வசதிகள் விவசாயி களுக்கு நல்ல முறையில் கிடைக்கவில்லை என்பதை நான் இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் என் போன்ற சில ஏழை விவசாயிகள் அங்கே நன்மை அடைய முடிய வில்லை. எங்களுக்கு நல்லதொரு வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஸ்தலத்திலிருக்கும் சிப்பந்திகளை ஏதாவது ஒரு வகையில் கவனித் துக்கொண்டால்தான் அவர்களிடம் கொடுக்கப்படும் பெட்டிஷன் கள் கவனிக்கப்படுகின்றன. எத்தனையோ தடவை பெடிஷன் அனுப்பியும், நேரடியாகச் சொல்லியும் அதைப்பற்றி அவர்கள் கவனிக்கவில்லை. யூனியன் கமிஷனருக்கும், அங்கிருக்கும் யூனியன் தலைவருக்கும் நான் நேரடியாகச் சொல்லியும், அவர்கள், 'நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்' என்று சொல்கிறார்களே தவிர அதைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் இதுவரையில் எடுக்கவில்லை என்பதைத் தங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டம் நமது மாநிலத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக இருக்கிறது என்பதைப் பற்றி கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக் கிறார்கள். அரிசன மாணவர்களும், ஜாதி இந்துக்களுடைய மாணவர்களும் ஒன்றாகச் சேர்ந்து படிக்கக் கூடிய தனியார் பள்ளியில் அரிசன மாணவர்களுக்கு மட்டும் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு கிடைக்கிறது. ஆனால், ஜாதி இந்துக்களின்

21st January 1964] [திரு. ஏ. பெருமாள்]

குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை. 'அவர்களுக்கும் சேர்த்து மதிய உணவுத் திட்டத்தின்கீழ் உணவு கொடுத்தால் என்ன?' என்று கேட்கும்போது, 'மதிய உணவுத் திட்டத்தின் கீழ் யூனியன் மூலமாக கிடைப்பதைத்தான் கொடுக்கமுடியும், வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலமாகக் கிடைக்கிறதை கொடுக்க முடியாது' என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். ஐம்பது குழந்தைகளில் 30 அரிசனப் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்கும்போது மற்ற 20 ஜாதி இந்துக் குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலை எவ்வளவு ஏமாற்றத்தைக் கொடுக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த நிலைமையை ஆராய்ந்து, எல்லா மாணவர்களுக்கும் மதிய உணவுத் திட்டம் பயன்படும் வண்ணம் அமுலாக்கப்பட வேண்டும். திட்டம் எல்லோருக்கும் பயன்படவேண்டும். அப்படி இல்லாத வகையில் ஒருவருக்குமே மதிய உணவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஒரு சிலருக்குக் கொடுத்துவிட்டு, ஒரு சிலருக்கு இல்லை என்று சொல்லும்போது, அது பெரிய பட்சபாதமாக இருக்கிறது. இதைச் சர்க்கார் பரிசிலனை செய்யவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, பாசன வசதியைப் பொருத்தமட்டில் என்னுடைய திருச்சுள்ளி தொகுதியில் ஏறக்குறைய 500 ஏக்கராக்கள் இருக்கின்றன. அந்த 500 ஏக்கராக்களுக்கும் எந்தவிதமான பாசன வசதியும் கிடையாது. பாசன வசதி செய்வதாக இருந்தால் வைகை ஆற்றில் இருந்து செய்யலாம். இதைப்பற்றிப் பல வருஷங்களாகச் சொல்லி வருகிறேன். அதுபற்றி எந்தவிதமான பரிசீலனையும் செய்யப்படவில்லை. அந்தக் கால்வாய்களை உடனடியாகச் செப்பனிடுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். 12-00 noon.

திரு. சு. அங்கமுத்து நாயக்கர்: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச நான் முன் வந்திருக்கிறேன். நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றியும், அரசாங்கம் செய்யும்படியான காரியங்களைப் பற்றியும் பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லி வந்தார்கள். அதுவும் முக்கியமாக நமக்கு எதிர்க்கட்சி மெம்பர்கள் அரசாங்கம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும் கூட நம்முடைய நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. இத்திட்டங்களினால் ஏழை மக்களுக்கு ஒரு பலனும் கிட்டவில்லை என்ற முறையில் பேசிக்கொண்டு போனார்கள். நம்முடைய அரசாங்கம் கல்வித்துறையில் ஆகட்டும், தொழில் துறையில் ஆகட்டும், விவசாயத்தில் ஆகட்டும்—மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பலகோடி ரூபாய்களைச் செலவு செய்து நம்முடைய தேசத்தின் சமுதாய வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதை இல்லை என்று மறுப்பது எவ்வளவு பொருத்தமற்ற செயல் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய சில மெம்பர்கள் அரசாங்கம் இந்த

ஐந்தாண்டுத் திட்டங்களில் செய்த காரியங்களினால் நாட்டு மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை, விவசாய மக்களுக்குச் சரியான பலன் கிட்டவில்லை என்றார்கள். அது கொஞ்சங்கூடச் சரியில்லாதது. அதுவும் எதிர்க்கட்சிக்காரர்கள் என்றால் பாரபட்சமாக நடத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இடமே யில்லை. அப்படி அவர்கள் சொன்னாலும் அதை யாரும் நம்ப மாட்டார்கள். தங்கள் மூலமாக நான் அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். குற்றங்குறைகளே இல்லையென்று சொல்ல வரவில்லை. அதற்காக ஒன்றிரண்டு இருப்பதை மிகைப்படுத்துவது சரியில்லை. சிறிய தொழில்கள், பெரிய தொழில்கள் ஆகியவற்றை வளர்ப்பதற்கு அரசாங்கம் உண்மையில் பலவகையில் செயலாற்றி வருகிறது. விவசாயிகளுடைய நன்மைக்காகப் பலவகையில் உதவி அளித்து வருகிற அரசாங்கம், சமுதாயத்தின் நன்மைக்காக முதியவர்களுக்கும் உதவி செய்கிறார்கள். கல்வித்துறையில் பல நற்பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்வி வசதி அளிக்கிறார்கள் என்று அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டும் அல்ல. மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பாக ஒரு பெரிய மாணவர்களின் கூட்டம் கோஷம் போட்டுக்கொண்டு இங்கே வந்தது உங்களுக்குத் தெரியும். அதைப் பார்க்கிறபோது இவ்வளவு பணம் செலவிட்டும், ஸ்காலர்ஷிப் உதவியும் படிக்க வசதியும் அளித்திருக்கின்ற இந்த மாணவர்களுடைய நிலை இந்தவாறு போகிறதே என்று வருந்த வேண்டியதாகத்தான் இருந்தது. இப்படி மாணவர்களை நேரிடையாக அரசியலில் இழுத்துவிடக் கூடாது என்று உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறு தொழில்கள் பல ஏற்படுத்தப்பட்டிருப்பினும் இன்னும் பரவலாக அவற்றை அமைக்க நாம் செயல்படவேண்டும்.

மில்லைப் பொருத்த வரையில் பத்து குண்டாதான் பில் போடலாம் என்று இருப்பதனால் தவறு ஏற்பட இடமிருக்கிறது. ஒரு லாரி லோட் ஏற்றுவதாக இருந்தால்கூட 60 குண்டா போட்டால் தான் சரியாக இருக்கும். ஆகவே 70, 75 குண்டா வரையிலுமாவது பில் போட மில்காரர்களுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

* **திரு. க. கோமதிசங்கர தீக்ஷிதர்:** கௌரவமிக்க சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையை ஆதரித்து நான் இரண்டொரு வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நாம் அனைவரும் பெருமைப் படக்கூடியதாக நமது ராஜ்ய அரசாங்கத்தை பத்து வருஷ காலமாக நேர்மையாக, மிகத் திறமையாக நமது மாபெரும் தலைவர் திரு. காமராசர் அவர்கள் நடத்திச் சென்று நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் அதற்காகப் பெருமைப் படுகிறோம். அதைப் போற்றி அவருக்கு நன்றி தெரிவித்துக்

கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம். பொருளாதார முன்னேற்றத்திற்காக பாடுபட்டுக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில் சமாதானம் நல்ல முறையில் நிலைத்திருக்கவேண்டும். நாட்டில் உள்ள தலைவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும்கூட மக்களுடைய பொருளாதாரம் நல்ல முறையில் முன்னேற்றம் அடைய வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அரசியல் அபிப்பிராயபேதம் இருக்கலாம். சாதிமதபேதம் இருக்கலாம். ஆனாலும் அவற்றை எல்லாம் மறந்து ஒத்துழைப்பதனால்தான் தேசப் பொருளாதாரம் முன்னேறக் கூடும். இத்துறையில் நாட்டிலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் ஒருமைப்பாட்டோடு பணியாற்றவேண்டிய கடமை இருக்கிறது என்று உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம் நாட்டில் சமாதானம் இருந்தால்தான் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர முடியும். சமாதானம் நிலவச் செய்ய எல்லா எதிர்க்கட்சிகளும் ஒத்துழைத்தாக வேண்டும். இந்த ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது. நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இந்த நாட்டு மக்களிடத்திலும், உத்தியோகஸ்தர்களிடத்திலும், எல்லா அரசியல் கட்சியினர்களிடையேயும் இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் விவசாயத்துறையில் மிகுந்த அக்கறை காட்டவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இந்த அடிப்படையில் மணிமுத்தாறு திட்டத்தைப்பற்றி—திருநெல்வேலி ஜில்லா, நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றிக் கூற ஆசைப்படுகிறேன். நமது மந்திரி திரு. ராமையா அவர்கள் நேரிடையாக அந்தப் பகுதிக்கு வந்து பார்வையிட்டிருக்கிறார். அந்தத் திட்டத்தின் மூலமாக ஏழாயிரம் ஏக்கராவுக்கு மேல் இன்னும் பாசன வசதி அளிக்க வழி இருக்கிறது. அதையும் கவனித்து ஆவன செய்யவேண்டும். மணிமுத்தாறு திட்டத்தைப் போல அங்கே வேறு ஒரு அணைத் திட்டத்தையும் ஏற்படுத்தித்தர வசதியிருக்கிறது. சேர்வையாறுத் திட்டம். அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

எங்களுடைய திருநெல்வேலி ஜில்லாவில் கடானா நதியிலும் ராம நதியிலும் இரு அணைகள் கட்ட வேண்டுமென்ற திட்டம் போடப்பட்டு பல வருஷ காலமாக வேலை மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. அந்த அணைத் திட்ட வேலைகளைத் தொடங்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுதந்திரம் வாங்கித் தந்த உத்தமர் காந்தியடிகளுடைய கொள்கை அடிப்படையில் வாழ்க்கை நடத்தி வரும் முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் அவர்கள், தமிழ் நாட்டிலே மது விலக்கு எடுக்கப்படமாட்டாது என்று உறுதியாகத் தெரிவித்திருப்

பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். காந்திஜி தந்த இந்தத் திட்டத்தைத் தமிழ் நாட்டில் நாம் வெற்றிகரமாக நிறைவேற்றி யிருக்கிறோம். மதுவிலக்குத் திட்டம் சரியானமுறையில் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள போலீஸ்காரர்களுக்கு அந்தத் திட்டத்தில் முழு நம்பிக்கை இருக்கவேண்டும்; அந்த நம்பிக்கை உடையவர்களைத்தான் இந்தப் பொறுப்பிலே ஈடுபடுத்தவேண்டுமென்ற கருத்தை நான் ஏற்கெனவே கமிட்டியில் எடுத்துக் கூறியிருக்கிறேன். அத்தகைய நம்பிக்கையுள்ள போலீஸ் அதிகாரிகளிடந்தான் மதுவிலக்கை அமல் நடத்தும் பொறுப்பைக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் மறுபடியும் கூற விரும்புகிறேன்.

முதியோர் பென்ஷன் திட்டத்தின் காரணமாக ஆயிரக்கணக் கான வயது வந்தவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் நம்முடைய அரசாங்கத்தை வாழ்த்துகிறார் கள். நாம் தொழிற் கல்வி அளிக்கிறோம். பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு அரசாங்கம் வேலை அளிக்க வேண்டிய கடமையை நிச்சயமாகச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றும் நாம் எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிப்பதற்கு வசதி செய்திருக்கிறோம். அதன் மூலம் வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கடிக்கத் தகுந்த முறையில் நாம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம். காந்திஜி நமக்கு அளித்துள்ள குடிசைத் தொழி லான நூல் நூற்பில் லட்சக் கணக்கான ஏழைத் தாய்மார்கள் முன்னேறி வந்தார்கள். சர்க்காவைச் சுழற்றுவதிலே, நூல் நூற்பதிலே கிராம மக்களுக்கு ஆர்வமூட்டி அதன் மூலம் கிராம மக்கள் நன்மை பெறும் வழிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர்த் திட்டத்தைப் பற்றிப் பலரும் எடுத்துக் கூறினார்கள். முன்பு குடிதண்ணீர் வசதி இல்லாமையின் காரணமாகப் பலர் தொத்து வியாதிகள் காரணமாக மடிந்து கொண்டிருந் தார்கள். இன்று அந்த நிலைமை மாறி பல கிராமங்களுக்கு நமது முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் 'ப்ரொடெக்டெட் வாட்டர் சப்ளை' அளித்து இருக்கிறோம். ஆயினும் இன்னும் தேவைக்குப் போதுமானதாக இல்லை. திருநெல்வேலி ஜில்லாவில் காலரா என்ற தொத்துநோய் பரவுவதற்குக் காரணமாக இருக்கின்ற ஒரு இடம், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கின்ற விக்கிரமசிங்கபுரமாகும். அந்த இடத்திற்குப் பாதுகாக்கப் பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டு மென்பதற்காகக் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறோம். இன்னும் அது நிறைவேற்றப்படாமலே இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

21st January 1964]

* **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே கவர்னர் பெருமான் உரையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் புலப்படுத்திக் கொள்கிறேன். கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவித்து வந்திருக்கிற தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். அதை வரவேற்று நான் வேண்டுகிற தேவைகளையும், காண்கிற குறைகளையும் கூற முற்படுகிறேன். இந்த உரை நிகழ்த்திய கனம் விஷ்ணுராம் மேதி அவர்களுக்கு நமது நன்றி.

சென்ற ஆண்டு அவர்கள் ஆற்றிய உரையிலே பேசியபோது, மிக இன்றியமையாத ஒன்றை அவர்கள் உரையிலே குறிப்பிடாதது வருந்தத் தக்கது என்று நான் குறிப்பிட்டேன். அந்த விஷயத்தை இந்த ஆண்டிலாவது அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று நான் எதிர்ப்பார்த்தேன். ஆனால் இந்த ஆண்டும் அது இடம் பெறவில்லை. பொற்கொல்லர் நிலையைப் பற்றித்தான் நான் சொல்லுகிறேன். ஒட்டைக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதைப் போல், தங்கக் கட்டுப்பாட்டு விதி திருத்தப்பட்ட பிறகு பொற்கொல்லருக்கு அதிகச் சிக்கலையும் சங்கடத்தையும் உண்டாக்கி இருக்கிறது. அந்த நிலைகளையெல்லாம் நாடு நன்கு அறியும். பொற்கொல்லர்கள் தங்களுக்குத் தாங்களே வேலையளித்துக் கொண்டு, பிற எவருடைய உதவியும் இன்றி அரசாங்கத்தின் துணையோ, அல்லது உதவிகளோ தேவையில்லாத நிலையிலே வாழ்கிற ஒரு அருமையான தொழிலாளர் வர்க்கம். அவர்களுக்குத் தற்போது இழைக்கப்படுகிற தீமையினாலே அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள முடியவில்லை என்பதோடு மட்டுமல்ல; அந்தப் பொறுப்பும் அதை நிர்வகிக்க வேண்டிய கடமையும் அரசாங்கத்திற்கு வந்து அந்த காரணமாக அரசாங்கத்தின் செலவு தொகையும் அதிகமாக ஆகிறது என்பதையும் நாம் மனத்திலே கொள்ள வேண்டும். பொற்கொல்லர்கள் எல்லாம் கல்லூரியிலே படித்துக் கணிதங்களையெல்லாம் கற்றவர்கள் அல்ல; விஞ்ஞான துறையிலே தேர்ச்சி பெற்றவர்களல்ல. இனி அவர்கள் தங்களிடத்தில் வரக்கூடிய பழைய நகைகளை எவ்வளவு காரட்டுகள் ஆக இருக்கின்றன என்று எழுத வேண்டும்; பிறகு உருக்கிய பிறகு எத்தனை காரட்டுகளாக மாறின; புதிய நகை செய்த பிறகு எத்தனை காரட்டுகள் என்று எழுத வேண்டியிருக்கிறது. அதே போன்று ஆரம்பத்திலே எவ்வளவு எடை இருந்தது; கடைசியில் எவ்வளவு எடை இருந்தது என்பதற்கும் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். இத்தகைய நிலைமை ஏற்படுமானால் அவர்களுடைய தொழில் திறமை வீணாகி விடும்.

பல சிறந்த அற்புதமான பணிகளைச் செய்கிறவர்களுக்கு யெழுத்துத்தான் போடத் தெரியும். சிலருக்கு அதுவும் தெரியாது. இந்நிலையில் இத்தனை வகையான குழப்பமும், சிக்கலும் உள்ள கணக்கு வகைகளை அவர்கள் கையாள வேண்டுமென்று சொல்வது நியாயமும், தர்மமும் ஆக மாட்டாது. இயல்பாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பகுதி மக்களை அந்த நெறியில் செல்ல விடாமல் தடுத்து அதன் மூலம் அவர்கள் வாழ்க்கையில்

ஒரு நிர்ப்பந்தத்தை அரசாங்கம் ஏற்படுத்துவதோடு அரசாங்கம் தன் பொறுப்பைத் தேவையில்லாத அளவிற்குப் பெருக்கிக் கொள்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கு மேலே அவர்களுடைய புனருத்தாரண வாழ்விற்காக அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று இல்லாத வழிகளை வகுக்கிறார்கள். அந்த நோக்கத்தை நான் குறை கூற இல்லை. அதை வரவேற்கிறேன். ஆனால் இருக்கிற வீட்டை இடித்துவிட்டு புது வீடு கட்டிக் கொடுக்க இப்போதுதான் மரம் வளர்க்கிறேன் என்று சொல்வது? இதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். ஆகவே அவர்களை அவர்கள் வழியில் செல்ல, அரசாங்கம் விட்டு விட வேண்டும். இந்த நிலையை நன்கு சிந்தித்து அவர்கள் எளிதாக, சுலபமாக வாழ்கிற வாழ்க்கையில் குறுக்கிடு இல்லாமல் செய்ய மாநில ஆட்சி மத்திய ஆட்சிக்கு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களது திறமையையும், தேசபக்தியையும், பணியையும் யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அதற்கு நன்றியும் பாராட்டுதலும் தெரிவிப்பதில் எவருக்கும் நான் பிற்பட்டவன் அல்ல. ஆனால் கவர்னர் உரையில் அது தேவையா என்பது சிந்திக்கப் படவேண்டிய தொன்று. என்னுடைய கருத்து இங்கு அது இடம் பெற்றிக்க வேண்டியதில்லை என்பதே. அதோடு நிறுத்திக் கொண்டு மேலே செல்கிறேன். அரிசி கொள்முதல் பற்றிக் கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 18 ரூபாய் அல்லது 18½ ரூபாய்க்குத்தான் ஒரு மூட்டை நெல் கொள்முதல் செய்யப்படும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளுக்கு உற்சாகத்தைக் குறைக்கிற ஒன்றாகும். விவசாயிகளைப் பார்த்து நீ விவசாயம் செய்யாதே என்று சொல்வது போலாகும். அல்லது உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டாம். மஞ்சளைப் போடு, அல்லது கரும்பைப் போடு அல்லது நஞ்சையாக இருந்தாலும் அதில் பருத்தியைப் போடு என்று விவசாயிகள் உணவு தான்ய உற்பத்தியை விட்டு வேறு வழிக்குச் செல்லும்படியாக தூண்டுகிற ஒரு முறையாகும். அதனால் நாட்டில் உணவுப் பண்டங்களில் பற்றாக்குறை நிச்சயம் ஏற்படும். இதை நிவர்த்திப்பதற்காக வேறு இடங்களிலிருந்து நெல்லை அல்லது அரிசியை அல்லது உணவு தான்யங்களைக் கொள்முதல் செய்கிறோம் என்று சொல்லி அதற்கான அதிகாரிகளையும் சிப்பந்திகளையும் நியமித்து இந்தமாதிரியான வீண், வேண்டாத, விரயச் செலவுகளும் நிர்பந்தங்களும், சிக்கல்களும் ஏற்படும். ஆகவே இப்போது விவசாய உற்பத்திக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கிற வகையில் விவசாயப் பொருள்களுக்கு, உணவுப் பொருள்களுக்கு நல்ல தரமான நிலையில்--அதற்காக தலை தூக்கிய நெறியின் அல்ல--தரமான நெறியில் அவர்களுக்கு உற்சாகம் கெட்டுப் போகாத நிலையில் விலையை நிர்ணயித்து கொள்முதல் செய்யவேண்டும். அதை விட இங்கு வேறு ஒரு அற்புதம் காணப்படுகிறது. "நஞ்சை ஜில்லாவில் 20 சத விகிதம் கொள்முதல் செய்யப் பெறும், பிற மாவட்டங்களில் எல்லாம் 15 சத விகிதம் கொள்முதல்

21st January 1964] [திரு. சா. கணேசன்]

செய்யப் பெறும்" என்று சொல்லப் பெற்றிருக்கிறது. இது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பது எவருக்கும் புரியாத புதிர் என்று நான் சொன்னுல் அதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். தஞ்சை ஜில்லாவில் 20 சத விகிதம் என்று சொல்வது ஏதோ ஒரு கணக்கை வைத்து போட்டிருக்கிறீர்கள். கொள்முதல் செய்யும்போது எப்படிக் கொள்முதல் செய்ய வேண்டும்? உத்தேச உற்பத்தி எவ்வளவு என்று பார்த்து கணக்கிடுவோம். அதற்குப் பிறகு அந்த மாவட்டத்திற்குத் தேவை எவ்வளவு என்று உத்தேசக் கணக்கு போட வேண்டும். உத்தேச விளைவு எவ்வளவு, உத்தேச தேவை எவ்வளவு என்று பார்த்து உத்தேச விளைவில் உத்தேசத் தேவையைக் கழித்து எஞ்சியதைக் கொண்டு இவ்வளவு சத விகிதம், என்று முடிவு கட்டி அரசாங்கம் கொள்முதல் செய்து எல்லா இடங்களுக்கும் விற்பது என்றுல் அது பொருத்தமானதாக இருக்கும். தஞ்சையைப் பொறுத்தவரை 20 சத விகிதம் என்பது சரி என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் பார்த்தால் மற்ற மாவட்டங்களில் 15 சத விகிதம் கொள்முதல் என்பது எந்த அடிப்படையில்? ராமநாதபுரம் ஜில்லாவில் 15 சத விகிதம் கொள்முதல் செய்வது என்றுல் ராமநாதபுரம் எற்கனவே ஒரு பற்றுக்குறைப் பிராந்தியமாகும். ப்ளாக் ப்ளாக்காக எடுத்துக் கொண்டாலும் அது தன்நிறைவு (அதாவது "செல்ப் சபிஷியன்ஸி ?" உள்ளதல்ல அந்தப் பகுதிகள். அப்படியிருக்க அங்கிருந்து 15 சத விகிதம் கொள்முதல் செய்தால், அங்குள்ள தேவைக்கு இங்கிருந்து கொண்டு போவது என்றுல் அது அநாவசியமான விரயத்தை உண்டாக்கும். இருக்கிற நெல்லை எடுத்து அதை லாரியில் அல்லது வண்டியில் போட்டு ஒரு இடத்தில் குவித்து விட்டு தேவை என்று பிறகு அதை மறுபடியும் இங்கு கொண்டு வருவது என்ற இரட்டிப்புச் செலவு எதற்கு? இதை நன்கு சிந்திக்க வேண்டும். ஆக இப்படி 15 சத விகிதம் என்று வரையறை செய்திருப்பது முறையும் அல்ல, சரியும் அல்ல, நன்மையும் அல்ல. ஆங்காங்கு எவ்வளவு தேவை என்று பார்க்க வேண்டும். எந்த ஜில்லாவில் உபரி இருக்குமோ அல்லது எந்த ப்ளாக்கில் உபரி இருக்குமோ அதை அங்கு கொள்முதல் செய்து முடிந்த வரை கொள்முதல் செய்யப்பட்ட அந்த ஜில்லாவிலேயே அந்த ஜில்லாவிற்குள்ளேயே, அதைச் செலவழிக்கும்படி செய்ய வேண்டும். அப்படி அங்கு உபரியாக இருந்தால் வெளி ஜில்லாவிற்குப் போகும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும். அதை விட்டு விட்டு மொத்தக் கணக்கில் வைத்துக் கொண்டு தஞ்சை ஜில்லாவில் 20 சத விகிதம், மற்ற ஜில்லாக்களில் 15 சத விகிதம் என்று கணக்குப் போடுவது கணக்களவில் கூட கணித்த முறையிலே முறையானதும் அல்ல, சரியானதும் அல்ல. அடுத்தபடியாக கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். கிட்டக் கமிஷன் தெளிவாகக் கூறுகிறது. எல்லா இடத்திற்கும் சமத்துவம் என்று சொல்வது பொருந்தாது. எங்கு குறைவாக இருக்கிறதோ முதலில் அதை நிறைவு செய்து விட்டு அது சமமான பிறகு எல்லாவற்றையும் சமத்துவமாகக்

[திரு. சா. கணேசன்] [21st January 1964

கணிப்பதுதான் தாமுள்ள நெறியாகும். ஜில்லா என்று பொதுப் படையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. மாநிலம் என்றும் பொதுப்படியாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒவ்வொரு ஜில்லா விலும் சில சில தாக்குகள் (ஆங்கிலத்தில் பாக்கட்ஸ் என்று சொல்வார்கள்) இருக்கின்றன. அவை பாக்வேர்ட் ஏரியாக்களாக கருதப்படுகின்றன. இராமநாதபுரத்தை எடுத்துக்கொண்டால் திருப்பத்தூர், திருவாடானே, முதுகுளத்தூர், ராமநாதபுரம் ஆகிய பகுதிகள் பின் தங்கிய தாக்குகள் ஆகும். தஞ்சை யை எடுத்துக் கொண்டால் அறந்தாங்கிப் பகுதி அதுமாதிரி யாகும். திருச்சியை எடுத்துக்கொண்டால் புதுக்கோட்டை பகுதி பின்தங்கிய பகுதியாகும். ஆலங்குடி, திருமய்யம், குளத்தூர் போன்றவை பின் தங்கிய பகுதிகள். இப்படி பல் வேறு பகுதிகள் இருக்கின்றன. சிறந்த ஜில்லா என்று சொல் வதற்கு நடுவில் ஆற்று வசதி இல்லாமல், தண்ணீர் வசதி இல்லா மல், ரயில் வசதி இல்லாமல், தொழில் வசதி இல்லாமல், விவசாய வசதி இல்லாமல் அநேக பாக்கட்ஸ் இருக்கின்றன. அவற்றைத் தேர்ந்தெடுத்து அந்தந்த பாக்கட்களுக்கு மட்டும் தனியாக, சிறப் பாக விவசாயத்திற்கு ஆக்கம் கொடுக்க, தொழில் துறையில் வாய்ப்புக்களை வசதிகளைப் பெருக்க, எல்லாம் செய்யவேண்டும். இவற்றை எல்லாம் பார்க்கிறபோது ஜில்லாவிற்கு ஜில்லா என்று கணக்கு வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாவிற்கும் மொத்தத் தில் இவ்வளவு என்று நிர்ணயிப்பது பொருத்தமாகாது, நியாய மாகாது, நலமாகாது, பலனும் தராது. இதை மனதில் கொண்டு காரியங்களை செய்யவேண்டும். விவசாயத்துறையை எடுத்துக் கொள்கிறபோது இம்மாதிரி சில பாக்கட்டில் தண்ணீர் பூமிக்குள் இருக்கிறது. பலமுறை இதுபற்றி இந்த மன்றத்தில் கூறியிருக் கிறேன். அங்கெல்லாம் பாசன வசதி கிடையாது, ஆறுகள் கிடையாது, ஏரிகள் இருக்கின்றன, ஆனால் தண்ணீர் கிடையாது. அந்த இடங்களில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதில் சலுகை அளிக்க வேண்டும். நான் குறிப்பிட்ட அந்தந்தந்த தாலுகாக்களுக்கு எல்லாம் அந்தமாதிரி அளிக்க வேண்டும். அங்கு பூமிக்கு அடியில் தண்ணீர் நிரம்ப இருக்கிறது. அந்நீரை மேலே கொணர்ந்து அதைப் பாசனமாக்கி அதன் மூலம் விளை வைப் பெருக்க வேண்டும். ஆற்று வளம் இல்லாத இடங்களில் ஊற்றுவளம் இருக்கிறது. அதைப் பயன்படுத்த அப்பகுதிக்கு மின்சாரத்தைத் தாராளமாகவும், எளிதாகவும் கொடுத்தால் முறை யாகும். இதை மனத்திலே நன்றாக கொள்ளவேண்டும். விவ சாயத்திற்கு பயன்படுகின்ற இடங்களை எல்லாம் கைத்தொழில் பகுதியாக மாற்றுவது கொஞ்சமும் சரியல்ல. உதாரணமாக தஞ்சை போன்ற இடங்களில் விவசாயப் பகுதிகளை எல்லாம் கைத்தொழில் பகுதியாக மாற்றுவதன் மூலமாக நிச்சயமாக விவசாயம் பாழடையும். விவசாய உணர்வு குறையும். விவசாயத் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைப்பது, விவசாயத் தொழிலாளர்கள், கைத்தொழில் தொழிலாளர்கள் இவர் களுக்குள் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள் விவசாயத்தைப் பாதிக் கும், அதனால் விவசாயம் வளராது. ஆகவே விவசாயத்திற்கு

21st January 1964] [திரு. சா. கணேசன்]

தகுதியான இடங்களில் விவசாயத்திற்கே பிரதானியம் கொடுக்க வேண்டும். விவசாயத்திற்குத் தகுதியற்ற கட்டாந்தரையான இடங்களில் தொழிற் துறைக்கு பிரதான்யம் கொடுக்கவேண்டும். அப்படி செய்தால் தான் விவசாயமும், கைத்தொழிலும் செம்மை யாக இருக்க முடியும். எந்தெந்த இடங்களில் எவை எவை பொருத்தமோ அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அப்படியல்லாமல் காரைக்குடியில் உருளைக்கிழங்கையும், ஊட்டி யிலே புளிய மரத்தையும் பயிர் செய்யவேண்டும் என்ருல் எப்படி பொருத்தமாகும்? எல்லோரும் எந்த இடத்திலும் எல்லாவற்றை யும் சாகுபடி செய்யலாம் என்ருல் கடைசியில் எல்லாமே பாழாகி விடும் என்பதை நாம் மனத்திலே ஏற்று செயல் படுத்தவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக இந்த நாட்டில் எண்ணிக் கையில் அதிகபடியாக இருக்கின்றவர்கள் கைத்தறியாளர்கள். உணவுக்கு அடுத்தபடியாக நமக்கு இன்றியமையாததாகக் கருதப் படுவது உடை. இவ்விதம் விவசாயிகளுக்கு அடுத்தபடியாக எண்ணிக்கையிலும், தேவை அடிப்படையிலும் அதிகப்படியாக இருக்கின்ற கைத்தறியாளர்களுக்கு, அவர்களுடைய க்ஷேம நலனுக் காக என்ன செய்திருக்கிருேம் என்று பார்த்தால், ஏதோ கவனிக் கிருேம் என்ற அளவில் சில பல சலுகைகளைச் செய்து கொடுத் திருக்கிருேமே தவிர, பூரணமாக அவர்களுடைய குறைகளை நாம் தீர்க்கவில்லை. இதை யாரும் மறுக்க முடியாது. புள்ளிவிவரங்கள் நான் சொல்லுகிறதையே உறுதி செய்கின்றது. அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகின்ற முறையில் அவர்களுக்கு ஆட்சியாளர்கள் சில பாதுகாப்புகளையும், சில சலுகைகளையும் கொடுக்கவேண்டியது தலையாய கடமை என்பதைச் சிறிது அழுத்தமாக ஆட்சியாளர்களிடம் விண்ணப்பித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்த பட்சம், இவர்களுக்குச் சலுகை அளிக்கின்ற முறையில், பல ஆண்டுகளாக சொல்லப்பட்டு வரு கின்றபடி, குறிப்பிட்ட வேட்டிகளையும், சேலைகளையும் கைத்தறி யாளர்களுக்கு என்றே ஒதுக்கி விட்டுக்கொடுத்து, மில்காரர்கள் இவற்றை தயாரிக்கக்கூடாது என்ற தடையைக் கொண்டு வர வேண்டும். இதைக் கொண்டுவந்தால், இப்போது இருந்து வரு கின்ற குழப்பம், தவறுகள், பித்தலாட்டங்கள், ஊழல்கள் இவை கள் எல்லாம் மறையும். ஏதோ கைத்தறிக்காக ரிபேட் என்ற பெயரில் சில சலுகைகளைக் கொடுக்கிருேம் என்று சொன்னுலும் கூட, அவைகள் எல்லாம் நேரடியாகக் கைத்தறி தொழிலாளர் களுக்குச் சென்று சேருகிறதா என்ருல் இல்லை என்பதை அவர் களோடு சேர்ந்து பழகுகின்ற பலர் அறிவார்கள். உண்மையில் இவர்களுக்காக கொடுக்கப்படுகின்ற ரிபேட் போன்றவைகள் அவர் களுக்கு மேல் இருக்கின்ற கண்காணி, அல்லது தலைவர்கள் போன்றவர்களின் கைகளுக்குததான் போய்ச் சேருகிறதே தவிர, கைத்தறிக்காரன் என்றும் போல் வெறும் கந்தையாண்டியாகத் தான், கிட்டத்தட்ட கூரைக் குடிசையுடன், அரைப் பட்டினியாய் ஆழ்ந்த தரித்திர நிலையில்தான் காட்சியளிப்பதை நாம் அனைவரும்

[திரு. சா. கணேசன்] [21st January 1964

பார்க்கின்றோம். இந்த நிலையைப் போக்கவேண்டும். அதற்கு ஆட்சியாளர்கள் சற்று தீவிரமாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இங்கு போலீஸ் பற்றிச் சொல்லப்பட்டது. நமக்கு போலீஸின் மீது எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் தீமையும் இருக்கும், நன்மையும் இருக்கும். அவ்வளவும் தீமை என்றோ அல்லது நன்மை என்றோ நாம் ஒதுக்கிவிட முடியாது. தீமைகள் இருந்தால்—(எவ்வளவு தான் பாடுபட்டாலும் அறவே தீமைகளை போக்கிவிட முடியாது)—முடிந்த அளவுக்கு மாற்றுவதற்கு முயற்சிக்கவேண்டும். அதற்கு வேண்டிய அக்கறையையும் ஆர்வத்தையும் ஏற்று ஆட்சியாளர்கள் பணிபுரிய வேண்டும். போலீஸினுடைய நிலையைப் பார்க்கும்போது இன்றையதினம் ஒரு வாரத்தில் "மரியாதை வாரம்" என்று கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விதம் ஒரு வாரம் கொண்டாடப்படுவதால், மற்ற வாரங்களில் மரியாதையாக இருக்க வேண்டாம் என்று சொல்வதுபோல் இருக்கிறது. மரியாதையாக நடந்து கொள்ளவேண்டிய முறைகளை அந்த வாரத்தில் முக்கியமாக சுட்டிக் காட்டப்படுகிறது. முக்கியமாக நம்முடைய சபை உறுப்பினர் திரு. சங்கரன் போன்றவர்கள் போலீஸ்காரர்களினால் பலாத்காரமாக அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவமரியாதைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்ற நிலை ஏற்படுமானால் நிச்சயமாக இதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க ஆட்சியாளர்கள் துணியவேண்டும், முயல வேண்டும், முன்வரவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைய தினம் நமது இரு சபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது தவறா அல்லவா என்பதைப் பற்றி நான் சொல்ல முன் வரவில்லை. ஆனால் கைது செய்யப்பட்டிருக்கின்ற விவரம் பல மணி நேரங்களுக்குப் பின்னால் செய்தி கிடைத்திருக்கிறது. இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் இப்படியாக தாமதமாக அனுப்பியிருக்கிறார்கள். அதில் எந்த விதமான தவறும் இல்லை என்று மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நீங்களே குறிப்பிட்டீர்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை, அதை மரியாதையோடு ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இதைப் பத்து நிமிட நேரத்தில் தெரிவிக்க முடியாதா என்பதைத் தான் . . .

MR. SPEAKER: Again the hon. Member is questioning my ruling.

SRI SAW. GANESAN: No. . . .

MR. SPEAKER: Certainly I have held as **reasonable.**

திரு. சா. கணேசன்: நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இதைவிடச் சீக்கிரமாக தெரிவிக்க முடியாதா என்று தான் சொன்னேன்.

21st January 1964]

MR. SPEAKER : Then the hon. Member is arguing against it.

SRI SAW. GANESAN : No, Sir.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சீக்கிரமாகத் தெரிவிக்க வேண்டும் என்றால் டெலிபோனில் தெரிவித்தால் போதும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்களா? . . .

திரு. சா. கணேசன்: நான் டெலிபோனில் சொல்லவேண்டும் என்று சொல்லவில்லை.

MR. SPEAKER : If a person is arrested, certain formalities have to be gone through. Afterwards, they will have to type the report. After all, can we take the time in between 1-45 p.m. and 3-40 p.m. as long delay? That is what I stated in my ruling. Any way, I have given my ruling and it cannot be said that it is unreasonable. Therefore, the hon. Member cannot ask, whether it could not be done in ten minutes, as that would directly amount to saying that the ruling of the Chair is not reasonable.

I think the hon. Member can now proceed further.

திரு. சா. கணேசன்: ஆகவே இப்படிப்பட்ட காரியங்களில் இன்னும் செம்மையாகவும், திறமையாகவும், துரிதமாகவும் நடந்து கொள்வதற்கு ஆட்சியாளர்கள் போலீசாருக்கு ஆக்ஞையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் பென்ஷன் விஷயமாகப் பல உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஏராளமான மனுக்கள் வருகின்றன. எல்லோருக்கும் கிடைக்கவில்லை என்ற புகார் இருந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) தகுதியுள்ளவர்கள் என்று நிரூபிக்கக்கூடியவர்களுக்குக்கூட கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றிச் சற்று கவனமாக கணித்துப் பார்த்து, குறித்த காலத்தில் விரைவாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும். அதோடு அரசாங்க உத்தியோகத்தில் வேலை பார்த்தவர்கள், தாங்கள் சேவை செய்துவிட்டு இப்போது ஓய்வு பெற்று, பென்ஷனை ஏழு அல்லது எட்டு ரூபாய் பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களையும் சாதாரண பிரஜைகள் என்ற முறையில் இவர்களுக்கு முதியோர்களுக்குக் கொடுக்கப்படுகிற அளவில் சலுகையை கொடுக்கவேண்டும். அதில் எந்தவிதமான தவறும் இராது என நம்புகிறேன். இந்த எண்ணம் ஆட்சியாளர்களுக்கும் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆனால் செயலில்தான் வரவில்லை. பொதுவாக சர்க்கார் சிப்பந்திகளில், ஓய்வு பெற்றவர்கள் ஏழெட்டு ரூபாய் பென்ஷனை வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு, நாம் முதியோர்களுக்கு கொடுக்கின்ற 20 ரூபாயை அடிப்படையாக வைத்து பென்ஷன் வாங்குபவர்களுக்கும் இதே அளவு தொகை அளிக்கவேண்டும், அதற்கு வேண்டிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சா. கணேசன்] [21st January 1964

அடுத்து, தற்போதைய நிலையில் புதிய கட்டிடங்களை எல்லாம் கட்டுவதற்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கட்டிடங்களுக்கு வேண்டிய பொருட்கள் கிடைக்காத காரணத்தினால் அவதிப்படுகிறோம். சிமிண்ட் முதலியன கிடையாது என்ற நிலை ஒரு பக்கம் இருந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம், ஏராளமான சிறந்த பலமுள்ள வீடுகள், வறுமையின் காரணமாக, இடிக்கப்பட்டு, பாழாக்கப்படுகின்றன. காரணம், வறுமையின் காரணமாக, வீட்டை இடித்து அதிலுள்ள இரும்பு சாமான்களையும் மரச் சாமான்களையும் விற்றுவருகிறார்கள். உதாரணமாக செட்டி நாட்டில் எத்தனையோ வீடிடுப்புகள் நடக்கின்றன. பெரிய பலமுள்ள வீட்டை வறுமையின் காரணமாக இடித்து, அதிலுள்ள நிலை, கதவு, தூண், கைகள், விட்டங்கள் இவைகளை எல்லாம் எடுத்து மர விலைக்கு விற்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது, இம்மாதிரிப்பட்ட கட்டிடங்களை அரசாங்கமே வாங்கலாம் என்பதுதான். இவற்றை அரசாங்கமே விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். அவைகளை விலைக்கு வாங்கி அந்தந்தக் கட்டடங்களுக்குத் தகுந்த மாதிரி ஏதாவது செய்யலாம். அல்லது அரசாங்க ரெக்கார்டு ஆபீஸ்களை அங்கு வைக்க அவைகள் எல்லாம் அற்புதமான கட்டடங்கள். 'ஸேஃப் வால்ட்' மாதிரி உள்ள கட்டடங்கள் பல. இவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்த சந்தர்ப்பத்திலே கொண்டு வர நான் விரும்புகிறேன்.

இனி, கெஜெட்டெட் ஆபீஸர்ஸ் லிஸ்டெல்லாம் இப்போது வருவதே இல்லை. அப்படி வருவதும், 1961-ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 31-ம் தேதியுள்ள லிஸ்ட் இருக்கிறதே நமது சட்ட சபைக்கு அது 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் வந்திருக்கிறது. அது கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்தால் என்ன ஆகிறது? இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் ரிட்டயர் ஆனவர் எங்கோ இருப்பதாக இருக்கிறது. அப்படிக்கில்லாமல் அவைகள் துரிதமாக வந்தால் பலன் அளிப்பதாக இருக்கும், பயனுள்ளதாக இருக்கும். அவசர காலம் என்று க்வார்ட்டர்லி லிஸ்டையெல்லாம் நிறுத்திவிட்டார்கள். இப்போது அப்படி ஒன்றும் பயங்கரமான நிலைமை இல்லை. ஆகையால் அவைகளையும் இனி புதுப்பிக்க வேண்டும். நம்மைப் போன்றவர்கள், சட்ட சபையில் இருக்கிறவர்கள், எந்த ஜில்லாவில் யார் இருக்கிறார்கள், எந்தப் பதவியில் இருக்கிறார்கள் என்று பார்த்துப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, இதற்கு வேண்டிய வாய்ப்புகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இனி, பயிற்சிப் பள்ளிகளைப் பற்றி கேள்விகளெல்லாம் கேட்கப்பட்டன. பயிற்சிப் பள்ளிகள், தொழில் கல்லூரிகள் இவைகளில் சேருவதில் இங்கெல்லாம் ஊழல்கள். விளக்கங்கள் வந்தபோது எங்கள் பெயர்களெல்லாம் வந்தன. நான் அதைப் பற்றி இப்போது பேச முன்வரவில்லை. இவைகளில் லஞ்சம் இல்லாமல் சேர முடியவில்லை என்பது எங்கும் எல்லோரும் தெரிந்து

21st January 1964] [திரு. சா. கணேசன்]

கொண்ட உண்மையாக இருக்கிறது. இவற்றையெல்லாம் போக்க வேண்டும். அதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள வேண்டியது என்னுடைய கடமையாக ஆகிறது.

புதிதாக லஞ்ச ஊழலை ஒழிக்க இன்று மத்திய சர்க்கார் மிகத் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, அதைப் பின்பற்றி, மாநில சர்க்காரும் உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். லஞ்சக் குற்றங்களுக்காக பிடிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும். தண்டனை கொடுப்பது எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவுதான் இந்தக் குற்றமும் குறையும் என்பதை மனத்திலே கொள்ள வேண்டும். லஞ்சக் குற்றத்திற்காக ஒருவரைப் பிடித்தால், இது முதல் குற்றம், மன்னித்து விடுவோம் என்றோ, 5,000 ரூபாய் லஞ்சம் வாங்கியவருக்கு 5 ரூபாய் அபராதம் என்றோ விதித்தால், இருக்கவே இருக்கிறது லஞ்சம் வாங்கிய ரூபாய் என்று அதிலிருந்து கட்டிவிட்டு மேலும் மேலும் லஞ்சம் வாங்கி சேர்த்துக் கொள்ளக்கூடிய நிலைமைதான் ஏற்படும். லஞ்சக் குற்றங்களுக்கு கடுமையான தண்டனை, சிறைத் தண்டனை கொடுக்கும் நிலைமை இருக்கவேண்டும். லஞ்சத்திற்காக, பத்திரிகையில் பார்க்கும்போது தெரிகிறது, கொடுத்தவர், வாங்கியவர் ஆகிய இருவர் மீதும் குற்றம் சுமத்தப்படும், தண்டனை கொடுக்கப்படும் என்று. தீமை என்பது ஒரு பக்கத்திலிருந்து மாத்திரம் வருவதில்லை. இரு சார்பிலிருந்தும் வரும்போதுதான் தீமை உருவெடுக்கிறது. ஒரு சார்பிலிருந்து தீமை உருவாவதில்லை. கொடுப்பவன், வாங்கியவன் ஆகிய இருவருக்கும் கடுமையான தண்டனை என்ற நிலைமையை ஏற்படுத்தி அதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டும்.

பருவ மழை தவறிய காரணத்தினால் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களில்--இவைகள் எனக்கு நேராகத் தெரிந்தவை—விளைவு பாதிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி பல்வேறு அலுவலகங்களிலிருந்து ஆட்சியாளருக்கு குறிப்புகள் வந்திருக்கும். இது சம்பந்தமாக அங்கெல்லாம் பல்வேறு கூட்டங்கள், மகாநாடுகள் எல்லாம் கூட்டி, கட்சி பேதம் எதுவும் இல்லாமல், அதைப் பற்றி தீர்மானங்களைப் போட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மனத்திலே கொண்டு, பருவ மழை தவறியதால் ஏற்பட்ட விளைவின்மைக்கு மேலும் தண்டனையாக இருக்கக்கூடிய முறையில் வரிகள் விதிக்காமல், வரி வஜா செய்யும் முறைகளை மேற்கொள்ளவேண்டும். அதோடு இது மாதிரி அவந்திர நிலை ஏற்படாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் முறையில் விவசாய இன்ஷ்யூரன்ஸ் முறையை விரைவிலே அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று நான் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்று—அடிக்கடி நான் சொல்லி வருவதுதான்—கவர்ன்மெண்ட் ப்ரேஸ் ப்ரிண்டிங். கவர்னர் பெருமான் உரை நன்றாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அது தெளிவாக இருக்கிறது, சுத்தமாக

[திரு. சா. கணேசன்] [21st January 1964

இருக்கிறது. நன்ருக கவனித்து ஸ்பேஸ் அவுட் பண்ணப்பட்டிருக்கிறது, லெட் அவுட் பண்ணப்பட்டிருக்கிறது. அதற்காக நான் திருப்தி தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்ன இருந்தாலும் இது முக்கியமானது—முக்கியத்துவத்தைக் குறைக்கவில்லை. ஆனல் இது அடிக்கடி கையாண்டுகொண்டே புரட்டிப் புரட்டி ரெஃபர் பண்ணும் உரை அல்ல. அதே நேரத்தில் இங்கே கொடுக்கப்படும் மசோதாக்கள், விதிகள் இதெல்லாம் அச்சிட்டிருப்பதைப் பார்த்தால் பழைய காலத்தில் அச்சிட்ட நியூஸ்பேப்பர் மாதிரி மையெல்லாம் கலேந்து, தவறுகளெல்லாம் நிறைந்திருக்கின்றன. இவற்றை செம்மையாக்கவேண்டும். சமீபத்திலே முனிஸிபல் எலெக்ஷன் நாமினேஷன் ஃபார்ம் வந்தது—கவர்ண்மெண்ட் ப்ரெஸ்ஸில் அச்சடித்தது. முதல் பக்கத்தில் விண்ணப்பதார் எழுத வேண்டியதெல்லாம் இருக்கிறது. மறு பக்கத்தில் ஃபுட் நோட்டுக்கு அடியில் ரெஸீட் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் இன்னர் கொடுத்த இந்தத் தாளை பெற்றுக்கொண்டேன் என்று அதிலே எழுதி நாமினேஷன் கொடுத்தவரிடம் அதை கிழித்துக் கொடுக்க வேண்டும். அந்த முறையில் அதைக் கிழித்தால் முன் பக்கத்தில் உள்ள ஃபாரமே போகிறது. கொஞ்சம் விட்டுக் கீழே அச்சிட்டிருக்க வேண்டும். முன் பக்கத்தில் உள்ளது வாங்கிக் கொள்ளுகிறவர் கைக்குப் போகிறது. ரெஸீட் மட்டும் இவருக்குச் சேரவேண்டும். கொஞ்சம் கீழே அச்சிட்டிருக்க வேண்டும் —அவ்வளவு தான். எந்தத் துறைக்கு உத்தியோகஸ்தரை நியமித்தாலும், அந்தத் துறையில் அனுபவம் இருக்கிறதா என்று பார்த்து நியமிக்க வேண்டும். அச்சுத் துறைக்கு ஒருவரை நியமித்தால் அச்சுக் கலேயில் அவருக்கு நிபுணத்துவம் இருக்கிறதா என்று பார்த்து நியமிக்க வேண்டும். நியமிக்கப்படுபவர் சிறந்த நிர்வாகியாக இருக்கலாம். அவர் நிறைந்த அறிவோடு இருக்கலாம். உயர்ந்த ஒழுக்கம் உடையவராக இருக்கலாம். அது போதாது. அதுவும் வேண்டும். அதைத் தவிர தொழில் துறை அனுபவமும் இருக்க வேண்டும். அது இல்லாததால்தான் இப்படிப் பட்ட கஷ்டங்கள் வருகின்றன என்று மீண்டும் ஆட்சியாளர்கள் கவனத்திற்கு கனம் சபாநாயகர் மூலமாகக் கொண்டுவர விரும்புகிறேன்.

மது விலக்கு பர்மிட் பற்றியெல்லாம் காலேயிலே வினக்கள் விடைகள் வந்தன. இதிலே ஒரு முறையைக் கையாளலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. சுதேசி ஆசாமிகளுக்குப் பர்மிட் கொடுக்கும்போது சுதேசிச் சரக்குகளுக்கு பர்மிட்டும், பரதேசி ஆட்களுக்கு பர்மிட் கொடுக்கும்போது பரதேசிச் சரக்குகளுக்கு —அதாவது விஸ்கி, பிராண்டி போன்றவைகளுக்கு—பர்மிட்டும் கொடுத்தால், அப்படி நாம் சட்டம் போட்டுவிட்டால், சுதேசிகளுக்கு சுதேசிச் சரக்கு என்றே டாக்டர் சர்ட்டிஃபிகேட் கொடுக்க முடியும், பரதேசிகளுக்கு பரதேசிச் சரக்கு என்றே சர்டிபிகேட் கொடுக்க முடியும். இப்படிச் செய்வதால் இரண்டு மூன்று வகைகளில் லாபம் ஏற்படும். வெளி நாட்டு சரக்குகளுக்காக வெளி நாடுகளுக்குப் போகும் பணம் மிச்சம். நம் நாட்டில் தயாரிக்கப்படும் சரக்கும் உபயோகிக்கப்படும். அந்த மாதிரி செய்வது சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

21st January 1964] [திரு. சா. கணேசன்]

அடுத்து, சித்த, ஆயுர்வேத வைத்திய முறை பற்றி நாம் இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லை. நாம் நடத்திய சித்த வைத்தியக் கல்லூரியைப் பார்த்து காப்பி அடித்து புனா முதலிய பிராந்தியங்களில் நடத்துகிறார்கள், செம்மையாக நடத்துகிறார்கள் என்று பிற நாட்டு, பிற துறை வைத்திய நிபுணர்களெல்லாம் அதைப் பார்த்து பாராட்டுகிறபோது, அவைகளுக்கு மூலமாக இருந்த நாம் நடத்த முடியவில்லையென்றால் எனக்கே மிகவும் சங்கடமாக இருக்கிறது. நான் மிகவும் வருத்தமடைகிறேன். அருமையான வைத்திய முறை. இங்கே ஏன் செம்மையாக இல்லை யென்றால், நான் முதலிலே சொன்ன அதேதான் காரணம். யாருக்கு அதிலே நம்பிக்கை இல்லையோ அவரை கண்காணிக்க நியமித்தால், அவரை கண்காணித்துக்கொண்டிரு என்று சொன்னால், ஆட்டுக் கிடைக்குப் புலியைக் காவல் போட்ட மாதிரித் தான் ஆகும். அந்தமாதிரி நடக்கிற காரணத்தினால்தான் இப்படிப் போகிறது. பனகல் காலத்தில் ஏற்படுத்திய முறை அருமையான முறை. ஸின்தெடிக் முறை—அதாவது கலவை முறை அது. அருமையான கலவை. மேலை நாட்டு உடற்கூறு முறைகளை கணித்து ஆராய்ந்து, மாணவர்களுக்கு அதை போதித்து, மேலை நாட்டு முறைகளில் உள்ள வளங்களையும் வசதிகளையும் பயன்படுத்திக்கொண்டு, மருந்து முறைக்கு மூலிகைகளைக் கொண்டு தயார் செய்த மருந்துகளை உபயோகப்படுத்தி, இரண்டையும் இணைத்து, அதனால் பெறுகிற பயன், இதனால் பெறுகிற பயன் இரண்டையும் சேர்த்து, சிக்கனத்தை உண்டாக்கி, அந்த நாட்டு மண்ணிலே பிறந்த மக்களுக்கு அந்த நாட்டு மண்ணிலே பிறந்த மூலிகைதான் பயன்படுகிறது என்று சொல்லப்படுகிற விஞ்ஞான முறையில் செய்யப்பட்டு வந்தது. இதையெல்லாம் உதாசீனம் பண்ணுவது—அரசாங்கம் பண்ணுகிறது என்று நான் சொல்லவில்லை—அப்படி பண்ணும்படி விட்டு விடுவது நியாயம் அல்ல, என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு, உடற்கூறு முறையில் மேலை நாட்டு முறையை கையாண்டு, நம் மருத்துவ முறையையும் கையாண்டு வந்தால் நல்ல பலன் ஏற்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். சில நோய்களுக்கு சித்த, ஆயுர்வேத வைத்தியம் தான் இருக்கிறது, அலோபதியில் அவைகளுக்கு மருந்தே இல்லை என்று பச்சையாகச் சொல்லுகிறார்கள். உதாரணமாக, நல்ல நிபுணத்துவம் அடைந்தவர்கள் "பாய்ஸனெஸ் பைட்" என்ற சொல்லே மேலை நாட்டு மருத்துவ முறையில் கிடையாது என்று சொல்லுகிறார்கள். அதற்காக காரைக்குடி வந்து விஷ வைத்திய முறைகளைத் தெரிந்து கொள்ளுவதற்கு ரொம்பவும் கஷ்டப்பட்டதெல்லாம் சொல்ல வேண்டுமென்றால், பெரிய அளவில் நீண்ட நேரம் சொல்ல வேண்டும். இதை மனத்தில் வைத்துத்தான் நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். சித்த, ஆயர்வேத முறையை இங்கே செம்மையாக செயல்படுத்தத் தொடங்கினால், சுகாதாரத் திற்காக செலவழிக்கிற பணம் பயன் உள்ளதாகவும், குறைவானதாகவும் ஆகும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி, உரையை முடித்துக்கொள் 1-00 m.p.
கிறேன். திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பிராந்தி

[திரு. சா. கணேசன்] [21st January 1964

யங்கள் நம்மோடு சில 'பாக்கெட்டுகள்' சேர்ந்திருக்கின்றன. அவற்றிலிருந்து வந்த சிப்பந்திகள், அரசாங்க சிப்பந்திகளாக இருந்தாலும் சரி, ஆசிரியர்மார்களாக இருந்தாலும் சரி, இங்கே உள்ள சலுகைகளும், வசதிகளும், வாய்ப்புகளும், உத்தியோக உயர்வுக்கான நிலைகளும் இன்னும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற ஆவலாதி பரவலாகச் சொல்லப்படுகிறது. அதைக் கவனித்துப் பார்த்து அவர்களுக்கும் நம்முடைய சிப்பந்திகளுக்குள்ள தகுதியும், திறமையும் இருக்குமானால்,—அதற்காக வேறு ஏதோ தகுதியுடையவர்களை நியமித்திருந்தால் அவர்களுக்கும் அப்படியே செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை—அந்தத் தகுதிக்கு உட்பட்டு, அந்தத் தகுதிக்குக் குறைவானதாக இல்லை என்று காணப்பட்டால், அவர்களுக்கெல்லாம் பிரமோஷன் கிடைக்கவும், ஊதியம் கிடைக்கவும், பிற வாய்ப்புகள் கிடைக்கவும் வழி வகைகளை உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் பிற மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு வந்து சேர்ந்த மக்களுக்கும், அந்த மக்களுக்குப் பணி செய்கின்ற சிப்பந்திகளுக்கும் திருப்தி ஏற்படும். அதன் பயனாக நம்முடைய மாநிலத்திற்கு பெருமையும், புகழும் கிடைக்கும் என்பதையும் சொல்லி, நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்** : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் இந்த மன்றத்தினருக்கு ஆற்றிய உரையின்மீது ஆளும் கட்சியினரைச் சேர்ந்த உறுப்பினர் நன்றி அறிவிப்பு தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார். அவ்வாறு கொண்டுவரப்பட்ட நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்கு திருத்தப் பிரேரபணைகளை எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அந்தத் திருத்தப் பிரேரபணைகளை ஒட்டி, சில கருத்துக்களை வழங்க நான் முற்படு கிறேன். மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் அந்த மன்றத்தில் ஆற்றியிருக்கிற உரையானது இன்றைய அரசினரால் தயாரிக்கப் பட்டு கவர்னர் அவர்கள் மூலம் இந்த மன்றத்திற்கு அறிவிக்கின்ற வகையிலேயே இந்த உரை அமைந்திருக்கிறது என்பதை கனம்

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

சபாநாயகர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். கவர்னர் ஆற்றிய உரையில் வருகிற கருத்துக்களை ஒட்டி, அதிலே இருக்கிற குற்றங்கள், குறைபாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டி அவைகளை நீக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அதிலே இருக்கிற நிறை பாடுகளையெல்லாம் மேலும் வளர்ப்பதற்கான வழிவகைகள் காண வேண்டும் என்று வற்புறுத்தும் வகையில் எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் அமைச்சர் அவையை நடத்திச் செல்லுகிறவர்களுக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் கவர்னர் அவர்களுடைய உரையிலிருக்கிற அத்தனைக் கருத்துக்களை யும் அப்படியே மறுக்கிறோம், வெறுக்கிறோம் என்று கூறவில்லை. நாங்கள் அதிலே இருக்கிற குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற முறையிலும், அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கான நடவடிக்

21st January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கைகளை அரசினர் மேற்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தும் வகையிலும், நிறைபாடுகளை மேற்கொண்டு வெகுவாக நிறைவேற்றித்தரவேண்டும் என்று எடுத்துக் கூறுகிற வகையிலும் கருத்துக்களை எடுத்து வைக்கிறோம். எதிர்க்கட்சியினரைப் பொறுத்தவரையிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களைப் பொறுத்தவரையிலும், கூடுமானவரையில் கொள்கைக்கும், நிலைமைக்கும் ஏற்றபடி எந்தெந்த வகையிலே ஆளும் கட்சியினரோடும் அரசினரோடும் ஒத்துழைக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒத்துழைக்கிற முறையிலும், அவசியப்படுகின்ற அளவிலே, எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றபொழுது குறைபாடுகளையும், குற்றங்களையும் சுட்டிக்காட்டவேண்டிய அவசியம் ஏற்படுகின்ற பொழுது அதை எதிர்க்கின்ற தன்மையிலும் எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் கருத்துக்களை வழங்குகிறோம். ஆங்கிலத்தில் சொல்லுவது போல co-operation if possible, opposition if necessary என்று ஜனநாயகத்தில் புலப்படுகிற இலக்கணத்தின் அடிப்படையை வைத்துத்தான் எதிர்க்கட்சியினர் கருத்துக்களை வழங்குகிறார்கள். கவர்னர் உரையிலே பொதுப்படையாக எடுத்து வைக்கிற கருத்துக்களைத் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வரவேற்றிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக இறுதியாக கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிற

" இக்கால அளவில் இம்மாநிலம் எல்லாத் துறைகளிலும் எய்தியுள்ள அபிவிருத்தியை மதிப்பிடுகையில், இவ்வபிவிருத்திக்கெல்லாம் காரணம் இம்மாநில மக்களும், அதன் பல அரசியல் கட்சித் தலைவர்களும், நெருக்கடி காலங்களிலும் தங்கள் பொது வாழ்வில் அடக்கத்தையும் கண்ணியத்தையும் காட்டி வந்திருக்கின்றனர், மாநிலத்திற்குப் பொதுவாக நன்மை பயக்கும் பணிகளில் அவர்கள் எங்கும் கண்டிரா ஒற்றுமையுணர்ச்சியையும் உறுதியையும் காட்டி வந்துள்ளனர் என்கிற எனது மகிழ்ச்சிக்குரிய கருத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்."

என்ற கருத்தினை எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் வரவேற்கிறார்கள். இந்த உரையிலே கூறப்பட்டிருக்கிற கருத்துக்களை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அத்தனைப் பேர்களும் முழுக்க முழுக்க வரவேற்றிருக்கிறார்கள் என்றும் சொல்வதற்கில்லை. அவர்களில் பலரும் குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டி, நடவடிக்கைகளை அரசினர் மேற்கொள்ளவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த மன்றத்தில் நடந்த விவாதத்தில் எடுத்துவைக்கப்பட்ட கருத்துக்களில் ஒன்று முன்னாள் முதல் அமைச்சராக இருந்து, இப்பொழுது பதவியிலிருந்து விலகி, இந்த மன்றத்தினுடைய உறுப்பினராக இருக்கிற மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. காமராஜ் அவர்களது பதவியிலிருந்து விலகியது பற்றியதாகும். காமராஜ் அவர்களுடைய விலகலைப்பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டிய ஒரு கட்டத்திற்கு வந்ததே தேவையற்ற ஒன்று என்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st January 1964

பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் முதல் அமைச்சர் ஆற்றிய பணிகளையும், அவர்களுடைய பண்புகளையும் முழுக்க முழுக்க வெறுக்கின்ற நிலைமையிலே எதிர்க்கட்சியினர் இல்லை. பாராட்ட வேண்டிய பண்புகளை பாராட்டவேண்டிய இடங்களில், பாராட்ட வேண்டிய நேரத்தில் எதிர்க்கட்சியினர் பாராட்டித்தான் வந்திருக்கிறார்கள் என்பதற்கு, இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மதிப்பிற்குரிய கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சென்ற மன்றத்தில் இருந்து பணியாற்றிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டிய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருப்பதே சிறந்ததொரு சான்றாக அமையக்கூடும். காமராஜ் அவர்கள் விலகல் அரசியல் நன்மைக்காக ஏற்பட்டிருக்கிறதா? அல்லது கட்சியின் நன்மையைக் கருதி விலகல் ஏற்பட்டிருக்கிறதா? என்பது விவாதத்திற்குரிய பிரச்னையாக ஆகியிருக்கிற காரணத்தினால், இங்கே அதைப் பற்றிய கருத்துக்களை ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் தெரிவிக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறார்கள். பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்களைப் பாராட்டுகிற நிகழ்ச்சியும், பதவியிலிருந்து விலகுபவர்களைப் பாராட்டி வழியனுப்புகிற நிகழ்ச்சியும் சாதாரணமாக நடைமுறையிலே இருந்து வருகிற சீரிய பண்பாடுகள்தான். முதல் அமைச்சராக இருந்த காமராஜ் அவர்களைப்பற்றிச் சொல்லுகிறபொழுது 'ஏழை எளியவர்களிடம் அவருக்கிருந்த இயல்பான பரிவுணர்ச்சி, அன்றாடப் பிரச்சினைகளுக்கு நடைமுறை சாத்தியமான முறையில் தீர்வுகாணும் திறன், நிர்வாகத்திற்கே பொதுவாக வழிகாட்டியாக அமைந்திருந்த அவரது நேர்மை நெறி இவை காரணமாக எல்லா மக்களுடைய அன்பையும், நன்மதிப்பையும் அவர் பெற்றுவிட்டார்' என்ற கருத்தை யாரும் இங்கே மறுப்பதற்கில்லை. ஆனால், அவருடைய விலகல் வருந்தத்தக்க ஒன்றா? அல்லது பாராட்டி மகிழ்வதற்குரிய ஒன்றா? என்றால் அந்த அடிப்படையை வைத்துப் பார்க்கிறபொழுது, அவருடைய விலகல் வருந்தத்தக்க ஒன்று என்றுதான் சொல்லவேண்டும். இப்பொழுது அவர்கள் விலகி இருப்பது கட்சி நன்மைக்காகவா? அல்லது அரசியல் நன்மைக்காகவா? என்றால், கட்சி நன்மைக்காகத்தான் என்பது தெளிவாகப் புரியும். அவர் விலகி இருப்பதை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசியல் கண்ணோட்டத்தை அடிப்படையாக வைத்து, இந்தப் பிரச்னையைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. 'மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களின் பண்பாட்டை எதிர்க்கட்சியினர் பாராட்ட மறுக்கிறார்களே' என்றுகூட அங்கத்தினர்களில் சிலர் வருத்தப்பட்டார்கள். பாராட்ட வேண்டிய நேரத்தில், அதாவது எல்லோரும் சேர்ந்து பாராட்டுகிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்குமேயானாலும்கூட, பாராட்டுகின்ற வகையில் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் யாரும் பாராட்டப் பின்வாங்கியவர்கள் அல்லர். எடுத்துக்காட்டாக, அண்மையிலே ஓரிரு திங்களுக்கு முன்னால் நீடாமங்கலம் ஊராட்சி மன்றத்தில் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களின் உருவப்படத்தை நான்

21st January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

திறந்துவைக்கவேண்டுமென்று ஊராட்சி மன்றத்தினர் என்னைப் பணித்தபொழுது, நான் பூரிப்போடு அந்தப் பணியை ஏற்றுக் கொண்டு, திரு. காமராஜ் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்தேன். பாராட்டுவதற்குரிய பண்புகளை பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டி வருகிறோம். கவர்னர் உரையிலே குறிப்பிடப் பட்டுள்ள பண்புகள் பாராட்டுவதற்குரியன அல்ல என்று நான் எடுத்துச் சொல்ல வரவில்லை. இங்கே விவாதத்திற்குரிய பிரச்னை யாக இதைக் கொண்டு வந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை என் பதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க் கட்சியினரும், ஆளும் கட்சியினரும் விலகுவதற்கு என்ன காரணம் என்பதைக் கூறினார்கள். இந்த ஐயப்பாடுகளுக்கெல்லாம் இடம் இல்லாத வகையிலே, இந்த மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர் கள் கேட்டபோதே, அவர்கள் விலகும்போதே, திரு. காமராஜ் அவர்கள் இந்த மன்றத்தினரை மதித்து, விலகுவதற்கான காரணங் களையும் விளக்கங்களையும் எடுத்து வைத்திருப்பார்களேயானால், இது சட்டசபையில் விவாதத்திற்குரிய பிரச்னையாக வந்திருக்காது. அதற்கான விளக்கங்கள் என்ன, விலகுவதற்கான நிலைமை என்ன என்பதை இந்த மன்றத்திலே எடுத்து வைப்பதற்கான வாய்ப்பு அப்போதே அவருக்கு இருந்தது. அந்த வாய்ப்பைப் பயன் படுத்தி எடுத்துச் சொல்லி யிருப்பார்களேயானால், இங்கே உறுப் பினர்கள் நன்றாக அறிந்துகொள்வதற்கும், அவர் விலகலைப் புரிந்து கொள்வதற்கும் வழிவகை ஏற்பட்டிருக்க முடியும். விலகுவதற் கான காரணங்கள் என்ன என்பதைப்பற்றி எதிர்க்கட்சியினரும் எடுத்துச் சொன்னார்கள், ஆளும் கட்சியினரும் எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்துவதற்காக மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் விலகல் செய்தார் என்று பத்திரிகையில் செய்திவரப் பார்த்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு, திருச்செங்கோடு, திருவண்ணா மலை தேர்தல்கள் போன்ற முடிவுகளைக் கண்டு காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தும் நோக்கத்தோடுதான் அவர் விலகினார் என்று எதிர்க் கட்சியைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொல்லியபோது அப்படி இல்லை என்று ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் சொன்னார்கள். திரு. காமராஜ் அவர்கள் ஏன் விலகினார் என்பதற்கு காங்கிரஸ் கட்சித் தலைவர்களிலே முக்கிய மான ஒருவராகக் கருதப்படுபவரும், இந்திய அமைச்சரவையிலே இருந்து விலகியவரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினருமான திரு. எஸ். கே. பாட்டீல் அவர்கள் கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலும், பாட்னாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலும், காரணத்தைச் சொல்லியிருக்கிறார். அவர் அப்படி எடுத்துச் சொல்லும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் கட்டுப்படுத்துகிற அளவுக்கு காங்கிரஸ் கட்சியைக் கட்டிக்காத்து வளர்க்கவும், அவர் விலகல் செய்தார். அதன் காரணமாக தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில் அந்தத் திட்டம் பொருத்தமாக இருக்கலாமே ஒழிய, அகில இந்திய ரீதியில் அந்தத் திட்டம் பொருத்தமானதாக இல்லை

யென்றும் அவர் சொன்னார். எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் இந்தக் காரணத்தைக் கண்டுபிடித்துக் கூறவில்லை. காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியமான தலைவர்களில் ஒருவர்தான் இந்தக் காரணத்தைக் கூறியுள்ளார். இந்தக் காரணத்திற்கு அப்பாற்பட்டவர்களும், மற்றவர்களும் சொன்ன காரணங்களைப் பார்த்தாலும்கூட உண்மை நிலை விளங்கும். இந்த நாட்டைச் சேராமல் இதர நாட்டிலிருக்கிற அரசியல கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் மற்றவர்களும் இது பற்றிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். இந்நாட்டு அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள், வெளிநாட்டில் இருக்கிறவர்கள், நடுநிலைமையிலிருந்து பார்க்கிறவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக நான் ஒரு விளக்கத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 14—10—1963-ல் லண்டனில் வெளியாகிஇருக்கிற டைம்ஸ் ஆப் லண்டன் என்ற இதழில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அப்பாற்பட்டவர்கள் எப்படிக் கருதுகிறார்கள் என்ற காரணத்திற்காக இதை நான் இந்த மன்றத்தின் முன் எடுத்து வைக்கிறேன். அவர்கள் அந்தப் பத்திரிகையிலே என்ன சொல்லியிருக்கிறார்களென்றால் திரு. காமராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடும், தமிழக மாநிலத்திலே பரவி வருகிற நிலையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை 1967-ல் நடைபெற இருக்கிற தேர்தலிலே ஒடுக்குகிற அளவுக்கும், அதனுடைய சக்தியைக் குறைக்கிற அளவுக்கும் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்துகிற அளவுக்கும் பயன்படுத்தும் முறையிலும் விலகல் செய்தார் என்று சொல்லிவிட்டு, அகில இந்திய ரீதியில் அந்தப் பொறுப்பை காமராஜ் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் பொழுது எந்த அளவுக்கு அந்தப் பொறுப்பிலிருந்து பணியாற்றப் போகிறார் என்பது சந்தேகத்திற்குரியது என்றும் அந்தப் பத்திரிகை சொல்லியிருக்கிறது. அரசியல் மையத் தன்மை பெற்ற ஹிந்தி பேசுகிற மாநிலங்கள் அடங்கிய வடநாட்டு அரசியல் சூழ்நிலையில் அவர் அமர்ந்து அவர் எண்ணிய எண்ணம் முழுக்க முழுக்க ஈடேறுமா? என்பது ஐயப்பாட்டுக்கு உரியது என்றும் அந்தப் பத்திரிகை தெளிவுபடுத்தியிருக்கிறது. 14—10—1963-ல் இலண்டன் டைம்ஸ்-ல் கீழ்க்கண்டவாறு எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது.

"Kamaraj's intention was to devote his first efforts to strengthen the party organisation in his own State, so that in the next election it could beat back the disturbing spread of the D.M.K. Party.

Auspicious as are the circumstances of his move to the centre, he might yet stumble. Then his southern provenance may limit his rights. As for the foreseeable future, the centre of gravity of Indian politics will be in the Northern and Hindi-speaking States."

இந்த அடிப்படையிலே விலகுவதற்கான காரணம் அரசாங்கத்தின் நன்மையைப் பொறுத்ததல்ல, கட்சியின் நன்மையைப் பொறுத்துள்ளது. மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்தான் என்றாலும் பாராட்டு விவாதத்திற்குரிய பிரச்சினை

21st January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

யாக கொண்டுவரப்படக்கூடாது என்ற அந்த அடிப்படையில் நாங்கள் சொல்கிறோமே தவிர, பாராட்டப்படுவது தவறு என்ற அடிப்படையில் அல்ல. இருந்தாலும் திரு. காமராஜ் அவர்கள் விலகியிருப்பதினால் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆளும் கட்சியினரோ, எதிர்க் கட்சியினரோ உணரவில்லை. திரு. காமராஜ் இன்றும் இந்த மன்றத்தின் உறுப்பினராக இருந்து கொண்டிருக்கிறார். அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலும் அவர் நிர்வாகப் பணிகளிலே பலவற்றை மற்றைய அமைச்சர்களோடு பகிர்ந்துகொண்டு அந்தப் பணிகளை ஆற்றிக்கொண்டு வந்தார். முன்னாள் முதலமைச்சராக இருந்தபோது, ஆலோசனை கூறுகிற வகையிலும், மற்றபடி நிர்வாகத்தை நடத்திச் செல்கிற வகையிலும் அவர் என்ன பொறுப்போடு இருந்தாரோ, அந்தப் பொறுப்பு இப்பொழுதும் அற்றுப்போகவில்லை என்பதை நடைமுறை நிகழ்ச்சிகள் காட்டிக்கொண்டு வருகின்றன. அவர்களுடைய ஆலோசனையும், அறிவுரையும் தொடர்ந்து இருந்துவரும் என்ற நம்பிக்கையை இந்த உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதுவும் நின்று நிலவி வரும் என்பதை நாம் நன்றாக உணர்கிறோம். அவர் இப்பொழுது பதவியில் சட்டப்படி இல்லையே தவிர, வேறு பல வகைகளிலேயும் இப்பொழுதும் முதல் அமைச்சராக இருக்கிற சூழ்நிலை இருக்கிறது என்ற தன்மையை நாம் காண்கிறோம். கவர்னர் அவர்கள் உரையாற்றிய அன்றுகூட இங்கே கூட்டம் நடைபெற்றபோது நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே அப்பொழுது இடங்கள் ஒதுக்கப்படுகின்ற நிலைமையில் அமைச்சர்களுக்குமட்டுந்தான் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பு கொடுக்கப்பட்டிருந்தது.

கனம் உதவி சபாநாயகர்: அன்றைய தினம் யார் எந்த இடத்தில் வேண்டுமானாலும் உட்காரலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எங்களுக்கு அனுப்பப்பட்ட குறிப்பிலே அமைச்சர்களுக்கு மட்டுந்தான் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது, மற்ற உறுப்பினர்கள் அவரவர்கள் தேர்ந்தெடுக்கும் இடங்களில் உட்காரலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அமைச்சர்களுக்கு என்று இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அதிலே குறிப்பிட்டு மற்றவர்கள் எங்கு வேண்டுமானால் உட்காரலாம் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. அத்தகைய நிலைமையிலே முதலமைச்சர் அவர்கள் இடத்தில் திரு. காமராஜ் அவர்கள் உட்கார்ந்து இருந்தார். உட்காரக்கூடாது என்று நான் கூறவில்லை. அதிலே விருப்புவெறுப்பு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்த இடத்திலே உட்கார தகுதி அவர் படைத்திருக்கிறார் உரிமையில்லாமல் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கண்ணோட்டத்தில் வைத்துப்பார்த்தால் அதே இடத்தில் இந்த மன்றத்தைச் சேர்ந்த வேறொரு உறுப்பினர் உட்கார்ந்திருந்தால் எப்படி அது பிரச்சினைக்குரியதாக ஆகியிருக்கும் என்பதை நாம் எல்லோரும் உணருகிறோம். (சிரிப்பு) இந்தப் பிரச்சினையைப் பொறுத்து நான் கூறு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st January 1964

வது எல்லாம் விவாதத்திற்குரிய பிரச்னையாக இதனை ஆக்கி, மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களுக்கு சங்கடத்தை உண்டுபண்ணக் கூடிய நிலையிலே வாதப் பிரதிவாதங்கள் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்த அறிக்கையிலே குறிப்பிட்டதன் மூலம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுவதற்கென்று போடப்படுகிற கூட்டங்களில் சர்வ கட்சியினரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள், பாராட்டிக் கொண்டும் வருகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த கவர்னர் உரையின்மீது இந்த மன்றத்தில் நடைபெற்ற விவாதங்களைப் பார்க்கிறபொழுது மற்றொரு முக்கியப் பிரச்சினையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஹிந்தி எதிர்ப்புப் போராட்ட நிகழ்ச்சிகளை எடுத்து வைத்து வருகிறார்கள். அதற்கு அடிப்படையாக இந்த கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிற வாசகம் என்னவென்றால் "நமது அரசியல் சாசனத்தில் பொறிக்கப் பட்டுள்ள இந்த உரிமையை, அச் சாசனத்திற்கே அவமதிப்புக் காண்பிக்க முயலும் எக்கிளர்ச்சிக்கும் அளிக்க முடியாது". இந்த அடிப்படையை வைத்துத் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி வருகிற ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களை உள்கிடக்கையாக வைத்துக்கொண்டு இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். "நமது அரசியல் சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள இந்த உரிமையை அச் சாசனத்திற்கே அவமதிப்பு காண்பிக்க முயலும் எக்கிளர்ச் சிக்கும் அளிக்க முடியாது" என்ற கருத்து வழங்கப்பட்டிருக் கிறது. அந்தக் கருத்தை நான் மறுக்கவில்லை. அரசியல் சட்டத் திற்கு அவமதிப்பு ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யாருக்குமில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் சட்ட எரிப்புப் போராட்டமும் மறியல் போராட்டமும் திராவிட முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்படுகின்றன என்றால் ஹிந்தித் திணிப்பை எதிர்ப்பதின் அறிகுறியாகத்தான் இந்தப் போராட்டங் கள் நடைபெற்று வருகின்றனவே ஒழிய, அரசியல் சட்டத்திற்கு அவமதிப்பு ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தில் இந்த நிகழ்ச்சி கள் நடைபெறவில்லை. அரசியல் சட்டத்தின்படி அதற்காக உறுதி மொழி எடுத்துக்கொண்டுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் அத்தனைபேரும் இந்த மன்றத்தில் வீற்றிருக்கி றோம். அரசியல் சட்டத்தை மதிக்கக்கூடாது என்பதல்ல எங்க ளுடைய நோக்கம். அதற்கு அவமதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதும் நோக்கமல்ல. அவமதிப்பது என்பது வேறு, எதிர்ப்பது என்பது வேறு. அதை நாங்கள் மதிக்கக் கடமைப்பட்டிருக் கிறோம். மதிப்பவர்கள் எதிர்க்கக் கூடாது என்பதில்லை. மதிப்ப வர்கள் எதிர்த்தால் அது அவமதிப்பது என்று ஆகாது. எதிர்ப்பது என்பது ஒன்று; அவமதிப்பது என்பது மற்றொன்று. இப்பொழுது முதல் அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் மதிக் கிறேன். அதே போல அவர்களும் என்னை மதிக்கிறார்கள்.

ஆனாலும் ஏதோ கொள்கை பொறுத்தவரை, நடவடிக்கைகள் பொறுத்தவரை, மற்ற திட்டங்கள் பொறுத்தவரை அவர்களுடைய கருத்துக்களை நான் எதிர்க்கக்கடமைப்பட்டிருக்கிறேன். அதே மாதிரி என்னுடைய கருத்துக்களை அவர்கள் எதிர்க்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனாலும் எதிர்ப்பதே அவமானப்படுத்துவதின் அறிகுறி ஆகாது. சட்டங்களையும் விதி முறைகளையும் அவமானப் படுத்தாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைச் சுட்டிக்காட்ட எதிர்ப்பேனானால் அது அவற்றை அவமானப்படுத்துவதின் அறிகுறி யாக அமையாது.

சட்ட எரிப்பு செய்வதற்காக, அது சம்பந்தப்பட்ட கிளர்ச்சி களைச் செய்வதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் நான்கு பேர்களும் சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் ஈடு பட்டார்கள் என்று வழக்கு மன்றத்திலே நிறுத்தப்பட்டார்கள். அவர்கள் மீது குற்றம் சாட்டிய காவல் துறையினரும், குற்றப்பத்திரிகையில் அரசியல் சட்டத்தை அவ மானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த குற்றத்தை இவர்கள் செய்தார்கள், ஆகவே இவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று கோரவில்லை. காவல் துறையினர் இவர்கள் இந்தியை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரண மாக போராட்டங்களை நடத்துகிறார்கள். போராட்டத்தில் ஈடுபட் டிருக்கிறார்கள் ; எரிப்பது குற்றம் ; ஆகவே அந்த எரிக்கும் குற்றத்தை செய்து இருப்பதால் இவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்றுதான் வழக்குத் தொடுத்த காவல் துறையினர் நீதி மன்றத்திலே கூறியிருக்கிறார்கள். அந்தக் குற்றப்பத்திரிகைக்கு பதில் கொடுக்கும்போது அறிஞர் அண்ணா அவர்கள் வாக்குமூலம் கொடுத்ததில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

"எங்கள் மீது கூறப்படும் குற்றச் சாட்டுக்களை மெய்ப்பிக்க எடுத்துக்காட்டப்பட்ட சான்று ஏடுகள், கூறப்பட்ட சாட்சியங்கள், ஆகிய எதிலேயும் நாங்கள் தேசீய அவமதிப்பு காட்ட வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தோம் என்று குறிக்கப்படவில்லை.

தேசீய அவமதிப்புச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் யாருக்குத்தான் எதற்காகத்தான் ஏற்படப்போகிறது?

எங்களுடைய அறிக்கைகளினாலும் சரி, குற்றச்சாட்டிலே மெய்ப்பிக்க மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்ட எங்கள் பேச்சு துணுக்குகளிலாகிலும் சரி, ஒரு இடத்திலும் எங்கள் நோக்கம் தேசீய அவமதிப்பு ஏற்படுத்துவது என்று நாங்கள் கூறினது இல்லை.

அதற்கு மாறாக எல்லா கட்டங்களிலும் தீர்மானங்கள் நிறை வேற்றியது, பத்திரிகையில் வெளியிட்டது, பொதுக்கூட்டங்களில் பேசியது ஆகிய எல்லா கட்டங்களிலும் நாங்கள் தொடர்ந்து தூய்மையுடன் 17-வது பிரிவை கொளுத்துவதன் நோக்கம் இந்தியை எதிர்க்கிறோம் என்பதை அறிவுறுத்தவே என்பதனை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st January 1964

அதிலும் அந்த நடவடிக்கையின் மூலம் ஆளவந்தார்கள் உறக்கத்தை நீக்கிக் கொண்டு உண்மை நிலையை உணர்ந்து, தமது அநீதியான போக்கை கைவிடச் செய்வதற்கே, 17-வது பிரிவை கொளுத்த முற்படுகிறோம் என்பதனை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறோம்".

இந்த வாக்கு மூலத்தை அறிஞர் அண்ணா வழக்கு மன்றத்திலே கொடுத்தார்கள். இதன் பேரில் வாதாடிய சர்க்கார் தரப்பு வழக்கறிஞரும் அரசியல் சட்டத்துக்கு இவர்கள் அவமதிப்பு செய்து இருக்கிறார்கள், ஆகையால் அவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்று வாதாடவில்லை. அரசியல் சட்டத்தை எரிப்பது குற்றம், அந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறார்கள், அதற்காக அவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்ற முறையிலேதான் சர்க்கார் தரப்பிலே வழக்கு மன்றத்திலே கோரப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களும் "நாங்கள் மேற்கொண்ட செயல் ஆளவந்தார்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே", என்று கூறினார்கள். நீதி மன்றத்திலே நீதிபதி அவர்களும் கூறினார்கள்.

"நோக்கங்களைக் குறித்து நீதிமன்றம் எடை போடத் தேவையில்லை. குற்றத்தை மட்டுமே நீதிமன்றம் கருதிப் பார்க்க வேண்டும். சட்டத்தினால் நியாயப்படுத்தப்பட்டுள்ள செயலை தீய நோக்கத்தோடு செய்தார் என்பதால் அதனை சட்ட விரோதமான செயல் என்று கருதிவிட முடியாது".

இதைப் போன்ற நல்லெண்ணத்துடன் சட்டத்துக்குப் புறம்பான செயலில் ஈடுபடுகின்ற காரணத்தால்—அச்செயலைச் செய்தவரின் செயலை சட்டத்துக்கு ஒத்தது என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

"ஆகவே, சட்டம் என்பது, 'குற்றம் சாட்டப்பட்ட மனிதன் என்ன செய்தான்' என்பதைக் கொண்டுதான் தீர்ப்புக் கூறுமே தவிர, 'அவன் எந்த நோக்கத்தோடு அதனைச் செய்தான்' என்பதைப் பற்றிக் கருதாது.

தி.மு. கழகம் துவங்கியிருக்கும் கிளர்ச்சியானது, ஒருநாள் மட்டும் நடைபெற்று முடிவதல்ல; இக் கிளர்ச்சியை மாநிலம் முழுவதிலும் 13-மாத காலம் நீடித்துப் பாவலாக நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது".

ஆகவே, இதிலிருந்தெல்லாம் தெளிவுபடுவது என்ன? எதிர்ப்பு உணர்ச்சி இருக்கிறது; எதிர்ப்பு உணர்ச்சியை காட்டுவதுதான் போராட்டத்தின் நோக்கமே தவிர சட்டத்தை அவமானப் படுத்துவது அல்ல. எதிர்ப்பு உணர்ச்சியின் பிரதிபலிப்பே, சட்டத்தை எரிப்பது என்ற காரியம். அதில் அவமானப் படுத்துவது என்று ஒன்றும் இல்லை என்பதைத் தெளிவு படுத்துவது என் கடமை ஆகிறது. ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். சென்ற 19-ம் தேதி அன்று, காஞ்சியில் எரிப்புப் போராட்டம் நடந்தது. அங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எரிப்பை நடத்தும்போது—பத்திரிகைகளில் பார்த்த அளவில் சொல்லு

கிறேன்—காவல் துறை அதிகாரிகள் எரித்துக்கொண்டிருக்கும் ஏடுகளைப் பிடுங்கி நெருப்பை அணைக்க முற்பட்டுக் கையால் அணைக்க முடியாமல, கீழே போட்டுத் தங்கள் பூட்ஸ் காலால் மிதித்து நெருப்பை அணைத்து பிறகு அந்தப் பிரதிகளை கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே போலிஸ் அதிகாரிகள் செய்த செயல் குற்றத்திறகுள் வராது. பூட்ஸ் காலால் மிதித்தது குற்றம் செய்வதற்கல்ல, ஆனல் தீயை அணைக்க வேண்டும் என்பது தான் நோக்கம். செயல் எப்படி இருந்தாலும், நோக்கம் தீயை அணைப்பதுதான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவமானப் படுத்துவதைத் தவிர்க்க தீயை அணைக்க வேண்டி இருந்தது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: செயல் அவமானப் படுத்துவதாக இருந்தாலும், நோக்கம் தீயை அணைக்கும் நோக்கம்தான். போலீஸ் அதிகாரிகள் குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட மாட்டார்கள். அதே போல, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் போராட்டத்தில் எரிப்பு எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டும் நோக்கம் உடையதுதான், அவமானப் படுத்தும் நோக்கமுடையது அல்ல என்பதனை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆட்சி மொழிக் கொள்கையைப் பொறுத்த வரை, திராவிட முன்னேற்றக் கழகம் கிளர்ச்சி செய்கிறது என்றல், அது இந்தியை அகில இந்திய மொழியாகக் கொள்ள வேண்டும் என்பதற்கு தமிழ் கத்திலே எதிர்ப்பு உணர்ச்சி இருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டி, இந்திய அரசினர் நீதி வழங்கவேண்டும் என்பதற்காகத் தான். ஆட்சி மொழியைப் பொறுத்த வரை இன்றைக்கு ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆளும்கட்சி அகில இந்திய ஆட்சி மொழியாக இந்திதான் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனல் எதிர்க்கட்சியாகிய நாங்கள் மாறுபட்ட கருத்து கொண்டு இருக்கிறோம். அந்தந்த மாநிலமும் அவரவர்கள் தாய் மொழியில் அலுவல்களை நடத்த வேண்டும். தமிழன் தமிழிலும், தெலுங்கர் தெலுங்கிலும், மராட்டியர் மராட்டியிலும் இப்படி அவரவர்கள் தங்கள் தங்கள் தாய் மொழியின் மூலம் அலுவல்களை நடத்துவதே சிறந்தது. அகில இந்திய தொடர்புக்கும், அகில உலக தொடர்புக்கும், அகில உலக அறிவியல், பொதுவியல் தொடர்புகளுக்கும் ஆங்கிலமே இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் அதிக வளர்ச்சி பெற மூன்றும் வகுப்பிலிருந்து கற்றுக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது. அகில உலக மொழியாகிய ஆங்கிலமே அகில இந்திய மொழியாகவும் அமையுமேயானல் இந்த மொழி சம்பந்தப்பட்ட பிரச்னைகளும், மாச்சரியங்களும், கருத்து வேறுபாடுகளும் குறைவதற்கு வழி ஏற்படும். திராவிட முன்னேற்ற கழகத்தின் கூற்று இந்தி போதுமான பக்குவமும் தகுதியும் அடைந்துவிடவில்லை, அது ஆங்கிலம் உட்காரும் இடத்தில் உட்கார முடியாது என்பதே. இந்தியைக்காட்டிலும் மிகச் சிறந்த பல மொழிகள் இந்தியாவிலே உண்டு. ஆகவே அகில இந்திய மொழியாக இருக்க வேண்டிய

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st January 1964

இடத்தை இந்தி மட்டுமே பெறக்கூடாது. அதைக்காட்டிலும் முதிர்ந்த, மிகச்சிறந்த இலக்கணமும், இலக்கியமும் கொண்ட மற்ற மொழிகளும் பெற வேண்டும். இந்த அகில இந்திய மொழி பற்றிய முடிவானது முன்பு இந்த மொழிப்பிரச்னையில் மக்கள் அதிக கவலை செலுத்தாமல் இருந்த காலத்தில் எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும். ஆகவே அதை மறு பரிசிலனை செய்வதன் மூலம் ஒரு சுமுகமான தீர்வு காண வேண்டும். அந்த காரணத்தினாலேயே எடுக்கப்பட்ட முடிவு சரியானது அல்ல என்று எதிர்ப்பு உணர்ச்சியை வற்புறுத்திக்காட்டவே திராவிட முன்னேற்றக் கழகம் இம்மாதிரியான போராட்டங்களிலே ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறார்கள். தாய் மொழி பெருமைக்குரியது; பாராட்டுதற்குரியது. அவரவர்கள் தங்கள் தங்கள் தாய்மொழியைக்குறித்துப் பெருமைப்படுகிறார்கள். நமக்கென்று ஒரு மொழி வேண்டாமா? என்று கேட்கிற நிலையில் அவரவர்க்கென்று ஒரு மொழி இருக்கிறது என்று காட்ட முடியும். இந்த இடத்தை இந்திதான் கைப்பற்றவேண்டும் என்று அவசியம் இல்லை. அதற்கான தகுதியும் அந்த இந்தி பெறவில்லை. ஆனால், வற்புறுத்த முடியுமா என்று கேட்டால், 1958-59-ஆம் ஆண்டில் வங்காள சட்ட மன்றத்தில் மொழிப் பிரசினையை மீண்டும் பரிசீலனை செய்து, நாட்டுக்கேற்ற வகையில் திருத்தியமைக்க வேண்மென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்து டாக்டர் பி.ஸி. ராய் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒருமனதாக ஆளுங்கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் அத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

"Whereas this Assembly cannot agree with the recommendation made in this regard by the Official Language Commission, etc., and

Whereas this Assembly feels that for the unity and progress of India, the whole question of Official Language demands fresh examination";

என்று அந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. மறு பரிசீலனை செய்யப்படவேண்டும் என்ற ஒரு சிபார்சுத் தீர்மானத்தை வங்காள சட்ட மன்றம் அனுப்பியிருக்கிறது. அதே அடிப்படையில் தமிழக சட்ட மன்றமும் மறுபடியும் இந்தப் பிரச்னையை அணுகவேண்டும் என்ற முறையில் தீர்மானம் அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு எதிர்ப்பு இருக்கிறது, வெறுப்பு இருக்கிறது என்பதை இந்திய அரசினருக்கு உணர்த்தும் முறையிலேதான் எதிர்ப்புக் கிளர்ச்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் துவக்கி நடத்திக்கொண்டு வருகிறார்கள். "பல மொழிகளை வைத்து ஆள முடியுமா? ஆகவே, இந்தி தான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலே மிகத் தீவிரமான தலைவர் என்ற கருதப்பட்ட டாக்டர் பி.சி. ராய் அவர்கள் அங்கு பேசும்போதுகூட சொல்லியிருக்கிறார்கள், "அரசியல் சட்டத்தில் இருக்கும் அந்தப் பதினேழாவது பிரிவை நான் பல முறை படித்துப் பார்த்திருக்கிறேன். இந்தியா ஒரே மொழி கொண்ட ஒரு நாடு அல்ல. பல மொழிகள், பல

21st January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பிரிவுகள் இருக்கின்றன. அதற்கேற்றபடிதான் மொழிப் பிரச்சினையை நாம் அணுகவேண்டும். ஒரு மொழிக்கு மட்டுமே அத்தகைய சலுகை தரக் கூடாது. எனவே, அந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும்" என்று எடுத்துச் சொல்லும் போதுகூட அவர்கள் காரண காரிய விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

"Sir, I have read and re-read the language of Part XVII of the Constitution and Chapters I and II, Chapter I being the language of the Union and Chapter II regional languages. Sir, I was wondering why, while discussing this, the constitutionalists considered the question of having an official language for the Union".

"இந்திய யூனியனுக்கே ஒரு மொழிதான் வேண்டும் என்று ஏன் தான் அரசியலை வகுத்தவர்கள் கூறினார்களோ தெரியவில்லை. ஏன் அதைப்பற்றி விவாதித்தார்களோ தெரியவில்லை" என்ற கருத்தை அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அவர் மேலும் பேசுகையில்,

"Sir, it is a fact that constitutionalists who were discussing this problem were obsessed with the idea of country having one language but they forgot that India is a polyglot country, that there is a large volume of people who have developed their culture and tradition based upon the Aryan language. There is a very large number of people who base their development on the Dravidian language. The Mongolian language also got a fairly great and large influence over the language of some people of this country. Therefore in a country which is a polyglot country so far as language is concerned, the question of having one language only need not be such a difficult problem, and it is possible to have in a country like this more than one language which may be called the official languages".

என்று அவர் கூறியிருக்கிறார். ஒரு மொழியேதான் இருந்து தீர வேண்டுமென்ற அவசியம் இல்லை. பல மொழிகளைக் கொள்ளலாம் என்ற கருத்தை டாக்டர் ராய் அவர்கள் வங்காள சட்ட மன்றத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கான காரண காரிய விளக்கங்களை ஸ்விட்ஸர்லந்து, ரஷ்யா, இன்னும் வேறு பல நாடுகளில் உள்ள நிலைமையிலிருந்து அவர் தெரிவித்திருக்கிறார். அவற்றை எல்லாம் நான் இங்கே எடுத்துக்கூற நேரம் இல்லாத காரணத்தால் குறிப்பிடாமல் விடுகிறேன்.

அவர்கள் மற்றொரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

"As you know under Schedule VIII of the Constitution we have got 13 languages which are called the regional languages of the country. Hindi happens to be one of the regional languages and therefore that is all the more reason why there should be arrangement by which in all matters Hindi should have the predominance" என்று அவரும் தெரிவித்திருக்கிறார்கள். "13 இந்திய தேசிய மொழிகளில் இந்தி மொழியும் ஒன்றாக இருக்கும்போது, இந்தி மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பானேன்?" என்று அவர் கேட்டிருக்கிறார்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st January 1964

ஐக்கிய நாட்டு அவையில் ஐந்து மொழிகளில் நிர்வாகப் பொறுப்பை அவர்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அது போல், இந்தியாவில் இருக்கும் முக்கிய தேசிய மொழிகள் ஆட்சி மொழிகளாக இடம் பெறவேண்டும். இதற்கான வழிவகைகள் என்ன என்பதைச் சாதாரணமாக இருக்கும் நம்மால் அறிந்து கொள்ள முடியாவிட்டாலும், அதற்கான வழிவகைகளை நம்மால் காண முடியவில்லை என்று ஒப்புக்கு வைத்துக்கொண்டாலும், நமக்கெல்லாம் மேற்பட்ட வல்லுநர்கள் மற்றைய பல பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு வழிமுறை காண்பதுபோல இதற்கும் நிச்சயம் காண முடியும். எனவே, அதன் மூலமாக இந்திய துணைக்கண்டத் தில் இருக்கும் கிளர்ச்சிகளையும் வேறு பல நிலைமைகளையும் தவிர்க்கவும் சுமுகமான சூழ்நிலை ஏற்படவும் வழிவகை ஏற்படக் கூடும். அந்த வகையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் வலி யுறுத்தி வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் இந்திக்குழு ஆதரவு இருக்கிறது என்று இந்தியப் பேரரசு எண்ணிக்கொண்டி ருக்கிறது. அப்படி அல்ல; எதிர்க்கிறவர்களும் இருக்கிறார்கள்; எதிர்ப்புணர்ச்சி இருக்கிறது; இதிலே அதிருப்தி அடைந்திருக்கிற வர்களும் இருக்கிறார்கள் என்று தெரிவிப்பதற்காக, திட்டமிட்டு முறைப்படுத்தப்பட்டு குறிப்பிட்டவர்கள் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில், மற்றைய சட்டங்கள் அத்தனைக்கும் கட்டுப் பட்டு, இந்த ஒரு சட்டத்தின் ஒரு பிரிவை மட்டும், எதிர்ப்புணர்ச்சி யினுடைய அறிகுறியாக எதிர்க்கிறோம் என்ற முறையில் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன என்று நான் கூற விரும்புகிறேன்.

இந்தியைப் பற்றியும் வேறு பல நிலைமைகளைப் பற்றியும் குறிப் பிடும்போது, 'இந்தி ஆட்சி மொழியாக வந்தால் தமிழ் எப்படிக் கெடும்?' என்று கேட்கிறார்கள். 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட தமிழ் கூறும் நல்லுலகம்' என்று ஒரு காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. வடக்கே வேங்கடம், தெற்கே குமரி, கிழக்கிலும் மேற்கிலும் கடல் ஆகியவற்றை எல்லையாகக் கொண்டி ருந்த பரந்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 8 கோடி மக்களால் தமிழ் மொழி பேசப்பட்டு வந்தது. தமிழ் இன்று மூன்றரை கோடி மக்களிடத்திலே மட்டும் வழங்கக் கூடிய காரணம் என்ன? ஒரு மொழி மற்றொரு மொழியோடு சேர்ந்து திரிந்து, திரிபு மொழியாக ஆகும். வரலாற்று அடிப்படையில் எட்டு கோடி மக்கள் பேச வேண்டிய அத்தகைய தமிழ், வட மொழி, திசை மொழிகள் இன்னும் வேறு பல மொழிகள் வந்ததன் காரணமாக, கன்னடம் தெலுங்கு, துளு, மலையாளம் எனப் பிரிந்து இன்று மூன்றரை கோடி மக்கள் மட்டுமே பேசும் நிலைமைக்குத் தமிழ் வந்துள்ளது. ஒரு மொழி மற்றொரு மொழியோடு சேர்வதால் ஒரு மொழியின் உருவம் சீர்குலைந்து, வேறு மொழிகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தில் மொழிகள் மட்டும் 723 இருக்கின்றன. கிளை மொழிகள் 554-க்குமேல் இருக்கக்கூடும். 'லாங்வேஜஸ்' என்ற வகையில் 179 இருக்கின்றன. இந்த நிலை மைக்கு மூலமொழிகள் உருக்குலைந்திருப்பதற்குக் காரணம்

என்ன? ஒரு மொழி மற்றொரு மொழியின் மீது ஆதிக்கம் செலுத்தினால் அது சீரழியும் என்பதை வல்லுநர்களும், பேரறிஞர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும் கூறியிருக்கிறார்கள்.

இந்தியினால் தமிழ் கெடுமா? கெடாதா? என்பது குறித்துத் தமிழ்ப் பேராசிரியர்கள், தகுதி படைத்தவர்கள் அத்துணைப்பேரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியினால் தமிழ் கெடுமா, கெடாதா என்று பார்ப்போம். 'காசு' என்கிற தமிழ்ச்சொல் இந்த நாட்டில் 'நயா பைசா', 'நயே பைசா' என்றெல்லாம் வழங்குகிறது. 'காசு' என்ற சொல் இருந்த இடத்தில் இன்று 'நயா பைசா' இருக்கிறது. தமிழகத்தில் 'ஆளினர் மாளிகை' என்ற சொல் வழங்கவேண்டிய இடத்தில் 'ராஜ் பவன்' என்ற சொல் இருக்கிறது. 'கிராமத் தொண்டர் குழு' என்று இருக்க வேண்டிய இடத்தில், 'கிராம சேவக்', 'கிராம சகாயக்' என்ற சொற்கள் வந்திருக்கின்றன. இது இந்த ஆரம்ப கட்டத்திலே வந்து நுழைந்து இருக்கிறது. மேற்கொண்டு 'லோக் சபா', 'ராஜ்ய சபா' என்ற சொற்கள் ஆங்கில ஏடுகளிலேகூட இடம்பெற்றுவிட்டன. 'Nehru spoke in Parliament' என்று குறிப்பிட்டு வந்ததற்குப் பதிலாக, Nehru spoke in Lok Sabha, Nehru spoke in Rajya Sabha' என்று குறிப்பிடும் அளவுக்கு மாறி, ஆங்கிலப் பத்திரிகை கூட அந்தச் சொற்களைக் கையாளும் அளவுக்கு வந்திருக்கின்றன என்றால், இந்தி மொழியால் தமிழ் மொழி கெடுமா, கெடாதா என்பது ஆராய்ச்சியாளர் பார்க்கவேண்டிய ஒன்று ஆகும். ஏற்கனவே விழிப்பற்றிருந்த காரணத்தால் பல்வேறு திசைச் சொற்கள் தமிழில் ஆதிக்கம் கொண்டு, தமிழ் மொழியில் பல விழுக்காடுகள் ஏற்பட்டுப், பிற மொழிச் சொற்கள் சேர்ந்த கட்டம் மாறி, தமிழின் மீது படையெடுக்கும் கட்டம் முடிந்து, ஆக்கிரமித்த இடத்தைத் தமிழ் மீண்டும் பறித்துக்கொண்டிருக்கிற முயற்சியைப் பார்க்கிறோம். சீனர்கள் படையெடுத்துப் பிடித்துக்கொண்ட இடத்திலிருந்து இப்பொழுது சீனர்களை விரட்டும் முயற்சி நடைபெறுகிறது. அதுபோல, வடமொழியும் ஆங்கிலமும் தமிழ் மொழி மீது படையெடுத்த கட்டம் முடிந்துவிட்டது. சீனர்கள் படையெடுத்து பிடித்துக்கொண்ட இடத்திலிருந்து முன்னேறிச் செல்ல நாம் செயல் படவேண்டிய நிலைமை இருப்பதுபோல, ஆங்கிலமும் வடமொழியும் தமிழ்மீது படையெடுத்திருந்த நிலையிலிருந்து திரும்பி, தமிழை அந்த அந்த இடத்திலே மீண்டும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறபோது, அதிகாரத்தினுடைய துணை கொண்டு, இன்னொரு படையெடுப்பு ஏற்பட்டு தமிழை அழிக்கக்கூடாது என்ற அடிப்படை நோக்கத்தில் தான், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்புக் கிளர்ச்சியை நடத்தி வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மீண்டும் நான் வற்புறுத்துகிறேன் அவமானப்படுத்துவது நோக்கம் அல்ல. மதிக்கிறோம் சட்டத்தை. ஆனால், சில பிரிவுகளை எதிர்க்கிறோம். அந்த அடிப்படையில்தான் அந்தக் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன என்று மீண்டும் நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st January 1964

கவர்னர் உரையில், 'முன்னிலும் பெரிய திட்டத்தை நிறைவேற்றக்கூடிய நிலையில் நமது நிர்வாக இயந்திரம் இன்று இருக்கிறது. நமது சாதனைகள் அதிக நிதி வசதிகளைத் திரட்டுவதைப் பொறுத்தே இருக்கும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எந்த வகையிலே அமையும் என்று நிதிநிலை அறிக்கையைக் கண்டு தான் நாம் அறிய முடியும். நாம் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போட்டிருக்கும் திட்டத்தின் அடிப்படையில் நிதி தேவைப்படுகிறது என்பதை உணருகிறோம். அப்படித் தேவைப்படும் நிதியை எப்படிப் பெறப் போகிறார்கள், அதற்கு என்ன என்ன வழிவகை காணப் போகிறார்கள் என்பதை நிதிநிலை அறிக்கை வரும்போதுதான் இந்த மன்றம் உணரும் என்று நான் கருதுகிறேன். ஆனால், யோசனை கூற இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அளவில் நாம் இருக்கிறோம். வருவாயைப் பெருக்குவதற்கு, வரிகளாக வருமா, மறைமுக வரிகளாக வருமா ஏழை எளிய மக்களைப் பாதிக்காத அளவுக்கு வருமா, வரிகளின் மூலம் வருவாயைப் பெருக்காமல் லாபத்தின் மூலம் வருவாயைப் பெருக்குவதற்கான வழிவகை என்ன என்ன இருக்க முடியும், மானியமாகப் பெறுவது என்ன என்ன வகையில் இருக்கும். இன்னும் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக எவ்வளவு பெற முடியும் என்பதை எல்லாம் கணக்கிட்டு அந்த வருமானத்தின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புறேன்.

1-30 p.m. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி விவாதிப்பதற்கு அடுத்த திங்களில் இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதனை விரிவாக அப்போது பேச வாய்ப்பு இருக்கிறது என்றாலும் ஓரளவுக்கு கொள்கை அளவில் மேலெழுந்தவாரியாக இப்போது பார்ப்பது அதை நன்றாக அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும். பொதுவாக அந்தத் திட்டத்தினால் நாம் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. 1960-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு பேசுகையில், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறி இருக்கும் நிலையில் இந்திய நாட்டின் நிலைமையைப் பற்றிக் கவனிக்கிறபோது "பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகியிருக்கிறார்கள். ஏழைகள் இன்னும் இருந்த இடத்தில் தான் இருக்கிறார்கள்" என்ற கருத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். சென்ற ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டதாகச் செய்தித்தாளில் படித்தேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொருளாதார நிலைமை எப்படியாக இருக்கிறது என்பதை இந்த மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்—பொருளாதார நிபுணர்—திரு. பா. நடராஜன் அவர்கள் ஒரு

21st January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கட்டுரையில் அண்மையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிருர்கள். அதை இந்தச் சமயத்தில் தங்கள் முன் எடுத்து வைப்பது பொருத்தமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

"மூன்ருவது திட்டம் வெற்றிப் பாதையில் செல்வதாகயில்லை. சராசரி வளர்ச்சி விகிதம் 2 சதமாயிருந்தால், மக்கள் தொகை இரண்டரை சதமாக வளருகையில் நாட்டின் பொருளாதாரம் பின்னேக்கியே செல்லும் என்பது கண்கூடு" என்ற ஒரு கருத்தை டாக்டர் பா. நடராஜன் கூறியிருக்கிருர்கள். மேலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் திட்டம் வகுக்கையில் எந்த நிலைமை இருந்ததோ அந்த நிலைமையில் தான் வளர்ச்சியின் போக்கு இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய செலவினங்கள் அதிகமாகிற அளவுக்குத்தான் திட்டங்களின் போக்கு இருக்கிறது. திட்டங்களின் மூலமாக வரவினங்கள் அதிகப்பட்டு செலவினங்கள் குறைந்தால் வருவாய்துறை வளர்ச்சி அடையும். தனியார் துறையாக இருந்தாலும், பொதுத் துறையாக இருந்தாலும் செலவினங்கள் குறைந்து வரவினங்கள் அதிகப்பட்டால்தான் புதுத்திட்டங்களுக்கு முதலீடு செய்ய வாய்ப்பு அதிகரிக்கும். ஆனல் இப்பொழுது நம்முடைய செலவினங்கள்தான் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. ஆகையால்தான் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் பல துறைகளிலும் மொத்த உற்பத்தி பெருகியிருக்கிறது, எத்தனையோ புதுச் தொழில்கள் தோன்றியுள்ளன. என்ருலும் வளர்ச்சி சீரடையவில்லை.

மேலும் திட்டங்கள் என்று சொல்கிறபோது நம்முடைய திட்டங்கள் எந்தவகையில் அமையவேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பொதுவாக ஒரு நாட்டில் உற்பத்தி பெருக வேண்டுமென்ருல் அந்த ஒரு நாட்டுக்கு எது வளத்தைக் கொடுக்கிறதோ அது வளர்ச்சி அடைய திட்டங்கள் தீட்டப்பட்டால் நாட்டின் வளத்தைப் பெருக்க வழியேற்படும். ஒரு நாட்டுக்கு இன்றியமையாதது நில வளமும், மக்கள் வளமும்தான். மற்ற வளங்களைவிட ஒரு நாட்டின் நில வளத்தை பெருக்க வேண்டுமென்ருல் அது விவசாய மக்களின் ஒத்துழைப்பின் மூலமேதான் வளர்ச்சியைக் காணமுடியும் என்ற நிலைமையில் இருக்கிருேம். ஆனல் இன்றையதினம் நம் நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களின் நிலைமை எப்படி இருக்கிறது. அதை எடுத்து டாக்டர் பா. நடராஜன் அவர்கள் தம் கட்டுரையிலே குறிப்பிட்டிருக்கிருர்கள்.

இன்று அத்துறைப் பற்றிச் சுருங்கச் சொல்வதானல், இன்று விவசாயத்தில் எவரும் முதல் போடுவதேயில்லை. நிலச்சீர்த்திருத்தத்திற்குப் பிறகு கிடைத்தது போதும் என்று மண்ணைச் சுரண்டி உண்ணும் மனப்பான்மை நிலச் சுவாந்தார்களிடம் வந்து விட்டது. பயிரிடும் உழவர்களுக்கோ நீண்ட கால முதல் போடும் வசதியில்லை. பழக்கமும் இன்னும் ஏற்படவில்லை. . . .

ஆகவே என்று விவசாய விளைபொருள்களுக்கு தக்கவிலை நிர்ணயிக்கப்படுகிறதோ, என்று பயிர்சேதம் கன்றுகாலிகள் சேதம் இவைகளை ஈடுசெய்ய இன்ஷூரன்ஸ் திட்டங்கள் வருகின்றனவோ, என்று பூச்சு நோய்கள் விழும்போது அரசாங்கமே முன்னின்று தொத்துநோய் வருங்கால் தடுப்பது பொதுப்பணி என்று கொள்வது போல, அரசாங்கச் செலவிலேயே உடனடியாக மருந்து தெளித்து பயிர்களைக் காப்பாற்றும் முறை பிறக்கின்றதோ, என்று தழை, எரு, தேர்ந்த விதை முதலியன காலாகாலத்தில் உழவர்களுக்கு வழங்கும் ஏற்பாடு உறுதியாகின்றதோ அன்றுதான் விவசாயம் வளர்ச்சி அடையும் பொருளாதாரத்தில் வளர்ச்சியும் திருத்தமும் பெறும்” என்று நிலையை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அடிப்படைக் குற்றச்சாட்டைக் கவனித்து குறைகளை நீக்க வேண்டிய பொறுப்பு அரசாங்க நிர்வாகத்தைச் சார்ந்ததாக இருக்கிறது.

மேலும் விலைவாசிகள் உயர்ந்து வருகின்றன என்ற நிலைமையை கவர்னரும், மற்றவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆண்டுதோறும் இது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இது எளிதில் தீர்க்கக்கூடிய பிரச்சினை என்று யாரும் கருதவில்லை. ஆனால் அதைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளை நாம் வகுத்தாக வேண்டும். இதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம்தான் ஏற்றாக வேண்டும். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை சரியான முறையில் விநியோகிக்கும் செயல்முறைகளை ஏற்று, விலைவாசியை ஒரு கட்டுப்பாடான நிலையில் வைப்பதற்கு அரசாங்கமே பொறுப்பேற்று செயல்பட்டாக வேண்டும். அந்த அடிப்படையில் வைத்துப் பார்ப்போமானால் 1960-61-ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி நகர்ப்புறத்தில் 3,000 ரூபாய்க்கு மேல் வருஷ வருமானம் உடையவர்களை மட்டும் எடுத்துக் கொண்டால் ஒரு நகரத்தின் மொத்த ஜனத்தொகையில் 14 சதவிகிதத்தினரே பெறுகிறார்கள். அதாவது மேல் தட்டில், ஒரு நகரத்தின் மொத்த வருமானத்தில் 3,000 ரூபாய்க்குமேல் வருமானம் பெறக்கூடியவர்கள் 14 சதவிகிதத்தினரே. அடித்தளத்திலுள்ள 10 சதவிகிதம் மக்கள் மொத்த வருமானத்தில் 1.3 சதவிகிதம் தான் பெறுகிறார்கள். அதாவது ஒரு நகரத்தின் மொத்த வருமானத்தில் 1.3 சதவிகிதம் பெறுவது 10 சதவிகிதம் மக்கள்தான். இதேபோல கிராமப் புறங்களை எடுத்துக்கொண்டால், கிராமப்புறத்தில் உயர்மட்டத்தில் இருக்கிற 10 சதவிகிதம் மக்கள் மொத்த வருமானத்தில் 34 சதவிகிதத்தைப் பெறுகிறார்கள். ஆனால் கீழ்மட்டத்தில் இருக்கிற 10 சதவிகிதம் மக்கள் மொத்த வருமானத்தில் 0.7 சதவிகிதத்தையே பெறுகிறார்கள். நூறுபங்கிலே ஒன்று கூடப் பெறாமல் கீழ் மட்டத்தில் இருக்கின்றவர்கள் 0.7 சதவிகிதத்தையே பெறுகிறார்கள் என்கிற நிலைமையைத்தான் இந்தப் புள்ளிவிவரங்கள் நமக்குக் காட்டுகின்றன. இப்படி இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்த்தாலேயே நமக்குத் திட்டங்களினால் உயர்மட்டத்தில் இருக்கிறவர்கள் பெறுகின்ற சதவிகிதத்தையும் கீழ்மட்டத்தில் இருக்கிறவர்கள் பெறுகின்ற சதவிகிதத்தையும் எடுத்துப் பார்த்தாலேயே இரண்டுக்கும்

உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வை நன்ருக புரிந்து கொள்ள முடியும். இந்த நிலையில் வளர்ச்சி நீடித்துக் கொண்டே போனல் பொருளாதார சமத்துவம் என்பதைப் பெறவே முடியாது போகும். இந்த அடிப்படை வேறுபாட்டை, உயர்மட்டத்திற்கும், கீழ் மட்டத்திற்கும் ஒரேயடியாக இருக்கும் வேறுபாட்டைப் போக்கும் முறையில் திட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் உயர முடியாத நிலையில் இருப்பதைப் போக்கவேண்டும். ஓரளவு விலைவாசி உயர்வுக்கு இது காரணமாக இருக்கலாம் என்ருலும் அரசாங்கத்தினுடைய செயல்முறைகளை இதற்கு அடிப்படைக் காரணம் என்றும் கூடச் சொல்ல முடியும். குறிப்பாக அரசாங்கம் 1951–52-ஆம் ஆண்டில் பொது மக்களிடத்தில் புழங்கவிட்ட பணம் ரூபாய் 1,850 கோடி என்ருல் 1963-ஆம் ஆண்டு கணக்குப்படி பார்த்தால் ரூபாய், 3,406 கோடி புழங்கவிட்டிருக்கிறது. 1951–52-ல் ரூபாய் 1,850 கோடியாக இருந்தது, 1963-இல் 3,406 கோடியாக உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட இது 83 சதவிகிதம்—பணப்புழக்கத்தின் அளவு உயர்ந்திருக்கிறது. பொருள்களினுடைய உற்பத்தியை—விவசாயம், தொழில், மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தாலும் 50 சதவிகிதம் தான். ஆனல் 83 சதவிகிதத்துக்கு மேல் பணப்புழக்கத்தின் அளவு உயர்ந்திருக்கிறது என்ருல் இதுவும் ஓரளவு விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கக்கூடும். அரசினர் நடவடிக்கை எடுத்தால்தான் இதைச் சரிப்படுத்த முடியும். பணப் பெருக்கத்தின் வேகம் தொழில்துறை உற்பத்தி வேகத்தைவிட அதிகமிருந்த காரணத்தால்தான் விலைவாசிகள் ஏறிவிட்டன. "கட்டுப்பாடற்ற பணப்பெருக்கமும், விலைவாசி ஏற்றமும் சமதர்ம நோக்கத்திற்கே முரண்பட்டவைகளாகும்" என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்ருர்கள். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மற்றைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்த அரசினர் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர் என்று கூறலாம். என்ருலும்கூட இந்தத் திட்டத்தைத் தீவிரப் படுத்துவதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினைக்கு வழிவகை காண்பதற்கு முயலவேண்டும்.

இந்த நிலைமைகளையெல்லாம் பார்க்கும்போது பொருளாதாரத் துறை நிபுணர் டாக்டர் நடராசன் அவர்களுடைய கருத்தைத் தான் நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். விவசாயப் பொருள்களுக்குத் தக்கவிலை நிர்ணயிக்கப்பட வேண்டும். பயிர்ச்சேதம், கன்றுகாலி ஆகியவற்றுக்கு இன்ஷுரன்ஸ் திட்டம் கொண்டுவர வேண்டும். மக்களிடையே தொத்துநோய் வரும் போது எப்படி அரசு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறதோ அதேபோன்று பூச்சியினல் பயிர்களுக்கு நோய்கள் வரும் போது அரசாங்கமே தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தக் கருத்துக்களில் அதிக நாட்டம் கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு வழிவகை காண அரசு முன்வர வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st January 1964

விலைவாசியைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துவது, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உணவுப் பொருள்களை விநியோகம் செய்யவேண்டுமென்ற முறையிலும் எடுக்கப்பட்டிருக்கிற முயற்சி பெருமைப்பட வேண்டிய முயற்சிதான். கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கும் கருத்துக்கள் விலைவாசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றியும் உறுப்பினர்கள் பலபேர் குற்றம் குறைகளைத் தெளிவுபட எடுத்துரைத்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் நிர்வாகம் எந்த அளவுக்கு நியாய விலைக் கடைகளின் மூலமும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும் விநியோகிக்கின்ற பொருள்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரவலாகப் போய்ச்சேருகின்றது என்பதைப் பார்க்கும்போது, அதனால் எதிர்பார்த்த அந்தப் பொறுப்பை அரசினரே ஏற்றுக் கொண்டாலொழிய நியாய விலைக் கடைகளினாலும், கூட்டுறவுச் சங்கங்களினாலும் எதிர்பார்த்த பலன் ஏற்பட முடியாமல் போய்விடும். இந்த முறைகள் எல்லாம் இடைக்கால நிவாரணம் அளிக்கத்தக்க முறைகளாகத்தான் இருக்க முடியும்.

கொள்முதல் செய்வதைப்பற்றி உறுப்பினர்கள் பலபேர் தங்கள் தங்கள் கருததுக்களைத் தெளிவுபட கூறியிருக்கிறார்கள். அவ்வாறு கொள்முதல் செய்யும்போதுகூட அரிசியாகக் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக நெல்லாகவே கொள்முதல் செய்வது நல்லது என்ற கருத்தையும் தெளிவுபட கூறியிருக்கிறார்கள். நெல்லாகக் கொள்முதல் செய்வதன் மூலம் கிடங்குகளில் நீண்ட காலத்திற்கு நெல்லைச் சேமித்து வைக்க முடியும். ஆனால் அரிசியாகக் கொள்முதல் செய்து கிடங்குகளில் நீண்ட காலத்திற்கு வைத்திருந்தால் அவை பயன்பட முடியாத அளவு விஷம் கலந்ததாக ஆகி லட்சக் கணக்கான டன் கடல்களில் கொட்டப்பட்ட காலம் முன்பு இருந்தது என்று அறிவோம். அந்த முறையில் அரிசியாகக் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக நெல்லாகக் கொள்முதல் செய்வது நல்லது என்று அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்துவதன் மூலம் நல்ல சூழ்நிலைகளை ஏற்படுத்த முடியும் என்பதையும் கவனிக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில்துறை முன்னேற்றத்தைப் பொறுத்தமட்டில் நிதிநிலை அறிக்கை பற்றிய பொதுவிவாதத்திலே நீண்ட விளக்கங்கள் சொல்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கும் காரணத்தால் அதைப்பற்றி அதிகம் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு கோடி ரூபாய் மூலதனமுள்ள தொழிற்சாலைகளைப் பற்றிக் கணக்கெடுத்துப் பார்த்தால் தென்னகத்தைப் பொருத்தவரை மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதனை அதிகமாக்கும் அளவுக்கு முயற்சிகளை எடுத்து மத்திய அரசினரிடமிருந்து அதிக மானியம் பெறும் முயற்சிகளிலும் அரசினர் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

21st January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இறுதியாக ஒரேஒரு விவரத்தைக் கூற விரும்புகிறேன். நேற்றைய தினம் இந்த மன்றத்தில் அந்த விவரம் எடுத்துத் தெரிவிக்கப்பட்டது. மதுரை உறுப்பினர் கனம் சங்கரன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதுபற்றி உரைக்கப்பட்ட பதில் உண்மைக்குப் புறம்பாக அமைந்திருக்கிறது என்பதைக் கனம் உறுப்பினர் சங்கரன் அவர்கள் மிகத் தெளிவுபட கூறினார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பு இருக்கிற சூழ்நிலைகள் இருந்தால்தான் உறுப்பினர்கள் நாட்டிலே ஒரு காரியத்தைப் பெருமையோடும் பூரிப்போடும் செய்வதற்கான வழிவகைகள் ஏற்படும். இந்த நிகழ்ச்சியை அலட்சியப் போக்குடன் விட்டு விட்டால், அதுவும் அதிகாரிகளுக்குச் சலுகை தருகிற விதத்தில் அந்த அதிகாரிகளுடைய போக்குக்கு நியாயம் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடுமானால் உறுப்பினர்கள் பெருமையோடும் பூரிப்போடும் காரியமாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலேயே அந்தப் பிரச்னையைக் கிளப்பி இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்சினையை மீண்டும் மறு விசாரணைக்குக் கொண்டு வரக் கனம் முதலமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியிலிருந்து நாங்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து, எதிர்க்கின்ற நோக்கத்தோடு கூறிய கருத்துக்கள் என்ற அடிப்படையில் இருந்து இதனை அணுகாமல், சொல்லப்பட்ட கருத்துக்களை—

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு".

"எப்பொரு ளெததன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு".

என்ற அடிப்படையில் கொண்டு, அரசினர் சிந்தித்து ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-46 p.m.

The House then adjourned.

VI—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

75. *Notification issued by the Additional Development Commissioner in his Roc. No. 2389/63—F5, dated 5th October 1963, regarding the extension of the provision of the Madras District Municipalities Act, 1920 and other relevant provisions relating to vital statistics to the Avadi Panchayat in Sriperumbudur taluk of*

[21st January 1964

Chingleput district with effect from 1st December 1963. [*Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).*]

76. *Notification issued with G.O. Ms. No. 2487, Rural Development and Local Administration, dated 23rd November 1963, dissolving Manapparai Panchayat in the Tiruchirappalli district for a period of one year from the 1st Deecmber 1693.* [*Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).*]

77. *Notification issued with G.O. Ms. No. 1586, Public (Services-A), dated 10th October 1963, amending the Madras Public Service Commission Regulation, 1954, relating to the inclusion within the Commission's purview the posts of Headmasters and Teachers in the secondary schools with degree in teaching in the Madras Harijan Welfare Subordinate Service.* [*Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).*]

B. Report, Notifications and other papers.

* 30. *The Motor Vehicles (Madras Amendment) Bill,* 1964 (*L.A. Bill No.* 1 *of* 1964).

* Circulated to members on 18th January 1964.

LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

LIBRARY, ... LEGISLATURE
19 MAY 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 22nd January 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) : in the chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

செகண்டரி படிப்பிற்கான காலம்.

*61 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநில அரசாங்கத்தில் கல்விக் கொள்கைப்படி செகண்டரி கல்வியை முடிக்க 11 ஆண்டுகள் ஆவதாலும் மற்ற மாநிலங்களில் 10 ஆண்டுகள் போதுமானதாக உள்ளதாலும் நமது மாநில மாணவர்களுக்கு மேல்படிப்பு அல்லது உத்தியோகத்தில் சேர வயது எல்லைக்குப் பாதகம் ஏற்படுவதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தேசிய பாணியில் கல்வித் திட்டம் எதுவும் இன்னும் உருவாகவில்லை. இப்போது பற்பல மாநிலங்களில் கல்வித் திட்டம் பற்பல பாணிகளில் உள்ளது. முதல் பட்டப் படிப்புக்காகக் குறைந்தபட்சம் 15 ஆண்டுப் படிப்பு அவசியம் எனக் கருதப்படுகிறது. இதற்கு இந்த மாநிலத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

A national pattern of education has not yet been evolved. At present different States have different patterns of education. A minimum of 15 years of study for the first degree is considered necessary and this has been provided in this State.

திரு. து. ப. அழகமுத்து: நம் மாநிலத்தில் படிக்கும் மாணவர்கள் செகண்டரி கல்வி மட்டும் முடிப்பதாக இருந்தால் மற்ற மாநிலங்களைவிட அதிக ஆண்டுகள் செலவழிக்கவேண்டியிருக்கிறது. அதில் ஏதாவது மாற்றம் செய்ய உத்தேசமுண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மற்ற மாநிலங்களில் எவ்வளவு வருடங்கள் படிக்க வேண்டுமென்பதை மட்டும் வைத்துக்கொண்டு நாம் முடிவு செய்வதற்கில்லை. நாம் நன்கு ஆராய்ந்து கல்வி நிபுணர்களையும் மற்றவர்களையும் கலந்து ஆலோசித்து கீழ் வகுப்பிலிருந்து செகண்டரி படிப்பு முடிகிற வரையில் 11 ஆண்டுகள் படிக்க வேண்டுமென்று இப்போது முடிவு செய்திருக்கிறோம். இது அவசியமானது. மற்ற மாநிலங்களும் அநேகமாக இந்தப் பாணிக்கு வந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

புலவர் கா. கோவிந்தன்: இந்தியா பூராவும் ஒரே சீரான கல்வி பரவ வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறபோது நம் மாநிலத்தில் மட்டும் மாணவர்கள் பள்ளி இறுதித் தேர்வை ஒரு ஆண்டு கழித்து முடிக்கவேண்டியிருப்ப

19 MAY 1964

[22nd January 1964

தால் உத்தியோகத்திற்குச் செல்லும்போது அவர்கள் பாதிக்கப் பட மாட்டார்களா? இதற்கு உடனடியாக ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தியா பூராவிலும் ஒரே மாதிரியாக படிக்கவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. கூடியவரை ஒரேமாதிரியாக இருக்கவேண்டுமென்பதுதான் அபிப்பிராயம். இப்போது நாம் அமைத்திருக்கிற அமைப்பு சிறந்த அமைப்பு என்று வேறு மாநிலங்களில் கருதப்பட்டு வருகிறது. போதிய படிப்பு பெறவேண்டும். உத்தியோகம் பெரிதல்ல. அதற்குத் தகுதி வேண்டும். இது குறைந்தபட்ச படிப்பு என்று கருதப்படுகிறது. இதனுல் ஒரு வயது கூடுதலாகி விடும் என்று எண்ணுவது சரியல்ல. மேல் நாடுகளில் பல்கலைக் கழகத்திற்கு போவதற்கு முன்பு இன்னும் அதிக வயது ஆக வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிருர்கள்.

திரு. செ. மாதவன் : இந்தியா முழுமையும் ஒரேமாதிரி கல்வித் திட்டம் இருக்கவேண்டுமென்று மத்திய அரசாங்க கல்வி அமைச்சர் நம் அரசாங்கத்திற்கு ஏதாவது யோசனை தெரிவித் தார்களா ? அதை நம் அரசாங்கம் ஏற்றுக் கொள்ண்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியது தவிர வேறு சொல்வதற்கு இல்லை. ஒரேமாதிரி என்று "ஸ்ட்ரெஸ்" செய்யவேண்டியதில்லை. கூடிய வரையில் ஒரு வகையான கல்வித் திட்டம் வேண்டுமென்று, அது எல்லோருக்கும் நன்மை தர வேண்டுமென்பதுதான் அவர்கள் திட்டம். அதைத்தான் அவர் கள் சொல்லுகிருர்கள். கூடியவரை ஒரேமாதிரியாக இருப்பதற் குத்தான் முயற்சிக்கவேண்டுமேதவிர ஒவ்வொன்றிலும் ஒரே மாதிரி இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. அது சிறந்த கல்வித் திட்டமாகாது.

திரு. ஜே. மாதா கவுடர் : நம் மாநிலத்தில் 11 வருடங்கள் என்று வைத்து மற்ற மாநிலங்களில் பத்து வருடங்கள் என்று இருந்தால் அங்குள்ள மாணவர்கள் பத்து வருடங்கள் படித்து விட்டு நம் கல்லூரிகளுக்கு வந்தால் அவர்களுக்கு இடம் கொடுக்க அனுமதிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது அந்தந்த பல்கலைக்கழகம் யோசித்து, பரிசிலனை செய்து முடிவு செய்யவேண்டிய விஷயம். கல்வி இலாகாவும் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

திரு. து. ப. அழகமுத்து : மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பத்து ஆண்டுகள் என்று வைத்து இங்கு 11 ஆண்டுகள் என்று வைக்கும்போது மத்திய அரசாங்க உத்தியோகத்தில் சேரும் போது அது நம் மாநில மாணவர்களுக்கு பாதகமாக அமையாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒருவித பாதகமும் நம் மாநில மாணவர்களுக்கு ஏற்படாது.

புலவர் கா. கோவிந்தன் : கல்வித் தரம் உயரவேண்டுமென்பது மிகவும் ஒத்த கருத்துத்தான். கல்லூரியில் சேருவதற்கு முன்பு இன்னும் ஒரு ஆண்டு கூட்டினுல் தேவலை என்ற கருத்தையும்

22nd January 1964]

ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் மத்திய அரசாங்க உத்தியோகத்திற்கு போகிறபோது நம் மாணவர்கள் ஒரு ஆண்டு பின் தங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நம் மாநிலம் பொறுத்தவரை முதலில் பள்ளியில் 5 வயதில் சேருகிறார்கள். பதினொன்று ஆண்டு கள் என்று சொல்லும்போது 16 வயதுதான் பூர்த்தி ஆகிறது. அதற்கு முன்பே உத்தியோகத்தை எதிர்பார்த்தால் அது சரி அல்ல.

திரு. செ. மாதவன்: இந்தியா முழுமையிலும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இந்தியை கட்டாய பாடமாக்க வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் நம் அரசாங்கத்திற்கு யோசனை கூறி யிருக்கிறார்களா? அதுபற்றி நம் அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த அரசாங்கத்திற்கு இப் போது ஒன்றும் யோசனை வரவில்லை. பின்னால் கவர்னர் உரை மீதுள்ள விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது இதுபற்றி மேலும் குறிப்பிடுகிறேன்.

காந்தி கிராமத்திற்கு இந்தியப் பிரதமர் வருகை.

*62 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தியப் பிரதமர் உயர்திரு ஜவஹர்லால் நேரு அவர்கள் 1963 டிசம்பர் மாதம் காந்தி கிராமத்திற்கு வந்ததையொட்டி மாநில அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The information asked for is not readily available. The time and labour involved in gathering the details for answering the question will not be commensurate with the public interest sought to be served.

திரு. செ. மாதவன்: பண்டித நேரு அவர்களின் உடல்நிலை பற்றி பலவித வதந்திகள் நாட்டில் உலாவிவருவதால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் அதுபற்றி இங்கு ஒரு அறிக்கை வைக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நேற்றுகூட நம் பிரதம மந்திரி அவர்களின் புதல்வியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அவர்கள் சுகமாக இருக்கிறார்கள், நல்ல அபிவிருத்தி ஏற்பட் டிருக்கிறது என்று வந்திருக்கிறது. அதை மகிழ்ச்சியுடன் நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களுக்கு அரிசி விற்பனை.

*63 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அரிசி விற்பனைக்காக மார்க்கெட் தேடும் பொருட்டு அண்டை மாநிலங்களுக்கு அரசாங்கம் அதிகாரியொருவரை அனுப்பியது உண்மையா?

[22nd January 1964

(இ) எவ்வளவு அரிசி உபரியாக விற்பனைக்கு உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) It is anticipated that at the end of the third plan period, Madras will have surplus rice which may have to be exported to other States. It has been considered desirable to have a survey made of the possibilities of marketing the rice grown in this State and also to find out whether there are any special varieties for which preference may be shown by people in the neighbouring States which can be grown in this State. The Government have accordingly sanctioned the deputation of one Assistant Marketing Officer to visit Kerala, Madhya Pradesh and Maharashtra States for a period of 3 months to make a study of the problem.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை: தலைவர் அவர்களே, நமது மாகாணத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு அரிசி இப்பொழுது வருகின்றது. என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த புள்ளி விவரம் இப்போது என்னிடமில்லை. இப்போதுள்ள கேள்வி நம் மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலங்களுக்கு உபரியாக இருப்பதை விற்பதைப் பற்றியதுதான்.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை: தலைவர் அவர்களே, இப்போது நம் மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு அரிசி அனுப்பப்படுகிறதே, அதன் அளவு என்ன என்பதை தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கான புள்ளிவிவரம் இப்போது என்னிடமில்லை. இரண்டு மூன்று லட்சம் டன் அனுப்பப்படுவதாகத் தெரிகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறும்போது நமக்கு ஐந்து லட்சம் டன் அரிசி உபரியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்போது நாம் வெளி மாகாணத்திற்கு அனுப்ப வேண்டியதை அதிகமாக்குவதைப்பற்றி நடவடிக்கை எடுத்தாக வேண்டியிருக்கும்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, அரிசி நம்முடைய மாநிலத்திற்கு, வேற்று மாகாணங்களிலிருந்து வரவேண்டிய நிலைமை இருக்கும்போது, இப்போது நம்முடைய மாநிலத்திலிருந்து வேற்று மாநிலங்களுக்கு அனுப்பவேண்டியதன் அவசியம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நம்முடைய மாநிலத்தில் நெல்லூர் அரிசி அதிகமாக வேண்டும் என்று கோருகிறார்கள். அது வெளியில் இருந்து வரவேண்டியிருக்கிறது. அதேபோன்று நாம் உற்பத்தி செய்யும் அரிசியை கேரளாவில் விரும்புகிறார்கள். ஆகவே அதை நாம் அவர்களுக்கு அனுப்புகிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், நம்முடைய ராஜ்யத்திலிருந்து கேரளாவுக்கு போகக்கூடிய அரிசி, தொன்றுதொட்டு இருந்து கொண்டு வருகிறது. நம்முடைய விவசாய முறை

22nd January 1964]

இப்போது இருப்பதுபோல் இருக்கும்வரை இப்படித்தான் அனுப்பிக்கொண்டிருக்க வேண்டியிருக்கும். நம்முடைய ராஜ்யத்தில் உபரியாகிவிட்டது என்ற காரணத்தினுல் வெளியே அனுப்புவதாக அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். அப்படியானுல் நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று அர்த்தமா, அப்படியானுல் ஏன் தான்யங்களின் விலே குறையவில்லே? அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போதுள்ள உற்பத்தியும் போதாதுதான். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறும் போது ஐந்து லட்சம் டன் உபரியாக இருக்கும் என்று நான் சொன்னேன். இப்போது வேண்டிய அளவுக்கு உற்பத்தியாக வில்லே. இதைப்பற்றி நான் பதிலளிக்கும்போது விரிவாக சொல்லுகின்றேன். இப்போதுள்ள உற்பத்தியும் போதாது. உற்பத்தியை அதிகமாக பெருக்கிஞல்தான் தான்யங்களின் விலே நிரந்தரமாக நிற்க முடியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலேவர் அவர்களே, கேரளாவுக்கு அனுப்பப்படும் அரிசி பண்டமாற்று முறையிலா அல்லது பண்டமாற்று முறையிலா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சாதாரண வியாபார முறையில் தான் விற்கப்படுகிறது.

Vigilance Commission for the State

* 64 Q.—Sri P. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether the State Government propose to set up a Vigilance Commission as done by the Central Government?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The matter is under the consideration of the Government.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்தக் கமிஷனுடைய அமைப்பு எப்படியிருக்கும், இதனுடைய அலுவல்கள் எப்படியிருக்கும், இதைப்பற்றி அரசாங்கத்தின் ஆலோசனேகள் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இவையெல்லாம் அரசாங்கத்தின் ஆலோசனேயில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆலோசனேயில் என்ன இருக்கிறது என்பதையாவது சொல்லமுடியாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய அரசாங்கம் இதற்கென்று ஒரு குழு அமைப்பதாக முடிவு செய்திருக்கிறது. அதே மாதிரி ஒரு குழுவை இங்கே ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிதான் அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இதுபற்றி மத்திய அரசாங்கத்திலிருந்து வந்திருக்கக்கூடிய ஆலோசனைகள் என்ன என்பதை கூற முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: குறிப்பிட்ட ஆலோசனைகள் ஒன்றும் இல்லை. பொதுவாக ல்ஞ்சத்தை அடியோடு ஒழிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு இயந்திரத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் யோசனே.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் விழிப்புக்குழு எடுக்கும் நடவடிக்கை நம்முடைய மாநிலத்தைக் கட்டுப்படுத்துமா? அல்லது மத்திய அரசாங்க அலுவலர்களை மட்டும்தான் கட்டுப்படுத்துமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் விஜிலன்ஸ் குழு மத்திய அரசாங்க அதிகாரிகளைத்தான் கட்டுப்படுத்தும். மத்திய அரசாங்க அலுவலகங்களில் ஏற்படுகின்ற லஞ்சத்தை ஒழிப்பதற்கு இந்தக் குழு கவனம் செலுத்தும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், லஞ்சத்தை அடியோடு ஒழிப்பதற்காக இந்தக் குழு அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். (குறுக்கீடு). இல்லையென்றால், இன்னும் லஞ்சம் இருந்து கொண்டிருக்கும் என்றுதான் அர்த்தமாகிறது. அது அப்புறம் இருக்கட்டும். இப்போது எந்தவகையான லஞ்சத்தை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்? உத்தியோகஸ்தர்களின்மீது மட்டும்தான் நடவடிக்கை எடுக்கப்படுமா, உத்தியோகப் பற்றில்லாதவர்கள்மீது சாட்டப்படும் லஞ்சத்தை தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பதாக உத்தேசம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: லஞ்சத்தை அடியோடு ஒழித்து விடலாம் என்று நான் சபதம் செய்ய முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் அதற்கான வழிகளைச் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளலாம். லஞ்சம் எங்கு இருந்தாலும், அதற்கான காரணங்களை கண்டுபிடித்து, அவைகளை அகற்றுகின்ற முறையில் இதற்கான வேர் எங்கிருக்கிறது என்று பார்த்து, அந்த வேரையே அடியோடு அகற்றுவதற்கு இந்த இயந்திரம் கவனம் செலுத்தும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்த கமிஷனுடைய அலுவல் லஞ்சத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது மட்டும்தானா அல்லது லஞ்சம் வாங்கியவர்களுக்கு தண்டனை கொடுக்கக்கூடிய வகையில் இந்தக் கமிஷனுக்கு அதிகாரங்கள் இருக்குமா? அப்படியென்றால் என்னென்ன அதிகாரங்கள் இருக்கும் என்பதை அறிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: லஞ்சம் ஏற்பட்டால் அதை தடுப்பதற்கும் அதற்கு காரணமாய் இருக்கிறவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதுபோன்ற வகையில் கவனம் செலுத்தப்பட்டு சீரிய முறையில் ஒரு குழு அமைக்க வேண்டும் என்றுதான் அரசாங்கத்தின் ஆலோசனே.

22nd January 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: மத்திய உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்கள் லஞ்சத்தை ஒழிக்கவேண்டுமென்றால், அதற்குரிய 'கிளைமேட்'-டை ஏற்படுத்தினால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் நமது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திருஷ்டாந்தமாக சொல்ல வேண்டுமென்றால், 'கிளைமேட்' என்பது நிர்வாகத்தில் காலதாமதம் ஏற்படக்கூடாது, யாராக இருந்தாலும் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது, தலையிடுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது, இவைகளை நான் திருஷ்டாந்தமாகச் சொல்லுகிறேன். இதைப்பற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன்: லஞ்சத்தை ஒழிப்பதற்காக ஒரு புதிய அமைப்பை அரசாங்கம் கொண்டுவரப்போவதாகத் தெரிகிறது. அப்படியென்றால் இப்போது லஞ்சத்தை தடுப்பதற்கு எந்தவிதமான அமைப்பும் இல்லையா? அப்படியிருக்கிறது என்றால் அது நல்ல முறையில் செயல்பட முடியவில்லையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பு அளித்த பதிலை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். லஞ்சத்தை தடுப்பதற்காக ஒரு இயந்திரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் யோசனை. லஞ்சத்தை அகற்றுகின்ற முறையில், அதனுடைய வேரைக் கண்டு பிடித்து வேரையே அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். லஞ்சத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த நோக்கத்துடன் தான் இதை ஒரு சிறந்த இயந்திரமாக அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து: இந்தக் குழு அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த பரிசீலனை எப்போது முடிவுக்கு வரும், இந்தக் குழு எப்போது அமைக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கூடிய சீக்கிரத்தில் இதைப் பற்றி, தற்காலிகமாக இந்த இயந்திரம் நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காக வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மேல்நாடுகளில் இருப்பது போன்று "ஆம்பட்ஸ்மேன்" அமைப்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மேல் நாடுகளில் இருப்பதை எல்லாம் நாம் காப்பி அடிக்கவேண்டும் என்கிற அவசியமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்துக்கள் போன்ற ஸ்தலஸ்தாபனங்களும் இந்த கமிஷனின் அதிகாரத்தின்கீழ் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது நாம் அமைக்கப்படவிருக்கும் இயந்திரம் எங்கெல்லாம் லஞ்சம் இருக்கிறதோ அதையெல்லாம் தடுப்பதற்குரிய அதிகாரத்தோடுதான் அமைக்கப்படும்.

[22nd January 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், லஞ்சத்திற்கான காரணங்கள் என்னென்ன என்பதைப்பற்றி ஆராய்ந்தறிய தனியாக ஒரு நிபுணர் கமிட்டியை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது அவ்வாறு உத்தேசமில்லை. இப்போது அமைக்கப்படும் இயந்திரம் இதைப் பற்றியெல்லாம் கவனிக்கும்.

பொறியியல் கல்லூரிகளில் மாணக்கரைச் சேர்த்தல்

* 65 கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ம் ஆண்டில் நம் மாநிலத்தில் அரசாங்க என்ஜினீரிங் கல்லூரிகளில் சேருவதற்கு எத்தனை மாணவர்கள் மனு போட்டார்கள்?

(இ) எத்தனை பேர் தேர்தெடுக்கப்பட்டார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The selection of candidates for the two Government Engineering Colleges (at Guindy and Coimbatore) as well as for the private Engineering Colleges affiliated to the Madras University is made by a Common Selection Committee. As such students can apply only for admission to Engineering Colleges in the common pool indicating their choice of the College in the order of preference. The number of students who applied for admission during 1963-64 was 3,302, but only 2,681 students were eligible for consideration.

(b) Out of the 1,100 students selected for admission in the Engineering Colleges in the State, 420 were allotted for admission to the Government Engineering Colleges and 680 to the private Engineering Colleges.

Selection of students from Chingleput district for Engineering Studies

* 66 Q.—SRI A. RAGHAVA REDDI: Will the Hon. the Minister for Industries be pleased to place on the Table of the House the names and addresses of students selected for Chingleput district for admission into B.E. Course and the grades of marks obtained by them in Part III in P.U.C.?

THE HON. SRI R. VENKATARAMAN: Sixty-one students were selected for admission into the first year of the five year Integrated Course in Engineering for the year 1963-64 from the Chingleput district. Of them, 3 belonged to Scheduled Castes and Tribes, 16 to Backward Classes and the remaining 42 to other communities.

A statement is placed on the Table of the House indicating the grades obtained by the selected candidates. Names and addresses of the students have not been furnished as it will not be in public interests.

22nd January 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து 61 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்ன போதிலும்கூட, இந்த 61 பேர்களும் பெயரளவில் தான் செங்கல்பட்டைச் சேர்ந்தவர்கள், அநேகமாக பலர் சென்னை நகரத்தில் இருக்கிறவர்கள்கூடச் சேர்ந்திருக்கிறார்கள் என்றும் அதனால் செங்கல்பட்டைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அநேக கனம் அங்கத்தினர்கள் அபிப்பிராயப் படுகிறார்களே அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்கு விதிகள் இருக்கின்றன. நேட்டிவிட்டி சர்ட்டிஃபிகேட் வாங்கி அந்த இடத்தில் அவர்கள் அப்ளை செய்ய முடியும். எந்தெந்த இடத்தில் நேட்டிவிட்டி சர்ட்டிஃபிகேட் கொடுக்க முடியுமோ அதை தாசில்தார்கள், ரெவின்யூ அதிகாரிகள் பரிசீலனை செய்து கொடுக்கிறார்கள். அந்த மாதிரி நேட்டிவிட்டி சர்ட்டிஃபிகேட் வாங்கி அந்தத் தகுதியுள்ளவர்கள்தான் அப்ளை செய்ய முடியும். அவ்வாறு அப்ளை செய்தவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், மாணாக்கர்கள் டெக்னிக்கல் கோர்ஸ் படிப்பதில் தான் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அந்த முறையில் லெதர் டெக்னாலஜி கோர்ஸ் படித்து, ஐ.எல்.டி. டிப்ளோமோ வாங்கியவர்கள் வேலை இல்லாமல் திண்டாடுகிறார்களே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது வேறு கேள்வி—அட்மிஷன் பற்றியது இது.

திரு. அ. ராகவ ரெட்டி: அந்தந்த ஜில்லா வாசிகளுக்குக் கொடுக்கப்படும் சர்ட்டிஃபிகேட் எந்த ஆதாரத்தின் பேரில் கொடுக்கப்படுகிறது. சர்ட்டிஃபிகேட் வாங்குகிறவர்கள் அந்த கிராமத்தில் ஏதாவது வீடோ அல்லது பட்டா நிலமோ வைத்திருக்கவேண்டும் என்று இருக்கிறதா? அல்லது அவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா? எந்த ஆதாரத்தின் பேரில் சர்ட்டிஃபிகேட் கொடுக்கப்படுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த ஜில்லாவில் நிலம் இருக்கவேண்டும். அல்லது பெற்றோர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு அங்கே வசித்திருக்கவேண்டும் என்று குறிப்பிட்ட விதிகள் இருக்கின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இதர மாவட்டங்களில் இருந்தும் எவ்வளவு பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சரிடத்தில் புள்ளி விவரம் இருக்கிறதா? திருச்சி ஜில்லாவிலிருந்து எத்தனை பேர்கள், தஞ்சை ஜில்லாவிலிருந்து எத்தனை பேர், வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து எத்தனை பேர்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

a Printed as Appendix on page 101–109

[22nd January 1964

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், என்ஜினீரிங் காலேஜ் மாணவர்கள் அதிகமாகப் படிக்க ஆவல் கொண்டிருக்கும் காரணத்தினுல், நமக்கு இருக்கும் காலேஜுகளில் குறைந்த சீட்டுகள் இருப்பதால், மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் மற்ருெரு என்ஜினீரிங் காலேஜ் திறக்க அல்லது இருக்கின்ற என்ஜினீரிங் காலேஜுகளில் சீட்டுகளை அதிகப்படுத்த அரசாங்கம் ஆலோசனை செய்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1964-65ல் ரீஜனல் என்ஜினீரிங் காலேஜ் திருச்சியில் ஆரம்பிக்க முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதை தவிர இன்ஞெரு காலேஜ் ஆரம்பிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிருேம்.

திரு. அ. ராகவ ரெட்டி : ஸார், என்ஜினீரிங் காலேஜ்களில் படிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஜாபிதாவை விலாசங்களுடன் சபைமுன் வைப்பதில் என்ன பப்ளிக் இண்ட்ரெஸ்ட் இருக்கிறது. அது வெளிப்படையாக போர்டில் போட்டது தானே, அதில் என்ன ரகசியம் இருக்கிறது. சட்ட சபை முன் ஏன் வைக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த ஜாபிதா மாணவர்களுக்கு போட்டு அனுப்பியாகி விட்டது. இப்போது சட்ட சபையில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், திருச்சியில் தொடங்கவிருக்கும் ரீஜினல் என்ஜினீரிங் காலேஜ் நமது ராஜ்யத்திற்கென எத்தனை ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of the fact that many of the students from the Madras City have got admission in the name of the Chingleput district, will the Government issue necessary instructions to the officials of the Revenue Department to see that such things do not occur again and that only students coming from the Chingleput district are given nativity certificate for admission to the B.E. Course?

THE HON. SRI R. VENKATARAMAN : If the students are eligible under the rules relating to the nativity of the district, I do not know how they can be prevented. We have got rules now with regard to, who should apply from which district and what are the grounds on which nativity certificate should be given. As long as they satisfy the rules, nothing can be done.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்த விதிகளில் என்ன குறைபாடுகள் இருக்கின்றன ? எதைப் பயன்படுத்திக்கொண்டு இப்படி சர்ட்டிஃபிகேட் வாங்க முடிகிறது என்ருவது அரசாங்கம் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விதிகளில் குறைபாடு இல்லை.

[22nd January 1964

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், என்ஜினீரிங் காலேஜுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பௌதிகத்தில் ஸி ப்ளஸுக்கு மேல் எடுத்தால் தான் கவனிக்கப்படும் என்று கமிட்டியார் சொல்லுகிறார்களே, ஸி எடுத்தவர்களுடைய விண்ணப்பத்தை பரிசீலிக்கக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தகுதியுள்ள மாணவர்களைத் தேர்தெடுக்கவேண்டும் என்பதற்காக குறைந்த பட்சம் இந்த மார்க்காவது வாங்க வேண்டும் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த பற்றுக்குறையைப் போக்க இன்னொரு கல்லூரி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். சேலத்தில் ஒரு கல்லூரி நிறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதே: அது 1964-65-ல் ஆரம்பிக்கப்படுமா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: 1964-65-ல் ஆரம்பிக்க இயலாது.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார் புதிதாக ஆரம்பிக்கக் கூடிய எல்லா கல்லூரிகளும் 'எக்ஸெப்ட் நீல்கிரிஸ்' என்று இருக்கிறது. நீலகிரியில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. புதிதாக இந்தக் கல்லூரியை நீலகிரியில் வைக்க அரசாங்கம் முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒவ்வொரு ஜில்லாவைப் பற்றியும் இந்த மாதிரி கேள்வி போட்டுக்கொண்டே இருக்கலாம். எப்படி நிதி இருக்கிறதோ, என்ன வசதி இருக்கிறதோ எல்லாவற்றையும் பார்த்துத் தான் செய்ய முடியும்.

புலவர் கா. கோவிந்தன்: நேட்டிவிட்டி சர்ட்டிஃபிகேட் கொடுக்கும் நிலையில் ரெவின்யூ டிபார்ட்மெண்ட் கொடுக்கும் காரணத்தினால் இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படுகிற காரணத்தினால், தொகுதி சட்ட சபை உறுப்பினர்களும், அந்தப் பகுதியில் இருக்கிற பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் தான் இந்த நேட்டிவிட்டி சர்ட்டிஃபிகேட் கொடுக்கும் நிலையையாவது ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதனால் சட்ட சபை மெம்பர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் அதிகத் தொல்லை ஏற்படும் என்று நினைக்கிறேன். தேர்தலில் நின்று ஓட்டு வாங்குகிறவர்களிடத்தில் அவர்கள் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொல்ல முடியாது. அதனால் தவறுகள் அதிகமாகப் போய் விடுமோ என்று அபிப்பிராயப் படுகிறேன்.

[22nd January 1964

திரு. எம். தண்டாயுதபாணி: தனியார் நடத்துகிற என்ஜினீரிங் கல்லூரிகளில், தனியாருக்கு மார்க் குறைவாக இருந்தாலும் குறிப்பிட்ட சதவித சீட்டுகள் ஒதுக்கப்படுகின்றன என்று கூறப் படுகிறதே அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்கள் 15 சதவீதம் தங்கள் இஷ்டப்படி சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் நாங்கள் என்ன குறைந்த மார்க் ப்ரிஸ்க்ரைப் செய்திருக்கிறோமோ அதற்குக் குறைவாக யாரையும் சேர்க்கக் கூடாது.

திரு. அ. ராகவ ரெட்டி: செலக்ஷன் சரியாக நடக்கவில்லை என்று அரசாங்கத்திற்கு ஏதாவது மனு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி வந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: செலெக்ஷன் ஆகாதவர்களெல்லாம் அந்த மாதிரி புகார் சொல்லிக்கொண்டேதான் இருப்பார்கள்.

புலவர் கா. கோவிந்தன்: இப்போது அமைச்சர் அவர்கள் தொகுதியில் இருக்கிறவர்கள் கேட்டால் கொடுக்காமல் இருக்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால் தொகுதியைச் சேராதவர்கள் கேட்டால் கொடுக்க மாட்டார்கள். அதைத் தடுக்க வேண்டியாவது இப்போது நடக்கும் இந்த நிலையை அரசாங்கம் எண்ணிப்பார்த்து அதை மாற்ற ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்படி செய்யலாம் என்று அங்கத்தினர் நினைக்கலாம். ஆனால், சர்க்கார் எண்ணம் தகுதியுள்ளவர்களுக்குக் கிடைக்கவேண்டும். அதை நிர்ணயம் செய்கிற பொறுப்பு சங்கடமான பொறுப்பு. அதை நிர்வாக அதிகாரிகள் தான் செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: சேலத்தில் 1964-65-ல் பொறியியல் கல்லூரி நிறுவப்படாது என்று சொன்னார்கள். அது எப்போது நிறுவப்படும்? சென்ற பட்ஜெட் உரையிலேயே நிறுவப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததே அது என்னவாயிற்று?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மூன்றாவது திட்டத்திற்குள் நிறுவப்படும்.

திரு. நா. சௌந்திரபாண்டியன்: திருநெல்வேலியில் ஆரம்பிப்
9-00 a.m. பதாக இருந்த என்ஜினியரிங் கல்லூரி எந்த நிலைமையில் இருக்கிறது? அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இங்கே தனியார் என்ஜினியரிங் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. அது பற்றி எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

22nd January 1964]

நிலக்கோட்டையில் தொழிற்பேட்டை

*67 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, நிலக்கோட்டையில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிலக்கோட்டையில் தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பிக்கும்படி மனு கிடைத்திருக் கிறது. அது குறித்து இன்னும் எந்த முடிவுக்கும் வரவில்லை.

மாவட்ட லஞ்ச ஒழிப்பு போர்டுகள்.

*68 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில்ளிப் பாரா—

அதிகார சார்பற்ற லஞ்ச ஒழிப்பு போர்டுகளை மாவட்ட வாரியாக நிறுவும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No. Sir.

திரு. இராம. அரங்கண்ணல்: லஞ்ச ஒழிப்பு சம்பந்தமாக நம்முடைய அரசு மேற்கொள்ள இருக்கிற நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பே பல உப கேள்வி களுக்கு விடை அளித்தேன். அப்பொழுது கனம் அங்கத் தினர் இங்கே இல்லை. இந்த இயந்திரத்தை மாற்றி அமைப்பது, எல்லா வகையிலும் லஞ்சத்தை அகற்றுவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளக்கூடும் என்பதற்கு இப்பொழுது எத்தகைய இயந்திரத்தை அமைப்பது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மா. இ. ராசாங்கம்: லஞ்சத் தொடர்புகளைக் கண்டு துப்பு சொல்கிற ஆர்வத்தை மக்களிடையே தூண்டுவதற்கு, துப்பு சொல்பவர்களுக்கு அரசு தக்க சன்மானம் தர முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: துப்பு சொல்லுவது எப் பொழுதும் உண்டு. ஆனால், சில சமயங்களில் அது தவறுத லாகக்கூட பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது . . .

கனம் சபாநாயகர்: அதற்கு லஞ்சம் கொடுக்கக்கூடாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதன் காரணமாக ஜாக் கிரதையாகவும் இருக்கவேண்டும்.

Corruption cases

*69 Q.—SRI N. P. SENGOTTUVELU: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of cases of corruption reported during 1st January 1963 till the end of June 1963;

[22nd January 1964

(*b*) the action taken against them; and

(*c*) how many of them were dismissed from service?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Fifty-four (54);

(*b*) & (*c*) Out of the 54 cases referred to in (*a*) above—

(i) disciplinary action has already been initiated in 28 cases but final orders have not yet been issued;

(ii) In 10 cases final orders have been issued; One was dismissed from service; two persons were let off with severe warning and seven cases were dropped as the charges were not proved.

(iii) Sixteen cases are still under enquiry.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: அப்படி தள்ளப்பட்ட மனுக்கள் என்ன காரணத்தைக் கொண்டு தள்ளப்பட்டன என்பதை அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சரியான ருசு இல்லை யென்றால் மனு தள்ளப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: லஞ்சம் வாங்குபவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார். லஞ்சம் கொடுக்க முயற்சிப் பவர்கள் மீது இது வரையில் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. அ. துரையரசன்: லஞ்ச ஒழிப்புக்காக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்படுகிற அதிகாரிகள் லஞ்சம் வாங்கு வதாக அரசினருக்கு ஏதாவது புகார்கள் வந்தனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விசாரணை நடத்தும் அதிகாரிகள் என்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். நீதிபதிகள் இப்பொழுது விசாரணை நடத்துகிறார்கள். அவர்கள் மீது அவ்வாறு சொல்லுவது முற்றிலும் தவறு.

திரு. அ. துரையரசன்: நான் குறிப்பிட்டது நீதிபதிகளை அல்ல. ஒரு இலாகாவிலே ஒரு சிப்பந்தி லஞ்சம் வாங்குகிறார் என்று சொல்லி பொது மக்கள் விண்ணப்பத்தை மேல் அதிகாரி களுக்கு அனுப்பித்தால், சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகள் விசா ரணைக்கு வருகிறார்கள். அவர்கள் மீது அப்படி புகார்கள் வந்திருக்கின்றனவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி ஒரு புகாரும் கிடையாது.

22nd January 1964]

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: என்னுடைய தொகுதி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி ஒருவர் மீது லஞ்சப் புகார் அனுப்பப்பட்டது. அதே துறையில் மேலதிகாரிகள் விசாரித்தார்கள். அது அவருக்குச் சாதகமாக குற்றம் ருசுப்பிக்கப் படவில்லை என்று சொல்லி தள்ளப்பட்டுவிட்டது. இனி மேலாவது வேறு துறையில் உள்ளவர்களை அந்த மாதிரி லஞ்சப் புகார்களை விசாரிக்க நியமிப்பதற்கு அரசாங்கதிற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எத்தகைய புகார் வந்தாலும் அதற்கு ருசு வேண்டும். சில சமயங்களில் யோக்கியமாக உள்ள அதிகாரிகள் மீதுகூட புகார் செய்யப்படுகிறது, தங்களுக்கு வேண்டியதைச் செய்யவில்லை என்றால். இது முறையாக விசாரிக்கப்படுகிறது. முதலில் அந்த இலாகாவில் விசாரிக்கப்படுகிறார்கள். அதற்குப் பிறகு போலீஸார் விசாரிக்கிறார்கள். ருசு இருந்தாலன்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. ஜே. மாதா கவுடர்: எந்த இலாகாவில் அதிகமாக லஞ்சப் புகார்கள் வந்திருக்கின்றன என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம் பக்தவத்சலம்: அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிற காரணத்தினால் அதிகாரிகள் லஞ்சம் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று கூறப்படுவதால், அவர்களுடைய சம்பளத்தை அதிகமாக உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: குறைந்த சம்பளம் வாங்குவதால் மட்டும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. அதிகச் சம்பளம் வாங்குகிறவர்களில் ஓரிருவர் லஞ்சம் வாங்குகிதை நாம் பார்க்கிறோம். ஆகவே, லஞ்சத்தை அகற்றுவதற்கென்று சம்பளத்தை உயர்த்த முடியாது.

திரு. இராம. அரங்கண்ணல்: சில ஐரோப்பிய நாடுகளில் இருப்பது போன்று 'ஓம்பட்ஸ்மென்' ஏற்படுத்துகிற உத்தேசம் நம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பே விடை அளித்திருக்கிறேன். ஐரோப்பிய நாடுகளில் இருப்பதைப் பார்த்து நாம் அப்படியே காப்பி அடிக்கவேண்டியதில்லை. நாம் என்ன செய்யவேண்டுமென்று பரிசீலனை செய்து, மற்ற நாடுகளில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதையும் மனதில் கொண்டு, நாம் ஒரு முறை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

[22nd January 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: லஞ்சத் தடுப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக தனியாக ஒரு போலீஸ் பிரிவு இருந்தும்கூட, சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து புகார் வந்தால் தான், விசாரணை செய்யலாம் என்பதை மாற்றி, அவர்கள் தாங்களாகவே புகார் வந்தால் விசாரிக்கலாம் என்று விதிகள் பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த இயந்திரத்தை மாற்றி அமைக்கும்பொழுது, இன்னும் பெரிய உத்தியோகஸ்தர்களை அதில் போட்டு, கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகிற யோசனையையும் ஏற்றுக்கொள்ளலாம் என்பதுதான் இப்பொழுது அரசாங்கத்தின் யோசனை.

திரு. ம. கமலநாதன்: அதிகாரிகள் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவது லஞ்சம் கொடுப்பதாக கருதப்படுவது உண்மையா ? அப்படியிருந்தால் அதற்கு விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மதிப்புள்ள பொருள்களை அன்பளிப்பாக பெறக்கூடாது என்பது தான் சாதாரணமாக அனுசரிக்கப்படுகிற விதி. அதிகாரிகளில் பல பேர்கள் கூட, அதிகாரிகள் மட்டுமல்ல, மற்றவர்களும் கூட அன்பளிப்பு வேண்டாம் என்று பத்திரிகையிலே போட்டுவிடுகிறார்கள். போட்டுவிட்டால் அதை அப்படியே அனுசரிக்கவேண்டும். அப்படி ஏதாவது தவறுதல் நடந்தால் அதன் மீது விசாரணை நடத்தப்படுகிறது.

திரு. எம். எஸ். மணி: லஞ்ச ஊழலைக் கண்டுபிடித்து தகவல் தருகிற பொது நல ஊழியர்களை சில அதிகாரிகள் காட்டிக்கொடுத்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஊழியர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு தருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொதுநல ஊழியர்கள் உண்மையிலேயே லஞ்சத்தைக் கண்டுபிடிப்பதற்கு உதவி அளிக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கத்தான் வேண்டும். அதுபற்றி கவனம் செலுத்தப்படும். சில சமயங்களில் நமக்கு ஏதோ சலுகைகள் இருக்கின்றன என்று தவறுதலாகக் கூட தகவல்கள் கொடுக்கிறார்கள். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: லஞ்ச ஊழல் வழக்குகளிலே போதுமான சாட்சியங்கள் இல்லாத காரணத்தினாலே பல கேஸுகள் தள்ளப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தன்னுடைய காரியங்கள் நிறைவேறவேண்டும் என்பதற்காக லஞ்சம் கொடுத்தவர்களை நம்ப முடியாத காரணத்தினாலே, லஞ்சம் கொடுப்பவர்களுக்கும் தண்டனை என்ற பிரச்னை இருப்பதன் காரணத்தினாலே, இது போன்று சாட்சியங்கள் அதிகமாக கிடைக்கவில்லை என்பது உண்மையா ? அப்படியிருந்தால் அதைத் தடுப்பதற்கான வழிகளைப்பற்றி ஆலோசிக்கப்படுமா ?

22nd January 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஓரளவுக்கு அது உண்மை தான். லஞ்ச வழக்குகள் ருசு இல்லாததன் காரணத்தினாலே தள்ளப்படுகின்றன. லஞ்சம் கொடுக்கிறவர்கள் அக்கரையோடு தான் கொடுக்கிறார்கள், தங்களுக்கு தவறுதலாக காரியங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்று கொடுக்கிறார்கள். அதனால் அவர்களிடமிருந்து சான்றுகளை எதிர்பார்க்க முடியாது. ஆகவே, சரியான சாட்சியங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இருந்தாலும், இதையெல்லாம் ஆராய்ந்து எவ்வளவு தூரம் வழக்குகளை ருசுப்படுத்த முடியுமோ அதில் அரசாங்கமும், அந்த இலாகாவும் கவனம் செலுத்திவருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: லஞ்சம் என்று சொல்லும்போது அன்பளிப்பு ஒன்று கொடுத்தால் அதற்குக் கூட தண்டனை வழங்கப்படுமா? அன்பளிப்பு என்ற வகையில் சில இடங்களில் நடக்கிறது. அப்படி கேஸ் கண்டுபிடித்தால் அன்பளிப்பு கொடுத்தேன் என்றால் அதற்கும் தண்டனை அளிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அன்பளிப்பு என்று ஒரு பட்டம் கொடுத்துவிட்டால் மட்டும் அது விலக்கு ஆகாது.

மாமண்டூரில் பல்லவ காலத்துக் குகைகள்

*** 70 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள மாமண்டூர் என்ற ஊரின் ஏரிக்குக் கரையாக அமைந்திருக்கும் மலையில் மாமல்லபுரத்தில் இருப்பது போன்ற பல்லவ காலத்துக் குகைகள் இருப்பதால் அவ்வூரையும் வெளிநாட்டுப் பிரயாணிகள் வந்து செல்லும் சிறப்புமிகு இடமாக ஆக்கி விளம்பரப்படுத்துமாறு கோரி வடாற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதா?

(இ) அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட முடிவு என்ன?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் கா. கோவிந்தன்: இந்த மாமண்டூரைச் சுற்றி பல்லவர்கள் வாழ்ந்ததாக பல சான்றுகள் கிடைக்கின்றன. அதுவும் அல்லாமல் காஞ்சிபுரத்திற்கு 4 கல் தொலைவில்தான் அந்த இடம் இருக்கிறது. காஞ்சிபுரத்திற்கு வெளி நாட்டுப் பிரயாணிகள் பெரும் அளவில் வருகிறார்கள். அவர்களுக்கு இதைப்பற்றி சொன்னால் அவர்கள் சென்று பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: அந்த இடத்திற்குப் போய் வருவதற்கு என்ன ஏற்பாடு செய்யவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொன்னால், அதைப்பற்றி யோசிக்கலாம்.

புலவர் கா. கோவிந்தன்: அப்படி ஒரு இடம் இருக்கிறது என்பதை நல்ல முறையில் விளம்பரப் படுத்திஞல், வெளிநாட்டுப் பிரயாணிகள் அதிகமாக வருவார்கள். ஆகவே அந்த விளம் பரத்தைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. கோ. பூவராகன்: அவ்வாறு விளம்பரம் செய்வதில் அரசாங்கத்திற்கு சங்கடம் ஒன்றுமில்லே.

திரு. இராம. அரங்கண்ணல்: தமிழகத்தில் இருக்கிற பழம் பெரு இடங்களில் இது ஒன்று என்பதாலும், அங்கே இருக்கிற கல் வெட்டுக்களில் சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன என்று கூறப் படுவதாலும், இதில் அரசு தனி கவனம் செலுத்துமா ?

கனம் சபாநாயகர்: என்ன ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தான் அமைச்சர் அவர்கள் கேட்கிருர்கள்.

(பதில் இல்லே).

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—DELAY IN RECEIPT OF ANSWERS.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு தினங்களாக நாம் பார்க்கிறோம், கேள்வித் தாளில் கேள்விகள் குறைவாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ஒதுக்கப்பட்ட ஒரு மணி நேரத்தை நாம் பூராவாகப் பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி சட்டசபைக் காரியாலயத்தில் விசாரித்தபொழுது, ஏராளமான கேள்விகளுக்கு அரசாங்கத்திடமிருந்து பதில்கள் வர வில்லே என்று நான் அறிகிறேன். அது உண்மையாக இருந்தால், கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வி சம்பந்தப்பட்ட விதிகளைப் பார்க்கும்பொழுது 15 நாட்களில் விடைகளே அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. அப்படி 14 நாட்களுக்கு மேலாகியும் விடைகள் வரவில்லே என்ருல், துரிதமாக அவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : What steps can we take?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பட்ஜெட் கூட்டம் முடிவதற்குள் அனுப்பப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடையளிக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : What steps would the hon. Member suggest?

திரு. மீ. கலியாணசுந்தரம்: அசெம்பிளி விதிகள் இலாக்காக் களேயும் கட்டுப்படுத்தும். முதல் அமைச்சர் அவர்கள் எல்லா இலாகா காரியதரிசிகளுக்கும் 14 நாட்களுக்குள் விடைகளே

22nd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அனுப்ப வேண்டுமென்றும், அதற்கு மேல் டிலே ஆனல் அதற்கான காரணங்களைத் தெரியப்படுத்த வேண்டுமென்றும் ஒரு சர்க்குலர் அனுப்பவேண்டும். சீப் செகரட்டேரியட்டில் இதை சுப்பர்வைஸ் பண்ணுவதற்கு தனியாக ஒரு ஆபீசரைப் போடவேண்டும். அப்படி துரிதப்படுத்துவதற்கு எதாவது நடவடிக்கை எடுத்தால் கேள்விகளுக்கு சீக்கிரத்தில் பதில் கிடைக்கும்.

III—CALLING ATTENTION TO THE NEED FOR ENHANCEMENT OF DEARNESS AND COMPENSATORY ALLOWANCES TO GOVERNMENT SERVANTS.

SRI RAMA ARANGANNAL : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, viz., the need to raise the dearness allowance and other compensatory allowances payable to State Government Servants on a par with Central Government servants consequent on declaring Madras as 'A' Class city.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, the Dearness Allowance of employees of State Government is already on a par with that of the employees of Central Government. The question of raising it further to a level with Central Government employees does not therefore arise. The structure of scales of pay now in force in this State is largely based on the recommendations of the Madras Pay Commission and does not provide for classification of the city as 'A' class or otherwise for purpose of payment of Compensatory Allowance.

The State Government are, however, aware that the Central Government have recently notified Madras City as 'A' class city and that, in consequence, there will be some rise in the level of emoluments of the employees of the Central Government serving in the city.

In pursuance of the recommendations of the Pay Commission in 1960, which were accepted by the State Government, there has been an appreciable improvement in the scales of pay of different categories of employees in the State Government. There has also been a significant improvement in the scale of retirement benefits available to the employees of the State Government consequent on the introduction of the Liberalised Pension Scheme. The House is also aware that last year, the Government sanctioned an increase in the Dearness Allowance to all low-paid Government servants with a view to ensure parity in respect of Dearness Allowance with the employees of Central Government. The Government have thus kept under constant review the conditions of service of their employees and have endeavoured, within the resources available, to do their best for their employees. Government cannot, however, at this stage indicate their views in regard to further improvement in the emoluments of their employees in reply to the notice under rule 41.

SRI M. KALYANASUNDARAM : By implication, I think, it is not negatived.

MR. SPEAKER : The hon. Member may interpret it in any manner he likes.

IV—EXPUNCTION OF OBJECTIONABLE MATTER.

MR. SPEAKER : The hon. member Sri M. Karunanidhi has brought to my notice that the hon. Member Sri T. Karcha Gowder made some objectionable statements in his speech in the Assembly on 20th January 1964, when he compared the leaders who were not present in the House. I also learn that immediately the hon. Member Sri P. U. Shanmugam retorted. I do not like to repeat the Statements here. I find that the comparison made by Sri Karcha Gowder is very undignified and against parliamentary conventions, and so also is the retort. These are disparaging statements affecting the standard of debate in the House. I therefore expunge the objectionable portions in their speeches from the official report of the proceedings. I request hon. Members to keep up the standard of debate in the House.

V—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஆண்டுதோறும் கவர்னர் அவர்கள் இந்த மன்றத்திற்கு வந்து, மேல் மன்ற அங்கத்தினர்களையும் சேர்த்து வைத்து உரை நிகழ்த்துவது ஒரு சம்பிரதாயமான முறை. சம்பிரதாய முறை என்று சொல்லும்பொழுது, எல்லா சம்பிரதாயங்களையும் நாம் விட்டுவிட வேண்டியதில்லை. எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுமில்லை. ஆனால் இந்த சம்பிரதாயத்தைப் பொறுத்த மட்டில் இது நமக்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. இந்த மாநில ஆட்சிக்கு தலைமை ஸ்தானம் வகிக்கிற கவர்னர் அவர்களோடு இந்த மன்ற அங்கத்தினர்களுக்கு ஒரு தொடர்பு ஏற்படுகிறது. அதோடு கவர்னர் அவர்களுடைய உரை என்பது அரசாங்கத்தின் கருத்துக்கள்தான். அரசாங்கத்தின் கொள்கைகள்தான், அரசாங்கத்தின் திட்டங்கள்தான். அவற்றை வைத்துக்கொண்டுதான் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்கள். அரசாங்கத்தின் அபிப்பிராயத்துக்கோ, போக்குக்கோ புறம்பாக "கான்ஸ்டிட்யூஷனல்" கவர்னர் உரை நிகழ்த்த மாட்டார். அரசாங்கத்தின் கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய வகையில் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்கள். வரவு செலவுத் திட்டத்தின்போது பொதுவாக கொள்கைகளை அரசாங்கம் தெளிவுபடுத்தும். வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது குற்றம் குறைகளை மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பு இருப்பது போல, கவர்னர் உரை நிகழ்த்தியதும், அந்த உரையின் மீது விவாதிக்க மற்றொரு வாய்ப்பு ஏற்படுகிறது. அரசாங்கம், பொதுவாக அதன் திட்டங்கள், போக்கு, நாட்டின் நிலைமை இவைகளைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துக்கூற ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அதற்கு மேலே மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக் களையும், குறைபாடுகளையும் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பு. அதற்கு மேலே அரசாங்கம் நிலைமையை விளக்கி குற்றம் குறை களுக்கு சமாதானம் கொடுக்கக்கூடிய வாய்ப்பு. இந்த வாய்ப்பைத் தான் கவர்னர் உரை இப்பொழுது அளித்திருக்கிறது. நம்முடைய மன்றத்தில் நடப்பதுபோல, பார்லிமெண்டிலும் மக்கள் சபையை யும், ராஜ்ய சபையையும் சேர்த்துக் கூட்டி, ஜனாதிபதி அவர்கள் உரை நிகழ்த்துகிறார்கள். இந்த சம்பிரதாயத்தை நாம் தொடர்ந்து கையாண்டு வருகிறோம்.

அந்த வகையில் இப்பொழுது கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையில், சுருக்கமாக நிலைமை எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டு வருகிறது, இந்த ஆண்டிலே எவ்வாறு நிறைவேற்றப்பட்டிருக் கிறது, விவசாயத் துறையிலே, தொழில் துறையிலே எத்தகைய அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது, என்னென்ன செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சமூகப் பாதுகாப்பு விஷயங்களிலே என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை எல்லாம் கவர்னர் அவர்கள் இந்த உரையிலே சுருக்கமாக விளக்கி இருப்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். அவ்வாறு திட்டத்தைப்பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறிய போதிலும், இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் எவ்வாறு நிறைவேற்றப்பட்டு வருகிறது, அதன் பலாபலன்கள் என்ன என்பதை இன்னும் சாவகாசமாக இந்த மன்றத்திலே விவாதிப் பதற்கு அவகாசம் இருக்குமென்றும் சொன்னார்கள். நானும் சொல்லியிருக்கிறேன். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும் பிப்ரவரி 27, 28 தேதிகளில் அந்த வாய்ப்பு இருக்கும்.

கவர்னர் அவர்கள் உரையைத் தொடங்கும்போது, முன்பு இருந்த முதல் அமைச்சரைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றித்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெரிதும் ஆட்சேபம் தெரிவித்தார்கள். எனக்கு அது மிக்க ஆச்சரியத்தை அளித்தது. ஏறக்குறைய 10 ஆண்டு காலம் முதல் அமைச்சராக இருந்து தொண்டு ஆற்றி பதவியை விட்டு விலகிய திரு. காமராஜரின் தொண்டைப் பாராட்டி கவர்னர் உரையின் தொடக்கத்திலே சொல்லி இருக்கிறார்கள். சென்ற ஆண்டிலே உரை நிகழ்த்திய பிறகு இந்த ஆண்டு உரை நிகழ்த்தும் உரை இடையே இந்த ஒரு ஆண்டில் நடந்த முக்கியமான சம்பவம் குறிப்பிடப்பட்டிருக்கிறது உரையிலே. சென்ற ஆண்டு நெருக்கடி நிலையைப்பற்றி முதலிலே குறிப்பிட்டிருந்தார்கள். இந்த ஆண்டிலும் அதைப்பற்றி குறிப் பிட்டுவிட்டு முன்பு முதல் அமைச்சராக இருந்து பணி ஆற்றிய திரு. காமராஜ் பதவியை விட்டு விலகியதைப்பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை அங்கத்தினர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். அதை அவர்கள் குறிப்பிட்டதைக்கூட சரியாக முடியாமல் அவர்களுக்கு ஒரு 'Obsession' வந்து இருக்கும். ஆகவே சரியாக கவனித்திருக்க முடியாது. பின்னால் அதைப் படித்திருந்தால்கூட விளக்கம் ஏற்பட்டிருக்கும். ஆகவேதான்

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

இப்பொழுது அதைத் திரும்பவும் படிப்பது நலம் என்று அந்த வாசகங்களை தங்கள் அனுமதியின் பேரில் படிக்கிறேன். அதுதான் கவர்னர் அவர்கள் கூறியிருப்பது. இதிலே, பத்தாண்டுகள் திறம் பட பணி ஆற்றினார்கள், என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். திறனோடு பணி ஆற்றினார்கள் என்பதில் ஒன்றும் தவறு இல்லை. 10 ஆண்டு என்று சொன்னதை வேண்டுமானால், சரியாக 10 ஆண்டு இல்லை, 9 ஆண்டுதான் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் கவர்னர் அவர்கள் 'nearly' என்றுதான் சொல்லி இருக்கிறார்கள். ஒரு decade என்று கூட சொல்லவில்லை. ஏழை எளியவர்களிடம் அனுதாபம் கொண்டிருந்தார்கள். திறனும் ஆற்றலும் கொண்டிருந்தார்கள்; நேர்மையான தன்மையுடன் நிர்வாகத்தையும், நிர்வாகப் பிரச்னைகளையும் அணுகினார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் என்ன தவறு? வேறு அபிப்பிராயம் இருக்கலாம். கவர்னர் சொல்லுவது தவறு, ஸ்ரீ காமராஜுக்கு ஏழை மக்களிடம் அனுதாபம் இல்லை என்று சொல்லலாம். ஆனால் கவர்னர் அவர்கள் ஸ்ரீ காமராஜைப்பற்றி குறிப்பிடுவதே தவறு என்று சொல்வது எப்படி பொருந்தும். இதைப்பற்றி நான் குறிப்பிட்டே இருக்க மாட்டேன். ஆனால் கவர்னர் அவர்கள் இதைப்பற்றி குறிப்பிடுவது மிகப் பொருத்தம், அரசாங்கம் குறிப்பிடுவது மிகப் பொருத்தம் என்பதை எடுத்துக் காட்டவே நான் இதைக் குறிப்பிடுகிறேன். 9 ஆண்டுகளுக்கு மேல் முதல் அமைச்சராக பணி ஆற்றிய ஒருவருடைய குண நலன்களை எடுத்து சொல்வது தவறா? ஒரு சிறிய உத்தியோகஸ்தர் விஷயத்தில்கூட பாராட்டுதலை தெரிவிக்கிறோம். வரவு செலவு பற்றிய உரையில் கூட Finance Secretary, Finance Assistant Secretary இவர்களைப் பற்றி குறிப்பிடுவது முன்பு வழக்கம். அப்படிக் குறிப்பிடுவது பொருத்தமே. நான் இதைப்பற்றி இவ்வளவு தூரம் குறிப்பிட்டிருக்கமாட்டேன். ஆனால் எல்லா எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் சேர்ந்து கொண்டு "காமராஜரைப் பற்றி சொன்னார், கவர்னர்" என்று குறிப்பிட்டார்கள். "அவர்கள் சொல்லியிருக்கக்கூடாது; நாங்கள் சொல்லலாம்" என்றார்கள். அதற்குப்பிறகு Though he has now assumed onerous responsibilities in a wider sphere அது பாக்கி. அதைப்பற்றி குறிப்பிடும்போது ஒரு கட்சியைப் பற்றி சொல்லுகிறார், கவர்னர் ஒரு கட்சியைப்பற்றி சொல்லலாமா என்றார்கள் சில அங்கத்தினர்கள். 'Though he has now assumed onerous responsibilities in a wider sphere we are all glad that his valuable counsel and guidance are still available to us in this Legislature' இன்னும் அவர்கள் இந்த சபையின் உறுப்பினராக இருக்கிறார்கள். அதனால் அப்படி சொன்னார்கள். அதில் தவறா? அவர்கள் இன்னும் உறுப்பினராக இருப்பதால் 9 ஆண்டுக்கு மேல் முதலமைச்சராக இருந்த அவர்களுடைய ஆலோசனைகள் இந்த மன்றத்துக்கு கிடைக்கும் என்று சொல்வதில் தவறு என்ன என்று கேட்கிறேன். 'You will no doubt join with me in expressing our deep sense of gratitude for the remarkable stability which imparted to the State administration during a crucial period of development of the State'.

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

இங்கு டெவலப்மெண்டு இல்லை என்று சொல்ல முடியாது. அவர்கள் காலத்தில்தான் இரண்டாவது, மூன்ருவது திட்டங்கள் தீட்டப்பட்டு அமல் ஆக்கப்படுகின்றன. முதல் திட்டம் முடியும் தறுவாயில் அவர்கள் பதவி ஏற்ருர்கள். அவர் காலத்தில் தான் இரண்டாவது திட்டம் உருவாகியது. நிறைவேற்றவும் பட்டது. அவர் காலத்திலே தீட்டப்பட்ட மூன்ருவது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிருேம். இந்த நிலையிலே அவர்கள் ஆற்றிய பணிக்கு நாம் அவர்களுக்கு பாராட்டுதல் சொல்வதில் தவறு என்ன? அது அரசியலா? அல்லது அது கட்சிப் பிரச்னையா? அவர்கள் காங்கிரஸ் தலைவராக பதவி ஏற்றதை கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிருர். அது கட்சியைப் பற்றி கூறியதாக ஆகிவிடுமா? அதிலே ஆட்சேபிக்க இடம் என்ன இருக்கிறது என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். "our deep sense of gratitude for the remarkable stability" என்று இருக்கிறது. விசேஷமாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இதைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஸ்டெபிலிடி என்று இருக்கிறது. இது உண்மைதானே? தலைவர் மாறுதல் இல்லாமல் ஒரே மாதிரியாக நடந்திருப்பதை குறிப்பிட்டிருக்கிருர். இதற்கு முன்பும் காங்கிரஸ் ஆட்சிதான் இருந்தது. ஆனல் தலைமை அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. தலைமை மாறிக் கொண்டிருந்தாலும் கொள்கை, நடவடிக்கைகள் இவற்றில் மாறுபாடு இல்லை. ஸ்ரீ காமராஜ் அவர்கள் தலைமை ஏற்ற பிறகு தொடர்ந்து தலைமை யிலும் மாறுதல் இல்லாமல் இருந்ததால் ஒரு ஸ்டெபிலிடி இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படி தலைமை யில் மாறுதல் இல்லாமல் 9 ஆண்டுகள் ஒரே வகையில் அவர் களுடைய வழி பின்பற்றப்பட்டு வந்திருப்பதால் ஸ்டெபிலிடி என்று சொல்லியிருக்கிருர். கனம் அங்கத்தினர்கள் ஆட்சேபிக்க இதிலே என்ன தவறு இருக்கிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

அரசியல் வேறு, கட்சி வேறு. அரசியலை புகுத்தி விட்டார் என்று கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அம்மாதிரி காமராஜ் முதலமைச்சரைப்பற்றி சொல்வது அரசியல் என்ருல் எதுவும் அரசியல்தான். இதிலே என்ன கட்சி இருக் கிறது. கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரின் திறன் நமக்குத் தெரியும். நல்ல அரசியல் ஞானம் நிறைந்தவர்கள். அவர்கள் அரசியலைப் புகுத்தி விட்டார்கள். அப்படி புகுத்தியிருக்கக்கூடாது என்று சொல்லும்போது, அவர் ஸ்ரீ காமராஜரைப்பற்றி குறிப்பிடப் போகிருர் என்று நான் நினைக்கவில்லை. வேறு ஏதாவது குறிப் பிடுவார் என்று தான் நினைத்தேன். பின்னல் வருகிறது அரசியல் அமைப்பு சட்டத்தை அவமரியாதை செய்வதுபற்றி, அதைப் பற்றி குறிப்பிடுவார் என்று நினைத்தேன். ஆனல் அவர்களுக்கு அதுபற்றி கருத்து இல்லை. (குருக்கிடு) ஆட்சேபனை இல்லையென்று சொல்லியிருக்கலாம். ஆனல் ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுக்கு கருத்து இல்லை. அது பற்றி இங்கே சொல்ல அவர்களுக்கு கருத்து இல்லை. அது ஒரு 'diplomacy' அவர்களுக்கு ஒன்றும்

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

கருத்து இல்லை. அவ்வளவுதான். மொழிப்பிரச்னை பற்றியும் ஒன்றும் குறிப்பிடவில்லை. கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் நேற்று மொழிப் பிரச்னை பற்றி விஸ்தாரமாக குறிப்பிட்டார்கள். மொழிப் பிரச்னையிலும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருக்கு மன்றத்திலே தெரிவிக்க கருத்து ஒன்றும் இல்லை. (திரு. ம. கலியாணசுந்தரம் முன்னே தெரிவிக்கவில்லையா) சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் எதிர் கட்சிகளுக்கு மாறுன கருத்தை தெரிவித்தார்கள். "இந்தி அகில இந்திய மொழியாக இருக்க வேண்டும்; ஆங்கிலத்தை அறவே ஒழிக்க வேண்டும்" என்ற கருத்தை தெரிவித்தார்கள். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருக்கு கருத்து ஒன்றும் இல்லை. அல்லது மன்றத்திற்கு சொல்ல கருத்து இல்லை. அவர்கள் மட்டுமல்ல மொழிப் பிரச்னை பற்றி விஸ்தாரமாக குறிப்பிட்டார்கள். சுதந்திரா கட்சித் தலைவரின் அபிப்பிராயம் புரியவில்லை. திரு. கலியாணசுந்தரம் முன்பு தெரிவித்தேன் என்று சொல்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சுதந்திரா கட்சித் தலைவர் காமராஜரை விடவில்லை. "ஏன் கவர்னர் சொன்னார்" என்று கேட்டார்கள். மன்றத்திலே இன்னும் வேறு வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன, காமராஜ் அவர்களுடைய திறனைப் பற்றி, என்னுடைய திறனைப்பற்றி, கனம் அங்கத்தினர், நண்பர் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி கவுண்டர் "முடிச்சுப் போடுகிறார்கள்" என்று சொன்னார்கள். எதிர் கட்சியில் எங்களைக் காட்டிலும் அதிகத் திறன் இருக்கிறது. உணர்ந்து சொல்லுகிறேன். ஒத்துக் கொள்ளுகிறேன், திறன் இருக்கிறது என்று. ஆனால் திறன் மட்டும் இருந்தால் போதாது. சுதந்திரா கட்சித் தலைவருக்கும் கருத்து
9–30 a.m. ஒன்றும் இல்லை. அவர்களும் ஸ்ரீ காமராஜரைத்தான் பிடித்துக் கொண்டார்கள்.

திரு. காமராஜ் அவர்களை ஏன் மக்கள் பாராட்டுகிறார்கள்? திறனுக்காக மட்டுமல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்பு அவர்கள் காங்கிரஸ் தலைவராகத் தேர்தெடுக்கப்படுவதற்கு முன்பு ராஜஸ்தானிலுள்ள ஜெய்ப்பூருக்கு நாங்கள் போயிருந்தோம். அங்கே நான்கு நாட்கள் தங்கியிருந்தோம். திரு. காமராஜ் அவர்கள், ஆந்திர முதல் அமைச்சர், நான் மூன்று பேரும் சேர்ந்தே காரில் போவோம்—வேறு இடங்களைப் பார்க்கப் போவோம், கூட்டத்திற்குப் போவோம். எந்த இடத்திற்குப் போனாலும், காலை, பகல், இரவு என்றில்லாமல் எந்த நேரத்தில் போனாலும் எங்கள் மூன்று பேர்களில் காமராஜ் அவர்களைப் பார்த்து, 'இதோ காமராஜ்' என்று சொல்லி ஆரவாரம் செய்வார்கள். அதற்கு நாங்கள் பொறுமைப்பட முடியுமா? (சிரிப்பு). திரு. காமராஜ் அவர்களைத்தான் பாராட்டுவார்கள். நிறத்திலே கூட அவர்கள் கறுப்பு. (சிரிப்பு). இருட்டிலே கூட, அவர்களைப் பார்த்துத் தான், 'காமராஜ், காமராஜ், காமராஜ்' என்று அவர்கள் ஆரவாரம் செய்வார்கள்.

இதுவரையில், மத்திய ஆட்சியைப் பொறுத்த மட்டில், மத்திய மந்திரி சபையிலே ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்றால், பிரதம மந்திரி அவர்கள் தன்னுடைய சகாக்களைக் கலந்தாலோசிப்

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

பார்; ஜனாதிபதியைக் கலந்தாலோசிப்பார். வேறு யாரையும் கலந்தாலோசிப்பதில்லை. ஆனால், நேற்று நம்முடைய திரு. காமராஜ் அவர்களை அழைத்து, மத்திய மந்திரிசபை மாறுதலைப்பற்றி அவர் பேசினார் என்று திரு. காமராஜ் அவர்கள் சொன்ன கருத்திலிருந்து தெரிகிறது. அதற்கு நான் பொறுமைப்பட முடியுமா? (சிரிப்பு). முன்பிருந்தவர்கள்தான் பொறுமைப்பட்டு என்ன பயன்? (சிரிப்பு).

திரு. காமராஜ் அவர்கள் இந்த மன்றத்தில் இன்னும் அங்கத்தினராக இருக்கிறார். அவர் இங்கு இருப்பதனால் அவருடைய யோசனை நமக்கெல்லாம் கிடைக்கும் என்றுதான் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அவர் குறிப்பிட்டதை இவ்வளவு தூரம் எடுத்துக்கொண்டு 'திரு. காமராஜ் அவர்களைப்பற்றி வேறு இடத்திலே சொல்லியிருக்கலாம்; கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கக்கூடாது' என்றெல்லாம் எதிர் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது. கவர்னர் அவர்கள் ஏதோ சொன்னார்கள் என்று, அதை எல்லோரும் எடுத்துக்கொண்டு, விடாமல் சொல்லி, என் பின்னால் இருக்கிற கனம் அங்கத்தினர்கள், 'டிஃபென்ஸ்' ஆகச் சொல்லும் வகையில், காமராஜ் அவர்கள் அப்படிப்பட்டவர், இப்படிப்பட்டவர் என்றெல்லாம் பேசி, இவ்வளவு காலம் அதற்கு எடுத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை என்றுதான் நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில், முதலில் எல்லாக் கட்சியினரையும் பொதுவாகப் பாராட்டினார்கள். கடைசியில் அதிக முக்கியமாகக் குறிப்பிட்டதைக் குறித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்கள் ஆட்சேபனை தெரிவித்தார்கள். மற்ற எதிர்க் கட்சியினர் அதற்கு ஒன்றும் கருத்து தெரிவிக்கவில்லை. கவர்னர் அவர்கள் தம்முடைய உரையின் கடைசியில்,

"This freedom which is assured under our constitution cannot obviously be sought for forms of agitation which seek to show disrespect to that very constitution".

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் "கட்சி" என்று சொல்லுவதற்குக் கொஞ்சம் கூட இடமில்லை. கவர்னருடைய உரையைத் திருப்பித் திருப்பிப்பார்த்தாலும்கூட, ஒரு கட்சியைப் பற்றியுள்ள வகையிலே அது அமைக்கப்பட்டது என்று யாரும் கூற முடியாது. ஆனால், அரசியல் இல்லாமல் இருக்க முடியாது. சட்டசபையில் செய்வது எல்லாமே அரசியல்தான். ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிப்பதற்கு இடம் கொடுக்க முடியாது. அதை அவமதிப்பதையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கவர்னர் தம்முடைய உரையில் அவ்வாறு சொன்னார்கள் என்றால் அது அரசாங்கத்தின் அபிப்பிராயம் மட்டுமல்ல. கவர்னர் அவர்கள் சொல்வது மிகவும் பொருத்தமானது. இந்த மன்றத்திற்கு அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்கக்கூடிய ஒரு வாய்ப்பை கவர்னர் பெற்றிருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, "அரசியலமைப்புச் சட்டத்தை நாங்கள் மதிக்கிறோம்; ஆனால் எதிர்க்கிறோம்" என்று சொன்னார்கள். 'மதிக்கிறோம்', 'எதிர்க்கிறோம்' என்ற இரு வார்த்தைகளைச் சொன்னார்கள். எதிர்க்கலாம். எதை எதிர்ப்பது? மொழியை எதிர்க்கலாம்—ஒன்றை எல்லோரும் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். மன்றத்திலுள்ளவர்களும், வெளியிலே இருக்கிறவர்களும் கூடப் புரிந்துக்கொள்ளவேண்டும். ஹிந்தியைப் பற்றி அரசாங்கம் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதைப் பின்னால் விளக்குகிறேன். எவ்வளவு விளக்கினாலும், 'எங்களுக்கு ஹிந்தி வேண்டாம்' என்று கூறுவதற்கு யாருக்கும் உரிமை உண்டு. அதைக் கூறலாம். ஹிந்தியை எதிர்க்கலாம். ஹிந்தியை எதிர்ப்பது நல்லதா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், எதிர்க்கலாம். எதிர்க்க உரிமை உண்டு. அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், ஹிந்தியை எதிர்ப்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தையா எதிர்ப்பது? அரசியலமைப்புச் சட்டத்தையா அதற்காக அவமதிப்பது? அதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தின் பகுதியையா எரிப்பது? மாற்றவேண்டும் என்று சொல்லலாம். மாற்ற வேறு வழிகள் இருக்கின்றன. இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கனம் உறுப்பினர்கள் இருப்பது போல், பாராளுமன்றத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கு முயற்சி எடுத்து, இப்பொழுதிருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் ஏதாவது ஒரு பகுதியை மாற்றவேண்டுமானால் மாற்றுவதற்கு முயற்சி செய்து மாற்றலாம். அரசியலமைப்புச் சட்டம் அப்போதைக்கப்போது மாற்றப்பட்டு வருகிறது. ஆனால், அதைக் கொளுத்துவது என்றால் எப்படி அனுமதிப்பது? "நாங்கள் ஒன்றும் அவமதிக்கவில்லை. எதிர்ப்பு தான் காட்டுகிறோம்" என்றாலும் அது எப்படி அவமதிப்பு இல்லாமல் போய்விடும்?

சில அபூர்வமான மனைவிமார்கள் உண்டு. அவர்கள் தங்கள் கணவன்மார்களைப் பார்த்து, 'நீங்கள்' என்று மட்டும் புன்மையில் சொல்லிவிடுவார்கள். அப்படிச் சொல்லியே எவ்வளவு ஏச வேண்டுமோ அவ்வளவு ஏசிவிடுவார்கள் (சிரிப்பு). மரியாதை மாத்திரம் குறையாது! (சிரிப்பு.) இது என்ன மரியாதை என்று எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு.) இங்கிருக்கும் பெண்மணி கனம் அங்கத்தினர்கள் மன்னிக்கவேண்டும். (சிரிப்பு.) ஆனால், அவர்களும் அதை அறியாதவர்கள் அல்ல. (மீண்டும் சிரிப்பு.) அத்தகைய மனைவிமார்கள் இந்த மன்றத்தில் யாரும் இல்லை. ஆனால், வெளியிலே உள்ள அபூர்வப் பிறவிகள் நமக்குத் தெரியும். அதே போல், "நான் மதிக்கிறேன். ஆனால் எதிர்க்கிறேன்" என்று சொல்வதிலே அர்த்தம் இல்லை என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஹிந்தி வேண்டாம் என்றால், அரசியலமைப்புச் சட்டப் பகுதியை எரித்தால் மாத்திரம் மாற்றிவிட முடியுமா? அதனால் தான் பிரதம மந்திரி அவர்களும், 'சிறுபிள்ளைத்தனம்' என்று

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

குறிப்பிட்டார்கள். அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டப் பகுதியைக் கொளுத்துவதினாலே மாற்றிவிட முடியுமா? நாமெல்லோரும்—எதிர்க் கட்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உட்பட—ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்டவர்கள். சட்ட மன்றம், பாராளுமன்றம் போன்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கும் மன்றங்களிலே கான்ஸ்டிட்யூஷனல் முறைப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அங்கே விவாதம் செய்து சட்டத்தை மாற்றுவதுதான் முறை என்பதை நன்றாக உணர்ந்தவர்கள்; ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் "கான்ஸ்டிட்யூஷனை மதிக்கிறோம்" என்று அடிக்கடி சொல்கிறார்கள். அப்படி இருக்க அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்துவானேன்.

அரசியலமைப்புச் சட்டம் என்றால் அது நம்முடைய நாட்டின் தேசியக் கொடிக்கு ஒப்பானது. அது புனிதமானது. அரசியலமைப்புச் சட்டம் இருக்கிற வரையில், அதை மதித்துத்தான் ஆக வேண்டும். மதிப்பது என்றால் எல்லாவகையிலும் மதிக்க வேண்டும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், யாரோ போலீஸ்காரர், எரிந்துகொண்டிருந்த அரசியலமைப்புச் சட்டப் பகுதியைக் காலில்போட்டு மிதித்தான் என்று குறிப்பிட்டார்கள். நெருப்பை அணைப்பதற்கு மிதித்தான். மிதித்துத்தான் அணைக்க வேண்டும். கண்ணப்ப நாயனார் சரித்திரம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். கண்ணப்ப நாயனார் பக்தி உள்ளவர்தான். பரமசிவனுடைய கண்ணிலிருந்து இரத்தம் வருவதைப் பார்த்த மாத்திரத்தில் தன்னுடைய கண்ணைப் பிடுங்கி அங்கே வைப்பதற்காகப் பரமசிவன் மீது காலை வைத்தார். அதனால் பரமசிவன் கோபித்துக்கொண்டாரா? (சிரிப்பு.) பரமசிவன் கோபித்துக் கொள்ளவில்லை.

திரு. மு. கருணாநிதி: அதையேதான் நாங்களும் சொல்கின்றோம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: போலீசாருடைய நோக்கம் வேறு. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுடைய நோக்கம் வேறு. இதற்கும் அதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

எப்படியாவது நெருப்பு மேலே பரவாமல் தடுக்கவேண்டும் என்ற ஆவலில் காவால் மிதித்தான். அதிலே ஒன்றும் தவறு இல்லை. அவமரியாதை இல்லை. யாரோ தெரியாதவர்கள், இந்தப் புனிதமான அரசியலமைப்புச் சட்டத்திற்கு அவமதிப்பு செய்துவிட்டார்களே, இதைக் கூடியவரை தவிர்க்கவேண்டும், அரசியலமைப்புச் சட்டம் கொளுத்தப்பட்டு எரிந்து கொண்டிருப்பதை எவ்வளவு சீக்கிரம் அணைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அணைக்கவேண்டும் என்பதற்காக மிதித்தான். ஒரு வீட்டில் நெருப்புப் பிடித்து விட்டால், அதை உடனடியாக அணைப்பதற்கு எவ்வாறு தீயணைக்கும் படை விரைந்து சென்று அணைக்குமோ, அதுபோல, அரசியலமைப்புச் சட்டத்தை யாரோ கொளுத்தி

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

விட்டார்கள் என்பதைப் பொறுக்காமல், நெருப்பைக் காலால் மிதித்து அணைத்தான் என்றால், "அதேபோல் நாங்களும் செய்கிறோம்" என்று சொல்வது முறையல்ல என்றுதான் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"அரசியலமைப்புச் சட்டத்திலே ஒரு பகுதியின் மீது எங்களுக்கிருக்கும் வெறுப்பைக் காட்டுவதற்காக நாங்கள் அதைக் கொளுத்துகிறோம்" என்று சொல்லுகிறார்கள். கொளுத்துவது தானா அதற்கு வழி? வேறு வழியே இல்லையா? சட்டசபை இருக்கிறது. பாராளுமன்றம் இருக்கிறது. கூட்டம் போட்டுப் பேசலாம். திராவிட முன்னேற்றக் கழகத்திலே பேசக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் இருக்கிறார்கள். பேச்சில் வல்லுநர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். கூட்டம் போட்டுப் பேசலாம். எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். கண்டனம் செய்யலாம். ஊர்வலம் வரலாம். இன்னும் வேறுவிதமாக டெமான்ஸ்ட்ரேஷன் செய்யலாம், இந்தி வேண்டாம் என்பதற்காக. ஆனால் மாணவர்களை மாத்திரம் பயன்படுத்தக் கூடாது என்று நான் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். மாணவர்களுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது இப்பொழுது?

மொழியைப்பற்றி நான் விளக்குவதாகச் சற்று முன்பு சொன்னேன். அதை இப்பொழுது விளக்குகிறேன். மும்மொழிக் கொள்கையை நாம் அனுசரித்து வருகிறோம். அகில இந்தியாவிலும் அது அனுசரிக்கப்பட்டு வருகிறது. தமிழ் கட்டாயமாக முதல் வகுப்பில் இருந்து சொல்லிக் கொடுக்கப்படுகிறது. உலக மொழியாகிய ஆங்கிலத்தையும் நமது மாணவ மாணவிகளுக்கு மூன்றாவது வகுப்பில் இருந்து கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கிறோம். மும்மொழித் திட்டத்தின் அடிப்படையில் இன்னொரு மொழியாக இந்தியை மற்ற இந்தி பேசாத மாநிலங்களில் கட்டாயமாகக் கூட வைத்திருக்கிறார்கள்—நாம் கட்டாயமாக வைக்காவிட்டாலும் உயர்நிலைப் பள்ளிகளில் சொல்லிக்கொடுக்க வசதி செய்திருக்கிறோம். தமிழ்நாடு தவிர மைசூர், ஆந்திரா, கேரளா இங்கெல்லாம் கட்டாயமாக இந்தி படிக்க வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். நாம் தான் அதைக் கட்டாய பாடமாக வைக்கவில்லை. ஆனால் சில தனியார் பள்ளிகளில் சின்ன வகுப்பிலிருந்தே சொல்லிக்கொடுக்கிறார்கள். வேறு ஒரு இந்திய மொழி கட்டாயமாகச் சொல்லிக்கொடுக்கப்படவேண்டுமென்பது மும்மொழிக் கொள்கை. முன்பு ஒரு முறை கூடச் சொன்னேன். புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டினேன். ஒரு ஆண்டில் 52 ஆயிரம் மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சை எழுதினால் அதில் 50 ஆயிரம் மாணவர்கள் கட்டாயமின்றியே இந்தியை எடுத்துக்கொண்டு படிக்கிறார்கள். ஆகவே தான் கட்டாய பாடமாக அதை வைக்கவேண்டிய அவசியம் இல்லையென்று நாங்கள் சொன்னோம். அகில இந்தியக் குழுவில் இருந்தவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். கட்டாயப் பாடமாக நாம் வைக்கவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தவில்லை. நாமும் கட்டாய பாடமாக வைக்கவில்லை. இது உயர்நிலைப் பள்ளியில் உள்ள நிலைமை.

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

மற்றபடி கல்லூரியில் படிக்கிறவர்கள் இந்தியை விரும்பினால் எடுத்துக்கொள்ளலாம். அவ்வளவு தான். நம்முடைய பல்கலைக் கழகத்தில் இந்தி இலாகா ஒன்று இருக்கிறது. அதற்குத் தலைமை வகிக்கின்றவர்கள் சிறந்த தமிழ் எழுத்தாளர். அவர் தான் இந்தி இலாகாவுக்குத் தலைவராக இருக்கிறார். அவர் வள்ளுவர் இயற்றிய திருக்குறளை இந்தியில் மொழி பெயர்த்திருக்கிறார். அத்தகைய ஆற்றல் அவருக்கு இருக்கிறது. அவர்கள் தான் நேற்று வரை தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் காரியதரிசியாகக் கூட இருந்தார். அவர்களுக்கு எல்லாம் இந்தியினால் நமக்குக் கேடு உண்டாகுமா, உண்டாகாதா என்று தெரியாதா? இதுபற்றி அவர்கள் ஆராய்ந்து பார்க்கவில்லையா? இந்தி வேண்டாம் என்றால் கல்லூரி மாணவர்களை யாரும் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். கல்லூரி மாணவர்கள் கூட்டமாக ஊர்வலம் வந்து 'இந்தி ஒழிக' என்று கோஷம் போடுவது என்றால் இதைத் தூண்டிவிட்டவர்கள் யாராக இருந்தாலும் மாணவர்களுக்கு அவர்கள் நல்லது செய்யவில்லை என்று சொல்வேன். அதைத்தான் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள், மேல்சபை உறுப்பினர் நேற்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். அதை நான் பாராட்டினேன். அப்படி மாணவர்களைத் தூண்டிவிட்டது யாராக இருந்தாலும் கண்டிக்கப்படவேண்டும். (ஒரு அங்கத்தினர்—அவர்களைத் தூண்டி விட்டது யார்?) அதை நீங்கள் தான் சொல்லவேண்டும். (சிரிப்பு.) யரோ தூண்டிவிட்டிருக்கிறார்கள். யார் தூண்டிவிட்டிருந்தாலும் அது சரியல்ல என்பதைத்தான் வற்புறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். கட்சிக்காரர்கள் மாத்திரம் அல்ல. பத்திரிகைகளும் தூண்டிவிடுகின்றன.

அன்று அவர்கள் வந்தார்கள். நானே பார்த்தேன். 300 பேர் கள் இருப்பார்கள். ஆனால் பத்திரிகையில் இரண்டாயிரம் பேர் என்று போட்டிருக்கிறார்கள். இந்தக் கோட்டைக்கு முன்னால் எத்தனையோ முறை மிக ஆவேசமாகத் தொழிலாளர்கள் எல்லாம் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். ஆனால் ஊர்வலமாக வருவார்கள். கோட்டைக்கு முன்னால் ஒழுங்காக ஒரு வரிசையில் நிற்பார்கள். அந்தக் கூட்டத்தில் இருந்து ஒரு நான்கைந்து பேர்கள் மந்திரி யின் அறைக்கு வந்து தொழிலாளர்களுடைய குறைகளைத் தெரி விப்பார்கள். அப்புறம் ஊர்வலம் அமைதியாக கலைந்து செல்லும். அப்படி இந்த மாணவர்கள் நடந்து கொண்டார்களா என்றால் இல்லை. எல்லோரும் சேர்ந்து உள்ளே வர முயன்றார்கள். போலீஸ் அதிகாரி என்னிடம் வந்து கலந்து கொண்டுபோய்த் தான் அவர் களைத் தடுத்து நிறுத்தினார்கள். நான் அவர்களைப் பார்க்க மறுத் தேன். ஏன்? அந்த மாணவர்கள் விடுமுறை நாட்களில் கூட வர வில்லை. வகுப்பு நடக்கும் நேரத்தில், வகுப்புக்குப் போகாமல் தங்கள் கடமைகளைவிட்டு கண்டபடி கோஷித்துக்கொண்டு வந்தார்கள். ஆகவே பொறுப்பற்ற அவர்களுடன் பேச நான் மறுத்தேன். இன்னும் கூட எனக்குத் தகவல் வந்தது. ஒரு கல் லூரி ஆசிரியர் அந்த மாணவர்களைப் பார்த்து, "ஒன்று ஊர்வலத்

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

தோடு போங்கள். இல்லாவிட்டால் வகுப்புக்கு வாராதீர்கள்" என்று தூண்டிவிட்டிருக்கிறார். அவர்கள் தங்கள் வகுப்புக்குப் போகவேண்டிய நேரத்தில் வகுப்புக்குப் போகாமல் வந்த காரணத்தினால் நான் அவர்களைப்பார்க்க தயாராய் இல்லை. இத்தகைய மாணவர்களுடைய கல்விக்கா நாம் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்கிறோம் என்று கூடச் சொன்னேன். அதை ஒரு பத்திரிகைத் தூண்டிவிடுகிறது. நான் அவர்களை ரௌடி என்று சொன்னதாக அப்போது சொல்லவில்லை. இப்போது தான் நான் அந்த வார்த்தையை உபயோகப்படுத்து கிறேன். அவர்கள் நடந்து கொண்டது மிருகத்தனம். இப்படிப்பட்ட மாணவர்களுக்கு கல்லூரியில் இடம் இல்லை. வெளியே வந்து பாலிடிக்ஸ் பண்ண வேண்டும். இந்தி வேண்டாம் என்றால் இவர்கள் படிக்க வேண்டாம். வேண்டும் என்கிறவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்று சொல்வதற்கு இவர்கள் யார்? இந்தியினால் தமிழுக்கு என்ன ஆபத்து வந்து விடும்?

கனம் எதிர்க்கட்சித் தலைவர் கூடக் கூறினார்கள். எத்தனை காலமாக ஆங்கிலம் இருந்தது. அதனால் தமிழ் அழிந்துவிட்டதா? மாமூல் என்ற சொல் எத்தனை காலமாக இந்த நாட்டில் இருக்கிறது. இதற்கு சரியான தமிழ்ச் சொல்லை எதிர்க்கட்சித் தலைவரும், உப தலைவரும் கண்டு பிடித்துக்கொடுத்தால்கூட அந்தச் சொல்லை மக்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் மாமூல் என்ற சொல்லை அவ்வளவு சுலபமாக புரிந்துகொள்வார்கள். இதனால் தமிழ் அழிந்து போகுமா? ஒரு மொழி வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் அந்த மொழி வல்லுனர்களின் குறுகிய புத்தியினால் வளர்ச்சி அடைந்துவிட முடியாது. ஆங்கிலம் இன்றையதினம் பல துறைகளில் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்றால் அந்த வளர்ச்சிக்கு பிற மொழிகள் எத்தனை உதவி செய்திருக்கின்றன என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு மொழியினால் ஒரு மொழி அழிந்துவிடும் என்ற கொள்கையை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு கிழவி ஏதோ பண்டைய காலத்தைப் பற்றி பேசிக்கொண்டே இருப்பாளே. அதுமாதிரி நாம் முன்பு எட்டு கோடியாக இருந்தோம். இப்போது மூன்று கோடி தானே இருக்கிறோம் என்பதாகப் பேசுவதனால் பயன் இல்லை. பாட்டி தன் காலத்தை நினைந்து அனுதாபப்படுவது போல நாம் அனுதாபப்படவேண்டியதில்லை. (சிரிப்பு)

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, ஒரு மொழியின் ஆதிக்கத்தினால் இன்னொரு மொழி பாதிக்கப்படக் கூடும் என்பதற்கு ஆதாரமாக நம்முடைய தமிழ் மக்கள் எட்டு கோடி பேர் இன்றையதினம் மூன்று கோடியாகக் குறைந்துள்ளதை எடுத்துச் சொன்னேனே தவிர பழமையை நினைந்து அனுதாபப் பட்டது அல்ல. அவ்வளவு தூரம் தமிழ் மொழி பரவியிருந்த போது இன்றைக்குச் சுருங்கியிருப்பது பிற மொழியின் ஆதிக்கத்தினால் விளைந்த விளைவு என்பதைத்தான் காட்டினேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நம் நாட்டில் ஆங்கில மொழி ஆதிக்கம் செலுத்தியதுபோல வேறு ஒரு மொழி செலுத்துவ தில்லை. ஆங்கிலம் படித்தால் உத்தியோகம் கிடைக்கும் என்ற மனப்பான்மைகூட இந்த நாட்டில் வளர்ந்திருந்தது. முன் பெல்லாம் கிராமபுறங்களுக்குச் சென்ருல் எங்கள் ஊருக்கு ஆங்கில ஆசிரியர் ஒருவரை அனுப்பி வையுங்கள் என்றுதான் கேட்பார்கள். பல்கலைக்கழக செனேட் கூட்டத்தில் கல்லூரியில் தமிழையும் வைக்க வேண்டும் என்று ஒரு சமயம் ஒரு தீர்மானம் கொண்டுவரக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. அப்படி இருந்தும் கூட தமிழுக்கு ஆபத்து வந்துவிட்டதா? தமிழ் அழிந்துவிட்டதா? கனம் அங்கத்தினர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தி பேசுகின்ற மக்கள் இந்தியாவில் மிக அதிகமாக இருக்கிருர் கள். அது அகில இந்திய மொழி என்பதை எதிர்க்கட்சித் தலைவரே ஒப்புக்கொண்டார்கள். இந்த ஒரு விஷயத்தில் அடிப்படையான கருத்து ஒற்றுமை கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், என் போன்றவர்களுக்கும் இருக்கிறது. அகில இந்திய மொழியாக இந்தி இருக்கவே கூடாது என்று சொல்கிருர்கள். அது அவர்களு டைய இப்போதைய கருத்து. முன்பு அப்படி இல்லை. தி.மு.க. தலைவர் அவர்கள் முன்பு இந்த மன்றத்தில் இருந்தபோது இந்த மன்றம் ஏற்றுக்கொண்ட கொள்கை இதுவல்ல. முன்பு இருந்த மன்றத்தில் இந்தி மொழி பற்றி நிர்ணயிக்கப்பட்டது. அவர்களும் அந்த முடிவை அப்போது ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இப்போது அவர்கள் கருத்தை மாற்றிக் கொண்டு விட்டார்கள். இப்போது அகில இந்திய மொழியாக இந்தி இருக்கவே கூடாது என்று கூறுகிருர்கள். அப்படியானுல் வேறு எந்த மொழி அகில இந்திய மொழியாக இருப்பது? ஆங்கிலமே எப்போதும் அகில இந்திய மொழியாக இருக்கவேண்டும்; நாட்டு மொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்தை ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆங்கிலம் அகில உலகத் தொடர்பு மொழியாக இருக்கலாம். அகில இந்திய ஆட்சி மொழியாக இருக்கும் தகுதி இந்திக்கு மட்டுமல்லாது மற்றைய தேசிய மொழி களுக்கும் இருக்க வேண்டுமென்றுதான் கூறுகிறேம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உலகத் தொடர்பு வேறு; நாட்டுத் தொடர்பு வேறு. தொடர்புக்காக நாம் ஒரு மொழியை வைத்துக் கொள்ள முடியாது. ஒரு சாதனமாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளலாம். ஆனல் அகில இந்திய ஆட்சி மொழியாக ஆங்கிலம் ஒரு போதும் இருக்கமுடியாது. இந்தி பேசும் மாநிலங் களுக்கு எத்தகைய உரிமை உண்டோ அத்தகைய உரிமை மற்றைய மாநிலங்களுக்கும் உண்டு. நம்முடைய ஆட்சி அமைப்பு இமயம் முதல் குமரி வரை ஒரே பரவலான ஆட்சி முறையாக அமைந்திருக் கிறது. மத்திய ஆட்சியில் நமக்கும் அக்கறை இருக்கிறது. உலகத் தொடர்புக்காக ஆங்கிலத்தை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ள முடியாத விஷயம். அதே சமயத்தில் நம்முடைய 14 தேசிய மொழிகளும் அகில இந்திய

ஆட்சி மொழியாக வரவேண்டுமென்பதும் எதிர்பார்க்கக் கூடாதது. சுவிட்சர்லந்து போன்ற நாடுகளில் மூன்று அல்லது நான்கு மொழிகளை ஆட்சி மொழிகளாக வைத்திருக்கிறார்கள். ஆனால் 14 மொழிகளை ஆட்சி மொழிகளாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது சாத்தியமற்றதாகும். ஆகவே தான் நாம், இந்தியை மட்டும் ஆட்சி மொழியாக வைத்துக் கொள்ளாது ஆங்கிலத்தையும் சேர்த்து ஆட்சி மொழியாக, நாம் கோருகின்ற வரையில், வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னோம். அதற்குரிய சட்டம் தான் இப்போது நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதைத்தான் இப்போது கொளுத்திக் கொண் டிருக்கிறார்கள். 17-வது பிரிவை எடுத்துவிட்டால் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பது போய்விடுகிறது. அந்தப் பிரிவைப் பொருத்த வரையில் விளக்கத்தை எனது சக்திக்கேற்ற வகையில் கனம் துணைத் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். அவர்களுடைய மனது மாறவேண்டும். நான் கூறும் விளக்கம் வாதத்திற்காகக் கூறுவது அல்ல. ஒரு குழு அமைக்கப்பட்டிருக் கிறது என்றால், அதன் பணி இந்தி எவ்வளவு தூரம் நாட்டிலே பரவி இருக்கிறது என்பதை அறிந்து சொல்வதற்காகத்தானே தவிர ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை நிர்ணயிக்கிற குழு அல்ல அது. மூன்றாவது செக்ஷன் வேறு; நான்காவது செக்ஷன் வேறு. ஆங்கிலம் நீடிக்க வேண்டு மென்பதற்காக உள்ள செக்ஷன் தனி செக்ஷன். நாம் ஆங்கிலம் வேண்டாம், இந்தி படித்து விட்டோம் என்று சொல்லுகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும். இந்தி படிக்க வேண்டுமென்ற கட்டாயம் இருப்பதன் காரணமாக உத்தியோ கஸ்தர்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அவ்வாறு பாதகம் ஒன்றும் ஏற்படாது என்று நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் கூட எத்தனையோ முறைகளில் விளக்கி இருக் கிறார்கள். உத்தியோகத்திற்குத் தேர்தெடுக்கப்படுவதற்கு இந்தி தெரியாவிட்டால் அது தடையாக இருக்காது. ஆனால் அவர்கள் வேலைக்குத் தேர்தெடுக்கப்பட்ட பின்னர் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: பத்தாண்டுகளுக்குப் பிறகு பாராளு மன்றத்திலும் மேல் அவையிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற ஏறத்தாழ 30 உறுப்பினர்கள் கொண்ட அந்தக் குழு ஆராய்ந்து பார்த்த பிறகு இந்தி நல்ல அளவுக்குப் பரவி இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தால் அப்போது ஆங்கிலம் தேவையில்லை என்று மத்திய அரசு முடிவு செய்யாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மூன்றாவது செக்ஷன் வேறு, நான்காவது செக்ஷன் வேறு என்பதைக் கனம் துணைத் தலைவர் அவர்கள் படிக்க வேண்டுமென்று மறுபடியும் கேட்டுக் கொள் கிறேன். நான்காவது செக்ஷன்படி குழு அமைக்கப்படுகிறது. பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்தக் குழு என்ன முடிவுகளைச் சொன் னாலும் இந்தி பேசாத மாநிலங்களின் அங்கீகாரத்தைப் பெறாமல்

ஆங்கிலத்தை நீக்கிவிட முடியாது. அதுதான் இப்போது இருக்கிற சட்டம். அந்த வகையில்தான் பிரதம மந்திரியவர்களும் உள்நாட்டு மந்திரியவர்களும் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். ஆனால் இந்தியே கூடாது என்று சொல்லுகிற வாதத்தை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றுதான் திருப்பித் திருப்பி நான் சொல்ல விரும்புகிறேன். இந்தியால் தமிழுக்கு ஆபத்து வந்து விடும் என்ற கருத்தைக் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதற்கு உரிமையுண்டு; அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அப்படிச் சொன்னால் அதற்கு விளக்கத்தை நாங்கள் கூறுகிறோம். ஆட்சியின் சார்பாக நாங்கள் அதைப் பற்றி விளக்கம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்கள், 'இந்தியே கூடாது; இந்தி அகில இந்திய ஆட்சி மொழியாகக் கூடாது; ஆங்கிலமே தொடர்ந்து இருக்கவேண்டும்' என்ற கருத்தைச் சொல்ல உரிமை உண்டு. ஆனால் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதற்கு உரிமை உண்டு, கொளுத்துவது பற்றிப் பேசுவதற்கு உரிமை உண்டு என்று சொன்னால் அதை எந்த அரசாங்கமும், எந்த நாடும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டின் தேசியச் சின்னங்களான கொடியையோ, அரசியல் சட்டத்தையோ அவமதிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு செய்வது குற்றம் என்று நாம் சட்டம் செய்திருக்கிறோம்.

திரு. ப. உ. சண்முகம்: இந்தி பேசாத மாநிலங்கள் ஆங்கிலம் தேவையில்லையென்று தீர்மானித்தாலன்றி ஆங்கிலம் நீக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தி பேசாத பிற மாநிலங்கள் ஆங்கிலம் தேவையில்லையென்று சொல்லி, நம்முடைய மாநிலத்தில் மட்டும் ஆங்கிலம் தேவை என்ற நிலைமை இருக்குமானால் அப்போது ஆங்கிலம் நீடித்து இருக்கும் என்பதற்கு அமைச்சர் அவர்கள் என்ன உத்தரவாதம் கூறுகிறார்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தமிழ் நாட்டைப் பொருத்த வரை எப்போது நாம் ஆங்கிலம் தேவையில்லை என்று சொல்கிறோமோ அதுவரையில் இந்தியோடு கூட ஆங்கிலம் இருக்கும். அதைப் பற்றிக் கொஞ்சம் கூட ஐயம் தேவையில்லை. இப்போது இருக்கிற சட்ட உறுதி மொழியை வைத்துக் கொண்டு பொறுப்பு வாய்ந்த முதல் மந்திரி என்ற நிலைமையில் நான் உறுதியாகக் கூற முடியும்.

அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போகிறோம் என்று பிரகடனம் செய்கிறார்கள். இந்த மன்றம் ஏற்றுக் கொண்ட ஒரு சட்டத்தின்படி அது நேரிடையான ஒரு குற்றம். குற்றத்தைச் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அதை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. நிச்சயமாக அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். என்ன முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதை யார் குற்றம் செய்கிறார்களோ அவர்களைக் கேட்டுக் கொண்டு எடுக்க முடியாது. குற்றம் செய்கிறவர்கள் என்ன விரும்புகிறார்களோ, என்ன எதிர்பார்க்கிறார்களோ அதன்படி அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை

எடுத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பலவிதமான நடவடிக்கைகளை நிலைமைக்கேற்றவாறு அதிகாரிகள் எடுத்துக் கொள்வார்கள். முதல் முதலாக, தி. மு. கழகப் பெருந் தலைவர் "நான் இந்தச் சட்டத்தை எரித்துதான் தீருவேன்; அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிக்கிற வரையில் திருப்தி ஏற்படாது; அதை எரித்ததற்கு ஒரு போலீஸ்காரன் வந்து சாட்சி சொல்ல வேண்டும்" என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிக்க வேண்டுமென்று பல நாட்களாகக் கங்கணம் கட்டி பிரகடனம் செய்தார்கள். அவ்வாறு எரிப்பதற்கு அரசாங்கம் விடவில்லை. ஆனால் எரிப்பதாகச் சொல்லியதற்காக, குற்றம் சாட்டப்பட்டு அதன்பேரில் கோர்ட்டார் தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். ஒரு இடத்தில் ஒரு நிலைமையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அதே மாதிரிதான் எல்லா இடங்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு போலீசாரைச் சேர்ந்தது. போலீசார் தவறு செய்தால் அரசாங்கம் தலையிட்டு மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும். பொதுவாகப் போலீசார் நிலைமைக்கேற்றவாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். தீர்ப்புக் கொடுக்கும் நீதிபதிகளும் ஒரேவிதமாகத் தீர்ப்புக் கொடுக்கிறார்களா என்றால் இல்லை. வேறு வேறு விதமாக ஒரே குற்றத்திற்கு தீர்ப்புக் கொடுக்கிறார்கள். அதற்காக நீதிபதிகளைக் குற்றம் சொல்ல முடியுமா?

10-00 a.m. அவ்வாறு சட்டத்தை எரிக்க முற்பட்டால் பல வகைகளில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. போலீஸ் அப்படிச் செய்யவில்லை, இப்படிச் செய்யவில்லை என்று குறை கூற கொஞ்சம்கூட இடமில்லை. அப்படி ஒரு குற்றத்தைச் செய்கிறது என்றால், கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும், குற்றத்தை நேரடியாகச் செய்கிறவர்கள், செய்யப் பார்க்கிறவர்கள், குற்றத்தைச் செய்ய தூண்டுகிறவர்கள், குற்றம் செய்ய ஆதரவு அளிக்கிறவர்கள் இவை எல்லாம் ஒரேமாதிரிக் குற்றமாகத்தான் கருதப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி: அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவை கொளுத்தினாலும், அல்லது கொளுத்துவதற்கு தூண்டினாலும் ஒரேவிதமான தண்டனை இருக்கிறது என்று இருக்கும்போது ஏன் தூண்டினார்கள் என்ற குற்றத்திற்காக கைது செய்து வழக்கு தொடராமல் கொளுத்த விடுகிறார்கள்? அப்படி கொளுத்த அனுமதிப்பதைப் பார்க்கும்போது ஒருவேளை தமிழக அரசே இந்தியை எதிர்க்கிறது என்பதற்கு அடையாளமாகக் கருதலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கு நானே விளக்கம் கூற முடியும். அவர்களுக்கு வழக்கறிஞர்கள் உண்டு, ஆலோசனை கூறுவதற்கு. கொளுத்துவதற்காக இருந்தேனே தவிர கொளுத்தியிருக்க மாட்டேன் என்று சொல்லலாம். இப்படியே கொளுத்தப் போகிறேன், கொளுத்தப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். நாங்கள் அப்படிச் செய்யவில்லையே என்று சொல்

வார்கள். ஆக, போலீசாருக்கு வேறு எண்ணம் இல்லை. நான் இருக்கிற வழக்கைப் பற்றி குறிப்பிடுவதாக நினைக்க வேண்டாம். அதுபற்றி குறை கூறியதால் குறிப்பிடுகிறேன். குற்றம் செய்வதற்கு வாழ்த்தி வழியனுப்புவதா? எதற்காக வாழ்த்தி வழியனுப்புவது? மலேயா, அமெரிக்கா, இங்கிலாந்து, டெல்லி செல்கிறவர்களுக்கு, தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு, வாழ்த்தி, வழி அனுப்பலாம். பார்லிமெண்ட்டுக்குச் செல்கிறவர்களுக்கு வாழ்த்தி வழி அனுப்பலாம். ஆனால் குற்றம் செய்கிறவர்களுக்கு வாழ்த்தி வழி அனுப்பலாமா? இது கூட குற்றமா என்று கேட்கிறார்கள். அது குற்றம்தான். அதுவும் சட்டமன்ற அங்கத்தினர்கள், பொறுப்புள்ளவர்கள், ஒரு குற்றம் செய்வதற்கு தூண்டிவிட்டு, வாழ்த்துவது, வாழ்த்தி அனுப்புவது குற்றம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா? இந்த மன்றமே செய்த சட்டம் இருக்கிறது. அச்சட்டப்படி நேரடியாக குற்றம் செய்துவிட்டு குற்றம் செய்கிறவர்களை நான் வாழ்த்தக்கூடாதா என்றால், அப்படி வாழ்த்தினால் அதுவும் குற்றம் என்று போலீஸார் கருதுகிறார்கள், அரசாங்கமும் கருதுகிறது. கோர்ட் இருக்கிறது. நீதிபதிகள் தீர்ப்புக் கூற வேண்டும். ஆனால் போலீஸ் எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகள் எல்லாம் அவர்கள் அவர் எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகள் எல்லாம் அவர்கள் பொறுப்போடு அந்தக் கடமையைச் செலுத்துகிறார்களே தவிர போலீஸாரைப் பொறுத்தவரையில் ஏதோ ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாக வேண்டுமென்று வேறு வேறு விதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறார்கள் என்று கருதுவதற்கு கொஞ்சம் கூட இடமில்லை என்று நான் எடுத்துக் கூறுவேன்.

அடுத்தபடியாக, விலைவாசி பற்றியது. விலைவாசி பற்றி கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் தி.மு.க. அங்கத்தினர்கள், நாங்கள் ஒரு விலைவாசிப் போராட்டம் நடத்தினோம். அதனால்தான் கவர்னர் அவர்கள் உரையில் அது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று பெருமை பேசிக் கொண்டால் அதை நான் ஆட்சேபிக்கவில்லை. திருப்திப்படலாம், மன சாந்தி பெறலாம். ஆனால் இந்த விலைவாசி பற்றி இன்று நேற்றல்ல, விலைவாசிப் போராட்டத்தை தி.மு.க. நடத்துவதற்கு முன்பேகூட எப்போதும் விலைவாசிப் பிரச்னை என்பது அரசாங்கத்திற்கு கவலை கொடுத்து வருகிற ஒரு விஷயம். அதை அரசாங்கம் தெரிவிக்காமல் இல்லை. நானே இந்த மன்றத்தில் எவ்வளவோ முறை தெரிவித்திருக்கிறேன். வேகமாக வளர்ந்து வருகிற சமுதாயத்தில் நாம் திட்டங்களை வேகமாக நிறைவேற்றி வருகிறோம். மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டே வருகிறது. வாங்கும் சக்தி பெருகிக் கொண்டு வருகிறது. திட்டச் செலவு ஏராளமாக ஏற்படுகிறது. விலைவாசி உயர்வது பற்றி மத்திய ஆட்சியின் ப்ளானிங் கமிஷன் சார்பாக மூன்று நான்கு சிறந்த பொருளாதார நிபுணர்களைக்கொண்ட ஒரு குழு இதை பல நாட்கள் ஆராய்ந்தது. நானும் அந்தக் குழுவில் சில நாட்கள் கலந்து கொண்டு அந்த விவாதத்தைக் குறித்து நேராக நிபுணர்களிடம் இருந்து தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

விலைவாசி உயர பல காரணங்கள் உண்டு. ஒன்று மட்டுமல்ல காரணம். விலைவாசியைப் பற்றிக் கூறும்போது பொதுவாக உணவுப் பொருளின் விலையைக் குறைக்க வேண்டுமென்பது பற்றித்தான் சொல்லுகிறோம். அந்தக் கோணத்தில் மட்டும் பார்த்தால் போதாது, உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாமல் செய்ய வேண்டும். இந்த மன்றத்தில் ஒரு பக்கத்தில், விலை ஏறிக்கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள், மற்றொரு பக்கத்தில் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கவில்லை, விவசாயச் செலவு அதிகமாகிறது, அவர்களுக்கு கட்டுப்படியாக வேண்டாமா? அவர்களுக்கு போதிய ஊக்கம் இருக்க வேண்டாமா? அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றும் என்றால் அதில் தலையிட்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு அவர்கள் தானியங்களுக்கு நியாயமான விலை கிடைக்க, அவர்களுக்கு கஷ்டம் ஏற்படாமல் பாத்துக்கொள்ள எப்போதும் தயார் என்று மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் எவ்வளவோ முறை வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறது, இன்றும் வற்புறுத்துவோம். ஆக, இது ஒரு சிக்கலான பிரச்னை. விலை சொன்னார்கள். மத்திய அர்சாங்கமானாலும் சரி, அல்லது மாநில அரசாங்கமானாலும் சரி, விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக்கூடாது, கட்டுப்படியான விலைக்கு கீழ் விலை குறை அதிகமாக ஏறக்கூடாது, குறையவும் கூடாது, விவசாயிகளுக்கு கட்டுபடியாக இருக்க வேண்டும். இதை எப்படிச் செய்வது என்பதுதான் இப்போது தீவிரமாக கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம். கவர்னர் அவர்கள் உரையில் விலைவாசிபற்றி குறிப்பிட்டார்கள். இப்போது என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறோம் என்று குறிப்பிட்டார்களா என்றார்கள். நியாய விலைக்கடைகள் கன்ஸ்யுமர்ஸ் கோவாப்பரேடிவ் ஸ்டோர்ஸ் இவை போதுமா என்றால் போதாது என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். விலை அதிகரிப்பு என்பதற்கு நிவாரணம் அளிக்க என்று சம்பளத்தை உயர்த்துகிறோம், டி.ஏ.-யை உயர்த்துகிறோம். தொழிலாளர்களுக்கு டி.ஏ. பற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. தொழிலாளர்களுக்காக என்று பிரத்யேக கன்ஸ்யூமர் ஸ்டோர்ஸ் இருக்கிறது. இவையெல்லாம் ஓரளவு பரிகாரம் அளிக்கக்கூடியவை. அதைத்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள். விலை உயர்வதற்கு பல பாக்டேர்ஸ் இருக்கிறது. நான் கேள்வி நேரத்தில் கூறியதுபோல் உற்பத்தியை இன்னும் அதிகமாக பெருக்குவதுதான் விலை நிரந்தரமாக ஓரளவு குறைக்கப்படுவதற்கு சிறந்த ஒரு சாதனம் என்பதை நாம் உணர வேண்டும். அதைத்தான் கவர்னர் அவர்கள் அவர்களது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாய உற்பத்தி பெருக வேண்டும் என்று சொன்னால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், சுதந்திரா கட்சித் தலைவர் சொல்லுவதைத்தான் சொல்லுகிறார்கள் என்று சொன்னார்கள். நான் தஞ்சையில் பல முறை கேட்டிருக்கிறேன். சிலர் உழைத்து பயிரிடுபவர்களுக்காக சொல்வார்கள். போதிய குத்தகை கிடைப்பதில்லை, போதிய பாதுகாப்பு இல்லை என்பார்கள். மிராசுதார்கள் அவர்களை கம்யூனிஸ்டுகள் என்று சொல்லுவர்ாகள். அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது. ஏழை

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

விவசாயிகளிடம் அக்கரை கொண்டுள்ள தலைவர்களை, அந்த ஏழை விவசாயிகளுக்காக அவர்கள் பாடுபடுவதால் அவர்களை கம்யூனிஸ்டுகள் என்கிறார்கள். கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு யாரும் விவசாயிகளுக்காக பாடுபடுவதில்லை என்பது அவர்களது எண்ணம். உற்பத்தி பெருக வேண்டுமென்று சொல்கிறார்கள். சுதந்திராக் கட்சியானாலும் சரி, தி.மு.க. ஆனாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி, யார் நல்லது சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்கிறோம். ஒருவர் சொல்வதற்காக என்று மாற்றிக் கொள்ளவோ அல்லது மாற்றிக் கொள்ளாமல் இருக்கவோ இல்லை. விலைவாசியைப் பொறுத்தமட்டில், எந்த எந்த வகையில் இந்தப் பிரச்னையை அணுகி, நன்கு ஆராய்ந்து, தீர்வு காணலாம் என்பதில்தான் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும். அதைத்தான் கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள், அரிசி மில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வது பற்றி குறிப்பிட்டார்கள். அதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. ஜனநாயக சோஷியலிசம் என்பது பற்றிய விளக்கம் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்படவில்லை என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் விவாதித்ததை கவர்னர் அவர்கள் உரையில் எதிர்பார்ப்பதற்கில்லை. வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது அதுபற்றியெல்லாம் பேசலாம். அரிசி மில்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்துக் கொள்வது பற்றி நான் ஏதோ நிதானமாகச் செல்வேன் என்று நான் குறிப்பிட்டதாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் அரிசி குத்துகின்ற மில்கள் ஏராளமாக இருக்கின்றன. சிறிய மில்கள் ஏராளமாக இருக்கின்றன. பெரிய மில்களாக சுமார் 500-க்கு மேல் இராது என்று நினைக்கிறேன். சிறிய சிறிய மில்கள்தான் ஏராளமாக இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்துக் கொள்வது என்றால் அதன் விளைவு என்ன என்பதை நாம் ஆலோசிக்க வேண்டும். இதனால் பாதகம் யாருக்கும் ஏற்படக்கூடாது என்ற காரணத்தினால்தான் நான் நிதானமாக போகவேண்டும் என்று குறிப்பிட்டேன். அத்தனை மில்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்வது என்றால் உழுது பயிரிடுகின்ற விவசாயிக்கு எந்தவிதமான சுதந்திரமும் இல்லாது போய்விடும். அரசாங்கம் யாருக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறதோ அவர்களுக்குத்தான் தங்கள் தானியங்களை கொடுக்க வேண்டும். தங்கள் இஷ்டம்போல் யாருக்கும் கொடுக்க முடியாத நிலை ஏற்படும். அது மட்டுமல்ல, இப்போதுள்ள நிலைமையில் விவசாயி தாங்கள் உற்பத்தி செய்யும் நெல்லில், தனக்கு மகள் இருக்கிறாள்—அவளுடைய திருமண அவசியத்திற்காக இரண்டு வண்டி நெல்லை வைத்திருக்கலாம்—அதற்குரிய உரிமை இப்போது இருக்கிறது. நாம் எல்லா மில்களையும் எடுத்துக்கொண்டு விட்டால் அந்த உரிமை இருக்காது. அரசாங்கம் எல்லாவற்றையும் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் அரசாங்கம் என்ன விலையைச் சொல்லுகிறதோ அந்த விலைக்குத்தான் கொடுக்க வேண்டும், இப்போது இருப்பது போன்று, அரசாங்கத்திற்கு கொடுத்தது போக பாக்கியுள்ளதை வேறு விலைக்கு விற்கின்ற உரிமை இருக்காது. ஆகவே எல்லா மில்களையும் அரசாங்கம் ஏற்று எடுத்துக்கொள்ளுகின்ற நிலைமை

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

ஏற்படும்போது, விவசாய உற்பத்தி செய்கின்றவர்களுக்கும், விவசாயப் பொருட்களை வாங்கி உபயோகிப்பவர்களுக்கும் எந்தவிதமான பாதகமும் வராதவாறு நிதானமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் யோசனை. ஒரேயடியாக 'ஸ்டேட் டிரேடிங்' முறையில் எடுத்துக் கொள்வது என்றால் 'கம்ப்ளீட் கண்ட்ரோல்' கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்படும். பொதுவாக விவசயாத்தின்மீது (அக்ரிகல்சரல் ஆபரேஷன்ஸ்) விவசாய முறைகளின்மீது எல்லாம் கம்ப்ளீட் கண்ட்ரோல் கொண்டு வரவேண்டும் என்கின்ற நிலைமைதான் ஏற்படும். இதை நம்முடைய நாட்டிலுள்ள விவசாயிகள் ஒப்புக் கொள்வார்களா என்று பார்த்தால், யாரும் அதை விரும்புவதாகத் தெரியவில்லை. கன்ட்ரோல் ஏற்பட்டால் அதன் காரணமாக பல தொல்லைகள் வந்துவிடும் என்று பொதுவாக விவசாயிகள் அஞ்சுகிறார்கள். அரசாங்கத்தின் நோக்கம் அவசியமான கண்ட்ரோல்களை தவிர, எல்லாவற்றிலும் கன்ட்ரோல் வரவேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. கூடுமான வரையில் கண்ட்ரோல் இல்லாத முறையில், விவசாயிகளுக்கு எந்த விதமான தொல்லைகளும் ஏற்படாத வகையில், எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். கூடுமான வரையில் விவசாயிகளுக்கு அதிகமான பலன்கள் ஏற்படவேண்டும், பாதுகாப்பு அளிக்க வேண்டும், அதன் மூலமாக அவர்கள் உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். தானியத்தை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் ஒரு புறம், அதே நேரத்தில் தான்யங்களை வாங்கி உபயோகிக்கின்றவர்கள் ஒரு புறம். வாங்கி உபயோகிக்கின்றவர்களுக்கு விலை குறைந்தால் அதுவும் வரவேற்க வேண்டியதுதான், உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் நியாயமான அளவு லாபம் கிடைக்கவேண்டும், அதுவும் வரவேற்கவேண்டியதுதான். ஆனால் நிலைமை இரண்டுக்கும் சம்பந்தம் இல்லாமல் போகிறது. இரண்டுக்கும் இருக்கின்ற விலைகளைப் பார்த்தால், 'ப்ரொட்யூசர்ஸ் பிரைஸ்' ஒரு பக்கம் 'கன்ஸ்யுமர்ஸ் பிரைஸ்' ஒரு பக்கம், இவ்விதம் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. இதை நாம் அகற்ற வேண்டும். இதை அகற்ற வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். எந்தவிதத்திலும் இதை அகற்றியாக வேண்டும். இதற்கு குறுக்கே நிற்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, நியாயமற்ற முறையில் லாபம் சம்பாதிப்பது என்ற முறையில் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது. கிடைக்கின்ற லாபம் விவசாயிகளுக்கும் இல்லாமல், வாங்கி சாப்பிடுகின்றவர்களுக்கும் இல்லாமல் நடுவில் இருக்கின்றவர்கள் எந்தவிதமான வேலையும் செய்யாமல் இந்த லாபத்தை அநியாயமாக சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு நாம் இடம் கொடுக்க முடியாது. இதை எந்தவிதத்திலும் அகற்றியேயாக வேண்டும். இதற்கு என்ன வழி? கூட்டுறவுச் சங்கங்களை அதிகமாக அமைத்து அதன் மூலமாக வினியோகித்து நடுவில் சம்பாதிக்கின்றவர்களை அகற்றலாம் என்பதுதான் அரசாங்கத்தின் ஆலோசனை. கூட்டுறவு சங்கங்களும் அதிகமான லாபத்தை எதிர்பார்க்கின்றன என்றும் சொல்லப்பட்டது. இதையும் அரசாங்கம் கவனித்துக் கொண்டி

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

ருக்கிறது. கூட்டுறவு சங்கங்களில் தவறே இல்லை என்று நான் சொல்ல முன்வரவில்லை. அது ஒரு பக்கம் கவனிக்க வேண்டும். எதுவானாலும் ரைஸ் மில்களை எடுத்துக் கொள்வது என்கின்ற விஷயத்தில் கொஞ்சம் நிதானமாக, யாருக்கும் பாதகம் ஏற்படாத விதத்தில் நடந்துகொள்ள வேண்டும், அதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்ற முறையில்தான் நான் சொன்னேன் என்பதை கனம் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு பயன் ஏற்பட வேண்டும், உபயோகிக்கின்றவர்களுக்கும் பயன் ஏற்பட வேண்டும். இந்த நிலையில் இல்லாமல் ரைஸ் மில்களை எடுத்துக் கொள்வதினால் பல சிக்கல்களை ஏற்படுத்தக்கூடாது, விவசாயிகளுக்கு தொல்லைகளை அளிக்கக்கூடாது என்ற நோக்கத்துடன்தான் இதை சற்று நிதானமாக செய்யவேண்டும் என்று சொன்னேனே தவிர ரைஸ் மில்காரர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் நான் கூறவில்லை. என்னுடைய உண்மையான நோக்கத்தை கனம் கம்யூனிஸ்ட் தலைவர்களும் அறிவார்கள் என்றே நினைக்கிறேன், அவர்களும் உணராமல் இல்லை, ஏதோ வாதத்திற்காகத்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று எண்ணுகிறேன். இப்போது அரசாங்கம் கொள்முதல் செய்து கொள்வது என்கின்ற முடிவுக்கும் அரசாங்கம் வந்திருக்கிறது. இதன் மூலம் ஓரளவு விலையை கட்டுப் படுத்தலாம். அதோடு நியாயவிலைக் கடைகளையும் ஏற்படுத்த வேண்டும். இதனுடைய அவசியத்தைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். விலைகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் கருதுகிறார்கள். விவசாயி சாதாரணமாக கட்டுப்படியாகின்ற விலையை எதிர்பார்த்தாலும்கூட, அதை அநியாயமான விலை அல்லவா' என்று கேட்கின்றோம். கூடியவரைக்கும் குறைந்த விலையிலேயே இருக்க வேண்டும் என்று தான்யங்களை வாங்குவோர் எண்ணுகின்றனர், இதற்காக சப்ஸிடி கொடுக்கக்கூடாதா என்றும் கேட்கிறார்கள். அவ்விதம் சப்ஸிடி கொடுப்பது என்றாலும், அந்த ரூபாயை ஏழை மக்களின் வரிப்பணத்திலிருந்துதான் கொடுக்க வேண்டும். ஆகவே தான் அறுவடை காலத்தில் குறைந்த விலையில் வாங்கி லாப நோக்கம் இல்லாமல் நியாய விலைக் கடைகள் மூலமாக கொடுப்பது, இதன் மூலமாக ஓரளவுக்கு விலையை கட்டுப்படுத்தலாம், ஏழை மக்களுக்கு குறைந்த விலையில் தான்யங்களை கொடுக்க முடியும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். இப்போது 500 நியாயவிலைக் கடைகள்தான் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது போதுமா என்றால் போதாதுதான். ஏழை மக்களுக்கு உதவி அளிக்கின்ற வகையில் இந்த நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டியது அவசியம். சென்ற இரண்டு ஆண்டுகளாக நியாயவிலைக் கடைகளுக்காக நாம் கொள்முதல் செய்யவில்லை. அதற்கு முன்பாக கொள்முதல் செய்தோம். கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு தொல்லைகள் ஏற்படக்கூடாது என்று கருதி கொள்முதல் செய்வதை நிறுத்தினோம். மத்திய அரசாங்கம் தங்கள் கைவசம் உள்ள அரிசியை நமக்கு கொடுத்து வந்தார்கள். இப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியால், அரிசி எல்லைப் பிரதே

சங்களுக்கு அதிகமாக தேவைப்படுகிறது. முன்னால் இருந்த மனிதர்களை இப்போது உபயோகிக்கின்றார்கள் என்றாலும் இப்போது அதிகமாகவே தேவைப்படுகிறது. நமது எல்லையில ஏராளமான சைன்யங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஏராளமான அளவில் நாம் உணவுப் பொருட்களை அனுப்பியாக வேண்டியிருககிறது. இதன் காரணமாக சிறிதளவுக்கு நமக்கு தட்டுப்பாடு வருகிறது. ஆகவே மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்படுவதை எதிர்பாராமல் நாமே கொள்முதல் செய்து கொள்வது என்ற நோக்கத்தோடுதான் இப்போது கொள்முதல் செய்வது என்று முடிவு செய்திருக்கிறோம். நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வது என்றால், இப்போதுள்ள நிலையில் விவசாயிகளுக்கு பல தொல்லைகள் ஏற்படக்கூடும். அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்ற நோக்கத்துடன்தான் இதை மில்காரர்களிடமிருந்தும், டீலர்களிடமிருந்தும் கொள்முதல் செய்வது என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் மில்காரர்கள் தாங்கள் மற்ற தான்யங்களையும் குறைந்த விலையில் வாங்க முன் வருகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. இதைப்பற்றியும் அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது. மொத்தத்தில் பொதுவாக எல்லா தானியங்களையுமே நியாயமான விலைக்குக் கிடைக்கின்ற முறையில் நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் மில்காரர்களோ அல்லது டீலர்களோ வேண்டுமென்றே விலையைக் குறைத்து, விவசாயிகளை சுரண்டவேண்டுமென்ற நோக்கத்தோடு கேட்டால், அதற்கு பரிகாரமாக, கூட்டுறவு சங்கங்கள் முன் வந்து, கேவலம் வெறும் வியாபார நோக்கத்தோடு பார்க்காமல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து அதை மில்காரர்களுக்கோ அல்லது டீலர்களுக்கோ கொடுக்க முன் வரலாம். இதற்கு வேண்டிய பொருள் உதவியை அரசாங்கம் அளிக்கும் என்று தெரிவித்துக் கொண்டு வருகிறேன். இப்படி விலை சிக்கல் ஒரு புறம், அதே நேரத்தில் இதை சமாளிப்பது எப்படி, மொத்தமாக இதனால் ஏற்படும் பாதகங்கள் என்ன என்பவை எல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் தொடர்ந்து இருக்கிறது. இதற்கெல்லாம் அரசாங்கம் அவ்வப்போது கவனம் செலுத்தி, வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதோடு உடனடியாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது, மேலும் கவனம் செலுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள், அண்மையில் தஞ்சைக்கு சென்றிருந்த காலத்தில் நெல்லுக்கு நிர்ணயித்திருக்கின்ற விலையைப்பற்றி குறிப்பிடுகையில், மில்காரர்களும், நெல் வியாபாரிகளும், அரசாங்கத்திற்கு கொடுக்கவேண்டும் என்று நிர்ணயித்திருக்கிற 20 சதவிகிதம், 15 சதவிகிதம் இவற்றுக்கு மட்டும்தான் குறைந்த விலையில் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படியானால் 20 சதவிகிதம், 15 சதவிகிதம் போக பாக்கியிருப்பதை என்ன விலைக்கும் அவர்கள் விற்கலாமா? இதைப்பற்றி அமைச்சர் அவர்களுடைய விளக்கம் என்ன?

22nd January 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் விவசாயிகளிடத்தில் வாங்குவதைப் பற்றித்தான் நான் குறிப்பிட்டேன். இதிலே மேலே விற்பது என்ற பிரச்னை இல்லை. அரசாங்கத்துக்குக் கொடுக்கும் விலையைக் குறிப்பிட்டு, விலையை குறைத்து கொடுக்கவேண்டும் என்று சொல்லுவது சரியல்ல என்று குறிப்பிட்டேன். அரசாங்கத்தில் ஒரு பகுதியைத் தான் வாங்குகிறார்கள். அதை சாக்காக வைத்து விலையை குறைக்கக்கூடாது. அரசாங்கத்திலே அவர்களிடமிருந்து மொத்தத்தையும் வாங்கவில்லை. அப்படிக்கூட சொல்லப்படுகிறது. அதாவது அவர்களிடமிருந்து மொத்தத்தையும் வாங்கி விடலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது அப்படி வாங்கவில்லை. அவர்களிடமிருந்து ஓரளவுதான் வாங்குகிறோம். அதை சாக்காக வைத்து எல்லாவற்றையும் குறைந்த விலைக்குக் கொடுக்கவேண்டும் என்று விவசாயிகளிடத்தில் சொல்லுவது சரியல்ல என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

அடுத்தபடியாக, இந்த கவர்னர் உரையிலே . . .

புலவர் கா. கோவிந்தன் : வாங்குகிற நெல்லைப் பற்றிக் கூறினேன் என்று சொல்லுகிறார். சர்க்காருக்கு விற்கும் 20 சதவீதம் அல்லது 15 சதவிதம் இந்த விலையில் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அரிசியை பொது மக்களுக்கு விற்கும்போது இந்த விலைக்குத் தான் விற்கவேண்டும் என்று அவர்களுக்கு நிபந்தனை செய்கிறதா அல்லது என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று அவர்களுக்கு அனுமதி அளிக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் முதலில் அதிக விலைக்கு வாங்கவேண்டும். அப்படி வாங்கும்போது விவசாயிகளை அவர்கள் சுரண்டக்கூடாது. சர்க்காருக்கு ஓரளவுக்குத்தான் இந்த விலைக்குக் கொடுக்கவேண்டும் என்று வைத்திருக்கிறோம். அதை சாக்காக வைத்து எல்லாவற்றையும் குறைந்த விலைக்குக் கேட்காமல் அதிக விலைக்கு வாங்கி, அவர்களும் கொஞ்சம் லாபம் வைத்து, அதிக லாபத்திற்கு ஆசைப்படாமல் விற்றால் அதைப்பற்றி ஒன்றும் ஆட்சேபிக்க மாட்டோம்.

புலவர் கா. கோவிந்தன் : வியாபாரிகளும், ஆலை முதலாளிகளும் விவசாயிகளிடத்தில் வாங்குகிற நெல்லை இன்ன விலைக்கு வாங்க வேண்டும் என்ற குறிப்பு இல்லை. விற்கிற நேரத்தில் சர்க்காருக்கு இன்ன விலைக்கு விற்கவேண்டும் என்று சொல்லப்படுகிறதே தவிர, விவசாயிகளிடத்தில் வாங்குகிற நேரத்தில் இவ்வளவு பகுதி இவ்வளவுக்கு வாங்கவேண்டும் என்று இல்லை. ஆகவே வாங்குகிற நேரத்தில் நல்ல விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்களா இல்லையா என்று விவசாயிகள் தெரிந்துகொள்ள என்ன வழி இருக்கிறது? விவசாயிகள் தாங்கள் விற்ற விலை நியாய விலையா அல்லது அநியாய விலையா என்று தெரிந்து கொள்ள என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்ன விலைக்கு வாங்கவேண்டும் என்ற நிர்ணயம் இல்லை. சர்க்காருக்கு ஓரளவுக்கு கொடுக்க வேண்டும் என்று இருப்பதை என்ன விலைக்குக் கொடுக்கவேண்டும்

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

என்று சொல்லியிருக்கிறோம். அதை சாக்காக வைத்து விவசாயிகளிடமிருந்து வாங்கக்கூடிய மொத்த தானியத்திற்கும் குறைந்த விலையில் கொடுக்கவேண்டும் என்று கேட்கக்கூடாது என்று சொன்னேன். மற்றொன்று அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது. பொதுவாக விலைக்கு வாங்குகிறவர்களிடத்தில் அதிகபட்சம் எவ்வளவு கேட்கலாம், எந்த அளவுக்கு அனுமதி அளிக்கலாம் என்ற அறிக்கையை பிரகடனப்படுத்தலாம் என்ற யோசனை அரசாங்கத்திடம் இருக்கிறது என்று நான் கூறினேன்.

நான் முன்பே குறிப்பிட்டேன், அரசாங்கத்தின் கொள்கை திட்டம், நிலை இவைகளைப் பற்றி சுருக்கமாகச் சொல்லுவது கவர்னர் உரை. வந்திருக்கிற திருத்தங்களைப் பார்த்தால், இது இதைச் சொல்ல விட்டு விட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வந்திருக்கிற திருத்தங்களில் காலராபற்றி ஒரு திருத்தம். கவர்னர் அவர்கள் காலராவைப் புறக்கணித்து விட்டார்களே, எதனால் புறக்கணித்தார்கள்? காலராவினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பேரில் அக்கறை இல்லையா என்று கூறினார்கள். அப்புறம் தங்கக் கட்டுப்பாடு பற்றிச் சொன்னார்கள். தங்கக் கட்டுப்பாடு பற்றி அப்போதைக்கப்போது விளக்கியிருக்கிறோம். தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிப்பது, தொழில்கள் அமைத்துக் கொடுப்பது என்பது பற்றி அப்போதைக்கப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவை அப்போதைக்கப்போது விளக்கப்பட்டும் வருகிறது. அது பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்படவில்லையென்றால், அது ஏதோ புறக்கணிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

அதே மாதிரி ஸ்டீல் ப்ராஜெக்ட் பற்றி, உருக்கு ஆலை பற்றி, ஒன்றும் சொல்லவில்லையே என்று சொன்னார்கள். வரும் வரும் என்று சொல்லுகிறார்களே தவிர, ஒன்றையும் காணவில்லையே என்று குறிப்பிட்டார்கள். எப்படி உருக்கு தயாரிப்பது, எப்படி பதப்படுத்துவது, பழுப்பு நிலக்கரியை சுட்டு ஆக்குவதா அல்லது சுடாமல் ஆக்குவதா, இதெல்லாம் பெரிய விஷயங்கள். இதையெல்லாம்தான் பெரிய நிபுணர்களிடத்தில், அயல் நாட்டு நிபுணர்களிடத்தில் கொடுத்திருக்கிறோம். இதிலே அவசரப்படுவதால் என்ன பயன்? அரச மரத்தை சுற்றியது மாதிரி

திரு. ப. உ. சண்முகம் : அமைச்சர் அவர்கள் அரச மரத்தைச் சுற்றுவது மாதிரி என்று சொன்னார்கள். ஆறு ஆண்டு காலமாக அரச மரம் ஆல மரமாகி, ஆல மரம் புளிய மரமாகி, ஸ்விட்ஸர்லாண்ட் அப்புறம் இடாலி, ஜம்ஷெட்பூர், ஜப்பான் என்று ஒவ்வொரு நாட்டுக்கும் போய்க்கொண்டிருக்கிறது. உலகத்திலே எந்தெந்த நாடுகளிலெல்லாம் ஆராய்ச்சிக் கூடம் இருக்கிறதோ, அங்கெல்லாம் அனுப்பப்படுமா? அப்படி எல்லா நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு ஆராய்ச்சி முடிந்த பிறகு தான் அமைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எப்படியும் இது பெரிய விஷயம். அதோடு மிகவும் சிக்கலான விஷயம். நிபுணர்களைக் கேட்டுச் செய்யவேண்டும். நம் நாட்டில் தகுந்த நிபுணர்கள் இல்லை.

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அதற்காக அயல் நாட்டு நிபுணர்களைக் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது. அவசரப்பட்டு திட்டமே கடைசியில் தோல்வி அடைந்துவிட்டால், எல்லோருக்கும் கெட்ட பெயர். ஆனால் இதிலே தவிர்க்கக்கூடிய கால தாமதம் சிறிதளவுகூட இல்லை. துர்காபூரில் பரிசீலனை செய்வது போதாது. இப்போது பரிசீலனை செய்கிறார்கள். பரிசீலனையை அநேகமாக முடித்து விட்டார்கள். இப்போது பழுப்பு நிலக்கரியை சுடாமலேயே பயன்படுத்தலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஃபைனல் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை. அதுவும் சீக்கிரம் வரும் என்று நினைக்கிறேன். ரிப்போர்ட் வந்தவுடன் அதற்கு மேலே மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். ஆனால் இப்போது ஒன்றுகூற முடியும். இது சாத்தியப்படும். இந்தத் திட்டம் சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று மட்டும், அந்த அளவுக்கு எனக்குத் தெரியும். இப்போது இருக்கிற நிலை என்னவென்றால், இதற்கு எவ்வளவு தூரம் நெய்வேலி நிலக்கரியை பயன்படுத்துவது, எவ்வாறு தொடங்குவது என்றெல்லாம் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இது சாத்தியப்படும் என்று நன்றாகப் புலப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மது விலக்கு பற்றியெல்லாம் சொன்னார்கள். மது விலக்கை எடுத்துவிடவேண்டுமென்று எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் கூடக் கூற மாட்டார்கள். மது விலக்குக் குற்றங்களைப் பற்றி மிகைப்படுத்திக் கூறினார்கள். எனது சகா உள்நாட்டு அமைச்சர் கூறியது போல, இதைப் பற்றி பரிசீலனை செய்ய வந்தவர்கள் கூட அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாகாணங்களில் உள்ளதை விட தமிழ்நாட்டில் மது விலக்குக் குற்றங்கள் குறைவு என்று அவர்களே கூறியிருக்கிறார்கள். எந்தத் திட்டமாக இருந்தாலும் குற்றம் செய்கிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் இந்தத் திட்டத்தினால் பயன் அடைந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதைப் பற்றி வேறு விதமான கருத்து எழவில்லை என்று அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுவாக கடன் அதிகமாகப் போய்விடுகிறது என்று சொல்லுகிறார்கள். விவசாயிகளுக்கு கடன் வசதி இல்லாமல் சீரிய முறையில் விவசாயம் செய்ய முடியாது. இப்போது நிலச் சொந்தக்காரர்களுக்கு மட்டுமல்ல, குடியானவர்களுக்குக் கூட கடன் கொடுக்கிறோம். குடியானவர்களுக்கு சொத்து இல்லை. இருந்தாலும் அரசாங்கம் உத்திரவாதம் அளிக்கிறது. சென்ற ஆண்டில் மட்டும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 40 கோடி ரூபாய் வரையில் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். ரிஸர்வ் பாங்க், மற்ற ஸ்தாபனங்கள் கொடுக்கும் கணக்குகளையெல்லாம் வைத்துக்கொண்டு, எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து கணக்குப் பார்த்து இவ்வளவு தூரம் கடனில் மூழ்கியிருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. குறைந்த காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அவைகளெல்லாம் அப்போதைக்கப்போது வசூலிக்கப்படவேண்டும். யாரோ கணக்குப் போட்டார்கள்.

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

வரவர கடன் அதிகமாகப் போகிறது என்று சொன்னார்கள். அது சரியல்ல. மேலும் சீரிய முறையில் விவசாயம் செய்யத்தான் கடன் கொடுக்கிறோம்.

வரிக் கொள்கை பற்றியெல்லாம் வரவு-செலவுத் திட்டத்தின் போது பேசலாம். வரியால் தான் இந்த மாதிரி தொல்லைகளெல்லாம் வருகிறது, வரிகளையே விட்டு விடுவதுதானே என்று எதிர் கட்சி அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். மற்ற மாநிலங்களில் ஓடுகிற நதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் விஷயத்தில் கவர்னர் ஒன்றும் குறிப்பிடவில்லையே என்று குறிப்பிட்டார்கள். அவைகளைப் பற்றி ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லையே என்று சொன்னார்கள். இது ரொம்ப ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டிய விஷயம். ஒரு மாநிலத்துக்கு ஒரு மாநிலம், ஒரு ஆட்சிக்கு ஒரு ஆட்சி, அங்கெல்லாம் பாலிடிக்ஸ் இருக்கிறது. ஒருவர் ஏதோ ஒப்புக்கொண்டு கொடுத்து விட்டார்கள் என்று சொல்லுவார். இதிலே எப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வது, எப்படி பேசுவது என்று, கீழ் திசை ஆறுகளாக இருந்தாலும், மேல் திசை ஆறுகளாக இருந்தாலும் பேசி ஒப்பந்தம் செய்ய மத்திய அரசாங்கத்தின் உதவி இதற்கு இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்து எப்படி முடிவு செய்வது என்று கவனம் செலுத்தி வருகிறோம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மற்றும் மாவட்டங்களில் உள்ள சொந்த கோரிக்கைகள் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் இப்போது அவைகளைப் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அரசாங்கம் அவைகளை கவனிக்கவில்லை என்று யாரும் தவறுதலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்த நான்கு நாள் விவாதத்திலே கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டதையெல்லாம் கவனித்து, புதிய திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், மற்ற திட்டங்கள் எதுவானாலும் எல்லாவற்றையும் கவனித்து, எந்த அளவுக்கு எடுத்துக்கொள்ள முடியுமோ, எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ, அதிலே தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்று. இந்தப் பிரச்னை முன்பு வந்தது. இந்த மன்றத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினரிடத்தில் போலீசார் தவறுதலாக, அவமரியாதையாக நடந்துகொண்டார் என்று ஒரு புகார் சொன்னார்கள். அதைப் பற்றி மேலும் விசாரித்து நிலைமையை விளக்க வேண்டும் என்று நீங்கள் கட்டளையிட்டீர்கள். அதைப் பற்றி விசாரித்து எனது மதிப்புக்குரிய சகா உள் நாட்டு அமைச்சர் இந்த மன்றத்திலே ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதையொட்டி கனம் உறுப்பினர் அவர்களும் அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். அதோடு விடவில்லை. இங்கே கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் 'அங்கத்தினரை அவமதித்து விட்டார்கள்', அங்கத்தினரை போலீசார் அடித்து விட்டார்கள் என்று கூடச் சொன்னார்கள் சில பேர்.—மேலும் இதைப் பற்றி விசாரிக்கவேண்டுமென்று கூறினார்கள். நான் தெரிந்துகொண்ட

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

வரையில் நடந்தது என்ன என்று பொதுவாகக் குறிப்பிட விரும்பு கிறேன்—அதைப் பற்றி தவறுதலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. கனம் அங்கத்தினர் அவர்கள் ரிக்ஷாவில் வந்தார்கள். அப் பொழுது மதுரை தெருக்களிலே ஏராளமான கூட்டம். அங்கே விழா நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. ஏராளமான 10-30 a.m. கூட்டம் இருந்தது. போலீசார்கள் கூட்டத்தை ரொம்பவும் அற்புதமாக சமாளித்தார்கள். எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றார்கள். அந்தக் கூட்டத்தை சமாளிப்பது மிகப் பெரிய கஷ்ட மான பொறுப்பு. ஒருவிதமான தவறுதலும் இல்லாமல், இடை யூறும் இல்லாமல் அதைச் சமாளிக்கும் பொறுப்பு போலீசா ருடையது. மிகத் திறமையாக அந்தப் பொறுப்பை போலீசார் நிறைவேற்றினார்கள். அப்பொழுது சில வரம்புகள் உண்டு. இப்பொழுது தாங்கள் கூட, சபாநாயகர் அவர்கள் கூட காலையில் வருவதற்கு கொஞ்சம் தாமதமாய்விட்டது. 'ரிபப்ளிக் டே ரிஹர்ஸல் பாரேடு' இருந்தது. அதன் காரணமாக, 2 நிமிஷம், 5 நிமிஷம் தாமதப்பட்டது. தாங்கள் ஆபீஸ் வருவதற்கு தாமதப் பட்டது. அதற்காக தாங்கள் கோபித்துக்கொள்ளவில்லை. 'சபாநாயகர் ஆயிற்றே, நான் 8½ மணிக்கு போகவேண்டுமே' என்று ராணுவ அதிகாரிகள் மீது கோபித்துக்கொள்ளவில்லை. அவ்வாறு சில வரம்புகள், ரெஸ்டிரிக்ஷன்ஸ், கட்டுப்பாடுகள் இருக் கின்றன. அப்படி கனம் அங்கத்தினர் அவர்கள் ரிக்ஷாவில் வரும் பொழுது இதற்கு மேலே ரிக்ஷா போகக்கூடாது என்று அந்த போலீஸ்காரர் சொன்னார். அந்தப் போலீஸ்காரர் உள்ளூரைச் சேர்ந்தவரல்ல. வெளியூர் போலீஸ்காரர் அவர். போலீசார் 'இங்கே ரிக்ஷாவில் போகக்கூடாது' என்று சொன்னார். அது ரெஸ்டிரிக்ஷனுக்குரிய இடமா, இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் போலீசார் சொன்னால் அதை உடனே கேட்கவேண்டும். அதுதான் டிஸிப்ளின். தவறு செய்தால், பின்னால் போலீசார் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். போலீசார் சொன்னால் 'சரி' என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த டிஸிப்ளின் வேண்டும். அது எல்லோருக்கும் வேண்டும். அதற்கு நாம் கட்டுப் படக்கூடியவர்கள். இந்த மன்றத்து அங்கத்தினர்களும் கட்டுப் படக்கூடியவர்கள். போலீசார் தவறு செய்தால், பின்னால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். பின்னால் புகார் செய்யலாம். ரிக்ஷா போகக்கூடாது என்று சொன்னபொழுது, தான் எம்.எல்.ஏ. என்று சொன்னதும், எம்.எல்.ஏ.-யாக இருந்தால் என்ன என்று போலீஸ்காரர் சொன்னதாகவும் கூறப்பட்டது. நம்முடைய கான்ஸ்டேபிள்கள் அதிகமாக படித்தவர்கள் அல்ல. பேச்சு, நடை பலவிதமாக இருக்கும். திருநெல்வேலியில் ஒருவிதமான பேச்சு, சென்னைப் பட்டிணத்தில் ஒருவிதமான பேச்சு, மதுரையில் ஒருவிதமான பேச்சு. போலீஸ் கான்ஸ்டேபிளிடம் அதிகமாக கல்சர் எதிர்பார்க்க முடியாது. கட்டுப்பாடும், நேர்மையும்தான் எதிர்பார்க்க முடியும். கல்சர் எதிர்பார்க்கமுடியாது. கூடியவரைக் கும் சப்-இன்ஸ்பெக்டர்களை டைரக்ட் ரெக்ரூட்மெண்டு மூலம் ரெக் ரூட் செய்தால் கல்சர் உயரும் என்பதற்காக டைரக்ட் ரெக்ரூட் மெண்டு அதிகமாக வைத்திருக்கிறோம். எம்.எல்.ஏ.-ஆக இருந்தால்

என்ன ஆயிற்று? ஒரு கட்டுப்பாடு இருந்தால், எம்.எல்.ஏ. என்று சொல்லி ஒரு தனி உரிமை கேட்கலாமா? அப்படிக் கேட்டால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? நாம் அல்லவா மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். அதற்கு மேலே என்ன விசாரணை . . .

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : அன்று கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்கம் தந்தபொழுது, முதல் அமைச்சருமில்லை, ஹோம் மினிஸ்டரும் இல்லை. இப்பொழுது அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது கனம் அங்கத்தினர் இல்லை. 'நான் எம்.எல்.ஏ., விடத்தான் வேண்டும்' என்று சொன்னதாகச் சொல்லவில்லை. பின்னர் நடந்த சம்பவம், கான்ஸ்டேபிள் நடந்துகொண்ட முறை அங்கத்தினரை அவமானப்படுத்துவதாக இருக்கிறது என்று அவர்கள் பதில் சொன்னார்கள். தயவு செய்து அது குறித்து விசாரணை செய்யவேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் பேசியபொழுது நான் இங்கு இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனால், நான் ஒரு பத்திரிகையிலே அங்கத்தினர் அவர்களுடைய ஸ்டேட்மெண்டு பூராவையும் படித்தேன். முதலிலிருந்து கடைசி வரையில் படித்த பிறகுதான் நான் சொல்லுகிறேன். படிக்காமல் இருந்தால் இவ்வளவு தூரம் குறிப்பிட்டிருக்க மாட்டேன். கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் கூறியதை நான் பத்திரிகையில் படித்துவிட்டு, எனக்கு ஏற்படுகின்ற கருத்தைத்தான் தெரிவிக்கிறேன். எம்.எல்.ஏ. என்று சொன்னால் கான்ஸ்டேபிள் விட்டுவிட வேண்டுமா? இந்த மன்றம் அவ்வாறு முடிவு செய்தால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயார். எம்.எல்.ஏ. என்று சொன்னாலும் போலீசார் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளவேண்டும். மற்றவர்களுக்கு ஒன்று, எம்.எல்.ஏ.-க்கு ஒன்று என்றில்லை. அவர் ஒரு எம்.எல்.ஏ., அவர் என்ன சொன்னாலும் சரி, விட்டுவிடவேண்டும் என்பதை இந்த மன்றம் ஒருக்காலும் ஒப்புக் கொள்ளாது. அதைத்தான் கான்ஸ்டேபிள் செய்திருக்கிறார். ஆனால், சொல்ல வேண்டிய விதம், பேசுகிற விதம் இருக்கிறது. நடந்துகொள்ள வேண்டிய விதம் இருக்கிறது. மரியாதையாகச் சொல்லவேண்டும். மரியாதையாகச் சொல்லவில்லையென்றால், போலீஸ்காரருக்கு எச்சரிக்கை, வார்னிங் கொடுக்கலாம். வேறு என்ன நடவடிக்கை எடுப்பது? திரு. சங்கரன் அவர்கள் புகார் செய்ததும், அஸிஸ்டெண்டு கமிஷனரோ, அஸிஸ்டெண்டு சூபரிண்டெண்டோ வந்தார்கள், இவர்களை கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்களின் அறிக்கையை படித்த பிற்பாடு கூட அவரை அவமதிக்கக் கூடிய அளவில் அந்தக் கான்ஸ்டேபிள் என்ன செய்தார் என்று எனக்குப் புலப்படவில்லை. அப்படி யாரும் அவமதிக்கமாட்டோம். எந்த எம்.எல்.ஏ.-வாக இருந்தாலும் சரி, தனி நபராக இருந்தாலும் சரி, எம்.எல்.ஏ. இல்லாதவராக இருந்தாலும் சரி, போலீசார் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். எந்த போலீசார் யார் மீது

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அவமரியாதையாக நடந்துகொண்டாலும், அதற்கு வேண்டிய நடவடிக்கை எப்பொழுதும் எடுத்துக்கொள்ள தயங்கமாட்டோம் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. பழனி அவர்கள் கொண்டுவந்திருக்கும் வந்தனம் தெரிவிக்கும் தீர்மானத்தை மட்டும் இந்த மன்றம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொடுக்கப் பட்டிருக்கிற திருத்தங்களெல்லாம் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்பதைப்பற்றியது தான். ஆகவே, அந்தத் திருத்தங்களை வற்புறுத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி கனம் அங்கத்தினர் ஏதாவது திருத்தத்தை வற்புறுத்தினால், அதை இந்த மன்றம் நிராகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் கொஞ்சம் நீண்ட நேரம் பேசிவிட்டேன். இவ்வளவு பொறுமையோடு இருந்து என்னுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. வடிவேலு : அண்மையில் சட்டக் கமிஷன் இங்கு வந்திருந்தபொழுது, சட்டத் துறையில் உபயோகப்படுத்தும் தமிழ்ச் சொற்களை இந்தி மொழியில் மாற்றினால் தான் தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிகோலும் என்றும், ஆகவே, அந்த நிலைமை ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தியதாக அறிகிறேன். அப்படியானால், அது இந்தியை நாட்டிலே புகுத்துவது ஆகாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் இதைப் பற்றி குறிப்பிட்டதை நான் வரவேற்கிறேன். நானும் அதைப்பற்றி குறிப்பிட இருந்தேன். ஆனால், மறந்துவிட்டேன். கமிஷன் வந்து என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இந்தி வார்த்தைகளை புகுத்தவேண்டுமென்று சொல்லவில்லை. அகில இந்தியாவிலும் பொதுவாக சில வார்த்தைகள் இருக்கின்றன. ரெஸ்டிஜுடிகேடா, ஸப்ஜுடிஸ் இவைகளெல்லாம் ஆங்கில வார்த்தைகள் இல்லை. இதைப்பற்றி டெல்லியில் முன்பு விவாதம் நடந்தது. பழக்கத்தில் இருக்கிற வார்த்தைகளை அப்படியே வைத்துக்கொள்ளலாம், 'டெர்ம்ஸ்', வார்த்தைகளை அப்படியே வைத்துக்கொள்ளலாம், நமக்குப் புரியவேண்டும் என்பதற்காக ஒரு வார்த்தையை உண்டாக்கினால் போதாது, அது பழக்கத்தில் இருக்கவேண்டும். இங்கே புரிந்துகொள்ளக் கூடிய வார்த்தைகளாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்திவருகிறோம். அம்மாதிரி வார்த்தைகள் பொதுவான வார்த்தைகளாக இருந்தால் நல்லது. தமிழ் நாட்டிற்கு ஒரு வார்த்தை, ஆந்திராவுக்கு ஒரு வார்த்தை என்று இல்லாமல் 'டெக்னிக்கல் டெர்ம்ஸ்', 'லீகல் டெர்ம்ஸ்' ஒரே வார்த்தையாக இருந்தால் நல்லது. லீகல் டெர்ம்ஸ்' என்னென்ன வார்த்தைகள் என்பதை நீங்கள் அனுப்புங்கள். நாங்கள் அவைகளைப் பரிசீலனை செய்து எங்களுடைய அபிப்பிராயத்தில் எதை எதை ஏற்றுக் கொள்ளலாம் என்று சொல்லுகிறோமோ அவைகளை ஏற்றுக்கொள்ளலாம், மற்றவைகளை நீங்கள் விட்டுவிடவேண்டும்" என்று சொல்லியிருக்கிறோம்.

[22nd January 1964

திரு இரா. நெடுஞ்செழியன் : மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் உரையின் மீது ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பாக திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திருத்தப் பிரேரபணைகளில் 20-வது பிரேரபணையைத் தவிர, மற்ற திருத்தப் பிரேரபணைகள் வற்புறுத்தப்படாது. 20-வது பிரேரபணைமட்டும் வற்புறுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : என்னுடைய பெயரில் உள்ள but regret to note that there is no mention about the facilities given to the students to induce them to take up Tamil Medium Courses என்ற திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

All the amendments, except the amendment 'but regret to note that there is no mention about the facilities to the students to induce them to take up Tamil Medium courses' were by leave, withdrawn.

Mr. SPEAKER : The question is—

'*Add* at the end the following :—

"but regret to note that there is no mention about the facilities given to the students to induce them to take up Tamil Medium Courses." '

The amendment was put and declared lost.

A poll was demanded and the House divided.

திரு. கே. ஆர். நல்லசிவம் : (4-வது பிளாக்கிலுள்ளவர்கள் வோட் அளித்த பிறகு) நான் வேறு பிளாக்கைச் சேர்ந்தவன் என்று நினைத்து, இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டேன். நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன். அந்த ஜாபிதாவில் என்னையும் சேர்த்துக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : Can we take it like that? 4-வது பிளாக்கிலுள்ளவர்களில், திருத்தத்திற்கு ஆதரவு சொல்லுகிறவர்கள் ஆதரவு சொல்லியாய் விட்டது. அதற்கு எதிர்ப்புச் சொல்லுகிறவர்களும் எதிர்ப்புச் சொல்லியாய் விட்டது. இம்மாதிரி கேஸை எப்படி "டீல்" பண்ணுவது?

கனம் திரு. வெ. ராமையா : 'நியூட்டிரல்' ஆக எடுத்துக் கொள்ளலாம்.

Mr. SPEAKER : I am prepared to consider the request of the Honourable Member sympathetically, but that may lead to trouble in future. I would, therefore, request the Honourable Member to resume his seat.

22nd January 1964] [Mr. Speaker]

The House divided thus :

Ayes.—

Sri V. R. Nedunchezhiyan
„ M. Karunanidhi
„ M. Kalyanasundaram
„ A. P. Dharmalingam
„ Rama Arangannal
„ A. K. Subbiah
„ V. S. Mani
„ M. Rajangam
„ M. Shanmugam
„ N. Rajangam
„ V. Arunachalam
„ N. Chinnamunisamy Chetty
Srimathi Manonmani Ammal
Sri S. Madhavan
„ T. P. Alagamuthu
„ S. Mani
„ P. Murugaiyan
„ A. Duraiyarasan
„ V. R. Periannan
„ P. V. Sriramulu
„ M. Kamalanathan
Sri C. G. Viswanathan
„ S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. Manickam
„ T. Chinnasamy
„ A. Thangavelu
„ Munu Adhi
„ P. U. Shanmugam
Srimathi Jagadambal Velayudham
Sri M. S. Mani
„ K. Thirupathy
„ C. K. Chinnaraji
„ M. P. Vadivelu
„ R. Nallamuthu
„ N. P. Sengottuvelu
„ S. Arumugham
„ M. V. Karivengadam
„ A. G. Balakrishnan
„ R. Narayanan
„ S. Ramaswamy
„ S. J. Ramaswamy

Noes.—

Sri K. Parthasarathy
„ S. Chinnayyan
„ C. M. Ambikapathy
„ L. Anandan
„ S. Angamuthu Naicker
„ K. S. Ardhanareeswara Gounder
„ P. Appavoo
„ A. Appavoo Thevar
„ A. Arumugam
„ A. B. Palagan
„ V. Bashyam Reddi
„ M. Chelliah
„ S. Chinnakaruppa Thevar
„ A. Chinnathurai Ambalakarar
Hon. Sri M. Bhaktavatsalam
„ Sri P Kakkan
„ Sri V. Ramaiah
„ Srimathi Jothi Vencatachellum
Sri P. Ramachandran
„ R. Krishnaswamy Naidu
„ A. S. Dhakshinamoorthy Gounder
„ S. Dhakshinamoorthy Gounder
„ M. Dh ndayathapani Pillai
„ A. Doraiswamy
„ N. Ekambara Mudaliar
„ V. Ellamma Naidu
„ G. Gomathi Sankara Dikshithar
„ K. Gopala Gounder
„ P. Jayaraj
„ A. K. Kaliappa Gounder
„ C. Kothandarama Bhagavathar
„ M. Kulandaiswamy Gounder
„ T. Manavalan
„ M. Maruthanayagam Pillai
„ J. Matha Gowder
„ V. A. Muthiah
„ T. M. Nallaswamy
„ S. Nanjunda Raw
Hon. Sri G. Bhuvarahan
Srimathi C. Kolandai Ammal
„ P. K. R. Lakshmikantham
Srimathi A. S. Ponnammal
„ Krishnaveni
„ Lakshminarasamma
„ N. K. Ranganayaki
Kumari D. Sulochana
Sri K. Narayanswami Pillai
„ N. Duraipandi
„ K. P. Palanisamy
„ G. D. Perumal Raju
„ R. Ponnappa Nadar.
„ K. Ponniah
„ R. Rajagopalswamy Naicker
„ G. Rajaram
„ A. Ramachandra Rayer
„ N. Ramachandra Reddy
„ A. L. Ramakrishna Naidu
„ S. Ramalingam
„ V. Ramanathan
„ N. Ramaswamy Udayar
„ S. Sadasivam
„ B. Parameswaran
„ R. V. Swaminathan
„ K. T. Kosalram
„ Dr. B. Natarajan
„ M. S. Selvarajan
„ R. Sengaliappan
„ N. Shanmugasundaram
„ S. Sivasubramaniam
„ N. Soundarapandian
„ C. Srinivasan
„ K.S. Subramania Gounder
„ N. Subramaniam Chettiar
„ K. B. Palani
„ T. S. Swaminatha Odayar
„ R. Thangavelu
„ M. D. Thiagaraja Pillai
„ R. Thiruvengadam
„ P. Urkavalan
„ O Venkatasubba Reddi
„ M. William
„ A. Chidambaranatha Nadar

[22nd January 1964

(After the votes in all the Blocks were taken and before the results were announced.)

திரு. கே. ஆர். நல்லசிவம்: என்னையும் ஆதரிப்பவர்களில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய ரூலிங் படி நடக்கத் தயாராய் இருக்கிறேன்.

MR. SPEAKER: In such cases, it cannot be reconsidered.

SRI M. KALYANASUNDARAM: Sir, let it go on record like that.

MR. SPEAKER: Yes. It will go on record. Let me now announce the results of the voting.

Ayes: 42 Noes: 81 Neutral: Nil.

The amendment was lost.

MR. SPEAKER: Now I will put the Motion of Thanks to vote.

The question is—

"That an Address be presented to the Governor in the following terms.

'That the Members of the Madras Legislative Assembly assembled in this session are deeply grateful to the Governor for the Address which he has been pleased to deliver to both the Houses of the Legislature assembled together on the 16th January 1964.'"

The motion was put and carried.

VI—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1963-64—GENERAL DISCUSSION.

MR. SPEAKER: I want to know from the Leaders of Parties how long we will take for the discussion on the Second Supplementary Statement of Expenditure for the year 1963-64.

SRI M. KALYANASUNDARAM: An hour and a half for general debate and about 45 minutes for cut motions.

MR. SPEAKER: So for the whole day it will go.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I suggest that on the whole it may be two hours. After all, whatever is to be mentioned during the discussion on the cut motions could be mentioned in the general discussion. To save time, there need not be any discussion on individual Demands for Grants.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பொது விவாதத்திற்கு ஒரு மணி நேரமும் பின்னால் டிமாண்டுகளுக்கு ½ மணியும் வைத்துக் கொள்ளலாம்.

22nd January 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : One hour for general discussion and half an hour for voting on Demands for Supplementary Grants may be accepted.

MR. SPEAKER : That is all right.

The hon. Member, Sri Dharmalingam, will now speak.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தகுதி மிக்க சட்டமன்ற தலைவர் அவர்களே, இங்கே கனம் முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற துணை மானிய கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் கோரி இருக்கிற தொகை களில் முக்கியமானது, பஞ்சாயத்து நிர்வாகத்திற்காக. இப்பொழுது இருக்கிற பஞ்சாயத்து நிர்வாக முறையில் எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்கள் (பஞ்சாயத்து) என்று அதிகாரிகளை போடுகிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அதற்கு அவசியம் இருக்கிறதா என்று சற்று யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த பஞ்சாயத்து அதிகாரிகள் கணக்கு எழுதிக் கொடுக்கும் அதிகாரி களாக இருக்கிறார்களே தவிர, தணிகை செய்யும் அதிகாரிகளாக இல்லை. ஆகவே எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்கள் என்பதை மாற்றி தணிக்கை அதிகாரிகள் என்று தணிக்கை செய்யக் கூடிய அதிகாரி களாக மாற்றினால் நலமாக இருக்குமா என்று யோசிக்க வேண்டும். இன்றைக்கு எந்த பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டாலும் தலைவர் களேகூட சரியாக பணியாற்றுவது கிடையாது. ஆகவேததான் தணிக்கை செய்யக் கூடிய அதிகாரிகளாக போட்டு அல்லது ஆடிட் டிபார்ட்மெண்டிடமோ கொடுத்து விட்டால் நலமாக இருக்கும் என்று தோன்றுகிறது. இது பற்றி தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

போலீஸ் மானியக் கோரிக்கையில் மதுரை அர்பன் ரூரல் செக்ஷன் தனி இலாகாவாக அமைக்க வேண்டும் என்றும் அதற்கு லாரி வாங்கும் செலவையும் மற்றவற்றையும் பற்றி குறிப்பிட்டிருக் கிறார்கள். அதிக போலீஸ் அதிகாரிகள் வேண்டியதுதான். ஆனால் இன்னும் சற்று அதிகமான தொகையையே கேட்டு வாங்கி போலீஸ் காரர்களுக்கு அதிக வசதிகளை செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். எங்களிடத்தில் போலீஸ்காரர்கள் சொல்கிறார்கள். போலீஸ்காரர்கள் ஒரு மாதம் டூட்டி செய்தால் அவர்களுக்கு 10 நாட்களுக்குத்தான் படி கொடுக்கப்படுகிறதாம். போலீஸ் காரர்கள் எப்படி என்னிடம் சொன்னார்கள் என்று சந்தேகப்பட வேண்டாம். போலீஸ் அதிகாரிகளில் பலர் என்னுடைய சொந்தக் காரர்களே இருக்கிறார்கள். அதனால் விவரம் தெரியும். வெளியூர் களுக்கு மொபைல் டியூட்டியில் ஒரு மாதம் செல்லும்போது அவர் களுக்கு அட்வான்சாக அதிக தொகை கொடுப்பதில்லை. ஒரு மாதம்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [22nd January 1964

வெளியூர் போகும்போது 10 நாட்களுக்குத்தான் படி கொடுக்கப்படுகிறது. பாக்கி 20 நாட்களுக்கு படி இல்லை. இந்த நிலையில் முன் அட்வான்சும் குறைவாக கொடுக்கப்படுவதால் அவர்கள் வேறு வழிகளிலே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறதோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. 30 நாட்கள் வெளியில் சென்றால் அந்த 30 நாட்களுக்கும் படி கொடுக்கப்படவேண்டும். வெளி மாவட்டங்களுக்கு போலீஸ்காரர்கள் 1 மாதமும் ஹெட் கான்ஸ்டபிள்கள் 3 மாதகாலமும், சப்-இன்ஸ்பெக்டர்கள் 6 மாத காலம் வரைகூட குற்றங்களை கண்டு பிடிக்க போக வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு அதிக அட்வான்ஸ் பணமும் முழுப் படியும் கொடுப்பது நல்லது. அல்லது அதற்கென்று ஒரு தனி இலாகாவையே அமைப்பதுகூட நலமாக இருக்கும்.

வெள்ள நிவாரணம் பற்றி தொகை கோரப்பட்டிருக்கிறது. இதிலே என்னுடைய மாவட்டத்திலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரிஜனங்கள் மிக்க தொல்லைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கூகூர் என்ற கிராமத்தில் அரிஜன நல இலாகாவின் மூலம் அரிஜனங்களுக்கென்று ஒரு காலனி ஏற்படுத்த கால்கோள்விழா நடந்தது. ஆனால் 4 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலை முடியவில்லை. அது பற்றி கவனிக்கப்படவில்லை. அன்று ஆரம்பிக்கப்பட்ட அதே நிலையில் இன்றும் இருக்கிறது. முன்னால் அவசரகால நிலைமையை ஒட்டி நிறுத்தப்பட்டிருந்தாலும்கூட, இப்பொழுதாவது அந்தக் காலனியைக் கட்டி முடித்துத்தரவேண்டுகிறேன். அது போலவே, விரகாலூர், திருநெற்குன்றம் என்ற ஊர்களில் வெள்ளத்தால் நிலங்கள் மணல் மேடு இட்டுப் போய்விட்டன. அப்படிப்பட்ட இடங்களில் சர்க்காரே மணலை அப்புறப்படுத்தி அரிஜனங்களுக்கு கொடுக்கிறார்கள். ஆனால் அதற்கு வசூலிக்கும் தொகை அதிகமாக இருக்கிறது. ஆரம்ப காலத்தில் அரிஜனங்கள் அந்த நிலத்திற்கு ஒரு குழி, இரண்டு அல்லது மூன்று ரூபாய்க்குத்தான் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது சர்க்கார் கேட்கும் தொகை 10, 12
11-00 a.m. அல்லது 18 வரையில் இருக்கிறது ஒரு குழிக்கு. ஆகவே, அரிஜன மக்களின் நன்மையில் அக்கறை உள்ள இந்த சர்க்கார், தயவு செய்து அந்த நிலங்களை சுத்தம் செய்து கொடுப்பதற்கு வசூலிக்கும் தொகையை அரிஜனங்களுக்கு இலவசமாக கொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது போலவே சர்க்கரை ஆலைகள் பகுதி அபிவிருத்தி சம்பந்தமாக மானியம் கோரப்பட்டிருக்கிறது. புகலூர், பெட்டவாய்தலை முதலிய ஆலைகளுக்கு ரோடு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு சாலை போடுவது பற்றி எந்த ஏற்பாட்டையும் காணோம். இதுபற்றி புள்ளம்பாடி, லால்குடி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பஞ்சாயத்து கூட்டமன்றத்திலே தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தச் சாலைகள் இந்த மானியத்தில் இடம் பெறவில்லை. இதில் தொகை கோராவிட்டாலும் ஷுகர் கேன் செஸ்ஸிலிருந்து இந்த புதிய

22nd January 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

ஆலைப்பகுதிகளுக்கு சாலைகளை போட்டு விஸ்தரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அரிசன நல இலாகாவுக்கு இப்பொழுது இருக்கிற அதிகாரிகளின் எண்ணிக்கை போதாது என்பது என்னுடைய கருத்தாகும். பொதுவாக, ஒரு மாவட்டத்திற்கே ஒரே ஒரு அரிசன இலாகா அதிகாரிதான் இருந்து வருகிறார். அவருக்கு டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபீசர் என்று பெயர். ஆனால், ஒரு மாவட்டம் பூராவும் அவரால் பார்க்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. ஆனால், நில வருவாய் வசூலிப்பதற்காக ரெவின்யூ டிவிஷன்கள் என்ற பெயரில் மாவட்டங்களைப் பல பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒரு டிவிஷனுக்கு ஒரு ரெவின்யூ டிவிஷனில் ஆபீசர் இருக்கிறார். ஒரு மாவட்டம் பூராவுக்கும் ஒரு டிஸ்டிரிக்ட் வெல்ஃபேர் ஆபீசர் இருந்து கவனிப்பது என்பது முடியாத காரியமாகும். அதிலேயும், அரிசனங்களுக்கு எல்லா வகையிலும் பல நன்மை செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிகிறபோது அவர்களுக்கும் அதிகமாகத் தேவைப்படுகிற காரணத்தால் கேட்டு வருகிறார்கள். அவர்களுக்கு அதிகம் செய்ய முடியவில்லை. முடியாத காரணத்தால்தான் பல சேரிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டு, நிலங்களும் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, இது வரையில் தரிசாக இருந்து வருகிறது. விவசாயிகளும், உழமுடியவில்லை. அரிசனங்களுக்கு அந்த நிலங்களிலே வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. உழுவதற்கும் முடியாமல், வீடு கட்டவும் முடியாத நிலையில் பல இடங்கள் இருந்து வருகிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், ஏறத்தாழ 150, 160 ஏக்கர் நல்ல அயன் நஞ்சை நிலங்கள் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்ற போதிலும் தரிசு நிலங்களாக பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன. அவைகளையெல்லாம் பற்றி அதிகாரிகளை அணுகிக் கேட்கும்போது, அவர்களுக்கு இருக்கும் தொல்லைகளை அவர்கள் சொல்கிறார்கள். எனவே அரிசன நல இலாகாவுக்கு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் இருப்பது போல், அதிக அதிகாரிகள் நியமித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அமைச்சர்கள் ஒருக்கால் சொல்லக்கூடும், அதற்குத் தனித் தனியாக தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் பார்த்துக் கொள்ளலாம் என்று. அந்தத் தாசில்தார்களுக்கும் நிறையப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருப்பதால், அவர்களாலும் இதைக் கவனிக்க முடியவில்லை. எனவே, அதிக அதிகாரிகளை நியமித்துத் தர வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கவர்னர் அவர்களுக்கு இருக்கும் காரை மாற்றி, 25,000 ரூபாயில் ஒரு குளு குளு கார் வாங்கித் தருவதற்கு இதிலே தொகை கோரியிருக்கிறார்கள். இந்த நெருக்கடி நிலையில் இது அவசியந்தானா என்பதை அவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [22nd January 1964

அடுத்து, மருத்துவ மனைகளைப்பற்றி அவர்கள் தொகை கேட்டிருக்கிறார்கள். மருத்துவ மனைகளிலே அதிகக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தாலுங்கூட, டாக்டர் இல்லை என்ற குறை இருந்து வருகிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாவட்ட மருத்துவ மனையில் போய்ப் பார்த்தால், அங்கே அதிகமான நோயாளிகள் படுக்கை வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கு இடம் இல்லாத காரணத்தால் ஔட்-பேஷன்ட்களாகப் பலர் வெளியேற்றப்படுகிறார்கள். எனவே, அதிகமாகப் படுக்கைகளை விஸ்தரித்து, கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாயத் துறையைப் பொறுத்தும் நிதி கோரியிருக்கிறார்கள். என்னுடைய பகுதியில் இப்பொழுது கரும்பு உற்பத்தி புதிதாகச் செய்யப்பட்டு வருகிறது. முதலில் பழைய ஆலைகள் இருந்த பகுதிக்கு அதிக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அந்தப் பகுதிகளில் விலை குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை கனம் அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது தங்கள் மூலமாகவும் சொல்கிறேன். அந்தப் பகுதியில் உற்பத்தியாகிற சர்க்கரை இந்தியாவிலேயே மிக உயர்ந்த தரமுள்ள சர்க்கரையாக இருக்கிறது. காட்டூர் கோதாரி சர்க்கரை ஆலையில் உற்பத்தி செய்யப்படுகிற சர்க்கரை அவ்வாறு உயர்ந்ததாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதை உத்தேசித்தாவது சற்று அதிக விலையை நிர்ணயித்துக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பொற்கொல்லர்களுக்கு மாற்று வேலைகள் தருவதற்காக நிதி ஒதுக்கல் கேட்டிருக்கிறார்கள். அதிகாரிகளை அதிகமாக நியமிப்பதால் மட்டும் பயன் இல்லை என்று நினைக்கிறேன். பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு அவசர அவசியமாக நிதிகளை வழங்குவதற்கும் கடன் வழங்குவதற்கும் அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அதிக அதிகாரிகளை நியமித்துவிட்டதனாலேயே பொற்கொல்லர்களுக்கு எல்லாம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும் என்று நான் கருதவில்லை. எனவே அதற்குத் தக்க ஏற்பாடுகளை உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதிலே பேச சந்தர்ப்பம் அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி இந்த அளவோடு என் உரையை முடிக்கின்றேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த உப மானியக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். இந்தக் கோரிக்கையை அவர்கள் விடுத்திருக்கிறபோது சில நல்ல அம்சங்கள் அங்கே காணப்படுகின்றன. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகத்தான் கிராம மக்களுக்கு எட்ட வேண்டிய

பல்வேறு நல்ல காரியங்கள் எட்டச் செய்ய முடியும். அதற்கு இன்றையதினம் நேரடியாக அவைகளை மேற்பார்க்கக்கூடிய ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், கலெக்டர் முதலியவர்களை மேற் பார்க்ககூடிய அளவுக்கு அமைச்சர்களுக்கு உதவியாக ஒரு நல்ல மத்திய அமைப்பு, இராஜ்ய மட்டத்திலே, அமைக்க இருப்பதை அவர்கள் குறிப்பாகக் காட்டியிருக்கிறார்கள். அதனால் சிறந்த பலன் ஏற்படும் என்றே நான் கருதுகிறேன்.

நாட்டிலே விவசாயம் செய்யப் பிரியப்படக்கூடியவர்களுக்கு, விவசாயத்திற்கு ஏற்ற நிலம் இல்லாத மக்களுக்கு பத்தாயிரம் பேருக்கு ஏறத்தாழ 50,000 ஏக்கர் வரையிலும் மூன்றாவது ஐந் தாண்டுத்திட்ட காலத்திற்குள்ளாகவே கொடுத்துவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதை அவர்கள் செய்தியாகக் குறிப் பிட்டிருக்கிறார்கள். இந்த நல்ல காரியம் நிறைவேறவேண்டு மானால் அரசாங்கம் மிகவும் கண்காணிப்போடு இருக்கவேண்டும். கடந்த பல வருஷங்களுக்கு முன்பு தியாகிகளுக்கு நிலம் கொடுப் பது என்ற ஒரு நியதியை அரசாங்கம் வகுத்தபோது, ஆரம்பத்திலே கீழ் மட்டத்தில் இருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகளிடத்திலே போதுமான கண்காணிப்பு இல்லாத காரணத்தால், அவர்களுக்கு சரியான அளவுக்கு முறையாக அதை எட்டச் செய்ய முடியவில்லை. ஆகவே, இப்பொழுது நான் அறிந்த மட்டில் அரசாங்கத்தினுடைய கணக்குக்கு ஏதோ குறிப்பிட்ட அளவு விவசாயத்திற்கு ஏற்ற நிலம் இருப்பதாகக் கணக்கு வந்தாலுங்கூட, ஆங்காங்கே கிராம அளவில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் போல, சர்க்காரினுடைய சட்டத்தை யும்கூட மதிக்காத அளவுக்கு ஆங்காங்கு கிராமத்தில் இருக்கும் சில கிராம அதிகாரிகள் தங்களுக்குச் சொந்தம் போல நிலங்களை யெல்லாம் பினாமியாக விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்கும் தெரியும். ஆகவே மிக ஜாக்கிரதையாக அரசாங்கப் பொறுப்பில் இருப்பதாக எண்ணுகிற அந்த நிலம் முறையாக அந்த ஏழைகளுக்குக் கிடைக்கத் தகுந்த கண்காணிப்பு அவசியம் என்று நான் கருதுகிறேன்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கூட, திருச்செந்தூர் தாலுக் காவில் இருக்கும் ஒரு சம்பவம் பற்றி கனம் ரெவின்யூ அமைச்ச ருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தது என்னுடைய நினைவில் இருக்கிறது. 500 ஏக்கர் நிலம் வரையில் திருச்செந்தூர் தாலுக் காவில் பிடானேயேரிப் பகுதியிலும் எழுவரை முக்கிப் பகுதியிலும் சர்க்காருக்குச் சொந்தமான நிலம் இனமாக இருந்தது. பின்னர் சர்க்கார் கைக்கு மாறி வந்தது. அந்த நிலத்தைக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்குக் கொடுப்பது என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது உண்டு. ஆனால் ஏழை அரிசனங்கள் பேரால் பினாமியாக ஐந்து பேர்கள் பேரில், ஒரு லட்சாதிபதி ஏறக்குறைய 25 ஏக்கர் நிலம் வரையிலும் அங்கிருக்கும் ரெவின்யூ அதிகாரியின் உதவியால் பெற்று, இன்று வரையிலும் அனுபவித்து வருகிறார். அதை ஜாக்கிரதையாக அரசாங்கம் பரிசிலனை செய்து அந்த ஏழை களுக்கு அது கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [22nd January 1964

அவர்களிடத்தில் கொடுக்கப்பட்டது. இதுவரையிலும் சரியான அளவுக்கு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. ஏன் இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், இது போன்ற சம்பவங்களில் அரசாங்கம் எவ்வளவு கண்காணிப்போடு, உறுதி யோடு இருக்கிறதோ, அதைப்பொறுத்துத்தான் இதில் தவறு இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியும். நான் குறிப்பிட்ட விஷயத் தை அரசாங்கம் மறுபடியும் பரிசீலனை செய்யவேண்டும். ராஜ்யம் முழுவதும் இருக்கக்கூடிய இதுபோன்ற நிலங்களை அரசாங்கத்தின் நல்ல எண்ணத்திற்கு மாறாகக்கூட அவசியம் இல்லாமல் யாருக்குக் கிடைக்க வேண்டாமோ, அவர்களுடைய கையில் சிக்க விடக் கூடாது, ஜாக்கிரதை வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன்.

அதுபோலவே குளப் புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு ஓரமாக இருக்கும் நிலங்களை ஏழை எளியவர்கள், நிலமற்ற ஏழை கள் தியாகிகள் பலர் முன்பு ஒரு காலத்தில் அதிக உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ், தெரிந்தோ தெரியாமலோ சாகுபடி செய்திருக் கிறார்கள். அவர்கள் விவசாயம் செய்ய தங்களுக்கு நிலம் இல்லை என்ற எண்ணத்தோடு அந்தந்தப் பகுதியில் போய் விவசாயம் செய்ய முற்பட்டு, எல்லை மீறிய தண்டத் தீர்வைக்கு உடன்பட்டு, கஷ்டம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை ரெவினியூ அதிகாரிகள் சிலர் கண்காணிப்பு செய்தும், செய்யாம லும் அவர்களுக்கு அபராதம் விதிப்பது என்றும் அல்லது தங்கள் இஷ்டம்போல், பி மெமோ அனுப்பாமல்கூட, விலக்கு அளிப்பது என்றும் நடந்துகொள்ளக்கூடிய துர்ப்பாக்கியமான நிலைமை சில இடங்களிலே இருக்கிறது. அதற்கு என்னுடைய ஆலோசனை ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தமாதிரி அரசாங்கம் ஜாரி செய்ய முடியாத நிலமாக இருக்குமானால், அதை பலகாலமாக யார் அனுபவித்துக்கொண்டு வருகிறார்களோ, அவர்களிடமே கண்டிஷனல் லீசுக்குக் கொடுக்கலாம். சர்க்காருக்கு அத்யாவசிய மாய் தேவைப்படும்வரை அவர்கள் அதை வைத்துக்கொள்ள வேண்டும், தேவைப்படுகிறபொழுது விட்டுவிடவேண்டும் என்ப தாகக் கண்டிஷன் போட்டுக் கொடுக்கலாம். இப்படிச் செய்வ தனால் தவறான முறையில் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படும். மேலும் பலகாலமாக அதை அனுபவித்துக்கொண்டு வருகிறவர் களுக்கும் உதவியாக இருக்கும்.

அடுத்து அரசாங்கம் கொடுத்து வரும் வயது முதிர்ந்தோர் பென்ஷன் திட்டம் சம்பந்தமானது. புதியதாக வாங்குகிறவர் களுக்கு போட்டோ கொடுப்பது என்று ஏற்படுத்துவது எல்லாம் நியாயம்தான். ஆனால் அதற்கு ஸ்பெஷலாக அதிகாரியைப் போட வேண்டியது அவசியமாக இருந்தாலும், அதைப் போடத் தயங் காது இந்தக் காரியத்தை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். மேலும் திருச்செந்தூர் தலைமை மருத்துவ மனையில் 24 பெட்டுகளை அதிகப்படுத்த சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள். அதைப் பாராட்டு கிறேன் அங்கே எக்ஸ்ரே யூனிட் ஏற்படுத்துவதற்கு வேண்டிய

22nd January 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

பணம் ஒதுக்கப்பட்டு கட்டிடம் எல்லாம் கட்டியாகிவிட்டது. ஆனால் இன்னும் அந்த யூனிட் சப்ளை செய்யப்படவில்லை. அவசியம் எக்ஸ்ரே யூனிட் சப்ளை செய்யப்படவேண்டும். பரமன்குறிச்சி குஷ்டரோக நிவாரண ஆஸ்பத்திரி நல்ல முறையில் சிகிச்சை செய்து வருகின்றது. அங்கே வியாதியஸ்தர்கள் வந்து தங்கி சிகிச்சையும் பெற வசதியில்லை. ஆனால் அவ்வாறு அங்கு வந்து சிகிச்சை பெற்று திரும்புகிறவர்களுக்கு புனர் நிர்மான வாழ்வு அளிக்கவும், வியாதியஸ்தர்கள் தங்கி சிகிச்சை பெறவும் வசதி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை வெகுகாலமாக இருந்திருக்கிறது. அதை அரசாங்கம் பரிசிலனை செய்ய வேண்டும்.

திருநெல்வேலியில் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நீர்ப்பாசனத் திட்டம்கூட அமைக்கப்படவில்லை. அதுபற்றி எங்களுக்கு எல்லாம் குறைபாடுகூட உண்டு. ஆகவே சிறிய சிறிய நீர்பாசனத் திட்டங்களையாவது வெகுவாக நிறைவேற்ற முற்படலாம். ஏறக்குறைய 25 லட்சம் ரூபாய் செலவுக்குள் திட்டங்கள் அங்கிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 25 லட்சம் ரூபாய் வரையிலும் அனுமதி கொடுக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமானால் ஏற்கெனவே இருக்கக்கூடிய பி. டபிள்யூ. டி. டிவிஷனல் இலாகாவினரால் முடியாது. ஆகவே ஸ்பெஷலாக ஒரு டிவிஷனை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். இது இல்லாத காரணத்தினால் திருச்செந்தூர் தாலுக்காவில் ஏறக்குறைய பல லட்சம் மதிப்புள்ள வாழை, தென்னை போன்றவைகள் எல்லாம் வெள்ள காலத்தில் அழிவு ஏற்படுகிறது. ஆசவே உடனடியாக அந்தத் தாலுக்காவில் பல பல சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மற்றொரு விஷயம். ஹரிஜன நல இலாகாவின் மூலம் மத்தியான உணவு கொடுப்பதிலே சில குழந்தைகளுக்குக் கொடுக்கிறோம். ஹரிஜன நலப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் இது கொடுக்கப்பட்டாலும் தனியார் பள்ளிகளில் கொடுப்பதற்குப் பண வசதி இல்லை என்ற நிலைமையைப் பார்க்கிறோம். கூடுமானவரையில் ஹரிஜனப் பிள்ளைகள் எந்தப் பள்ளியில் படித்தாலும் கொடுப்பதற்கு வசதி செய்யப்படவேண்டும். மேலும் நமது முதல் அமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்று வந்த பின் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அங்குள்ள பள்ளிகளில் மாணவர்கள் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடின்றி, சாதிபாகுபாடின்றி சமமாக நடத்தப்பட்டு எல்லோருக்கும் மதிய உணவு கொடுக்கிறார்கள் என்றார். இது நம்முடைய அபேதவாத கொள்கைக்கு ஏற்றதாக இருக்கிறது. ஆகவே பரிட்சார்த்தமாகவாவது இந்தத் திட்டத்தை எந்த ஒரு ஜில்லாவிலாவது அமலுக்குக் கொண்டுவர அரசாங்கம் யோசனை செய்ய வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். பணக்காரர்களுடைய குழந்தைகளிடத்தில் இருந்து வேண்டுமானல் ஒரு சிறு தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [22nd January 1964

வைத்து எல்லாக் குழந்தைகளும் சமமாக உட்கார்ந்து பள்ளியிலேயே மதிய உணவு உட்கொள்ள வசதி செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் கம்போஸ்ட் உர தயாரிப்பிற்காக நாம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். இந்த உர உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துக்கொண்டு இந்த சப்ளிமெண்டரி டிமாண்டை நான் வரவேற்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர்களுக்கு நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சப்ளிமெண்டரி டிமாண்ட் விவாதத்தில் கலந்து கொள்கிறவர்கள் அந்த மானியத்தின் கீழ் வரக்கூடிய விஷயங்களைப் பற்றித்தான் பேசவேண்டும்.

* **திரு. து. ப. அழகமுத்து:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள துணை மதிப்பீடு சம்பந்தமாக என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தத் துணை மதிப்பீடு நாம் திட்டமிட்டதைவிட வேலைகள் மிக வேகமாக நடந்து வருகிறது என்பதைக் குறிக்கிறது என்று கனம் அமைச்சர் தம்முடைய உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அப்படி வேகமாக நடைபெறுகிற வேலைக்குத் தகுந்தாற்போல அதிகப் பணம் தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்தத் தொகையில் சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தமாகவும் பணம் ஒதுக்கியிருக்கிறோம். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தால்தான் உற்பத்தியை நன்றாகப் பெருக்க முடியும். அவர் கொடுத்துள்ள குறிப்பில் இருந்து பார்த்தால் இங்கே ஒதுக்கப்பட்டுள்ள பணம் வறண்ட பிரதேசங்களாக உள்ள ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பல வேலைகளை எடுத்துக்கொள்வதற்காகத்தான் என்று தெரிகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் வறண்ட பிரதேசங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி வறண்ட பிரதேசத்தைச் சேர்ந்தது என்பதை பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வறண்ட பிரதேசமாக இருக்கிற என்னுடைய தொகுதியிலும் மற்ற திருச்சி மாவட்ட வறண்ட பகுதிகளிலும்கூட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள ஏரிகள் சரியானபடி செப்பனிடப்படுவதில்லை. ஏரியை ஆழப்படுத்துவது, கரைகளை உயர்த்துவது, வாத்துக் கால்களை நன்றாக வெட்டிவிடுவது ஆகிய வேலைகளிலும் அரசாங்கம் அந்தப் பகுதியில் கவனம் செலுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பாசன மதகுகள் சரியானபடி ரிப்பேர் செய்யப்படுவதில்லை. அவை எல்லாவற்றிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அங்கு இருக்கிற ஒன்றிரண்டு ஆறுகளுக்கு அணைகள் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. அப்படி உள்ள கோரிக்கைகளில் ஒன்று கொல்லிமலையில் உற்பத்தியாகும் ஐயாற்றிலே ஒரு அணை கட்டவேண்டும் என்பது.

22nd January 1964] [திரு. து. ப. அழகமுத்து]

நமது ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் மாநாட்டிலேகூட இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதையொட்டி நான் கேட்ட கேள்விக்கு அது ஆராய்ச்சி நிலையில் இருப்பதாக கனம் பொதுப்பணிதுறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அண்மையில் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் நடந்த கூட்டத்திலே இதைப்பற்றி கேட்டபோது அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதாக என்ஜினியர் பதில் கொடுத்தார். அதற்குப் பிறகு எங்கள் மாவட்டத்திற்கு பொதுப் பணித்துறை அமைச்சர் வந்தபோது அந்தத் திட்டம் பற்றி பத்திரிகை நிருபர்கள் "கொல்லி கைவிட்டுவிட்டீர்களா?" என்று கேட்டார்கள். "இல்லையே. இன்னும் அது பரிசீலனையில் இருக்கிறது" என்று கூறியிருக்கிறார். இதிலே எது உண்மை என்று தெரியவில்லை. அந்தத் திட்டத்தை எப்படியாவது எடுத்து நிறைவேற்றித் தரவேண்டும் என்பதாக நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இங்கே சில திட்டங்களை எடுத்துக்கொள்கிறபோது இவை உரிய பயன் தராத பாசன திட்டங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உரிய பயன் தராத திட்டங்கள் என்று எடுத்துக்கொள்கிறபோது ஏன் கொல்லி மலைத் திட்டத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படி அவர்கள் எடுத்துக்கொண்டால் மழை காலங்களில் அங்கே தேங்கும் தண்ணீரினால் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிணறுகளிலாவது நல்ல தண்ணீர் ஊற்றெடுக்கக்கூடும். இதை நான் வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம் இந்த ஒரு திட்டத்தைக் காட்டியே என்னுடைய மதிப்புக்குரிய கனம் உறுப்பினர் முத்தையா அவர்களுடைய தொகுதியில் ஆளும் கட்சி இரண்டு முறை வோட்டுப் பெற்றார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அப்படி வெற்றி பெற்றவர்கள் அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது.

அடுத்தாற்போல், லாடபுரத்தில் ஒரு ஏரி அமைப்பது பற்றி நீண்ட நாட்களாக ஒரு பிரச்சினை இருந்து வருகிறது. அது சம்பந்தமாகக் கேள்வி கேட்டபோது கரைபோடுவதற்கான மண் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும், பரிசீலனை செய்த பிறகு வேலை தொடங்கப்படும் என்றும் கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது பரிசீலனை நடந்து முடிந்து விட்டதாகத் தெரிகிறது. அதற்குப் பிறகு ஆண்டுக் கணக்காகியும் அந்த வேலை இன்னும் தொடங்கப்படவில்லை. இம்மாதிரிப் பிற்பட்ட பகுதிகளிலிருந்து புதிய ஏரிகள் கட்ட வேண்டுமென்று வருகிற கோரிக்கைகளுக்கு உடனடியான பரிகாரம் காணாமல் இருக்கிறார்கள். ஆறு வசதி உள்ள இடங்களில் மட்டும் பாசன வசதி செய்து கொடுத்துவிட்டால் போதுமா? பிற்போக்கான இடங்களிலும் விவசாயம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு முதலாவதாக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் ஏரிகளை மராமத்து செய்வதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. க. ர. நல்லசிவம் : மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உபமானியக் கோரிக்கையின் மீது இரண்டொரு விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் காரணமாக வேலை இழந்திருக்கக்கூடிய தொழிலாளர் களுக்கு நம்முடைய ராஜ்ய அரசாங்கம் போதுமான உதவி செய்ய வில்லை என்பதைச் சமீபத்தில் கனம் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது கொடுத்த புள்ளிவிவரத்தி லிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. பாதிக்கப்பட்ட அந்த தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்கு சர்க்கார் முழு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. தங்கக்கட்டுப்பாடு சட்டத்தின் காரண மாக வேலை இழந்தவர்கள் வேறு வேலைக்கு லாயக்கில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய வேலையைத் தேடிக் கொடுக்கும் பொறுப்பைச் சர்க்கார் மேற்கொண்டு அவர்களுக்கு வேலை கொடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உபமானியக் கோரிக்கையிலே சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்ற தலைப்பின்கீழ் உள்ள வேலைகளை நிறைவேற்றுவதற்கென்று மத்திய அரசாங்கம் ஒரு தொகையை ஒதுக்குகிறது. அதிலே மண் அரிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் அதைப் பிரதான வேலையாக எடுத்துக் கொண்டால் மிகப் பயன் உள்ளதாக இருக்குமென்று நான்கூற விரும்புகிறேன். முன்பு மண்ணரிப்பு திட்ட வேலை குறிப்பிட்ட அளவுக்குத்தான் இருந்தது. இப்போது அந்தத் திட்டத்தினால் ஏற்படும் பலனைப் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிற பகுதிகளில் நிலத் தில் தண்ணீராவது உயர்ந்து விடுகிறது. இரண்டு ஆண்டுகள் மண் அரிப்புத் திட்டம் ஒழுங்காக நடைபெறுமானால் நிச்சயமாகத் தண்ணீர் உயருகிறது. சர்க்கார் நல்ல முறையில் பாசனம் இல்லாத பகுதிகளில் பூரணமாக மண் அரிப்புத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உப மானியக் கோரிக்கையிலே அதிகமான மானி யத்தைப் பெற்றிருக்கக்கூடிய பரம்பிக்குளத் திட்டத்தைப் பற்றி ஒரு விஷயத்தை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கொப்பு வாய்க்கால் வெட்டி கொடுத் தால் கடைசி நிலம் வரை தண்ணீர் பெற முடியும். சர்க்கார் செலவி லேயே கொப்பு வாய்க்காலை இடைக்கோடி நிலம் வரை வெட்டிக் கொடுத்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்று கனம் அமைச்சர் அவர்களிடம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கீழ்ப்பவானியில் புஞ்சைத் திட்டமாக இருந்து இப்போது புஞ்சை நஞ்சை அல்லாது புதிய திட்டமாக மாற்றப்பட் டிருக்கிறது. வருஷத்திலே ஆறு அல்லது ஏழு மாதம் தண்ணீர் கொடுக்கும்போது நஞ்சைத் தோட்டக்காலைப் புஞ்சை என்று பிரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. பொதுவாக இந்த வேலையைப் பொறுத்தவரை சர்க்கார் அழுத்தம் திருத்தமாக

22nd January 1964] [திரு. க. ர. நல்லசிவம்]

ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். முன்பு புஞ்சைத் திட்டமாக இருந்ததை, தொடர்ந்து ஏழு மாத காலத்திற்குத் தண்ணீர் கிடைப்பதற்கு நீர்க்கசிவு உள்ள பகுதிகளில் நஞ்சை என்று செய்ததில் பல சிக்கல்கள் இருந்ததால், இப்போது மூன்றாகப் பிரித்து வேறு வகையாகத் தண்ணீர் கொடுக்க முடிவு செய்து விட்டு, இப்போது அது சரியல்ல என்று முடிவு செய்து 'டர்ம் சிஸ்டத்தில்' இறங்கியிருக்கிறார்கள். இதன்படி முதல் தடவை நான்கு மாதம், இரண்டாவது தடவை மூன்றரை மாதம் என்ற முறையில் பிரிவு நடந்து கொண்டிருக்கிறது. இதிலே போய் தோட்டம், நஞ்சை புஞ்சை என்று பிரிப்பதானது புதிய சிக்கலை உண்டுபண்ணும். எந்த நோக்கத்திற்காக இந்தமாதிரி பிரிக்கின்றனர்? ஒன்று இரண்டாக முறை பிரித்து விட்டால் அதிலே விவசாயிகள் என்ன விவசாயம் செய்கிறார்களோ, செய்து கொள்ளட்டும் என்று அப்படியே விட்டுவிட வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கின்ற தண்ணீரை வைத்துக்கொண்டு அவர்கள் எதை வேண்டுமென்றாலும் பயிர் செய்து கொள்ளட்டும் என்று விட்டுவிட வேண்டும். இல்லையென்றால் சர்க்கார் உத்தேசித்திருக்கிற வகையில் மூன்றாகப் பிரிக்க வேண்டுமென்று விரும்பினால் இரண்டு முறையாகப் பிரிந்திருப்பதை மாற்றிவிட்டு ஏழு அல்லது எட்டு மாதம் தொடர்ந்து எல்லாவற்றுக்கும் தண்ணீர் கொடுப்பது என்று வைத்தால்தான் மூன்றாகப் பிரிப்பது வசதியாக இருக்கும். ஆகவே இதை நன்கு கவனித்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் உப மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக, உப மானியக் கோரிக்கையிலே விவசாயத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை விவசாயத்திற்காக என்று நீர்ப்பாசன வசதிகள் எதுவும் செய்வதற்கில்லை. அதற்குப் பதிலாக மண் அரிப்புத் திட்டத்தின் மூலமாக விவசாயத்தைப் பெருக்க முடியுமா என்று சர்க்கார் யோசித்து மண் அரிப்புத் திட்டத்தை அதிகமாக நீலகிரியில் செய்தது. சாதாரணமாக 'டெரஸ்' செய்யும்போது மூன்று ஆண்டு காலத்திற்குப் பூமியில் விளைபொருள் எதுவும் விளைய எது இல்லை என்பது பரிட்சார்த்தமாக நீலகிரியில் கண்ட பலன். ஜில்லா டெவலப்மெண்ட் கூட்டத்தில் விவசாய அதிகாரிகளிடம் இது பற்றிக் கேட்கப்பட்டபோதுகூட, அந்த இடத்தில் சரியான மண் பிடிக்க ஏழு ஆண்டு காலம் வரை ஆகும் என்று கூறினார்கள்.

நீலகிரி ஜில்லாவில் லேட் ப்ளைட்டினால் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக உருளைக் கிழங்கு விவசாயம் கெட்டு விட்டது. 11-30 a.m. அப்படி பயிர் கெட்டு, மாற்று விதை கொடுக்க ஸ்காட்லண்டிலிருந்து தருவித்துக் கொடுக்க முடியாத நிலையில் மண் அரிப்புத் திட்டத்திற்

காக செலவிட்ட பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏக்கர் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 400 ரூபாயிலிருந்து 700 ரூபாய் வரை செலவு ஏற்பட்டிருக்கிறது. அதை இப்போது திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜில்லாவில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் விவசாயம் கெட்டுப் போய் இருக்கும் நிலையில் டெரஸ் செய்ததற்காகக் கொடுத்த பணத்தை திருப்பிக் கொடுங்கள், இல்லாவிடில் பூமியை ஏலத்திற்கு போடுவோம் என்றால், அந்த பூமிகள் ஏலத்திற்கு போகுமே தவிர அவர்கள் கடனைத் திருப்பிக்கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை. கீழ் பவானி, குந்தா திட்டத்திற்கு மண் அங்குபோய் சேர்ந்துவிடுமே என்று சர்க்கார் பணத்தை மண் அரிப்பிற்காக போட்டிருக்கிறார்கள். இன்று நீலகிரி ஜில்லாவின் நிலை சர்க்காருக்கு நன்கு தெரியும். நான் வியாபாரம் செய்யக் கூடியவர்களுக்கு சலுகை கோரவில்லை. நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதெல்லாம் டெரஸ்க்காக போட்ட பணத்தை வசூல் செய்யாமல் அதை "ரைட் ஆப்" செய்துவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள மக்கள் அதைத் திருப்பிக் கொடுக்கும் நிலையில் இல்லை, அப்படி வசூல் செய்ய முடியாத நிலை இருக்கும்போது அதை ரைட் ஆப் செய்துவிட வேண்டும். இவ்வளவு ஆயிரக்கணக்கில் செலவு செய்துவிட்டு அதை வசூல் செய்ய வேண்டாமா என்றால், அப்படி அவர்களுக்கு திருப்பிக் கொடுக்க சக்தி இருந்தால் சொல்லியிருக்க மாட்டேன். ஆனால், அவர்களுக்கு திருப்பிக் கொடுக்க சக்தி இல்லாதிருக்கும் போது சர்க்கார் ஏலத்திற்கு விட்டு திருப்பி எடுப்பதினால் என்ன பலன் கிடைக்கும்? அதுபற்றி பட்ஜட் கூட்டத்தில் பேசுகிறேன். அங்குள்ள மக்கள் வரி செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். சர்க்கார் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் அவர்கள். சென்ற ஆண்டு 41-வது விதியின் கீழ் இந்த விஷயத்தைக் கொண்டுவந்தபோது ஒரு வருடம் தள்ளிக் கொடுத்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய மக்கள் சர்க்காருக்கு கொடுக்கக்கூடிய கடனை திருப்பிக் கொடுக்க சக்தி இல்லாததால் ஒரு வருட வாய்தா கொடுக்கவேண்டுமென்று இப்போதே கேட்டுக் கொள்கிறேன். வருகிற பட்ஜெட் கூட்டத்தில் 41-வது விதியின்கீழ் இந்த விஷயத்தைக் கொண்டுவரும்போது அமைச்சர் அவர்கள் தயவு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் பற்றி இங்கு பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் விஷயத்தில், அதிபர்கள் அதைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு வசதியில்லை என்று அவர்கள் சொன்னாலும் சர்க்காரிலிருந்து பணம் கொடுக்கிறோம், வீடு கட்டிக் கொடுங்கள் என்று லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கச் சொன்னாலும் அதை வாங்கவே அவர்கள்

22nd January 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

மறுத்துக்கொண்டிருக்கும் நிலையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வளவு ஆண்டுகளுக்குள்ளாக வீடுகள் கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று திட்டவட்டமான அறிவிப்பை சர்க்கார் சொன்னுல்தான் அவர்கள் கட்டுவார்களே தவிர அது பற்றி பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தால் அதற்கு அவர்கள் செவிசாய்க்க மாட்டார்கள். காபி, டீ எஸ்டேட்டைப் பொறுத்தவரை அவர்களுக்கு வருமானம் குறைவு என்று சொல்ல முடியாது. ஆனல் அவர்களுக்கு மனம் வரவில்லை என்று வருத்தத் தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அங்கு மின்சாரம் போடுவது ஒரு சிக்கலான பிரச்னையாக இருக்கிறது. வீடுகளுக்கு மின்சாரம் எடுத்தால்தான் ஸ்ட்ரீட் லைட்ஸ் போடமுடியும் என்ற நிபந்தனை இருக்கிறது. எஸ்டேட் முதலாளிகள், தொழிலாளர்கள் வீடுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுத்தால்தான் தெருக்களுக்கு விளக்கு போட முடியும் என்ற நிலை இருக்கிறது. வீடுகளுக்கு மின்சாரம் போடாமல் இருக்கும்போது ஸ்ட்ரீட் லைட்ஸ் போட முடியாது என்ற சிக்கலான பிரச்னை இருக்கிறது சட்டப்படி. ஆகவே இந்த விதியைத் தளர்த்திவிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் வீடுகளுக்கு மின்சாரம் கொடுக்கவில்லை என்றுலும்கூட பஞ்சாயத்து அல்லது முனிசிப்பாலிட்டி முன்வந்து ஸ்ட்ரீட் லைட்ஸ் போட்டுக் கொள்ளலாம் என்ற முறையையாவது ஏற்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீலகிரியில் உள்ள ரோட்டைப் பற்றி ஒரு வார்த்தை. அங்கு மெட்டல் ரோடு எவ்வளவு போட்டாலும் நிற்பதில்லை. ஒரு ஆண்டு போட்டுவிட்டு அடுத்த ஆண்டு சென்று பார்த்தால் அந்த ரோடு இருப்பதே தெரியாது. மழை பெய்து எல்லாம் அடித்துக்கொண்டு போகப் படுகிறது. இதுபற்றி நான் இங்கு பன்முறை சொல்லியிருக்கிறேன். ஆகவே அங்கு மெட்டல் ரோடு போடுவதைவிட தார் ரோடு போட்டால் சர்க்காருக்கும்கூட மிச்சப்படும், பணம். அதோடு ரோடும் பாதுகாப்பாக இருக்கும்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பிற்பகுதியில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்துவதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இப்போது நாம் மூன்ரும் ஐந்தாண்டுத் திட்ட பிற்பகுதியில் இருக்கிறேம். இந்த ஆண்டாவது அது வருவதற்கு ஒருவித ஏற்பாடும் செய்யவில்லை. ஆகவே விரைவில் அங்கு ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எங்கள் ஜில்லாவில் ஒரு கலைக் கல்லூரிதான் இருக்கிறது. வேறு எந்தக் கல்லூரியும் அங்கு ஏற்பட வாய்ப்பில்லை. தனிப்பட்டவர்கள் வைக்க முன்வருவதில்லை. சர்க்காரிலிருந்து ஒரு கல்லூரி வைக்கலாம் என்ருல், அது ஒரு சின்ன ஜில்லா என்ற

சாக்கு சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த வருடமே அங்கு ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. வி. சீராமுலு : மாமன்றத் துணைத் தலைவர் அவர் களே, இந்தத் துணை மான்யக் கோரிக்கையின் பேரில் நான் இரண் டொரு வார்த்தைகள் கூற இருக்கிறேன். இம்மாநிலத்தில் சேலம் மாவட்டம் மிகப்பெரிதாக இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் சேலம் மாவட்டத்தின் ஜனத்தொகையைப் பார்க்குங்கால் இந்த மாவட்டத்தில் பிற மாவட்டங்களை விட அதுவும் பெருகியிருக் கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தனி ஆட்சித் தலைவர் ஒருவரை நியமித்து அதைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனால் அண்டை சீனத்துக் காரன் நம் நாட்டின் மீது படை எடுத்த காரணத்தினால் சேலம் மாவட்டத்தை பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது. அங்கு ஆண்டு ஒன்றுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் இருந்து தேறும் மாணவர்கள் 7,600-க்கு மேல் இருக்கிறார்கள். ஆனால் கல்லூரியில் சேருவதற்குள்ள வசதி அந்த மாவட்டத்தில் 1,200 பேர்களுக்கே இருக்கிறது. ஆகவே மேற்கொண்டுள்ள மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பயில வசதி யில்லாத காரணத்தினாலும் அதற்கு வேண்டிய பொருள் இன்மை காரணத்தினாலும், வருகிற பட்ஜட்டிலாவது சேலம் மாவட்டத் தில், முக்கியமாக பின்தங்கிய வட சேலத்தில் ஒரு கல்லூரியை அமைக்க தொகை ஒதுக்கி ஆவன செய்யவேண்டுமென்று அரசாங் கத்தை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக சேலம் மாவட்டத்தில் மருத்துவ மனைகள் சீராக இல்லாத காரணத்தினால் அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்க அம் மாவட்டத்திலிருந்து, ரெயில்வே செஸ் நிதியில் இருந்து 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியும் இன்னும் அங்கு மருத்துவக் கல்லூரி ஏற்பட வில்லை. ஆகவே அந்த நிதியிலிருந்து தொகை எடுத்து அடுத்த ஆண்டே அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைத்து தருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக் கொள் கிறேன்.

விவசாயத்தை எடுத்துக் கொண்டால், சேலம் மாவட்டம் மிகப் பின்தங்கிய மாவட்டம். வட சேலம் பல மலைகளால் சூழப் பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அங்கு சுற்றுப்பிரயாணம் செய்யும்போது அதைக் கவனித்திருப்பார்கள். அங்கு கண்மாய் கள் அதிகம் இல்லை. இருக்கிற கண்மாய்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்றால் பொருள் இல்லை, பொருள் இல்லை என்கிறார்கள். இருக்கிற கண்மாய்களுக்கு வேண் டிய வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த படியாக, தென்பாண்டிய நாட்டில் இப்போது புயலால் பாதிக்கப் பட்டிருக்கிறது என்ற காரணத்தை முன்னிட்டு பல உதவிகள் தேவைப்படுகிறது. அங்கு தண்ணீர் அதிகத்தால் பாதிக்கப்படு

கிறது. அதேபோல் சேலம் மாவட்டத்தில் நல்ல முறையில் கே.ஆர்.பி. ரிசர்வாயரிலிருந்து தண்ணீர் விடாததால் விவசாயிகள பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது 31-ம் தேதி வரை தண்ணீர் விடுகிறார்கள். அதை நீடித்து, இன்னும் அதிகமாக மேற்கொண்டு மூன்று மாதங்களுக்கு தண்ணீர் கொடுத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கு மேலும் கூடுதலான அளவில் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதில் பேச சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ம. கமலநாதன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தத்துணை மான்யத்தின் மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, ஆரம்பக்கல்விக்காக பஞ்சாயத்து யூனியன் பிரதேசங்கள் அல்லாத இடங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் நான் உறுப்பினராக வந்த தேதியிலிருந்து பொதுவாக பேசுகின்ற நேரத்தில் எல்லாம் ஆரம்பப் பள்ளிகளுக்கான கட்டிடத்திற்கு நிதி ஒதுக்குகின்ற முறை சரியல்ல என்று சொல்லி வந்திருக்கிறேன். அது மட்டுமல்ல, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டிலும், மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும் இதைப்பற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளுக்கான கட்டிடங்களுக்கான நிதி எப்படி ஒதுக்கப்படுகிறது என்றால், எதிர்காலத்தில் பள்ளிகளில் சேரக்கூடிய மாணவர்களையும் கணக்கிட்டு ஒரு மாணவருக்கு 15 ரூபாய் என்கிற விதத்தில் நிதி ஒதுக்கி கணக்கிடுகிறார்கள். அப்படி கணக்கிட்டுப் பார்க்கும் போது கணக்கிடுகின்றவர்கள், இதற்கு முன்பு எத்தனை பேர்கள் படிக்கின்றார்கள், எத்தனை பேர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள், அவர்களுக்கெல்லாம் இப்போது போதிய அளவு கட்டிட வசதி இருக்கிறதா என்பதை கருத்திற் கொண்டிருப்பதாக தெரியவில்லை. அப்படி கருத்திற் கொண்டிருந்தால், எப்படி ஆரம்பப் பள்ளிக்கூட கட்டிடங்கள் இருக்கின்றன, எந்த பள்ளிகளுக்கு எல்லாம் தகுந்தவாறு கட்டிடங்கள் இல்லை என்பதை பார்த்து இதற்கு நிதி ஒதுக்கியிருக்கப்படவேண்டும். எதிர்காலத்தை மட்டும் கணக்கிட்டுவிட்டு, கடந்த காலத்தை மறந்து விட்டார்கள். உதாரணமாக எதிர்காலத்தில் 3,000 மாணவர்கள் வருவார்கள் என்று கணக்கிட்டு ஒருவருக்கு 15 ரூபாய் என்று கணக்கிட்டு 45 ஆயிரம் ஒதுக்கியிருந்தாலும் கூட, அரசினர் மான்யமாக தாக்கூடியதையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது, அதாவது 8,000 ரூபாய் கட்டிடத்திற்கு பாதித் தொகையான 4,000 ரூபாயைக் கொடுத்தாலும், 11 கட்டிடங்கள் தான் கட்ட முடியும். நூறு பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டவேண்டிய இடத்தில் பத்து கட்டிடங்கள் தான் கட்டுவதற்கு வசதி செய்து கொடுக்க முடியும். ஜில்லா போர்டு, பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்பட்ட பிறகு, உயர்நிலை பள்ளிகளுக்கு கட்டிடங்களுக்கு பண வசதி செய்து கொடுக்க இப்போது முனைந்திருக்கிறோம் என்று நிதி அமைச்சர் அவர்கள் துணை மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளார்கள். அதே

[திரு. ம. கமலநாதன்] [22nd January 1964

போன்று ஆரம்பப் பள்ளிகளுக்கும் வழிவகை செய்யவேண்டும். அதற்காக அடுத்த பட்ஜெட் உரையிலாவது வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது தவிர புதியதாக, ஏரிகள் கட்டுவது என்றால் அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்துதான் எடுக்க வேண்டும். நன்கொடையாக யாராவது கொடுத்தால் அதை பெற்றுக்கொள்ளக் கூடாது என்று ஒரு புதிய சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இம் மாதிரியான ஏரிகள் கட்டுவதற்கு யாராவது முன்வந்து நிலத்தை கொடுக்க முன் வந்தால் அதை பெற முடியாது. சட்டப் பிரச்னையை காரணமாக காட்டி, ஏரி கட்டுவது தாமதப்பட்டு வருகிறது. ஆகவே 'ரிலிங்குஷ்' வசதி செய்து தந்தால் அதை ஏற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் பலவிதமான அபிவிருத்தி வேலைகள் நடந்து வந்திருக்கின்றன. அனேக புதிய பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதே போன்று புதிய பாதை வசதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இதற்கான இடம் கொடுத்தவர்கள், சாதாரணமாக ஒன்றரை ரூபாயில் சம்மத ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது இதன் மீது சட்டப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இப்போது கொடுக்கப்பட்ட நிலங்களை எல்லாம் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை புனருத்தாரணம் செய்கின்ற வகையில் அவர்கள் இப்போது சப்-ரெஜிஸ்டிரார் ஆபீசில் சென்று பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றி எழுதிக் கொடுப்பது என்றால் அது முடியாத ஒரு காரியம். ஆகவே, இப்போது இருக்கும் சாலைகள், கிணறுகள், பள்ளிக்கூடங்கள் இருக்கும் இடங்கள் ஏதாவது தனிப்பட்டவர்கள் கொடுத்திருந்தால், அதை அப்படியே பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றுவதற்கு வசதி செய்யக் கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உப மான்யக் கோரிக்கையைப் பற்றி நான் பேசும் போது முதலில் ஒரு விஷயத்தை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்க்கு சப்ளிமண்டரி கிராண்ட் மூலம், அதாவது ஆகஸ்ட் மாதம் 3 கோடி ரூபாய், இப்போது 26 கோடி ரூபாய் சொச்சம் இவ்விதம் எல்லாவற்றையும் சேர்த்தால் 30 கோடி ரூபாய் அளவுக்கு கோரப்பட்டிருக்கிறது. இது ஓரளவுக்கு பட்ஜெட் தயாரிக்கின்ற நேரத்தில் எதிர்பார்க்கக் கூடியவை அல்லவா, இதைப்பற்றி நம்முடைய இலாக்காக்கள் ஏன் முன்கூட்டியே எதிர்பார்க்க தவறுகின்றன என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நாம் மொத்தம் 100 கோடிக்கு மேல் பட்ஜெட் தயாரிக்

22nd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கின்றோம். ரெவின்யூ அக்கௌண்டில் 4½ கோடியும் காப்பிட்டல் அக்கௌண்டில் 26 கோடியும் சேர்த்து 30 கோடிக்கு உபரி மான்யமாக கேட்கப்பட்டிருக்கிறது. இது எந்த அளவில் நியாயமாக இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். இவை எல்லாம் விணாக செலவு செய்யப்பட்டுவிடும் என்று சொல்லவில்லை. இதில் கொடுத்திருக்கின்ற திட்டங்கள் எல்லாம் நல்ல திட்டங்கள் என்பதில் சந்தேகமில்லை. கன்டின்ஜென்ட் ஃபண்டிலிருந்து எடுத்து செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதை விரைவில் முடிக்க வேண்டும் என்பதிலும் சந்தேகமில்லை. திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதிலும் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. வேலைகள் எல்லாம் அவசியம் தான். ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம், இந்த வேலைகள் எல்லாம் பட்ஜெட் தயாரிக்கின்ற நேரத்திலேயே எதிர்பார்க்க முடியாத நிலையிலா இருந்தது? மார்ச் மாதத்திலேயே இவற்றை எதிர்பார்க்க முடியவில்லையா? அதற்கு என்ன காரணம் என்பதையாவது இதில் விளக்கியிருக்க வேண்டும். என்னென்ன வேலைகளுக்கு என்று ஜாபிதா கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக கன்டின்ஜென்ட் ஃபண்டில் ஒரு கோடி 47 லட்சத்தி 20 ஆயிரம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. இதில் சட்டப்படி அனுமதிக்கக் கூடியது ஒரு கோடி 50 லட்சம் ரூபாய். இதற்கு முன்னால் எல்லாம் 75 லட்ச ரூபாய் தான் அனுமதிக்கப்பட்டு வந்தது. பின்னால் அதை அதிகரிக்க வேண்டுமென்று கோரினார்கள். ஒன்றரை கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தலாம் என்று இந்த சபை அனுமதி கொடுத்திருக்கிறது. அது எதற்காக என்றால், மிகவும் அவசியமான, திடீரென்று வெள்ளம் வந்துவிடுகிறது என்ற நிலைமை வருகின்ற—தீ விபத்து போன்றவைகள் ஏற்படுகிறது என்ற நிலைமை வருகின்ற—இயற்கை கோளாறுகளினால் வருகின்ற நிலைமைகளில் இந்தப் பணத்திலிருந்து செலவு செய்யலாம் என்பது தான் இதிலுள்ள குறிக்கோள். இம்மாதிரிப்பட்ட சந்தர்ப்பங்களில் பணத்தை ஒதுக்குவது சரி. அது மட்டுமல்ல, மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற ஸ்காலர்ஷிப் போன்ற தொகைகள் வேண்டுமானால் ஓரளவுக்கு பட்ஜெட் தயாரிக்கின்ற நேரத்தில் எதிர்பார்க்க முடியாத நிலைமையில் இருக்கலாம். அதற்காக சப்ளிமெண்டரி கோரலாம். ஆனால் 30 கோடி ரூபாய் அளவுக்கு எதிர்பார்க்க முடியாத அளவுக்கு கோருவது என்பது சரியாக இருக்குமா என்பதில் கனம் முதலமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு நூற்பு ஆலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான முடிவு எடுத்து அனேக நாட்களாகிவிட்டது. இதை என் முன்னாலேயே எதிர்பார்த்திருக்கக்கூடாது? இவைகள் மீது முடிவு டிசம்பர் மாதத்தில் தான் எடுக்கப்பட்டதா, ஜனவரியில் பணம் கோர? ஆரம்பத்தில் என் அவைகள் மீது முடிவு எடுக்கவில்லை. இலாகாவில் ஏன் இந்த மாதிரி மந்தம் ஏற்பட்டு விடுகிறது? இப்போது பட்ஜெட் மான்யூவலுக்கு மதிப்பு கிடையாது. மற்ற விதிகளுக்கு மதிப்பு கிடையாது. 'நிதி அமைச்சர் இருக்கவே இருக்கிறார். நிதி அமைச்சரும் அவர் தான், முதல் அமைச்சரும் அவர்தான் ஆகையால் எப்போது அனுப்பினாலும் அவர் சட்ட

சபையின் சம்மதத்தை பெற்றுவிடுவார்' என்ற காரணத்தினுல் உரிய காலத்தில் காரியங்களைச் செய்யாமல், எந்தக்காலத்தில் நிதி கோர வேண்டும் எந்தக் காலத்தில் பட்ஜெட் தயாரிக்க வேண்டும் என்பதிலே அதிகாரிகளிடத்தில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதனுல் தான் மெதுவாகப் போகிருர்கள் என்று நான் நினைக்கின்றேன். அவர்கள் துரிதமாகப் போகவேண்டும். இந்தத் திட்டங்களையெல்லாம் அடுத்த பட்ஜெட்டுக்கு ஒத்திப் போட்டிருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்த நிதி ஆண்டு ஆரம்பத்தில் பலவற்றை எதிர்பார்த்திருக்க முடியும் என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்தப் பிரச்னையை கவனிக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு இந்த மான்யக் கோரிக்கையில் இருக்கக்கூடிய பல விஷயங்களை 10 நிமிஷங்களில் பேசுவது என்பது சாத்தியமல்ல. 30 கோடி ரூபாய்க்கு அனுமதி கேட்கக் கூடிய இந்த மான்யக் கோரிக்கை மீது ஒரு மணியில் இத்தனை அங்கத்தினர்களும் அபிப்பிராயம் கூற வேண்டும். அங்கத்தினருக்கு 10 நிமிஷம் கிடைக்கலாம். எந்த விஷயங்களை எடுத்துச் சொல்ல முடியுமோ, நேரம் இருக்கிற அளவுக்குச் சொல்லலாம் என்று தான் நான் நினைக்கிறேன்.

முக்கியமாக இந்த அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்பது கோல்ட் கண்ட்ரோல் ஆர்டர் பற்றியது. தங்கக் கட்டுப்பாடு சட்டத்தில் சில விதிகள் தளர்த்தப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது மத்திய அரசினரால். இந்த மன்றத்தில் இரண்டு நாட்கள் முன்பு தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது எந்த அடிப்படையில் தளர்த்தியிருக்கிருர்கள், நமது அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் மத்திய அரசாங்கத்திலிருந்து எந்த விதமான உத்திரவுகளும் கிடையாது, எப்படி அமல் நடத்த வேண்டுமென்று எதுவும் இந்த அரசாங்கத்திற்கு வரவில்லை என்று சொன்னுர்கள். ஜனங்களிடத்தில் பிரசாரம் செய்துவிட்டு காரியம் ஏதும் நடக்கவில்லையென்ருல் ஜனங்கள் யாரைக் கேட்கிருர்கள், நம்மையும் நம் அமைச்சர்களையும் தானே. அவர்களை எப்படி சமாளிப்பது? பொற் கொல்லர்கள் என்ன எதிர்பார்க்கிருர்கள் என்ருல், சர்க்காரிலிருந்து அனுமதி வந்துவிட்டதாகவும், உடனடியாக நகை செய்ய அனுமதி வேண்டும் என்றும் எதிர்பார்க்கிருர்கள். 'எங்களுக்கு அனுமதி தரவில்லை' என்று ஜில்லா அதிகாரிகள் மீது புகார் செய்கிருர்கள். எம். எல். ஏ.-க்களைக் கண்டு அவர்களைப் பற்றி புகார் செய்கிருர்கள். எம்.எல்.ஏ.-க்களுக்கும் சங்கடம் ஏற்படுகிறது. ஏதோ நாங்கள் எதிர் கட்சியில் இருப்பதால் நாங்கள் அரசாங்கத்திடம் சொல்லுவதைத் தவிர ஒன்றும் செய்ய முடியாது என்று எங்கள் பேரில் அவ்வளவு குறைபட்டுக்கொள்ளவில்லை. இப்போது தங்கக் கட்டுப்பாடுச்

22nd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

சட்டத்தை அமல் நடத்த அதிகாரிகளெல்லாம்கூட போட்டாகி விட்டது. அவர்களெல்லாம் என்ன செய்கிறார்கள்? அதற்காக இந்த ஆண்டிலேயே 5,000 ரூபாய் செலவு செய்வதற்கு கோரிக்கை கூட வந்தாகிவிட்டது. இதைப் பற்றி மத்திய அரசாங்கத்தில் தெரியப்படுத்தி, அதற்கான யந்திரம் கூட ஏற்படுத்தியாகி விட்டது, அவர்களெல்லாம் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இதிலே உத்திரவு என்ன என்று விளக்கிச் சொல்லவேண்டும் என்று விசேஷ முயற்சி எடுத்தாவது, பணம் விரயம் ஆகிறது என்ற காரணத்திற்காக மட்டுமல்ல, பொற்கொல்லர் பிரச்னை தீர்க்கப் படவேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதில் ஏற்பட்டிருக்கக் கூடிய காலதாமதம் மன்னிக்க முடியாதது என்று சொன்னால்கூட அது மிகையாகாது என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களுடைய அபிவிருத்தி பற்றி விசேஷ கவனம் செலுத்தக்கூட தொகை ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். அதற்கான நிர்வாக அமைப்பை மாநில அளவில் அமைக்க முதல் அமைச்சர் அவர்கள் முன் வந்திருப்பது வர வேற்கத் தகுந்தது. பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறோம். இப்போதே 30 கோடி ரூபாய்க்கு மேல் கிராம அபிவிருத்திப் பணிகளுக்கு செலவு செய் கிறோம். அந்தப் பணம் விரயம் ஆகாமல், 30 கோடி ரூபாயில் 15 கோடி ரூபாய் அளவுக்காவது அந்த அளவுப் பலனாவது மக்க ளுக்குப் போய்ச் சேரும் நிலையில் இல்லை. 30 கோடி ரூபாய் என்பது ஸ்தல கண்ட்ரிப்யூஷன் எல்லாம் சேர்த்து 40 அல்லது 45 கோடி ரூபாய் அளவுக்குப் போகும். இந்த அளவுக்கு செலவு செய்வதில் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இங்கு 2-3 வருஷ அனுபவத்தில் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதை கட்சி வித்தியாசம் இல்லாமல் இங்கே பேசிய கனம் அங்கத்தினர்களெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சா யத்து நிர்வாகத்தை கோளாறு இல்லாமல் செய்ய வேண்டியது அவசியம் என்று ஒப்புக்கொள்கிறேன்.

அடுத்த ஆண்டுக்கு நிதி ஒதுக்கும் சமயத்திலாவது ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இவ்வளவு என்று ஒதுக்குவதைவிட குறிப் பிட்ட பிரதேசங்களுக்கு விசேஷ சலுகை காட்டவேண்டுமென்பது என்து அபிப்பிராயம். அப்படி வரும்போது இரண்டு வகை பஞ்சாயத்துக்களை அமைச்சர் கவனத்திற்கு கொண்டுவர விரும்பு கிறேன். அந்த இரண்டு வகை பஞ்சாயத்துக்கள், நகரத்தை ஒட்டிய பஞ்சாயத்துக்கள், மற்றும் பின்தங்கிய பஞ்சாயத்துக்கள். இந்த இரண்டு வகை பஞ்சாயத்துக்களிலும் சிறந்த வசதிகள் கிடையாது. நன்செய் நிலமே இல்லாத கிராமத்தில் என்ன கிடைக்கும்? தங்க ஆட்களே இல்லாத இடத்தில் என்ன வருவாய் வரும்? வீடுகள் என்று சொல்லக் கூடியது 30—40 தான் இருக் கிறது என்று சொன்னால் அந்த கிராமத்தில் வீட்டு வரி போட்டு

வசூலிக்க முடியுமா? பின் தங்கிய பகுதிகளில் கிராமப் பணி அபிவிருத்தி பின் தங்கியிருக்கிறது என்றால் விசேஷ கவனம் செலுத்தி அத்தகைய பஞ்சாயத்துக்களுக்கு நிதி ஒதுக்கலாம்.

அடுத்ததாகச் சொல்லப்பட்டது நகரத்தையொட்டியிருக்கிற பஞ்சாயத்துக்கள். நகரத்தை யொட்டியிருந்தாலும் குடி தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, விளக்கு வசதி எல்லாம் அந்தப் பஞ்சாயத்துக்களில் மிகவும் மோசமாக இருக்கிறது. நகரம் விஸ்தரிக்கப்பட்டுக்கொண்டே போகும்போது நகரத்தில் இருக்கக் கூடிய பலர் நகரத்திற்கு வெளியே உள்ள அத்தகைய பஞ்சாயத்து ஏரியாக்களில் ஆலை முதலியவைகளை வைத்து விடுகிறார்கள். அங்கே மனை விலை உயருகிறது, வீட்டுக்கு வாடகை உயருகிறது, ஸ்தல வருவாய் சரியானபடி வருவதில்லை. அதற்காக நட வடிக்கைகளையும் எடுப்பதில்லை. அதனாலெல்லாம் அபிவிருத்தி வேலை பின் தங்கியிருக்கிறது. திருச்சி நகரத்தைச் சுற்றி, கோவை நகரத்தை சுற்றி, மதுரை நகரத்தை சுற்றி இத்தகைய பஞ்சாயத் துக்கள் இருக்கின்றன. பெரிய நகரத்தையடுத்து இருக்கக் கூடிய பஞ்சாயத்தில் அபிவிருத்தி வேலைகளை கவனிக்க முடியவில்லை. விசேஷ நிதி ஒதுக்கி, நகரத்திற்குச் சமமான நிலையில் குடி தண்ணீர் வசதி, சாக்கடை வசதி இவைகளைச் செய்ய அவர் களுக்கு நிதி உதவி செய்யவேண்டும். கடனாகவாவது கொடுத்து 10 வருஷம் அல்லது 20 வருஷத்தில் திருப்பிக் கொடுக்க திட்ட மிட்டு அந்த முறையில் நகரப் பஞ்சாயத்துக்களை விசேஷமாக அபிவிருத்தி செய்ய அரசினர் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், லோன்ஸ் அட்வான்ஸில் ஹவுஸிங் போர்டுக்கு கடன் வசதி கொடுக்கப்படுகிறது. வீட்டு வசதி ஸ்தாபனம் ஓரளவுக்கு நல்ல பணியை செய்து வருகிறது. அதிலும் குறிப் பாக பாராட்ட வேண்டியது அவர்கள் நிறைய நிலத்தை வாங்கி வீட்டு மனையாக அபிவிருத்தி செய்து வழங்கும் திட்டம் தான். அது மிகவும் வரவேற்கத் தகுந்தது. இதை பெரிய நகரங் களிலெல்லாம் அமலாக்க வேண்டுமென்பது எனது கோரிக்கை சென்னை நீங்கலாக, கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் சில முட்டுக் கட்டைகளால் வேலை தாமதப்பட்டிருக்கிறது. திருச்சியில் 5 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டம் தயாரித்திருக்கிறார்கள். 500 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும். ஒரு சிலர் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்ற காரணத்தினால் அரசாங்கம் அந்தத் திட்டத்தை தேக்கி வைத்திருக்கிறார்கள். அது சரியல்ல. ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுத்த பிறகும் அதைத் தேக்கி வைப்பது சரியல்ல. அதற்கு சொல்லக் கூடிய காரணம் என்ன? அந்த நிலம் நன்செய் நிலம், நெல் சாகுபடி செய்யக் கூடிய நிலம், வாழை பயிரிடக் கூடிய நிலம், சாகுபடி ஆகக் கூடிய நிலத்தை வாங்குவது சரியா என்று சிலர் சொன்னார்கள் என்று தேக்கி வைத் திருக்கிறார்கள். நெல் அல்லது வாழை சாகுபடியாகக் கூடிய

22nd January 1964] [திரு. மு. கலியாணசுந்தரம்]

நன்செய் நிலமாக இருந்தாலும் கூட நான் ஆட்சேபிக்கவில்லை. இன்னும் சில வருஷங்களுக்குப் பிறகு பார்த்தால் திட்டமில்லாத முறையில் அங்கே கட்டடங்கள் வரத்தான் போகின்றன. இப்போதே மனைக்கட்டாக விற்க ஆரம்பித்து விட்டார்கள். ஆட்சேபித்தவர்கள் என்ன நோக்கத்தோடு ஆட்சேபிக்கிறார்கள் என்றால், வீட்டு வசதி போர்டுக்குக் கொடுத்தால ஏக்கர் ஒன்றுக்கு 10,000 ரூபாய் மதிப்பு போட்டு கொடுக்கிறார்கள்—அது நியாயம் தான் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்—ஆனால் ஒரு ஏக்கர் 1½ லட்சம் ரூபாய்க்கு விற்கலாம் அதை மனைகட்டாகப் பிரித்து விற்றால் என்று ஆட்சேபிக்கிறார்களேயொழிய, வாழை அல்லது நெல் சாகுபடி செய்யலாம் என்று அல்ல, நன்செய் நிலமாக இருக்க வேண்டும் என்று அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றி பரிசீலித்து வந்து அதிகாரிகளெல்லாம் சிபாரிசு செய்தும் கூட அரசாங்கம் தலையிட்டு தேக்கி வைப்பது சரியல்ல. அரசாங்கத்திற்கு வேறு காரணம் இருக்கிறது என்றால் அதை சபையில் சொல்லட்டும். அல்லது மாற்று இடத்தைப் பார்த்து வீட்டு வசதித் திட்டத்தை அமல் நடதத துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போது தான் நகர அபிவிருத்திக்கு உதவி செய்ததாக இருக்க முடியும். பெரிய நகரங்களில் வீட்டு வாடகை ரொம்பவும் ஏறியிருக்கிறது. விலைவாசிகளையொட்டிப் பார்த்தால் வீட்டு வாடகை என்பது கணிசமான அளவுக்கு அதிக மாகி விட்டது. இவர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தில் 30 சத விகிதம், 40 சத விகிதத்திற்கு அதிகமாகக்கூட வீட்டு வாடகைக்கு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. நம் எல்லோருக்கும் சொந்த வீடுகளில் குடியிருக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். சொந்த வீட்டில் ஆரோக்கியமான குடியிருப்பில் அவர்கள் வசித்தால்தான், உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆரோக்கியக் குறைவான ஸ்தலங்களில் வசிப்பதினால், தொழிலாளர்களுக்கு நோய் வருகிறது. அதனால் வைத்திய வசதிக்காக அவர்கள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆரோக்கியமான குடியிருப்பு மனைகளை வழங்கும் திட்டங்களில் கவனம் செலுத்தவேண்டும். ஏற்கனவே இருக்கக்கூடிய திட்டங்களை காலதாமதம் ஆகாமல் துரிதமாக அமல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். சேலம் அபிவிருத்தியாகக் கூடிய நகரமாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, வரக்கூடிய நிதி ஆண்டிலாவது இதை நான்காவது நகரமாக சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது கோவை, மதுரை, திருச்சியில் இருப்பது போன்ற திட்டங்களை, சேலத்தை நான்காவது நகரமாக எடுத்துக் கொண்டு, அதற்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

12-30 p.m.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய துணைஅவைத் தலைவர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடு களையும், துணை மான்யக் கோரிக்கைகளையும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் ஆய்வுக்கு வைத்திருக்கிறார்கள். ரூ. 26

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [22nd January 1964

கோடி 89 லட்சத்திற்கு துணை மானியங்கள் கோரப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகள் சாதாரணமாக கல்வித் துறை, மின்சாரத்துறை, மருத்துவத் துறை, சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் ஆகியவற்றிற்கென்று கோரப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிற தன்மையைப் பார்க்கிறபொழுது, அவை வரவேற்கத் தக்கனவாக அமைந்திருக்கின்றன. என்றாலும், திட்டம் போட்டு ஏற்கனவே செலவு ஆகக்கூடிய செலவினங்கள் என்று கருதக்கூடியவை ஏற்கனவே வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாமல், இங்கே சேர்க்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்றாக அமைந்திருக்கிறது. முன்கூட்டியே எதிர்பார்த்து, நினைத்து நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்களுக்கான மானியங்களும் இதிலே கோரப்படுகின்றன. சாதாரணமாகப் புதிய பணிகளுக்கு, அபிவிருத்திக்காக என்று கோரப்படுகிற மானியக் கோரிக்கைகளைத் தவிர்த்துச் சாதாரணமாக ஏற்கனவே இருக்கிற பழைய பல அலுவலகங்களிலும் வேறு பல இடங்களிலும் புதிய பணியாளர்களை நியமிக்கின்ற வகையிலே மானியக் கோரிக்கைகள் கோரப்படுகின்றன. அரசாங்கம் செலவு இனங்களில் சிக்கனப்படுத்தும் ஒரு முறையை ஒரு பக்கத்தில் கையாண்டுகொண்டு வருகிறது, புதிய பணிகளுக்காகப் புதிய அலுவலர்களை நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், பழைய துறைகளிலே, பழைய அலுவலகங்களிலே புதிய பணியாளர்களை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால், அதைத் தவிர்ப்பதற்கு வழிவகைகள் இருக்காதா என்பதை அரசினர் கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று என்பதை வற்புறுத்துகிறேன். ஒரு பக்கம் செலவு இனங்கள் குறையவேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஆகவே புதிய செலவு இனங்கள் ஏற்படாமல், ஏற்கெனவே இருப்பவர்களை வைத்துக் கொண்டு அந்த இலாகாவை நிர்வகிக்கின்ற முறைகளை கையாண்டு, செலவு இனங்களைக் குறைப்பதற்கு வழிவகை காணப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரமுகர்கள் தேவைக்காக, நமது மாநிலத்திற்கு வருகை தருகின்ற பெரிய சிறப்பான பிரமுகர்களுக்காக 3 கார்கள் வாங்குவதற்கு ரூபாய் ஒரு லட்சத்து ஐயாயிரம் மானியம் கோரப்படுகிறது. இது புதியதொரு செலவினமாக அமைந்திருக்கிறது. இருக்கிற செலவினங்களைக் குறைக்கவேண்டுமென்று ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டு, இருக்கிற கார்களையே, இருக்கிற வசதிகளையே பயன்படுத்திக்கொண்டு இந்த நிலைமையை சமாளிக்க முடியாதா? ரூபாய் ஒரு லட்சத்து ஐயாயிரம் கொடுத்து 3 கார்கள் வாங்கவேண்டிய அவசியம் இருக்கிறதா? என்பதையும் அரசினர் கவனித்து, தவிர்க்கக்கூடிய செலவு இனங்களைத் தவிர்ப்பதற்கு முயற்சி எடுக்க முன்வரவேண்டும்.

செங்கல்பட்டு மாநிலத்தில் கல்பாக்கத்தில் அணு மின் நிலையம் நிறுவுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்காக ரூ. 2,63,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்பாக்கத்தில் அணு மின் நிலையம் நிறுவப்படும்,

22nd January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அது நமக்குக் கிடைக்கக்கூடும் என்ற அளவிலே தான் சென்ற வரவு செலவுத் திட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. அது எந்த நிலையில் இருக்கிறது? பணம் ஒதுக்கப் படுகிற நிலைமைக்கு அது வந்திருக்கிறதா என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

பயிர்களைப் பாதிக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு விமானத்திலிருந்து மருந்து தெளிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து, அந்த முறையில் ஹெலிகாப்டர் வாடகைக்காக ரூ. 2,70,000-மும், ரசாயனங்களுக்காக ரூ. 1,08,000-ம் மான்யக்கோரிக்கையாக கோரப்படுகிறது. இந்த ஆண்டுக்கு ஹெலிகாப்டர் வாடகை என்று ரூ. 2,70[redacted]000 கொடுக்கப்படவேண்டியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிக்கும் முறை விரிவடையக் கூடியதாக அமைந்திருக்கிறதே தவிர, அது தவிர்க்கக்கூடிய ஒன்றாக இருக்காது. எனவே, ரசாயனங்களுக்கு ரூ. 1,08,000-ம், ஹெலிகாப்டர் வாடகைக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 2,27,000-மும் கொடுக்கத்தக்க நிலைமை இருக்குமானால், இந்தப்பணியைத் தொடர்ந்து நடத்தி வரக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்குமானால்: பயிரக் காப்பதற்குப் பூச்சிகளை அழிக்கவேண்டிய அவசியம் அவ்வப்பொழுது இருக்குமானால், ஹெலிகாப்டர் ஒன்றை வாங்கிவிட்டால், ஆண்டுக்கு ஆண்டு வாடகை மூலம் இவ்வளவு பணம் வீணாகச் செலவு செய்வதைதவிர்க்க வழி வகுப்பதாக இருக்கும். இதை அரசினர் கவனிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

கிராம மக்களுக்கு அறுவடை இல்லாத காலங்களில் வேலை வாய்ப்பு தருவதற்காக குளம் வெட்டுதல், சாலைபோடுதல் போன்ற பணிகளை தருவதினால் அவர்களுக்கு ஓரளவுக்கு பாதுகாப்புத் தரவும், வேலை வாய்ப்பு தேடித் தரவும் ரூ. 33 லட்சம் துணை மான்யக் கோரிக்கை கோரப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தக்க அம்சம் என்றாலும், எண்ணிய நோக்கம் சரிவர ஈடேறுகிறதா என்பதை அரசினர் ஆராய்ந்து கவனிக்கவேண்டும். ஏனென்றால்[redacted] இப்படிப்பட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையில், சரியானவர்களுக்கு போய்ச் சேராத நிலைமைகள் ஆங்காங்கு நிலவிவருவதால், நிர்வாகத்தை கொஞ்சம் துரிதப்படுத்தியும்[redacted] சீர்படுத்தியும், இந்த நோக்கத்தை சரிவர நிறைவேற்றுவதற்கு அரசினர் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொற்கொல்லர்களைப்பற்றியும் இந்த மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நிலைமைகள் மிகமிகக் குழப்பமாக அமைந்திருக்கின்றன, என்ன செய்வது? ஏது செய்வது? அரசாங்கத்தின் உத்தரவு எப்படி இருக்கிறது? அவர்கள் எப்படி எப்படி நடந்துகொள்ளவேண்டும்? என்ற தெளிவு ஏற்படாத குழப்ப நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. நிலைமைகளைப் பொற்கொல்லர்கள் சரிவர உணர்ந்துகொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அதிகாரிகளும் விளக்கம் கூற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

அவர்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் அவர்களுக்குச் சரிவர பயன்படுகிறதா, இல்லையா என்று கண்டறிந்து, அவர்களுடைய அவல நிலையைப் போக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளவேண்டும்.

துணை மான்யக் கோரிக்கைகளில் கோரப்படுகின்ற செலவினங் களில் தவிர்க்கக்கூடியன எவை, எவையாக இருக்கக்கூடும் என்று கண்டறிந்து அவற்றைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்க அரசினர் முன்வரவேண்டும். மற்றபடி விரிவான விளக்கங்கள் வருகிற நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது தருவதற்கு வாய்ப்பு இருப்பதன் காரணத்தினாலே, இவற்றையெல்லாம் கண்டறிந்து, இவற்றிற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம், தவிர்க்கக்கூடிய செலவினங்களைத் தவிர்ப்பதற்கு வழி வகைகள் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் ரூ. 30 கோடி அளவிலே துணை மதிப்பீடு சமர்ப்பிப்பதற்கு என்ன அவசியம், ஏன் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்பொழுதே இதையெல்லாம் எதிர்பார்த்து இருக்க முடியாது என்று கேட்டார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் திட்டங் களுக்கு புதிய உத்தியோகஸ்தர்களை நியமிக்காமல் சமாளிக்க முடியாதா என்று கேட்டார்கள். நியாயமான கேள்வி தான். கூடியவரைக்கும் அனாவசியமாக உத்தியோகஸ்தர்களைப் பெருக்கிக் கொண்டு போகாமல், இருப்பவர்களையே வைத்துக்கொண்டு, உத்தி யோகஸ்தர்களுக்காக அதிகமாக பணத்தைச் செலவு செய்யாமல் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டுதான் வருகிறோம். ஆனால் புதிய திட்டங்கள் வரும்பொழுது வேலை அதிகப்படியாக இருக்கும் பொழுது, அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை நியமித்துத் தான் ஆகவேண்டும். வேலை நடக்கவேண்டும். அது தான் முக்கியமானது. அதை நன்றாகப் பரிசீலனை செய்து ஒரு அளவு கோலை வைத்துப்பார்த்து, எந்த அளவுக்கு உத்தியோகஸ்தர்கள் தேவையாக இருக்கிறதோ அந்த அளவுக்குத் தான் நியமிக்கப்படுகிறார்கள். முதலிலே ஒரு அளவு கோலை வைத்துக்கொண்டு எதிர்பார்த்து இவ்வளவு உத்தியோகஸ்தர்கள் வேண்டுமென்று வைத்துவிட்டால், அனாவசியமாகக் கூட உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படலாம். ஆகவே, முதலிலே குறைத்துப் போட்டுவிட்டு, தவிர்க்கக்கூடாத வகையில் எவ்வளவு பேர்கள் வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் துணை மதிப்பீடுகள் கோரப்படுகின்றனவே தவிர வேறு ஒன்றுமில்லை. கனம் கம்யூனிஸ்டு தலைவர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மொத்த மதிப்பீடு வரவு செலவுத் திட்டத்தில் எவ்வளவு சமர்ப்பிக்கப்பட்டது, உண்மையில் எவ்வளவு தொகை செலவழிக்கப்படிருக்கிறது என்று பார்த்தால், இரண்டும் சரியாக இருக்கும். முதலில் மதிப்பீடு செய்தது, 'ஆக்சுவல்ஸ்' இரண்

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

டிற்கும் வித்தியாசம் இருக்காது. இரண்டும் ஏறக்குறைய ஒன்றாக இருக்குமே தவிர, அதிக வித்தியாசம் இருக்காது. செலவு இனங்கள் ஆண்டு பூராவும் செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் செலவாகிறது. மார்ச் மாதம் வருவாய் வருகிறது. அதற்குப்பிறகு மாதாமாதம் வருவாய் வருவதில்லை. ஆனால், மாதாமாதம் செலவு செய்யவேண்டியிருக்கிறது. அப்படி வருவாய் இல்லாத போது, செலவு ஏற்பட்டால் தற்காலிகமாக ரிசர்வ் பாங்கிடமிருந்து கடன் வாங்குகிறோம். அப்படி கடன் வாங்கி செலவை சமாளித்தாலும்கூட, அந்தக் கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும். கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஸாங்ஷன் வேண்டும். வாங்குவதற்கு ஸாங்ஷன் இல்லை. ஆனால் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஸாங்ஷன் வேண்டும். எதற்குக் கொடுத்தாலும் ஸாங்ஷன் வேண்டும். அது தான் நம்முடைய நிதி பரிசீலனை ஏற்பாடு. எல்லாவற்றிற்கும் மன்றத்தினுடைய ஸாங்ஷன் வேண்டும். வாங்கின கடனைத் திருப்பிக் கொடுப்பதற்குக்கூட ஸாங்ஷன் வேண்டும். அப்படி கொடுக்கவேண்டிய தொகையையும் இதில் சேருகிறது. ரிசர்வ் பாங்கியிலிருந்து வாங்கிய கடனை திருப்பிக் கொடுப்பதற்கு மன்றத்தின் ஸாங்ஷன் கோர வேண்டியிருக்கிறது.

இப்பொழுது ரூ. 9 கோடியே 80 லட்சம் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் ரிசர்வ் பாங்கியிடமிருந்து அவ்வப்போது பெற்ற வழிவகைக் கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையில் இந்தத் தொகை சேர்க்கப்பட்டுள்ளது. இம்மாதிரி அட்வான்ஸ் வாங்கிக் கொடுக்கிற பொழுது, "நெட் எக்ஸ்பெண்டிசர்" ஒன்றும் இருக்காது. இது துணை மதிப்பீட்டிலே வருகிறது. இப்பொழுது மின்சார போர்டுக்கு நாம் ரூ. 8 கோடி கடன் கொடுத்திருக்கிறோம். அவர்கள் திட்டங்களை வேகமாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். ஓரளவுக்கு திட்டக் கமிஷனோடு கலந்து பேசி, 25 கோடி ரூபாய் என்று போட்டோம். திட்டங்கள் வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு திட்டங்கள் வேகமாக நிறைவேற்றப்படுவதை நாம் வரவேற்கிறோம். அப்படி வேகமாக நிறைவேற்றப்பட முடியும் என்றால், எப்படியோ சமாளித்து நிறைவேற்ற வேண்டும். முதலிலே இப்படித்தான் முடியுமென்று மதிப்புப் போட்டோம். வேகமாகப் போகிறபொழுது எப்படியோ கடன் எழுப்பி நாம் சமாளிக்கிறோம். அந்த வகையிலே அதிகச் செலவு ஏற்பட்டதனாலே நாம் ரூ. 8 கோடி கடன் கொடுத்திருக்கிறோம். இம்மாதிரிப் பார்த்தால், ரெவின்யூக் கணக்கைப் பார்த்தாலும் சரி, மற்ற எல்லாச் செலவுகளையும் பார்த்தாலும் சரி, காப்பிடல், லோன்ஸ், டெபாசிட்டுகள், இவற்றை எல்லாம் அந்தந்த இனங்களிலிருந்து கழித்துவிட்டுப் பார்த்தால், மொத்தத்தில் மதிப்பீட்டில் குறிப்பிட்டதைவிட அதிகச் செலவு ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பிட்ட சில இனங்களைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். இப்பொழுது புதிதாக கார்கள் ஏன் வாங்க வேண்டுமென்று கேட்டார். மூன்று கார்களுக்கு ஒரு லட்சத்து

சொச்சம் ரூபாய் ஆகிறது. இப்பொழுது தேவைப்படுகிற அளவில் தான் அந்த கார்கள் வேண்டியிருக்கின்றன. இங்கே பலர் வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வசதி செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. இதெல்லாம் சொற்ப செலவு என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டும். மொத்தத்திலே நிறைவேற்ற வேண்டிய வேலைத் திட்டங்களை வைத்துக் கொண்டு பார்த்தால் இது ஒன்றும் பிரமாதம் இல்லை. இந்த அற்பமான செலவுகள் வேண்டாம் என்று நாம் நிறுத்தினால், முக்கியமான வேலைகள் பாதிக்கப்படும். மற்ற மாநிலங்களில் உள்ளவர்களும் வேலையோடுதான் இங்கே வருகிறார்கள். பொழுதுபோக்குக்காக ஒருவரும் வருவதில்லை. இந்த விவாதத்தை துவக்கி வைத்த திரு. தர்மலிங்கம் அவர்கள் கவர்னருக்கு எதற்காக ரூபாய் 25,000 செலவு செய்யவேண்டுமென்று கேட்டார். கவர்னருக்கு கார் வாங்கவேண்டுமென்று சொன்னால், அது அவருக்காக மாத்திரம் இல்லை. வெளிநாட்டிலிருந்து பலர் வருகிறார்கள். மேலும் அந்த காருக்கு **air-condition** வசதி செய்ய வேண்டியிருக்கிறது. வெளி நாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு நாம் கௌரவமான முறையில் வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். அவர்கள் நமது ஊரை நாடி வருகிறார்கள். விருந்தோம்பலுக்கு பேர்போனவர்கள் நாம். ஆகவே இந்தச் செலவு ஒன்றும் பெரிதில்லை.

அடுத்தபடியாக, கல்பாக்கத்தில் அட்டாமிக் மின் நிலையத்தை நிறுவுவதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சீக்கிரத்திலேயே அது எடுத்துக்கொள்ளப்படுமென்று எதிர்பார்க்கிறோம். அதற்கு முன்னோடியாக நிலம் ஆர்ஜிதம் செய்யவேண்டும். மேலும் விவசாயிகளுக்கு பூச்சித் தொல்லையிலிருந்து பாதுகாப்பதற்கு ஒரு ஹெலிகோப்டரை வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆண்டு பூராவும் நாம் அதை வைத்துக்கொண்டால் அதிகச் செலவு ஆகும். அதனால்தான் சிக்கனமாக இருக்கவேண்டும் என்ற முறையில் தேவைப்படும் பொழுது வாடகைக்கு எடுத்துக் கொள்கிறோம். பூச்சி தொல்லை வராது என்று நினைத்துக்கொண்டு அப்படி வந்தால் அதற்கு ஆகும் செலவை துணை மதிப்பீட்டில் போட்டுச் செய்கிறோம். பூச்சி வந்துவிடுமே, என்ன வாடகை கொடுக்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆள் பலத்தை நன்றாக பயன்படுத்திக் கொள்வதற்கு சில திட்டங்கள் வேண்டும் என்ற கருத்தை தெரிவித்தார்கள். இப்பொழுது அனாவசியமாக ஒருவருக்கும் வேலை கொடுக்கமுடியாது. பழைய காலத்தில் பஞ்ச நிவாரண வேலை என்று கல் உடைக்கிற வேலையைக் கொடுத்து வந்தார்கள். ரோடுக்குக்கூட அந்தக் கல் பயன்படாது. மேன்பவர் திட்டம் என்றால், ஏரி குளங்களைப் பராமரிப்பது போன்ற பயன்படும் திட்டங்களைச் செய்வதற்குத் தான். அந்தத் திட்டம் இப்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

வீடு கட்டும் திட்டத்திற்காகக் கடன் கொடுக்கப்படுவதைப் பற்றி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொன்னார். எப்பொழுதும் நிலம் ஆர்ஜிதம் என்றால் அதற்கு ஆட்சேபணை இருக்கிறது. ஆனால் நியாயமான ஆட்சேபணைகளைத்தான் கவனிக்கவேண்டும். தங்களுக்கு லாபம் வரவேண்டுமென்று யாராவது ஆட்சேபணை கிளப்பினால் அதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அந்த முறையில்தான் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

தங்கக்கட்டுப்பாடு பற்றிச் சொன்னார்கள். அதிலே தாமதம் ஒன்றுமில்லை. பொற்கொல்லர்களுக்கு வேண்டிய கடன் கொடுப்பதற்கும் நிவாரணம் அளிப்பதற்கும் பணம் ஒதுக்கப்பட்டு, உடனடியாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதிலே தவிர்க்கக் கூடிய தாமதம் ஒன்றுமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றப்படி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சில திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாதா என்று கேட்டார்கள். எதிர்பார்க்கிற அளவுக்கு வரவு-செலவுத் திட்டத்தை நாம் தயாரிக்கிறோம். நல்ல திட்டங்களாயிருந்து, அவற்றை விஸ்தரிக்க வேண்டியிருந்தால் அது ஆண்டு நடுவிலேயே ஏற்படுகிறது. இன்னொரு ஆறு மாதம் காத்திருக்கலாமே என்று நினைத்து நல்ல திட்டத்தை தள்ளிப் போடக் கூடாது. கூட்டுறவு ஸ்பின்னிங் மில்கள் இத்தனை என்று போடுகிறோம். பிறகு இன்னும் இரண்டு மில்கள் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. ஆறுமாதம் போகட்டுமே என்று தள்ளுவதற்கில்லை. கூட்டுறவு ஸ்பின்னிங் மில்களுக்கு எவ்வளவு கடன் வசதி கொடுக்கவேண்டும், என்ன உதவி அளிக்கவேண்டுமென்று பார்க்கிறோம். அதை வைத்துக்கொண்டு வேறு இனங்களில் மிச்சம் ஏற்படுகிறதா என்றும் பார்க்கிறோம். எந்த ஆட்சியிலும், எந்த நாட்டிலும் வரவு-செலவுத் திட்டத்தை எவ்வளவுதான் எதிர் பார்த்துத் தயாரித்தாலும், ஒரு இடத்திலே துண்டு விழலாம், ஒரு இடத்திலே மிச்சம் ஏற்படலாம். ஆனால் எவ்வளவு மதிப்பிட்டோமோ அதற்கு மேலே செலவு ஆகிவிட்டதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். சிற்சில இடங்களில் செலவு குறையும். சில இடங்களிலே கொஞ்சம் அதிகமாகும். நல்ல திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்றால் செலவு ஏற்படுகிறது. திட்டத்தைத் தீர பரிசீலித்துப் பார்த்து அது அவசியமா என்று பார்த்தபிறகுதான் அதை ஏற்று நடத்திவருகிறோம்.

பள்ளிக்கூடங்களுக்குக் கிராண்ட் கொடுப்பதைப் பற்றியெல்லாம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கும் ஒரு உறுப்பினர் தன்னுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு சொன்னார்கள். கீழ்பவானித் திட்டத்திலே தண்ணீர் கொடுப்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தந்த ஸ்தலங்களிலுள்ள குறைகளைப் பற்றியும் சிலர் எடுத்துச் சொன்னார்கள். அவற்றிலெல்லாம் அவ்வப்போது கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. திரு. செல்வராஜன் அவர்கள் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பது பற்றியும், குளம் புறம்போக்குகளைத் தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். வயோதிகர்களுக்கு பென்ஷன் கொடுப்பதிலே புதிதாக

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd January 1964

வருகிறவர்களுக்கு வசதி அளிக்கவேண்டுமென்று சொன்னர்கள். அந்த முறையில் வசதி அளிக்கப்பட்டு வருகிறது. கூடியவரைக்கும் விதிகளைத் தளர்த்தியிருக்கிறோம். அதனல்தான் ரூ. 1 கோடியே முப்பது லட்சம் செலவாகியிருக்கிறது. மற்றும் ஆஸ்பத்திரி வசதிகள் போன்ற ஸ்தலக் குறைகளைப்பற்றி சிலர் எடுத்துச் சொன்னர்கள். அதையெல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவரதத்தை துவக்கிய திரு. தர்மலிங்கம் அவர்கள் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் அவசியமா என்று கேட்டார். ஆடிட் முக்கியம். ஆடிட்டிலே கவனம் செலுத்த வேண்டும். அதே சமயத்தில் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களும் பஞ்சாயத்துக்களுக்கு அவசியமாக இருக்கிறது. எந்த அளவுக்கு வேண்டாமோ அந்த அளவுக்கு தவிர்த்து விடலாம். கூட்டுறவுத் துறையில் அவ்வளவு வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன். இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்திலே இருந்து வருகிறது.

போலீஸாருக்கு சில வசதிகள் அளிப்பதைப் பற்றி உபமானியக் கோரிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. வேறு சில குறைகளும் இருக்கின்றனவென்று திரு. தர்மலிங்கம் அவர்கள் சொன்னர்கள். அவையெல்லாம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு சர்க்கரை செஸ் நிதியிலிருந்து சாலை போடுவதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது வசூலான பிறகுதான் ரோடு போடுவதை எடுத்துக் கொள்ள முடியும். சில இடங்களில் எதிர்பார்த்து எடுத்துக் கொள்ளலாம். வசூலாகாத காரணத்தால் சேர்க்கப்படவில்லையென்று நான் நினைக்கிறேன். சீக்கிரத்திலே சேர்த்துக் கொள்ளப்படும்.

பொதுவாக நான் வேறு ஒன்றும் கூறுவதற்கு இல்லை. மற்றபடி இந்த விவாதத்திலே கலந்துகொண்ட உறுப்பினர்கள் கூறிய எல்லா விஷயங்களும் கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு டிமாண்டை மட்டும் எடுத்து விவாதிக்கலாம் என்று இருக்கிறோம். அங்கத்தினர்கள் நிறைய கட்மோஷன்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இந்த கட்மோஷன்களை சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்பி, அதிலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களை பரிசிலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்னமேயே இந்த கட்மோஷன்களையெல்லாம் டிபார்ட்மெண்டுகளுக்கு அனுப்பியிருக்கிறோம். இப்பொழுது புதிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கைகளிலே எட்டாவது கோரிக்கையான "மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிட பணியாளர்கள்"

22nd January 1964] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

என்றதை மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். அதற்கு சம்பந்தப்பட்ட நாலாவது, ஆருவது வெட்டுப் பிரேரணைகளை பிரேரேபித்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதலமைச்சர் அவர்கள் கட்மோஷன்கள் ஏற்கனவே இலாகாக்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன என்று சொன்னார். அப்பொழுது அனுப்பியது அமைச்சர் களுக்கு, நாங்கள் கூறுவதை மறுப்பதற்கு நோட்டு தயாரிப் பதற்கு அனுப்பப்பட்டது. நான் கேட்பது அவைகளின்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக அனுப்ப வேண்டும் என்று கேட்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சபையில் எந்த பிரஸ்தாபம் வந்தாலும் அதைப் பற்றி உடனே சம்பந்தப்பட்ட இலாகா யோசனை செய்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும், என்ன குறை இருக்கிறது என்று ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே புதிதாக ஒன்றும் அனுப்ப வேண்டிய தில்லை என்று சொன்னேன்.

VII—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR 1963-64.

A. Expenditure on Revenue Account.

DEMAND VIII—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,93,000 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff."

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"That the allotment of Rs. 9,93,000 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Re. 1."

SRI A. P. DHARMALINGAM : Sir, I move—

"That the allotment of Rs. 9,93,000 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Re. 1."

MR. DEPUTY SPEAKER : The Demand and the cut motions are before the House for discussion.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், நான் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணை பற்றி ஏற்கனவே பொது விவாதத்திலும் குறிப் பிட்டேன். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் கால தாமதமே இல்லை என்று கூறி விட்டார்கள். இது யாரோ யாரையோ பற்றி குறை கூறுவதாக, குற்றம் சாட்டுவதாக மனதில் கொண்டு அதற்

குத் தக்கவாறு பதில் சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றே தோன்றுகிறது. சொன்ன காரியத்தை பரிசீலனை செய்து துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லையே என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த பிரச்னை பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் வாழ்க்கை சம்பந்தப் பட்டது. இதிலே துரிதமாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மத்திய சர்க்கார் விவரமான விதிகள் பிறப்பிக்காவிட்டால் அவர்களுக்கு எழுதி, பிரத்யேகமாக ஒரு டீ.ஓ.-ஆவது எழுதி இந்த ராஜ்யத்தில் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். பொற்கொல்லர்களுக்கு திட்டவட்டமாக எதுவும் விளக்கப்படவில்லை. லைசன்ஸ் கொடுக்கும் ஒவ்வொரு முறையும் நகையை அழித்து புது நகை செய்யலாமா? கூடாதா என்ற விவரம் கூட இலாகா அதிகாரிகளுக்கு தெரியவில்லை. இதற்கிடையில் வேலை இல்லா திண்டாட்டம் வளர்ந்துகொண்டே போகிறது. பதினான்கு காரட்டு தங்க ரிபைனரி ஒன்று நம் ராஜ்யத்திலேயே நிறுவப் போவதாக சொன்னார்கள். அது எந்த அளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதைக் கைவிட்டு விட்டார்களா என்றும் தெரியவில்லை. ஒருகால் அதற்கு அவசியம் இல்லையென்று கைவிட்டிருக்கிறார்கள் என்றால் அதை இந்த சபைக்கும் இராச்சியத்தில் இருக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னைக் கேட்டால் தங்கக் கட்டுப்பாட்டு சட்டத்தையே அடியோடு கைவிட்டால் நல்லது, வேறு முறைகளை கையாண்டு தங்கத்தை திரட்ட வழிவகை செய்யலாம், என்று சொல்லுவேன். இப்பொழுது இருக்கும் சட்டத்தால் நன்மையை விட தீமைகளே அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. இப்பவும்கூட சட்ட விரோதமாக நகைகள் செய்ய முற்படுவார்கள். மதுவிலக்கு சட்டம் வெற்றி, வெற்றி என்று சொல்லிக் கொள்வது போல இதிலேயும் சொல்லலாம். ஆனால் விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆராய்ந்து பார்த்தால் இதிலே சட்டவிரோதமான நடவடிக்கைகள் எடுக்க மக்கள் முற்பட ஏதுக்கள் இருக்கின்றன. பொற்கொல்லர்கள் வயதானவர்கள் அவர்களைப்போய் இப்பொழுது வேறு தொழிலை கற்றுக்கொண்டு செய் என்பது நியாயமல்ல. முறையல்ல. ஆகவே காலதாமதம் செய்யாமல் பொற்கொல்லர்கள் விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகவே இந்த வெட்டுப்பிரேரணையை சபை முன் கொண்டு வந்திருக்கிறேன்.

திருமதி டி. என் அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த தங்க கட்டுப்பாடு சட்டம் சிக்கலாக இருந்து மக்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. எந்தெந்த வகையில் எந்த அளவுக்கு செய்யலாம் என்பதில் தெளிவு இல்லாமல் இருப்பதால் கோளாறுகள் ஏற்படுகின்றன. பழைய நகைகளை பழுது தான் பார்த்துக்கொள்ளலாம், புதியவாக அழித்து செய்துகொள்ளக் கூடாது என்று ஒரு எண்ணம் இருக்கிறது. அப்படி புதிதாக செய்யவேண்டும் என்றால் 14 காரட்டில்தான் செய்ய வேண்டும் என்று இருப்பதாக நினைக்கிறார்கள். பெண்

22nd January 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

களுக்கு நகைகளுக்கு பழுது பார்ப்பதைவிட புது மாதிரியாக நகைகளை மாற்றிக் கொள்ளுவதில்தான் நாட்டம் இருக்கும். இதனால் பொற்கொல்லர்கள் அவதிக்குள்ளாகிறார்கள். தாங்கள் பழுதுதான் பார்க்க முடியும். புதிதாக அழித்துச் செய்ய முடியாது என்று நினைக்கிறார்கள். இதனால் பெண்களும் பாதிக்கப் படுருக்கிறார்கள். இந்த நிலையில் பெண்கள் பொற்கொல்லர்களிடம் தங்கத்தைக் கொடுக்கவும் அஞ்சுகிறார்கள். ஏனென்றால் அவர் களிடம் 100 கிராமுக்கு அதிகமாக தங்கம் இருந்து, அதிகாரிகள் பறிமுதல் செய்து பொன்னை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்வார்களோ என்று பெண்கள் அஞ்சுகிறார்கள். இது விஷயமாக எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்யலாம் என்று புனராலோசனை செய்து பெண்கள் சமுதாயத்திற்கும் பொற்கொல்லர்களுக்கும் நல்ல முறையிலே உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த கோல்ட் கன்ட்ரோல் சம்பந்தமாக நம் மாநிலத்திற்கு ஒரு விசேஷ பொறுப்பு இருக் கிறது. குறிப்பாக நம் மாநிலத்தில் சென்னையிலும் இன்னும் தெற்கே போகப் போக நகைகளின்பேரில் மோகம் இருக்கிறது. பிற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில்தான் பெண்களுக்கு நகை மீது மோகம் அதிகம். ஆகவே பழைய நகைகளை அழித்து புது நகை செய்வது போன்ற காரியங்களில் புனராலோசனை செய்து மத்திய சர்க்காருக்கு நமது சர்க்கார் ஆலோசனை கூறி நல்ல முறையிலே ஏற்பாடுகள் செய்ய வேண்டியது மிகமிக அவசியம் என்று கருதுகிறேன்.

பொற் கொல்லர்கள் பழுது பார்க்கலாம், என்று இருப்பதில் பல குளறுபடிகள் ஏற்படுகின்றன. பதினான்கு காரட்டு நகை களில் யாருக்கும் மோகம் இல்லை. பெண்கள் அதை வாங்குவதற் கும் தயங்குகிறார்கள். தங்கத்தை கொடுத்து பொற்கொல்லரிடம் பழுது பார்க்க சொன்னாலும்கூட பிறகு அது 22 காரட்டு தானா அல்லது 14 காரட்டா அல்லது 18 காரட்டா என்று புரிவதில்லை. அதற்கும் குறைவாக இருக்குமோ என்னவோ தெரியவில்லை. பழைய காலத்தில் பெரிய நகைக்கடைகளில் நகை வாங்கினால் ஒரு உத்தரவாதம் கொடுப்பார்கள். வாங்கின நகையை பின்னால் எப்பொழுது கொணர்ந்து அவர்களிடமே கொடுத்தாலும் அவர் 12-30 p.m.
கள் அதன் கிரயத்தை கொடுத்து விடுவதாக உத்தரவாதம் கொடுப் பார்கள். இப்பொழுது அவர்கள் நகைகள் செய்வதையே விட்டு விட்டார்கள். அந்த உத்தரவாதம் போய்விட்டது. பெரிய கடைகளில் நகைகளைப் பழுது பார்ப்பதோ செய்வதோ கூடாது என்ற காரணத்தால்தான் பல வகைச் சிக்கல் கள் இருக்கின்றன. ஆகவே, நம்முடைய மாநிலத்தின் சூழ் நிலைக்கேற்ப ஆலோசித்து, எந்த எந்த அளவு பொற் கொல்லர்களுக்கும், பெண்கள் சமுதாயத்திற்கும் சலுகைகளை நாம் அதிகமாகத் தர முடியுமோ அந்த வகையில் தர அரசாங்கம் முற்படவேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். பொற்கொல்லர் களை வேறுபல வேலைகளிலே ஈடுபடுத்துவதற்கு நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகக் குறைவு. நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாக ஏற்பட்ட சலுகைகளைப் பயன்படுத்தத்

தெரிந்திருக்கிற பொற்கொல்லர்களின் எண்ணிக்கை அதைக் காட்டிலும் குறைவாக இருக்கிறது. எந்தெந்த வகையிலே என்னென்ன உதவிகள் செய்கிறோம் என்பதை எவ்வளவு அதிகமாக விளம்பரப்படுத்த முடியுமோ அவ்வளவு அதிகமாக விளம்பரப்படுத்தி, அவர்கள் பயனைப் பெறக்கூடிய வழிகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால்தான் அதிகாரிகளுக்காகச் செலவிடும் தொகை தக்க முறையில் செலவழிக்கப்பட்டதாகச் சொல்ல முடியும். அதிகாரிகளையும் இலாக்காக்களையும் ஏற்படுத்துகிற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாத பிரச்னை ஒன்றும் இல்லை. குறிப்பாக, பெண்களுடைய பிரச்னைகளைப் பொறுத்த வரையில் சற்று அக்கறை அதிகமாகக் காட்டி, எந்த வகையில் தீர்க்க முயற்சி எடுக்க முடியுமோ அந்த வகையில் தீர்க்க முன்வருவார்கள் என்ற எண்ணத்தோடு, இதை ஆலோசித்துப் பார்க்க அரசாங்கம் சற்று கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எதிர்க்கட்சியில் கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கவில்லை என்று தெரிவித்து, பொற்கொல்லர்களுக்குக் கொடுத்த உதவியை ஆதரித்து, அதைத் தக்க முறையில் அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, என் பேரில் இருக்கும் ஆறுவது வெட்டுப் பிரேரணையின் பேரில் ஒருசில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் நடைபெற்று வருகின்ற ஊழல்களைப் போக்குவதற்காகவே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1958-ஆம் ஆண்டு சென்னை பஞ்சாயத்துச் சட்டத்தின்படி நம்முடைய மாநிலத்தில் 12,500 கிராமப் பஞ்சாயத்துக்களும், 374 பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலிருந்து ஆண்டொன்றுக்கு 30 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு வருகிறது. இந்த 30 கோடி ரூபாய் வரையில் செலவழிக்கும் பொறுப்பில் இருக்கும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களோ, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களோ அனைவரும் படித்தவர்கள் என்றோ அல்லது எல்லாம் தெரிந்தவர்கள் என்றோ நாம் நிச்சயமாக கருதி விட முடியாது. பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்பதை எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். அதன்படியே அதிக அதிகாரங்களும் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன. வழங்கப்பட்டு வருகின்ற அதிகாரங்களை கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களோ, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களோ சரிவரக் கையாண்டு வருகிறார்களா என்பதைத்தான் பார்க்கவேண்டுமே தவிர, பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் சொன்னால் அது போதாது.

பொதுவாக, பஞ்சாயத்துத் தேர்தல் முறையைப் பார்த்தாலே கூட பல அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. பஞ்சாயத்துத் தலைவர்களை நேரடியாகப் பொது மக்களே தேர்ந்தெடுக்கவேண்டுமென்று வலியுறுத்தும் நேரத்தில் பஞ்சாயத்து உறுப்பினர்களால்

தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற முறை இப்பொழுது அனுசரிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக, பஞ்சாயத்திலே இருக்கும் ஊழல்களைப் போக்கவேண்டுமென்று கருதினால், பஞ்சாயத்துத் தலைவர்களையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் பொது மக்கள்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். அப்படியில்லாமல், பஞ்சாயத்து உறுப்பினர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இருந்தால் பஞ்சாயத்துத் தலைவராக வருகிறவர் பஞ்சாயத்து உறுப்பினர்கள் சொல்வதற்கு ஆட்படவேண்டும். இல்லாவிட்டால், பஞ்சாயத்து உறுப்பினர்கள் பல பேர் சேர்ந்து கொண்டு பஞ்சாயத்து தலைவர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆக, தங்களுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, பஞ்சாயத்துத் தலைவராக வருகிறவர் பஞ்சாயத்து உறுப்பினர்கள் சொல்வதற்கு கட்டுப்பட்டு அவர்களுக்குச் சில சலுகை காட்ட வேண்டியிருக்கிறது. முதல் ஊழல் அங்கே ஏற்படுகிறது.

அடுத்து, பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவற்றை நடைமுறையில் ஆக்கவேண்டிய பொறுப்பு நிர்வாக அதிகாரிக்கு ஏற்பட்டிருக்கிறது. நான் முதலில் குறிப்பிட்டது போல, அதிகம் படிக்காத தலைவர் இருக்கும் பஞ்சாயத்திலே, அந்தப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி தலைவரை ஆட்டிப் படைக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் பஞ்சாயத்துத் தலைவருக்கும் நிர்வாக அதிகாரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, அதனால் பொது மக்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய முடியாமல் பல கஷ்டங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் கூட, இப்பொழுது நாட்டிலே பெரும்பாலான பஞ்சாயத்துத் தலைவர்களுக்குப் பதவி நீக்கம் ஏற்பட்டு வருவதைப் பத்திரிகையிலே பார்க்கிறோம். பஞ்சாயத்திலே ஏற்படுகிற ஊழல்கள் காரணமாக கிராமங்களில் அடிதடி, கட்சிப் பூசல் ஏற்படுகிறது. பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர்களால் சரியான முறையில் அவற்றை நிர்வகிக்க முடியவில்லையே என்ற காரணம் காட்டி, இன்னும் சில நாட்கள் கழித்து அந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டு விடுமோ என்று கூட நான் அஞ்சுகிறேன். கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் நல்ல முறையில் நடைமுறையில் பயன்படுவதற்காக வேண்டி, நல்ல பல காரியங்களைச் செய்யவேண்டும் என்று தங்கள் மூலமாக முதல் அமைச்சர் அவர்களை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சாயத்துத் தலைவருக்குரிய வேலையைப் பார்ப்பதைவிட பஞ்சாயத்தில் இருக்கும் வேலைகளுக்குக் காண்டிராக்டர்களாக மாறிவிடுகிறார்கள். அவர்களைப் பஞ்சாயத்துத் தலைவர் என்று சொல்லுவதைவிட பஞ்சாயத்துக் காண்டிராக்டர் என்று சொன்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [22nd January 1964

னுல்கூட அது மிகையாகாது. அப்படி அவர்கள் காண்டிராக்டர்களாக மாறும் காரணத்தால் பல வேலைகள் கிராமங்களிலே நடைபெறுவது இல்லை. நடைபெருதது மட்டுமல்ல; அதிலிருந்து பல ஊழல்கள் ஏற்பட்டு விடுகின்றன. அவற்றையெல்லாம் கண்காணிப்பதற்காக வேறு சில மார்க்கங்களைக் காண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். பஞ்சாயத்துத் தலைவர்கள் காண்டிராக்டர்களாக நிச்சயம் ஆகக் கூடாது. சில பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒப்பந்தப்படி வேலையை முடிக்கவில்லையென்ருலும் கூட அவர்களைக் கண்டிப்பதற்கு யாரும் இல்லை. கண்டிக்க முடியாதது மாத்திரமல்ல. மேல் இருப்பவர்கள் பார்த்து யாருக்காவது அந்த ஒப்பந்தத்தை மாற்றிக் கொடுத்தால், பஞ்சாயத்து கொடுக்க வேண்டிய பங்கை ஒப்பந்தக்காரருக்குக் குறித்த காலத்தில் பஞ்சாயத்துத் தலைவர் கொடுப்பதில்லை. அதற்கு ஏதாவது காரணம் சொல்லிவிடுகிருர்கள். அதனுல், வேறு ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தம் எடுக்க முன்வருவதில்லை. பஞ்சாயத்து கொடுக்க வேண்டிய தொகையை நிச்சயமாக ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற விதி இதிலே இருக்க வேண்டும். இப்பொழுது பஞ்சாயத்து வேலைகளை பஞ்சாயத்துத் தலைவர் காண்டிராக்ட் எடுக்கலாம் என்று இருக்கும் விதியையும் மாற்றியமைக்கவேண்டும். அப்பொழுதுதான் அதில் இருக்கும் சில ஊழல்கள் நீக்கப்படலாம்.

அதைப் போலவே, பஞ்சாயத்து எக்ஸ்டன்ஷன் ஆபீசரைப் பற்றி நான் சொன்னபோது கூட, கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'இப்பொழுது கூட்டுறவு துறையில் இருப்பதைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து இருக்கிறேன்' என்று சொன்ஞர்கள். அதைப் போல பஞ்சாயத்து யூனியனில் இருப்பதையும் அவர்கள் குறைக்க முன்வருவார்கள் என்று நான் கருதுகிறேன். நான் இதைக் குறிப்பிட காரணம், தணிக்கைக்குப் போகும் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியே பஞ்சாயத்துக் கணக்கு எழுதிக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது என்பதற்காகத்தான். எங்கள் மாவட்டத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் விஸ்தரிப்பு அதிகாரி, அதில் இருக்கும் 34 பஞ்சாயத்துக்களுக்கும் கணக்கு எழுதிக்கொடுத்துவிட்டு, அதற்கு ஊதியமாகப் பெறுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதை முதல் அமைச்சர் அவர்களிடத்தில் நான் கொடுக்க இருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைக்கு இடமளிக்காத வண்ணம், பஞ்சாயத்துக்கு என்று தனியாகக் குமஸ்தா போடப்பட வேண்டும். இப்பொழுது க்ரூப் க்ளார்க் முறை இருக்கிறது. மூன்று நான்கு பஞ்சாயத்துக்களுக்குச் சேர்ந்து ஒரு க்ளார்க் போட்டு அவர்கள் கணக்கு எழுதும் நிலை இருக்கிறது. அவர்களால் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் சரியாகக் கணக்கு எழுத முடிவது இல்லை. பல ஊராட்சி மன்றத் தலைவர்கள் அதிகம் படித்தவர்களாக இல்லாதிருக்கும் காரணத்தால் அவர்கள் கணக்கு எழுத முடியாமலிருக்கிறது. அதனுல் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு க்ளார்க் நிச்சயமாகப் போட வேண்டும். பஞ்சாயத்தின் வருவாய்க்குத் தகுந்தபடி, நிதி நிலைக்கு தக்கபடிதான் க்ளார்க் போட

வேண்டும் என்று சொன்னால், ஒரு க்ளார்க் வைத்துக்கொள்ளக்கூட வசதி இல்லாத பஞ்சாயத்தை அமைப்பதைவிட இன்னும் கொஞ்ச நாள் கழித்து பஞ்சாயத்து அமைத்தால் கூட நன்ருக இருக்கும். செலவழிக்கும் பணத்திற்குச் சரியாகக் கணக்கு எழுத யாராவது ஒரு க்ளார்க் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இருக்கவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி பஞ்சாயத்து யூனியனி லுள்ள பஞ்சாயத்துக்களுக்குப் போய் இன்ஸ்பெக்ஷன் செய்து வருவதாக இருக்கிறது. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் களில் செலவழிக்கும் முப்பது கோடி ரூபாய் சம்பந்தப்பட்ட கணக்குகளைத் தணிக்கை செய்ய ஒரு தனி ஆடிட் இலாகா இருக்க வேண்டும். அல்லது இப்பொழுதிருக்கும் லோகல் பண்டு ஆடிட் டிபார்ட்மெண்டை விரிவுபடுத்தி, அதன் மூலமாகத் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமே தவிர, கணக்கு எழுதிக் கொடுக்கும் அதே விஸ்தரிப்பு அதிகாரி அதே கணக்குகளைத் தணிக்கை செய்யும் அதிகாரம் அவருக்கு நிச்சயமாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது தணிக்கையாகாது. எனவே தான் அமைச்சர் அவர்கள், துணை மானியக் கோரிக்கையிலே கூட 'நிதித் தணிக்கைப் பணியாளர்' என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். அது இந்தத் தணிக்கையாளர்களாக இருக்குமோ என்று நான் கருதுகிறேன். அப்படியானல் நன்றி, இல்லாவிட்டால், தனி இலாகா கூட இதற்கென ஏற்படுத்துவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே, கிராமப் பஞ்சாயத்துக்களும் அதிகமான தொகை செலவு செய்கிறது என்று கணக்குக் காட்டப்படுகிறதே தவிர, அதனல் ஏற்பட்டிருக்கிற பலன் அதிகமாக இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொன்றுக்கும் தனி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் வகுக்கும் திட்டத்தின் கீழ் இப்பொழுது சிறு தொழில் வளர்ச்சிக்காக தையல் மிஷின் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய தையல் மிஷின்களை நான் பல பஞ்சாயத்துத் தலைவர்களின் வீட்டிலே பார்த்திருக்கிறேன். பஞ்சாயத்துத் தலைவர் வீட்டில் தையல் மிஷின் இருந்தால் வேலை கற்றுக்கொள்ள யாருக்காவது அது பயன்படுமா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. பஞ்சாயத்து யூனியன்களிலேயும் பல தையல் மிஷின்கள் இருக்கின்றன. ஆனல் பல விடங்களில் அவை சரியாகப் பயன்படுத்தப் படவில்லை. பஞ்சாயத்துகளுக்கு ஒரு ஆண்டு ஒதுக்கப்படுகிற தொகை பூராவையும் அவர்கள் செலவு செய்துவிட வேண்டுமென்று செலவு செய்துவிடுகிருர்களே தவிர அதனல் நாம் ஏற்பட நினைக்கிற பலன் ஏற்படவில்லை. அதைப் போல தென்னைப் பிள்ளைக்கு என்று பணம் ஒதுக்குகிறோம். எத்தனை பிள்ளைகள் வைத்தார்கள். எத்தனை பிள்ளைகள் வளர்த்துவிடப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் தெரியும். தென்னம்பிள்ளையைச் சுற்றி கட்டப்பட்ட சிமிண்ட் தொட்டிகள் தான் இருக்குமே தவிர

அதற்குள் குனிந்து பார்த்தால் பிள்ளை இருக்காது. அதுபோல மீன் வளர்ப்புக்காக என்று பணம் ஒதுக்குகிறோம். முன்பெல்லாம் குளம் குட்டைகளில், கிராமப்புறங்களில் மீன் வளர்க்கப்பட்டு தான் வந்தது. இப்போது பார்த்தால் அங்கங்கே மீன் வளர்ப்புத் தொட்டிகள் இருக்கின்றனவே தவிர மீன்கள் உருப்படியாக வளர்க்கப்படவில்லை.

திருமதி டி. என் அனந்தநாயகி : மீன்களை வளர்ப்பது சாப்பிடு வதற்காகத்தான். அப்படி சாப்பிடுகிறபோது எப்படி மீன்கள் உருப்படியாக இருக்கும் ? (சிரிப்பு).

திரு. அ. பெ. தர்மலிங்கம் : குப்பை கொட்டுவதற்காகக் குழி வெட்டுகிறோம். அங்கங்கே குழி வெட்டப்பட்டு இருக்கின்றனவே தவிர அதில் குப்பை கொட்டப்படுவதே இல்லை. உரமும் தயார் செய்யப்படுவதில்லை. கிராம சேவக்குகள் என்றால் அவர்களுக்கு அந்த அந்த கிராமத்திலேயே குடியிருக்க வீடு கட்டித்தரவேண் டும் என்று இருக்கிறது. அப்படி வீடுகள் கட்டித்தரப்படுவதும் இல்லை. அவர்களும் அந்த ஊரிலே தங்கி எந்தப் பணியிலும் ஈடு படுவதில்லை. அந்த ஊர்களுக்கு நான்கைந்து மைல்களுக்கு அப்பால் தங்கிக்கொண்டு அவ்வப்போது மட்டும் வந்து போகிறார் கள். அவர்களுக்கு அந்தந்த ஊரிலேயே வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும். இது விஷயங்களை எல்லாம் கவனித்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானியத்தின் மீது பலர் பேசினார்கள். திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்த உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக திரு. கலியாணசுந்தரம் அவர்கள் தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் அளிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

நான் முன்பு கூறியது போல இவ்விஷயத்தில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. பேச்சளவில் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்று சொல்லவில்லை. இந்த விஷயத்தில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று. பொற்கொல்லர்கள் 14 காரட் தங்கத்தைக் கொண்டு நகைகள் செய்வது, அனுமதிக்கப்பட்ட தங்கத்தைக் கொண்டு தங்கள் தொழிலை நடத்த உதவி செய்வது. அதற்கு வேண்டிய உதவியை அளிப்பது, வசதியை அளிப்பது. மற்றொன்று, பொற் கொல்லர்களுக்கு வேறு மாற்று வேலை, மாற்று தொழில் தேடித் தருவதற்கு உதவி செய்வது, வசதி அளிப்பது ஆகும். இந்த இரண்டு பிரச்சினைகளிலும் அரசாங்கம் போதிய கவனம் செலுத்தி வருகிறது. இது சம்பந்தமாக தங்களுடைய பழைய தொழிலி லேயே ஈடுபட விரும்புகிற பொற்கொல்லர்கள்—அதற்கு வேண்டிய வசதியைப் பெற ஒரு மனுப்போடவேண்டும். அந்த மனுபாரம்

22nd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

இருக்கிறது. எல்லா கிராமங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டும் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து அங்கங்கேயுள்ள ரெவின்யூ அதிகாரிகளுக்கு அவர்கள் அனுப்ப வேண்டும். அந்த பாரங்களில் தமிழிலும் கூட அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் 31-ஆம் தேதிக்குள் இவ்வாண்டு அந்த மனுக்களை அனுப்ப வேண்டும். அவ்வாறு பல மனுக்கள் அனுப்பப்பட்டு வந்தும் சேர்ந்திருக்கின்றன. இதைப் பார்த்து அவர்கள் சர்டிபிகேட் கொடுப்பார்கள். அதை வைத்துக் கொண்டு அவர்கள் தங்கள் பழைய தொழிலில் ஈடுபடலாம். இந்த விஷயத்தில் எவ்வளவு கவனம் செலுத்தப்படவேண்டுமோ அது செலுத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ஒரு திட்டம் ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் என்ற திட்டத்தின் கீழ் 2 ஆயிரம் ரூபாய் வரையில் அவர்களுக்குக் கடன் கொடுப்பது. அதைக் கொண்டு அவர்கள் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்யலாம். அவர்கள் எந்தத் தொழிலில் ஈடுபட விரும்புகிறார்களோ அதைக் குறித்து அவர்கள் மனுப்போட்டுக்கொண்டால் அதற்கு அவர்களுக்கு இரண்டாயிரம் கடன் உதவி அளிக்கப்படுகிறது. தங்கள் பழைய தொழிலையும் செய்துகொண்டு சிறிய மாற்றுத் தொழில் ஒன்றில் அவர்கள் ஈடுபட விரும்பினால் அப்போது அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கடன் உதவி அளிக்கப்படுகிறது. கடந்த 15—12—1963-ஆம் தேதி வரை 21 லட்சத்து, 68 ஆயிரம் ரூபாய் சாங்ஷன் ஆயிற்று. அவர்கள் மனுப்போட்டதன் பேரில் சாங்ஷன் ஆனது மட்டும் இல்லை. சென்ற டிசெம்பர் மாதம் 15-ஆம் தேதி வரையில் 11 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் வரை கொடுக்கப்பட்டும் விட்டது. மேலும் இரண்டாவது தவணையாக சாங்ஷன் செய்யப்பட்ட பணம் கொடுக்கப்படுமானால் சாங்ஷனான பணம் பூர்த்தியாகிவிடும். அதற்கு மேலே மத்திய அரசாங்கமும் உதவி அளிக்கிறது. இன்னும் 40 லட்சம் ரூபாய் வேண்டும், அவர்களுக்கு எல்லாம் உதவி செய்வதற்காக என்று மத்திய அரசாங்கத்திடம் நாம் கோரியும் இருக்கிறோம். ஆகவே இது விஷயத்தில் ஒன்றும் தாமதம் இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும். இது சம்பந்தமாக என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமோ அவை எல்லாம் எடுத்துக்கொள்ளப் பட்டுத்தான் வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்த தர்மலிங்கம் அவர்கள் பஞ்சாயத்து நிர்வாகத்தைப் பற்றி பேசினார்கள். அது விஷயத்தில் அவர் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு எல்லா விஷயங்களையும் நன்றாகக் கண்காணித்து வருவதைப் பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலுள்ள குற்றங்குறைகளை நீக்கவேண்டும் என்பதற்காக அவர் எடுத்துச்சொன்ன விஷயங்களை எல்லாம் கவனிக்கிறேன். பல யோசனைகளைச் சொன்னார்கள். அம்மாதிரி எல்லா உறுப்பினர்களும் அக்கறை எடுத்துக் கொண்டால் அவரவர்களுடைய தொகுதி பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் அக்கறை எடுத்துக் கொண்டால் அந்த நிர்வாகம் இன்னும் திறம்பட நடைபெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும். இப்போது ஒன்றிரண்டு குறைபாடுகள் இருக்கலாம். இல்லை என்று

மறுக்கவில்லை. ஆனால் அதுபோலவே இன்றையதினம் எனக்குத் தெரியும், பலவிடங்களில் இளைஞர்கள் மிகுந்த உற்சாகத்தோடு பஞ்சாயத்து நிர்வாகப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களையும் பாராட்டி இருக்கிறேன். பெருமளவில் பார்த்தால் அந்த நிர்வாகம் நல்ல முறையில் தான் நடந்து வருகிறது. ஒன்றிரண்டு ஊழல்கள் இருக்குமானால்—கனம் அங்கத்தினர் தர்மலிங்கம் எடுத்துக்காட்டியது போல அவற்றையெல்லாம் களைவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. தலைவர் தேர்தலைப் பற்றி. அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவர்களே அந்த அங்கத்தினர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்று கனம் அங்கத்தினர் சொன்னார். அப்படி இருக்க தலைவர்கள் பொதுமக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவது என்று வந்துவிட்டால் அங்கத்தினர்கள் சொல்வதைக் கேட்காமல் அவர்களே சர்வாதிகாரம் நடக்கக்கூடிய நிலைக்குப் போனாலும் போய்விடும். இதுபற்றியெல்லாம் அரசாங்கமும் நன்றாகப் பரிசீலனை செய்துகொண்டுதான் வருகிறது. இன்னொன்று. இந்தப் பஞ்சாயத்து யூனியன்களுடைய கணக்கு சரியான முறையில் ஆடிட் செய்யப்படவேண்டும் என்பதை அரசாங்கம் உணர்ந்தே இருக்கிறது. மேலும் இதில் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். ஒன்றிண்டு இடங்களில் தவறு நடக்குமானால் அதன்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் கொஞ்சங்கூடத் தயங்காது. ஆகவே இது விஷயங்களை எல்லாம் அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலனை செய்து வருவதனால் திருத்தப் பிரேரணைகளை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

The cut motions were by leave withdrawn.

Mr. DEPUTY SPEAKER : The question is :—

"That the Government be granted a sum of not exceeding Rs. 9,93,000 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 3,87,500 under Demand IX—District Administration and Miscellaneous.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XII—POLICE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, On the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,41,500 under Demand XII—Police."

The Demand was put and carried and the Grant was made.

22nd January 1964]

DEMAND XIII—EDUCATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 32,31,000 under Demand XIII—Education."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIV—MEDICAL.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,43,800 under Demand XIV—Medical."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XV—PUBLIC HEALTH.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 100 under Demand XV—Public Health."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVI—AGRICULTURE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 22,000 under Demand XVI—Agriculture."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVII—FISHERIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,900 under Demand XVII—Fisheries."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVIII—ANIMAL HUSBANDRY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,03,900 under Demand XVIII—Animal Husbandry."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIX—CO-OPERATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,99,500 under Demand XIX—Co-operation."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XX—INDUSTRIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 30,600 under Demand XX—Industries."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 81,63,000 under Demand XXIII—Community Development Projects, etc."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIV—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 42,26,300 under Demand XXIV—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXV—WELFARE OF SCHEDULED CASTES, TRIBES AND OTHER BACKWARD CLASSES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 27,81,000 under Demand XXV—Welfare of Scheduled Castes, Tribes and other Backward Classes."

The Demand was put and carried and the Grant was made.

22nd January 1964]

DEMAND XXVII—PUBLIC WORKS—WORKS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 22,12,100 under Demand XXVII—Public Works—Works."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,79,400 under Demand XXVIII—Public Works—Establishment and Tools and Plant."

The Demand was put and carried and the Grant was made.

DEMMAND XXIX—PUBLIC WORKS-GRANT-IN-AID.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 500 under Demand XXIX—Public Works—Grants-in-aid."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXI—FAMINE RELIEF.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 26,000 under Demand XXXI—Famine Relief."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIII—MISCELLANEOUS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 27,32,800 under Demand XXXIII—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIV—STATIONERY AND PRINTING.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,00,100 under Demand XXXIV—Stationery and Printing."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXV—FOREST DEPARTMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,20,000 under Demand XXXV—Forest Department."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVI—OTHER MISCELLANEOUS CONTRIBUTIONS AND ASSIGNMENTS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 100 under Demand XXXVIII—Capital Outlay on Public tributions and Assignments."

The Demand was put and carried and the Grant was made.

B—Expenditure on Capital Account.

DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 100 under Demand XXXVIII—Capital Outlay on Public Health."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XL—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 31,44,400 under Demand XL—Capital Outlay on Industrial Development."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,09,16,800 under Demand XLI—Capital Outlay on Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

22nd January 1964]

DEMAND XLII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 41,05,600 under Demand XLII—Capital Outlay on Public Works."

The Demand was put and carried and the Grant was made.

C—Expenditure on Loan Account.

DEMAND XLVII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,52,74,200 under Demand XLVII—Loans and Advances by the State Government."

The Demand was put and carried and the Grant was made.

VIII—ANNOUNCEMENT.

THE MADRAS APPROPRIATION BILL, 1964.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Government has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Appropriation Bill, 1964.

IX—GOVERNMENT BILLS

(1) THE MADRAS APPROPRIATION BILL, 1964.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I beg leave to introduce the Madras Appropriation Bill, 1964.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Appropriation Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

X—GOVERNMENT MOTION.

Change in the Order of Business.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That item IV (3), viz., the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964, in the order of business for the day be taken up before item IV (2), viz., the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964."

The motion was put and carried.

IX—GOVERNMENT BILLS—*cont.*

(2) The Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir,, I beg leave to introduce the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964 [a] and move—

"that the Bill be taken into consideration."

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இது ஒரு சிறிய மசோதா. 1-00 p.m. விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொள்வது பற்றி இப்போது அரசியல் அமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்ற அங்கத்தினர்கள் கூட எடுத்துக் கொள்ளும் விஸ்வாசப் பிரமாணம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. "**uphold the sovereignty and intergrity of India**" என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரமன்றமாக இருந்தாலும் சரி, மற்ற நகரமன்றங்களாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்துக்களாக இருந்தாலும் சரி அவர்களும் விஸ்வாசப்பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டியவர்கள். விஸ்வாசப் பிரமாணம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் இந்த மசோதா, நகரமன்றத் தேர்தல்கள் நடைபெற இருப்பதால் இந்த மசோதா அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கு யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் : மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, இந்த மூன்று சட்டங்களையும் . . .

Mr. DEPUTY SPEAKER : Let the hon. member first move his amendment.

Sri S. MADHAVAN : Sir, I move—

"That the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964 be circulated for the purpose of eliciting opinion thereon.

[a] **Published in the Fort. St. George Gazette Extradinary dated 15th January 1964.**

22nd January 1964]

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second it.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"That the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964 be referred to a Select Committee consisting of . . . members of the Assembly."

SRI A. K. SUBBIAH : Sir, I second it.

MR. DEPUTY SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

திரு. செ. மாதவன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சட்டங்களையும் திருத்தும் இந்தச் சட்டம் பற்றி மக்களுடைய கருத்தை அறிவதற்காக இதை மக்கள் மன்றத்தில் வைக்கவேண்டுமென்ற என் திருத்தத்தை நான் வலியுறுத்தி ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் சாதாரண பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் இவற்றிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதோ அல்லது அதை மாற்றியமைப்பதோ பாராளுமன்றம். அது சம்பந்தமாக பல சட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை உண்டு. இந்த இரண்டு மன்ற உறுப்பினர்களும் முன்னால் விசுவாசப் பிரமாணம் எடுக்கவேண்டுமென்ற நியதி இந்த மன்றத்தில் வந்து விட்டது. அதே போல் சாதாரண மன்ற விஷயங்களை அல்லது அந்தந்த ஊர் பற்றிய விஷயங்களைப் பற்றி வாதிக்கவும், அதுபற்றிய செயல் திட்டங்களை நிறைவேற்றக் கூடிய சில மன்றங்களிலும் இந்த பிரமாணம் எடுக்கும் முறை தேவையா ? என்பதைப் பற்றி மக்கள் மன்றத்தின் கருத்தை அறிய வேண்டும் என்பது எங்கள் ஆசை. அதுவும் நகரமன்றத் தேர்தல்கள் நடக்கப் போகும் இந்த சமயத்தில் மக்களைக் குழப்புவதற்காக அல்லது தேர்தலில் ஈடுபடுகிறவர்களின் உள்ளத்தில் பயத்தை ஊட்ட அரசாங்கம் இந்த நேரத்தில் அவசர அவசரமாக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்ற குற்றச் சாட்டை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன். சாதாரண நகர விஷயங்களைப் பரிசீலிக்கும் மன்றங்களிலும் இந்த நாட்டின் "ஸாவரனிட்டி ஆன்ட் இன்டக்ரிட்டி" யை நாங்கள் நிலைநாட்டுவோம் என்ற உறுதிமொழி எந்தவிதத்தில் தேவை என்று எனக்குப் புரியவில்லை. அந்த ஒரு முறை வகுக்கப்பட்டால் சிறு கிராமங்களில் கூட அரசியல் பூசல்கள் பெருக வாய்ப்பு வசதிகள் அதிகமாகும். இதை இந்த அரசாங்கம் விரும்பாது என்று தான் நான் கருதுகிறேன். ஆகவே சிறு சிறு மன்றங்களில் அரசியலுக்கு இடமில்லை அல்லது இடம் தேவை இல்லை என்ற கருத்தைக் கொண்டிருக்கக்கூடிய அரசாங்கம் இப்போது இந்த முறையை அம்மன்றங்களில் புகுத்தி அங்கு அரசியல் வரப் போகிறது, ஏதோ ஒரு கட்சி ஆட்சிக்கு வரப்போகிறது என்ற பயத்தில் இதுபோன்ற சட்டத்தை கொண்டு வருவது நியாயமும்

22nd January 1964] [திரு. செ. மாதவன்]

அல்ல, நீதியும் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சியினருக்குள்ள பலத்தை வைத்துக் கொண்டு இந்த சட்டத்தை நிறைவேற்றலாமென்று நினைக்கலாம். சிறு கிராமங்களில் மக்கள் அரசியல் கொள்கைகளை எப்படி வைத்துக் கொள்ளவேண்டுமென்று கருத்தை அரசாங்கம் நிர்ணயிக்க விரும்புகிறது. அதன் மூலம் ஏதோ ஒரு கருத்தை இந்த நாட்டில் இருந்து விரட்டலாம் அல்லது ஒரு கட்சி இதுபோன்ற மன்றங்களுக்கு வருவதைத் தடுக்கலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்குமானுல் அதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்கிருர்களா ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்பதுபற்றி மக்கள் கருத்தைத் தெரிவிக்க இந்தச் சட்டத்தை மக்கள் மன்றத்திற்கு அனுப்பி அவர்கள் கருத்தை அறிய வேண்டும் என்ற என் பிரேரணையை முன்மொழிகிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இம்மசோதா குறித்து இப்போது பேசிய அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசியதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முனிசிப்பாலிட்டிகளுக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் சம்பந்தமேயில்லை என்று அவர்கள் சொல்கிருர்கள். நான் ஒரு சாதாரண விவசாயி. அவர்கள் சட்டம் படித்தவர்கள். பி.ஏ., பி.எல். என்று சொல்கிருர்கள். அவர்கள் இந்தச் சட்டம் பற்றி

கனம் உதவி சபாநாயகர்: பெர்ஸனலாகச் சொல்லக் கூடாது.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: The existence of the House is based on the Constitution. அவர்கள் மெம்பராக இருக்கிருர். அரசியல் அமைப்பு சட்டம் இல்லாவிடில் அவர் எப்படி இங்கு மெம்பராக வரமுடியும்? ஆகவே, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் பஞ்சாயத்திக்கள், முனிசிபாலிட்டிகள் இவற்றிற்கும் சம்பந்தம் இல்லை என்று அவர் சொல்வதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. அதுவும் சட்டம் படித்தவர் இப்படி சொல்வதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. தேசத்திற்கு விஸ்வாசத்தைக் காண்பிக்கும் திருத்தம் இது. திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டோம் என்று சொல்லியிருக்கிருர்கள். அக்கட்சி அந்த கொள்கையை விட்டு விட்டது என்று திருப்தியோடு இருந்தோம். அப்படியிருக்க அவர்கள் இந்த மசோதாவிற்கு ஆதரவு கொடுத்திருந்தால் அவர்கள் நிறைவேற்றப்பட்டது என்று நினைக்கலாம். இப்போது அவர்கள் இதை எதிர்ப்பதால் அவர்கள் எடுத்த தீர்மானத்தை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஆனல் அக்கட்சியில் உள்ள பெரிய தலைவர்கள் பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டோம் என்று சொல்கிருர்கள். இவர் சொல்வதற்கு அக்கட்சித் தலைவர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இது மிகவும் அவசியமானது. கனம் அங்கத்தினரின் அபிப்பிராயத்தை எதிர்த்து பேசும்படி வந்ததற்கு வருந்துகிறேன்.

22nd January 1964]

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, ஒருமைப்பாடு உணர்ச்சியை சிற்றூரில் இருக்கின்ற ஊராட்சி மன்றங்களிலும் கொண்டு வரவேண்டும் என்று எண்ணி, அதற்கான சட்டத்தை கொண்டு வந்து வற்புறுத்துகின்ற ஆளும் கட்சியினர் எப்படி ஒருமைப்பாடு உணர்ச்சியை ஏற்படுத்துகிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். ஒருமைப்பாடு வேண்டும் வேண்டும் என்று பேசுகிறார்களே ஒழிய தேர்தல் நடைபெறும் நேரத்தில், பதவிகளை தேடிக்கொள்ளும் நேரத்தில், மந்திரிசபை அமைக்கும் நேரத்தில், மற்றும் பொதுவேலைகளை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் இந்த ஒருமைப்பாடு எப்படி ஓடுகிறது என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். மந்திரிகளை தேர்ந்தெடுக்கின்ற நேரத்தில் முதலியாருக்கு ஒரு மந்திரி, ஐயருக்கு ஒரு மந்திரி, அரிசன் வகுப்புக்கு ஒரு மந்திரி, வன்னியருக்கு ஒரு மந்திரி, முக்குலத்தோருக்கு ஒரு மந்திரி, இவ்விதம் ஜாதிக்கு ஜாதி பதவிகளை பகிர்ந்து கொள்வதும், எங்கள் மாவட்டத்திற்கு ஒரு மந்திரி, உங்கள் மாவட்டத்திற்கு ஒரு மந்திரி என்று பகிர்ந்து கொள்வதும் காண்கின்ற ஒரு நிலையைத்தான் நாம் பார்க்கின்றோமே தவிர அந்த நேரத்தில் ஒருமைப்பாட்டை ஒன்றும் காணோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஆளும் கட்சியினர் ஒருமைப்பாட்டு உணர்ச்சியைப்பற்றி பேசி, அதற்காக சட்டம் கொண்டு வருவதால் ஏதாவது பலன் உண்டா என்பதை முதலில் நன்றாகப் பார்த்துக் கொண்டு பின்னால் இதற்காக சட்டம் கொண்டுவந்தால் போதுமானது என்பதை தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒருமைப்பாட்டைப் பற்றியும், நம்முடைய உரிமையைப் பற்றியும் தவறாகவும் அதற்கு மாறாகவும், சட்டமன்றங்களில் வந்து அங்கத்தினர்களாக பதவி ஏற்கின்ற நேரத்தில் இங்கு தரப்படுகின்ற அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நடப்பேன் என்று வாக்குறுதி அளித்துவிட்டு, பின்னால் வெளியே போய் அதற்கு மாறாக நடந்து கொண்டு, அதன் காரணமாக பதவி போய்விடுமோ என்ற காரணத்தால், பிரிவினையை விட்டுவிட்டோம் என்று சொல்லுகின்ற கட்சிதான் இப்போது முனிசிபாலிட்டிகளுக்கும், மற்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் தேவையில்லை என்று சொல்லுகிறது. அரசியல் சட்டத்திற்கும், நமது நாட்டிற்கும் ஊறு விளைவிக்கின்ற பிரதிநிதிகள் வரக்கூடாது என்றுதான் இந்த வாக்குறுதியை மேற்கொள்ளவேண்டுமென்று இப்போது அரசாங்கம் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் முன்னால் பிரிவினையை ஆதரித்தவர்கள் இப்போது விட்டுவிட்டோம் என்று சொல்லக் கூடியவர்கள் சந்தேகப்படக்கூடிய அளவில் இருக்கிறார்கள். பிரிவினையை கைவிட்டுவிட்டோம் என்று பயத்தினாலோ அல்லது வேறு எந்த காரணத்திலோ சொன்னவர்கள் உண்மையிலேயே அதை விட்டுவிட்டார்களா என்பதை இப்போது இங்கு வந்திருக்கின்ற மசோதாவை எதிர்ப்பதிலிருந்து தெரிகிறது. சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் மட்டுமல்லாமல், கிராமங்களிலும்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [22nd January 1964

'வேற்றுமை வெறுப்புணர்ச்சிக்கு விளக்கு' என்ற நிலைமை ஏற்படாமல் இருக்கும்படியாகவும், கிராம பஞ்சாயத்து வேலைகளில் எல்லாம் ஒற்றுமையுடன் ஈடுபடவும், இந்த நாட்டை நல்ல வழியில் கொண்டு செல்வதற்கும்தான் ஒற்றுமை உணர்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதை உணர்ந்துதான் அரசியல் சட்டத்தில் இதற்கென்று ஒரு தனி இடத்தை கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். சட்டமன்ற அங்கத்தினர்கள் மட்டுமல்ல, பாராளுமன்ற அங்கத்தினர்கள் மட்டுமல்ல, அடித்தளத்திலிருக்கின்ற பிரதிநிதிகளும் ஒற்றுமை உணர்ச்சியோடு மக்களிடத்தில் வேலை செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் இப்போதாவது அரசினர் கொண்டு வந்தார்களே என்று அரசினரை நாங்கள் பாராட்டுகிறோம். உள்ளத்தில் ஒன்று, பேசுவது ஒன்று என்றிருப்பவர்களை எப்போதும் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இப்பேர்ப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் தண்டிக்கக் கூடிய வகையில் ஏதாவது ஒரு சட்டம் கொண்டு வந்தால் அது போற்றத்தக்கதாய் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, மக்களுடைய நல்லெண்ணத்தை பாழாக்காமல் இருக்கக்கூடிய வகையில் என்னென்ன சட்டங்கள் கொண்டு வர முடியுமோ அவைகளை எல்லாம் துரிதமாக கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். நஞ்சுண்டராவ் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதை எதிர்த்துப் பேசிய மாதவன் அவர்களுக்கும் கோவிந்தன் அவர்களுக்கும் நான் பதில் சொல்லப் போவதில்லை. முக்கியமாக சில கருத்துகளை மட்டும் தெரிவிக்கிறேன். இப்போது பாகிஸ்தானில் பஞ்சாயத்து யூனியனை 'பேசிக் டெமாக்ரசி' என்று பெயர் கொடுத்து அழைத்து வருகிறார்கள். இப்போது அவர்கள் எவ்வாறு நடத்திவருகிறார்கள் என்பதைப்பற்றி நமக்கு கவலையில்லை என்றாலும், நம்முடைய ராஜ்யத்தில் பஞ்சாயத்து ராஜ்யம் வந்த பிறகு அந்த அமைப்புக்கு மிகவும் செல்வாக்கு வந்திருக்கிறது. பெரிய டவுன்களாக இருக்கின்ற கோயம்புத்தூர் போன்ற டவுன்களை எடுத்துக்கொண்டால், அங்குள்ள யாரிடமாவது நீங்கள் எம்.எல்.ஏ.வாக வருகிறீர்களா அல்லது முனிசிபாலிட்டி சேர்மன்ஆக வருகிறீர்களா என்று கேட்டால், சேர்மன்ஆக வருவதற்குத்தான் ஆசைப்படுகிறார்களே தவிர, எம்.எல்.ஏ.வாக வருவதற்கு ஆசைப்படுவதில்லை. கிராமங்களில் உள்ள நிலைமையைத் தெரிந்து நான் சொல்லுகின்றேன். கிராமங்களில் கூட, பஞ்சாயத்து சேர்மன்ஆக வருவதைத்தான் விரும்புகிறார்களே தவிர, எம்.எல்.ஏ.-வாக வருவதற்கு விரும்புவதில்லை. பஞ்சாயத்து சேர்மென்ஆக வந்தால்தான் கிராமத்தில் சேவை செய்யமுடியும் என்று எண்ணி கிராமங்களுக்காக பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு வருகிறார்கள். இப்போதுள்ள

22nd January 1964] [திரு. எஸ். நஞ்சுண்டராவ்]

முறையில் பஞ்சாயத்து ஸ்தாபனங்களில் வருகின்றவர்களுக்கு ஜனங்களுக்கு நேரடியாக சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. இன்றையதினம் நம்முடைய ஜனநாயக முறையில் மக்களுக்கு சேவை செய்வதற்கு பஞ்சாயத்து யூனியன்களும், முனிசிபாலிட்டிகளும் தேவை. ஆகவே இதில் பிரதிநிதிகளாக வருகின்றவர்களுக்கு நிறைய பொறுப்பு இருக்கிறது. சொல்லப் போனால் இந்த ஸ்தாபனங்கள் பாரலல் கவர்ன்மென்ட் என்று சொல்லலாம். இப்பேர்ப்பட்ட பாரலல் கவர்ன்மென்டில் வரக் கூடியவர்கள், தேசீய ஒருமைப்பாட்டையும், ஜனநாயகத்தையும், அரசியல் சட்டத்தையும் நன்ருகப் புரிந்து கொள்ளவேண்டும். அதற்கேற்ற முறையில் இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வந்ததற்காக நாம் இந்த கவர்ன்மென்டை பாராட்டவேண்டும், அதைவிட்டுவிட்டு இதை எதிர்ப்பதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை. ஆகவே இது மிகவும் முக்கியம், இதில் எந்தவிதமான கட்சி நோக்கமும் கிடையாது. Every citizen shall know his responsibilities and duties அப்படி யிருக்கிற நிலைமையில் முனிசிபாலிட்டி அங்கத்தினர்கள், பஞ்சாயத்து அங்கத்தினர்கள், இவர்கள் எல்லாம் "இது தங்களுடைய உரிமை" (It is a privilege) என்று நினைக்கிருர்கள். இல்லையென்ருல் ஒற்றுமை என்பதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும். ஆகவே இது நல்லதொரு வாய்ப்பு; இதை நல்லமுறையில் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்த மசோதாவில் கண்டுள்ள அடிப்படை கொள்கைக்கு எனது ஆதரவு என்பது தெரிந்ததே. இந்த மாதிரி உறுதிப் பிரமாணம் எடுப்பதில் எந்தக் காரணத்தைக் கொண்டும் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. இப்போது சட்டமன்ற அங்கத்தினர்களுக்கும், பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கும் இருக்கின்ற விதிகளைவிட இது கடுமையானது அல்ல. சட்டமன்ற அங்கத்தினர்கள், பாராளு மன்ற அங்கத்தினர்கள் தேர்தலில் வெற்றிபெற்று வருவதற்கு முன்னுலேயே, தேர்தலில் நிற்கிறவர்கள், சிலர் டெப்பாஸிட் தொகைகளை இழக்கலாம்; சிலர் தோற்றுப் போய்விடலாம்; இவர்கள் எல்லாம்கூட தேர்தல் அதிகாரியின் முன்னுல் தன்னுடைய தேர்தல் அபேட்சை மனுவை கொடுக்கும் போது பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். அப் போது தான் மனுவை அதிகாரி அங்கீகரிப்பார். இதைப் பொறுத்தவரையில் தேர்தலில் வெற்றி பெற்று வந்த பின்னுல் கார்ப்பரேஷன், நகராட்சி, ஊராட்சி மன்றங்கள் இவைகளில் எடுக்க வேண்டிய உறுதிப்பிரமாணம் பற்றியதுதான் இப் போது மசோதாவிலுள்ள விஷயம். இந்த நாட்டினுடைய ஆதி பத்தியத்திற்கும், இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்கும் விசுவா சத்தோடு நடப்பேன் என்று உறுதி கூறுகின்ற முறையில்தான் இந்தப் பிரமாணம் அமைகிறது. இதை யாரும் ஆட்சேபிக்க வேண்டிய தேவையில்லை. அப்படியானுல் என் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்ல வேண்டும்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [22nd January 1964

என்று கேட்கலாம். இதை அமுல் நடத்துவதின் மூலமாக நாட்டில் ஒற்றுமை உணர்ச்சி பரவ வேண்டும். இதில் எங்கள் கட்சிக்கும் எனக்கும் ஆர்வம் உண்டு. பொதுவாக நாட்டில் ஒற்றுமை உணர்ச்சி வளரவேண்டும். இதற்கு அரசாங்கம் நல்ல சூழ்நிலையை வளர்க்க வேண்டும். சட்டங்கள் இயற்ற வேண்டும். இதற்கான திட்டங்கள் கொண்டுவந்த நேரத்தில் எல்லாம் நாங்கள் ஆதரித்திருக்கிறோம். மக்களிடத்தில் இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். இதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இவர்கள் எல்லாம் பிரசாரம் செய்யவேண்டும். காலையில் கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நடந்த விவாதத்திற்கு பதில் அளிக்கின்ற நேரத்தில், கனம் முதல் அமைச்சர் அவர்கள், நான் சொல்ல தவறியவைகளைக்கூட சுட்டிக்காட்டி பதிலளித்தார்கள். அந்த அளவுக்கு என்னுடைய உரையை நன்கு கவனித்து அக்கறை காட்டியதற்காக நன்றி செலுத்துகிறேன். அதே போன்று கனம் அமைச்சர் அவர்கள் அக்கறை செலுத்தி பதில் சொல்லவேண்டியதை தவற விட்டுவிட்டார்கள் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. பல சட்டங்களை—பஞ்சாயத்து சட்டங்களைப் பொறுத்தவரையில்—நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிவந்திருக்கிறோம். இவைகளை எல்லாம் நிறைவேற்றாமல் இப்போது அவசர அவசரமாக இதை உடனடியாக நிறைவேற்றுவது சரியல்ல. நகராட்சி சட்டம் மிகப்பழமையானது. கூடிய சீக்கிரத்திலேயே அதற்குப் புதிய சட்டங்களைக் கொண்டுவரலாம் என்று அமைச்சர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அவைகளோடு கூட இதையும் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இதிலுள்ள நோக்கத்தை நான் ஆட்சேபிக்கவில்லை. ஒருமைப்பாட்டு உணர்ச்சியைப் பரப்புவதில் எங்கள் கட்சி எப்போதும் தன் பங்கை ஆற்றி வந்திருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்ததைவிட எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதற்காக அதிகமாக பாடுபட்டிருக்கின்றார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதிலே இப்படியே அமல் நடத்துவதிலே பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் சங்கடம்தான். இது ஒரு டிஸ்க்வாலிஃபிகேஷனாகக் கருதப்படுகிறது. மூன்று கூட்டத்திற்குள் பிரமாணம் எடுக்காவிட்டால் அந்த மெம்பருடைய பதவியே போய் விடும். பார்லிமெண்ட்டிலும், சட்ட சபையிலும்கூட இந்தக் காரணத்திற்காக பதவி போகாது. இங்கே வந்து உட்கார முடியாது, சபை நடவடிக்கைகளில் பங்குகொள்ள முடியாது. இங்கே வந்து உட்காரவேண்டுமென்றாலும், சபை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டுமென்றாலும் பிரமாணம் எடுத்த பிறகுதான் முடியும். பிரமாணம் எடுக்காமல் சபையில் வந்து உட்காருவது சபையை அவமதிப்பதாகும். அதற்காக அபராதம் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கு மட்டும், பஞ்சாயத்துக்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் இதை ஒரு டிஸ்க்வாலிஃபிகேஷனாகச் சேர்த்து—இந்த டிஸ்க்வாலிஃபிகேஷனுக்கு அப்பீல் செய்ய உரிமை

22nd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கொடுத்திருப்பதை வரவேற்கிறேன்—இதனால் விவகாரங்கள்தான் அதிகம் ஆகும். ஏற்கெனவேயே மாற்றுக் கருத்து உடையவர்களாக இருப்பவர்கள் ஏதாவது ஒரு காரணம் காட்டி, டிமாண்ட் நோட்டீஸ் சர்வ் பண்ணுமைலேயே சர்வ் பண்ணியதாகக் காட்டி, 4 அணு கட்டவில்லை, அதனால் மெம்பர்ஷிப் ரத்தாகி விட்டது என்ற முறையில் பல தலைவர்கள் செய்கிறார்கள். கிராமத்தில் பஞ்சாயத்துக்களில் காரியங்கள் கட்சி அடிப்படையில் இல்லை. கட்சி அடிப்படையில் இருந்தாலும் அதை வரவேற்கலாம். நபர் அடிப்படையில், கோஷ்டி அடிப்படையில், ஜாதி அடிப்படையில் எல்லாம் நடக்கின்றன. ஒருவர் ஒரு காரியத்தை செய்தால் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நம் கட்சியில் சேருபவர்கள், காங்கிரஸ்காரர் செய்ததால் பாதிக்கப்பட்டவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேருவார், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் செய்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேருவார்கள் என்று அதனால் கட்சி வளரும், நமக்கு ஆள் கிடைப்பார்கள் கொடி ஏற்ற என்று நினைத்துப் போனால் கிராமத்தில் ஒற்றுமை இருக்க முடியாது. கிராம ஒற்றுமை இல்லாமல் தேச ஒற்றுமை எப்படி வரும்? கிராமங்களில் ஒற்றுமை ஏற்படுத்துவதில் அரசியல் கட்சிகளுக்கு பொறுப்பு உண்டு. இருக்கக்கூடிய நிலைமையைப் பார்க்க வேண்டும். இந்த அமைப்பிலே இப்போதேகூட அவர்கள் உறுதி மொழி எடுக்க வேண்டும் என்பதில் சம்மதம். எப்படி எடுக்க வைப்பது? அங்கே நிர்வாக அதிகாரி கிடையாது. கூட்டத்தை கூட்டுவதற்கு யார் அதிகாரி? முதல் கூட்டம் போட்டு தலைவர் தேர்தலை நடத்த ஏற்பாடு இருக்கிறதா? ஒரு நிபந்தனை போட்டு, மூன்று கூட்டத்திற்கு வரமுடியவில்லை என்றால் மெம்பர்ஷிப் போகும். முதல் கூட்டத்திற்கு போக முடியாமல் இருக்கலாம். பிறகு பஞ்சாயத்து யூனியனில் ஆட்களை வைத்து மெம்பர்களைப் பழனி, ராமேஸ்வரம் என்று தூக்கிக்கொண்டு போவது என்பது முனிஸிபல் தலைவர் தேர்தலுக்குத்தான் இருக்கும், அது இப்போது பஞ்சாயத்து தலைவர் தேர்தலுக்கும் வந்து விட்டது. அதற்கு 20,000 அல்லது 30,000 ரூபாய் செலவு செய்யக்கூட செய்கிறார்கள். ஆட்களை மலைகளில் கொண்டு வைத்து அந்த நேரத்திற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிற நேரத்திற்கு கொண்டுவர வேண்டிய முறையில் காரியங்கள் நடக்கின்றன. மூன்று கூட்டங்களுக்கு வரத் தவறினால் டிஸ்க்வாலிஃபிகேஷனைக் கொண்டுவருவதைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்றுதான் நான் சொல்லுகிறேன். மற்றப்படி இதில் ஆட்சேபணை கிடையாது. பஞ்சாயத்தில் தேசீய ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக ஒரு காரியம் செய்ய முடியாது என்ற முறையில் இருக்க வேண்டும். ஒற்றுமை உணர்ச்சி ஏற்பட வேண்டும். இந்த உறுதிமொழியை என்னைக் கேட்டால் ஒவ்வொரு பிரஜையும், நாட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இந்த

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [22nd January 1964

மாதிரி உறுதிமொழி எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யலாம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு, ஆசிரியர்களுக்கு இப்பேற் பட்ட உறுதிமொழி வைக்கவேண்டும் என்ற கொள்கை வருமா னுல்கூட நான் ஆட்சேபிக்கத் தயாராயில்லை. அதற்கும் எனது சம்மதத்தைத் தெரிவிப்பேன். ஆனுல் இப்போது உள்ள நிலைமை யில் பஞ்சாயத்து அங்கத்தினர்களெல்லாம் கோர்ட்டுக்குப் போய் நிற்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும். பஞ்சாயத்துக்களெல் லாம் இயங்க இயலாத சூழ்நிலைதான் ஏற்படும். உறுதிமொழி எடுப்பதில் அதை டிஸ்க்வாலிஃபிகேஷனுக ஆக்காமல் விட்டால் என்ன? எடுக்காவிட்டால் சபையில் உட்கார முடியாது, தலைவர் தேர்தலில் கலந்து கொள்ள முடியாது என்று வைத்தால் நலம் என்று நினைக்கிறேன்.

இதிலே இன்னென்று இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மன் உறுதிமொழி எடுத்துவிட்டு பதவி வகிக்கலாம் என்று இருக்கிறது. உறுதி மொழி எப்படி எடுப்பது. இப்போது இருக் கிற மசோதாவிலே குழப்பம் இருக்கிறதோ என்ற சந்தேகம் இருக்கிறது. ப்ரொவிஸோவைப் பார்த்தால் தலைவர் தேர்ந் தெடுக்கப்பட்ட பிறகு வேலை செய்யலாம், கூட்டத்தில் உறுதி மொழி எடுக்க வேண்டியதில்லை, தனியாக எடுக்கலாம் என்று இருக்கிறது. அவர்கள் எப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்? இந்த மாதிரி இல்லாமல், உறுதிமொழி எடுக்காமல் கலந்துகொள்ள முடியாது, அங்கம் வகிக்க முடியாது என்று, எப்போது உறுதி மொழி எடுப்பது என்று தெளிவாக்க வேண்டும். இப்படியே போனுல் குழப்பமும், சிக்கலும்தான் ஏற்படும். இந்தக் குழப் பத்தை நிவர்த்தி செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு கமிஷனர் இருக்கிறுர். முனிசிபல் கவுன்சில்களுக்கு கமிஷனர்கள் இருக்கிறுர்கள். பஞ்சாயத்துக்களுக்கு அந்தமாதிரி ஒருவரும் இல்லை. பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் ஆஃபீஸரை யாவது கமிஷனராகப் போட்டு, கூட்டங்களை எப்படிக் கூட்டுவது, முதல் கூட்டத்தில் விசுவாசப் பிரமாணம் எடுக்க ஏற்பாடு செய் வது என்று விளக்கலாம். எடுத்துக்கொள்ளத் தவறினுல் டிஸ்க்வாலிஃபிகேஷன் என்பதற்கு பதில் பதவி வகிக்க முடியாது, என்ற முறையில் சட்ட சபை, பார்லிமெண்ட்டுக்கு இருக்கின்ற மாதிரி போட்டால் என்ன என்பது என்னுடைய அபிப்பிராயம். அதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும் என்பதற்காக செலெக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொல்லியிருக்கிறேனே தவிர, கோட்பாடு பற்றி எனக்குப் பூரண சம்மதம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணுநிதி: தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத் திலும், நகராட்சி மன்றத்திலும் பொறுப்பு ஏற்கின்ற உறுப்பினர் கள் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி பற்றிய திருத்தம் ஒன்றினைப் பற்றி என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

22nd January 1964] [திரு. மு. கருணாநிதி]

இந்த உறுதிமொழி பற்றிய அடிப்படை அம்சங்களைக் கொண்ட திருத்தம், அரசியலமைப்பின் 16-வது திருத்தம், பாராளுமன்றத்தில் வந்த போதும், அது பற்றி இந்த மா மன்றத்தில் விவாதிக்கப்பட்ட போதும், திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவான முறையில் தன்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறது. உரிமைகளைப் பறிக்கிறது, பேச்சு உரிமையை பாழ்படுத்துகிறது என்கிற அளவில், அந்தத் திருத்தம் தேவையில்லை என்கிற கருத்தைத் தான் வெகுவாக எடுத்து விளக்கியிருக்கிறோம். ஆனாலும் பெரும்பான்மை இருக்கிற காரணத்தினால் அந்தத் திருத்தம், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதனையும், அந்த அடிப்படையில் மாநகராட்சி மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் அந்த உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிற திருத்தம் இப்போது கொண்டு வரப்படுகிறது தவறு என்று நான் கூற மாட்டேன், ஆனால் நகராட்சி மன்றங்களிலும், மாநகராட்சி மன்றத்திலும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுகிற முறை தேவைதானா என்று யோசிக்கவேண்டும் என்று நான் நான் ஆளும் கட்சியினரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய சட்ட திட்டங்களை மாற்றி அமைத்திருக்கிறது என்று கனம் உறுப்பினர் சிலர் குறிப்பிட்டது போல, பயத்தின் காரணமாக அப்படி கழகம் தன் சட்ட திட்டங்களை மாற்றிக் கொண்டது என்று அவர்கள் கருதுவார்களானால், கழகம் தன் சட்ட திட்டங்களை மாற்றிக் கொண்டது பயத்தின் அடிப்படையில் என்றால், இந்த அரசியலாரும் சட்ட திட்டங்களுக்குத் திருத்தம் கொண்டு வந்தது பயத்தின் அடிப்படையில் தான். இல்லை, சூழ்நிலை அடிப்படையில் தான் 16-வது திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று ஒப்புக்கொள்வார்களானால், சூழ்நிலை அடிப்படையில் தான் கழகம் தன் சட்ட திட்டங்களை மாற்றிக்கொண்டிருக்கிறது என்று பதில் கூறவேண்டியிருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற ஒருவர், அல்லது தமிழ் நாட்டிலே இருக்கிற ஒருவர் திராவிட நாடு வேண்டுமென்று கேட்டால், அப்படிக் கேட்பவர்களுக்கு 10 ஆண்டு சிறைவாசம் என்று கூறினால் அப்படிப்பட்ட சிறைவாசத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே யாரும் பின் வாங்கியவர்கள் அல்ல என்பதை, மூன்று ஆண்டு காலம் சிறைவாசம் என்று வகுக்கப்பட்டிருக்கிற சில தண்டனைப் பிரிவுகள் அடங்கிய சட்டங்களையெல்லாம் மீறுகிற அளவுக்கு இருக்கிற உறுப்பினர்களைக் கொண்டது தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை அறிந்தவர்கள், பயத்தின் காரணமாக, சிறைவாசத்தை ஏற்கவேண்டுமே என்ற காரணத்திற்காக அந்த அடிப்படையில் சட்ட திட்டங்களை மாற்றிக் கொண்டார்கள் என்று எண்ணுவது தவறானது ஆகும். 10 ஆண்டு காலம் திராவிட நாடு கேட்டால் சிறைவாசம் என்று சொல்லப்படுமானால், அதை புன்னகையோடு ஏற்றுக்கொண்டு அத்தகைய போராட்டத்தில்

ஈடுபட ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் பிரச்னை அது அல்ல. கழகம் இருப்பதா இல்லையா என்கிற அடிப் படையில் அந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. திராவிட நாடு கேட்டால் தண்டனை என்று சட்டம் வந்திருந்தால், அஞ்சுவதற்கு யாரும் இல்லை. ஆனால், வந்த சட்டம் திராவிட
1-30 p.m. நாடு கேட்பவர்கள், பிரிவினை கேட்பவர்கள் தேர்தலில் ஈடு படக்கூடாது, அவர்கள் உறுப்பினராக சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் இடம் பெறக்கூடாது என்று, திராவிட முன்னேற்றக் கழகம் பாராளுமன்றத்தில் பணியாற்றுகின்ற அந்தப் பகுதியை அழிக்கக்கூடிய அளவுக்கு கழகமே இயங்க முடியாத அளவுக்கு அந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்ட சூட்சமத்தை நாங்கள் உணர்ந்து, எங் களுடைய கழகம் வாழவேண்டும் என்ற அளவிலே எங்க ளுடைய சட்ட திட்டங்களை மாற்றிக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. நான் இப்பொழுதும் சொல்லுவேன், அந்த உரிமை பாதிக்கப்படாமல் திராவிட நாடு வேண்டுமா, வேண் டாமா என்கிற கேள்வி எழுப்பப்படும் என்றால், இன்றைக்கும் திராவிட நாடு வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வோம். அந்த திருத்தம் மனமாற்றத்தை வலிந்து புகுத் துவதாக அமைகிறது என்ற மறுப்பு உரையைத்தான் பாராளு மன்றத்திலும், சட்டமன்றத்திலும் நாங்கள் எடுத்து வைத்து வந்திருக்கிறோம். அந்த அளவில் அது மேலும் தொடர்ந்து ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றம் ஆகிய இடங்களுக்கும் வியாபிக்கிறது. நான் உள்ளபடியே ஆட்சியாளரை கேட்க விரும்புகிறேன். இதை இன்னும் என் னென்ன இடங்களில் நீங்கள் விரிவாக்கப் போகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. மனைவியைப் பார்த்து 'என்னிடத் திலே அன்பாக இரு' என்று கேட்ட பிறகு, கட்டளை இடு கிற கணவரைப்போல, இந்த ஆட்சியினர் இந்திய ஆதிபத்திய உரிமைக்கும், ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக நீங்கள் உறுதி மொழி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நல்ல பல செயல்கள் மூலம் மன மாற்றத்தை செய்யவேண்டி இருக்க, நல்ல வழிகளை விடுத்து, வலிந்து மனமாற்றத்தை சட்டத்தின் மூலம் திணிப்பது முறை யானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள் அந்தந்த நகரம் அல்லது பேர் ஊர் பகுதிக்கு தேவையான திட்டங்களை, பிரச்சினை களைக் கவனிக்கத்தான் இருக்கின்றன. சட்டங்களை ஆக்கவோ, சட்டங்களை வகுக்கவோ அவைகள் உரிமை பெறவில்லை. மா நகராட்சி, ஊராட்சி, பேரூராட்சி மன்றங்கள் சட்டங்களை ஆக்க அல்ல சட்டங்களை வகுக்க திறமையோ, சக்தியோ, அதிகாரமோ பெற்றிராத இந்த மன்றங்களுக்கு அங்கத்தினர் களாக வருபவர்களுக்கு இந்த உறுதி மொழி தேவை தானா என்பதை யோசிக்கவேண்டும். சாலை வசதி, ஒளி விளக்கு. வசதி, சுகதார வசதி போன்ற வசதிகளை கவனிக்கவேண்டிய

22nd January 1964] [திரு. மு. கருணாநிதி]

இப்படிப்பட்ட மன்றங்களுக்கு இந்த உறுதி மொழி தேவை, இல்லை என்பதை நான் மீண்டும் வற்புறுத்திக் கூறி, ஆகவே, வலிந்து இதனை புகட்டவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் பிரேரேபிக்கிறபொழுது, இதற்கு இவ்வளவு ஆட்சேபணை இருக்கும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. நான் அப்படி எதிர் பார்க்காதது என்னுடைய திறமைக் குறைவு என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். எதையும் எதிர்பார்க்கக்கூடிய தன்மை எனக்கு இருந்தாலும், இந்த மசோதாவை எதிர்க்கட்சியினர் இவ்வளவு திட்டவட்டமாக எதிர்ப்பார்கள் என்று நான் எதிர்பார்க்க வில்லை. கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். என்றாலும் எனக்கு ஐயமே இல்லை அவர்களைப் பொறுத்த மட்டில், அவர்களுடைய கட்சி யைப் பொறுத்த மட்டில், நாட்டின் ஆதிபத்தியத்தையும், நாட்டின் ஒருமைப்பாட்டையும் நாங்கள் பாதுகாப்போம் அல்லது நிலைநாட்டுவோம் என்று உறுதி மொழி எடுத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு ஆட்சேபணை இருக்காது என் பதில் எனக்கு எப்பொழுதும் ஐயம் இல்லை. கனம் அங்கத் தினர் திரு. மாதவன் அவர்கள் திருத்தத்தை பிரேரேபித்து, அவர்கள் பேசிய பிறகு, கனம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் மேலும் அவர்களுடைய திருத்தத்தை வற்புறுத்த மாட்டார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அதிலும் நான் தோல்வி அடைந்தேன். (குறுக்கீடு). கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசிய பிறகு திரு. கலியாணசுந்தரம் அவர்கள் மீண்டும் இதை ஒத்திவைக்கவேண்டும், இதற்கு அவ சியமா என்றெல்லாம் சில கருத்துக்களை தெரிவித்தார்கள். அதிலும் எனக்கு ஆச்சரியம் தான். கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் தனி ஹோதாவிலே இந்தத் திருத் தத்தை கொண்டுவரவில்லை என்பது நான் முன்பே எதிர் பார்த்ததுதான். திராவிட முன்னேற்றக் கழக துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லாமல் தங்களுடைய நிலைமையை விளக்கி விட்டார்கள். அது மட்டும் நான் எதிர்பார்த்தது தான். மற்றபடி கனம் அங்கத்தினர் சுவாமி நாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள், மற்றவர்களும் குறிப்பிட் டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய கொள்கையை உண்மையில் மாற்றிக்கொண்டார்களா, அப்படி மாற்றிக்கொண்டபிறகு கூட இதற்கு ஏன் ஆட்சேபிக்கவேண்டு மென்று கேட்டார்கள். எனக்கு எப்பொழுதும் சந்தேகமே இல்லை. அவர்களுக்கு கொள்கை மாறுதல் இல்லை. நாட்டுப் பிரிவினையில் இப்பொழுதும் நம்பிக்கை கொண்டவர்கள் அவர்கள் அதை திராவிட முன்னேற்றக் கழக துணைத் தலைவர் அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். அவர்கள் கருத்திலே மாறுதல் இல்லை. ஆனால் அவர்கள் அச்சப்பட்டு தங்களுடைய விதிகளை மாற்

றிக்கொண்டார்களா என்ற பிரச்னைக்கு இப்பொழுது போக வில்லை. ஆனால், அவர்களுடைய கொள்கை மாறவில்லை. நாட்டுப் பிரிவினையில் இன்னும் அவர்கள் நம்பிக்கை கொண் டிருக்கிறார்கள். ஆனால், அதைத் திருப்பி வற்புறுத்துவதினால் தங்கள் கட்சிக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சத்தை திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கட்சிக்கு ஆபத்து, கட்சி அங்கத்தினர் தன்மை என்பதெல்லாம் தலைவர்களுக்குத் தெரியும். சட்டவிரோதமான ஸ்தாபனமாகிவிட்டால் என்ன ஆகும்? காங்கிரஸ் சட்டவிரோத மான ஸ்தாபனம் என்று அறிவிக்கப்பட்டபொழுதும் நாங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை. பரிபூரண சுதந்திரம் வேண்டுமென்று போராடினோம். பிரிட்டிஷாரை எதிர்த்து போராடினோம், வெள்ளையனே வெளியேறு என்றெல்லாம் தீர்மானம் போட்டு பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்று போராடிய காலத்திலும், காங்கிரஸ் மகாசபை சட்டவிரோத மான ஸ்தாபனம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இருந் தாலும் அதை வைத்துக்கொண்டு தான் நாங்கள் போராடி னோம். யாரும் ஓடிப்போகவில்லை. கொள்கையில் மாற்றம் செய்யவில்லை. ஆனால், அப்படி அல்ல திராவிட முன்னேற்றக் கழகம். அதைத் தலைவர்கள் நன்றாக உணர்வார்கள். அனு பவ உணர்ச்சியுடன் தங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று மாற்றிக்கொண்டார் களே தவிர, எண்ணத்தில் மாற்றம் இல்லை.

அதெல்லாம் சரி. ஆனால், இன்று சட்டம் வந்திருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டம் வந்திருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதுபோல பஞ்சா யத்து தேர்தலில் நின்று தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களும், நகராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களும், அந் தப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, அதை ஒட்டி விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் கருத்து. நாம் இம்மாதிரி பிரமாணம் பெறவில்லை என்றால் ஆபத்து வந்துவிடும் என்பது அல்ல. கிராமத்திலுள்ள மக்கள் நாட்டு ஒருமைப்பாட்டையும், ஆதிபத்தியத்தையும் பாதுகாப் பதற்கு விரோதமாக இருப்பார்கள், இருக்கக்கூடும் என்ற கவலை சிறிதும் இல்லை. ஆட்சியாளருக்கும் இல்லை, காங்கிரஸ் காரர்களுக்கும் இல்லை. மக்கள் எல்லாம் சிறந்த மனப்பான்மை யோடு தான் இருக்கிறார்கள். நாட்டு ஆதிபத்தியத்தையும், நாட்டின் ஒற்றுமை உணர்ச்சியையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவதில் மிக நம்பிக்கையும், அக்கரையும் கொண்டவர் களாக இருக்கிறார்கள் அதைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. அதைப்பற்றி சந்தேகப்படவேண்டியதில்லை. மனைவியைக் கூட யாரும் சந்தேகப்படமாட்டார்கள். மனைவியை சந்தேகப்படு கிறவர்கள் ரொம்ப அபூர்வம். அதே மாதிரி தான் நாம் மக்களைப் பற்றி சந்தேகப்பட வேண்டியதில்லை. மனைவியைப்பற்றி வேண்டு

22nd January 1964] [கனம் திரு. எம். பக்தவத்சலம்]

மானுலும் சந்தேகப்படுவார்கள் அபூர்வமான கணவர்கள். ஆனால், மக்களைப்பற்றி ஒருக்காலும் சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. பிரமாணத்தை எடுத்துக்கொண்டால் மட்டும் பலன் கிடைத்துவிடும் என்பதல்ல. ஆனல் அது ஒரு சம்பிரதாயம், ஒரு முறை. நாம் 'ஜன கண மன.....' நாட்டு கீதம் பாடும்பொழுது எழுந்துநிற்கிறோம். அது ஒரு முறை. அதற்காக அப்பொழுது உட்கார்ந்து கொண்டிருந்தால், அதை அவமதிப்பது ஆகிவிடுமா? விழாக்களில் கடைசியில் நாட்டு கீதம் பாடுகிறோம். எந்தப் பாடல், எப்படிப் பாடுவது என்று ஒரு முறை வைத்திருக்கிறோம். எந்தப் பொறுப்பில் இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, பார்லிமெண்டு உறுப்பினராக இருந்தாலும் சரி, விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று வைத்திருக்கிறோம். இங்கெல்லாம் சட்டம் இயற்றுகிறோம், ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களில் சட்டம் செய்கிறார்களா என்று திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். எங்கிருந்தாலும், மக்கள் பிரதிநிதி என்ற முறையில் பொறுப்பு வகிக்கிறோம். மக்கள் சார்பாக நாட்டின் ஒருமைப்பாட்டையும், நாட்டின் ஆதிபத்தியத்தையும் பாதுகாப்பதற்கு நாம் உறுதிமொழி எடுத்துக்கொள்கிறோம். இந்த மன்றங்களுக்கு சட்டம் செய்கின்ற பொறுப்பு இல்லை என்றாலும், மக்கள் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறவர்கள் மக்களின் சார்பாக இம்மாதிரி பிரமாணம் எடுத்துக்கொள்கிறார்கள். மக்கள் இதை விரும்புகிறார்கள். மக்கள் இதில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் சார்பாக பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டு மென்பது தான் கருத்து. இதை மக்கள் மன்றத்திற்கு விட வேண்டுமென்று கனம் அங்கத்தினர் திரு. மாதவன் சொன்னார். மக்கள் மன்றம் என்றால் வேறு? இது மக்கள் மன்றம் இல்லையா? மக்கள் மன்றத்திற்கு விடவேண்டுமென்று சொல்லுகிறார்களே? சந்தேகம் இருந்தால் சொல்லட்டும். இந்தப் பிரமாணம் வேண்டாமென்று சொல்லட்டும். நமக்கு சந்தேக மில்லை என்றால் வேறு யாரைக் கேட்கவேண்டும். நம்மைத் தவிர வேறு கருத்து உள்ளவர்கள் யாரும் இல்லை. மக்கள் மன்றத்திற்கு இதை விடவேண்டுமென்று சொல்லி இந்த மசோதாவைத் தள்ளிவைப்பதற்கு கொஞ்சங்கூட இடமில்லை.

கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் யாரிடத்திலே விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்வது என்று இதிலே விவரமாக இல்லையென்றும், பார்லிமெண்ட் சபையிலே இருப்பதுபோல் பிரமாணம் எடுத்துக்கொள்ளவில்லை யென்றால் பணியாற்ற முடியாது என்று போட்டிருக்கிறதே, இதிலே மாத்திரம் பதவியே போய்விடும் என்று இருக்கிறதே என்று கூறினார்கள். அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பார்லிமெண்ட் சபைக்கு எங்கெல்லாமிருந்தோ உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும். வந்தபிறகு

பணியாற்றவேண்டுமென்று இருக்கிறது. இங்கே மூன்று கூட்டங்களுக்குச் சேர்ந்தாற்போல் வராமல் அவர்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவில்லையென்றால், அவர்களுக்கு எதற்காகப் பதவி என்று நான் கேட்கிறேன். அதனால்தான் இங்கு மாற்றிபோடப்பட்டிருக்கிறது. இதை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டிய நிமித்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த மசோதாவை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் : கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே என்னுடைய பிரேரபணையைப்பற்றி பல அங்கத்தினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் புதிதாக கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை ஒரு முறை படித்துப்பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். படித்துப் பார்க்காததற்குத் தன்னுடைய குவாலிபிகேஷனைப் பற்றி இந்த மன்றத்திலே சொன்னார்கள். அவருடைய குவாலிபிகேஷன் என்ன என்று ஒருவேளை . . .

கனம் உதவி சபாநாயகர் : அதெல்லாம் அவசியமில்லை.

திரு. செ. மாதவன் : என்னைப் பொறுத்தவரையில் நான் விளக்கமாகவே சொல்லியிருக்கிறேன். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதும் மாற்றியமைப்பதும் விவாதம் செய்வதும், பாராளுமன்றமும் சட்டமன்றங்களும். மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சியைப் பொறுத்தவரையில் சட்டசம்பந்தமான விவாதங்கள் இல்லாத காரணத்தால் அவைகளுக்கு இந்த முறை தேவையா ?

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் அமைச்சர் பதில்சொல்லிய பிறகு ஒரு அங்கத்தினர் திருத்தத்தைப்பற்றி இரண்டாவது தடவையாக பேசுவதற்கு இடமிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

கனம் உதவி சபாநாயகர் : இதற்கும் கடைசியாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதிலளித்துவிட்டார்.

திரு. செ. மாதவன் : நான் என்னுடைய கருத்தைத் திரும்பவும் வலியுறுத்துகிறேன். மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்றங்களிலே இந்த விசுவாசப் பிரமாணம் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. அதற்கு மேலே சட்டத்தை வற்புறுத்த வேண்டுமென்று அவர்கள் விரும்பினால், நான் சர்க்காருக்கு எடுத்துக்கூற விரும்புவது என்னவென்றால், ஒரு சட்டத்தின் மூலமாக நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்திவிடலாம் என்றால் . . .

22nd January 1964]

MR. DEPUTY SPEAKER : That idea has already been expressed.

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir. The hon. Member is repeating what he has already stated and that will amount to waste of time of the Legislative Assembly. . . .

SRI S. MADHAVAN : நான் என்னுடைய கருத்தைத் தெளிவாக வலியுறுத்த விரும்புகிறேன். மாநகராட்சி, நகராட்சி உறுப்பினர்களுக்கு இந்த முறை தேவையில்லை. ஆகவே இந்த சட்டத்தை மக்கள் மன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்ற என்னுடைய பிரேரேபணையை வலியுறுத்திக் கூறுகிறேன்.

The amendment of Sri S. Madhavan was put and lost.

The amendment of Sri M. Kalyanasundaram was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964, be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 7 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964, be passed.'.

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned. 1-47 p.m.

XI—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

• 78. *Note on the Resolution under section* 4 (1) *of the Madras Panchayats Act*, 1958, *regarding the Constitution of Mahabalipuram and Highways Townships.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958)].

[22nd January 1964

79. *Notification issued with G.O. Ms. No.* 2629, *Rural Development and Local Administration, dated* 13*th December* 1963, *appointing* 1*st March* 1964 *as the date on which the term of office of the Councillors of the Municipal Corporation of Madras and of every Municipal Council shall expire and* 2*nd March* 1964 *as the date on which the newly elected Councillors of Municipal Corporation of Madras and of every Municipal Council shall come into office.* [*Laid on the Table of the House under section* 6 *of the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Act,* 1963 (*Madras Act* 22 *of* 1963)].

B.—Reports, Notifications, and other papers.

* 31. *Annexure to the Motor Vehicles (Madras Amendment) Bill,* 1964.

* Circulated to Members on 20th January 1964.

LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

APPENDIX

[*Vide* Answer to starred Question No. 66 on page 8.]

Classification of the candidates selected in 1963 for the 1st year of the 5-year Integrated B.E. course from Chingleput District according to the grades of marks attained by them in Mathematics and Physics in the Pre-University Examination:—

Grade in		
Mathematics.	*Physics.*	*Number of candidates.*
H	D+	2
H	D	2
H	A+	1
D+	D+	3
D+	D	8
D+	A+	3
D+	B+	1
D	D+	3
D	D	4
D	A+	12
D	A	3
D	B	1
A+	D	4
A+	A+	2
A+	A	1
A+	B+	2
A	D	2
A	A+	2
A	B	1
B+	D	1
B+	A	1
B	A+	1
B	C+	1
	Total ..	61

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
9 MAY 1964

ஐந்து வருட பி.ஈ. பட்டப் படிப்பின முதல் வகுப்பிற்கு செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து 1963-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை, அவர்கள் பி.யூ.சி. பரீட்சையில் கணிதத்திலும் பௌதீகத்திலும் வாங்கிய மார்க்குகளின் கிரேடுகளை அனுசரித்து வகைப்படுத்திய விவரம்:—

கிரேடு.		
கணிதத்தில்.	பௌதீகத்தில்.	நபர்களின் எண்ணிக்கை.
H	D+	2
H	D	2
H	A+	1
D+	D+	3

கிரேடு.		நபர்களின்
கணிதத்தில்.	பௌதிகத்தில்.	எண்ணிக்கை.
D+	D	8
D+	A+	3
D+	B+	1
D	D+	3
D	D	4
D	A+	12
D	A	3
D	B	1
A+	D	4
A+	A+	2
A+	A	1
A+	B+	2
A	D	2
A	A+	2
A	B	1
B+	D	1
B+	A	1
B	A+	1
B	C+	1
	மொத்தம் ..	61

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, 23rd January 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : I will take up the questions relating to the Hon. Chief Minister first.

பாரதப் பிரதமரின் காந்தி கிராம விஜயம்

*72 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

1963-ல் பாரதப் பிரதமர் நேரு அவர்கள் காந்தி கிராமத்திற்கு விஜயம் செய்ததை ஒட்டி, எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ? என்னென்ன காரணங்களுக்காக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Eighty-eight members of the Praja Socialist Party who proposed to stage demonstration before the Prime Minister during his visit to Gandhigram on 1st December 1963, were arrested under section 151, Cr.P.C., as there was information that they would defy the prohibitory order in force in the area, and this might have led to counter-demonstrations by other parties, and possible breach of the peace.

திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் : தலைவர் அவர்களே, கருப்பு கொடி காட்ட வேண்டுமென்று ஆயத்தமாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் கைது செய்வதாக உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த எந்த சம்பவங்களில் யார் யார் குற்றங்கள் செய்கிறார்களோ அதற்கேற்றவாறு போலீசார் நடவடிக்கை உடனுக்குடன் எடுக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், நேரு அவர்களின் வருகையை ஒட்டி ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களை முன்கூட்டியே கைது செய்து வைக்க வேண்டும் என்பது சர்க்காரின் உத்தேசமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்சியைப் பற்றிக் கவலை இல்லை. ஒரு குறிப்பிட்ட கட்சியாக இருக்கிறார்கள் என்பதற்காக கைது செய்யவில்லை. பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் நடப்பவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

[23rd January 1964

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, the opening of the Radhakrishnan Library at Tiruttani has been postponed on account of the illness of Pandit Nehru. May I know whether he has fully recovered from his illness and when he will declare open the library?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Prime Minister's further programme has not been fixed.

திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் : நேரு விஜயத்தின் காரணமாக பிரஜா சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களை எல்லாம் கைது செய்வது என்பது தீர்மானமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் எவ்வளவு பேர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இன்றைக்கு பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அம்பலத்தில் இருக்கிறது.

Elementary school at Pudupatti

* 74 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that the children of an elementary school in Pudupatti in Madurai district were affected by food poisoning in October 1963; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

Ombudsman

* 79 Q.—SRI S. MADHAVAN : SRI RAMA ARANGANNAL : } Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to set up an organisation on the lines of the 'Ombudsman' in Scandinavian countries to check administrative excesses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

Separatist ideas in text-books.

* 80 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether any communication has been received from the Union Government regarding publication of lessons or passages preaching separatist tendencies and if so, the action taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes. The rules relating to the Text Book Committee have been suitably amended to exclude books which are likely to promote separatist tendencies or over-emphasise provincialism. The Government have also constituted a screening Committee which will weed out such books.

[a] Printed as **Appendix I on pages 109–110.**

23rd January 1964]

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் அப்படிக் குறிப்பிட்டு நம் மாநில சர்க்காருக்கு எழுதினார்களா? எந்த புத்தகத்தில், எந்த பாகத்தில் அல்லது பகுதியில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விவரங்கள் சொல்வதற்கில்லை. என்னிடம் இல்லை. ஏதோ ஒரு நூல் கவனத்திற்கு வந்தது; 'நமது குறிக்கோள்' என்பது புத்தகத்தின் பெயர். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதிலே மத்திய சர்க்கார் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த அரசாங்கமே தானாகவே நடவடிக்கை எடுக்கிறது. எந்த புத்தகமாவது ஆட்சேபகரமாக கருதப்பட்டால் அதை இந்த அரசாங்கமே கவனித்து வருகிறது. யாரோ பத்திரிகைக்காரர் எடுத்துக் காட்டி கண்ணைத் திறந்து விட்டார்கள் என்பதில்லை. அப்படி சொல்வது தவறு. எவ்வளவு கவனமாக இருந்தாலும் யாருக்கும் தவறுதல் ஏற்படும். இப்பொழுது அம்மாதிரிப் பரிசீலனை இந்த அரசாங்கத்தால் நடத்தப் படுகிறது. அதோடுகூட இப்பொழுது ஸ்க்ரீனிங் கமிட்டியும் போட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே தமிழ் நாடு தமிழ் நாகரிகம், தமிழ் வாணிபம், தமிழ் இசை என்று கூறிக்கொள்ளும் ஒரு இனத்தின் பெருமையைக்கூட அடக்க வேண்டும். அதற்கும் தடை விதிக்க வேண்டும் என்பது கருத்தா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் இல்லை. எதையும் 'ஓவர் எம்பஸிஸ்' பண்ணுவது கூடாது. அவ்வளவுதான்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, தமிழ் இலக்கியத்திலே, இமய வரம்பன், கரிகால் சோழன், சேரன் செங்குட்டுவன் இவர்கள் வட நாட்டின் பேரில் படை எடுத்துச் சென்றதும், செங்குட்டுவன் வடநாட்டு மன்னன் கனக விசயன் தலையில் வைத்து கல் ஏற்றி வந்தான் என்பதும் வரலாறு; இவை வடநாட்டினருக்கு பெருமையாக இருக்கவில்லை என்பதற்காக இந்த வரலாறுகள் தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அத்தகைய பழைய பெருமையையே பேசிக்கொண்டு இருந்தால் மட்டும் போதாது. வரலாறுகளில் தவிர்க்க வேண்டும் என்பவற்றை தவிர்க்கத்தான் வேண்டும். வரலாறுகளை எழுதலாம், ஆனால் அவை பிரிவினையை வளர்க்கும் வகையில் இருந்தால் அனுமதிக்கப்படமாட்டாது.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, மாநில உரிமையை வலியுறுத்தும் கொள்கைகள் புத்தகத்திலிருந்து எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார். சில விஷயங்களுக்கு மாநிலங்களுக்கு தனி உரிமை வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். இரண்டும் ஒன்றிற்கொன்று முரணாக இருக்காதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாநில உரிமை ஒன்று; மாநில உணர்ச்சி ஒன்று. உணர்ச்சி இருக்கலாம் ஓரளவுக்கு. ஆனால், அகில இந்திய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக அமைவதானால், அப்பொழுது அது தடை செய்யப்படவேண்டும்.

[23rd January 1964

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: தலைவர் அவர்களே, சில சந்தர்ப்பங்களில் சரித்திரத்தை மறைக்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்கள்; அப்படி சரித்திரத்தை மறைப்பது சரியா, மறைக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சரித்திரத்தை மறைக்க வேண்டும் என்று ஒருக்காலும் நான் சொல்லவில்லை. ஆனால் சந்தர்ப்பங்களை விமரிசனம் செய்யும்போது, சரித்திரம் எப்படி இருந்தாலும் பிரிவினை உணர்ச்சியை மாணவர்கள் மனதில் ஊட்டும் பகுதிகளை தவிர்க்க வேண்டுமானால், தவிர்க்க வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன்: வரலாறுகளிலே சில தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் கூறிய வரலாறுகளை எடுத்துக்கூறும் நூல்களெல்லாம் தமிழ் இலக்கியங்கள். அந்த இலக்கியங்களைப் படிக்கும் நோக்கில் அந்த நிகழ்ச்சிகளைக் கூறத் தான் வேண்டியிருக்கும். அந்த வரலாறுகளை மறுக்க வேண்டும், கைவிட வேண்டும் என்று சொன்னால், இலக்கியங்களைக் கைவிட வேண்டும் என்று தமிழக அரசு கருதுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இலக்கியம் வேறு; சரித்திரம் வேறு. மாணவர்களுக்கு எந்தக் கருத்தைப் புகுத்துவது என்பது தான் இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம். ஏதோ வட நாட்டானை அடிமைப்படுத்தி ஒரு கல்லை எடுத்துத் தலையிலே வைத்துக் கொண்டுவந்து காட்டினான் என்பதை இப்பொழுது வற்புறுத்துவது சரியல்ல. அதே மாதிரி, ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வது சம்பந்தமாகச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் இடையே சண்டை மூண்டது என்றும் சரித்திர வரலாறு இருக்கலாம். அப்படிப்பட்டவைகளையெல்லாம் இலக்கியம் படித்த கனம் அங்கத்தினர் போன்றவர்கள் உணர்ந்திருக்கலாம். அதையெல்லாம் மாணவர்களுக்கு வற்புறுத்தக்கூடாது.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, 'திராவிடம்', 'திராவிட நாடு' என்ற சொற்களைப் பள்ளிப் புத்தகங்களில் சேர்க்கக் கூடாது என்று அரசாங்கம் தடையிட எண்ணம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படியொன்றும் அரசாங்கம் உத்தரவிடவில்லை. நான் முன்பே கூறியது போல, நம்முடைய நாட்டுக்கு மொத்தத்திலே திராவிடம் என்ற பெயர் இருக்கிறது. 'திராவிடம்' என்பது ஒன்று. 'திராவிட நாடு' என்பது வேறு. திராவிட நாடு என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினருடைய திட்டம். அதை இன்னும் கைவிடவில்லை என்று அந்தக் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். அதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, 'திராவிடம்' என்பதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பொருள் கொள்ளுகிறார் என்று அறியலாமா?

23rd January 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் என்ன என்ன பொருள் வேண்டுமோ அவ்வாறு வைத்துக்கொள்ளலாம். இதற்கு விளக்கம் வேண்டியதில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, 'திராவிடநாடு வேறு' "திராவிடம் வேறு" என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திராவிடம் என்பதற்கு அவரவர் இஷ்டப்படி பொருள் கொள்ளட்டும் என்றார்கள். அமைச்சர் அவர்கள் திராவிடம் என்பதற்கு என்ன பொருள் கொள்ளுகிறார் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திராவிடநாடு என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியம்—பிரிவினை மனப் பான்மையை வற்புறுத்துவது. ஆகையால், 'திராவிடநாடு' என்ற வார்த்தையை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். 'திராவிடம்' என்கிற சொல் நம் தேசீய கீதத்திலே வந்திருக்கிறது. அது தென் பகுதியைப் பொதுவாகக் குறிக்கிறது. 'சிந்து' என்றும் அந்தக் கீதத்தில் கவிஞர் பாடியிருக்கிறார். இப்பொழுது அந்த 'சிந்து' இல்லை. இருந்தாலும் அதை அப்படியே வைத்துக்கொள்ளு கிறோம் என்று சொன்னேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : திராவிடம் என்ற வார்த்தை யைச் சில பெரியவர்கள் ஆராய்ந்து, 'திரு இடம்' என்று இருந்தது, 'திராவிடம்' என்று மாறிவிட்டதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அதெல்லாம் படித்திருக்கிறார்கள். நான் அதைப் படிக்கவில்லை. ஆனால், 'திராவிடம்' என்றால் பொதுவாக 'தமிழ்' என்று எடுத்துக் கொள்ளுகிறார்கள். தெலுங்கைச் சேர்த்துக்கொண்டால் அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

கனம் சபாநாயகர் : 'விடம்' என்ற சொல்லுக்கு 'விஷம்' என்ற பொருளும் உண்டு. இப்படியெல்லாம் ஆராய்ச்சி செய்தால் 'திருவிஷம்' என்றெல்லாம் வந்துவிடுமே !

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாங்கள் கூறியபடி, 'விடம்' என்பதற்கு 'விஷம்' என்று பொருள்கொண்டு, 'தீராவிடம்' என்று கூட வைத்துக்கொள்ளலாம்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, 'நாகநாடு' என்று ஒரு மாநிலம் நம்முடைய துணைக் கண்டத்தில் இருக்கிறது. 'நாக நாடு' என்கிறபோது பிரிவினையைக் குறிப்பிடாமலிருக்கும்போது, 'திராவிடநாடு' என்பது மட்டும் எப்படிப் பிரிவினையைக் குறிப்பிடு வதாக ஆகும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 'தமிழ்நாடு' என்று சொல்வது போல, 'நாகாலாண்டு' என்று இருக்கிறது. நம்முடைய மாநிலத் திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்திருக்கிறோம். தமிழ்நாடு என்று சொல்வதுபோல்தான் நாகாலாண்டு அல்லது நாகநாடு என்று இருக்கிறது.

காவிரிப் பாலம்

* 71 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாகக் கட்டித் திறக்கப் பட்ட பாலத்தின் எஸ்டிமேட் எவ்வளவு ?

(இ) மேற்படி பாலத்தின் அடித்தளத்தை காண்ட்ராக்டரும் மேல் தளத்தை டிபார்ட்மெண்டும் கட்டியதற்கு காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The cost of bridge work including approach roads and railway overbridges is estimated as Rs. 86 lakhs.

(b) The whole work (both substructure and superstructure) was entrusted to the Contractor originally. However, after completion of substructure work, as the contractor suspended the superstructure work, and did not resume it, his contract was terminated and the work was executed departmentally.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் காண்டிராக்ட் வேலை நடந்துகொண்டிருக்கும்போது பல ஆயிரக்கணக்கான சிமெண்டு மூட்டைகளைக் கள்ள மார்க்கெட்டில் அந்தக் கண்டிராக்டர் விற்றார் என்பதற்காக, இந்த வேலை அவரிடமிருந்து மாற்றப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபோன்ற புகார் ஒன்றும் என்னிடம் இல்லை. ஆனால், அந்தக் காண்டிராக்டர் காலா காலத்தில் பெரிய பாலத்தைக் கட்ட முடியாது என்ற சூழ்நிலையை அதிகாரிகள் பார்த்ததற்குப் பிறகு அந்தக் காண்டிராக்டை ரத்து செய்துவிட்டு, விரைவாகப் பூர்த்தி செய்திருப்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பெரும்பாலான காண்டிராக்டுகளில் அடித்தளத்தைக் காண்டிராக்டர்கள் செய்கிறார்கள். மேல் தளத்தை டிபார்ட்மென்ட் செய்கிறது. இப்படி மாறுதல் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபோன்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. அ. துரையரசன் : தலைவர் அவர்களே, அறந்தாங்கிக்குப் பக்கத்தில் காரைக்குடி ரோடில் புதிதாகக் கட்டப்படுகிற பாலத்தில் 135 மூட்டை சிமின்ட்டை கடந்த சித்திரை 1-ந் தேதியன்று நானே முன்நின்று பிடித்துத் தந்தேன். அது சம்பந்தமாக அரசு இது வரைக்கும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னுடைய கவனத்திற்கு கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினால் பார்த்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கலாம்.

23rd January 1964]

புலவர் கா. கோவிந்தன் : வேலைகளுக்காக காண்டிராக்ட் விடுகிற நேரத்தில் அவர்களுக்கு சிமெண்ட் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது. குறிப்பிட்ட வேலைக்குத் தேவையான சிமெண்ட்டுக்கு மேற்பட்டு, இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக எஸ்டிமேட் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட கண்டிராக்டர்கள் கள்ளமார்க்கெட்டில் சிமெண்ட் விற்கத் துணிகிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து, கண்டிராக்டர்கள் கொடுக்கும் எஸ்டிமேட்டைவிடக் குறைத்து சிமெண்டு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இது காவிரியாற்றுக்குக் கட்டப்பட்ட பாலம் சம்பந்தப்பட்ட கேள்வி. ஆனால், கனம் அங்கத்தினர் அவருடைய கருத்தை இந்த சட்டசபையில் சொல்லத் தொடங்கியிருக்கிறார். இங்கு சொல்வதோடு நில்லாமல் இந்த நல்ல கருத்தை எழுதியனுப்பும் பட்சத்தில் அதை நான் பரிசீலனை செய்யத் தயாராயிருக்கிறேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, காண்டிராக்டை ரத்து செய்த காரணத்தால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டதா ? எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது ? அந்தக் காண்டிராக்டர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : எவ்வளவு நஷ்டம் அல்லது எவ்வளவு லாபம் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், நான் தெரிந்துகொண்ட வரையில், அந்தக் காண்டிராக்டை ரத்து செய்த காரணத்தால் துரிதமாக அந்தப் பால வேலை பூர்த்தியானது. நஷ்டம் அதிகமாக இருக்காது என்று நினைக்கிறேன். அப்படியிருந்தாலும் காண்டிராக்டரிடமிருந்து அரசாங்கம் வாங்க முயற்சி எடுக்கும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திலுள்ள சட்டதிட்டப்படி, அப்படி ஒரு காண்டிராக்டை இடையிலே ரத்து செய்தால் அந்த காண்டிராக்டர் மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா ?

கனம் திரு. வெ. ராமையா : இதெல்லாம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது விவரம் என்னிடம் இல்லாததால் உடனே பதில் சொல்வதற்கில்லை.

சிறிய சர்க்கரை ஆலைகள்

* 73 கேள்வி.—திரு. ம. கமலநாதன்
திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறிய அளவில் சர்க்கரை உற்பத்தி செய்ய தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் யாருக்கேனும் வழங்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், யார் யாருக்கு ?

(உ) சிறிய தொழிற்சாலை ஆரம்பிக்க எத்தகைய கட்டுப்பாடுகளின்கீழ் அனுமதி வழங்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) நாள் ஒன்றுக்கு 50 டன் கரும்பு அரைக்கக்கூடிய சிறிய சர்க்கரை ஆலை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. அதை ஏற்படுத்த தனியார் முன்வந்தால், எல்லா வசதிகளும் சர்க்கார் அளிக்கும்.

திரு. ம. கமலநாதன் : சிறு தொழிற்சாலை ஆரம்பிக்க கட்டுப்பாடுகள் இல்லை என்றாலும் அது எந்த அளவுக்கு வியாபார அடிப்படையில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை விளக்கமாகச் சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காக ஒரு அறிக்கை தான் கையில் வைத்திருக்கிறேன். யார் சிறிய சர்க்கரை ஆலை வைக்கவேண்டுமென்று விரும்பினாலும், என்னை வந்து பார்த்தால் அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்டு போகலாம். அந்த அறிக்கையில் எல்லா விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதமான தொழிற்சாலை ஒன்று இப்பொழுது கூட கோவையிலே நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதையும் போய்ப் பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் தேவைப்பட்டவர்களுக்குச் செய்து கொடுக்கிறேன்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : அம்மாதிரி தொழிற்சாலை ஆரம்பித்து நடத்த எவ்வளவு பணம் தேவைப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சற்றேறக்குறைய மூன்று அல்லது நான்கு லட்சம் ரூபாய் இருந்தால் போதும். 100 ஏக்கரா நிலம் இருந்தால் போதும்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இது சம்பந்தமான விவரம் இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்டில் கோரியதற்கு அவர்கள் கண்டசாரி சர்க்கரை உற்பத்தி செய்வதைப்பற்றிய விவரம் மட்டும் அனுப்புகிறார்கள். ஆகையால், இந்தத் தொழிலுக்கான விவரங்கள் அந்த டிபார்ட்மென்டிலிருந்து பொதுமக்களுக்குக் கிடைக்க வேறு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கண்டசாரி என்று சொன்னாலும், அதுவும் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரியில்தான் வரும். கண்டசாரி என்றால் அது வேறு சர்க்கரை என்று நினைப்பது தவறு. கண்டசாரி சர்க்கரையும் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ரியில் தான் வருகிறது. அங்கு open pan- -இலே சிறிய வகையில் செய்கிறோம். பெரிய சர்க்கரை ஆலைகளில் Vacuum Pan இலே செய்கிறோம். சர்க்கரையைப் பொருத்தவரையில் இரண்டும் ஒன்று தான். சர்க்கரையைப் பார்த்தாலும் வித்தியாசம் தெரியாது. சாப்பிட்டாலும் வித்தியாசம் தெரியாது.

23rd January 1964]

SRI C. CHIRANJEEVULU NAIDU : It there any difference in the price of Kandasari sugar and the sugar that is produced by the Sugar Mills?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, there is no difference in price.

State Industrial Consultant.

* 75 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is a proposal to appoint an Industrial Consultant for the State ; and

(*b*) the nature of work to be done by him and the necessity for such an appointment?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) This Government have already appointed an Industrial Adviser.

(*b*) His functions are generally to advise the Government on industrial problems, assist in the preparation of project reports on select industries and help prospective industrialists with advice on technical matters.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் மாவட்டந் தோறும் தொழில்களைப் பெருக்க வேண்டுமென்று இந்தக் குழுக்களை அமைக்கின்றதே, அந்தக் குழுக்கள் அரசாங்கத்திற்கு ஏதாவது அறிக்கை அனுப்பியிருக்கின்றனவா ? அதன்பேரில் அரசாங்கம் எடுத்திருக்கும்படியான நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் அறிக்கை அனுப்ப மாட்டார்கள். அந்தப் பகுதியில் உள்ள எல்லோரும் சேர்ந்து ஆலோசித்து அந்தப் பகுதியில் என்ன என்ன தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டம் வகுப்பார்கள். அதற்கான உதவியை அரசாங்கம் அவர்களுக்கு அளிக்கும். உதாரணமாக ராமநாதபுரத்தில் நடந்த செமினாரில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த மாவட்டத்தில் காரைக்குடி இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் என்ன என்ன யூனிட்டுகள் வைக்கப்பட வேண்டும் என்று வரையறுத்தார்கள். அங்கே எவ்வளவு யூனிட்டுகள் இருக்கின்றனவோ அதற்கு அதிகமான மனுக்கள் இப்போது வந்திருக்கின்றன.

திரு. செ. மாதவன் : காரைக்குடி பகுதியில் இருந்து ஸ்மால் டூல்ஸ் ப்ளான்ட் ஏற்படுத்தவேண்டுமென்று கோரிக்கை அனுப்பப்பட்டதே. அதன்மீது என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யார் எந்தத் தொழில் வைப்பதாகச் சொன்னாலும் அதற்கு அரசாங்கம் உதவி அளிக்கிறது.

[23rd January 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அவர்கள் யோசனை மட்டும் சொல்வார்களா ? அந்த யோசனையை அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a hypothetical question.

அரிசன மாணவர்களுக்கு இலவச உடை

* 76 **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் அரிசனநல பள்ளிகளில் படிக்கும் பெண் குழந்தைகளுக்கு இலவசமாக துணிகள் கொடுப்பது போல ஆண் குழந்தைகளுக்கும் துணிகள் கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No. உத்தேசமில்லை.

திரு. செ. மாதவன் : ஹரிஜன மாணவர்களுக்குப் பொதுவாக உடை வழங்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் ஏதாவது யோசனை தெரிவித்தார்களா ? அதுசம்பந்தமாக மத்திய சர்க்கார் உதவி ஏதேனும் நமது அரசாங்கத்திற்குக் கிடைக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த திட்டம் மத்திய சர்க்காரின் நிதி உதவியைக் கொண்டுதான் நடைபெறுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜன மாணவிகளைவிட ஹரிஜன மாணவர்கள் முன்னேறிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களும் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள். மேலும் பெண்களைவிட ஆண்களுக்கு உடைச் செலவு குறைவாகத்தான் இருக்கும். ஆகவே ஆண் மாணவர்களுக்கும் கூட ஏன் உடை கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : முன்பு மாணவனாக இருந்தாலும், மாணவியாக இருந்தாலும் இரண்டுபேருக்கும் 12 ரூபாய்க்குள் இரண்டு செட் உடை வழங்குவது என்றுதான் இருந்தது. தேசிய நெருக்கடி காரணமாக இப்போது மாணவர்களுக்கு உடை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஆகக்கூடிய செலவில் மத்திய சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது ? நமது மாநில சர்க்கார் எவ்வளவு செலவு செய்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : 12-9-1960-இல் ஹரிஜன இலாகா டைரக்டர் கேட்ட தொகை 2.97 லட்சம். அப்படியே செலவு செய்திருக்கிறார்கள். 1961-இல் 3 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் செலவு அதிகமாக ஆகியிருக்கிறது. ஹரிஜனப் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவிகள் மட்டும் இல்லை, மற்ற சாதி ஏழை மாணவிகளுக்கும் உடை வழங்கப்பட்டால் எழுபதாயிரத்து

23rd January 1964]

இருநூறு ரூபாய் கூடுதலாகச் செலவு செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் க்ராண்ட்-இன்-எய்ட் திட்டப்படி நடக்கிறது. மத்திய சர்க்காரும் உதவி செய்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : ஆண் மாணவர்களுக்கு உடை கொடுப்பது போல பெண்களுக்கும் கொடுக்கவேண்டும் என்ற இன்றியமையை சர்க்கார் உணர்வதினாலே தேசிய நெருக்கடி தீர்ந்த பிற்பாடு கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்போது அதுபற்றி பரிசிலனை செய்யப் படும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, திரு. மாதவன் அவர்கள் கேட்ட கேள்வி, இந்தத் திட்டத்தில் மத்திய சர்க்காரின் பங்கு எவ்வளவு, மாநில சர்க்காரின் பங்கு எவ்வளவு என்பதாகும். அதற்கு கனம் அமைச்சர் பதில் சொல்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கிராண்ட்-இன்-எய்ட் ஸ்கீம் என்றால் மத்திய சர்க்கார் பங்கு 50 சத விகிதம். மாநில சர்க்கார் பங்கு **50 சத விகிதம்.**

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஹரிஜனப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் இந்தச் சலுகை கிடைக்கிறது. மற்ற பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவிகளுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதர பாடசாலையில் படிக்கிற குழந்தை களுக்கு கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

தீ அணைப்பு நிலையங்கள்

*** 77 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள மேஜர் பஞ்சாயத்து நகரங்களில் தீ அணைக்கும் நிலையங்கள் திறப்பதற்கு உத்தேச முண்டா ?

(இ) அப்படியானால், எந்தெந்த நகரங்களில் அந்நிலையங்கள் திறக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயவரம், கும்பகோணம், திருவாரூர், தஞ்சாவூர், மன்னார்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ஏற்கனவே ஆறு தீயணைப்புப் படை நிலையங்கள் உள்ளன. வேறு எந்தெந்த இடங்களில் தீயணைப்புப் படை நிலையங்களை நிறுவவேண்டும் என்று அர சாங்கம் பட்டியல் தயார் செய்துள்ளதோ அந்த இடங்களில்

எல்லாம் தீயணைப்புப் படை நிலையங்களை வரிசைக் கிரமப்படி நிறுவிய பின்னரே தஞ்சாவூர் மாவட்டத்தில் மற்ற இடங்களில் தீயணைப்புப் படை நிலையங்களை நிறுவும் விஷயத்தை யோசிக்க முடியும்.

(*a*) & (*b*) There are already six Fire Stations in Thanjavur district, located one each at Mayuram, Kumbakonam, Tiruvarur, Thanjavur, Mannargudi and Nagapattinam. The question of establishing Fire Stations in other places in Thanjavur district can be considered only after Fire Stations have been established in all those places which have already been included in the list drawn up by Government in the order of priority.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை : தஞ்சையில் இருந்து அறந்தாங்கி போவதாக இருந்தாலும் 70 மைல் ஆகிறது. அதற்குள் தீ அவிந்துகூட போகும். ஆகவே பட்டுக்கோட்டையில் ஒரு தீ அணைக்கும் படையை நிறுவ முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே ஒரு லிஸ்டு தயாரித்திருக்கிறார்கள். அதில் உள்ள ஊர்களில் ஏற்படுத்திய பிற்பாடு மற்ற இடங்களில் ஏற்படுத்துவது பற்றி யோசிக்கப்படும்.

திரு. மூ. சணமுகம் : தீ அணைக்கும் படையை ஓரிடத்தில் நிறுவினால் ஆண்டுதோறும் ஆகும் செலவு என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : அந்தப் பட்டியலில் திருத்துறைப் பூண்டி இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : இந்தத் தீ அணைக்கும் படையினரை தாலுக்கா தலைநகரம்தோறும் அமைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஜனநெருக்கமுள்ள நகரங்களில் உடனடியாக அமைப்பது திட்டம். இங்கிருந்து தாலுக்கா தலைநகரங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : கிராமங்களில் தீ விபத்து ஏற்பட்டால் நகரத்தில் இருந்து வருவதற்குள் கிராமமே அழிந்துவிடுகிறது. இதைத் தடுக்க அந்த அந்த தாலுக்கா தலைநகரங்களில் ஏன் ஏற்படுத்தக் கூடாது?

கனம் திரு. பூ. கக்கன் : நகரங்களில் ஏற்படுத்தினாலும் கூட அங்கிருந்து கிராமங்களில் தீ விபத்து ஏற்படுகிறபோது சென்று தீயை அணைக்கிறார்கள். நான் முதலில் சொன்னபடி இந்த லிஸ்டில் கண்ட ஊர்களில் முதலில் ஏற்படுத்திவிட்டு பின்னர் மற்ற இடங்கள் பரிசீலனை செய்யப்படும்.

23rd January 1964]

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : நகரங்களைவிட கிராமங்களில் அடிக்கடி தீ விபத்து இருக்கிற காரணத்தால் தாலுக்கா தலைநகரங்களில் தீயணைக்கும் படையை ஏற்படுத்த முன் வருவார்களா ? 9-30 a.m.

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் நகரங்களைக் கவனித்து விட்டுத் தான் பிறகு கிராமங்களைக் கவனிக்க முடியும். கிராமங்களில் தீ விபத்து ஏற்பட்டாலும் நகரங்களில் இருந்து தீயணைக்கும் படை அனுப்பப்படுகிறது.

திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பட்டியல் ஒன்று இருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பட்டியல் எல்லா அங்கத்தினர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் சபை முன் வைக்கப்படுமா ? அந்தப் பட்டியலில் திண்டிவனம் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தப் பட்டியலில் திண்டிவனம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. தங்கவேலு : இந்தப் பட்டியல் அடிக்கடி மாற்றப் படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அடிக்கடி மாற்றப்படுவதில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : ராஜபாளையம் சுமார் 80,000 ஜனத்தொகை கொண்ட ஊர். அங்கு ஃபயர் ஸ்டேஷன் வைக்கும் விஷயமாக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டிடம் கட்டப்படாமல் மூன்று வருஷ காலமாக அப்படியே இருக்கிறது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. தண்டாயுதபாணி பிள்ளை : தஞ்சை ஜில்லாவில் இதுவரைக்கும் அமைக்கப்பட்டுள்ள தீயணைக்கும் படை நிலையங்களைத் தவிர வேறு புதிதாக ஏதாவது முனிசிபல் நகரங்கள் தீயணைக்கும் படை வைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கத்தின் பட்டியலில் எந்தெந்த ஊர்கள் இருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட்டால் பட்டியல் சபை முன் வைக்கப்படும்.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : சில நகரங்களுக்கு ஃபயர் ஸ்டேஷன் கொடுக்கப்பட்டு, மாதத்திற்கு இவ்வளவு ஆக்சிடெண்ட் இல்லை என்று சொன்னால் எடுக்கப்பட்டு விடுவதாகச் சொல்லப் படுகிறது. அப்படி எடுக்கப்பட்ட இடங்கள் என்னென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

[23rd January 1964

திரு. ஆ. துரையரசன் : அறந்தாங்கி வட்டத்தில் சுமார் 600 கிராமங்கள் இருக்கின்றன. 1½ லட்சத்திற்கு மேற்பட்டு வாழ்கிற அந்தக் கிராமங்களில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. அண்மையில்கூட ஆதித் திராவிட மக்கள் குடியிருக்கும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு சர்க்கார் மதிப்புப்படி 20,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு மேஜர் பஞ்சாயத்துக்கும் ஒரு தீயணைக்கும் படையை அமைக்க முன் வருவார்களா ?

கனம் சபாநாயகர் : தாலுக்கா தலைநகருக்கே தீயணைக்கும் படை இப்போது அமைக்க முடியாது என்று சொல்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தீயணைக்கும் படை கேட்கிறார்களே !

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளில் என்று மட்டுமல்லாது எங்கு தீ பிடித்தாலும் அதை அணைப்பதற்குத் தீயணைக்கும்படைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால், தற்போது நகரங்களில் மட்டுந்தான் அவை அமைக்கப்படுகின்றன.

திரு. து. ப. அழகமுத்து : தீயணைக்கும் படை இல்லாத முனிசிபாலிடிகள் இன்னும் எத்தனை இருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. அ. ராகவ ரெட்டி : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு தீயணைக்கும் படை ஏற்படுத்தப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியன்களில் தொண்டர் படை இருக்கிறது. அவர்களைத் தீயணைப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. ஏ. ஆறுமுகம் : பட்டியலில் வட ஆற்காடு ஜில்லாவில் ஏதேனும் இடங்கள் இடம் பெற்றிருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : வட ஆற்காடு ஜில்லாவிலும் சில நகரங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை வீட்டு வசதி யூனிட் அலுவலகத்தில் தீ விபத்து

* 78 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை வீட்டு வசதி யூனிட் அலுவலகத்தில் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், பொருட் சேதம் எவ்வளவு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1963 நவம்பரில் மாநில வீட்டு வசதி போர்டு அலுவலகத்தில் ஒரு தீவிபத்து ஏற்பட்டது ; போர்டைச் சேர்ந்த சென்னை வீட்டு வசதி யூனிட்டின் அலுவலகத்தில் அல்ல.

23rd January 1964]

(இ) மொத்த நஷ்டம் ரூ 15,000 என்று மதிப்பிடப்படுகிறது. இதில் சுமார் ரூ. 10,000 இன்ஷூரன்ஸ் கம்பனியிலிருந்து கிடைத்து விடும் என்று தெரிகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : அங்கு முக்கியமான தாஸ்தாவேஜுகள் எவையேனும் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில டாக்குமெண்ட்ஸ் எரிந்து போய்விட்டன. அதிர்ஷ்டவசமாக அவற்றுக்கு 'காபிஸ்' இருக்கின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : அந்தத் தீ விபத்துக்கு என்ன காரணம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கண்டுபிடிக்க முடியவில்லை.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : ஒரு முக்கியமான ஆபீசில் தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்னவென்று கண்டு பிடிக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது நியாயமா ? இனியாவது காரணம் கண்டு பிடிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'நியாயமா, அநியாயமா' என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. எல்லாக் குற்றங்களுக்கும், எல்லாத் தவறுகளுக்கும் காரணங்கள் கண்டு பிடிக்க முடிவதில்லை.

கனம் சபாநாயகர் : வேண்டுமென்றே 'காரணம் கண்டு பிடிக்க முடியவில்லை' என்று சொல்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா ?

திரு. மீ. கலியாணசுந்தரம் : யார் தீ வைத்தார்கள் என்று கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் தீ வைத்ததன் நோக்கம் அங்கிருக்கிற தாஸ்தாவேஜுகளை அழிக்கிற நோக்கத்தோடுதான் என்று சர்க்கார் அறியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி இல்லை என்று சர்க்காருக்குத் தெரிகிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[**NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member**]

II.—GOVERNMENT RESOLUTIONS.

(1) REGULATION OF STORAGE OF CERTAIN COMMODITIES IN WAREHOUSES BY AN ACT OF PARLIAMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on **behalf of the** Hon. Minister for Food, I move the following resolution :—

WHEREAS the Central Warehousing Corporation and the State Warehousing Corporation established under the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962), are empowered to run warehouses for the storage of agricultural produce, seeds,

manures, fertilizers, agricultural implements and any notified commodity, being commodities with respect to which Parliament has power to make laws by virtue of Entry 33 of List III (Concurrent List) in the Seventh Schedule to the Constitution of India.

And whereas it appears to this Assembly to be desirable that legislation should be undertaken to enable the said Corporations to store in their warehouses other commodities also in addition to those mentioned in the aforesaid Central Act;

AND WHEREAS, legislation for the purpose mentioned above is relatable to matters enumerated in Entry 26 and Entry 27 of List II (State list) of the Seventh Schedule to the Constitution of India with respect to which Parliament has no power to make a law for the States except as provided in Articles 249 and 250 thereof.

AND WHEREAS, it appears to this Assembly to be desirable that such legislation should be undertaken by Parliament;

NOW, THEREFORE, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India, this Assembly hereby resolves that storage of commodities other than those covered by the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962), in the warehouses run by the Corporations established under that Act shall, in this State, be regulated by an Act of Parliament.

கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டப்படி என்னென்னவற்றை 'வேர்ஹவுசிங்' கில் சேமித்து வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு விதிகள் இருக்கின்றன. முக்கியமாக விவசாயப் பொருள்கள், அதாவது விதைகள், உரம் விவசாயக் கருவிகள் போன்றவைதான் இப்போது அந்த இடத்தில் சேமித்து வைக்கப்படுகின்றன. பொதுமக்களிடத்திலிருந்தும் அங்கு இருக்கிற கிராம நிலங்களிலிருந்தும் இதர பண்டங்களை வேர் ஹவுசிங் கார்ப்பரேஷனில் சேமித்து வைக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு அனுமதி இருக்க வேண்டும். வேறு 'கோடவுன்'-கள் கிடைக்கவில்லை. ஆகவே வேர்ஹவுசிங் கார்ப்பரேஷனில் சேமித்து வைக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கோரிக்கைகள் அடிக்கடி வந்தன.

புகையிலை, 'உல்' போன்ற சில பொருள்களையும் அங்கு சேமித்து வைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். அந்தப் பண்டங்களைப் பற்றிய சட்டம் செய்வதற்கு ராஜ்ய சர்க்காருக்குத் தான் அனுமதி உண்டு. மத்திய சர்க்காருக்கு அனுமதியில்லை. ராஜ்ய அரசாங்கம் இந்த அனுமதியை மத்திய அரசாங்கத்திற்கு கொடுத்தால் அந்தவிதமான சட்டத்தை நிறைவேற்ற முடியும். இந்தப் பண்டங்களை சேமித்து வைப்பது நல்லது என்பதால் ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இந்த அனுமதியைக் கொடுக்க வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் இப்போது பேசவில்லை. அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொண்டு பேச விரும்புகிறேன். ஆர்டிகிள் 252 (1)-ன் கீழ்

23rd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இத்தீர்மானம் வருகிறது. அப்படி என்றால் பல ராஜ்யங்கள் சேர்ந்து அந்தமாதிரி கோரிக்கை வந்திருக்க வேண்டும். ஒரு ராஜ்யத்திற்குள் மட்டும் சேமித்து வைக்கும் பொருள்கள் பற்றியது அல்ல இது. மற்ற ராஜ்யங்களோடு சேர்ந்து வைக்க வேண்டும். ஆகவே மத்திய சர்க்காரிலிருந்து என்ன வந்திருக்கிறது? எதன் மீது இத்தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக எல்லா ராஜ்யங்களிலும் இந்த வேர்ஹவுஸிங் கார்ப்பரேஷனில் இதரப் பண்டங்களைச் சேர்த்து வைத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கு அது நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கும் என்ற கருத்து பல ராஜ்யங்களில் இருந்தும் மத்திய சர்க்காருக்குச் சொல்லப்பட்டது. அதையொட்டித்தான் மத்திய சர்க்கார் இந்த அதிகாரத்தைக் கோரியிருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இத்தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். இத்தகைய ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதால் விவசாயப் பொருள்கள், விவசாயக் கருவிகள் நியாயமான விலைக்குக் கிடைப்பதற்கும், மற்ற பொருள்களும் நியாயமான விலைக்குக் கிடைப்பதற்கும், இதுபோன்ற பொருள்களை சேமித்து வைத்திருந்து தக்க சமயம் பார்த்து நல்ல விலையில் விற்பதற்கும் இது உதவியாக இருக்கும் என்ற காரணத்தினால் இத்தீர்மானத்தில் இன்னும் மற்ற பொருள்களையும் சேர்க்கக்கூடிய அளவிற்கு சேர்ப்பதை நான் வரவேற்கிறேன். இதில் இன்னின்ன பொருள்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் கொஞ்சம் கூட உபயோகம் உள்ளதாக இருக்கும். இச்சந்தர்ப்பத்தில் நான் இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வேர்ஹவுஸிங் கார்ப்பரேஷனில் வசூலிக்கும் கட்டணங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகமாக இருக்கிறது. ஒரு குவின்டாலுக்கு 16 நயா பைசா என்று தனிப்பட்டவர்களிடம் இருந்து வசூல் செய்வதை விட இவர்களுக்கு ஓரளவு ரிபேட் கொடுத்தாலும் போதுமானதாக இல்லை. மலிவான விலையில் பொருள்கள் விற்கப்படவேண்டுமென்ற நோக்கத்தோடு கூட்டுறவு சொஸைட்டிகள் பண்டங்களைக் கொள்முதல் செய்து வைத்திருந்து தக்க சமயத்தில் விற்க வைத்திருக்கிறது. அப்படி அரிசி போன்றவற்றைக் கொள்முதல் செய்து வைக்கிறார்கள். நியாய விலைக் கடைகள் மூலம் விற்க வைத்திருக்கக்கூடிய அரிசிக்காகக் கூட இதுமாதிரி விகிதாசாரத்தில் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால் மற்றவர்களிடமிருந்து வசூல் செய்வதைவிட கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு தனிச் சலுகை கொடுத்து கட்டணம் பாதி அளவிற்காவது குறைத்து வசூலிக்கப்பட்டால்தான் கூட்டுறவு இயக்கங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு இத்தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

[23rd January 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, கட்டணம் வசூலிப்பது, அந்தந்த வேர்ஹவுஸிங் செய்வதற்கு எவ்வளவு செலவாயிற்று என்று பார்த்து அதிலிருந்து எவ்வளவு நாம் வட்டிக்கும் முதலுக்கும் பெற முடியும் என்று கணக்குப் போட்டு அதற்கு ஒரு சப்சிடி கொடுத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இதை விட இன்னும் குறைவாக குறைக்க முடியுமா என்று இப்போது சொல்வதற்கில்லை. அது சந்தேகமான விஷயம். இருந்தாலும் வசதி வேண்டியது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. வி. சீராமுலு : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வேர்ஹவுஸிங் கார்ப்போரேஷன் என்பது ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு அல்லது மூன்றுக்கு மேல் இல்லை. அந்தக் கார்ப்பரேஷன்கள் தலைநகர் இருக்கும்படியான இடங்களில்தான் இருக்கிறது. ஒவ்வொரு வட்டம்தோறும் இந்தக் கார்ப்பரேஷன் அமைத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கு போக வர செலவு குறைவாக இருப்பதோடு கூட அங்கு வைத்து ரசீதைப் பெற்று பாங்குகளில் பணம் வாங்க வசதியாக இருக்கிறது. ஆனால் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தக் கார்ப்பரேஷனில் மூட்டைகளாக இருந்து அடுக்கினால்தான் ரசீது கொடுக்கிறார்களே தவிர மூட்டைகள் இல்லாத விவசாயிகள் நேரடியாகக் கொண்டுபோய் பண்டத்தைக் கொட்டி வைக்க அதற்கு வேண்டிய வசதியில்லை. அதோடு சில தான்யங்கள்தான் அந்த இடங்களில் இடம் பெற்றிருக்கிறது. கடலைக்காய் அல்லது கடலைக்கொட்டை, எள் போன்ற ஆயில் ஸீட்ஸ்களையும் சேர்த்துக்கொண்டால் விவசாயிகளுக்கு அது நன்மை பயப்பதாக இருக்கும். அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் கார்ப்பரேஷனைத் துவக்க வேண்டிய வழிவகைகள் செய்து கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. சண்முகம் : கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயிகளின் நலனைக் கருதி, விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை சேமித்து வைத்திருந்து, நல்ல விலை கிடைக்கும் வரை சேமித்து வைத்திருந்து தக்க லாபம் அடைய இந்தக் கிடங்குகள் பயன்படுகின்றன. இந்தக் கிடங்குகள் கிராமங்களில் உள்ள விவசாயிகளின் நலனைக் கருதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதர பொருள்களையும் சேமித்து வைக்க வசதி செய்து கொடுக்கலாம் என்ற நிலை ஏற்படுமானால், விவசாயப் பொருள்களோடு இதர பொருள்களையும் சேமித்து வைக்க முற்படுவார்களானால் இன்னும் அதிகப்படியான வசதி ஏற்பட முடியும். இது மிகவும் அவசியம் என்று கூறினாலும், விவசாயிகளின் விளைபொருள்களுக்கு முதல் உரிமை கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையின் கீழ் இதரப் பொருள்களுக்கும் இடம் அளிக்கலாம் என்ற நிலையை ஏற்படுத்துவது நல்லது.

23rd January 1964]

திரு. மு. பொ. வடிவேல் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்கும் நிலையில் நான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கார்ப்பரேஷனில் விவசாயப் பொருள்களுக்கு முதல் இடம் அளிக்கப்படவேண்டும். இதர பொருள்களைச் சேர்க்கும்போது முதல் இடம் வியாபாரிகளுக்குக் கொடுத்தது போலாகிவிடும். கூட்டுறவின் நோக்கம் கூடுமான வரையில் வியாபாரிகளைத் தவிர்க்க வேண்டும் என்பது. கலப்படமான பொருள்களை விற்கும்போது உணவுப் பொருள்களில் விஷம் கலக்கக் கூடிய நிலை ஏற்படலாம். ஆகவே, விவசாயப் பொருள்களுக்கு முதல் இடம் தரப்பட வேண்டும். அதோடு, இந்தக் கார்ப்பரேஷன் கோடவுன்களைத் தாலூகாவாரியாக பரவலாக வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை உங்கள் முன்னால் சமர்ப்பித்துக் கொள்கிறேன். இந்தக் கோடவுன்களில் கடலைக்காய் முதலியவைகள் வைக்கும்போது பைகள் இல்லாமல் வைக்கப்படுவதில்லை. நிறைய வைக்க 300 பைகள் வேண்டும். கடலைக்காய்ப் பைகள் விரைவில் கிழிந்து விடுகின்றன. ஆகவே அதில் வரக்கூடிய லாபம் பையின் மூலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே பை இல்லாமல் வைக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயப் பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் எள், கிரௌண்ட் நட் போன்றவைகளும் வருகின்றன. ஆகவே இப்போது இருக்கின்ற சட்டத்தின் கீழேயே இந்தப் பொருட்களையும் வைத்துக்கொள்வதற்கு வசதி இருக்கும். மேலும் மற்ற பண்டங்களை வைத்துக் கொள்வதால் விவசாயப் பொருட்களை வைத்துக்கொள்வதற்கு இடமில்லாமற் போய் விடும் என்று சொல்லப்பட்டது. அதைத் தவிர்க்கவேண்டுமென்றால் இன்னும் அதிகமான அளவில் கோடவுன்களை கட்ட வேண்டும். அதுதான் நல்ல யோசனையே தவிர மற்ற பண்டங்களை வைக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. சாதாரணமாக புகையிலையை எடுத்துக்கொண்டால் அது ஒரு விவசாயப் பொருள் தான், விவசாயிகள் தான் பயிரிடுகிறார்கள். அதே போன்று தான் மற்ற ராஜ்யங்களில் சணல் இருக்கிறது. அதுவும் ஒரு விவசாயப் பொருள்தான். அதையும் விவசாயிகள் தான் பயிரிடுகிறார்கள். ஆகவே இந்தத் துறையில் பொருட்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. அப்படி கொடுத்தால் விவசாயப் பொருட்களுக்கு வேண்டிய இடம் கிடைக்காது என்று சொல்வது சரியல்ல, அவ்விதம் இடம் போதவில்லை என்றால், மேலும் கோடவுன்களையும் வேர்-ஹௌஸ்களையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அது தான் முறை. இதைப்பற்றியும் அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, பொதுவாக எல்லோரும் இத்தீர்மானத்தை வரவேற்றதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

WHEREAS, the Central Warehousing Corporation and the State Warehousing Corporation established under the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962), are empowered to run warehouses for the storage of agricultural produce, seeds, manures, fertilizers, agricultural implements and any notified commodity, being commodities with respect to which Parliament has power to make laws by virtue of Entry 33 of List II (Concurrent List) in the Seventh Schedule to the Constitution of India;

AND WHEREAS it appears to this Assembly to be desirable that legislation should be undertaken to enable the said Corporations to store in their warehouses other commodities also in addition to those mentioned in the aforesaid Central Act;

AND WHEREAS, legislation for the purpose mentioned above is relatable to matters enumerated in Entry 26 and Entry 27 of List II (State list) of the Seventh Schedule to the Constitution of India with respect to which Parliament has no power to make a law for the States except as provided in Articles 249 and 250 thereof.

AND WHEREAS, it appears to this Assembly to be desirable that such legislation should be undertaken by Parliament;

NOW, THEREFORE, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India, this Assembly hereby resolves that storage of commodities other than those covered by the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962), in the warehouses run by the Corporations established under that Act, shall, in this State, be regulated by an Act of Parliament.

The Resolution was put and carried.

(2) DECLARATION OF CERTAIN AREAS AS TOWNSHIPS.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on behalf of the Minister for Local Administration, I move—

" That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that each of the area specified in column (1) of Table below which is a health resort or a labour colony as specified in the corresponding entry in column (2) thereof, be declared to be a township."

TABLE.

Description of area. (1)	Whether health resort or labour colony. (2)
1 The Mahabalipuram and the Poonjeri Panchayats in the Chingleput District.	Health Resort.
2 The Highways Panchayat and the area covered by the Cloudland Estate of the Narasingapuram Panchayat in the Madurai District.	Labour Colony.

23rd January 1964] [Sri R. Venkataraman]

The Mahabalipuram Panchayat area in Chingleput District attracts a good number of tourists and V.I.Ps. throughout the year. Provision of amenities to tourists can be made better by a Township Committee than by a panchayat. It is proposed to combine the Mahabalipuram and the adjoining Poonjeri villages for constituting the Township so that the Township may be a viable economic unit. It is proposed to treat the above areas as a health resort for purpose of constituting the Township.

The Highways Tea Estates lying within the jurisdiction of the Highways and Narasingapuram panchayats are purely Industrial and Labour colonies and there has been frequent representation for the constitution of a Township for these areas. It is therefore proposed to constitute the Highways Township comprising the entire Highways Panchayat area and the Cloudland Estate comprising certain Survey Numbers in the Narasingapuram panchayat area. It is proposed to treat the above area as a Labour Colony for purpose of constituting the Township.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தின் மூலமாக, மகாபலிபுரம் ஒரு ஆரோக்கிய ஸ்தலமாகக் கூட ஆகியிருப்பதைப் பார்த்து சந்தோஷப்படுகிறேன். பொதுவாக அங்கிருக்கக்கூடிய சிற்பங்களைப் பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் போகிறார்கள். இந்த இடத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியம். இதை டவுன்ஷிப்பாக ஆக்கவேண்டியதும் முக்கியம் தான், அதை நானும் வரவேற்கிறேன். அடுத்ததாக, கொடுத்திருக்கக்கூடியது 'ஹைவேஸ் பஞ்சாயத்து' என்பது. இந்தப் பெயர் வெள்ளைக்காரர்கள் வைத்தது. இதை நாம் இப்போது உச்சரிக்கக்கூடிய வகையில் வேறு ஏதாவது தமிழ்ப் பெயர் வைக்கக்கூடாதா? இதற்கு தகுந்த தமிழ்ப் பெயர் கிடைக்கவில்லையா? இதற்கு நல்லதொரு தமிழ்ப் பெயரை வைத்திருக்கலாம் என்பது என் அபிப்பிராயம். இவ்விடங்களையெல்லாம் டவுன்ஷிப்பாகக் கொண்டு அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தை நான் வரவேற்கின்றேன். அதே நேரத்தில் இன்னும் பல இடங்களை சேர்க்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற ஏற்காடு நல்லதொரு மலை வாசஸ்தலமாக இருக்கிறது. உண்மையாகவே நல்ல ஆரோக்கியம் கிடைக்கக் கூடிய இடம். ஊட்டி முதலிய இடங்களுக்குப் போகவேண்டும் என்றால் சாதாரண மக்களுக்கு ஏராளமாக செலவு செய்யவேண்டியிருக்கும். இந்த இடத்திற்குப் போக அவ்வளவு செலவு செய்யவேண்டியதில்லை. இப்போது இந்த இடம் பஞ்சாயத்து ஆட்சியில்தான் இருக்கிறது. பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள்தான் முக்கியமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த இடத்தைப் போதிய அளவுக்கு அபிவிருத்தி செய்ய முடிவதில்லை. அங்கிருக்கின்ற தோட்ட முதலாளிகளே பஞ்சாயத்துத் தலைவர்களாக வந்து விடுகின்ற காரணத்தால் அந்த இடத்தின் அக்கரையில் கவனம் செலுத்துவதில்லை. இந்த இடம் ஒரு முக்கியமான மலை வாசஸ்தலமாக இருப்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [23rd January 1964

பதால், போதிய அளவுக்கு இங்கு சுகாதார வசதிகள் இல்லை. ஆகவே இந்த இடத்தையும் டவுன்ஷிப்பாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பொதுவாக பஞ்சாயத்துக்களை எடுத்து டவுன்ஷிப்பாக மாற்றிவிடுவதால் மட்டுமோ அல்லது அதற்கான கமிட்டிகள் அமைத்து விடுவதனுல் மட்டுமோ எல்லா அபிவிருத்திகளும் வந்துவிடுவதில்லை. அபிவிருத்திக்கான விசேஷ வருவாய் என்ன இருக்கின்றது என்பதை அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும். அதல்லாமல் பஞ்சாயத்துக்களின்மீதே வருவாய்க்கு வழியை ஏற்படுத்தக்கூடாது. விசேஷ நிதி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான அபிவிருத்தி ஏற்படும். அதல்லாமல் வெறும் டவுன்ஷிப்பாக மாற்றுவதனுல் மட்டுமோ அல்லது கமிட்டி அமைப்பதனுல் மட்டுமோ அபிவிருத்தி வந்துவிடாது, இதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பொன்னையன்: கனம் சபாநாயகர் அவர்களே, நமது கடந்த பட்ஜெட் காலத்தில் ஆறு, ஏழு இடங்கள் டவுன்ஷிப்பாக மாற்றப்பட்டதை அறிந்தோம். அதில் ஒன்று வால்ப்பாறை. கழிந்த புது தமிழ் வருடப்பிறப்பன்று வால்பாறையும் டவுன்ஷிப்பாக ஆக்கப்பட்டது. இப்போது ஏறக்குறைய பத்து மாதங்கள் ஆகியும் இன்னும் அந்த இடத்தில் ஒரு அபிவிருத்தியும் பண்ணவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பஞ்சாயத்துக்கு வருடத்திற்கு நான்கு லட்சம் ரூபாய் வருமானம் வந்ததும், இன்னும் டவுன்ஷிப்பாக மாற்றப்பட்டும் எந்தவிதமான அபிவிருத்தியும் ஏற்படவில்லை. பல அபிவிருத்திகள் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம், அவைகள் ஒன்றும் வரவில்லை. டவுன்ஷிப் கமிட்டி போடப்பட்டதே தவிர, அங்கு வேண்டிய ஸ்டாஃப்-கள், இன்சினியர் இவர்களை எல்லாம் நியமிக்கவில்லை. ஆகவே இதைப்பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த டவுன்ஷிப் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மேட்டூரில் டவுன்ஷிப் கமிட்டி அமைக்கப்பட்டுவிட்டது. ஆனுல் கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோன்று டவுன்ஷிப்பை நல்லமுறையில் நடத்துவதற்கு போதிய தொகை இல்லாமல் இருப்பதின் காரணமாக உண்மையில் அந்தக் கமிட்டி நல்ல முறையில் இயங்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதோடு இந்தக் கமிட்டியில் இருக்கின்ற உத்யோகஸ்தர்கள் (அபிஷியல்ஸ்) பலர் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை. ஆகவே இந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அங்கம் வகிக்கக்கூடியவர்கள் நிச்சயமாக இந்தக்

23rd January 1964]

[திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்]

கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடியவகையில் ஒரு எற்பாட்டைச் செய்யவேண்டும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மேட்டூரில் பல தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. ஆகவே தொழிற்சாலை வந்திருக்கின்ற பிரதேசங்களை எல்லாம் இந்த டவுன்ஷிப்-பில் சேர்க்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் ஒரு சில ஆலோசனைகளை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். இம்மாதிரி டவுன்ஷிப் ஏற்படுத்துகின்ற நேரத்தில் முன்னால் பஞ்சாயத்துக்களாக இருந்த பகுதிகளைத்தான் சேர்க்கின்றோம். அப்படி சேர்க்கும்போது, இப்போது பல குறைகள் இதில் இருக்கின்றன என்று சொல்வதற்குக் காரணம், முன்னால் அந்தந்த பஞ்சாயத்துக்களில் இருந்த பஞ்சாயத்துத் தலைவர்களை இந்த டவுன்ஷிப் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதுதான். முன்னால் பஞ்சாயத்து தலைவர்களாக இருந்தவர்களை விட்டுவிட்டு, புது புது அதிகாரிகள், பொதுஜன பிரதிநிதிகள் என்று பலரை அந்தக் கமிட்டியில் போடுகிறோம். பஞ்சாயத்துத் தலைவர்கள் இடம் பெறுவதில்லை. ஒன்றிரண்டு இடங்களில் வேண்டுமென்றால் இருக்கலாம். பெரும்பாலும் இல்லை. ஆகவே இம்மாதிரி மாற்றங்களை ஏற்படுத்தும்போது, ஆட்டமேட்டிக்காக முன்னால் பஞ்சாயத்துத் தலைவர்களாக இருந்தவர்கள், புதிதாக அமைக்கப்படுகிற "போர்ட் ஆப் டைரக்டர்ஸ்"-ஸிலும் ஒரு மெம்பராக இருப்பதற்கு வழி செய்ய வேண்டும். அப்போது அபிவிருத்திகளை செய்வதிலும், பொது மக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதிலும் வேண்டிய ஆதரவு கிடைக்கும் என்று எண்ணுகிறேன். இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இப்போது புதிதாக இரண்டு டவுன்ஷிப்-களை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் மணிமுத்தாறு முதல் மாஞ்சோலை வரை பஞ்சாயத்துக்களை ஒரே இணைப்பாக சேர்த்து ஒரு டவுன்ஷிப்பாக உருவாக்கப்பட்டது. குறுக்கு வழியாக 14 மைல், சுற்று வழியாக 20-21 மைல்கள் வரையில் இருக்கக் கூடிய பகுதிகளை இணைத்து ஒரு டவுன்ஷிப்பாகக் கொண்டுவருவதால் எந்த அளவுக்கு உபயோககரமான வேலைகளைச் செய்யமுடியும் என்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்பது எனது அவா.

ஒரு சில பஞ்சாயத்துக்களோடு அதில் தொழில் பகுதிகளும் 9-30 a.m.
சேர்ந்து இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்தில் சில தெருக்கள் அல்லது ஒரு பகுதி தொழில் வளம் நிறைந்ததாக, தொழிற்சாலைகள் நிறைந்ததாக இருக்கும். டவுன்ஷிப் உண்டுபண்ணுவதற்காக தொழில் நிறைந்த பகுதியை மாத்திரம் துண்டித்து அதை மாத்திரம் எடுத்து ஒரு டவுன்ஷிப்பாக ஆக்கியிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் தாளயூத்தில், சங்கர்நகர் என்ற இடத்தில் இண்டியா சிமெண்ட்ஸ் தொழிற்சாலை வைத்திருக்கிற

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [23rd January 1964

ஒரு பகுதியை மாத்திரம் இப்போது டவுன்ஷிப்பாக ஆக்கியிருக்கிறோம். இந்த குறிப்பிட்ட பகுதி பஞ்சாயத்தோடு சேர்ந்திருந்த போது இந்தப் பகுதியினால் அந்த பஞ்சாயத்துக்கே நலமாக இருந்தது. தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் இந்த பஞ்சாயத்துக்கே சுகாதார வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கக்கூடிய வசதி இருந்தது. இப்போது அந்தப் பகுதி துண்டிக்கப்பட்டதால் எஞ்சிய பஞ்சாயத்துக்கு வருகிற உதவிகள் நின்று போய் விட்டது. எந்தப் பஞ்சாயத்தில் இந்த டவுன்ஷிப் பகுதி சேர்ந்திருந்ததோ அந்த முழு பகுதியையும் சேர்த்து டவுன்ஷிப்பாக வைப்பது தகுந்த பரிகாரமாக இருக்க முடியும். அங்குள்ள வருமானம் எல்லாம் சேர்ந்து குறைந்த வருமானம் உள்ள பஞ்சாயத்திற்குக்கூட உதவியாக இருக்கும். தொழில் பகுதி இருக்கிற இடங்களில் அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வருகிற புகை, கழிவு நீர் ஆகியவைகளால் ஏற்படும் தீமைகளை சுற்றிலும் உள்ளவர்கள் அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு சில நன்மைகளும் இருக்கலாம். இதனால் தொழில் நிறுவனத்தினர் அப்பஞ்சாயத்துக்கே விசேஷ சுகாதார வசதி செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். டவுன்ஷிப்பாக மாற்றும்போது ஒரு பகுதியை மாத்திரம் துண்டித்து விடுவதால் இந்த நன்மைகளெல்லாம் நின்று போகின்றது, அதனால் கஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இந்த மாதிரி முழு பஞ்சாயத்தையும் சேர்த்துக்கொள்ள, இது வரையிலும் நிறுவிருக்கும் டவுன்ஷிப்புகளில்கூட இத்தகைய குறைபாடு இருக்குமானால் அந்தப் பகுதிகளில் விடப்பட்டிருக்கும் பகுதிகளில் இந்த வசதிகளை அவர்களும் சேர்ந்து பெறக்கூடிய நிலைமையை உண்டுபண்ண அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிற வகையில் சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மகாபலிபுரம், பூஞ்சேரி ஆகிய பஞ்சாயத்துக்களையும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஹைவேஸ், நரசிங்கபுரம் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றையும் டவுன்ஷிப்புகளாக மாற்றுகிற இந்த யோசனை வரவேற்கத் தக்கது. இன்னும் தனியாக சில பல ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாக இந்த நகரங்களை நல்ல வசதியுள்ளதாக ஆக்க முடியும் என்ற நோக்கத்துடன்தான் இவைகளெல்லாம் டவுன்ஷிப்புகளாக மாற்றப்படுகின்றன என்று நான் கருதுகிறேன். இவைகளுக்கு பிரத்தியேகமான, சிறப்பான ஏற்பாடுகளைச் செய்கிற வகையில் நிதி வசதிகளும் இருந்து தீரவேண்டும். டவுன்ஷிப்புகளாக ஆக்குகிற நோக்கமே வசதிகள் குறைவாக இருக்கின்றன, வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன, அதற்கான வழிவகைகளைத் தேட வேண்டும் என்றுதான் செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட டவுன்ஷிப்புகளுக்கெல்லாம் மாட்சிங் கிராண்ட் போன்றவைகள் இல்லை என்று தெரிய வருகிறது. சாதாரணமாக மாட்சிங் கிராண்ட் கொடுக்கப்படுகிற பஞ்சாயத்துக்களில்கூட நிதி வசதி இல்லாததன் காரணமாக இன்றியமையாத பணிகளைச் செய்ய இயலாத

23rd January 1964] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

நிலைமையை நாம் பல பஞ்சாயத்துக்களில் காண்கிறோம். எந்தெந்த வகைகளில் நிதி வசதியை, வருமானத்தைப் பெருக்கி டவுன்ஷிப்புகள் வளர்ச்சி பெற இருக்கின்றன என்று அமைச்சரிடத்திலிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வருகிற வழிப் போக்கர்கள், பார்வையாளர்கள் ஆகியவர்களிடமிருந்து வசூலித்து அதன் மூலமாக அந்தந்த டவுன்களை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்று நினைத்தால், எந்த நோக்கத்தோடு, அதாவது அந்த நகரங்கள் வழிப்போக்கர்களையும், பார்வையாளர்களையும் கவரவேண்டுமென்று செய்கிறோமோ, அது பாதிக்கப்படுகிற அத்தகைய நிலைமைக்குப் போகலாம். அவர்கள் கொடுக்கும் அத்தகைய தொகையை வைத்து சீர்படுத்த இயலுமா என்பது சந்தேகத்துக்குரிய ஒன்று. மேட்டூர் பகுதியிலிருந்து வருகிற உறுப்பினர் தெரிவித்ததுபோல தொழில் வளர்ச்சி மிகுந்த மேட்டூர் போன்ற அத்தகைய டவுன்ஷிப்புக்கே பணப்பற்றுக்குறை இருக்குமானால், மகாபலிபுரம் போன்ற அத்தகைய இடங்கள் போதுமான பண வசதி இல்லாமல் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படக் கூடும். அவர்களுக்கு நிதி வசதி அளிக்க என்ன முறைகளை அரசினர் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்று அமைச்சர் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும் சிலபல இடங்களை டவுன்ஷிப்பாக ஆக்குவதன் மூலம் கவர்ச்சிகரமாக, வழிப்போக்கர்களையும், பார்வையாளர்களையும் கவரக்கூடிய முறையில் இன்னும் அதிகமாக வளர்ச்சி ஏற்படுத்தத் தக்க சூழ்நிலையை ஏற்படுத்தி உருவாக்கக்கூடிய இடங்கள் இருக்கின்றன என்று அறிகிறோம். கனம் உறுப்பினர் திரு. கலியாண சுந்தரம் அவர்கள் தெரிவித்ததுபோல ஏர்க்காடு நகரத்தையும் டவுன்ஷிப்பாக மாற்றி சிலபல வசதிகள் செய்ய முன் வந்தால், வேறு பல இடங்களுக்கு மக்கள் செல்லுவது மாதிரி, குறிப்பாக சேலம் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் ஏர்க்காடு சென்று, தங்கி, ஓய்வு பெறப் பயன் படுத்திக்கொள்ள முடியும். அதே முறையில் வெளி நாட்டினர்கூட அங்கே சென்று, தங்கி, சில பணிகளை ஆர அமர ஆற்ற முடியும். ஆகையால் ஏர்க்காடு பகுதியை டவுன்ஷிப்பாக மாற்ற வேண்டும்.

அதே முறையில் பண்ணைக்காடு. பண்ணைக்காடு பகுதியை டவுன்ஷிப்பாக ஆக்கவில்லை என்று கருதுகிறேன். அதை ஒரு டவுன்ஷிப்பாக மாற்றி அங்கும் சில பல தங்கும் வசதிகளை ஏற்படுத்த முடியும். அத்தகைய வசதிகளைப் பெருக்குவதன் மூலமாக அந்தப் பகுதி கவர்ச்சிகரமாக அமைய முடியும். அதையும் மாற்றுவதற்கு முயற்சி எடுப்பது நல்லது என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்லாமல் மகாபலிபுரத்தில் வந்து தங்கி ஓய்வு பெற வசதிகளை கவனிக்கும்போது அங்கே உள்ள தங்கும் விடுதி மத்திய அரசினர் கையில் விடப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்த இடத்தில் சென்று தங்குவதற்கே பெருத்த கஷ்டம் இருக்கிறது. இங்கே கலெக்டர் அனுமதியின் பேரில்தான் செல்ல வேண்டும். முன் கூட்டியே கலெக்டருக்கு எழுதி அனுமதி பெற்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [23rd January 1964

றுத்தான் செல்லவேண்டும். அதோடு அங்கே வசூலிக்கப்படும் வாடகை மிக அதிகமாக இருக்கிற காரணத்தினுல் நடுத்தர மக்கள் அங்கே தங்க வசதி இல்லை என்று தெரிகிறது. மாநில அரசாங்கம் தங்கும் விடுதி கட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருப்பதாக இங்கே அமைச்சர் கூறியதாக நினைக்கிறேன். மாநில அரசாங்கம் விடுதி கட்டி, நடுத்தர மக்கள் அங்கே சென்று ஒன்றிரண்டு நாட்கள் தங்கி, ஓய்வு பெற, மகிழ்ச்சியோடு இருக்க வகை செய்யும் முறையில் ஒரு பெரிய தங்கும் விடுதியைக் கட்ட அரசினர் மேற்கொள்ளுவது மிக மிக நல்லது என்று கூறிக்கொள்கிறேன்.

டவுன்ஷிப் என்கிற அமைப்புக்குள் வராவிட்டாலும் பெருவழிகளில் சிறந்த இடங்களில், கவர்ச்சிகரமான இடங்களில் தங்கும் விடுதிகள், ஓய்வு விடுதிகள் கட்டுவது நலமாக இருக்கும். இலங்கையில் பார்ப்போமானுல் பெருவழிகளில் அழகான ஏரிகள், சோலைகள் மற்ற கவர்ச்சிகரமான இடங்கள் எங்கெல்லாம் காணப்படுகிறதோ அங்கெல்லாம் தங்கும் விடுதி, ஓய்வு விடுதி கட்டி, கட்டணம் வசூலித்து, தங்க அனுமதிக்கிருர்கள். ஏரிக்கரை ஓரத்தில், அல்லது ஒரு சோலையின் பக்கத்தில் இருக்கக்கூடிய தங்கும் விடுதியில் ஒரு மணி நேரம், அல்லது சில மணி நேரம் அல்லது சில நாள் தங்கிச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த முறையில் பெருவழிகளில் கவர்ச்சிகரமான ஏரிகள், சோலைகள், ஆறுகள் இருக்கும் இடங்களில் தங்கும் விடுதிகளைக் கட்டி, மலிவான வாடகைக்குக் கொடுப்பதன் மூலமாக நீண்ட தொலைவு பயணம் செல்லுகிறவர்கள் நெருக்கடி மிகுந்த நகரங்களில் தங்காமல் இத்தகைய விடுதிகளில் தங்கி, பிறகு மேலே செல்ல வசதியாக இருக்கும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வசதிகளைச் செய்ய முன் வந்து, டவுன்ஷிப்களில் வசதிகளைப் பெருக்க, அவைகளை கவர்ச்சிகரமானதாக ஆக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, மகாபலிபுரம் ஒரு ஹெல்த் ரிஸார்ட் என்று கேட்பதற்கு சந்தோஷமாக இருக்கிறது என்று திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னுர்கள். அது கடற்கரைப் பகுதி, நல்ல வசதியான இடம், ஹெல்த் ரிஸார்ட் தான். இதைத் தவிர அங்கு மான்யுமெண்ட்ஸ் முதலியவைகள் இருந்தாலும், அது ஒரு நல்ல, சிறந்த ஹெல்த் ரிஸார்ட். ஆகவே, அதை டவுன்ஷிப்பாகச் செய்வது மிகவும் அவசியம். அந்தப் பகுதி மாத்திரமல்ல, கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, ஏர்காடு, கன்யாகுமரி, அம்பத்தூர் போன்ற இடங்களையும் டவுன்ஷிப்பாகச் செய்ய வேண்டிய யோசனை சர்க்காரிடம் இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது. டவுன்ஷிப்பாகச் செய்தால் மாத்திரம் எல்லா வசதிகளும் தாஞக வந்துவிடாது என்பது நன்ருகத் தெரியும். ஆனுல், டவுன்ஷிப்பாகச் செய்து அதனுடைய நிர்வாகத்தை பொறுப்பு உள்ளவர்களிடம் ஒப்படைத்தால், வசதிகள் செய்வதற்கு உதவியாக இருக்கும் என்பதினுல்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

23rd January 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

மகாபலிபுரத்தைப் பொறுத்த அளவில், டூரிஸ்டு இலாகா அமைச்சர் அவர்கள் இன்னும் ஒரு பெரிய விடுதியாக விஸ்தரிப்ப தற்கான ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். மேற்கொண்டு மத்தியதர வர்க்கத்தினர் அங்கு தங்கும்படியாக வசதிகள் செய்வதற்கு இப்பொழுது ஒன்றும் ஏற்பாடில்லை. ஆனால் அந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்பதிலே யாருக்கும் எந்தவித மான அபிப்பிராய பேதமும் இருக்க முடியாது.

அதே போல டவுன்ஷிப் என்று சில பகுதிகளை மாத்திரம் எடுத்து டவுன்ஷிப்பாகச் செய்துவிட்டால், பக்கத்திலிருக்கிற பஞ்சாயத்துக்கு வருமானம் குறைந்துவிடுகிறது என்று சொல்லப் பட்டது. இதையெல்லாம் முதலில் நாம் நன்றாகப் பரிசீலனை செய்துதான் இந்த சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். பஞ் சாயத்தினுடைய கண்டிரோலில் இருக்கக்கூடிய இந்தப் பகுதி களுக்கு பஞ்சாயத்தினால் வேண்டிய சலுகைகள் செய்ய முடிய வில்லை. அதனால் அந்தப் பகுதியை தனியாக ஒதுக்கி, அவர்கள் தங்களுக்குள்ளே குடி தண்ணீர்த் திட்டம், இன்னும் சாக்கடைத் திட்டம் போன்றவைகளெல்லாம் செய்துகொள்ள முடியும் என்ற காரணத்தினால், அவ்வாறு செய்யப்படுகிறது. ஏதாவது ஒரு பகுதி சேர்ந்தாற்போல் இருக்கிறது. 'கண்டிகுவஸ்' ஆக இருக்கிறது, அதைச் சேர்த்தால் நலம் என்று சொன்னால், அது பற்றி எப்பொழும் சர்க்காருக்கு எழுதி அனுப்பலாம். சர்க்கார் அதைப் பரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதுபோல, இதற்கு பண வசதிகள் செய்துகொடுக்க வேண்டிய பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொண்ட மாதிரி தான். ஏனென்றால், டவுன்ஷிப்பாகச் செய்துவிட்டால், அந்த இடத்திற்கு என்னென்ன வசதிகள் செய்யவேண்டும் என்பதையெல்லாம் ஆலோசித்து, அதற்கு அவர் களுக்கு 'லோன்' முதலியவைகள் கொடுக்க முடியும், அவர் களுக்கு உதவி செய்து நல்ல முறையில் அந்த டவுன்ஷிப்பை அமைப்பதற்கு வசதி செய்துகொள்ளலாம். ஆகவே, இதை டவுன் ஷிப்பாகச் செய்தால் முன்னேற்றத்திற்கு வழி இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that each of the areas specified in column (1) of the Table below which is a Health resort or a Labour colony as specified in the corresponding entry in column (2) thereof, be declared to be a township."

TABLE.

Description of area.	Whether health resort or labour colony.
(1)	(2)
1 The Mahabalipuram and the Poonjeri Panchayats in the Chingleput District.	Health Resort.

[23rd January 1964

Description of area.	Whether health resort or labour colony.
(1)	(2)
2 The Highways panchayat and the area covered by the Cloudland Estate of the Narasingapuram panchayat in the Madurai district.	Labour Colony.

The Resolution was put and carried.

III—GOVERNMENT MOTION.

CHANGE IN THE ORDER OF BUSINESS

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That item III (2) viz., The Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) and the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 (L.A. Bill No. 29 of 1963) in the order of business be taken up before item (1), viz., The Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964).

The motion was put and carried and the Order of Business was changed accordingly.

IV—GOVERNMENT BILLS.

(1) THE MOTOR VEHICLES (MADRAS AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 1 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) be taken into consideration.

Sir, I have brought forward this Bill as a measure calculated to tide over certain legal difficulties in the promotion of passenger transport.

Sub-section (8) of section 57 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), deals with the procedure to be followed in regard to the variation of the conditions of any permit by the inclusion of a new route or routes or a new area or by increasing the number of services covered by a stage carriage permit, above the specified maximum. The Regional Transport Authorities had been allowing extension or variation of existing routes with a view to serving the areas where transport facilities were not available. Such extensions or variations were being granted in cases where improvements like the erection of bridges, construction of motorable roads, etc., have been carried out. Consequent on the undertaking of various development schemes and the growth of industries the need for connecting such areas is imperative and the sectors forming the variations or extensions of the route will not in many cases justify the opening of a separate route by itself. In such cases, while the

23rd January 1964]

application for the grant of either extension or variation is pending with the Regional Transport Authorities, having regard to the public interest, the Regional Transport Authorities used to grant temporary permit to run stage carriages on that particular extended or varied route. While delivering judgment in Writ Petition No. 1259 of 1962, the High Court of Madras by a majority has held that a route in regard to a stage carriage permit is not one of the conditions attached to it, but is a part of the permit itself and that there is no power in the Regional Transport Authority to vary the route in exercise of its powers of variation regarding the alteration or change of the conditions in the permit. In coming to this conclusion, the High Court has examined the provisions of the law as it stood prior to the amendments introduced in the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) by the Motor Vehicles (Amendment) Act, 1956 and also the provisions as they stand after the said amendments. It has been pointed out that before the amendment of the Motor Vehicles Act, 1939, by Central Act, 100 of 1956, under section 48 (d) of the Act, one of the conditions of the permit which the transport authority was empowered to attach to a stage carriage permit was that the carriage should be used on specified routes or in a specified area and that such a condition could have been varied under section 48-A of the Act. The High Court pointed out that Parliament had made a departure from the provisions of the old Act by introducing sub-section (2) of section 48 which provides that every stage carriage permit should be expressed to be valid only for a specified route or routes or for a specified area. It also observed that it would not be proper to assume under sub-section (8) of section 57 that because a provision is made for treating an application to vary the conditions of any permit by including a new route, what is not prescribed as a condition of the permit should be attributed to have that character. Consequent on this decision of the High Court, there has been a sudden stoppage of buses running on temporary permits and the people who got used to transport facilities for some time past have been put to much inconvenience. This has resulted in a stalemate in the growth of transport industry. It has been observed that in actual practice, the existing procedure had been working satisfactorily. Representations have also been received that the legal difficulty should be resolved sooner by appropriate legislative measures. It has therefore been decided to restore the legal position obtaining under the Motor Vehicles Act, 1939, before the passing of the Central Act 100 of 1956.

In Writ Petition No. 909 of 1963, the High Court of Madras has held that the curtailment of a portion of the route was in the nature of a variation of the route itself and that it was opposed to the provisions of the Motor Vehicles Act, 1939. This has caused difficulties in regard to grant of shuttle services on the existing routes in respect of certain trips so as to enable the stage carriages to cater to the needs of the public. It is considered necessary to confer specific power on the Regional Transport Authorities to curtail the route in suitable cases. This is to enable them to run shuttle service between the areas.

[23rd January 1964

The Government have therefore decided that a local amendment may be made to the Motor Vehicles Act, 1939, to achieve the objects in view. In pursuance of this, the present Bill is brought forward. Sir, I commend the Bill for the consideration of this House.

MR. SPEAKER : Motion moved—

'That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) be taken into consideration'.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அதை ஆட்சேபிக்க வில்லை. ஆனால், இந்த மாதிரி நிலை ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் ஆராய்ந்து விளக்கங்கள் கொடுத்திருப்பார்களேயானால், உதவியாக இருந் திருக்கும். திடீரென்று உயர் நீதி மன்றம் இப்படி தீர்ப்பு அளித்தது என்? அதாவது, ஒரு பஸ் மார்க்கத்தைக் குறைப்ப தற்கோ அல்லது தூரத்தை அதிகப்படுத்துவதற்கோ ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டிக்கு அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டதினாலே, ஒரு சங்கடம் ஏற்பட்டு, போக்குவரத்தே ஸ்தம்பித்துப் போகக்கூடிய நிலை ஏற்பட்டது என்பது ஓரளவுக்கு உண்மை. ஆனால், பஸ் ஆபரேடர்கள் இப்படி அப்பீல் எடுத்துச் செல்லவேண்டிய காரணம் என்ன, எந்த சூழ்நிலை ஏற்பட்டது, உயர் நீதி மன்றம் என் இப்படித் தலையிட நேர்ந்தது, அதற்குக் காரணம் என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் இந்தத் திட்டத்தை சரியானபடி உருவாக்க முடியும். 1939-ம் வருஷத்திய மோட்டார் வெஹிகிள்ஸ் சட்டம், 1956-ம் வருஷம் திருத்தினபடி, அது ஒரு சாதாரணமான சட்டம் மட்டும் என்று பார்க்கக் கூடாது. நம் முடைய நாட்டில் இருக்கக்கூடிய போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்வதற்கான் ஒரு திட்டத்திற்கு வழிகாட்டியாக அந்தச் சட்டத்தைக் கருதவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த இலாகாவை இப்பொழுதுதான் நம் முடைய தொழில் அமைச்சர் அவர்கள் சிறிது காலமாக கவனித்து வருகிறார். அவர்கள் இந்த விவரங்களை மனதில் வைக்கவேண் டும். முன்பு என்னென்ன நடந்தது என்பதைப் பார்த்தால் சௌகரியமாக இருக்கும் என்பதற்காக சில விவரங்களை அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரசாங் கத்திற்கு இருக்க வேண்டிய விசேஷ அதிகாரம் அவசியமா என் பதைக் கவனிக்க வேண்டும். பெர்மிட் தூரத்தை அதிகப் படுத்துவதற்கும், குறைப்பதற்கும், பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும் அரசாங்கம் விசேஷ அதிகாரம் எடுத்துக் கொண்டிருக்கிறது. செக்ஷன் 43 (2)-ல் என்ன சொல்லப்பட் டிருக்கிறது என்றால் :

"The State Government may on consideration of the matters set forth in sub-section (1) of Section 47 direct any Regional Transport Authority or State Transport Authority to open any new route,

23rd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

or to extend an existing route or to permit additional stage carriages to be put or to reduce the number of stage carriages on any specified route ".

இந்த அதிகாரத்தை அரசாங்கம் எடுத்திருப்பதனுல் தான் இந்தத் தகராறு பூராவுக்கும் காரணம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏதோ ஒரு கேஸ் அகப்பட்டது. காஞ்சீபுரம் போய்க் கொண்டிருந்த பஸ்ஸை நிமிலி வரைக்கும் போகவேண்டுமென்று செய்து ஆர்.டி.ஏ. உத்தரவு போட்டு ஹைகோர்ட்டுக்கு வந்து தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற "வேரியேஷன்கள்" எவ்வளவு நடந்திருக்கின்றன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் பார்க்கவேண்டும். ஆர்.டி.ஏ.-க்கு அதிகாரம் கிடையாது என்பது ஒருபுறமிருக்க, அவருக்கே இல்லாத ஒரு அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்வானேன்? ஆர்.டி.ஏ.-க்கு இல்லை என்ருல், அரசாங்கத்திற்கு எல்லா அதிகாரங்களும் என்று இருக்க வேண்டும். அரசாங்கமும் அதே அதிகாரத்தை வைத்துக் கொள்வதானது ஒரே அதிகாரத்தை இரண்டு இடங்களில் வைத்துக் கொண்டு மோதல் ஏற்படுவதாகத்தான் இருக்கும். அதற்குச் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். "எக்ஸ்டென்ஷன்" என்ருல் என்ன அர்த்தம்? அதை நாம் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? ஒரு பஸ் மார்க்கம் இருக்கிறது என்ருல், 5 மைலோ 10 மைலோ அதிகப்படுத்திஞல், இன்னும் சில கிராமங்களுக்கு வசதி ஏற்படும் என்ற வகையிலே எக்ஸ்டென்ஷன் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனுல் அரசாங்கம் கொடுத்திருக்கிற சில எக்ஸ்டென்ஷன்களை நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். புதுக்கோட்டையிலிருந்து அம்மன் குறிச்சி 27 மைல் தூரத்தில் இருக்கிறது. அந்த ரூட்டில் எத்தனை வேரியேஷன்கள் நடந்திருக்கின்றன? முதலிலே புதுக்கோட்டையிலிருந்து நகரப்பட்டி (வையா) அம்மன்குறிச்சி என்று போட்டார்கள். பிறகு நகரப்பட்டி (வையா) தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, அம்மன்குறிச்சி என்று மாற்றினர்கள். அப்படி 27 மைல் இருந்த ரூட்டானது வேரியேஷன்களை எல்லாம் சேர்த்து, முதலிலிருந்த மைலேஜைவிட அதிகமாகி ஏறத்தாழ 74-மைலுக்குப் போய் விட்டது. திருச்சி ஜில்லாவிலும் இதுமாதிரி இன்னும் பல உதாரணங்களைச் சொல்லலாம். இதெல்லாம் அரசாங்கம் போட்ட உத்தரவு தான். ஆர்.டி.ஏ. போட்ட உத்தரவில்லை. ஆர்.டி.ஏ. போடக்கூடாது என்று சொல்லும்பொழுது, அரசாங்கம் எப்படிப் போட முடியும்? திருச்சி—ஜெயங்கொண்டம் ரூட்டை, 55 மைலாக இருந்ததை, அரசாங்கம் தலையிட்டு மாயூரம் வரையிலும் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே போயிருக்கிருர்கள். ஆர்.டி.ஏ.-க்கு அதிகாரம் இல்லாமல் செய்வதனுல் தான் இந்த சங்கடங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுதுள்ள அமைச்சர் குறுகிய காலமாகத்தான் இருக்கிருர். முன்னுள் முதலமைச்சர் திரு. காமராஜர் பொறுப்பில் இருந்த காலத்தில்—நேரம் இல்லாத காரணத்திஞலோ என்னவோ அவர் தலையிட்டு எந்த உத்தரவும் போட்டதாக என்னிடத்தில் தகவல் இல்லை. அதற்கு முன்பு எல்லாம் அரசாங்கத்தின் குறுக்கீடு நிறைய இருந்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் திருச்சி ஜங்ஷனி

லிருந்து உறகூர் வரைக்கும் பஸ் போகவேண்டுமென்று நோட்டிபை பண்ணி அரசாங்கம் தலையிட்டு, கிட்டத்தட்ட இரண்டு வருஷங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து, தடை உத்தரவு ரத்து செய்யப்பட்டு பஸ்கள் ஓட ஏற்பாடாகியிருக்கிறது. இப்படி அரசாங்கம் தலையிட்டு நிறுத்த வேண்டிய காரணம் என்ன? பஸ் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தலையிடுவது என்று சொன்னால் அதிலே அர்த்தம் இருக்கும். அரசாங்கத்தின் தலையீடு இரண்டு விதங்களில் இருக்கிறது. சில இடங்களில் ஆர்.டி.ஏ. விரும்பாத அளவுக்கு அரசாங்கத்தின் அதிகாரம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே ஆர்.டி.ஏ. முடிவு செய்து பஸ் ரூட் திறக்க வேண்டுமென்று ஆரம்பித்த பிறகு, "நீ அப்படித் திறக்காதே" என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கையில் இருக்கும் அதிகாரம் அரசியல் விருப்பு வெறுப்புக்குப் பயன்பட்டு வந்திருக்கிறது. ஆப்பரேட்டர்கள் வேண்டியவர்களாக இருந்தால் மக்களுடைய தேவையைக் கூடப் பார்ப்பதில்லை. ரூட்டை மாற்றி அவர்களுக்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். சில இடங்களில் தேர்தல் சமயத்தில் எதிர்க் கட்சிக்கு சங்கடம் உண்டுபண்ண வேண்டும் என்ற காரணத்திற்காக, அந்த மார்க்கத்தையே நிறுத்தி இருக்கிறார்கள். உறகூர் ரூட்டை நிறுத்தியதற்கு வேறு என்ன காரணம்? நியாயமான ஒரு காரணத்தைக் காட்டுவார்களேயானால், ராஜீநாமா செய்வதற்குக் கூட நான் தயாராயிருக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் கோர்ட்டுக்குப் போயிருக்கலாமே.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆப்பரேட்டர் தான் போக முடியும். நான் ஆப்பரேட்டர் இல்லையே.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் ஒரு ஆப்பரேட்டர் சொல்லிய கருத்துக்களைத் தான் சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். அவர் ஆப்பரேட்டர் இல்லை என்று ஒப்புக் கொள்கிறார். ஆப்பரேட்டர் சொல்லுகிற விஷயத்தையும் சொல்லுகிறார். சர்க்கார் அப்படி நிறுத்தி வைத்தது தவறு என்றால் ரிட் போட்டிருக்கலாம். எதிர்க்கட்சியில் இருப்பதற்காக சட்ட சபையிலே அரசியல் விருப்பு வெறுப்பு என்றெல்லாம் சொன்னால், எதைப் பற்றி வேண்டுமானாலும், யாராயிருந்தாலும் சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். பஸ் ஓட ஆரம்பித்த பிறகு நிறுத்தவில்லை. நோட்டிபை பண்ணின உடனே நிறுத்தியிருக்கிறார்கள். அரசாங்கம் தலையிட்டு நிறுத்தியிருக்கிறது. அப்படி அரசாங்கம் நிறுத்தியது என்றால், அரசியல் விருப்பு வெறுப்பு இல்லாமல் வேறு ஒன்றுமில்லை. ஆப்பரேட்டரைப் போய் நான் தூண்டிவிட்டுக் கொண்டிருக்க முடியுமா? மக்களுக்கு ஏற்படும் குறைகளை மந்திரிகளிடத்திலே சொல்லலாம். ஆர்.டி.ஏ. யிடத்தில் சொல்லலாம். நோட்டிபை பண்ணின பிறகு தேர்தலுக்கு

23rd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

முன்னர் வேண்டுமென்றே நிறுத்துவது என்றால் அதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? கனம் அமைச்சர் சக அமைச்சரை வேண்டுமானால் கேட்டுப்பார்க்கட்டும். அரசாங்கத்தைக் குறை கூறவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. இனி இந்த மாதிரி நிலை ஏற்படக் கூடாது. எந்த அமைச்சர் பேரிலும் குறை சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. நியாயமான விமர்சனம் செய்யும்பொழுது அதிலே இருக்கிற உண்மையை எடுத்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு தூரம் தவறு இருக்கின்றது என்று பார்ப்பதைவிட எவ்வளவு தூரம் நியாயமிருக்கிறது என்று பார்த்தால் அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள முடியும். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் குறுக்கீடு.) அதுபோல நாங்களும் அமைச்சர்கள் சொல்லுவதிலே எவ்வளவு உண்மை இருக்கிறது என்று பார்க்கத்தான் செய்கிறோம். பேசுகிறபொழுதே எவ்வளவு தூரம் தாக்கலாம் என்று அமைச்சர் யோசனை பண்ணுகிறார்கள். இதிலே எவ்வளவு தூரம் நியாயம் இருக்கிறது என்று பார்த்தால், அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் நல்லது, நாட்டில் இருப்பவர்களுக்கும் நல்லது.

என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், அரசாங்கம் இந்தத் திருத்தங்களை ஒட்டுமொத்தமாகச் செய்யவேண்டும். ஏன் கோளாறான சூழ்நிலை ஏற்பட்டது என்பதைப் பார்த்து அதற்குரிய அடிப்படையில் எல்லாப் பிரிவுகளையும் திருத்தினால் நல்லதாக இருக்கும். அவசியமில்லாத சில பிரிவுகளைத் திருத்தியிருக்கிறார்கள். இந்தத் திருத்தங்களின் நோக்கம் என்ன? ஆர்.டி.ஏ.-க்கு பூரண அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பது. அதை நான் வரவேற்கிறேன். அதைக் கொடுத்துவிட்ட பிறகு அதே அதிகாரத்தை அரசாங்கமும் வைத்துக் கொண்டிருந்தால் ஆர்.டி.ஏ. எப்படி சுயேச்சையாக நடக்க முடியும்? ஆர்.டி.ஏ. கலெக்டராக இருக்கிறவர் மற்ற ராஜ்யங்களில் உள்ளபடி மூன்று பேர்கள் கொண்ட ஆர்.டி.ஏ.-ஐ அமைத்தால் புரிந்து கொள்ள முடியும். அரசாங்கம் கொள்கையை வேண்டுமானால் வகுத்துக் கொடுக்கலாம். ஆனால் ஆர்.டி.ஏ. வேலையில் அனாவசியமாகத் தலையிடக்கூடாது. ஜனங்களிடமிருந்து கோரிக்கை வந்து, ஆர்.டி.ஏ. ஒப்புக்கொண்ட பிறகு, முட்டுக்கட்டை போடுகிற வகையில் அரசாங்கம் தலையிடுவதில் அர்த்தம் இல்லை. மற்ற பிரஜைகள்போல ஆர்.டி.ஏ.-க்கு அரசாங்கம் யோசனை சொல்லலாம். "Directive" அனுப்புவதற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரம் சரியல்ல. அந்த அதிகாரத்தை உபயோகிக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட சமீபத்திலே போக்குவரத்து அபிவிருத்திபற்றி 10-00 a.m.
ஆலோசனைக் குழு கூட்டத்தில் 10 சத விகிதம் அதிகப்படுத்தப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். அதை நான் வரவேற்கிறேன். 10 சத விகிதம் என்பது ஒரு இலக்குத்தான், ஒவ்வொரு ஊரிலும் 10 சத விகிதம் என்பது இல்லை என்றும் அறிகிறேன். அது அதிகமானது அல்ல. அவசியத்திற்கும் குறைவானதுதான் என்று கருதுகிறேன். சாலைப் போக்குவரத்து வர வர அதிகமாகி

வருகிறது. கிராமங்களில் சாலைகள் வளர வளர பஸ்கள் குறுகிய தூரங்களுக்கு போக வேண்டியிருக்கிறது. முன்பு எல்லாம் ரோடு வசதி இல்லாமல் இருந்த கிராமங்கள் எல்லாம் இப்பொழுது ரோடு வசதி பெற்று இருக்கிற காரணத்தினால் அப்படி பஸ் போக்குவரத்தை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. அதற்காக விசேஷ நடவடிக்கையும் எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நோக்கத்துக்காகத்தான் இந்த "வேரியேஷன்" அதிகாரத்தை ஆர்.டி.ஏ.-க்குக் கொடுத்ததை வரவேற்கிறேன். சாதாரணமாக பஸ் முதலாளிகள் தார் ரோடாக இருந்தால் சுலபமாக அந்த ரூட்டை எடுக்கிறார்கள். கப்பி ரோடில் பஸ் போக வேண்டும் என்றால் தேய்மானம் அதிகமாகிவிடுமே என்பதனால் அதை எடுப்பதில்லை. ஆகவே அம்மாதிரி ரூட்டுகளில் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி பஸ் ஓட்டச் செய்யவேண்டும். சில சமயங்களில் அந்-எகனமிக் என்று சொல்லி விடுகிறார்கள். அதையெல்லாம் தவிர்த்து ஆர்.டி.ஏ.-க்கு அதிகாரம் கொடுத்து கிராமங்களுக்கு இந்த மூன்றாவது திட்டத்திலாவது போக்கு வரத்து வசதியை அதிகப்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஆர்.டி.ஏ. அமைப்பை மாற்ற வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். இப்பொழுது கலெக்டர் தான் ஆர்.டி.ஏ. என்று இருக்கிறது. அதனால் அமைச்சருக்கு அதிகப் பொறுப்பு ஏற்படுகிறது. மற்றவர்கள் அவர்களுடைய காரியங்களை சந்தேகப்பட இடம் ஏற்படுகிறது. மூன்று பேர்கள் கொண்ட கமிட்டியாக இருந்தால் அமைச்சருக்கு பழி வராது. இம்மாதிரி மற்ற இராச்சியங்களில் இருப்பதையும் பார்த்து இது பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை நாங்கள் பொதுவாக ஆதரிக்கிறோம்.

கனம் சபாநாயகர்: The Hon. Member may be brief in his speech.

* திரு. செ. மாதவன்: இந்த நேரத்திலே நான் முதன் முதலாக சுட்டிக் காட்ட விரும்புவது, உயர் நீதி மன்ற தீர்ப்பைப் பார்த்த பிறகு, மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் இதிலே உரிமை இருக்கிற காரணத்தால் குழப்பங்கள் அடிக்கடி வருகின்றன என்றும், மாநில சர்க்கார் தன்னுடைய கருத்தை வலியுறுத்தி மத்திய சர்க்காரிடம் கேட்டதற்குப் பிறகு இப்பொழுது இம்மாதிரியான திருத்தச் சட்டங்களைக் கொண்டுவர முடிகிறது. என்றும் தெளிவாகிறது. மாநில சர்க்கார்தான் போக்குவரத்துக்கு அதிக கவலையோடு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருப்பதால் அவர்களுக்கே பூரண அதிகாரமும் கொடுக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.

23rd January 1964] [திரு. செ. மாதவன்]

இப்பொழுது மசோதாவில், " variation, extension, curtailment " என்று மூன்று பகுதியாக கொடுத்திருக்கிறார்கள். வேரியேஷன், எக்ஸ்டென்ஷன் என்பதிலே எனக்கு சந்தேகம் இல்லை. ஆனால் கர்ட்டைல்மெண்டு என்ற வார்த்தை ஒரு நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் சேர்க்கபபட்டு இருக்கிறது என்று நினைக்கிறேன். சாதாரணமாக மக்களுடைய நன்மையைக் கருதியே ஆர்.டி.ஏ. ஏ.பி. என்ற ரூட்டைக் கொடுக்கிறார். அதன் ஊடே வேரியேஷன் வருவதால் ஆட்சேபணை எழுப்ப வேண்டியிருக்கிறது. அதே ரூட், ஏ-டீ-பி அல்லது ஏ-சி-பி என்று போவதில் ஒரு வேரியேஷன் கேட்கும்போது ஏ-பி டெர்மினசில் பி டெர்மினஸ் கர்ட்டைல் பண்ணக்கூடிய உரிமை கொடுக்கப்படுகிறது. அதிலே தான் மக்களுடைய நன்மை பாதிக்கப்படுகிறது என்று அஞ்சுகிறேன். ஆகையால் தான் எங்களுடைய தரப்பில் இருந்து 'கர்ட்டைல்' என்று வார்த்தையை நீக்க வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறோம்.

இந்த மூன்று பகுதிகளையும் புரோவைசோக்கள் கொடுத்து விளக்கி இருக்கிறார்கள். வேரியேஷன், எக்ஸ்டென்ஷன் இவை இரண்டுக்கும் புரோவைசோ இருக்கிறது. ஆனால் கர்ட்டைல் என்பதற்கு புரோவைசோ காணப்படவில்லை. வேரியேஷன் என்ற வார்த்தைக்கு, ' termini shall not be altered ' என்று இருப்பதை வரவேற்கிறேன். இந்த குறிப்பு உயர் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் வந்திருக்கிறது. காஞ்சிபுரம் நடேச முதலியார் ஒரு ஊருக்கு எக்ஸ்டென்ஷன் வேண்டும் என்று மனுப்போட்டு, டெர்மினஸ் மாற வேண்டும் என்று கேட்டிருந்தார். ஆனால் அது மக்களுக்கு வசதியாக இருக்காது என்று கருதி எக்ஸ்டென்ஷன் கொடுக்கக்கூடாது என்று கலெக்டர் உத்தரவு போட்டிருக்கிறார். இந்த அடிப்படையில் பார்த்தால் ஒரு டெர்மினஸை ஏற்கனவே நிர்ணயப்பது அல்லது புதிதாக நிர்ணயிப்பது என்பது மக்களுடைய நன்மையைக் கருதித்தான் கலெக்டர் செய்கிறார். இப்பொழுது டெர்மினஸை மாற்றக் கூடாது என்று அரசாங்கம் விரும்புவதை நான் வரவேற்கிறேன். அதே முறையில் புரோவைசோவில் இன்னும் கொஞ்சம் விளக்கம் கூறி ஏ.பி.சி. என்ற ரூட்டிலே ஏ-சி என்ற டெர்மினஸ் மாற்றக்கூடாது என்பது சர்க்காரின் விருப்பம் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஏ-பி-சி ரூட்டில் ஏ-பி-டி-சி என்று ஒரு வேரியேஷன் கேட்கிறவர் அந்த வேரியேஷனைப் பயன் படுத்திக்கொண்டு ஏ டெர்மினசில் இருந்து முதலிலே காலையிலே புறப்பட்டுச் சென்று மாலையில்தான் திரும்பி ஏ-க்கு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. பி-சி., பி.டி. இவைகளுக்குள்ளேயே சென்றுகொண்டிருக்க இடம் அளிக்கிறது என்று சந்தேகிக்கிறேன். அதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லா டிரிப்புகளிலும் டெர்மினஸ் மாறக் கூடாது என்பதைத் தெளிவாக்கினால் நலமாக இருக்கும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டெர்மினஸ் மாறக்கூடாது என்று போட்டால் ஷட்டில் சர்வீஸ் எப்படி நடத்த முடியும். பாரீஸ் கார்னரில் இருந்து அடையாருக்கு போகும் ரூட்டிலே

டெர்மினஸ் மாறக்கூடாது என்றால், பாரீஸ் கார்னரில் இருந்து மௌண்ட் ரோடுக்கு ஷட்டில் சர்வீஸ் வேண்டுமானால் நடத்த முடியாது.

திரு. செ. மாதவன் : அதற்காகத்தான் ஏற்கனவே சொன்னேன், ஒரு ரூட் ஓபன் செய்யும் போது கலெக்டர் மக்களுடைய தன்மையை உத்தேசித்து உத்தரவு அளிக்கிறார். ஆனால் பஸ் ஆபரேட்டர் கொஞ்ச நாள் கழித்து ஏ-யிலிருந்து புறப்பட்டு பி-க்கு மட்டும் செல்வது லாபம் இல்லை என்று கருதி லாப நோக்குடன் வேரியேஷனுக்கு மனுப்போடுகிறார். ஏ-யிலிருந்து ஷட்டில் அடித்தால் லாபமாக இருக்கும். ஆனால் அது மக்களுக்குப் பாதகமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உயர் நீதி மன்றத் தீர்ப்பிலே என்ன இருக்கிறது என்றால் " There can be a variation to reach the same by a terminus by an alternate route. என்று சொல்லியிருக்கிறார்கள். முதலிலே கலெக்டர் ஒரு வழியை நிர்ணயிக்கிறார். அந்த வழியிலே போவது மக்களுடைய சௌகரியத்துக்காக இருக்கும் என்று செய்யப்படுகிறது. ஆனால் அதற்குப் பின்னால் பஸ் ஆபரேட்டர் லாப நோக்குக்காக ரூட்டை மாற்றவேண்டும் என்று விரும்புகிறார். அதற்கும் அரசாங்கம் அனுமதி கொடுக்கும் சூழ்நிலை தான் இந்தச் சட்டத்திலே இருக்கிறது என்று சந்தேகப்படுகிறேன். மக்களுடைய நலன் பாதிக்கப்படுமென்றும் அஞ்சுகிறேன். இவற்றை ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : சார், இந்த திருத்த மசோதாவைத் தக்க நேரத்திலே அரசாங்கம் கொண்டு வந்ததற்காக, பஸ் முதலாளிகள் சார்பாகவும் போக்குவரத்து செய்யும் பொது மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காரணம் இந்த ஆக்டு 100/60 வந்த பிறகு ஒரு ரூட்டை மாற்றுவது கூடாது என்ற நீதிமன்ற முடிவின் பேரில் இந்த திருத்த மசோதா அவசியமாகிறது. இதிலே மற்றொரு விதமான முடிவும் இருக்கிறது. ஆக்டு 100/62 ரிட் அப்பீலிலே அரசாங்கம் டைரக்ஷன் கொடுத்தால் அதன் மூலமாக வேரியேஷன் தேவைப்பட்டால் கொடுக்கலாம் என்பதைப்பற்றி நீதி மன்றத்திலே எப்படி கொடுக்க முடியும் என்ற இஷ்யூ எழுந்திருக்கிறது. ஒரு முறை ஆர்.டி.ஏ-க்கு அதிகாரம் இல்லை என்று சொல்லிவிட்டு, அரசாங்கம் டைரக்ஷன் கொடுக்க எப்படி அதிகாரம் வருகிறது என்ற பிரச்னையை எழுப்பி அதில் இன்றைக்கும் முடிவு காணாமல் அது நீதி மன்றத்திலே நின்றுக்கொண்டிருக்கிறது. இப்படியாக பல குழப்பங்களின் மத்தியிலே சிலபேர் சுப்ரீம் கோர்ட்டுக்கும் போகிறார்கள். இதையெல்லாம் ஓரளவுக்குத் தவிர்க்கக்கூடிய முறையில் இந்தத் திருத்தத்தை அரசாங்கம் தக்க நேரத்தில் கொண்டு வந்திருக்கிறதென்றால், எப்படி மக்களுடைய எண்ணங்களை அரசாங்கம் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

23rd January 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

இன்னும் விளக்கமாகவும் சிலவற்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள். "வேரி, எக்ஸ்டெண்டு ஆர் கர்ட்டெய்ல்" என்று சொல்வதோடு நிறுத்திவிடாமல், 'வேரியேஷன்' என்றால் இரண்டு டெர்மினிகளை மாற்றக்கூடாது என்று அளவையும் சொல்லி,

" the distance covered by the variation shall not exceed twenty four kilometres ".

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி மாற்றிக் கொடுக்கும் போது, அந்த மாற்றப்பட்ட தூரம் 24 கிலோமீட்டர்—அதாவது 15 மைல் சற்றேறக்குறைய இருக்கும் என்று நினைக்கிறேன்—தூரத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்றும் இந்தத் திருத்தத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அவசியமா என்பதை அரசாங்கம் ஆலோசிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், பத்து மைலுக்கு மேல் இருந்தால் ஆர்.டி.எ. வேரியேஷன் கொடுப்பது கிடையாது. பத்து மைலுக்கு மேல் இருந்தால் புதிதாக ரூட் திறப்பதுபற்றி 2265 எண்ணுள்ள அரசாங்க உத்தரவு இருக்கிறது. இந்த உத்தரவுப்படி 15 மைல் தூரத்திற்குள்ளே இருந்தால் புதிதாகத் திறந்துவிடலாம். ஆகையால், அவ்வளவு தூரம் எதற்காக நாம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தால் சாதாரணமாகப் பத்து மைலுக்கு மேல் கொடுக்கக்கூடாது என்ற அரசாங்க உத்தரவு இருக்கிறது. அப்படி இருக்கும்போது, திருத்தத்திலே அந்த அளவைப் போட வேண்டுமா? இந்தப் பொறுப்பை நிர்வாகத் துறைக்கே, எப்படி எப்படிச் சாத்தியமோ அப்படிச் செய்துகொள்ளலாம் என்று விட்டு விட்டு, திருத்தத்திலே இந்த அளவைக் கண்டிராமல் இருந்திருந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

லாங் டிஸ்டன்ஸ் பஸ் விடுவதன் முக்கியமான நோக்கம், 'இன்டரஸ்ட் ஆஃப் தி பப்ளிக்' என்ற வகையில்தான் இருக்க வேண்டும். வேரியேஷனாக இருக்கட்டும், எக்ஸ்டென்ஷனாக இருக்கட்டும், கர்ட்டெய்ல்மென்டாக இருக்கட்டும், எதுவாக இருந்தாலும், போக்குவரத்திலே ஈடுபட்டிருக்கும் மக்களுடைய நன்மையைத்தான் நாம் முதன்மையாகக் கருதி மாற்றங்கள் செய்ய வேண்டுமே தவிர, வேறு எதையும் கருதக்கூடாது. அந்த வகையில் பார்க்கும்போது, 24 கிலோமீட்டர்தான் இருக்கலாம் என்று சட்டத்திலே போட்டுவிட்டால் அதனால் சில சங்கடங்கள் ஏற்படலாம். எப்படியென்றால், நான்கு ரோடுகள் சந்திக்கும் இடத்தில் இந்தக் குறிப்பிட்ட 24 மைல் முடிந்து விட்டால், அதற்குமேல் ஒரு பர்லாங்கு தூரத்தில் ஊர் இருந்தால் என்ன செய்வது? அப்பொழுது அந்த ஒரு பர்லாங்கு தூரத்திற்கப்பால் இருக்கும் ஊர் வரையில் பஸ் போவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படியிருந்தால் புது ரூட் கேட்கலாம். எக்ஸ்டென்ஷன்தான் கொடுக்கவேண்டுமென்று எங்கே இருக்கிறது ?

திருமதி டி. என். அனந்தநாயகி : புது ரூட் கொடுப்பதை வரவேற்கிறேன். ஆனால், சில ரூட்கள், லாங் ரூட்களாக இருக்கும் போது, நிறைய பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக,

கடலூர்-பாண்டிச்சேரி ரூட்டில் இனிமேல் பஸ் போட முடியாத அளவுக்கு, ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு பஸ் போகிறது. 'ஆல்ரெடி ஸாசுரேடட் வித் பஸ்' என்ற நிலைமையில் டைமிங் கொடுப்பது கஷ்டமாகிவிடும். ஆகவே, நிர்வாகக் கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்ப, லாங் ரூட்டுக்கு அனுமதி தருவதி லுள்ள கஷ்டங்களெல்லாம் ஆர்.டி.ஏ.க்குத்தான் தெரியுமே தவிர, நாம் இங்கே சட்டம் போட்டு முடுக்கிவிட்டால், நல்ல சூழ்நிலையில் அதைச் செய்ய முடியாது தத்தளிக்க நேரும். ஆகவே, அரசாங் கம் மீண்டும் பரிசீலனை செய்வது நல்லது.

இருபது, முப்பது மைலுக்கு வேரியேஷன் கொடுக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறவள் அல்ல நான். இருப்பினும் சூழ்நிலை யைப் பார்த்துத்தான் எதையும் செய்யலாம். இருபத்திநான்கு கிலோமீட்டரிலே ஊரே இல்லாமல் இருக்கலாம். இருபத்திநான்கு கிலோமீட்டரைத் தாண்டி ஒரு பர்லாங்கு தூரத்தில் ஊர் வரலாம். அப்பொழுது பஸ் 24 கிலோமீட்டரிலேயே நின்றுவிடவேண்டி யிருக்குமா, ஊருக்குப் போய் ஊர் மக்களுக்கு உதவியாக இருக் குமா என்பது போன்ற நிர்வாகக் கஷ்டங்கள் வரும்போதுதான் புரிந்துகொள்ள முடியுமே தவிர, சட்டத்தில் போட்டால் மட்டும் போதாது As far as possible R.T.O. or R.T.A should not vary any route beyond a distance of 15 miles unless under special circumstances அவர்களே அதைப் பார்த்துச் செய்துகொள்வார்கள். பஸ் ஆபரேடர் ஒரு வேரியேஷன் கேட்டால் சுலபமாகக் கிடைத்துவிடுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். ஒருவர் வேரியேஷன் கேட்டால் அதை எதிர்ப்பவர்கள் ஐம்பது பேர் இருப்பார்கள். சுலபமாக வேரியே ஷன் கிடைத்துவிடுவதில்லை. கனம் அங்கத்தினர் திரு. கலியாண சுந்தரம் அவர்கள், அரசாங்கம் டைரக்ஷன் கொடுத்தால் உடனே வேரியேஷன் வந்துவிடும் என்று சொன்னார்கள். அரசாங்கம் டைரக்ஷன்தான் கொடுக்கலாம். ஆர்.டி.ஏ. வேரியேஷன் கொடுத் தால், அதன்மேல் எஸ்.டி.ஏ. வரைக்கும், முடிந்தால் சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போவார்களே தவிர, சும்மா விட்டுவிட மாட்டார்கள், மற்றவர்கள். அரசாங்கம் டைரக்ஷன் கொடுத்த வுடனே பஸ் ஆபரேடர் உடனே பர்மிட் வாங்கிக் கொண்டு போக முடியாது. டெம்பரரி பர்மிட் வாங்கி நான்கு மாதங்களுக்கு ஓட்டலாம். அதற்குமேல் அதிகாரம் கிடையாது.

இருந்த அதிகாரத்தையும் கொடுத்துவிட்டோம். மோட்டார் வெகிகிள்ஸ் ஆக்ட்டில்கூட, அரசாங்கம் விருப்பப்பட்டவர்களுக்கு பஸ் பர்மிட் கொடுக்கிற என்று சொல்லவில்லை. 43-ஏ (2)-ன் படி இவர்களுக்குக் கொடு என்றும் சொல்ல முடியாது. It can only be a general direction and not a specific direction. யாருக்குக் கொடுக்கலாம் என்று சொல்லாமல், பொதுவாகச் சொல்லி, மீண்டும் ஆர்.டி.ஏ பார்த்து, மற்ற பஸ் ஆபரேட்டர்கள் தடுக்காமலிருந்தால் தான் கிடைக்குமே தவிர, அரசாங்கம் ஏதோ தூக்கிக் கொடுத்துவிட, எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள் என்று சொல்லும் அளவுக்கு மக்களைக் குழப்பத்தில் விடுவது சரி யல்ல.

23rd January 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

இந்தத் திருத்தத்திலே ஒரு சிறு சந்தேகம் இருக்கிறது. அதைக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்கிவிட்டால் நல்லது. 'வேரி எக்ஸ்டெண்டு, ஆர் கர்ட்டெய்ல்' என்று போட்டிருக்கிறார்கள். சில ரூட்களில் எக்ஸ்டென்ஷன் இருக்கும், சில ரூட்களில் கர்ட்டெய்ல்மென்ட் இருக்கும். சில ரூட்களில் இரண்டும் சேர்ந்து வரும். ஏ, பி என்கிற ரூட்டை ஸி-க்கு எக்ஸ்டெண்டு பண்ணினால் ரூட்டிலே ஒன்றிரண்டு ட்ரிப் குறைக்க வேண்டியிருக்கும். லாங் டிஸ்டன்ஸ் பஸ் 200 மைலுக்கு மேல் போகக் கூடாது என்று ஒரு நியதி வைத்திருக்கிறோம். இருநூறு மைலுக்குமேல் பஸ் போக முடியாது என்றால், இடையிலே இருக்கும் ட்ரிப்பைக் கர்ட்டெய்ல்மென்ட் செய்யவேண்டியிருக்கும். 'ஆர்' என்பதற்கு 'அண்டு' என்று சேர்த்துக் கொள்வதாக இருந்தால் போற்றக்கூடியதாக இருக்கும். ஏ, பி என்கிற இரண்டு டெர்மினிக்கும் இடையே 12 ட்ரிப்கள் இதுவரை ஓடிக் கொண்டிருந்தால், அதைப் பத்து ட்ரிப்பாகக் குறைத்து, ஏ, ஸி என்கிற இடங்களுக்கு ட்ரிப் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால் வழக்குகள் அதிகமாக வரும். அதையும் ஆர்.டி.ஏ. கவனித்து இரண்டு ட்ரிப் குறைத்துக் கொண்டால் மக்கள் பாதிக்கப்படமாட்டார்களா என்பதையெல்லாம் அவர்கள் யோசித்து, பின்னால்தான் இதைக் கொடுக்கலாமே தவிர, யோசிக்காமல் கொடுக்க முடியாது. இந்தத் திருத்தத்தில், 'வேரி, எக்ஸ்டெண்டு ஆர் கர்ட்டெய்ல்' என்பதற்கு 'எக்ஸ்டெண்டு அண்டு கர்ட்டெய்ல்' என்று கொண்டு சில வழக்குகள் வந்தால் அவற்றை எப்படிக் கொடுப்பது என்பதை அமைச்சர் அவர்கள் சற்று விளக்கிச் சொல்வது நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இருபத்திநான்கு கிலோமீட்டர் என்றிருப்பது நடைமுறையில் ஏதாவது சங்கடத்தைக் கொண்டுவருமா என்பதைக் கவனித்து, சட்டத்தில் அதைப் போடாமல் வேறு வகையில் செய்வது நல்லதா இல்லையா என்பதை அரசாங்கம் ஆராய்ந்தால் மிகச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஸேவிங் க்ளாஸ் போட்டிருக்கிறார்கள். இந்த சட்டத்திற்கு முன்னால் இன்னும் முடிவு காணாமல் இருந்து கொண்டிருக்கிற சில வழக்குகள் இருந்தாலுங்கூட அவை பாதுகாக்கப்படும் என்று போட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால், ஏற்கனவே நீதி மன்றங்களால் தீர்ப்பு கூறப்பட்ட சில வழக்குகள் இருக்கின்றன. வாலிடேடிங் க்ளாஸ் இந்தத் திருத்தத்தில் என்ன காரணத்தினாலோ இல்லை. அவர்களுக்கு வேறு விதமான நிவாரணங்கள் அளிப்பது மிக மிகப் போற்றத்தக்கதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இந்தத் திருத்தத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்று, இதிலே நான் சொன்னது போன்று இன்னும் நடைமுறையில் சங்கடம் இல்லாத அளவு குறைக்க, சிறு சிறு விவரங்களை எடுத்துவிட்டு மொத்தமாக 'வேரி, எக்ஸ்டெண்டு ஆர் கர்ட்டெய்ல்ஸ்' என்பதற்குப் பதிலாக, 'vary extend or curtail a route or area specified in the permit' என்று போட்டுவிட்டால், அரசாங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற

[திருமதி டி. என். அனந்தநாயகி] [23rd January 1964

அவர்களுக்கு வசதியைக் கொடுத்துவிட முடியும். அதே சமயத்தில், நம்முடைய நிர்வாக இயந்திரங்களையும் இப்படித்தான் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டால், ஏறக்குறைய நம்முடைய உள்ளக் கிடக்கையை நிறைவேற்றிவிடுவதற்கு இடமிருக்கும். இல்லாவிட்டால், சிறு சண்டைகள் ஏற்பட்டு, நீதி மன்றங்களுக்கு வழக்குகள் வந்துகொண்டிருக்கும். அதனால் வக்கீல்களுக்கு ஓரளவு தொழில் இருந்துகொண்டு தான் இருக்கும். இருபத்தி நான்கு கிலோமீட்டருக்கு மேலே போகக்கூடாது என்று சொல்லிவிட்டால் சிறு சிறு சண்டைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இதையெல்லாம் அரசாங்கம் சிந்தித்து, சிறு சிறு விவரங்களைச் சட்டங்களிலே போடுவதைக் காட்டிலும், நிர்வாக இயந்திரத்திற்கே விட்டுவிட்டால் அதன் மூலம் சங்கடங்கள் குறையுமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER: As there are some more hon. Members to speak on this Bill, I think, we can take up further discussion on this Bill after item 4, viz., discussion for short duration on urgent matters of administration.

III—GOVERNMENT MOTIONS—*cont.*

(1) CHANGE IN THE ORDER OF BUSINESS

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'that the further discussion of the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) be postponed till the discussion on item IV, viz., discussion for short duration on urgent matters of administration is over.''

The motion was put and carried and the further discussion of the Bill was postponed.

IV—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS (ADDED TERRITORIES) EXTENSION OF LAWS BILL, 1963 (L.A. BILL NO. 29 OF 1963).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"that the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 (L.A. Bill No. 29 of 1963) be taken into consideration."

The Bill seeks to secure uniformity in respect of certain laws that are in force in the rest of this State and those that are in force in the territories that are generally known as the "Tiruttani area". The said area was transferred to this State from the State of Andhra Pradesh under the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959). But, before the formation of the State of Andhra in October 1953 that area was part of the then composite State of Madras. Accordingly, all the laws that were in force in the composite State of Madras immediately before the formation of the State of Andhra continue to apply to the

[23rd January 1964

Description of area.	Whether health resort or labour colony.
(1)	(2)
2 The Highways panchayat and the area covered by the Cloudland Estate of the Narasingapuram panchayat in the Madurai district.	Labour Colony.

The Resolution was put and carried.

III—GOVERNMENT MOTION.

CHANGE IN THE ORDER OF BUSINESS

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That item III (2) viz., The Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) and the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 (L.A. Bill No. 29 of 1963) in the order of business be taken up before item (1), viz., The Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964).

The motion was put and carried and the Order of Business was changed accordingly.

IV—GOVERNMENT BILLS.

(1) THE MOTOR VEHICLES (MADRAS AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 1 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) be taken into consideration.

Sir, I have brought forward this Bill as a measure calculated to tide over certain legal difficulties in the promotion of passenger transport.

Sub-section (8) of section 57 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), deals with the procedure to be followed in regard to the variation of the conditions of any permit by the inclusion of a new route or routes or a new area or by increasing the number of services covered by a stage carriage permit, above the specified maximum. The Regional Transport Authorities had been allowing extension or variation of existing routes with a view to serving the areas where transport facilities were not available. Such extensions or variations were being granted in cases where improvements like the erection of bridges, construction of motorable roads, etc., have been carried out. Consequent on the undertaking of various development schemes and the growth of industries the need for connecting such areas is imperative and the sectors forming the variations or extensions of the route will not in many cases justify the opening of a separate route by itself. In such cases, while the

[திருமதி டி. என். அனந்தநாயகி] [23rd January 1964

அவர்களுக்கு வசதியைக் கொடுத்துவிட முடியும். அதே சமயத்தில், நம்முடைய நிர்வாக இயந்திரங்களையும் இப்படித்தான் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டால், ஏறக்குறைய நம்முடைய உள்ளக் கிடக்கையை நிறைவேற்றிவிடுவதற்கு இடமிருக்கும். இல்லாவிட்டால், சிறு சண்டைகள் ஏற்பட்டு, நீதி மன்றங்களுக்கு வழக்குகள் வந்துகொண்டிருக்கும். அதனால் வக்கீல்களுக்கு ஓரளவு தொழில் இருந்துகொண்டு தான் இருக்கும். இருபத்திநான்கு கிலோமீட்டருக்கு மேலே போகக்கூடாது என்று சொல்லிவிட்டால் சிறு சிறு சண்டைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இதையெல்லாம் அரசாங்கம் சிந்தித்து, சிறு சிறு விவரங்களைச் சட்டங்களிலே போடுவதைக் காட்டிலும், நிர்வாக இயந்திரத்திற்கே விட்டுவிட்டால் அதன் மூலம் சங்கடங்கள் குறையுமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : As there are some more hon. Members to speak on this Bill, I think, we can take up further discussion on this Bill after item 4, viz., discussion for short duration on urgent matters of administration.

III—GOVERNMENT MOTIONS—*cont.*

(1) CHANGE IN THE ORDER OF BUSINESS

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'that the further discussion of the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) be postponed till the discussion on item IV, viz., discussion for short duration on urgent matters of administration is over.''

The motion was put and carried and the further discussion of the Bill was postponed.

IV—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS (ADDED TERRITORIES) EXTENSION OF LAWS BILL, 1963 (L.A. BILL NO. 29 OF 1963).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'' that the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 (L.A. Bill No. 29 of 1963) be taken into consideration.''

The Bill seeks to secure uniformity in respect of certain laws that are in force in the rest of this State and those that are in force in the territories that are generally known as the '' Tiruttani area ''. The said area was transferred to this State from the State of Andhra Pradesh under the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959). But, before the formation of the State of Andhra in October 1953 that area was part of the then composite State of Madras. Accordingly, all the laws that were in force in the composite State of Madras immediately before the formation of the State of Andhra continue to apply to the

23rd January 1964] [Sri M. Bhaktavatsalam]

Tiruttani area by virtue of Section 53 of the Andhra State Act, 1953 Central Act XXX of 1953). However, the said laws have been modified either by way of repeal or by way of amendment by the Legislature of the State of Andhra or Andhra Pradesh to the extent they were in force in the Tiruttani area and by the Legislature of this State to the extent they were in force in the rest of this State. For instance, the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937) included in the First Schedule to this Bill was amended by the Andhra Pradesh Legislature to the extent of its applicability in the Tiruttani area and by the Legislature of this State to the extent of its applicability in the rest of this State. Besides those laws, certain new enactments have also been passed by the respective Legislatures. For instance, the Madras Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959 (Madras Act 25 of 1959) included in the First Schedule to the Bill was enacted by this Legislature subsequent to October 1953. Similarly, the Andhra and Andhra Pradesh enactments specified in the Third and Fourth Schedules to the Bill were enacted by those Legislatures subsequent to October 1953.

For the sake of avoiding the hardships that have been caused to the public of the Tiruttani area by the different sets of laws that are in force in that area and in the rest of the State and for administrative convenience, it is considered essential that the laws in force in both the areas are made uniform. Accordingly, all the laws that are in force in the Tiruttani area and those that are in force in the rest of the State are being examined and legislation has been undertaken from time to time since the alteration of boundaries either by way of separate enactments or by way of a consolidated Bill as in the instant case to secure uniformity.

The proposals for unification included in the present Bill have been explained in detail in the Statement of Objects and Reasons appended to the Bill and the provisions of the Bill do not, therefore, call for any special remarks.

Sir, I request the House to accept the motion.

MR. SPEAKER : The question is—

"that the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 (L.A. Bill No. 29 of 1963) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 15 were put and carried.

Schedules I to IV were put and carried.

Clause 1.

MR. SPEAKER : The question is—

"That Clause 1 do form part of the Bill."

[23rd January 1964

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" that in sub-clause (1) of clause 1, for the figures '1963' substitute the figures '1964'.

The amendment was put and carried.

Clause 1, as amended, was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" that the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 (L.A. Bill No. 29 of 1963), as amended be passed."

The motion was put and carried and the Bill, as amended, was **passed.**

(3) THE MADRAS APPROPRIATION BILL, 1964.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" that the Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964), be taken into consideration.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நிதி ஒதுக்கி அதைச் செலவு செய்யக் கோரும் இந்த மசோதாவின் மீது நேற்று விட்டுப்போன சில கருத்துக்களை நான் சொல்ல நினைக்கிறேன். இந்த நிதியின் மூலம் பெருவாரியாக நாம் நில ஆர்ஜிதம் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். தொழில் வளர்ச்சிக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் நில ஆர்ஜிதம் செய்வதை நாம் ஆட்சேபிக்க முடியாது. இருப்பினும் இதனால் ஏற்படும் சிக்கலை அரசாங்கம் கவனித்து அதற்கான பரிகாரம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக கஞ்சமலை அடிவாரத்திலுள்ள பல கிராமங்களில் உள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நிதியை ஒதுக்கிவிட்டோம். இதனால் அந்த கிராம மக்களிடத்தில் பீதி ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாலானவர்கள் விவசாயிகள், கைத்தறிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளும் நிலத்திற்கு நஷ்ட ஈடாக ஒரு தொகையைக் கொடுப்பதோடு அரசாங்கத்தின் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக நினைத்துவிடக் கூடாது. அவர்களுடைய நிலத்தை எடுத்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுப்பதோடு, அவர்களுக்கு மாற்று இடத்தில் குடியிருப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் நம் பொறுப்பு. நிலத்தை எடுத்துக் கொள்வது பற்றி ஆட்சேபிக்கவில்லை. இரும்பு உருக்காலை வேண்டுமென்று சொன்னால் இந்தமாதிரியான கஷ்டம் ஏற்படும். ஆனால் அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு அந்த மக்களை அப்புறப்படுத்தும் போது அவர்களுக்குக் குடியிருப்புக்கு மாற்று இடம் தேடித்தந்து
10-30 a.m. அந்தக் குடும்பங்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதும் இந்த அரசாங்கத்தின் கடமையாகும். சேலம் ஜில்லாவில் அதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். புதிய நகர அமைப்புக்களை, புதிய கிராமங்களைக்கூட சிருஷ்டிக்கக் கூடிய அளவுக்கு அரசாங்கத்திடம் நிலம் இருக்கிறது. அவர்களுக்

23rd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கெல்லாம் நிலம் ஒதுக்கி பிழைப்புக்கு வழி செய்து கொடுக்கக் கூடிய வகையில் நில ஆர்ஜித ஏற்பாடுகள் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியிருப்பு மனை விஸ்தரிப்புக்காக நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாக நேற்று நான் பேசியதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லாமலே விட்டு விட்டார்கள். திருச்சி நகரத்தைச் சுற்றி புதிய நகர அபிவிருத்தித் திட்டங்களுக்காக நில ஆர்ஜிதம் செய்யும் திட்டங்கள் எதையும் கைவிட்டு விடக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நஞ்சை நிலம் என்ற காரணத்தால் அந்தத் திட்டத்தை ஆட்சேபிப்பது சரியல்ல. ஏனென்றால் எப்படியும் அவை நஞ்சை நிலமாகவே இருக்கப் போவதில்லை. ஆகவே, திட்டமிட்ட நகர அமைப்பு வேண்டுமா அல்லது திட்டமில்லாமல் அவரவர்கள் இஷ்டப்படி எப்படி வேண்டுமென்றாலும் கட்டிக் கொள்ளட்டும் என்று விட்டு விடுவதா என்று பார்த்தால் அந்த நிலங்களையும் ஆர்ஜிதம் செய்து புதிய நகர அமைப்பை ஏற்படுத்துவதுதான் நலம் என்று கூற விரும்புகிறேன். ஆகவே, அந்தப் பகுதி நிலங்களை ஆர்ஜிதம் செய்து ஹவுசிங் போர்டுக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த துணை மதிப்பீட்டுக் கோரிக்கை மீது பேச எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்போதாவது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். துணை மதிப்பீட்டுக் கோரிக்கையில் அதிகமான டிமாண்டுகள் புதிய பணிகளுக்காக இருப்பதைப் பார்க்கும்போது எவ்வளவு துரிதமாக நாம் முன்னேறிக் கொண்டு போகிறோம் என்பதை அது எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. நான் நகரப் பகுதி உறுப்பினர் என்ற முறையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிக்கூடங்களுக்கு நல்ல கட்டிடங்களைக் கட்டிக்கொடுப்பதற்காக ஒரு கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதே சமயத்தில் சென்னை நகராண்மைக் கழக எலிமெண்டரி ஸ்கூல்களில் பிள்ளைகள் உட்கார இடம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் எல்லாம் பாழடைந்து கிடக்கின்றன. வண்ணாரப்பேட்டையில் ஒரு பள்ளியில் பிள்ளைகளைக் கட்டிடத்தில் உட்கார வைக்க முடியாமல் மரத்தடியில் உட்கார வைத்திருக்கிறார்கள். மேலும் சென்னை நகரில் இந்த மாதிரிப் பள்ளிக்கூடங்கள் வீடுகளில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர அவை பள்ளிக்கூடங்களுக்கு உகந்த கட்டிடங்களாக இல்லை. பிள்ளைகளை ஆட்டு மந்தை போல் அந்தக் கட்டிடங்களில் அடைத்து வைக்கிறார்கள். இதுபற்றியெல்லாம் நன்கு பரிசீலிக்க உடனடியாக நகரப் பிரதி நிதிகள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து எங்கெங்கே கட்டிடங்கள் சரியாக இல்லாமல் இருக்கின்றன என்பதை ஆராய்வதற்கான ஏற்பாட்டினைச் செய்து பிறகு அந்தப் பள்ளிக்கூடங்களுக்கும் நல்ல கட்டிடங்கள் கட்டித் தருவதற்கு அரசாங்கம் முன் வந்தால் சென்னை நகர மக்கள் சார்பில் அமைச்சர் அவர்களுக்கு வந்தனம் செய்யக் கடமைப் பட்டிருக்கிறேன் என்று கூற விரும்புகிறேன்.

வட சென்னையில் பெண்களுக்காக என்று ஒரு கல்லூரி தேவை என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வியாசர்பாடியில் ஹைஸ்கூல் ஆரம்பித்ததற்காகத் துணை மதிப்பீட்டில் மானியம் கோரியிருக்கிறார்கள். அதேபோன்று இந்த ஆண்டே வட சென்னையில் ஒரு பெண்கள் கல்லூரி துவக்குவதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் இதுபோன்ற அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துணை மதிப்பீடு புதிய பணிகளுக்காக அங்கங்களுக்காக வருவது நல்லது. சிறு சிறு இனங்களில் கூட, 2,000, 3,000 என்ற அளவில்கூட துணை மதிப்பீட்டில் மானியம் கோரியிருக்கிறார்கள். பட்ஜட் தயாரிக்கும்போதே இதையெல்லாம் எதிர்பார்த்து மானியத்தை அந்த அளவுக்குக் கோருவது நல்லதாக இருக்கும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளச் சலுகையைப் பொறுத்தவரை தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. குறிப்பாக, தொழிற் கல்வி பயிலுகிற மாணவர்களுக்கு, கல்லூரியில் படிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற 50 சதவிகிதம் கூடக் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்குப் பத்தில் ஒரு பங்குகூட ஸ்காலர்ஷிப்பாகக் கிடைக்கவில்லை. தொழிற் கல்வி படிக்க மாணவர்கள் அதிகமாகச் சேர வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில் பிற்பட்ட மாணவர்களுக்குத் தொழிற் கல்வி படிக்க 100-க்கு 75 பங்காவது ஸ்காலர்ஷிப் கொடுக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தத் துணை மானியத்தை மனமார வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதி ஒதுக்கீடு மசோதாவை வரவேற்கிறேன். அதன்மீது ஒன்றிரண்டு சிறிய குறிப்புக்களை மாத்திரம் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பெரிய தொழில்களை நிறுவுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும்போது சில ஷெட்யூல்களைப் பின்பற்றி நிலத்திற்கு ஒரு உரிய தொகை நிர்ணயிக்கப்படுகிறது. அது எந்த இடத்தில் பார்த்தாலும் ஐந்தில் ஒரு பாகம், அல்லது நான்கில் ஒரு பாகம்தான் இயல்பாக இருக்கிற கிரயத்திற்குக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. வசதி படைத்தவர்கள் அதை எதிர்த்துக் கோர்ட்டுக்குப்போய் அதைப் போல் மூன்று மடங்கு நான்கு மடங்குகூட கோர்ட்டுகளின் தீர்ப்புப் பிரகாரம் நஷ்ட ஈடாகப் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக, தாரங்கதாரா தொழிற்சாலைக்காக 3,000 ஏக்கர் வரை நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. வசதி படைத்தவர்கள் கோர்ட்டுக்குச் சென்று தகுந்த நஷ்ட ஈட்டைப் பெற்றார்கள். ஆனால் வசதி இல்லாத ஏழை எளிய மக்களுக்கு எந்த விதமான பரிகாரமும் கிடையாது. அவர்கள் கோர்ட்டுக்குப் போக முடியாத நிலையில் இருப்பதால் அரசாங்கமே தக்க நடவடிக்கை எடுத்து அந்த ஏழை மக்களும் தகுந்த நஷ்ட ஈடு பெறுவதற்கு வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

23rd January 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

இந்த மாதிரி நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதிகளில் தொழில்களை ஆரம்பிக்கும்போது அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது அரசியல் சட்டப் பிரகாரம் அவ்வாறு ஒரு பகுதியில் இருப்பவர்களுக்குச் சலுகை காட்டவேண்டுமென்று சொல்வது சரியல்ல என்று கூறப்பட்டது. இருப்பினும் நில ஆர்ஜிதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காவது அந்தத் தொழிற்சாலைகளில் வேலை கொடுப்பது பற்றி அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் ரோடுகள் அபிவிருத்திக்காக நிலம் இலவசமாகக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பூரணமாக உபயோகப்படுத்த முடியாத நிலை இருக்குமானால் பல பகுதிகளில் மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதைத் தடுக்கவேண்டுமானால் அதுபோன்ற இடங்களை சர்வே செய்து நிர்ணயம் செய்து பஞ்சாயத்திலோ அல்லது பஞ்சாயத்து யூனியனிலோ உள்படுத்தக்கூடிய நிலையை உண்டு பண்ண வேண்டும். ஆகவே சர்வே இலாகா சிப்பந்திகளை அதிகப்படுத்த முடியுமா என்று பார்த்து ஆவன செய்ய வேண்டும். நமக்கு நல்லெண்ணத்தோடு கொடுத்திருக்கக்கூடிய இடத்தை மேலும் அவதிக்கு உள்ளாக்காது இருக்கவேண்டும். ஹரிஜனங்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும்போது அல்லது ஒரு தொழிற்சாலை அமைக்க அல்லது நல்ல எண்ணத்துடன் சர்க்கார் ஒரு காரியத்தைச் செய்ய நிலம் ஆர்ஜிதம் செய்கையில் அதற்கு வேண்டிய ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஸ்பெஷல் தாசில்தார், டெப்டி கலக்டர் இவர்கள் இருந்தாலும் போதுமான அளவு இல்லை. அதனால் அதைச் செய்வதற்கு தாமதம் ஏற்படுவதோடு பலவித இடையூறுகளும் நேரிடுகின்றன. ஆகவே அவற்றைத் தடுக்க கூடுதல் சிப்பந்திகள் நியமிக்க அரசாங்கம் முயல வேண்டும். ஹரிஜன இலாகாவைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு ஆர்ஜிதம் செய்ய நினைக்கிறது, அதிகாரிகளும் நினைக்கிறார்கள். அதிகாரிகள் பெரும்பாலும் நல்லவர்களாக வருகிறார்கள். அப்படி எப்படியாவது எடுத்துக் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறபோது ஹரிஜன நல இலாகாவின் வேலைகளுக்கு மற்ற ஒரு இலாகா தடங்கலாக இருக்கிறது என்பதை நான் பல இடங்களில் கண்டிருக்கிறேன். ஹரிஜனங்களின் குடியிருப்பிற்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய முற்படும்போது எடுக்கக்கூடிய இடங்களைப் பற்றி சுகாதார இலாகாவிற்கு எழுதி அனுப்புகிறார்கள், அவர்கள் அபிப்பிராயம் என்ன என்று தெரிந்து கொள்ள, அவர்கள் பரிசீலனைக்காக அனுப்பப்படுகிறது. அங்கு தாமதம் ஏற்படுகிறது. இன்னும் சில பகுதிகளில் அது வேண்டுமென்றே தவிர்க்கப்படுகிறது. ஒரு உதாரணத்திற்குக் கூற வேண்டுமானால், 150 ஆண்டுகளாக ஹரிஜனங்கள் குடியிருந்துவரும் ஒரு இடத்தை ஹரிஜன குடியிருப்பிற்காக ஆர்ஜிதம் செய்ய ஹரிஜன இலாகாவிலிருந்து நடவடிக்கை எடுக்க முயற்சித்தபோது அதுகுறித்து சுகாதார இலாகாவிலிருந்து, அவ்விலாகா அதிகாரியிடமிருந்து வந்த பதில் வேடிக்கையாக இருந்தது. இங்கு சுற்றும் சூழ வயல்கள் இருக்கிறது, கொசு கடிக்கலாம் என்ற குறிப்பு இருந்தால் இது நியாயமா

என்று எண்ணத் தோன்றுகிறது. அவர்கள் விவசாய நிலத்தின் மத்தியில் இருப்பதைத்தவிர வேறு வழி கிடையாது. ஆகவே நான் சொல்ல விரும்புவது சுகாதார இலாகா சிப்பந்திகளில் இருந்து ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டரையும், பின்னர் ரோடு போன்றவைகள் அமைக்க ஓவர்சியர் போன்ற ஒரு சிறிய என்ஜினியரிங் அதிகாரியையும் ஹரிஜன நல இலாகாவோடு இணைத்து அவர்கள் இவ்விலாகாவின்கீழ் வேலை செய்யச் சொல்வது நல்லது. நான் ஒரு குறிப்பில் பார்த்தேன். தூத்துக்குடியை அடுத்து புதிதாக வரும் பாலிடெக்னிக்குக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய 1½ லட்சம் ஒதுக்கப்படுவதாகக் கண்டேன். ஏற்கனவே கொடுத்த குறிப்பில் காட்டியபடி நாஸரத்தில் 50 ஏக்கர் நிலமும் இரண்டு, மூன்று லட்சம் பெறக்கூடிய கட்டடமும் கொடுக்கப்பட்டிருந்தது. நிலம் கட்டடத்தைப் பொறுத்தமட்டில் எவ்வித வில்லங்கமும் இல்லாமல் சர்க்கார் கைக்கு வந்து விட்டதா? அதில் சர்ச் ஆப் சவுத் இந்தியாவிற்கு ஏதாவது பாத்தியதை இருக்கிறதா? ஆக வில்லங்கமற்ற முறையில் சர்க்காருக்கு அல்லது அவர்களுக்கு என்ற நிலை தெரிந்தால் அதுபற்றி ஒரு முடிவு எடுத்துக்கொண்டால் அங்கு பெண்கள் பாலிடெக்னிக்கோ அல்லது இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டோ வைத்துக்கொள்ள ஒரு முடிவு எடுக்க முடியும். அல்லது அவர்கள் தரப்பிலிருந்து செய்ய முடியும். ஆகவே தாமதம் ஏற்படாத வகையில் அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன்:** கனம் மன்றத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின்மீது நான் இரண்டொரு கருத்துக்கள் கூற விரும்புகிறேன். மாவட்டக் கழகங்கள் நடத்துகிற உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டட வசதிக்காக சர்க்கார் பணம் கொடுக்கிறது என்று இதில் கூறியிருக்கிறார்கள். சிற்றூர்களில் 300 ஜனத்தொகை கொண்ட ஊருக்கு ஒரு துவக்கப் பள்ளி என்றும் ஐந்து சதுர மைல்களுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என அமைத்திருப்பதாகப் பெருமையோடு கூறிக்கொள்கிறார்கள். உண்மையிலேயே அதைப் பாராட்டுகிறோம். ஆனால் அப்பள்ளிகள் அமைந்திருக்கிற நிலையை எண்ணிப் பார்க்கும்போது வருந்த வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. சிற்றூர்களில் அமைந்திருக்கக்கூடிய வீடுகளே சகிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. அந்த வீடுகளைவிட மோசமான நிலையில் இருக்கின்றன அங்குள்ள துவக்கப் பள்ளிகள். பள்ளிக் கூடங்கள் என்று நினைக்கும் வகையில் அங்கு பள்ளிகள் இருக்கின்றனவா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்து உயர்நிலைப் பள்ளிக்கூடம் வைக்கும்போது இடம், இடத்தைச் சுற்றி ஐந்து ஏக்கர் நிலம் கட்டடம் ஆகியவற்றை அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கட்டித்தருவதாக இருந்தால் உயர்நிலைப் பள்ளியை வைக்கிறோம் என்று சொன்னார்கள். எப்படியாவது உயர்நிலைப் பள்ளி வர வேண்டுமென்று முதலில் ஒப்புக் கொண்டார்கள். உயர்நிலைப் பள்ளியை வைத்திருக்கிறார்கள். ஆனால் அங்குள்ள நிலை என்னவெனில் ஒரு வகுப்பு, இரண்டு வகுப்புகள் வைப்பதற்குக்கூட கட்டடம் இல்லை. அந்த நிலை இருக்கிறது. என் ஊரில் ஒரு துவக்கப் பள்ளி இருந்த இடத்தை பெண்கள் உயர்நிலைப் பள்ளி

23rd January 1964] [புலவர் கா. கோவிந்தன்]

யாக வைத்து விட்டார்கள். துவக்கப் பள்ளிக்கு வேறு ஒரு இடத்தில் வாடகைக் கட்டடத்தில் ஏற்பாடு செய்தார்கள், பஞ்சாயத்து யூனியன் வாடகை கொடுப்பது என்ற நிலையில். அது தனிப்பட்டவர் சொத்து. அவர்கள் முதலில் கீத்துக் கொட்டகை போட்டுக் கொடுத்தார்கள். மழையில் அது அடித்துக்கொண்டு போகப்பட்டது. 17 ஆசிரியர்களுக்கு மேல் வேலை செய்யும் அப் பள்ளி மேல் கூரை இல்லாமல் இருக்கிறது, பல மாதங்களாக இப்படி நடைபெற்றுக்கொண்டு வந்தது. இப்போது மழை அதிகமாகி விட்டது. பள்ளி நடத்த முடியாத நிலையில் அந்த ஊரில் வேறு ஒரு பகுதியில் உள்ள பள்ளிகளில் காலையில் நங்கள் வைத்துக் கொள்ளுங்கள், மாலை இரண்டு மூன்று வகுப்புக்கள் ஒரு பள்ளியில், மற்ற வகுப்புக்கள் வேறு பள்ளியில் நடக்கட்டும் என்று மாற்றி மாற்றி நடைபெற்று வருகின்றன இரண்டு திங்களாக. ஆக, கல்விக் கூடங்களை அதிகப்படுத்தி விட்டோம் என்று கூறுகிற நேரத்தில் மாணவர்கள் விரும்பிப் படிக்கக்கூடிய நிலையில் கல்விக் கூடங்கள் அமைய வேண்டும். இந்த மன்றத்தில் கல்வி அமைச்சராக இருந்து இப்பொழுது மத்திய அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர் அவர்கள் தாம் மேல் நாடுகளுக்கு சென்று வந்ததைப்பற்றி எழுதிக் காட்டு கிற புத்தகத்தில் அங்கெல்லாம் பள்ளிகள் எப்படி எப்படியிருக் கின்றன என்பது பற்றி எழுதியிருக்கிறார்கள். இங்கு ஒரு துவக்கப் பள்ளியில் 40 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்றால் அட்டன்டன்ஸ் ரெஜிஸ்டரில் 5, 10 பேர்கள்கூட இல்லாத நிலை இருக்கிறது. பள்ளிக்கு செல்ல வேண்டுமென்ற எண்ணம், ஆர்வம் மாணவர் களுக்கு ஏற்படவேண்டும். பள்ளிக்கூடங்களைக் கண்டால் மாணவர்கள் மிரண்டு ஓடுகிற நிலையில்தான் இன்று பள்ளிக் கட்டடங்கள் காட்சியளிக்கின்றன. ஆக இந்த நிலை இல்லாமல் மாணவர்கள் துவக்கப் பள்ளிகளுக்கு விரும்பி வருகிற நிலையில் அமைத்துத் தரவேண்டும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, உயர்நிலைப் பள்ளி களுக்கு இப்போது 25,000 ரூபாய் கொடுப்பதாக திட்டமிட்டிருக் கிறார்கள். இது எல்லா பள்ளிக் கூடங்களுக்கும் இல்லை. மாவட் டத்தில் ஒரு சில பள்ளிகளுக்குத்தான் இது. அதிலும் 25,000 சர்க்கார் கொடுக்கப் போவதில்லை. 12,500 ரூபாய் பொது மக்கள் கொடுத்தால் 12,500 ரூபாய் சர்க்கார் கொடுக்கும் என்ற திட்டம் இருக்கிறது. அப்படி சர்க்கார் 12,500 ரூபாய் கொடுத்து 12,500 ரூபாய் பொது மக்கள் கொடுப்பதாக வைத்துக்கொண்டா லும், 25,000 ரூபாயில் ஒரு உயர்நிலைப் பள்ளி கட்டி முடிக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆக, பள்ளிகளை அதிகமாக்குவதோடு நின்று விடாமல் பள்ளிகள் சீராக நடப் பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்ற என் கருத்தை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, சிறுவர் கலைக் களஞ்சியம் அமைக்கப்பட இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள், அதை வரவேற்கிறேன். அப்படி வரவேற்கும்போது இப்போது தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிட்டிருக்கிறார்கள். அதை வெளி யிட்டவர்களை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். அரிய பெரிய செய்திகளைத் திரட்டித் தந்திருக்கிறார்கள். நல்ல முறையில் அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் நல்ல முறையில் வண்ணப்

[புலவர் கா. கோவிந்தன்] [23rd January 1964

படங்கள் போட்டு அச்சிட்டிருக்கலாம். சிறுவர் கலைக் களஞ்சியம் என்று கூறும்போது மாணவர்கள் அப்புத்தகத்தை கீழே வைக்காத அளவிற்கு, மாணவர்களுக்கு அப்புத்தகத்தில் விருப்பம் செல்லக்கூடிய நிலையில் வண்ணப் படங்கள் நிறையப் போட்டு அது அமைய வேண்டும். அதற்கு, தக்கவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து வெளியிட வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள் கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் நிதி ஒதுக்கீட்டு மசோதா இந்த மன்றத்தின் ஆய்வுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. புதிய பணி களுக்கு என்று நிதி ஒதுக்கும் மசோதாவில் இடங்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் ஒரு பெரும் பிரச்னை இருக்கிறது. இங்கு 376-க்கு மேல் சேரிகள் இருந்து கொண்டிருக்கின்றன. சேரிவாழ் மக்கள், குடிசை வாழ் மக்கள் வாழ்கிற இடங்களை சீர்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு நகராட்சி மன்றம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றாலும் அதற்கு மிக்க அளவில் உறுதுணை புரிய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சென்னை மாநகரம் போன்ற முக்கியமான நகரங்களில், எவ்வளவோ வசதிகளும், அழகான நிலைமையும் சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டில் இருந்தாலும் இங்கு சேரிவாழ் மக்களின் பிரச்னை ஒரு பெரும் பிரச்னையாக இருக்கிறது. புதுப்புது சேரிகளும் உருவாகும் நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அந்தந்தப் பகுதி களில் இருக்கின்ற தொழிலகங்களிலும், தொழிற்சாலைகளிலும், வணிகக் கூடங்களிலும், வியாபார இடங்களிலும் பணி புரிகின்ற வர்கள் இவற்றின் பக்கத்திலேயே இருந்து தங்கள் பணிகளை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கின்ற காரணத்தால், அங்கங்கே பக்கத் தில் திட்டுதிட்டுகளாக சேரிகளை உருவாக்கி அதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவ்விதம் வாழ்கின்றவர்களின் எண்ணிக்கை வர வர பெருகிக்கொண்டேயிருக்கிறது. சிறிய சிறிய இடங்களில் எல்லாம், பாதை ஓரங்களில் எல்லாம், இத்தகைய சேரிகள் அமைகின்றன. இத்தகைய நிலையில் சேரிவாழ் மக்களை அப்புறப்படுத்தி, கோடம்பாக்கத்திற்கு அப்பாலுள்ள இடத்திலும், மற்றும் நகருக்கு அப்பாலுள்ள இடத்திலும் புதிய கட்டிடங்களை கட்டி, நாலைந்து மைல்களுக்கு அப்பால் போய் குடியேற வேண்டும் என்று சொல்லுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரண மாக சேரிவாழ் மக்களுக்கு எண்ணற்ற பல தொல்லைகள் வந்து சேருகின்றன. ஆகவே அவர்கள் வாழ்கின்ற இடங்களிலேயே துப்புரவாக இருக்கும்பொருட்டு நல்ல முறையில் கட்டிடங்களை அமைத்துக் கொடுக்கவும் அரசு முற்பட்டிருக்கிறது என்றாலும், முக்கியமாக சென்னை நகரத்திற்கு அப்பால் சென்று சேரிவாழ் மக்கள் வாழ்வது என்பது அவர்களுக்கு பெரியதொரு தொல்லையாக இருக்கிறது. முக்கியமாக மிக அழகாக இருக்கின்ற மெரினா கடற்கரை ஓரத்தில் இருக்கின்ற குப்பங்கள், சேரிகள், அங்கேயிருக் கின்ற பல்கலைக் கழகக் கட்டிடங்கள், மாநிலக் கல்லூரிக் கட்டிடங்

23rd January 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கள் இவைகளினுடைய அழகை பாதிக்கின்ற வகையில், அமைந்திருக்கின்றன. ஆகவே சேரிகளை சீர்திருத்துகின்ற வேலைகளில் அரசினர் ஈடுபடும்போது, முதலிடமாக (பிரையாரிட்டியாக) இம்மாதிரிப்பட்ட சேரிகளையும் குப்பங்களையும் மாற்றி அமைக்கின்ற முறையில் அவர்களைத் தக்க இடங்களில் குடியேற்றுவதற்கான முயற்சிகளை அரசினர் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, கூவம் ஆற்றையும், பக்கிங்ஹாம் கால்வாயையும் பொருத்த அளவில், நகரில் நோய் பரவுவதற்கு இவைகள் ஒரு காரணமாய் இருக்கின்றன என்கின்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஆகவே இதை துப்புரவு செய்கின்ற வகையில், இதிலுள்ள நீரை மாற்றி கடல் நீரை கொண்டு, இதன் மூலமாக நகரில் நோய்க் கிருமிகள் பரவாமல் தடுக்கின்ற வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருப்பதாக சொல்லப்பட்டது. அத்தகைய திட்டங்கள் இப்போது எந்த நிலையில் இருக்கின்றன, சீர்திருத்துவதற்கான திட்டங்கள் எந்த நிலையிலுள்ளன என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று நான் குறிப்பிட விரும்புவது, நமமுடைய ஜனநாயக நாட்டில், இப்போது இருக்கின்ற நிலைமையில் அரசியல் கட்சிகள் தங்கள் கருத்தைப் பொது மக்களுக்கு தெரிவிக்க கூட்டங்களைக் கூட்ட வேண்டுமென்றால், பூங்காக்களிலும், வானொலிக் கூடங்களிலும், விளையாட்டு மைதானங்களிலும்தான்—சென்னையைப் பொறுத்தளவில்—கூட்டங்களை கூட்ட வேண்டியிருக்கிறது. ஜனநாயக நாட்டிலுள்ள பயனை மக்கள் நல்ல முறையில் அனுபவிக்க வேண்டுமென்பது எவ்வளவு இன்றியமையாததோ, அந்த அளவுக்கு ஜனநாயக நாட்டில் பொதுக் கூட்டங்களைக் கூட்டுவதற்கும் தகுந்த இட வசதியை அரசினர் செய்து கொடுப்பதும் இன்றியமையாதது. இத்தகைய நல்ல வசதியான இடங்கள் சென்னை நகரில் இல்லாததன் காரணமாக, சென்னை நகரின் பல இடங்களிலும், முச்சந்திகளிலும், நாச்சந்திகளிலும், சந்திகளிலும் பொதுமக்களுக்குத் தீங்கு ஏற்படக்கூடிய நிலைமையில் கூட்டங்களை நடத்தவேண்டிய நிலைமையில் அரசியல் கட்சியினர் இருக்கிறார்கள். சென்னை நகரில் அகலமாக இருக்கின்ற இடங்களில் ஐலன்ட் கிரௌன்ட் போன்ற இடங்களைப் பொதுக் கூட்டங்களுக்குப் பயன்படுத்துகின்ற வகையில் ஏதாவது வழிவகை செய்வதற்கு அரசினர் முன்வர வேண்டும். கடற்கரையில் கூட்டம் கூட்டுவதாக இருந்தால், எந்தக் கட்சியினராக இருந்தாலும் சரி, 400, 500 ரூபாய் செலவழித்தால்தான் கூட்டம் நடத்த முடியும். ஆகவே இதை அரசினரே பொறுப்பேற்று, சில நகராட்சி மன்றங்களில் ஏற்படுத்தியிருப்பது போல், சென்னை நகரத்திலும், அரசினரோ அல்லது மாநகராட்சிக்கு நிதி உதவி செய்கின்ற வகையிலோ கடற்கரை போன்ற இடங்களில் எளிதாக எந்த கட்சியினராக இருந்தாலும் கூட்டம் கூட்டுவதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். இத்தகைய பணிகளை எல்லாம் அரசினர் செய்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [23rd January 1964

வதற்கான திட்டங்களைத் தீட்டி செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, முதன்முதலாக இந்த விவாதத்தை துவக்கிய திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் தொழில் பள்ளி போன்றவைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய பரிகாரம் அளிக்கவேண்டும் என்பதைப்பற்றி கூறினார்கள். கூடியவரையில் தவிர்க்கக் கூடாத காரணத்தினால் நிலம் ஆர்ஜிதம் செய்யவேண்டியிருந்தால் அதனால் பாதிக்கப்பட்டவர்களுடைய நிலையைப்பற்றி அரசாங்கம் கவனித்துக்கொண்டு தான் வருகிறது. முக்கியமாக கனம் அங்கத்தினர் அவர்கள் காஞ்சமலைப் பகுதியைப்பற்றி சொன்னார்கள். இந்த இடத்தில் நில ஆர்ஜிதம் செய்வதில் ஏற்படுகின்ற கஷ்டங்களைப்பற்றி எனக்கு தந்திகள் வந்து கொண்டிருந்தன. நான் புவனேஸ்வரத்தில் இருக்கும்போதுகூட தந்தி வந்தது. நாம் எவ்வளவோ காலத்திற்குப் பின்னால்தான் உருக்காலையை ஏற்படுத்தவேண்டும் என்று திட்டமிட்டு இந்த ஆலையை ஏற்படுத்துவதற்கு அத்தியாவசியமான முறையில் ஆர்ஜிதம் செய்து வருகிறோம். இந்தத் தொழில் வரப் போகிறதா இல்லையா என்றுகூட பல அங்கத்தினர்கள் தங்கள் ஐயத்தை தெரிவித்தார்கள். வந்துவிட்டது, நிச்சயமாக வந்துவிடும், இதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்யலாம் என்று சொல்லி நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது, இதனால் பாதிக்கப்பட்டவர்களின் பேரில் அனுதாபம் கொண்டு பலர் தந்தி கொடுத்திருக்கிறார்கள், அவர்களை நான் பாராட்டாமல் இல்லை. அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்கள், கவலை இவைகளைக் கனம் அங்கத்தினர்கள் உணர்வதுபோலவே அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது. முக்கியமாக ஏழைகளுக்கு பாதகம் வராத முறையில் எந்தத் திட்டத்தையும் செயல் படுத்தவேண்டும் என்று அரசாங்கம் உறுதியான கொள்கையை கொண்டிருக்கிறது. உண்மையாக பாதிக்கப்படுகின்றவர்கள்பேரில் என்ன செய்யலாம் என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக காஞ்சமலைப் பகுதியில் ஆர்ஜிதம் செய்வதில் உண்மையில் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் திருச்சி போன்ற நகரங்களில் எல்லாம் வீடுகள் கட்டுவதற்காக நிலங்களை ஹௌஸிங் போர்ட் ஆர்ஜிதம் செய்வதைப்பற்றி குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் முன்பு பதில் சொன்னபோது வேண்டாம் என்று விட்டுவிடவில்லை. அவகாசம் இல்லாததின் காரணமாகத்தான் குறிப்பிடவில்லை. ஆட்சேபம் இருக்கிறது என்பதற்காக அரசாங்கம் திட்டத்தை நிறுத்த முடியாது. ஆனால் ஆட்சேபம் நியாயமாக இருந்தால் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. ஆனால் பொது நலத்திற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது சிலர் ஆட்சேபிக்கின்றார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று இன்னும் அதிக விலைகூட விற்கலாம் என்று சொந்தக்காரர்

23rd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

கள் நினைக்கிறார்கள். நஞ்சை நிலமாக இருந்தால்கூட அல்லது சாகுபடிக்கு ஏற்ற நிலமாக இருந்தால் அந்த ஆட்சேபனை ஓரளவுப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் அரசாங்கத்தின் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும்பொழுது விலை அதிகப்படும், அப்போது அதைப் பயன்படுத்திக்கொண்டு இந்த நிலங்களை அதிக விலைக்கு விற்கலாம் என்ற நினைப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு இருக்கிறது. அந்த எண்ணத்தோடு, அதிக விலைக்கு விற்கலாம் என்ற எண்ணத்தோடு ஆட்சேபிக்கின்றார்கள் என்றால், அவர்களுடைய ஆட்சேபனை நம்முடைய கவனத்திற்குரியது அல்ல என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அரசாங்கம் அதையும் உணர்ந்துதான் நடவடிக்கை எடுத்து வருகிறது. உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆட்சேபம் இருந்தால் அதை அரசாங்கம் கவனிக்கும். இது போன்ற வீடுகளை பிற நகரங்களிலும் கட்டவேண்டும் என்று சொன்னார்கள். அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. மற்ற இடங்களையும் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். எல்லா இடங்களிலும் வீடு பற்றாக்குறை இருக்கிறது. மேலும் மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், மாவட்டங்களிலுள்ள மாவட்டக் கழகப்பள்ளிகளுக்கு கட்டிடங்களுக்காக உதவி அளிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் மான்யத்தைப் பற்றி குறிப்பிடுகையில், சென்னை நகரத்திலுள்ள பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் சிறியவைகளாய் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நல்ல முறையில் கட்டுவதற்கு உதவி அளிக்கவேண்டாமா என்று கேட்டார்கள். அளிக்கவேண்டியதுதான். ஆனால் ஒரு விஷயம் அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வருகிறது. நகரங்களில், முக்கியமாக நடைபெறுகின்ற கூட்டங்கள், விழாக்கள் முதலியவைகளில் நான் பேசும்போது எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறேன், அதாவது நகரங்கள்தான் கிராமங்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று, ஆனால் கிராமங்கள்தான் நகரங்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களில் ஒரு பள்ளிக்கூட கட்டிடம் அமைக்கவேண்டும் என்றால், மொத்தம் 25 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது என்றால், 12.500 ரூபாய் கிராமத்திலுள்ள மக்களே வலிந்து கொடுக்க முன் வருகிறார்கள். புலவர் கோவிந்தன் அவர்கள், இப்போதுள்ள இந்த 25,000 ரூபாயும் எந்த மூலைக்கு காணும் என்று குறிப்பிட்டார்கள். காணாததுதான், இதை இன்னும் பெருக்கவேண்டும். ஆனால் இந்த ஆண்டு 25,000 ரூபாய் இருக்கிறது என்றால், அதை வைத்துக்கொண்டு ஓரளவுக்கு பள்ளிக்கூடக் கட்டிடத்தை கட்டுகிறார்கள். உயர் நிலைப் பள்ளிகளுக்கு நல்ல கட்டடங்கள் இல்லை என்று திரு. கோவிந்தன் அவர்கள் கண்டதைக் குறிப்பிட்டார்கள். உண்மைதான். நல்ல கட்டடங்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை தவிர்க்கவேண்டுமென்றுதான் பார்க்கிறோம். கிராமத்தில் உள்ள மக்கள் இதிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள். மேலும் அக்கறை கொள்ளவேண்டும், இப்போது உயர்நிலைப்

11-00 a.m

[திரு. எம். பக்தவத்சலம்] [23rd January 1964

பள்ளிப் படிப்பு ஒரு குறைந்த பட்ச படிப்பு. கிராமத்தில் உள்ள எல்லோரும் இந்தப் படிப்பாவது பெறவேண்டும் என்று ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதை நாம் புறக்கணிப்பதற்கில்லை. அவ்வளவு ஆர்வம் இருக்கிறது என்றால் கட்டடம் கட்டுங்கள், இரண்டாண்டு ஆகட்டும், வேண்டிய வசதி ஏற்பட்ட பிறகு உயர்நிலைப்பள்ளி வைப்போம் என்றால் அந்த இரண்டு ஆண்டுகள் குழந்தைகளுக்கு படிப்பு இல்லாமல் போய்விடும். அதை உணர வேண்டும். அதுவும் புலவர் போன்றவர்கள் முக்கியமாக உணர வேண்டும். கட்டடம் வேண்டியதுதான். கட்டடம் இல்லாமல் நிழலிலே, மரத்தடியில் வைக்கலாம் என்று சொல்லவில்லை. பண்டைக் காலத்தில் மரத்தடியில்தான் உட்கார்ந்து படித்தார்கள், அந்த முறையில் செய்யலாம், கல்வி பெறலாம் என்று திருப்பிச் சொல்லவில்லை. கட்டடம் எல்லாம் கட்ட ஓராண்டு காலம் ஆகி அதுவரை படிப்பு இல்லாமல் போனால், உயர்நிலைப் படிப்புக்குப் போகாமல் ஓராண்டு காலம் போய் விட்டாலும் பிறகு அவன் பள்ளிக்கே போகமாட்டான். நிரட்சர குக்ஷியாகத்தான் இருப்பான் ஆரம்பப்பள்ளி என்பது ஆதாரம். குறைந்த பட்சம் உயர் நிலைப் பள்ளி படிப்பாவது இருக்கவேண்டும். இதை உணர்ந்துதான் கிராம மக்களிடம் 10,000 ரூபாய் கொடுங்கள் என்று சொன்னால் உடனே கொடுத்து விடுகிறார்கள். மேலும் கட்டடம் கட்ட முன் வருகிறார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் கட்ட வசதி செய்ய முடியவில்லை. அரசாங்கம் மிகுந்த அக்கறை செலுத்துவதாகத் தான் இருக்கிறது. மக்கள் ஒத்துழைப்பைப் பெற்று தகுதியான கட்டடங்கள் கட்டவேண்டுமென்பது தான் சர்க்காருடைய எண்ணம். அத்தகைய கட்டடங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு கிராமங்களில் கொஞ்சம் வசதியுள்ள கட்டடத்தைக் கொடுங்கள் என்று கேட்டால் உடனே ஆரம்பப் பள்ளி கட்டடத்தைக் கொடுக்கிறோம், உயர்நிலைப் பள்ளியை அங்கே ஆரம்பித்து விடுங்கள் என்று முன்வருகிறார்கள். அவ்வாறு கொடுக்க முன் வரும்போது எனக்கு தயக்கம் ஏற்படுவதுண்டு. எப்படியாவது உயர்நிலைப் பள்ளி வர வேண்டும் என்று கொடுத்து விட்டால் ஆரம்பப் பள்ளி கெட்டு விடக்கூடாதே என்று எண்ணம் ஏற்படுவதுண்டு. அதைப்பற்றி அவர்களிடம் கேட்டால், இன்னொரு கட்டடம் இருக்கிறது, எப்படியோ பார்த்துக்கொள்கிறோம், உயர்நிலைப் பள்ளி சீக்கிரத்தில் வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தகுதியான கட்டடம் வேண்டுமென்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதன் மீது கவனம் செலுத்திக்கொண்டும் வருகிறது.

சென்னை நகரைப் பொறுத்த மட்டில் கனம் அனந்தநாயகி அம்மையார் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டால், எப்படி கிராமங்களில் முன் வந்து 12,000 ரூபாய் கேட்டாலும் உடனே கொடுக்க முன் வருகிறார்களோ . . (திரு. மீ. கலியாணசுந்தரம் குறுக்கிடு) இங்கே அந்தப் பழக்கம் இல்லை, சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்கு. யாரோ ஒன்றிரண்டு பேர்கள் கட்டடம் கட்டியிருக்கிறார்களே தவிர வேறு இல்லை. நகரத்தில் உள்ளவர்கள் உதவி அளிக்க முடியாது. கிராமத்தில் உள்ளவர்களைவிட கீழ்த்தரமான நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இதெல்லாம் வழக்கத்தைப் பொறுத்தது. அந்த வழக்கம் இங்கே

23rd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

வரவில்லை. கனம் அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள் கொஞ்சம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேகூட மிகவும் கேவலமாகத் தான் இருக்கிறது. அதிலும் நகர மன்றத்தில் நான் இருந்த காலத்தில், அப்போது எல்லா நகர மன்றப் பள்ளிகளுக்கும் சென்று பார்வையிடுவோம். வாடகைக்கு இருக்கிற கட்டடம் நல்ல முறையில் இருக்கிறதா என்று பார்ப் போம். அதெல்லாம் ரொம்பநாள் முன்பு. 26-27 ஆண்டுகளுக்கு முன் பார்த்தது. இப்போது இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, மேயரைக் கேட்டால் அப்படியேதான் இருக்கிறது, கொஞ்சம்தான் கட்டடம் வந்திருக்கின்றது என்று சொன்னார்கள். இத்தனை நாள் என்ன செய்தார்கள் சென்னை நகரத்தில் உள்ளவர்கள்? தகுதியான கட்டடங்கள் இல்லை. இருக்கிற கட்டடங்கள் ரொம்பவும் குறைவு. நகராட்சி மன்றத்தோடு பொதுமக்களும் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறுவேன். அந்த முறையில் அக்கறை எடுத்துக்கொண்டால் அரசாங்கம் ஓரளவுக்கு உதவி அளிக்கும் என்றும் கூறுவேன்.

வட சென்னையில் ஒரு கல்லூரி அதுவும் பெண்கள் கல்லூரி, வேண்டுமென்று கனம் அம்மையார் கூறினார்கள். நியாயமான கோரிக்கைதான். வட சென்னையில் கல்லூரி வேண்டியதுதான். அதுவும் பெண்கள் படிக்க ஒரு கல்லூரி அவசியம்தான். ஆண் களுக்காவது தியாகராஜர் கல்லூரி இருக்கிறது. அதிலும், மற்ற இடங்களிலும் கல்லூரிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். மற்ற ஜில்லாக்களில் கேட்கிறார்கள். அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டு மென்றால் 5 லட்ச ரூபாயாவது முதலில் கொடுங்கள் என்று சொல்லு கிறோம். அரசாங்கமே எல்லாவற்றையும் தலையில் போட்டுக் கொள்ள முடியாது. தனிப்பட்டவர்கள் நடத்தினால் நடத்தட்டும் —உதவி அளிக்கிறோம். அரசாங்கமே நடத்த வேண்டுமென்றால் ஐந்து லட்சம் ரூபாய் வசூல் செய்து கொடுங்கள் என்று சொல்லு கிறோம். கல்லூரியே இல்லாத இடங்களில், கடலூர், வட சேலம் போன்ற இடங்களில் கல்லூரி வேண்டுமென்று சொல்லும்போது ஐந்து லட்சம் ரூபாய் வசூல் செய்து கொடுங்கள், மொத்தத்தையும் உடனடியாகக் கொடுக்காவிட்டாலும், முதலில் 2 லட்சம், அப்புறம் 2 லட்சம் பிறகு 1 லட்சம் என்றாவது கொடுங்கள் என்று சொல்லுகிறோம். ஜில்லாக்களில் எங்கெங்கு கல்லூரி வைக்கலாம், என்று யோசிக்கிறோமோ அங்கெல்லாம் கொடுக்கிறோம். என்று வந்திருக்கிறார்கள். சில இடங்களில் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். வட சேலத்தில்—இங்கே இருக்கிறவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்—இப்போதே கட்டி விட்டோம் என்று வந்திருக் கிறது. நாங்கள் கொடுக்கிறோம் என்று சென்னை நகரில் அப்படி வரவில்லை. வட சேலத்தில் 75,500 ரூபாய் இப்போதே கட்டி விட்டோம் என்று சொல்லுகிறார்கள். இன்னொரு இடத்தில் ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் கட்டி விட்டதாகச் சொல்லு கிறார்கள். ஜில்லாக்களில் இந்த அளவுக்கு முன் வருகிறார்கள். சென்னை நகரத்தில் அப்படி இல்லை. இதற்குக்கூட கனம் அம்மையார் தூண்டவேண்டும். இருந்தாலும் கொஞ்சத்தில் ஆகும் என்று எனக்குத் தோன்றவில்லை. இது ரொம்பவும் கேவலம். நான் பின்னால் சொல்லப்போகிறேன். வட சென்னையில் ஏதாவது

[திரு. எம். பக்தவத்சலம்] [23rd January 1964

கல்லூரி அமைப்பதாக இருந்தாலும், விதி விலக்காக வைத்து சென்னை நகரத்தில் முன் வந்து மக்கள் அளிக்காவிட்டாலும் ஏற்படுத்தவேண்டும் என்று அவர்கள் கூறுவார்கள். அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அது சென்னை நகரத்திற்கு ரொம்ப கேவலம் என்பதை உணரவேண்டும்.

அடுத்து, வட சென்னையில் கல்லூரி பற்றி இப்போது துணை மதிப்பீட்டில் வரவில்லை என்று சொன்னார்கள். ஃபிப்ரவரி மாதம் வரவில்லை, இதிலே வரவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள். அவர்களுக்கு கல்வி விஷயம் பற்றி தெரியும், இப்போதே கல்லூரியை எதிர்ப்பார்ப்பதற்கில்லை. அப்படி வருவதாகயிருந்தாலும் அடுத்த ஆண்டில்தானே வரும். வியாசர்பாடியில் தொழிலாளர் வசிக்கும் பகுதியில் அவர்களுக்கு கல்வி வசதி அளிக்கவேண்டும் என்றும் அரசாங்கமே நடத்த வேண்டும் என்றும் அதற்கு மான்யம் கோரியிருக்கிறோம். இப்போதே வரவேண்டுமென்றால் எப்படி வரும்? இந்த துணை மதிப்பீட்டில் எப்படி வரும்? பின்னால் வரவு-செலவுத் திட்டத்தில் பார்க்க வேண்டும். அதிலே இல்லாமல் போனால் சொல்ல வேண்டும். அடுத்த வரவு-செலவுத் திட்டம் வருவதற்குள் சென்னை நகரத்திற்குக் குறை வராமல் மாவட்டங்களைவிட சென்னை பிற்போக்காக இருக்கிறது என்ற நிலை வராமல் இப்போதிலிருந்தே வசூலித்து, நாங்களும் பின் தங்கியவர்கள் அல்ல, கல்லூரி அமைப்பதாக இருந்தால் இதோ கொடுக்கிறோம் எங்கள் காணிக்கையை என்று முன் வருவதற்கு கனம் அம்மையார் அவர்கள் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம் தொழில் கல்வி ஸ்காலர்ஷிப் கொடுப்பது போதாது என்று சொன்னார்கள். அது அப்போதைக்கப்போது தொடர்ந்து கவனிக்கப்பட வேண்டிய விஷயம். போதாது என்றால் அது கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது. ஓரளவுக்குத்தான் ஒதுக்க முடியும். ஒதுக்கப்பட்டதற்கு மேலும் கொடுக்கிறார்கள். ஓரளவு ஒதுக்கினாலும் பின்னால் அதிகப்படுத்துகிறோம். அதனால்தான் துணை மதிப்பீட்டுக்கு வருகிறோம்.

கனம் உறுப்பினர் செல்வராஜன் அவர்கள் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு காம்பென்ஸேஷன் கொடுப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். ரெவின்யூ அதிகாரிகள் பார்த்து நன்றாக ஆலோசித்து கொடுக்கிறார்கள். இந்த மன்றத்திலேயே ஒரு கேள்வி வந்தது. ஏன் அதிகமாகக் கொடுத்தார்கள் என்ற கேள்வி வந்தது. அதைக் கூட விசாரித்துப் பார்த்தோம். எல்லாவற்றையும் நன்றாகப் பார்த்துத்தான் கொடுக்கிறார்கள். கோர்ட்டுக்குப் போனால் இரண்டு அல்லது மூன்று மடங்கு கொடுக்கிறார்கள் என்றால் அது அவர்கள் அபிப்பிராயம். கோர்ட்டார்கள் கொடுக்கிறார்கள் என்றால் எல்லா நீதிபதிகளும் ஒரே மாதிரியா கொடுக்கிறார்கள்? ஒரு தாலுகாவில் இருக்கிற நீதிபதி ஒரு மாதிரி கொடுக்கிறார், அதே மாதிரி நிலம் சம்பந்தமாக இன்னொரு தாலுகாவில் இருக்கிற நீதிபதி அதைவிட அதிகமாக கொடுக்கச் சொல்லுகிறார், இன்னொரு இடத்தில் குறைவாக கொடுக்கச் சொல்லுகிறார், இது அவர்கள்

உரிமை. அதைப்பற்றி நாம் குறை சொல்ல முடியாது. நீதிபதி கொடுக்கிற மாதிரி ஏன் கொடுக்கவில்லை என்று கேட்பது சரியல்ல. அவர்கள் விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்கிறார்களா என்ன? அவர்களுக்கு தோன்றுகிறது, சொல்லுகிறார்கள். ஒரு பழமொழி சொல்லுவார்களே—ஊரார் வீட்டு நெய்யே, பெண்டாட்டி கையே என்று சொல்லுவார்கள். நில ஆர்ஜிதம் செய்வதினாலே ஏற்படும் கஷ்டத்தைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. எம். எஸ். செல்வ ராஜன் அவர்கள் சொன்னார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர் களுக்கு வேண்டிய நிவாரணம் அளிப்பது முக்கியம்தான். அவர்கள் குறிப்பிட்டபடி, அவர்களுக்குத்தான் வேலைக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்துவதற்கு சட்டம் இடம் கொடுக்காது, அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று 'இன்பார்மல்' ஆகச் சொல்லலாம். அது நியாயம். அவர் களும் அதைக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனால் இதைப் பற்றி எல்லாம் உத்தரவு போட்டு 'இவர்கள் எல்லாம் உங்களுக்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்ததினாலே பாதிக்கப்பட்டவர் கள். ஆகவே, அவர்களுக்குத்தான் நீங்கள் முதல் ஸ்தானம் கொடுத்து வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்' என்று வற் புறுத்துவதற்கு இல்லை. கூடியவரையில் ஒருவருக்கொருவர் கலந்து பேசி நடத்தவேண்டிய விஷயம் இது. இந்த விஷயம் அவ்வாறு கவனிக்கப்பட்டு வருகிறது என்று நான் நினைக்கிறேன்.

ரோடு அக்வையர் செய்த விஷயத்திலும் சர்வே செய்யலாம் என்று சொன்னார்கள். இதெல்லாம் கவனிக்கப்படுகிற விஷயம்.

பாலிடெக்னிக் பற்றி சொன்னார்கள் இப்பொழுது நாசரத் தில் சில தவறுகள், ஊழல்கள் ஏற்பட்டதின் காரணமாக அது மாற்றப்படவேண்டியிருந்தது. இப்பொழுது தூத்துக்குடிக்கு பாலிடெக்னிக் மாற்றப்பட்டிருக்கிறது. நாசரத்தில் இருக்கிற நிலை என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து அறிந்து, அதிலே வேறு ஏதாவது செய்ய முடியுமா என்பது வேறு விஷயம். அது கவனிக்கப்படுகிற விஷயம்.

குழந்தைகளுக்காக ஒரு கலைக் களஞ்சியம்பற்றி பிரேரபனை இருக்கிறது. அதற்கு உதவி அளிப்பது பற்றியும் குறிப்பிடப்பட் டிருக்கிறது. அதைப்பற்றி கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கூடியவரையில் குழந்தைகளுக்காக கலைக்களஞ்சியம் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்து. குழந்தைகளுடைய கலைக் களஞ் சியம் மற்ற நாடுகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதை சில அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். அதிலே காகிதம் மட்டும் அல்ல, அச்சு மட்டும் அல்ல, படம் மட்டும் அல்ல, இருக்கிற விஷயமும் சரி குழந்தைகளுக்கு ஏற்றவாறு, குழந்தைகளை வசீகரிக்கக்கூடியவாறு குழந்தைகளின் கலைக் களஞ்சியங்கள் மற்ற பல நாடுகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் இதை நல்ல முறையில் பிரசுரிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இன்னும் குழந்தைகளுக்கு என்று பிரத்தியேகமான நூல்கள் வந்துகொண்டிருக்கின்றன. தமிழ்

எழுத்தாளர்களில் குழந்தை எழுத்தாளர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களை நாம் போற்றுகிறோம். ஆனால், அது போதாது. குழந்தைகளுக்கு இன்னும் ஏராளமான நூல்கள் வெளிவர வேண்டும். மற்ற நாடுகளில், மற்ற மொழிகளில் எவ்வளவு நூல்கள் எவ்வளவு வசீகரமாக வந்திருக்கின்றன? அந்த நூல்களை எடுத்துக் கொண்டால் இரவு இல்லை, தூக்கம் இல்லை, பசி இல்லை, எதையும் கவனிக்காமல் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கிற குழந்தைகளை நாம் பார்த்திருக்கிறோம். அத்தகைய நூல்கள், வசீகரமான நூல்கள், அறிவூட்டக்கூடிய நூல்கள் நம்முடைய நாட்டிலும், தமிழிலும் வெளிவரவேண்டும் என்பதுதான் நம்முடைய ஆர்வம். யூனெஸ்கோ ஸ்தாபனம் சில தமிழ் நூல்கள் வெளி வருவதற்கு உதவி அளிப்பதாக நேற்றுகூட டெப்யூடி டைரக்டர் ஜெனரல் என்னிடம் கூறினார்கள். இதிலே அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. அரசாங்கம் மட்டும் இதை சாதிக்க முடியாது. மற்றபடி பொதுமக்களும், தமிழ் அறிஞர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சேரி ஒழிப்பு, அபி விருத்தி இதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இப்பொழுது ஸ்டேட் ஹவுசிங் போர்டுகூட இதை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், இருக்கிற இடத்தைவிட்டு இன்னொரு இடத்திற்கு போக முடியாது என்று வற்புறுத்துகிறார்கள். முடிந்தால், இருக்கிற இடத்தை நன்றாக அபிவிருத்தி செய்து கொடுக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆனால், எல்லா இடங்களிலும் அப்படி செய்ய முடியாது. இங்கே எதிரில் இருக்கிற கன்னியப்பநகர் வரலாறு, சரித்திரம் கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். கொடிகளை மாற்றி மாற்றி போட்டுக்கொண்டிருந்தார் கள். போகமாட்டோம் என்றார்கள். ஆனால், இப்பொழுது கோடம்பாக்கத்தில் வீடுகள் கட்டி அங்கே போய் இருக்கிறார்கள். நான் போய் சமீபத்தில் பார்த்தேன். நல்ல முறையில் சுத்தமாக இருக்கிறது அந்த இடம். இங்கேயே இருந்தால், சுகாதாரத்தை நல்ல முறையில் வைத்துக்கொண்டிருக்க முடியாது. ஸ்டேட் ஹவுஸிங் போர்டு கோடம்பாக்கம் புதூரில் நிலத்தை டெவலப் செய்து பல வசதிகளை ஏற்படுத்தி, அதிலே 'நீங்கள் வீடுகட்டிக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விட்டார்கள். அதிலே சில பகுதி களை நான் சமீபத்திலே பார்த்தேன். கனம் அங்கத்தினர்கள்கூட இதையெல்லாம் கொஞ்சம் பார்க்கவேண்டும். சென்னை நகரத்தில் ஹவுஸிங் போர்டு என்னென்ன வகையிலே திட்டத்தை செய்திருக் கிறது என்பதை பார்த்து அதற்கு மேலே யோசனைகளை சொன்னால் அந்த யோசனைகளை அரசாங்கம் கவனிக்கலாம். நான் போய் பார்த்தேன். நிலத்தை டெவலப் செய்து 'நீங்கள் வீடுகள் கட்டிக் கொண்டு சுகாதாரமாக இருங்கள்' என்று சொன்னார்கள். ரொம்ப எளிய முறையில் குடிசைகளாகக் கட்டப்பட்டிருந்தாலும் சுத்த மாகவும், ஒழுங்காகவும், சுகாதாரத்துடனும் விளங்குவதை நான் பார்த்தேன். அந்த வகையிலே மேலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

23rd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

'ப்ளாட் சிஸ்டம்' நமக்கு பழக்கம் இல்லை, நடுத்தர வகுப்பின ருக்கு ப்ளாட் சிஸ்டம் கஷ்டம் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய நகரத்தில் வீடுகள் அபிவிருத்தி அடைந்துகொண் டிருக்கின்றன. ஜனத்தொகை பெருகிக் கொண்டிருக்கிறது. ஆனால் நகரம் பழைய எல்லையில்தான் இருக்கிறது. அது தானாகவே விரிவு அடையாது. இனி ஆகாயத்தை நோக்கித்தான் போக வேண்டும். 'வெர்டிகலா, ஹாரிசாண்டலா', இப்படிச் செய்வதா, அப்படிச் செய் வதா என்பது 'குவெஸ்டின்' இல்லை. மேலேதான் போக வேண்டும். 'ப்ளாட்'டில் வசிக்கின்ற பழக்கம் வேண்டும். இப்பொழுது 'ஹவுஸிங் போர்டு' 'ப்ளாட்' கட்டுவதற்கு முற்பட் டிருக்கிறார்கள். ப்ளாட்டில் வாழ்வதற்கு பழக்கம் செய்து கொள்ள வேண்டும். ப்ளாட்டில் வாழும் நடுத்தர வகுப்பினர்களுக்கு இன்னும் வசதி பெருகி, வாழ்க்கைத்தரம் உயர்ந்தால், மோட்டார் கார் வைத்துக்கொள்ள ஆரம்பித்து விடுவார்கள். அப்பொழுது 'பார்க்கிங் ப்ராப்ளம்' வந்து சேரும். அமெரிக்காவில் இருப்பது போல். அமெரிக்காவில் ஏராளமாக கார் வைத்திருக்கிறார்கள். எவ்வளவு உயர்ந்த கார் வைத்திருந்தாலும், வெளியிலே தான் விடுகிறார்கள். பனி, மழை எதுவாக இருந்தாலும் புதுக் காரைக் கூட தெருவிலேதான் விடுகிறார்கள். அப்பொழுது 'பார்க்கிங் ப்ராப்ளம்' ஏற்படும். அபிவிருத்தி அடைய அடைய பல பிரச்னைகள் வரும். அந்தப் பிரச்னைகளை எந்த அளவுக்கு சமாளிப்பது என்பது பற்றி எல்லோரும் சேர்ந்து கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

கூவம், பக்கிங்ஹாம் கெனல், அடையாறு ஆகியவற்றில் இருக்கிற துர்நாற்றத்தை அகற்ற, கடல் நீரை உபயோகப்படுத்தி அதைச் சுத்தப்படுத்துவது பற்றி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அதுவும் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. எந்த வகையில் எப்படிச் செய்வது என்றெல்லாம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்படுகிற விஷயம் அது.

மற்றொன்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட் டார்கள். இப்பொழுது பூங்காக்கள் இருக்கின்றன, வாசக சாலை கள் இருக்கின்றன. அம்மாதிரி பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு இடம் வேண்டும் என்று கூறினார்கள். இப்பொழுது ஜனநாயக ரீதியிலே செயல்படும்பொழுது, ஏதோ ஒரு கட்டிடத்திலே, சிறிய மண்டபத்திலே கூட்டம் நடத்த முடியாது. இப்பொழுது கூட்டத் திற்கு அதிகம் பேர்கள் வருகிறார்கள். பேசப்படுவதை ஒப்புக் கொள்ளாதவர்கள் கூட என்னதான் சொல்லுகிறார்கள் என்று கேட்பதற்கு வருகிறார்கள். ஆகவே, கூட்டங்கள் நடத்துவதற்கு இப்பொழுது இருக்கும் கட்டிடங்கள் போதவில்லை. பெரிய ஹால்கள் நமக்கு வேண்டும். இப்பொழுது இருப்பவை போதாது. எனக்கு ரொம்ப நாளாக அக்கறைதான். அதனால்தான் சினிமாவை, டூரிங் சினிமாவை வரவேற்கிறோம். படத்தையும் பார்க்கலாம். ஏழைகள் முக்கியமாக பார்க்கவேண்டியதுதான். பொழுதுபோக்கு அவசியம். ஆனால், நல்ல படமாக இருக்க வேண்டும். அதோடு கூட டூரிங் சினிமா பொதுக் கூட்டங் களுக்கு உபயோகப்படுகிறது. கூட்டங்கள் போடுவதற்கு

[திரு. எம். பக்தவத்சலம்] [23rd January 1964

நமக்கு நிறைய மண்டபங்கள் வேண்டும். நகரங்களில் அம்மாதிரி மண்டபங்கள் இல்லை. சென்னை நகரத்திலும் கூட அந்தக் குறை இருக்கிறது. பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு சென்னை நகரத்தில் கடற்கரை இருக்கிறது. ஆனால், கடற்கரையில் கூட்டம் நடத்துவதற்கு அதிக செலவாகிறது என்பது உண்மைதான். என்ன செய்கிறது? கடற்கரையில் மட்டும் வைப்பது இல்லை. அந்தந்த ஸ்தலங்களிலும் கூட்டம் வைக்க வேண்டியிருக்கிறது. அதெல்லாம் எப்பொழுதோ ஒரு முறை வைக்கவேண்டியிருக்கிறது. ஆனால், பூங்காவுக்கு இடம் ஒதுக்குவது ரொம்ப முக்கியமானது. நல்ல காற்று வாங்குவதற்கு இடம் வேண்டும். அதற்காக இடம் ஒதுக்குகிறோம். சில சமயங்களில் அம்மாதிரி பூங்காக்கள் கூட மறைந்து போகின்றன. பொதுக்கூட்டம் நடத்துவதற்கு என்று தனி இடம் ஒதுக்க முடியாது. எப்பொழுதும் பொதுக்கூட்டம் நடப்பதில்லை. சில சமயங்களில் தான் பொதுக்கூட்டங்கள் நடத்துகிறோம். அந்த சமயங்களில் மட்டும் இடத்தை குறிப்பிடுகிறோம். நடுச்சந்தியில் இருந்தாலும், தேர்தல் போன்ற சமயங்களில் அந்த இடங்களில் பொதுக்கூட்டம் போடுகிறோம். ஒன்று நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். பொதுக்கூட்டத்தை எங்கு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அதன் காரணமாக போக்குவரத்திற்கு சிறிது தடை ஏற்படலாம். ஒலிபெருக்கி இருக்கிறது. சாதாரணமாக 10 மணி வரையிலும் ஒலிபெருக்கி வைத்துக்கொள்வதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. தேர்தல் காலத்தில் 12 மணி வரைக்கும் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. கொஞ்சம் அதிக நேரம் வைத்துக்கொள்ளலாம் என்பதற்காக. சென்னை நகரத்தில் அப்படி கொடுக்கப்படுகிறது. வெளியூர்களிலும் நகர மன்றத் தேர்தல்கள் வர இருப்பதை ஒட்டி, ஒலிபெருக்கிக்கு லைசென்ஸ் கொடுக்கும் நேரத்தை 10 மணியிலிருந்து 12 மணி வரை நீடிக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்கள் கோரினார்கள். அவ்வாறு இப்பொழுது உத்தரவு போட்டிருக்கிறோம். ஒலி பெருக்கி வைத்துக்கொண்டால் கூட்டத்தில் இருப்பவர்களுக்கு கேட்டால் போதும். மற்றவர்களுக்கு அதனால் தொல்லை கொடுப்பது நியாயமாகாது. ஒலிபெருக்கி நமக்கு உபயோகப்படுகிறது. நம்முடைய குரலுக்கு உதவி அளிக்கிறது. ஆனால், அது அக்கறை இல்லாதவர்களுக்கு தொல்லை கொடுக்கிறது. சில சமயங்களில் ஆபாசமான பேச்சு, காரசாரமான பேச்சு இவைகளை ஒன்றும் சம்பந்தம் இல்லாதவர்கள், நிரபராதிகள் கேட்டு அனுபவிக்கவேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஒலிபெருக்கியை யார் கேட்கவேண்டுமோ அந்த அளவுக்குத்தான் கேட்கவேண்டும். மற்றவர்கள் கேட்கக் கூடாது. இப்பொழுது சமீபத்திலே, ஹோட்டல் உட்லன்சிலே ஒரு முக்கியமான விழா, அதாவது யுனஸ்கோ சம்பந்தமான விழா நடைபெற்றது. பக்கத்திலே பரதநாட்டியம் நடந்தது. மற்ற நாடுகளிலே எப்படியிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. இப்படி பக்கத்திலே பக்கத்திலே இரண்டு மூன்று கூட்டங்கள் நடக்காது என்று நான் நினைக்கிறேன். ஒலி பெருக்கி என்றால், யாருக்கு ஒலி பெருக்கி? அதனால் தொல்லை ஏற்படுவதினாலே அளவு 'ரெஸ்ட்ரிக்ஷன்' இருக்கவேண்டியிருக்கிறது. இதுவரை

யிலும், இதிலே நாம் போதிய கவனம் செலுத்தவில்லை. கல்யாணம் என்றால் ஏதோ 'தட்டு சங்கீதம்' வைக்கிறார்கள். என்னமோ 'காச்சு மூச்சு' என்று கத்துகிறது. காரிலே வேகமாகப் போகிற போது கூட அதை சகிக்க முடியவில்லை. இது ஒரு முக்கியமான பிரச்னை. கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட பிரச்னைகள் எல்லாவற்றையும்விட கவனிக்கவேண்டிய பிரச்னை. எந்த விஞ்ஞானி இதற்கு வேண்டிய பரிகாரத்தை அளிக்கப்போகிறாரோ தெரியவில்லை. பொதுக்கூட்டங்களாக இருந்தாலும் கடற்கரையைத் தவிர, நிரந்தரமாக வேறு இடத்தை ஒதுக்கமுடியாது. ஐலண்டு மைதானத்தைப் பற்றி சொன்னார்கள். அதை நம் இஷ்டம்போல் வைத்துக்கொள்ளலாம் என்று கேட்பது சரியல்ல. கட்சி சார்பற்ற வகையிலே ஒரு விழா நடத்தவேண்டுமென்றால், அதைக் கேட்கலாம். ராணுவ ஐலண்டு கிரௌண்டை மற்ற காரியங்களுக்காக கேட்பது நியாயமில்லை. கூடியவரையிலும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is:—

"That the Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir I move—

"That the Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

V—DISCUSSION FOR SHORT DURATION.

(1) UNIFORM DRESS FOR TEACHERS.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram will raise a discussion regarding the instructions issued by the Educational authorities insisting on the wearing of uniform dress by the teachers. How long does the hon. Member Sri M. Kalayanasundaram propose to speak?

SRI M. KALYANASUNDARAM: About 7 minutes.

MR. SPEAKER: All right.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி இலாகாவில் இன்று நடைபெறும் ஒரு விஷயம் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பீதியையும் கலக்கத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதற்காகவே இந்த விவாதத்தை நான் இங்கு நடத்த வேண்டுமென்று முயற்சி செய்தேன். அதாவது ஆசிரியர்கள் அனைவருமே ஒரே

மாதிரியான உடையை அணியவேண்டுமென்று ஒரு மறைமுகமான நிர்ப்பந்தம் கொண்டுவரப்படுகிறது. ஆசிரியர்கள் கௌரவமான முறையிலே உடை அணியவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். பழைய காலத்திலே, அதாவது வெள்ளைக்காரன் காலத்திலே, ஆசிரியர்கள் கோட், தலைப்பாகை எல்லாம் அணிய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருந்தது. வேஷ்டி கூட சாதாரணமாகக் கட்ட முடியாது. பஞ்ச கச்சம் வைத்துக் கட்டவேண்டும். ஆசிரியரைப்பார்த்தாலே தனி உருவமாக தெரியும். அந்த மாதிரி ஆடம்பரம் இப்பொழுது இருக்க முடியாது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே ஒரு வேறுபாடு தெரியவேண்டும் என்பதற்காக உடை வித்தியாசம் இருக்கவேண்டும். தோற்றத்துக்கு கண்ணியமாக இருக்க வேண்டும். சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களைப் பொருத்தவரையில் கூட, எந்தவிதமான நிர்ப்பந்தமும் இல்லாமல், அவரவர்களுடைய விருப்பத்துக்கு விடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஏன் இப்பொழுது நிர்ப்பந்தம் கொடுக்கிறார்கள்? ஒரு வெள்ளைக் கிழங்கி, கிரீம் கலரிலே, அதாவது மஞ்சள் கலரிலே ஒரு புஷ் கோட்டு, இவற்றை அணிந்து வரவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள். மாணவ மாணவிகளுக்கும் ஒரேமாதிரி உடை இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். மேல் நாடுகளில் கூட மாணவ, மாணவிகள், ஒரேமாதிரி உடை அணிய வேண்டும் என்பதற்கு முக்கியமான தத்துவார்த்த காரணம் உண்டு. அழகாக உடை அணிந்து வரக்கூடிய பெரிய குடும்பத்தில் பிறந்த குழந்தைகளும், எளிய குடும்பத்தில் பிறந்த குழந்தைகளும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்க நேருகிற காரணத்தால், இளம் உள்ளங்களிலே பணக்காரன், ஏழை என்ற வேற்றுமை உணர்ச்சி ஏற்படக்கூடாது என்று நினைத்து, உடை ஒரேமாதிரி இருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. அங்கே பெரிய கார்களில் வரக்கூடிய குழந்தைகளை பாடசாலைக்குள்ளே நேராக வர அனுமதிப்பதில்லை. கேட்டுக்கு வெளியே குழந்தைகளை இறக்கி விட்டு விடுவார்கள். ஆகவே சமமான உணர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காக மாணவ மாணவிகள் ஒரே உடை அணிய வேண்டுமென்று இருக்கிறது. இங்கு அந்த மாதிரி அல்ல. ஆசிரியர்கள் ஒரே மாதிரி உடை அணியவேண்டுமென்றால், சில அதிகாரிகளைக் கௌரவிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறது. ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவேண்டுமென்ற நோக்கத்திற்காக அல்ல. ஆசிரியர்கள் நல்ல உடை அணியவேண்டும் என்று சொன்னால், அவர்களுக்குப் போதுமான வருவாய்க்கு வசதி செய்து தர வேண்டும். போதுமான வருவாய் இருந்தால் நல்ல உடை அணிந்துகொண்டு வருவார்கள். நல்ல உடை அணிவதற்குக் கூட வசதி இல்லாத காரணத்தால், அவர்களுடைய உடை வறுமையை பிரதிபலிக்கக் கூடிய நிலையிலே இருக்கிறது. இந்தமாதிரி ஒரு குறிப்பிட்ட உடையை அணியவேண்டுமென்ற நிர்ப்பந்தம் அவர்களுக்கு சங்கடத்தை உண்டாக்கியிருக்கிறது. அதிக செலவு ஆகக் கூடிய காரணத்தால் பல ஆசிரியர்கள் எனக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அம்மாதிரி உடை தைக்கவேண்டுமென்றால்,

23rd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

ஒரு செட் தைப்பதற்கு ரூ. 20 அல்லது 25 செலவு ஆகும். அப்படி செலவு செய்து இரண்டு மூன்று செட்டுகள் தைக்கவேண்டியிருக்கும். இதை வீட்டிலேயிருக்கிறபொழுது கட்டிக் கொள்ள முடியாது. பள்ளிக்கூடத்திற்கு வருகிற சமயத்தில்தான் இதை உடுத்திக்கொள்ளமுடியும். காலை எழுந்து இரவு வரை ஒரே மாதிரி உடையை அணிந்து பழக்கப்பட்டவர்கள் ஆசிரியர்கள். வீட்டுக்கு ஒரு செட்டு உடை, பள்ளிக்கூடத்திற்கு ஒரு செட்டு உடை என்றால் அதிகச் செலவு ஆகும். அவர்களுடைய வருவாயை அதிகப்படுத்தாமல் செலவை அதிகப்படுத்த கூடிய திட்டம் இது. இதிலே கட்டாயம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். கட்டாயம் எப்படியிருக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். அரசாங்கம் உத்தரவு போடவில்லை. வேறு அதிகாரிகளும் உத்தரவு என்ற முறையில் போடவில்லை. ஆசிரியர்கள் கூட்டம் கூடுகிற சமயத்தில் மாவட்டக் கல்வி அதிகாரி முன்னிலையில் அந்த அதிகாரியின் தயவுக்கு காத்திருக்கக்கூடிய ஆசிரியர்களைக் கொண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, எல்லோரும் சீருடை அணியவேண்டுமென்று செய்து விடுகிறார்கள். மற்ற ஆசிரியர்கள் எதிர்த்துப் பேசலாம் என்றாலோ, கல்வி அதிகாரிகளின் பொல்லாப்பு வருமே என்று பயந்து பேசாமல் இருந்து விடுகிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

ஏன் நீங்கள் உடை அணியவில்லை. என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள் என்று சுற்றறிக்கைகள் மூலமும், கடிதங்கள் மூலமும், மாவட்ட அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்கிறார்கள். மாநில கல்வி அதிகாரி வருகிறார், செக்ரட்டரி வருகிறார், ஆகவே சீருடை அணிய வேண்டும் என்று எழுதியுள்ள கடிதங்களை நான் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் எடுத்து காண்பித்தேன். மறைமுகமான கட்டாயம் இதிலே இருக்கிறது, அந்தமாதிரி இருக்கக்கூடாது என்று தெரிவித்தேன். அதுதான் என் அபிப்பிராயமும் கூட. ஆசிரியர்கள் ஒரேமாதிரி உடை அணிய வேண்டும் என்ற அந்த நிர்பந்தத்தை தவிர்க்க வேண்டும் என்பதற்காக நான் சில விவரங்களை கொடுக்கவேண்டியிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் நிர்ப்பந்தம் இருக்கிறது என்று ஆசிரியர்களிடத்திலே அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இது அவர்களிடையே அதிருப்திக்குரிய காரணமாக இருப்பதினால், முதலமைச்சர் அவர்கள் இதிலே குறுக்கிட்டு இந்த மாதிரி நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதை தவிர்க்கும் வகையில் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி முதல் அமைச்சர் அவர்கள் சீருடை அவசியம்தான் என்றால் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். ஒரேமாதிரி ஆசிரியர்கள் உடை அணிய வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு வருஷத்திலே உடைக்காக ரூ. 50 அலவன்ஸ் என்று கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஆஸ்பத்திரிகளிலே நர்ஸ்களுக்கு உடைக்கு என்று தனி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதேபோல ஆசிரியர்களுக்கும் சீருடைக்காக அலவன்ஸ் கொடுப்பதை கொள்கையாக வகுத்துக் கொண்டால் அது ஆசிரியர்களுக்கு நிவாரணம் கொடுத்ததாகவும் இருக்கும், 11-00 a.m.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [23rd January 1964

கௌரவமாகவும் இருக்கும். ஆகவே சீருடை விஷயத்தில் மறைமுகமான நிர்பந்தம் போக வேண்டும், உடைக்காக விசேஷ அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

*** திரு. எம். எஸ். செல்வராஜன் :** உதவி சபாநாயகர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்துள்ள பிரேரணையின் மீது என் கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன். மறைமுகமான நிர்பந்தம் இருக்கிறது என்பதுதான் அவர்களுடைய குற்றச்சாட்டு. ஆசிரியர்கள் குழந்தைகள் மத்தியில் இருக்க வேண்டியிருப்பதால், குழந்தைகளுக்கு சீர் உடை அவசியம் என்று எப்படி வைத்துக்கொள்ளுகிறோமோ அதேபோல ஆசிரியர்களுக்கும் சீர் உடை அவர்களுடைய தொழிலுக்கும் நல்லது அவர்களிடம் பயிலும் குழந்தைகளுக்கும் நல்லது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்றே கருதுகிறேன். குழந்தைகள் மத்தியில் மேல் கீழ் என்ற உணர்வோ, வசதி உள்ளவர்கள் வசதி அற்றவர்கள் என்ற உணர்வோ அந்த பிஞ்சு உள்ளங்களிலே ஏற்படுவது நல்ல எண்ணங்களை தூண்டாது அதை குழந்தைகளிடையே சரி செய்ய சீர் உடை உறுதுணையாக அமைய வேண்டும் என்று எப்படி கருதுகிறோமோ, அதேபோல ஆசிரியர்களிடத்திலே கூட இந்த ஏற்றத்தாழ்வு உணர்வுகள் தவிர்க்கப்பட வேண்டியவைகள். சமூகத்திலே தலை சிறந்த தொண்டு ஒன்றை செய்கிறோம் என்ற பெருமிதமான உணர்வு அவர்களிடம் வர வேண்டியது அவசியம். இன்றைக்கு ஆசிரியர்களுக்கு சமூகத்திலே அந்தஸ்து பெருக வேண்டும் என்பதற்காக அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கைகளை செய்து வருகிறது, ஆலோசனைகள் செய்து வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். சமூகத்திலே மற்ற பணியாளர்களோடு ஒப்பிடக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு ஊதியமும் மற்ற வசதிகளும் செய்து கொடுக்க எல்லா வகையிலும் முயற்சித்து வருவதை தெரிந்து கொள்கிறோம். அவர்களுக்கு முன்பு இல்லாத பல்வேறு வசதிகள்—ஊதியத்தில் உயர்வு, உத்தியோகத்தில் பந்தோபஸ்து, ரிடையர் ஆகும்போது பென்ஷன், பிராவிடண்ட் பண்டு வசதி,--இன்றைக்கு அளிக்கப்படுகின்றன. அவர்களுடைய அந்தஸ்து படிப்படியாக உயருவதில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஆகவே இப்பொழுது அவர்களுக்கு சீருடை வேண்டும் என்பதும் சமூகத்திலே, மாணவர்களிடையே அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொடுக்கும். ஆரம்ப காலத்தில் பள்ளிப்பிள்ளைகளுக்கு உணவு அளிப்பது என்பதை எப்படி மற்றவர்களுடைய உதவி கொண்டு ஆரம்பிக்கப்பட்டு பிறகு நாளாவட்டத்தில் அரசாங்கம் உதவி செய்ய முற்பட்டார்களோ, அதே போல சீருடை சம்பந்தமாகவும் மற்றவர்களுடைய உதவி கொண்டு, நிர்பந்தம் இன்றி, செய்யப்படுமேயானால் அரசாங்கத்தின் பொறுப்பில் அதை விட்டுவிட சாதகமான சூழ்நிலை ஏற்படும் என்றே கருதுகிறேன். வசதி உள்ளவர்கள் ஆசிரியர்களிடையேயும் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டால் அந்தத் தூண்டுதலின் காரணமாக நல்லதொரு

23rd January 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

சூழ்நிலை உருவாக ஏதுவாகும். பள்ளிப் பிள்ளைகளுக்கு உணவு அளிப்பதில் கூட இங்கே அங்கே சிறு சிறு குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் எண்ணத்தை சந்தேகிக்க முடியாது. அதே போல ஆசிரியர்களுக்கும் சீர் உடை அவசியம் என்பதில் ஒரு நல்ல நியதியைப் பின் பற்றி ஆர்வத்தோடு முயற்சிக்கப்படுமேயானால், அது ஆசிரியர்களை ஒரு தகுதி பெற்றவர்களாக தோற்றுவிக்கும். கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் மறைமுகமாக நிர்பந்தம் இருக்கிறது என்று குற்றச்சாட்டை சொன்னார்கள். அந்த நிர்பந்தம் சில பகுதிகளில் இருப்பதாக நான் கூட கேள்விப் பட்டேன். ஆனால் அதை நிர்பந்தம் என்று கொள்வதைவிட தூண்டுதல் என்றே கொள்ளவேண்டும். தூண்டுதலையே நிர்பந்தம் என்று பெயரிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் ஆசிரியர்களில் சிலரைக் கொண்டே தீர்மானம் நிறைவேற்றி அதன் மூலமாக நிர்பந்தம் செய்வது என்பது கடினத் தூண்டுதல் என்றே கொள்ள வேண்டும். அப்படி தூண்டுதல் செய்யும் நிலை இல்லாமல் எந்த காரியமும் கை கூடுவது கடினம் என்றே நினைக்கிறார்கள் போலும். இதிலே மானேஜ்மெண்டார்களை அணுகி இந்த ஆசிரியர்களுக்கு சீர் உடை வழங்க உதவி செய்ய வேண்டும் என்று ஜில்லா கல்வி அதிகாரி தூண்டுதல் கொடுத்து வருகின்றார்கள். அது எந்த வகையில் இருந்தாலும் மானேஜ்மெண்டாரோ, தலைமை ஆசிரியரோ பயத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்வது என்பது நல்லதல்ல. கனம் கலியாணசுந்தரம் அவர்கள் ஆசிரியர்களுக்கு சீருடை அணிவதில் கஷ்டம் இருப்பதாக தெரிவித்தார்கள். அப்படி சீருடை அணிவதை ஒரு சடங்காக கருதாமல், வைபவங்களுக்காக மட்டும் அணியக் கூடியதாக இல்லாமல் சாதாரண காலத்திலும் கூட சீராக உபயோகிக்கும் ஒன்றாக அமைந்தால் அதில் ஆட்சேபம் இருக்க முடியாது. இன்றைக்கு அரசாங்கத்தில் நல்ல எண்ணத்தோடு கதர் அபிவிருத்திக்காக பல காரியங்களைச் செய்து வருகின்றார்கள். ஊக்கம் அளிக்கும் முறையில் பல வசதிகளை, சலுகைகளை கொடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட தேசிய சின்னமாக கருதப்படுகிற கதரை ஒரு குறிப்பிட்ட நியதிப்படி சட்டையாகவும், வேஷ்டியாகவும் அணியும் உடை வகையாக அமையுமேயானால் அது வெறும் சடங்காக மட்டும் இல்லாமல் நித்ய தேவைக்கு உபயோகம் ஆகும் வஸ்திரங்களாக அமைய முடியும். அதனால் ஆசிரியர்களுக்கு கஷ்டம் தோன்றாது என்று பலர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். அதை அரசாங்கமே செய்வது நல்லது. சட்ட பூர்வமாக செய்வதானால் கூட தவறு இல்லை. ஆனால் "எக்ஸ்டர்னல் பிரஷர்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகாரிகளுடைய நிர்பந்தம் அன்றாட வாழ்க்கையில் தவிர்க்கப் படவேண்டும்.

Sri V. S. S. MANI rose.

Mr. DEPUTY SPEAKER : The Hon. Member is not yielding.

திரு. எம். எஸ். செல்வராஜன்: அது தூண்டுதலாக இருக்க வேண்டுமேயல்லாது "எக்ஸ்டர்னல் பிரஷர்" ஆக இருக்கக்கூடாது. அல்லது சர்க்கார் அவர்களுக்கு ஏதாவது உதவிச் சம்பளமாக

ரூபாய் 25-ல் இருந்து 40 வரை, உடைக்காக ஆகும் செலவில் ஒரு பாகத்தை கொடுப்பதன் மூலம் ஆசிரியர்களை ஒரேமாதிரியான உடை அணியும் அமைப்பில் கொண்டுவர முடியும் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு சமூகத்தில் ஒரு நிலைத்த அந்தஸ்து பெறுவதற்கு வழிவகை செய்வதாகவும் இருக்கும் என்பது என்னுடைய ஆலோசனையும் கூட.

*** புலவர் கா. கோவிந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு சீருடை வழங்குவது பற்றி என் கருத்தைத்தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே ஆசிரியர்கள் யாரோடு பழகுகிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பழகுவது இளம் மாணவர்களோடு. ஆகவே அந்த மாணவர்களுக்கு ஆசிரியரைப்பற்றி ஒரு உயர்ந்த எண்ணம் உள்ளத்திலே உண்டாக வேண்டும். அதற்காகத்தான் பழைய தமிழ் இலக்கியத்திலே ஆசிரியருக்கு இலக்கணம் சொல்லும் போது

"வான்யாது அன்ன தோற்றமும், வான்யாது
நிலம்படந்தன்ன நலம்படர் ஒழுக்கமும்"

என்று பல குணங்களை வகுத்திருக்கிறார்கள். முதலிலே தோற்றத்தைப்பற்றி சொல்லுகிறார்கள். அந்தக் காலத்து மாணவர்கள் உள்ளத்திலே நிறைந்தவர் அவர். இப்பொழுது மாணவர்கள் ஆசிரியர்களைக் காட்டிலும் மிகத் தோற்றமான நிலைமையில் உடை அணிந்து செல்லக் கூடிய காலமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில், சில ஆசிரியர்கள் தங்களுடைய பொருளாதாரம் இடங்கொடுக்காத காரணத்தால், வெறும் பனியன் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்று பணி புரியும் நிலை இருக்கிறது. நல்ல உடை அணிந்துகொண்டிராத ஆசிரியர்களிடத்தில் நல்ல உடை அணிந்து செல்லும் மாணவர்களுக்கு மதிப்பு இருக்காது. அந்த ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதிலே அவன் ஊக்கம் செலுத்த மாட்டான். ஆக, சொல்லித் தரப்படுகின்ற பாடம் மாணவர்களின் உள்ளத்திலே நன்றாகப் பதியவேண்டுமென்றால் அந்த மாணவனுக்கு அந்த ஆசிரியரிடத்திலே நல்ல மதிப்பு இருக்கக்கூடிய நிலையை உருவாக்கவேண்டும். அந்த நிலையிலே ஆடை ஒன்று என்று நான் சொல்லத் தேவையில்லை. 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்று சொல்வதுண்டு. ஆக, ஆசிரியருக்கு நல்ல ஆடை இருக்கத்தான் வேண்டும். அதை வற்புறுத்துவதா? அல்லது அவர்களே விரும்பி ஏற்றுக்கொள்வதா? என்பதிலே தான் இங்கே பேசிய கனம் உறுப்பினர்களெல்லாம் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு நல்ல சீருடை வேண்டும் என்பதிலே எல்லோருக்கும் ஒத்த கருத்து இருக்கிற இந்த நேரத்தில் அதை எப்படிச் செய்வது என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனக்கு முன்னே பேசிய நண்பர் அவர்கள் கூறியதுபோல் எத்தனையோ வகையிலே ஆசிரியர்களுக்கு நாம் பல சலுகைகளைச் செய்து தந்திருக்கிறோம். இந்தத் துறையிலே, நாம் சொல்லிக் கொடுக்கின்ற கல்வி நல்ல முறையிலே மாணவர்களின்

23rd January 1964] [புலவர் கா. கோவிந்தன்]

உள்ளத்திலே ஏறவேண்டும் என்ற காரணத்தை மனத்திலே வைத்தாவது இந்த வகையில் அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குவதற்குப் பண உதவி செய்யவேண்டுமென்று நாங்கள் இங்கே வற்புறுத்த விரும்புகிறோம். முழுத் தொகை இல்லாவிட்டாலுங்கூட, அவைகளுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு பணம் அரசாங்கம் தரக்கூடும் என்று சொல்லி விட்டால், மேற்கொண்டு ஆகும் தொகையை அவர்களே போட்டுக்கொண்டு, அரசாங்கம் விதிக்கும் முறையிலே சீருடை அமைத்துக்கொள்ளத் தயங்க மாட்டார்கள். ஆக, அந்த முறையிலே அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். எல்லா ஆசிரியர்களுக்கும் இத்தகைய உதவி கொடுப்பது இயலவில்லை என்றால், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குப் பஞ்சாயத்து யூனியனும், மாவட்டக் கழகமும் உதவி செய்யலாம். ஆக, அந்தந்த அமைப்புகள் அந்தந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்தால் கூடச் சீராக இருக்கும். அந்த வகையில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். முதலில் விவாதத்தைத் தொடங்கிவைத்த பெரியவர் சொன்னதுபோல், நர்சுகளுக்கு சீருடை வழங்கும் விஷயத்தில் அரசாங்கம் உதவி செய்து வருகிறது. அந்தத் துறையைக் காட்டிலும் பல நன்மைகளைச் செய்துவரும் ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தை அரசு நன்றாக சிந்தித்துப் பார்த்து, வரும் நிதி நிலை அறிக்கையிலாவது அதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று முதல் அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும், கல்வி அமைச்சராகவும் இருக்கிற பெரியவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஆர் வி. சுவாமிநாதன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆசிரியர்களுக்குச் சீருடை இருக்கவேண்டியது மிக முக்கியமான ஒரு விஷயம் என்றே எனக்குப்படுகிறது. நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஆசிரியர்கள் உடையைப்பற்றிய பிரச்சினையைக் கிளப்பினார்கள். அவர் பேசியதற்குப் பிறகு கனம் உறுப்பினர்கள் திரு. செல்வராஜன், புலவர் கோவிந்தன் அவர்களும் பேசினார்கள். ஆசிரியர்களுக்குச் சீருடை இருக்கவேண்டுமென்ற விஷயத்தில் அவர்களுக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இருப்பதாகத் தெரியவில்லை. புலவர் கோவிந்தன் அவர்கள் கூறியதுபோல, நிர்பந்திப்பதா ? அல்லது இஷ்டத்திற்கு விட்டுவிடுவதா ? என்பதிலேதான் ஆட்சேபணை இருப்பதுபோல் எனக்குத் தெரிகிறது.

நாட்டில் இப்பொழுது உடை விஷயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். குறிப்பாக, ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குப் போய்ப் பார்த்தால், மூன்றாவது பாரம் அல்லது உயர்நிலைப்படிப்பு படித்துவிட்டு வந்த பையன் கூட உபாத்தியாயராய்விடுவதால் யார் உபாத்தியாயர் யார் மாணவன் என்று தெரிந்துகொள்ள முடியாது. கிராமங்களில் வந்து பார்க்கவேண்டும். குறிப்பாக, ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்களைப் பார்த்தால் அனேக பள்ளிக்கூடங்களில், பையன் மாதிரிதான் வாத்தியார் இருக்கிறான். அதுவும், குள்ளமாக இருக்கிறவனைப் பார்த்தால் நிச்சயமாக

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [23rd January 1964

வாத்தியார் என்று சொல்ல முடியாது. சின்னப் பையனுகை, பனியன் போட்டுக்கொண்டுகூட பள்ளிக்கூடத்திற்கு வந்துவிடு வதால், அந்தப் பையன் வாத்தியார்தானு என்று தெரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

கனம் உதவி சபாநாயகர் : உபாத்தியாயரைக் குறிப்பிடும்போது, 'இருக்கிறுன்' என்று சொல்லாமல், 'உபாத்தியாயர் இருக்கிறுர்'' என்று சொல்வது நலம்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : சிறு பையனுகத்தான் இருக்கிறுன். சிறு பையனை எப்படிச் சொல்வது ?

நான் படித்த காலத்தில் வாத்தியார் வந்தவுடனே வகுப்பில் உள்ள மாணவர்கள் அத்தனை பேரும் மரியாதையுடனும், பயபக்தி யுடனும் இருப்பார்கள். வாத்தியார் என்ருல், க்ளோஸ் கோட் போட்டுக்கொண்டு, தலைப்பாகை அணிந்துகொண்டு கம்பீரமாக இருப்பார்கள். தமிழ் வாத்தியார் வந்தார் என்ருல் மிகவும் மரியாதை காட்டுவோம். சில பேர் கேலி பண்ணுவார்கள். ஆனுல், நாங்கள் மரியாதை செய்வோம். வணங்கக்கூடிய மரியாதை செய்வோம். அப்பேர்ப்பட்ட நிலை அப்பொழுது இருந்தது. ஆகவே, வாத்தியார்களுக்கு உடை நன்ருக இருக்க வேண்டியது அவசியம். உடையைப் பார்த்தே ஓரளவு மரியாதை செலுத்தக் கூடிய நிலை எல்லாத் துறைகளிலும் இருப்பதை நாம் பார்த்து வருகிறேம்.

பதினைந்து, இருபது வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் திருச்சி ஜங்ஷனில் நான் ரயிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். நான் கதர் வேட்டி, கதர் ஜிப்பா, கதர்த் துண்டு போட்டுக்கொண் டிருந்தேன். அப்பொழுது அங்கே ஒருவர் பெட்டி படுக்கையுடன் அவசர அவசரமாக நேராக என்னிடம் வந்து, 'தயவு செய்து இந்தப் பெட்டி படுக்கைகளைப் பார்த்துக்கொள்ளுங்கள், இதோ வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு, அவசர அவசரமாகச் சென்றுவிட்டார். எனக்கு வியப்பாக இருந்தது. அதே ப்ளாட் பாரத்தில் எத்தனையோ பேர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பாண்ட், கோட் எல்லாம் போட்டுக்கொண்டிருந்தவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க, என்னிடத்தில் வந்து அவருடைய பெட்டியை வைத்துவிட்டு போவானேன் என்று நினைத்துக்கொண்டிருந்த சமயத்தில் அவர் திரும்பவும் வந்து, பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டார். அப்பொழுது அவரைப் பார்த்து, 'இந்தப் ப்ளாட்பாரத்தில் எத்தனையோ பேர்கள் இருக்க, உங்கள் சாமான்களை என்னிடம் கொடுத்துவிட்டுப் போனீர்களே, என்ன காரணம் ?' என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னுர் 'பெட்டியில் பணம் வைத்திருக்கிறேன். சில முக்கியமான சாமான்களும் இருக்கின்றன. யாரிடம் வைத்துவிட்டுப் போகலாம் என்று யோசித்துப் பார்த்தேன். உங்களைப் பார்த்ததில், நீங்கள் கதர் உடுத்திக்கொண்டிருப்பதைப் பார்த்து, நீங்கள் நல்லவராக இருக் கிறவர் என்று தோன்றவே, உங்களிடம் பொருள்களை வைத்து

23rd January 1964] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

விட்டுச் சென்றேன்' என்று நன்றியுடனும், திருப்தியுடனும் சொல்லிவிட்டுச் சென்ருர். உடைக்குத் தனிப்பட்ட மரியாதையும், தனிப்பட்ட லட்சணமும் இருக்கிறது என்பதை அப்பொழுதுதான் நான் தெரிந்துகொண்டேன். ஆகவே, உடை விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும். ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல. பொதுவாக, ஒரு நாட்டு மக்கள் நல்ல உடை அணிந்திருக்கவேண்டியது அவசியம்.

நம் நாட்டுச்கு சுதந்திரம் கிடைத்தவுடனே, 1950-ம் வருஷத்திலிருந்தே ஒரு யோசனை இருந்துவருகிறது. அதாவது, 'தேசீய உடை' (நாஷனல் ட்ரெஸ்) வேண்டும் என்பது. தமிழ் நாட்டில் பொதுவாக நான்கு முழம் வேட்டியோ, எட்டு முழ வேட்டியோ கட்டிக்கொண்டு, மேலே ஒரு ஜிப்பா போட்டுக் கொள்ளுகிரும். வங்காளத்தில் ஒரு விதமாக வேட்டியை உடுத்திக் கொள்ளுகிருர்கள். இப்படி இந்தியா தேசத்தில் பல மாநிலங்களில் பலப்பல விதமான உடை உடுத்திக்கொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்ருல், இந்திய தேசத்திலுள்ள மக்களெல்லோரும் ஒரு குறிப்பட்ட விதத்தில் உடை உடுத்திக்கொள்ளவேண்டும் என்பது. மேற்கத்திய நாடுகளில் கூட, இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற நாடுகளில் எல்லாம் ஆங்காங்குள்ள சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தாற்போல் உடை உடுத்திக் கொள்ளுகிருர்கள். ஏறக்குறைய அங்கெல்லாம் ஒரேவித உடை அணிந்துகொள்வதைப் பார்க்கிரும். பர்மாவிலும், இலங்கையிலும், மலேயாவிலும் கூட அவரவர்களுக்கேற்ற உடையை மக்கள் அணிந்துகொள்ளுகிருர்கள். இதையெல்லாம் கவனித்தால், நம் நாட்டுக்கும் ஒரு தேசீய உடை வேண்டும். தேசீய உடையைப் பற்றிய பேச்சு வந்த காலத்தில், ஓரளவு உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் மட்டும் ஒருவித உடை அணிந்து கொள்ளவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படிதான், உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு பாண்ட், க்ளோஸ் கோட் எல்லாம் போட்டுக்கொள்ளவேண்டும் என்ற முறை இப்பொழுது அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதுதான் தேசீய உடை என்று நம் நாட்டில் இருந்து வருகிறது. அதையும் வற்புறுத்துவதில்லை. இப்படிப்பட்ட உடை இருக்கவேண்டுமென்று அரசாங்கம் ஒரு சாதாரண இன்ஸ்ட்ரக்ஷன் போல் பிறப்பித்தார்கள். அது ஒரு வழிகாட்டியாக இருந்து வருகிறது.

நம் நாடு சுதந்திரம் பெற்றபின் நாம் பல ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக்கொண்டு வருவதன்மூலம் நம் நாடு படிப்படியாக முன்னேறிக்கொண்டுவருகிறது. தேசம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கிறது. அதேபோல், உடையிலும் முன்னேற்றம் வரவேண்டும். குறிப்பாக, சட்ட சபை அங்கத்தினர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களைப் பார்த்து மக்கள் பின்பற்றக் கூடும். உபாத்தியாயர்கள் எப்படி நடந்துகொள்கிருர்கள், எப்படி உடை அணிந்து கொள்ளுகிருர்கள் என்பதையெல்லாம் பார்த்துத் தான், மாணவர்கள் அவரைப் பின்பற்ற முயற்சி செய்கிருர்கள்.

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [23rd January 1964

மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய வகையில் சட்ட சபை அங்கத்தினர்கள் முதலில் சீருடை அணிந்து கொள்ளவேண்டும். இதே சட்டசபையில் நாம் பார்க்கிறோம்—நம்மில் பலர் பலவித மான உடைகளை அணிந்துகொண்டிருக்கிறோம். சட்டசபை அங்கத் தினர்களுக்கென்று இப்பொழுது ஒரே விதமான உடை என்று நிர்ணயம் செய்யப்படாமலிருக்கிறது. இலங்கையில் பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்கு என்று தனிப்பட்ட உடை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. அங்கு ஒரு அங்கத்தினர் புஷ் கோட் போட்டுக் கொண்டு வந்துவிட்டார். அப்பொழுது உடனே ஒழுங்குப் பிரச் னையை எழுப்பினர்கள். சபாநாயகர் முடிவு சொல்லும்போது, 'புஷ் கோட் போட்டுக்கொண்டு சபைக்குள் வந்தது சரியானது அல்ல' என்று சொல்லிவிட்டார். இலங்கை பார்லிமென்டில் தேசீய உடையில் வரவேண்டும். அல்லது, பாண்ட், கோட், டை அணிந்துகொண்டு வரவேண்டும். வேஷ்டி ஜிப்பா மட்டும் போட்டுக் கொண்டு வரக்கூடாது. மேலே ஒரு துண்டும், ஆறு முழத்தில் போட்டுக்கொண்டு வரவேண்டும். ஆனல், நம்முடைய சட்ட சபையில் சட்டை இல்லாமல் கூட வரலாம். (சிரிப்பு) அந்த நண்பர் இங்கு இல்லாதபோது நான் ஒன்றும் குறிப்பிடவேண்டாம் என்பதற்காக மேலே செல்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்கிறேன், தமிழ்நாட்டினர் அணிந்துகொள்ளக்கூடிய உடை மிகவும் நல்ல உடையாக இருக்கிறது. நம்முடைய சீதோஷ்ண நிலைக்கு ஒத்ததாக இருக்கிறது. மற்ற மாகாணத்தவர்களும் இந்த உடையை விரும்புகிறார்கள். பஞ்சாப்பில் உள்ளவர்கள் வெளியிலே வரும்போது பாண்ட் போட்டுக்கொண்டாலும் வீட்டிலே இருக்கும் போது நம்மைப் போல் எட்டு முழ வேட்டியை மடித்துக் கட்டிக் கொள்ளுகிறார்கள். இந்த உடை மிகவும் சௌகரியமாக இருக்கு மென்று சொல்லுகிறார்கள். நம் நாட்டுக்கு என்ன உடை இருந் தால் நன்றாக இருக்கும் என்று என்னைக் கேட்டால், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உடுத்திக்கொண்டிருப்பதுபோல, வேட்டியும், ஜிப்பாவும், மேலே ஒரு அங்கவஸ்திரமும் போட்டுக் கொண்டு வரலாம் என்று நிர்ணயித்துவிட்டால் அதை நான் ஏற்றுக்கொள்வேன். சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோ ரும் கட்சிப் பாகுபாடு இல்லாமல், தனியாகக் கூடி, எம்மாதிரியான உடை உடுத்திக்கொண்டு சட்டசபைக்கு வரவேண்டும் என்பதை நிர்ணயித்துவிடுவது நலம். நிர்ப்பந்தம் வேண்டாம் என்று வைத்துக்கொண்டாலும், உடையை நிர்ணயித்துவிட்டால் நல்ல மாறுதலாக இருக்கும். சட்டசபை அங்கத்தினர்களைப் பார்த்து, வெளியே உள்ளவர்களும் இப்படிப்பட்ட உடை அணிந்துகொண்டு வருகிறவர்களைப் பார்த்து மேலும் மரியாதை கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டு, நல்ல அபிப்பிராயமும் ஏற்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் நல்ல சீருடை அணிந்துவரவேண்டும் என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளு கிறேன். நிர்ப்பந்தம் வேண்டாம் என்று சொல்கிறார்கள். நிர்ப்பந்தம் பண்ணவேண்டுமென்று விரும்புகின்றவன் நான். அந்த அதிகாரம் எனக்குத் தந்தால், நிச்சயமாக உபாத்தியார்களுக்கு . . .

திரு. மீ. கலியாணசுந்தரம் : வராது. (சிரிப்பு).

23rd January 1964]

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : வராமலிருந்தாலே சந்தோஷம். உபாத்தியாயர்களுக்கு ஒரேவிதமான உடை நிர்ணயம் செய்து, அதைத்தான் பள்ளிக்கூடத்திற்கு உடுத்துக்கொண்டு வரவேண்டு மென்று நிச்சயமாக உத்தரவு போடப்படவேண்டும். ஆகவே உடை ஒரு மதிப்பைத்தான் கொடுக்கும். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். புலவர் கோவிந்தன் சொன்னார்கள், அதற் காக ஒரு அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டும் என்று எனக்கு எனக்கு அதிகாரம் இருந்தால் நிச்சயமாக அதைக் கட்டாயமாகக் கொண்டு வருவேன். மேலும் அதற்காக ஒரு அலவன்சும் கொடுக் கப்படவேண்டும் என்று செய்வேன். காரணம் கட்டாயமாகக் கொண்டுவரப்படுகிறபோது அதனால் ஏழை ஆசிரியர்கள் பாதிக்கப் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக் கிறது. ஆகவே இதுபற்றி கனம் நிதி அமைச்சர், கல்வி அமைச்சர் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர் மானத்திற்கு அவசியமில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குவது பற்றிய இந்த விஷயத்தில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆசிரியர்களுக்குச் சீருடை வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு பிரச்னை. அந்தச் சீருடையினால் கஷ்டங்கள் ஏற்படுமா, இல்லையா என்பது ஒரு பிரச்சினை. அந்தக் கஷ்டங்களை ஆசிரியர்களே போக்கிக் கொள்ள வேண்டுமா, அல்லது அரசினர் முன்வந்து போக்கவேண்டுமா என்பது ஒரு பிரச்சினை.

ஆசிரியர்களுக்கு சீருடை அவசியமா, இல்லையா என்ற பிரச்சினை யை முதலில் எடுத்துக் கொண்டால் சீருடை அமைப்பு இருக்க வேண்டும் என்பதில் இந்த மன்றத்தில் இருக்கிற யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லையென்று நான் கருதுகிறேன். ஆசிரியர் களுக்கு சீருடை வேண்டுமென்ற இன்றியமையாத தன்மையை அத்தனைபேரும் உணருகிறார்கள். சீருடையை வற்புறுத்துவதன் காரணமாக ஆசிரியர்களுக்கு உடனடியாக கஷ்டம், தொல்லைகள் ஏற்படுகின்றனவா என்று கேட்டால் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். அந்தக் கஷ்டங்களை ஆசிரியர்களே போக்கிக் கொண்டு அந்தச் சீருடையைப் பெறுவதா? அல்லது அரசின ருடைய உதவியின்பேரில் பெறுவதா? என்றால் அரசினர் உதவி அவசியம் என்றுதான் பலர் கருதக் கூடும்.

இன்றைக்கு ஆசிரியர்களிடத்தில் சீருடை அமைப்பு இல்லாத தனால் ஏற்படுகிற கஷ்டத்தையும், அவர்களுக்கே ஏற்படுகிற அவமதிப்பையும் பலர் எடுத்துச் சொன்னார்கள். "ஆடை யில்லா மனிதன் அரை மனிதன்" என்கிற பழமொழி நீண்டகாலமாக இருந்து வருகிறது. நல்ல ஆடை இருந்தால் அதற்கு ஒரு தனி மதிப்பு தான். எல்லோரும் மனிதர்கள் தான் என்றாலும் நல்ல ஆடை உள்ள மனிதனுக்கு சமுதாயத்தில் ஒரு மதிப்பு இருக்கத்தான் செய்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். "மேலாடையின்றி" என்ற மூதுரை நீண்ட நெடுங் காலமாக இருந்து வருகிறது. அப்படி ஆடை மனிதனை அளவு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [23rd January 1964

எடுத்துத் தருகிறது. நீதிபதிகளுக்கு, போலீஸ்காரர்களுக்கு, தரைப்படியினருக்கு, கப்பல் படையினருக்கு என்று தனித்தனியாக உடை இருப்பதினால் அவர்களை வேறு பிரித்து அறிவது வசதியாகவே இருக்கிறது. அந்த வகையில் ஆசிரியர்களுக்குத் தனியாக சீருடை இருந்தால் நன்றாக இருக்கும். அவர்களுடைய மதிப்பை அது உயர்த்த கூடிய வகையிலும் அமையும்.

மாணவ மாணவிகளுக்கு என்று சீருடை அமைக்கப்பட்ட பிறகு அது நன்றாகத்தான் இருக்கிறது. பொதுமக்களும் அதை உணருகிறார்கள். கான்வென்ட் பள்ளிகளில் நீண்டகாலமாக இந்தச் சீருடைத் திட்டம் இருந்து வந்திருக்கிறது. ஆசிரியர்களுக்கும் கூட அவர்கள் ஒரு தனி உடை கொடுக்கிறார்கள். அதனால் மாணவர்களையும், ஆசிரியர்களையும் சுலபமாக வேறுபிரித்து அறிய முடிகிறது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேறுபாடு அறிந்து கொள்ள முடியாத நிலை மட்டும் அல்ல, சில சமயங்களில் அவமரியாதை ஏற்பட்டு விடுகிறது என்று சொன்னார்கள். சில இடங்களில் கடைநிலை ஊழியர்களை ஆசிரியர் என்றும், ஆசிரியரை அந்த நிலையிலும் கூட மதித்துவிடக்கூடிய நிலை, சீருடை இல்லாததனால் ஏற்படுகிறது. எனவே ஆசிரியர்களுக்கு சீருடை இன்றியமையாதது என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கிறோம். ரயில்வேக்களில் டி.டி.ஆர்., ஸ்டேஷன் மாஸ்டர் என்று தனித்தனியாக வேறு பிரித்து அறிவதற்கு ஏற்றபடி உடை அளிக்கிறார்கள். பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் அதிகமில்லை. ஆகவே அரசாங்கமே அவர்களுக்கு சீருடை வழங்க அலவன்சும் கொடுக்கலாம். அப்படி கொடுத்தாலும் பரவாயில்லை. ஆசிரியர்களுக்கு சீருடை வழங்குவது இன்றியமையாதது. இன்றையதினம் நம்முடைய அரசாங்க அதிகாரிகளில் கூட யார் செக்ரடரி, யார் டெபுடி செக்ரடரி என்று உடையைப் பார்த்தவுடன் அறிந்து கொள்ள முடியவில்லை. இங்கு சீருடை அமைப்பு இருந்தால் நல்லது. அப்புறம் சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் ஓர் அமைப்பு சட்டமன்றத்திற்கு வரும்போது இருந்தால் நல்லது. பொதுவாக இன்றைக்கு ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் சமுதாயத்தில் அவர்களுடைய மதிப்பை நாம் உயர்த்தியாகவேண்டும். அதற்கு இந்தச் சீருடை இன்றியமையாததாகவும் இருக்கக் கூடும். ஊட்டியில் ஒரு பள்ளியில் ஆசிரியர்கள் எல்லோரும் கருப்பு கவுன் போட்டுக்கொண்டிருந்தார்கள். உடையைப் பார்த்தவுடனேயே அந்த ஆசிரியர்களிடத்தில் ஒரு மதிப்பு உண்டாகிறது என்பது உண்மை தான். ஆகவே ஆசிரியர்களுக்கு சீருடை அமைப்பை ஏற்படுத்தி, அதனால் ஏற்படும் கஷ்டத்தை ஆசிரியர்களே சமாளித்துக்கொள்ளட்டும் என்று விடாதவாறு போலீஸ் போன்ற துறையினருக்குக் கொடுப்பதுபோல் இவர்களுக்கு ஒரு உடை அலவன்சு வழங்கவும் ஏற்பாடு செய்யத்தக்க வகையில் நமது கல்வி அமைச்சர்—அவரே நிதி அமைச்சராகவும் இருக்கிறார்—அவரே முதல் அமைச்சர்—ஆகையினால் அவர் இவ்விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

23rd January 1964]

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கிளப்பிய பிரச்சினை ஆசிரியர்கள் சீருடை அணியவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதாகும். ஆசிரியர்கள் சீருடை அணிய வேண்டுமென்பதைப்பற்றி அவர்கள்கூட மறுக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். மற்ற கனம் உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சீருடை அணிவதன் அவசியத்தைப் பற்றிக் கூறினார்கள். புலவர் கோவிந்தன் அவர்கள், சீருடையின் அவசியத்தைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் அதைப் பற்றி வற்புறுத்திக் கூறினார்கள். ஆசிரியர்கள் ஒரே மாதிரி ஆடையணிவது நலம் தான். ஆனால் மற்றொரு பிரச்சினையையும் மனத்தில் கொள்ளவேண்டும். ஒரே மாதிரி ஆடையை நிர்ணயித்து அதனை ஆசிரியர்கள் அணிய வேண்டுமென்பது ஒரு விஷயம். மற்றொன்று 'டீசன்ட் டிரஸ்' அணிகிறார்களா, இல்லையா என்பது. ஒரே மாதிரி ஆடை அணியாவிட்டாலும் பார்ப்பதற்கு ஒப்புக்கொள்ளக் கூடிய ஆடை அணிய வேண்டும். ஆசிரியர்களுக்குச் சீருடை என்று நிர்ணயிக்கவில்லை என்ற காரணத்திற்காக எந்த ஆடையை வேண்டுமென்றாலும் அணியலாம் என்று வெறும் பனியனைப் போட்டுக் கொண்டோ, வெறும் வேட்டியை மட்டும் உடுத்திக் கொண்டு மேலே ஒன்றும் ஆடையில்லாமல் இருக்கக்கூடாது. பண்டைக் காலத்தில், கனம் சுவாமிநாதன் அவர்கள் கூறியது போல நிர்ப்பந்தம் இல்லாமலே ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட ஆடையை அணிந்து வந்தார்கள். அந்த முறையில் ஆசிரியர்கள் நிர்ப்பந்தம் இல்லாமலே குறிப்பிட்ட நல்ல ஆடையை அணிய முன்வரவேண்டும். ஆடைக்கு அலவன்சு கொடுக்கவில்லை என்று சொல்லி ஆசிரியர்கள் அரை வேட்டியோடு வருகிறோம், கோவணாண்டியாக வருகிறோம் அல்லது நிர்வாணமாகவே வருகிறோம் என்று சொன்னால் அது முறையான போக்கா? அந்தப் போக்கை நான் ஏற்றுக் கொள்ள முடியாது; கனம் உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பண்டைக் காலத்திலே கோட்டு தலைப்பாகை எல்லாம் இருந்தது. கொஞ்சம் ஆங்கிலம் படித்து நாகரிகம் வந்தபிறகு நிஜார் போட்டுக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு தேசிய உடை வேட்டி, ஒரு ஷர்ட் அல்லது ஜிப்பா அணிந்தால் போதும் என்ற நிலை ஏற்பட்டது. ஆசிரியர்கள் ஷர்ட் அல்லது ஜிப்பா போட்டுக் கொண்டால் கூட அதிலே ஆட்சேபணை இல்லை. அதற்கும் குறைவாக இருந்தால் வற்புறுத்தக்கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? குறைந்த பட்ச உடை அணியத் தவறி விட்டால் அதை வற்புறுத்த வேண்டாமா? கனம் அங்கத்தினர்கள் அதை மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆசிரியர்கள் பள்ளிக்கூடத்திற்கு வரும் போது டீசென்ட் டிரெஸ் அணிந்து கொண்டு வரவேண்டும். அந்த அளவுக்குக் கூட உடை அணியாமல் வருகிறவர்கள் இருக்கிறார்கள். அதை அனுமதிக்க முடியாது. இன்று மாணவ மாணவிகள் சீருடை அணிகிறார்கள். அதே போன்று ஆசிரியர்களும் சீருடை அணியவேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறல்ல. மாணவ மாணவிகள் கூட எல்லாப் பள்ளிகளிலும் சீருடை அணியவில்லை. அதற்காக அரசாங்கமும் எந்தவித உதவியும் அளிப்பது இல்லை. 12-00 noon.

அதற்காக மக்கள் முன்வந்து உதவி அளிக்கிறார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டில் 39 லட்சம் ரூபாய் வரை நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது. அப்போதைக்கப்போது சிலர் உதவி அளிக்க முன் வருகிறார்கள்; தர்மம் செய்கிறார்கள். அந்த உதவி ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. மாணவ மாணவிகள் சீருடை அணியும்போது ஆசிரியர்களும் அணியலாம் என்ற எண்ணம் நல்ல எண்ணம் தான். ஆனால் ஆசிரியர்கள் சீருடை அணியவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள் என்பது சரியல்ல. அவ்வாறு வற்புறுத்தல் இருக்கக்கூடாது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்; ஆனால் வற்புத்தல் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ள மாட்டேன். அதிகாரிகள் தொந்தரவு செய்கிறார்கள் என்று சொல்வதெல்லாம் மிகைப்படுத்திக் கூறுவதாகும். அவ்வாறு மிகைப்படுத்திக் கூறுவது சிலருடைய சுபாவமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள்கூட பொடி வைத்துப் பேசினார்கள். ஆசிரியர்கள் அதிருப்தியுடன் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். எங்கே அதிருப்தி இருக்கிறது? கனம் அங்கத்தினர் அவர்களுடைய உள்ளத்தில் வேண்டுமென்றால் அதிருப்தி இருக்கலாம். கனம் அங்கத்தினர் அவர்களை விட எனக்குக் கொஞ்ச நாட்களாக ஆசிரியர்களுடன் அதிகத் தொடர்பு இருந்து வருகிறது. அவர்களுடைய மனோபாவத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கு இருக்கிறது. ஏதோ வீட்டுத் தொல்லை இருக்கலாம், சம்சாரத் தொல்லை இருக்கலாம். ஆசிரியர்கள் என்ற காரணத்தால் அதிருப்தி இருக்கிறது என்று சுட்டிக் காட்டுவது, பொடி வைத்துப் பேசுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூற விரும்புகிறேன். ஆசிரியர்கள் மிக்க மகிழ்ச்சியோடு, மிகுந்த உற்சாகத்தோடு தங்கள் பணியைச் செய்து வருகிறார்கள். எனவே, ஆசிரியர்கள் சீருடை அணியவேண்டுமென்று வற்புறுத்தப்படவில்லை. மறைமுகமாகக்கூட வற்புறுத்தக்கூடாது என்று இப்போதும் சொல்கிறேன். அவர்களுடைய சீருடைக்காக அரசாங்கம் ஏதாவது அலவன்ஸ் கொடுக்கலாம்; அதிலே தப்பு இல்லை. நியாயந்தான். அரசாங்கம் கல்வி இனங்களில் எவ்வளவோ செலவழித்துக் கொண்டிருக்கிறது. அந்தச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது. நிதியமைச்சராகவும் இருக்கிற காரணத்தால் அதை நான் நன்றாக உணர முடிகிறது. கல்விக்காக ஆகும் செலவைத் தயங்காமல் சமாளித்து வருகிறோம். இருப்பினும் அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. இந்த மாதிரி யோசனைகள் நல்ல யோசனைகள்தான் என்றாலும் இப்போது அரசாங்கம் இதனை ஏற்றுக் கொள்ள முடியாததற்காக வருந்துகிறேன். ஆசிரியர்கள் தாங்களாகவே ஒரு குறிப்பிட்ட உடை, சீருடை அணிந்து வந்தால் நாம் அதைப் பாராட்ட வேண்டும். சீருடை அணியவேண்டுமென்ற வற்புறுத்தல் கூடாது. ஆனாலும் எப்படி மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்கப் பொது மக்கள் முன்வருகிறார்களோ அதே போன்று ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்குவது ரொம்ப நலம். அதற்கும் பொதுமக்கள் வழிகாட்ட வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

யிலும், இதிலே நாம் போதிய கவனம் செலுத்தவில்லை. கல்யாணம் என்றால் ஏதோ 'தட்டு சங்கீதம்' வைக்கிறார்கள். என்னமோ 'காச்சு மூச்சு' என்று கத்துகிறது. காரிலே வேகமாகப் போகிற போதுகூட அதை சகிக்க முடியவில்லை. இது ஒரு முக்கியமான பிரச்னை. கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட பிரச்னைகள் எல்லா வற்றையும்விட கவனிக்கவேண்டிய பிரச்னை. எந்த விஞ்ஞானி இதற்கு வேண்டிய பரிகாரத்தை அளிக்கப்போகிறாரோ தெரிய வில்லை. பொதுக்கூட்டங்களாக இருந்தாலும் கடற்கரையைத் தவிர, நிரந்தரமாக வேறு இடத்தை ஒதுக்கமுடியாது. ஐலண்டு மைதானத்தைப் பற்றி சொன்னார்கள். அதை நம் இஷ்டம்போல் வைத்துக்கொள்ளலாம் என்று கேட்பது சரியல்ல. கட்சி சார்பற்ற வகையிலே ஒரு விழா நடத்தவேண்டுமென்றால், அதைக் கேட்க லாம். ராணுவ ஐலண்டு கிரௌண்டை மற்ற காரியங்களுக்காக கேட்பது நியாயமில்லை. கூடியவரையிலும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :—

"That the Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir I move—

"That the Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

V—DISCUSSION FOR SHORT DURATION.

(1) UNIFORM DRESS FOR TEACHERS.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram will raise a discussion regarding the instructions issued by the Educational authorities insisting on the wearing of uniform dress by the teachers. How long does the hon. Member Sri M. Kalayanasundaram propose to speak?

SRI M. KALYANASUNDARAM : About 7 minutes.

MR. SPEAKER : All right.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி இலாகாவில் இன்று நடைபெறும் ஒரு விஷயம் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பீதியையும் கலக்கத்தையும் உண்டுபண்ணியிருக் கிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதற் காகவே இந்த விவாதத்தை நான் இங்கு நடத்த வேண்டுமென்று முயற்சி செய்தேன். அதாவது ஆசிரியர்கள் அனைவருமே ஒரே

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [23rd January 1964

மாதிரியான உடையை அணியவேண்டுமென்று ஒரு மறைமுகமான நிர்ப்பந்தம் கொண்டுவரப்படுகிறது. ஆசிரியர்கள் கௌரவமான முறையிலே உடை அணியவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். பழைய காலத்திலே, அதாவது வெள்ளைக்காரன் காலத்திலே, ஆசிரியர்கள் கோட், தலைப்பாகை எல்லாம் அணிய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருந்தது. வேஷ்டி கூட சாதாரண மாகக் கட்ட முடியாது. பஞ்ச கச்சம் வைத்துக் கட்டவேண்டும். ஆசிரியரைப்பார்த்தாலே தனி உருவமாக தெரியும். அந்த மாதிரி ஆடம்பரம் இப்பொழுது இருக்க முடியாது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே ஒரு வேறுபாடு தெரியவேண்டும் என்பதற்காக உடை வித்தியாசம் இருக்கவேண்டும். தோற்றத் துக்கு கண்ணியமாக இருக்க வேண்டும். சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களைப் பொருத்தவரையில் கூட, எந்தவிதமான நிர்ப்பந்தமும் இல்லாமல், அவரவர்களுடைய விருப்பத்துக்கு விடப் பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஏன் இப்பொழுது நிர்ப்பந்தம் கொடுக்கிறார்கள்? ஒரு வெள்ளைக் கிழுங்கி, கிரீம் கலரிலே, அதாவது மஞ்சள் கலரிலே ஒரு புஷ் கோட்டு, இவற்றை அணிந்து வரவேண்டு மென்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள். மாணவ மாணவிகளுக்கும் ஒரேமாதிரி உடை இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். மேல் நாடுகளில் கூட மாணவ, மாணவிகள், ஒரேமாதிரி உடை அணிய வேண்டும் என்பதற்கு முக்கியமான தத்துவார்த்த காரணம் உண்டு. அழகாக உடை அணிந்து வரக்கூடிய பெரிய குடும்பத்தில் பிறந்த குழந்தைகளும், எளிய குடும்பத்தில் பிறந்த குழந்தைகளும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்க நேருகிற காரணத்தால், இளம் உள்ளங்களிலே பணக்காரன், ஏழை என்ற வேற்றுமை உணர்ச்சி ஏற்படக்கூடாது என்று நினைத்து, உடை ஒரேமாதிரி இருக்க வேண்டுமென்று கூறப் படுகிறது. அங்கே பெரிய கார்களில் வரக்கூடிய குழந்தைகளை பாடசாலைக்குள்ளே நேராக வர அனுமதிப்பதில்லை. கேட்டுக்கு வெளியே குழந்தைகளை இறக்கி விட்டு விடுவார்கள். ஆகவே சம மான உணர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காக மாணவ மாணவிகள் ஒரே உடை அணிய வேண்டுமென்று இருக்கிறது. இங்கு அந்த மாதிரி அல்ல. ஆசிரியர்கள் ஒரே மாதிரி உடை அணியவேண்டுமென்றால், சில அதிகாரிகளைக் கௌரவிக்க வேண்டு மென்ற நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறது. ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவேண்டுமென்ற நோக்கத்திற்காக அல்ல. ஆசிரியர்கள் நல்ல உடை அணியவேண்டும் என்று சொன்னால், அவர்களுக்குப் போதுமான வருவாய்க்கு வசதி செய்து தர வேண்டும். போதுமான வருவாய் இருந்தால் நல்ல உடை அணிந்துகொண்டு வருவார்கள். நல்ல உடை அணிவதற்குக் கூட வசதி இல்லாத காரணத்தால், அவர்களுடைய உடை வறுமையை பிரதிபலிக்கக் கூடிய நிலையிலே இருக்கிறது. இந்தமாதிரி ஒரு குறிப்பிட்ட உடையை அணியவேண்டுமென்ற நிர்ப்பந்தம் அவர் களுக்கு சங்கடத்தை உண்டாக்கியிருக்கிறது. அதிக செலவு ஆகக் கூடிய காரணத்தால் பல ஆசிரியர்கள் எனக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அம்மாதிரி உடை தைக்கவேண்டுமென்றால்,

23rd January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

ஒரு செட் தைப்பதற்கு ரூ. 20 அல்லது 25 செலவு ஆகும். அப்படி செலவு செய்து இரண்டு மூன்று செட்டுகள் தைக்கவேண்டியிருக்கும். இதை வீட்டிலேயிருக்கிறபொழுது கட்டிக் கொள்ள முடியாது. பள்ளிக்கூடத்திற்கு வருகிற சமயத்தில்தான் இதை உடுத்திக்கொள்ளமுடியும். காலை எழுந்து இரவு வரை ஒரே மாதிரி உடையை அணிந்து பழக்கப்பட்டவர்கள் ஆசிரியர்கள். வீட்டுக்கு ஒரு செட்டு உடை, பள்ளிக்கூடத்திற்கு ஒரு செட்டு உடை என்றால் அதிகச் செலவு ஆகும். அவர்களுடைய வருவாயை அதிகப்படுத்தாமல் செலவை அதிகப்படுத்த கூடிய திட்டம் இது. இதிலே கட்டாயம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். கட்டாயம் எப்படியிருக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். அரசாங்கம் உத்தரவு போடவில்லை. வேறு அதிகாரிகளும் உத்தரவு என்ற முறையில் போடவில்லை. ஆசிரியர்கள் கூட்டம் கூடுகிற சமயத்தில் மாவட்டக் கல்வி அதிகாரி முன்னிலையில் அந்த அதிகாரியின் தயவுக்கு காத்திருக்கக்கூடிய ஆசிரியர்களைக் கொண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, எல்லோரும் சீருடை அணியவேண்டுமென்று செய்து விடுகிறார்கள். மற்ற ஆசிரியர்கள் எதிர்த்துப் பேசலாம் என்றாலோ, கல்வி அதிகாரிகளின் பொல்லாப்பு வருமே என்று பயந்து பேசாமல் இருந்து விடுகிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

ஏன் நீங்கள் உடை அணியவில்லை, என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள் என்று சுற்றறிக்கைகள் மூலமும், கடிதங்கள் மூலமும், மாவட்ட அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்கிறார்கள். மாநில கல்வி அதிகாரி வருகிறார், செக்ரட்டரி வருகிறார், ஆகவே சீருடை அணிய வேண்டும் என்று எழுதியுள்ள கடிதங்களை நான் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் எடுத்து காண்பித்தேன். மறைமுகமான கட்டாயம் இதிலே இருக்கிறது, அந்தமாதிரி இருக்கக்கூடாது என்று தெரிவித்தேன். அதுதான் என் அபிப்பிராயமும் கூட. ஆசிரியர்கள் ஒரேமாதிரி உடை அணிய வேண்டும் என்ற அந்த நிர்பந்தத்தை தவிர்க்க வேண்டும் என்பதற்காக நான் சில விவரங்களை கொடுக்கவேண்டியிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் நிர்ப்பந்தம் இருக்கிறது என்று ஆசிரியர்களிடத்திலே அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இது அவர்களிடையே அதிருப்திக்குரிய காரணமாக இருப்பதினால், முதலமைச்சர் அவர்கள் இதிலே குறுக்கிட்டு இந்த மாதிரி நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதை தவிர்க்கும் வகையில் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி முதல் அமைச்சர் அவர்கள் சீருடை அவசியம்தான் என்றால் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். ஒரேமாதிரி ஆசிரியர்கள் உடை அணிய வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு வருஷத்திலே உடைக்காக ரூ. 50 அலவன்ஸ் என்று கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஆஸ்பத்திரிகளிலே நர்ஸ்களுக்கு உடைக்கு என்று தனி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதேபோல ஆசிரியர்களுக்கும் சீருடைக்காக அலவன்ஸ் கொடுப்பதை கொள்கையாக வகுத்துக் கொண்டால் அது ஆசிரியர்களுக்கு நிவாரணம் கொடுத்ததாகவும் இருக்கும், 11-00 a.m.

கௌரவமாகவும் இருக்கும். ஆகவே சீருடை விஷயத்தில் மறைமுகமான நிர்பந்தம் போக வேண்டும், உடைக்காக விசேஷ அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

*** திரு. எம். எஸ். செல்வராஜன் :** உதவி சபாநாயகர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்துள்ள பிரேரணையின் மீது என் கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன். மறைமுகமான நிர்பந்தம் இருக்கிறது என்பதுதான் அவர்களுடைய குற்றச்சாட்டு. ஆசிரியர்கள் குழந்தைகள் மத்தியில் இருக்க வேண்டியிருப்பதால், குழந்தைகளுக்கு சீர் உடை அவசியம் என்று எப்படி வைத்துக்கொள்ளுகிறோமோ அதேபோல ஆசிரியர்களுக்கும் சீர் உடை அவர்களுடைய தொழிலுக்கும் நல்லது அவர்களிடம் பயிலும் குழந்தைகளுக்கும் நல்லது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்றே கருதுகிறேன். குழந்தைகள் மத்தியில் மேல் கீழ் என்ற உணர்வோ, வசதி உள்ளவர்கள் வசதி அற்றவர்கள் என்ற உணர்வோ அந்த பிஞ்சு உள்ளங்களிலே ஏற்படுவது நல்ல எண்ணங்களை தூண்டாது அதை குழந்தைகளிடையே சரி செய்ய சீர் உடை உறுதுணையாக அமைய வேண்டும் என்று எப்படி கருதுகிறோமோ, அதேபோல ஆசிரியர்களிடத்திலே கூட இந்த ஏற்றத்தாழ்வு உணர்வுகள் தவிர்க்கப்பட வேண்டியவைகள். சமூகத்திலே தலை சிறந்த தொண்டு ஒன்றை செய்கிறோம் என்ற பெருமிதமான உணர்வு அவர்களிடம் வர வேண்டியது அவசியம். இன்றைக்கு ஆசிரியர்களுக்கு சமூகத்திலே அந்தஸ்து பெருக வேண்டும் என்பதற்காக அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கைகளை செய்து வருகிறது, ஆலோசனைகள் செய்து வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். சமூகத்திலே மற்ற பணியாளர்களோடு ஒப்பிடக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு ஊதியமும் மற்ற வசதிகளும் செய்து கொடுக்க எல்லா வகையிலும் முயற்சித்து வருவதை தெரிந்து கொள்கிறோம். அவர்களுக்கு முன்பு இல்லாத பல்வேறு வசதிகள்—ஊதியத்தில் உயர்வு, உத்தியோகத்தில் பந்தோபஸ்து, ரிடையர் ஆகும்போது பென்ஷன், பிராவிடண்ட் பண்டு வசதி,—இன்றைக்கு அளிக்கப்படுகின்றன. அவர்களுடைய அந்தஸ்து படிப்படியாக உயருவதில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஆகவே இப்பொழுது அவர்களுக்கு சீருடை வேண்டும் என்பதும் சமூகத்திலே, மாணவர்களிடையே அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொடுக்கும். ஆரம்ப காலத்தில் பள்ளிப்பிள்ளைகளுக்கு உணவு அளிப்பது என்பதை எப்படி மற்றவர்களுடைய உதவி கொண்டு ஆரம்பிக்கப்பட்டு பிறகு நாளாவட்டத்தில் அரசாங்கம் உதவி செய்ய முற்பட்டார்களோ, அதே போல சீருடை சம்பந்தமாகவும் மற்றவர்களுடைய உதவி கொண்டு, நிர்பந்தம் இன்றி, செய்யப்படுமேயானால் அரசாங்கத்தின் பொறுப்பில் அதை விட்டு விட சாதகமான சூழ்நிலை ஏற்படும் என்றே கருதுகிறேன். வசதி உள்ளவர்கள் ஆசிரியர்களிடையேயும் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டால் அந்தத் தூண்டுதலின் காரணமாக நல்லதொரு

23rd January 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

சூழ்நிலை உருவாக ஏதுவாகும். பள்ளிப் பிள்ளைகளுக்கு உணவு அளிப்பதில் கூட இங்கே அங்கே சிறு சிறு குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் எண்ணத்தை சந்தேகிக்க முடியாது. அதே போல ஆசிரியர்களுக்கும் சீர் உடை அவசியம் என்பதில் ஒரு நல்ல நியதியைப் பின் பற்றி ஆர்வத்தோடு முயற்சிக்கப்படுமேயானால், அது ஆசிரியர்களை ஒரு தகுதி பெற்றவர்களாக தோற்றுவிக்கும். கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் மறைமுகமாக நிர்பந்தம் இருக்கிறது என்று குற்றச்சாட்டை சொன்னார்கள். அந்த நிர்பந்தம் சில பகுதிகளில் இருப்பதாக நான் கூட கேள்விப் பட்டேன். ஆனால் அதை நிர்பந்தம் என்று கொள்வதைவிட தூண்டுதல் என்றே கொள்ளவேண்டும். தூண்டுதலையே நிர்பந்தம் என்று பெயரிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் ஆசிரியர்களில் சிலரைக் கொண்டே தீர்மானம் நிறைவேற்றி அதன் மூலமாக நிர்பந்தம் செய்வது என்பது கடினத் தூண்டுதல் என்றே கொள்ள வேண்டும். அப்படி தூண்டுதல் செய்யும் நிலை இல்லாமல் எந்த காரியமும் கை கூடுவது கடினம் என்றே நினைக்கிறார்கள் போலும். இதிலே மானேஜ்மெண்டார்களை அணுகி இந்த ஆசிரியர்களுக்கு சீர் உடை வழங்க உதவி செய்ய வேண்டும் என்று ஜில்லா கல்வி அதிகாரி தூண்டுதல் கொடுத்து வருகின்றார்கள். அது எந்த வகையில் இருந்தாலும் மானேஜ்மெண்டாரோ, தலைமை ஆசிரியரோ பயத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்வது என்பது நல்லதல்ல. கனம் கலியாணசுந்தரம் அவர்கள் ஆசிரியர்களுக்கு சீருடை அணிவதில் கஷ்டம் இருப்பதாக தெரிவித்தார்கள். அப்படி சீருடை அணிவதை ஒரு சடங்காக கருதாமல், வைபவங்களுக்காக மட்டும் அணியக் கூடியதாக இல்லாமல் சாதாரண காலத்திலும் கூட சீராக உபயோகிக்கும் ஒன்றாக அமைந்தால் அதில் ஆட்சேபம் இருக்க முடியாது. இன்றைக்கு அரசாங்கத்தில் நல்ல எண்ணத்தோடு கதர் அபிவிருத்திக்காக பல காரியங்களைச் செய்து வருகின்றார்கள். ஊக்கம் அளிக்கும் முறையில் பல வசதிகளை, சலுகைகளை கொடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட தேசீய சின்னமாக கருதப்படுகிற கதரை ஒரு குறிப்பிட்ட நியதிப்படி சட்டையாகவும், வேஷ்டியாகவும் அணியும் உடை வகையாக அமையுமேயானால் அது வெறும் சடங்காக மட்டும் இல்லாமல் நித்ய தேவைக்கு உபயோகம் ஆகும் வஸ்திரங்களாக அமைய முடியும். அதனால் ஆசிரியர்களுக்கு கஷ்டம் தோன்றாது என்று பலர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். அதை அரசாங்கமே செய்வது நல்லது. சட்ட பூர்வமாக செய்வதானால் கூட தவறு இல்லை. ஆனால் "எக்ஸ்டர்னல் பிரஷர்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகாரிகளுடைய நிர்பந்தம் அன்றாட வாழ்க்கையில் தவிர்க்கப் படவேண்டும்.

Sri V. S. S. MANI rose.

Mr. DEPUTY SPEAKER : The Hon. Member is not yielding.

திரு. எம். எஸ். செல்வராஜன்: அது தூண்டுதலாக இருக்க வேண்டுமேயல்லாது "எக்ஸ்டர்னல் பிரஷர்" ஆக இருக்கக்கூடாது. அல்லது சர்க்கார் அவர்களுக்கு ஏதாவது உதவிச் சம்பளமாக

ரூபாய் 25-ல் இருந்து 40 வரை, உடைக்காக ஆகும் செலவில் ஒரு பாகத்தை கொடுப்பதன் மூலம் ஆசிரியர்களை ஒரேமாதிரியான உடை அணியும் அமைப்பில் கொண்டுவர முடியும் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு சமூகத்தில் ஒரு நிலைத்த அந்தஸ்து பெறுவதற்கு வழிவகை செய்வதாகவும் இருக்கும் என்பது என்னுடைய ஆலோசனையும் கூட.

*** புலவர் கா. கோவிந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு சீருடை வழங்குவது பற்றி என் கருத்தைத்தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே ஆசிரியர்கள் யாரோடு பழகுகிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பழகுவது இளம் மாணவர்களோடு. ஆகவே அந்த மாணவர்களுக்கு ஆசிரியரைப்பற்றி ஒரு உயர்ந்த எண்ணம் உள்ளத்திலே உண்டாக வேண்டும். அதற்காகத்தான் பழைய தமிழ் இலக்கியத்திலே ஆசிரியருக்கு இலக்கணம் சொல்லும் போது

"வான்யாது அன்ன தோற்றமும், வான்யாது
நிலம்பட்டந்தன்ன நலம்படர் ஒழுக்கமும்"

என்று பல குணங்களை வகுத்திருக்கிறார்கள். முதலிலே தோற்றத்தைப்பற்றி சொல்லுகிறார்கள். அந்தக் காலத்து மாணவர்கள் உள்ளத்திலே நிறைந்தவர் அவர். இப்பொழுது மாணவர்கள் ஆசிரியர்களைக் காட்டிலும் மிகத் தோற்றமான நிலைமையில் உடை அணிந்து செல்லக் கூடிய காலமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில், சில ஆசிரியர்கள் தங்களுடைய பொருளாதாரம் இடங்கொடுக்காத காரணத்தால், வெறும் பனியன் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்று பணி புரியும் நிலை இருக்கிறது. நல்ல உடை அணிந்துகொண்டிராத ஆசிரியர்களிடத்தில் நல்ல உடை அணிந்து செல்லும் மாணவர்களுக்கு மதிப்பு இருக்காது. அந்த ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதிலே அவன் ஊக்கம் செலுத்த மாட்டான். ஆக, சொல்லித் தரப்படுகின்ற பாடம் மாணவர்களின் உள்ளத்திலே நன்றாகப் பதியவேண்டுமென்றால் அந்த மாணவனுக்கு அந்த ஆசிரியரிடத்திலே நல்ல மதிப்பு இருக்கக்கூடிய நிலையை உருவாக்கவேண்டும். அந்த நிலையிலே ஆடை ஒன்று என்று நான் சொல்லத் தேவையில்லை. 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்று சொல்வதுண்டு. ஆக, ஆசிரியருக்கு நல்ல ஆடை இருக்கத்தான் வேண்டும். அதை வற்புறுத்துவதா? அல்லது அவர்களே விரும்பி ஏற்றுக்கொள்வதா? என்பதிலேதான் இங்கே பேசிய கனம் உறுப்பினர்களெல்லாம் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு நல்ல சீருடை வேண்டும் என்பதிலே எல்லோருக்கும் ஒத்த கருத்து இருக்கிற இந்த நேரத்தில் அதை எப்படிச் செய்வது என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனக்கு முன்னே பேசிய நண்பர் அவர்கள் கூறியதுபோல் எத்தனையோ வகையிலே ஆசிரியர்களுக்கு நாம் பல சலுகைகளைச் செய்து தந்திருக்கிறோம். இந்தத் துறையிலே, நாம் சொல்லிக் கொடுக்கின்ற கல்வி நல்ல முறையிலே மாணவர்களின்

23rd January 1964] [புலவர் கா. கோவிந்தன்]

உள்ளத்திலே ஏறவேண்டும் என்ற காரணத்தை மனத்திலே வைத்தாவது இந்த வகையில் அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குவதற்குப் பண உதவி செய்யவேண்டுமென்று நாங்கள் இங்கே வற்புறுத்த விரும்புகிறோம். முழுத் தொகை இல்லாவிட்டாலுங்கூட, அவைகளுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு பணம் அரசாங்கம் தரக்கூடும் என்று சொல்லி விட்டால், மேற்கொண்டு ஆகும் தொகையை அவர்களே போட்டுக்கொண்டு, அரசாங்கம் விதிக்கும் முறையிலே சீருடை அமைத்துக்கொள்ளத் தயங்க மாட்டார்கள். ஆக, அந்த முறையிலே அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். எல்லா ஆசிரியர்களுக்கும் இத்தகைய உதவி கொடுப்பது இயலவில்லை என்றால், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குப் பஞ்சாயத்து யூனியனும், மாவட்டக் கழகமும் உதவி செய்யலாம். ஆக, அந்தந்த அமைப்புகள் அந்தந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்தால் கூடச் சீராக இருக்கும். அந்த வகையில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். முதலில் விவாதத்தைத் தொடங்கிவைத்த பெரியவர் சொன்னதுபோல், நர்சுகளுக்கு சீருடை வழங்கும் விஷயத்தில் அரசாங்கம் உதவி செய்து வருகிறது. அந்தத் துறையைக் காட்டிலும் பல நன்மைகளைச் செய்துவரும் ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தை அரசு நன்றாக சிந்தித்துப் பார்த்து, வரும் நிதி நிலை அறிக்கையிலாவது அதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று முதல் அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும், கல்வி அமைச்சராகவும் இருக்கிற பெரியவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஆர் வி. சுவாமிநாதன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆசிரியர்களுக்குச் சீருடை இருக்கவேண்டியது மிக முக்கியமான ஒரு விஷயம் என்றே எனக்குப்படுகிறது. நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஆசிரியர்கள் உடையைப்பற்றிய பிரச்சினையைக் கிளப்பினார்கள். அவர் பேசியதற்குப் பிறகு கனம் உறுப்பினர்கள் திரு. செல்வராஜன், புலவர் கோவிந்தன் அவர்களும் பேசினார்கள். ஆசிரியர்களுக்குச் சீருடை இருக்கவேண்டுமென்ற விஷயத்தில் அவர்களுக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இருப்பதாகத் தெரியவில்லை. புலவர் கோவிந்தன் அவர்கள் கூறியதுபோல, நிர்பந்திப்பதா ? அல்லது இஷ்டத்திற்கு விட்டுவிடுவதா ? என்பதிலேதான் ஆட்சேபணை இருப்பதுபோல் எனக்குத் தெரிகிறது.

நாட்டில் இப்பொழுது உடை விஷயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். குறிப்பாக, ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குப் போய்ப் பார்த்தால், மூன்றாவது பாரம் அல்லது உயர்நிலைப்படிப்பு படித்துவிட்டு வந்த பையன் கூட உபாத்தியாயராய்விடுவதால் யார் உபாத்தியாயர் யார் மாணவன் என்று தெரிந்துகொள்ள முடியாது. கிராமங்களில் வந்து பார்க்கவேண்டும். குறிப்பாக, ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்களைப் பார்த்தால் அனேக பள்ளிக்கூடங்களில், பையன் மாதிரிதான் வாத்தியார் இருக்கிறான். அதுவும், குள்ளமாக இருக்கிறவனைப் பார்த்தால் நிச்சயமாக

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [23rd January 1964

வாத்தியார் என்று சொல்ல முடியாது. சின்னப் பையனுக, பனியன் போட்டுக்கொண்டுகூட பள்ளிக்கூடத்திற்கு வந்துவிடு வதால், அந்தப் பையன் வாத்தியார்தானு என்று தெரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

கனம் உதவி சபாநாயகர் : உபாத்தியாயரைக் குறிப்பிடும்போது, 'இருக்கிறுன்' என்று சொல்லாமல், 'உபாத்தியாயர் இருக்கிருர்" என்று சொல்வது நலம்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : சிறு பையனுகத்தான் இருக்கிறுன். சிறு பையனை எப்படிச் சொல்வது ?

நான் படித்த காலத்தில் வாத்தியார் வந்தவுடனே வகுப்பில் உள்ள மாணவர்கள் அத்தனை பேரும் மரியாதையுடனும், பயபக்தி யுடனும் இருப்பார்கள். வாத்தியார் என்ருல், க்ளோஸ் கோட் போட்டுக்கொண்டு, தலைப்பாகை அணிந்துகொண்டு கம்பீரமாக இருப்பார்கள். தமிழ் வாத்தியார் வந்தார் என்ருல் மிகவும் மரியாதை காட்டுவோம். சில பேர் கேலி பண்ணுவார்கள். ஆனல், நாங்கள் மரியாதை செய்வோம். வணங்கக்கூடிய மரியாதை செய்வோம். அப்பேர்ப்பட்ட நிலை அப்பொழுது இருந்தது. ஆகவே, வாத்தியார்களுக்கு உடை நன்ருக இருக்க வேண்டியது அவசியம். உடையைப் பார்த்தே ஓரளவு மரியாதை செலுத்தக் கூடிய நிலை எல்லாத் துறைகளிலும் இருப்பதை நாம் பார்த்து வருகிறேம்.

பதினைந்து, இருபது வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் திருச்சி ஜங்ஷனில் நான் ரயிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். நான் கதர் வேட்டி, கதர் ஜிப்பா, கதர்த் துண்டு போட்டுக்கொண் டிருந்தேன். அப்பொழுது அங்கே ஒருவர் பெட்டி படுக்கையுடன் அவசர அவசரமாக நேராக என்னிடம் வந்து, 'தயவு செய்து இந்தப் பெட்டி படுக்கைகளைப் பார்த்துக்கொள்ளுங்கள், இதோ வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு, அவசர அவசரமாகச் சென்றுவிட்டார். எனக்கு வியப்பாக இருந்தது. அதே ப்ளாட் பாரத்தில் எத்தனையோ பேர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பாண்ட், கோட் எல்லாம் போட்டுக்கொண்டிருந்தவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க, என்னிடத்தில் வந்து அவருடைய பெட்டியை வைத்துவிட்டு போவானேன் என்று நினைத்துக்கொண்டிருந்த சமயத்தில் அவர் திரும்பவும் வந்து, பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டார். அப்பொழுது அவரைப் பார்த்து, 'இந்தப் ப்ளாட்பாரத்தில் எத்தனையோ பேர்கள் இருக்க, உங்கள் சாமான்களை என்னிடம் கொடுத்துவிட்டுப் போனீர்களே, என்ன காரணம் ?' என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னுர் 'பெட்டியில் பணம் வைத்திருக்கிறேன். சில முக்கியமான சாமான்களும் இருக்கின்றன. யாரிடம் வைத்துவிட்டுப் போகலாம் என்று யோசித்துப் பார்த்தேன். உங்களைப் பார்த்ததில், நீங்கள் கதர் உடுத்திக்கொண்டிருப்பதைப் பார்த்து, நீங்கள் நல்லவராக இருக் கிறவர் என்று தோன்றவே, உங்களிடம் பொருள்களை வைத்து

23rd January 1964] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

விட்டுச் சென்றேன்' என்று நன்றியுடனும், திருப்தியுடனும் சொல்லிவிட்டுச் சென்றார். உடைக்குத் தனிப்பட்ட மரியாதையும், தனிப்பட்ட லட்சணமும் இருக்கிறது என்பதை அப்பொழுதுதான் நான் தெரிந்துகொண்டேன். ஆகவே, உடை விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும். ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல. பொதுவாக, ஒரு நாட்டு மக்கள் நல்ல உடை அணிந்திருக்கவேண்டியது அவசியம்.

நம் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தவுடனே, 1950-ம் வருஷத்திலிருந்தே ஒரு யோசனை இருந்துவருகிறது. அதாவது, 'தேசீய உடை' (நாஷனல் ட்ரெஸ்) வேண்டும் என்பது. தமிழ் நாட்டில் பொதுவாக நான்கு முழம் வேட்டியோ, எட்டு முழ வேட்டியோ கட்டிக்கொண்டு, மேலே ஒரு ஜிப்பா போட்டுக் கொள்ளுகிறோம். வங்காளத்தில் ஒரு விதமாக வேட்டியை உடுத்திக் கொள்ளுகிறார்கள். இப்படி இந்தியா தேசத்தில் பல மாநிலங்களில் பலப்பல விதமான உடை உடுத்திக்கொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இந்திய தேசத்திலுள்ள மக்களெல்லோரும் ஒரு குறிப்பட்ட விதத்தில் உடை உடுத்திக்கொள்ளவேண்டும் என்பது. மேற்கத்திய நாடுகளில் கூட, இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற நாடுகளில் எல்லாம் ஆங்காங்குள்ள சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தாற்போல் உடை உடுத்திக் கொள்ளுகிறார்கள். ஏறக்குறைய அங்கெல்லாம் ஒரேவித உடை அணிந்துகொள்வதைப் பார்க்கிறோம். பர்மாவிலும், இலங்கையிலும், மலேயாவிலும் கூட அவரவர்களுக்கேற்ற உடையை மக்கள் அணிந்துகொள்ளுகிறார்கள். இதையெல்லாம் கவனித்தால், நம் நாட்டுக்கும் ஒரு தேசீய உடை வேண்டும். தேசீய உடையைப் பற்றிய பேச்சு வந்த காலத்தில், ஓரளவு உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் மட்டும் ஒருவித உடை அணிந்து கொள்ளவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படிதான், உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு பாண்ட், க்ளோஸ் கோட் எல்லாம் போட்டுக்கொள்ளவேண்டும் என்ற முறை இப்பொழுது அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதுதான் தேசீய உடை என்று நம் நாட்டில் இருந்து வருகிறது. அதையும் வற்புறுத்துவதில்லை. இப்படிப்பட்ட உடை இருக்கவேண்டுமென்று அரசாங்கம் ஒரு சாதாரண இன்ஸ்ட்ரக்ஷன் போல் பிறப்பித்தார்கள். அது ஒரு வழிகாட்டியாக இருந்து வருகிறது.

நம் நாடு சுதந்திரம் பெற்றபின் நாம் பல ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக்கொண்டு வருவதன்மூலம் நம் நாடு படிப்படியாக முன்னேறிக்கொண்டுவருகிறது. தேசம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கிறது. அதேபோல், உடையிலும் முன்னேற்றம் வரவேண்டும். குறிப்பாக, கனம் சட்ட சபை அங்கத்தினர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களைப் பார்த்து மக்கள் பின்பற்றக் கூடும். உபாத்தியாயர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள், எப்படி உடை அணிந்து கொள்ளுகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்துத்தான், மாணவர்கள் அவரைப் பின்பற்ற முயற்சி செய்கிறார்கள்.

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [23rd January 1964

மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய வகையில் சட்ட சபை அங்கத்தினர்கள் முதலில் சீருடை அணிந்து கொள்ளவேண்டும். இதே சட்டசபையில் நாம் பார்க்கிறேம்—நம்மில் பலர் பலவிதமான உடைகளை அணிந்துகொண்டிருக்கிறேம். சட்டசபை அங்கத்தினர்களுக்கென்று இப்பொழுது ஒரே விதமான உடை என்று நிர்ணயம் செய்யப்படாமலிருக்கிறது. இலங்கையில் பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்கு என்று தனிப்பட்ட உடை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு அங்கத்தினர் புஷ் கோட் போட்டுக்கொண்டு வந்துவிட்டார். அப்பொழுது உடனே ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினர்கள். சபாநாயகர் முடிவு சொல்லும்போது, 'புஷ் கோட் போட்டுக்கொண்டு சபைக்குள் வந்தது சரியானது அல்ல' என்று சொல்லிவிட்டார். இலங்கை பார்லிமென்டில் தேசீய உடையில் வரவேண்டும். அல்லது, பாண்ட், கோட், டை அணிந்துகொண்டு வரவேண்டும். வேஷ்டி ஜிப்பா மட்டும் போட்டுக்கொண்டு வரக்கூடாது. மேலே ஒரு துண்டும், ஆறு முழத்தில் போட்டுக்கொண்டு வரவேண்டும். ஆனல், நம்முடைய சட்டசபையில் சட்டை இல்லாமல் கூட வரலாம். (சிரிப்பு) அந்த நண்பர் இங்கு இல்லாதபோது நான் ஒன்றும் குறிப்பிடவேண்டாம் என்பதற்காக மேலே செல்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்கிறேன், தமிழ்நாட்டினர் அணிந்துகொள்ளக்கூடிய உடை மிகவும் நல்ல உடையாக இருக்கிறது. நம்முடைய சீதோஷ்ண நிலைக்கு ஒத்ததாக இருக்கிறது. மற்ற மாகாணத்தவர்களும் இந்த உடையை விரும்புகிறர்கள். பஞ்சாப்பில் உள்ளவர்கள் வெளியிலே வரும்போது பாண்ட் போட்டுக்கொண்டாலும் வீட்டிலே இருக்கும் போது நம்மைப் போல் எட்டு முழ வேட்டியை மடித்துக் கட்டிக் கொள்ளுகிறர்கள். இந்த உடை மிகவும் சௌகரியமாக இருக்குமென்று சொல்லுகிறர்கள். நம் நாட்டுக்கு என்ன உடை இருந்தால் நன்றாக இருக்கும் என்று என்னைக் கேட்டால், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உடுத்திக்கொண்டிருப்பதுபோல, வேட்டியும், ஜிப்பாவும், மேலே ஒரு அங்கவஸ்திரமும் போட்டுக்கொண்டு வரலாம் என்று நிர்ணயித்துவிட்டால் அதை நான் ஏற்றுக்கொள்வேன். சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் கட்சிப் பாகுபாடு இல்லாமல், தனியாகக் கூடி, எம்மாதிரியான உடை உடுத்திக்கொண்டு சட்டசபைக்கு வரவேண்டும் என்பதை நிர்ணயித்துவிடுவது நலம். நிர்ப்பந்தம் வேண்டாம் என்று வைத்துக்கொண்டாலும், உடையை நிர்ணயித்துவிட்டால் நல்ல மாறுதலாக இருக்கும். சட்டசபை அங்கத்தினர்களைப் பார்த்து, வெளியே உள்ளவர்களும் இப்படிப்பட்ட உடை அணிந்துகொண்டு வருகிறவர்களைப் பார்த்து மேலும் மரியாதை கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டு, நல்ல அபிப்பிராயமும் ஏற்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் நல்ல சீருடை அணிந்துவரவேண்டும் என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். நிர்ப்பந்தம் வேண்டாம் என்று சொல்கிறர்கள். நிர்ப்பந்தம் பண்ணவேண்டுமென்று விரும்புகின்றவன் நான். அந்த அதிகாரம் எனக்குத் தந்தால், நிச்சயமாக உபாத்தியார்களுக்கு . . .

திரு. மீ. கலியாணசுந்தரம்: வராது. (சிரிப்பு).

23rd January 1964]

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : வராமலிருந்தாலே சந்தோஷம். உபாத்தியாயர்களுக்கு ஒரேவிதமான உடை நிர்ணயம் செய்து, அதைத்தான் பள்ளிக்கூடத்திற்கு உடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று நிச்சயமாக உத்தரவு போடப்படவேண்டும். ஆகவே உடை ஒரு மதிப்பைத்தான் கொடுக்கும். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். புலவர் கோவிந்தன் சொன்னார்கள், அதற்காக ஒரு அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டும் என்று எனக்கு எனக்கு அதிகாரம் இருந்தால் நிச்சயமாக அதைக் கட்டாயமாகக் கொண்டு வருவேன். மேலும் அதற்காக ஒரு அலவன்சும் கொடுக்கப்படவேண்டும் என்று செய்வேன். காரணம் கட்டாயமாகக் கொண்டுவரப்படுகிறபோது அதனால் ஏழை ஆசிரியர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆகவே இதுபற்றி கனம் நிதி அமைச்சர், கல்வி அமைச்சர் பரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்திற்கு அவசியமில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குவது பற்றிய இந்த விஷயத்தில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆசிரியர்களுக்குச் சீருடை வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு பிரச்னை. அந்தச் சீருடையினால் கஷ்டங்கள் ஏற்படுமா, இல்லையா என்பது ஒரு பிரச்சினை. அந்தக் கஷ்டங்களை ஆசிரியர்களே போக்கிக் கொள்ள வேண்டுமா, அல்லது அரசினர் முன்வந்து போக்கவேண்டுமா என்பது ஒரு பிரச்சினை.

ஆசிரியர்களுக்கு சீருடை அவசியமா, இல்லையா என்ற பிரச்சினையை முதலில் எடுத்துக் கொண்டால் சீருடை அமைப்பு இருக்க வேண்டும் என்பதில் இந்த மன்றத்தில் இருக்கிற யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லையென்று நான் கருதுகிறேன். ஆசிரியர்களுக்கு சீருடை வேண்டுமென்ற இன்றியமையாத தன்மையை அத்தனைபேரும் உணருகிறார்கள். சீருடையை வற்புறுத்துவதன் காரணமாக ஆசிரியர்களுக்கு உடனடியாக கஷ்டம், தொல்லைகள் ஏற்படுகின்றனவா என்று கேட்டால் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். அந்தக் கஷ்டங்களை ஆசிரியர்களே போக்கிக் கொண்டு அந்தச் சீருடையைப் பெறுவதா? அல்லது அரசினருடைய உதவியின்பேரில் பெறுவதா? என்றால் அரசினர் உதவி அவசியம் என்றுதான் பலர் கருதக் கூடும்.

இன்றைக்கு ஆசிரியர்களிடத்தில் சீருடை அமைப்பு இல்லாததனால் ஏற்படுகிற கஷ்டத்தையும், அவர்களுக்கே ஏற்படுகிற அவமதிப்பையும் பலர் எடுத்துச் சொன்னார்கள். " ஆடையில்லா மனிதன் அரை மனிதன் " என்கிற பழமொழி நீண்டகாலமாக இருந்து வருகிறது. நல்ல ஆடை இருந்தால் அதற்கு ஒரு தனி மதிப்பு தான். எல்லோரும் மனிதர்கள் தான் என்றாலும் நல்ல ஆடை உள்ள மனிதனுக்கு சமுதாயத்தில் ஒரு மதிப்பு இருக்கத்தான் செய்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். "மேலாடையின்றி" என்ற மூதுரை நீண்ட நெடுங் காலமாக இருந்து வருகிறது. அப்படி ஆடை மனிதனை அளவு

எடுத்துத் தருகிறது. நீதிபதிகளுக்கு, போலீஸ்காரர்களுக்கு, தரைப்படியினருக்கு, கப்பல் படையினருக்கு என்று தனித்தனியாக உடை இருப்பதினால் அவர்களை வேறு பிரித்து அறிவது வசதியாகவே இருக்கிறது. அந்த வகையில் ஆசிரியர்களுக்குத் தனியாக சீருடை இருந்தால் நன்றாக இருக்கும். அவர்களுடைய மதிப்பை அது உயர்த்த கூடிய வகையிலும் அமையும்.

மாணவ மாணவிகளுக்கு என்று சீருடை அமைக்கப்பட்ட பிறகு அது நன்றாகத்தான் இருக்கிறது. பொதுமக்களும் அதை உணருகிறார்கள். கான்வென்ட் பள்ளிகளில் நீண்டகாலமாக இந்தச் சீருடைத் திட்டம் இருந்து வந்திருக்கிறது. ஆசிரியர்களுக்கும் கூட அவர்கள் ஒரு தனி உடை கொடுக்கிறார்கள். அதனால் மாணவர்களையும், ஆசிரியர்களையும் சுலபமாக வேறுபிரித்து அறிய முடிகிறது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேறுபாடு அறிந்து கொள்ள முடியாத நிலை மட்டும் அல்ல, சில சமயங்களில் அவமரியாதை ஏற்பட்டு விடுகிறது என்று சொன்னார்கள். சில இடங்களில் கடைநிலை ஊழியர்களை ஆசிரியர் என்றும், ஆசிரியரை அந்த நிலையிலும் கூட மதித்துவிடக்கூடிய நிலை, சீருடை இல்லாததனால் ஏற்படுகிறது. எனவே ஆசிரியர்களுக்கு சீருடை இன்றியமையாதது என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கிறோம். ரயில்வேக்களில் டி.டி.ஆர்., ஸ்டேஷன் மாஸ்டர் என்று தனித்தனியாக வேறு பிரித்து அறிவதற்கு ஏற்றபடி உடை அளிக்கிறார்கள். பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் அதிகமில்லை. ஆகவே அரசாங்கமே அவர்களுக்கு சீருடை வழங்க அலவன்சும் கொடுக்கலாம். அப்படி கொடுத்தாலும் பரவாயில்லை. ஆசிரியர்களுக்கு சீருடை வழங்குவது இன்றியமையாதது. இன்றைய தினம் நம்முடைய அரசாங்க அதிகாரிகளில் கூட யார் செக்ரடரி, யார் டெபுடி செக்ரடரி என்று உடையைப் பார்த்தவுடன் அறிந்து கொள்ள முடியவில்லை. இங்கு சீருடை அமைப்பு இருந்தால் நல்லது. அப்புறம் சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் ஓர் அமைப்பு சட்டமன்றத்திற்கு வரும்போது இருந்தால் நல்லது. பொதுவாக இன்றைக்கு ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் சமுதாயத்தில் அவர்களுடைய மதிப்பை நாம் உயர்த்தியாகவேண்டும். அதற்கு இந்தச் சீருடை இன்றியமையாததாகவும் இருக்கக் கூடும். ஊட்டியில் ஒரு பள்ளியில் ஆசிரியர்கள் எல்லோரும் கருப்பு கவுன் போட்டுக்கொண்டிருந்தார்கள். உடையைப் பார்த்தவுடனேயே அந்த ஆசிரியர்களிடத்தில் ஒரு மதிப்பு உண்டாகிறது என்பது உண்மை தான். ஆகவே ஆசிரியர்களுக்கு சீருடை அமைப்பை ஏற்படுத்தி, அதனால் ஏற்படும் கஷ்டத்தை ஆசிரியர்களே சமாளித்துக்கொள்ளட்டும் என்று விடாதவாறு போலீஸ் போன்ற துறையினருக்குக் கொடுப்பதுபோல் இவர்களுக்கு ஒரு உடை அலவன்சு வழங்கவும் ஏற்பாடு செய்யத்தக்க வகையில் நமது கல்வி அமைச்சர்—அவரே நிதி அமைச்சராகவும் இருக்கிறார்—அவரே முதல் அமைச்சர்—ஆகையினால் அவர் இவ்விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

23rd January 1964]

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கிளப்பிய பிரச்சினை ஆசிரியர்கள் சீருடை அணியவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதாகும். ஆசிரியர்கள் சீருடை அணிய வேண்டுமென்பதைப்பற்றி அவர்கள்கூட மறுக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். மற்ற கனம் உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சீருடை அணிவதன் அவசியத்தைப் பற்றிக் கூறினார்கள். புலவர் கோவிந்தன் அவர்கள், சீருடையின் அவசியத்தைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் அதைப் பற்றி வற்புறுத்திக் கூறினார்கள். ஆசிரியர்கள் ஒரே மாதிரி ஆடையணிவது நலம் தான். ஆனால் மற்றொரு பிரச்சினையையும் மனத்தில் கொள்ளவேண்டும். ஒரே மாதிரி ஆடையை நிர்ணயித்து அதனை ஆசிரியர்கள் அணிய வேண்டுமென்பது ஒரு விஷயம். மற்றொன்று 'டீசன்ட் டிரஸ்' அணிகிறார்களா, இல்லையா என்பது. ஒரே மாதிரி ஆடை அணியாவிட்டாலும் பார்ப்பதற்கு ஒப்புக்கொள்ளக் கூடிய ஆடை அணிய வேண்டும். ஆசிரியர்களுக்குச் சீருடை என்று நிர்ணயிக்கவில்லை என்ற காரணத்திற்காக எந்த ஆடையை வேண்டுமென்றாலும் அணியலாம் என்று வெறும் பனியனைப் போட்டுக் கொண்டோ, வெறும் வேட்டியை மட்டும் உடுத்திக் கொண்டு மேலே ஒன்றும் ஆடையில்லாமல் இருக்கக்கூடாது. பண்டைக் காலத்தில், கனம் சுவாமிநாதன் அவர்கள் கூறியது போல நிர்ப்பந்தம் இல்லாமலே ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட ஆடையை அணிந்து வந்தார்கள். அந்த முறையில் ஆசிரியர்கள் நிர்ப்பந்தம் இல்லாமலே குறிப்பிட்ட நல்ல ஆடையை அணிய முன்வரவேண்டும். ஆடைக்கு அலவன்சு கொடுக்கவில்லை என்று சொல்லி ஆசிரியர்கள் அரை வேட்டியோடு வருகிறோம், கோவணாண்டியாக வருகிறோம் அல்லது நிர்வாணமாகவே வருகிறோம் என்று சொன்னால் அது முறையான போக்கா? அந்தப் போக்கை நான் ஏற்றுக் கொள்ள முடியாது; கனம் உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பண்டைக் காலத்திலே கோட்டு தலைப்பாகை எல்லாம் இருந்தது. கொஞ்சம் ஆங்கிலம் படித்து நாகரிகம் வந்தபிறகு நிஜார் போட்டுக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு தேசிய உடை வேட்டி, ஒரு ஷர்ட் அல்லது ஜிப்பா அணிந்தால் போதும் என்ற நிலை ஏற்பட்டது. ஆசிரியர்கள் ஷர்ட் அல்லது ஜிப்பா போட்டுக் கொண்டால் கூட அதிலே ஆட்சேபணை இல்லை. அதற்கும் குறைவாக இருந்தால் வற்புறுத்தக்கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? குறைந்த பட்ச உடை அணியத் தவறி விட்டால் அதை வற்புறுத்த வேண்டாமா? கனம் அங்கத்தினர்கள் அதை மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆசிரியர்கள் பள்ளிக்கூடத்திற்கு வரும் போது டீசென்ட் டிரெஸ் அணிந்து கொண்டு வரவேண்டும். அந்த அளவுக்குக் கூட உடை அணியாமல் வருகிறவர்கள் இருக்கிறார்கள். அதை அனுமதிக்க முடியாது. இன்று மாணவ மாணவிகள் சீருடை அணிகிறார்கள். அதே போன்று ஆசிரியர்களும் சீருடை அணியவேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறல்ல. மாணவ மாணவிகள் கூட எல்லாப் பள்ளிகளிலும் சீருடை அணியவில்லை. அதற்காக அரசாங்கமும் எந்தவித உதவியும் அளிப்பது இல்லை. 12-00 noon.

[திரு. எம். பக்தவத்சலம்] [23rd January 1964

அதற்காக மக்கள் முன்வந்து உதவி அளிக்கிறார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டில் 39 லட்சம் ரூபாய் வரை நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது. அப்போதைக்கப்போது சிலர் உதவி அளிக்க முன்வருகிறார்கள்; தர்மம் செய்கிறார்கள். அந்த உதவி ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. மாணவ மாணவிகள் சீருடை அணியும்போது ஆசிரியர்களும் அணியலாம் என்ற எண்ணம் நல்ல எண்ணம் தான். ஆனால் ஆசிரியர்கள் சீருடை அணியவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள் என்பது சரியல்ல. அவ்வாறு வற்புறுத்தல் இருக்கக்கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்; ஆனால் வற்புத்தல் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள மாட்டேன். அதிகாரிகள் தொந்தரவு செய்கிறார்கள் என்று சொல்வதெல்லாம் மிகைப்படுத்திக் கூறுவதாகும். அவ்வாறு மிகைப்படுத்திக் கூறுவது சிலருடைய சுபாவமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள்கூட பொடி வைத்துப் பேசினார்கள். ஆசிரியர்கள் அதிருப்தியுடன் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். எங்கே அதிருப்தி இருக்கிறது? கனம் அங்கத்தினர் அவர்களுடைய உள்ளத்தில் வேண்டுமென்றால் அதிருப்தி இருக்கலாம். கனம் அங்கத்தினர் அவர்களை விட எனக்குக் கொஞ்ச நாட்களாக ஆசிரியர்களுடன் அதிகத் தொடர்பு இருந்து வருகிறது. அவர்களுடைய மனோபாவத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கு இருக்கிறது. ஏதோ வீட்டுத் தொல்லை இருக்கலாம், சம்சாரத் தொல்லை இருக்கலாம். ஆசிரியர்கள் என்ற காரணத்தால் அதிருப்தி இருக்கிறது என்று சுட்டிக் காட்டுவது, பொடி வைத்துப் பேசுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூற விரும்புகிறேன். ஆசிரியர்கள் மிக்க மகிழ்ச்சியோடு, மிகுந்த உற்சாகத்தோடு தங்கள் பணியைச் செய்து வருகிறார்கள். எனவே, ஆசிரியர்கள் சீருடை அணியவேண்டுமென்று வற்புறுத்தப்படவில்லை. மறைமுகமாகக்கூட வற்புறுத்தக்கூடாது என்று இப்போதும் சொல்கிறேன். அவர்களுடைய சீருடைக்காக அரசாங்கம் ஏதாவது அலவன்ஸ் கொடுக்கலாம்; அதிலே தப்பு இல்லை. நியாயந்தான். அரசாங்கம் கல்வி இனங்களில் எவ்வளவோ செலவழித்துக் கொண்டிருக்கிறது. அந்தச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது. நிதியமைச்சராகவும் இருக்கிற காரணத்தால் அதை நான் நன்றாக உணர முடிகிறது. கல்விக்காக ஆகும் செலவைத் தயங்காமல் சமாளித்து வருகிறோம். இருப்பினும் அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. இந்த மாதிரி யோசனைகள் நல்ல யோசனைகள்தான் என்றாலும் இப்போது அரசாங்கம் இதனை ஏற்றுக் கொள்ள முடியாததற்காக வருந்துகிறேன். ஆசிரியர்கள் தாங்களாகவே ஒரு குறிப்பிட்ட உடை, சீருடை அணிந்து வந்தால் நாம் அதைப் பாராட்ட வேண்டும். சீருடை அணியவேண்டுமென்ற வற்புறுத்தல் கூடாது. ஆனாலும் எப்படி மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்கப் பொது மக்கள் முன்வருகிறார்களோ அதே போன்று ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்குவது ரொம்ப நலம். அதற்கும் பொதுமக்கள் வழிகாட்ட வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

(2) COMPULSORY PROCUREMENT OF PADDY AND RICE IN THANJAVUR DISTRICT.

MR. SPEAKER: The hon. member Sri M. D. Thiagaraja Pillai will raise a discussion regarding fixing the rates of compulsory procurement of paddy and rice from millers and dealers in Thanjavur district.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: கனம் உப அக்கிராசனாதிபதி அவர்களே, இப்போது நம் மாநிலத்தில் அரிசி கொள்முதல் செய்வதற்குக் கட்டாயமாக ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அது மிகவும் அவசியந்தான். அதை வரவேற்றுப் பாராட்டுகிறேன். சென்ற தடவை தஞ்சை ஜில்லாவில் கூட நவம்பர்-டிசம்பர் மாதங்களில் அரிசியே இல்லாத காரணத்தால் அன்றாடம் வேலை செய்கிற ஏழை மக்கள் நெல் வாங்கித்தான் சாப்பிட வேண்டியிருந்தது. நெல்லையெல்லாம் வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லும் காரணத்தால் கிராம மக்களுக்கு நியாயமான விலைக்கு, குறைந்த விலைக்கு அரிசி நெல் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அரிசியைக் கொள்முதல் செய்து அதிகமான நியாய விலைக்கடைகளைத் திறந்து விநியோகம் செய்தால்தான் ஏழை மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க முடியும். அந்த முறையில் அரசாங்கம் ஜனவரி மாதம் 8-ம் தேதி பிறப்பித்த உத்தரவுப்படி கொள்முதல் செய்யப்படுகிறது. அந்த உத்தரவில் விலை பற்றியெல்லாம் விவரமாகத் தெரியவில்லை. இன்றையதினம் பேப்பரில் ஒரு பிரஸ் நோட் வந்திருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகளும் மிராசுதாரர்களும் நியாயமான விலையைத் தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கிறது.

தஞ்சை ஜில்லாவில் 20 சதவிகிதம் கொள்முதல் செய்யவேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. அங்கு அதிகப்படியாக உற்பத்தி செய்யப்படுவதால் அப்படிச் செய்திருப்பது நியாயமே. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அங்கு விடாத மழை காரணமாக சாவியாகி விட்டது. 15 மேனி, 18 மேனி கண்டது இப்போது பத்து மேனி தான் காண்கிறது. சில மாதங்களுக்கு முன்னர் அங்கு விளைச்சல் அதிகமாக இல்லை என்று அதிகாரிகளும், அமைச்சரும் தெரிவித்தார்கள். இத்தடவை கூட நாங்கள் எதிர்பார்த்த அளவு வராது மழை காரணமாக உற்பத்தி குறைந்து விட்டது. பதிர் ஆகி மேனி குறைந்துவிட்டது. இந்நிலையில் 58 கிலோ கொண்ட மூட்டையை 21, 22 ரூபாய்க்கு இருந்ததை இப்போது 18 ரூபாய்க்கு கேட்கிறார்கள். அங்கோ, மகசூலும் குறைந்துவிட்டது, சாவியாகவும் விட்டது. ஆகவே நல்லவிலை கிடைக்காமல் அங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவேதான் நான் இப்பிரேரணையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆக, 22 ரூபாய் என்று விற்றதை 20 ரூபாய் மூட்டைக்கு என்று வைத்தாலாவது விவசாயிகள் சந்தோஷத்துடன் கொடுப்பார்கள். நெல் உற்பத்தி செய்கிறவர்கள் அதை விற்றுத்தான் மற்ற பொருள்களை வாங்க வேண்டியிருக்கிறது. மற்ற பொருள்களின் விலை ஏறி இருப்பதைப் போன்று நெல்லின் விலை ஏறவில்லை. அதோடு உற்பத்தியும் குறைந்திருக்கிறது. ஆகவே இந்நிலையில் இப்போதுள்ள

[திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை] [23rd January 1964

விலையில் கொள்முதல் செய்தால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். பெங்கால் போன்ற இடங்களில் அதிக விலை கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அமைச்சர் அவர்கள் தஞ்சை மகாநாட்டிற்கு வந்திருந்தபோது மிராசுதார்களும், விவசாயிகளும் இதுபற்றி அவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே நெல் விலையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நான் கூற விரும்புவது, நெல்லாக கொள்முதல் செய்தால் வசதியாக இருக்கும். அரிசியை வாங்கி ஸ்டாக் செய்வதை விட நெல்லாக வாங்கி ஸ்டாக் செய்து பின்னர் கொடுத்தால் அது கெட்டுப் போகாதிருக்கும். அனுபவம் உள்ள கொள்முதல் அதிகாரிகளை அங்கு இரண்டு மாதங்கள் அனுப்பி வைத்தால் அவர்கள் அங்குள்ள நிலையை அறிந்து காரியங்களைச் செய்ய முடியும். இப்போது தஞ்சை ஜில்லா முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அநேக மனுக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதற்காக இருக்கின்றன. குறுவை மகசூல் குறைந்திருக்கிறது. மூட்டை 52 ரூபாய்க்கு வாங்கும் அளவில் விலை உயர்ந்து விட்டது. பத்து டன் கொடுக்கவேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். சில மில் சொந்தக்காரர்கள் கொடுத்தார்களே தவிர மற்றவர்கள் கொடுக்கவில்லை. அரசாங்க உத்தரவைக் காட்டி குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து அதிக விலைக்கு அவர்கள் விற்று விட்டார்கள். ஆகவே விலையையும் அதிகரித்து, அதோடு நெல்லாகவும் கொள்முதல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சிலர்தான் வசதி உடையவர்களாக இருக்கிறார்களே தவிர மற்றவர்கள் நெல்லை விற்றுத்தான் பிற பொருள்கள் வாங்க வேண்டியிருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் பணம் கிடைக்க தாமதம் ஏற்படுகிறது. இன்று அநேக கோடவுன்ஸ் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கு கொள்முதல் செய்து வைக்க வசதி இருக்கிறது. மத்திய பாங்க்ஸ் பணம் கொடுத்து, நெல்லாக கொள்முதல் செய்து வைத்தால் நியாயமான லாபத்தை கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்துவிட்டு அரசாங்கமே நேரடியாக எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும். மில் சொந்தக்காரர்களும் தங்களுக்கும் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அவர்களும் விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே எல்லாவற்றையும் கவனித்து தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். தண்டாயுதபாணி : சட்டமன்ற உப தலைவர் அவர்களே, இப்போது நம் அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் இந்தக் கொள்முதல் திட்ட அடிப்படையில் குறிப்பாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற மிகுந்த சிரமத்தை நான் இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக கொள்முதல் செய்கிற இந்த அரிசி நம் மாநிலத்திலேயே விலைக்கு வாங்கி உண்ணுகிறவர்களுக்கு அதிகமான விலையில் விற்கிற காலத்தில் இதை விநியோகிப்பதற்காக நாம் கொள்முதல் செய்கிறோம் என்பதை நாம் உணர்ந்தபோதிலும் அப்படிக் கொள்முதல் செய்வதற்கு நாம்

பிறப்பித்திருக்கிற இந்த உத்தரவு எந்தளவு விவசாயிகளைப் பாதிக்கிறது என்பதையும், சர்க்கார் நிர்ணயித்திருக்கும் இந்த விலை எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். குறிப்பாக ஒரு லட்சம் டன் அரிசி நம் ராஜ்யத்தில் கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருந்தபோதிலும் இதை பல முறையிலே கொள்முதல் செய்யலாம். இப்போது கொள்முதல் செய்யவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும் இந்த முறையை பின்பற்றினால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வசதியில்லை என்று பன்முறை இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சர்க்கார் நிர்ணயித்திலிருக்கிற விலை 48 பட்டணம் படி கொண்ட ஒரு நெல் மூட்டை சாக்கு நீங்கலாக 17 ரூபாய் 30 காசு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படி விற்கப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலையில் விவசாயிகள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு பிறப்பித்திருந்த உத்தரவிலாவது ஒரு வழி இருந்தது. குறிப்பாக விவசாயிகள் மார்கட்டிங் சொஸைடியில், அல்லது கூட்டுறவு சங்கங்களில் நெல் மூட்டைகளை அடமானம் வைத்திருந்து ஆறு மாதங்கள் கழிந்து விலை ஏறியிருக்கும்போது நெல்லை விற்று கூட்டுறவு சங்கங்களில் வாங்கியிருந்த கடனைத் தீர்க்க வசதியிருந்தது. ஆனால் இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கும் உத்தரவில், ரூ. 25-க்கு மேல், ஒரு நெல் வியாபாரியோ அல்லது மில்காரரோ, சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலைக்கு மேல் விற்கக் கூடாது என்று வரையறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் கூட்டுறவு சங்கங்களில் அல்லது மார்க்கட்டிங் சொஸைட்டியில் எவ்வளவு மாதங்கள் தேக்கி வைத்திருந்தாலும் நிச்சயமாக விலை ஏறிக் கிடைப்பதற்கு வழியில்லை என்று கூறிக் கொள்கிறேன். குறிப்பாக, முன்னால் பத்து சதவிகிதம் அரசினருக்குக் கொடுத்து விட்டு, பாக்கி நெல்லை எந்த விலையில் வேண்டுமென்றாலும் மில் காரர்களுக்கோ, வியாபாரிகளுக்கோ விற்றுக்கொள்ளலாம் என்று இருந்த நிலைமையில்கூட விவசாயிகளிடமிருந்து அதிகமான விலை கொடுத்து யாரும் வாங்க முன் வராத நிலைமைதான் இருந்தது என்பதை சென்ற ஆண்டில் நாம் பார்த்தோம், அதற்கு மாறாக இப்போது சர்க்காருக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை கொடுத்துவிட்டு, மீதியை பிறருக்கு விற்றுக்கொள்ளலாம் என்றிருந்தால் ஓரளவுக்கு விலை ஏறுவதற்கான வழி அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த அளவுக்கு கொள்முதல் செய்யவேண்டும் என்று நிர்ணயித்திருந்தாலும், குறிப்பாக, தஞ்சையில் 20 சத விகிதம் கொள்முதல் செய்யவேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இதற்கான சர்க்கார் உத்தரவு 19—1—1964-ல் வந்தது. ஆனால் 13, 14-ம் தேதிகளில் என்ன விலைக்கு விற்கப் பட்டது என்பதைப் பார்க்கவேண்டும். நாங்கள் சொல்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அரசாங்க உத்தியோஸ் தர்கள் மூலமாக இந்த விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள லாம். இந்த சர்க்கார் உத்தரவு வருவதற்கு முன்னால், 17 ரூபாய்

75 ந.பை., 18 ரூபாய் என்று இப்போது வாங்கப்படுவது 14-ம் தேதிக்கு முன்னால் 21½ ரூபாய், 20½ ரூபாய் என்று இருந்தது. ஆனால் இப்போது குறைந்த விலையில் மில்காரர்களும், வியாபாரிகளும் கட்டாயப்படுத்தி ஏழை மக்களை நிர்பந்தப்படுத்தக்கூடிய வகையில் இந்தக் கொள்முதல் திட்டம் அமைந்திருக்கிறது. அரிசி வாங்கி சாப்பிடுகின்றவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுப்பதற்காக அரசாங்கம் என்னென்ன முயற்சிகளை எல்லாம் எடுக்கின்றதோ அதே போன்று, விவசாயிகளுக்கும், தங்களுடைய விவசாயச் செலவுகள் கட்டுப்படியாகக்கூடிய விலையை நிர்ணயிக்க வேண்டும். நெல்லுக்கு விலையை கட்டுப்படுத்துகின்ற இந்த நேரத்தில் மற்ற பொருட்களின் விலைகள் எல்லாம் ஏறிக்கொண்டிருக்கிறது, அதற்கும் நியாயமான விலையை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலை மிகவும் குறைவாக இருக்கின்ற காலத்தில் இதை சிறிதளவு உயர்த்துகின்ற முறையில் 48 பட்டணம் படி கொண்ட மூட்டை ஒன்றுக்கு இரண்டு ரூபாய் அதிகமாக கொடுக்கக்கூடிய அளவில், மத்திய சர்க்காரிடத்தில் இந்த இரண்டு ரூபாய் அளவை வாங்கி, விவசாயிகளுக்கு 20 ரூபாய் என்ற அளவிலாவது விலையை நிர்ணயம் செய்தால், விவசாயிகளுடைய வாழ்க்கை வசதி ஓரளவுக்கு உயரும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு விவசாய உற்பத்தி பெருகும் என்பதை குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் தஞ்சை ஜில்லாவில், மதிப்பிற்குரிய தியாகராஜ பிள்ளை அவர்கள் கூறியதுபோல், இப்போது பருவமழை சரியாக அமையவில்லை. இந்த நிலையில் விவசாயிகள் நெல்லை குறைவான விலைக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதோடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் உயர்த்திய நிலத்தீர்வையும் அவர்கள் கொடுக்கவேண்டியிருக்கிறது, இவைகளை எல்லாம் இன்னும் இரண்டு மாதங்களில் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது, அதே சமயத்தில் நெல் விலையும் குறைவாக இருக்கிறது. இவைகளை எல்லாம் அரசாங்கம் கவனத்தில் கொண்டு, நியாயமான அளவுக்காவது விவசாயிகள் நல்லமுறையில் வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. ராகவ ரெட்டி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தானிய விலை கடந்த ஆண்டைவிட, இப்போது புதிதாக சர்க்கார் உத்தரவு போட்ட பிறகு கடந்த ஆண்டு தை மாதத்தில் 20 ரூபாய் 22 ரூபாய் இருந்து வந்தது, இப்போது குறைந்த விலை இருக்கிறது, கூடுதலான விலைக்கு வாங்குவதற்கு ஆள் இல்லாத நிலைமை எங்கள் பகுதியில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை சர்க்கார் உத்தரவால்தான் ஏற்பட்டிருக்கிறது என்று எங்கு பார்த்தாலும் குறையாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள விவசாயிகளை எடுத்துக்கொண்டால், அவர்கள் தான் நகரவாசிகளுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்கிறார்கள். அந்தப் பொறுப்பு, கடமை அவர்களுக்கு இருக்கிறது. நம்முடைய

23rd January 1964] [திரு. அ ராகவ ரெட்டி]

சர்க்கார் அதை உணராமல் பல உத்தரவுகளை போட்டிருக்கிறார்கள். காய்கறிகளைப் பார்த்தாலும் விலை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. எனக்கு ஒரு வாழைத்தோட்டம் இருக்கிறது. 100 காய் நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்று வாங்கிக்கொண்டு போகிறார்கள். அதை எடுத்துக்கொண்டு போய் அதே கிராமத்தில் ஒரு காய் 10 ந.பை. என்று விற்கிறார்கள். ஒரு பர்லாங் தூரத்தில் போனதும், இரண்டு மடங்காக விற்கிறார்கள். அதே போன்று 20, 23 ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டு வந்து படி ஒரு ரூபாய் என்று புழுங்கல் அரிசி விற்கிறார்கள். நியாய விலை கடை மூலமாக எப்படியோ குறைந்த விலைக்கு விற்கிறார்கள். ஆனால் தனியார்கள் விற்கின்ற கடைகளில் புழுங்கல் அரிசி ஒரு ரூபாய் என்றும், பச்சரிசி, 1 ரூபாய் 6 அணா, அல்லது ஒரு ரூபாய் 8 அணா என்று விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமையை மாற்ற வேண்டும், அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். எப்படியாவது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத்தான் கனம் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். கனம் தலைவர் அவர்கள் இரண்டு நிமிடங்களுக்கு மேல் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருப்பதால் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. நெ. சா. இராமலிங்கம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் பேசிய கருத்துக்களை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசாங்கத்தார் நகரப்பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகளிடத்திலிருந்து லெவி முறையில் நெல்லை கொள்முதல் செய்வதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள். எப்போதும் விவசாயிகள் மற்றவர்களுக்கு உதவி செய்வார்கள், அது அவர்களுடைய பரம்பரை வழக்கம். அதை கருத்தில் கொண்டு, விவசாயிகளுக்கு நியாயமான அளவில், கட்டுப்படியான விலையைக் கொடுக்கவேண்டும் என்பது தான் இப்போதுள்ள பிரச்னை. விவசாயிகளுக்கு அதிகப்படியான அளவு லாபம் கிடைக்க வேண்டும் என்பதோ அல்லது அவர்களுடைய நெல்லுக்கு அதிகப்படியான விலை கிடைக்கவேண்டும் என்பதோ பிரச்னை அல்ல. அவர்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவேண்டும் என்பதுதான் பிரச்னை. இப்போது கொள்முதல் செய்கின்ற திட்டத்தில் மில்காரர்களும், வியாபாரிகளும் தஞ்சை ஜில்லாவில் 20 சதவிகிதமும், மற்ற ஜில்லாக்களில் 15 சதவிகிதமும் வாங்குவது என்று திட்டமிட்டிருக்கிறார்கள். இதில் பல இடையூறுகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு இந்த நிலைமையில் வேண்டிய அளவு நெல் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். சென்ற ஆண்டு அரசாங்கத்தினுடைய திட்டத்திற்கு பாதி தான் கிடைத்தது. அதே நேரத்தில் மில்காரர்கள் வாங்கி வைத்திருந்ததை அரசாங்கத்திற்குக் கொடுத்தது

போக பாக்கியை அவர்கள், தாங்கள் 17 ரூபாய்க்கு வாங்கியதை 24 ரூபாய் கடைசியில் விற்கிறார்கள். இதைப்பற்றிய புள்ளி விவரம் சர்க்காரிடத்திலே இருக்கிறது. நாங்களும் இதை எடுத்துக்கூறமுடியும். நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, விவசாயிகளிடத்திலிருந்து கொள்முதல் செய்யவேண்டுமென்றால், ஐந்து ஏக்கர் நிலமிருக்கிற விவசாயிகளிடமிருந்து இத்தனை மூட்டை நெல் அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லிவிட்டால், அதை அவர்கள் கொடுத்துவிட தயாராக இருக்கிறார்கள். ஆகவே இத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது, நாங்கள் சொல்கின்ற அடிப்படையில் வேண்டிய அளவு நெல் கிடைக்காது என்றால் ஏன் கிடைக்காது என்கின்ற காரணங்களை தெரிவித்தால் நன்றாக இருக்கும், இதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுக்கும்படி கனம் முதல் அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ஐந்து ஏக்கர் உள்ளவர்கள் இத்தனை பேர்கள் இருக்கிறார்கள், ஆகவே கிடைக்காது, அல்லது 20 சதவிகிதம் என்று நிர்ணயித்தால் தான் சரியான அளவு கிடைக்கும் என்கின்ற புள்ளிவிவரங்களை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கொடுத்தால், அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதற்கு எங்களுடைய யோசனைகளை சொல்லுவதற்கு வசதியாக இருக்கும். அதிகாரிகளின் கணக்குப்படி வேண்டிய அளவுக்கு நாங்கள் சொல்லுகின்ற அடிப்படையில் கிடைக்காது என்று சொல்லுகிறார்கள். அதை நாங்கள் நம்ப முடியவில்லை. ஆகவே அதற்கான புள்ளிவிவரங்களை கொடுக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று விலை குறைவதற்கு லெவி முறை அல்ல காரணம், வேறு பல காரணங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அது உண்மையல்ல. நாங்கள் எங்கள் பாட்டன், பூட்டன் காலத்திலிருந்து விவசாயம் செய்து கொண்டு வருகிறோம். விலை குறைவதற்கு சர்க்காருடைய இந்த கொள்முதல் திட்டம் தான் காரணம் என்பதுதான் எங்கள் எண்ணம். சமீபத்தில் சொல்லப்பட்டது என்னவென்றால், ஜனவரி, பெப்ருவரி, மார்ச் மாதங்களில் விலை குறைவாகத்தான் இருக்கும், அதன் பின்னால் ஏறும் என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல என்பதுதான் என்னுடைய வாதம். உதாரணமாக 1961-62-ல் அறுவடை காலத்தில், கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்து, பின்னால் மார்ச், ஏப்ரல் மாதங்களில் விற்றபோதும், குறைந்த விலையில் தான் விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக கூட்டுறவு சங்கங்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டது என்கின்ற புள்ளிவிவரம் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது. ஆகவே இன்னும் மூன்று மாதங்களில் விலை அதிகமாக வந்துவிடும் என்று சொல்வது எங்களால் நம்ப முடியாமல் இருக்கிறது. இப்போதுள்ள விலை இனிமேல் ஏறும் என்று சொல்வதில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்றால், பூனை தன் குட்டியை கடித்து தூக்குவதற்

23rd January 1964] [திரு. நெ. சா. இராமலிங்கம்]

கும், எலியை தூக்குவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறதோ அதே நிலையில்தான் இதிலும் இருக்கிறது. ஐந்து ஏக்கர்களுக்கு மேல் எத்தனை பேர்களுக்கு இருக்கிறது, மடம், கோவில்கள் இவைகளுக்கு எத்தனை ஏக்கர்கள் இருக்கின்றன, இவற்றிலிருந்து எவ்வளவு நெல் கிடைக்கும் என்று கணக்கிட்டு சொன்னால், சர்க்காருக்கு வேண்டிய அளவுக்கு எப்படி கிடைக்கும் என்பதற்கு எங்களுக்குத் தெரிந்த யோசனையை சொல்ல முடியும். நாங்கள் சொல்வதில் ஏதாவது தகுதியிருக்கிறது என்று கருதினால் ஏற்றுக்கொள்ளுங்கள், இல்லையென்றால் விட்டுவிடுங்கள். ஆகவே நாங்கள் சொல்வது எல்லாம் விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்க வேண்டும் என்பது தான். மூட்டைக்கு 20 ரூபாய்க்குக் குறையாமல் இன்றைக்கு இருக்கும் நிலையில் கொடுக்கப்படுமானால் எந்த விதமான கட்டுப்பாடும் செய்ய ஆட்சேபனை இருக்காது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இந்த மாதிரி விவசாயிகளுக்கு மூட்டைக்கு 20 ரூபாய் கிடைக்கும் வசதி செய்து விட்டு மற்றப்படி எப்படி கண்ட்ரோல் செய்ய வேண்டுமோ செய்து கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். 12–30 p.m.

கூட்டுறவு சங்கங்கள் ஏன் வாங்கக் கூடாது என்ற பிரச்னை வந்தது. கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கத்திலே பணம் கொடுக்கிறார்கள். வாங்குவதற்கு ஆட்சேபணை இல்லை. அந்த மாதிரி வாங்கப்பட்ட நெல்லை எப்படி விற்பது? தீவிர சாகுபடித் திட்டம் அமலில் இருந்தபோது வாங்கி வைத்தோம். அதிலே கூட்டுறவு சங்கங்களுக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் வந்தது. அறுவடை காலத்தில் இருந்ததை விட பிறகு செப்டெம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் விலை குறைந்து விட்டது. அதனால் நஷ்டம் ஏற்பட்டது. அது பற்றி கூட அரசாங்கத்திடம் மனு கொடுத்திருக்கிறோம். அது இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. கூட்டுறவு சங்கம் மட்டும் ஒன்றும் செய்ய முடியாது. மார்க்கெட் நிலவரம் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது இருக்கிற நடைமுறை ஒவ்வாது. விவசாயிகளிடம் வாங்காமல், கோவில் மட நிலங்களில் சாகுபடியாகக் கூடிய நெல்லை வாங்கிக்கொண்டால் கூட அரசாங்கத்திற்கு வேண்டிய அளவு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது, அதையும் பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கக் கூடிய விஷயமாக நான் சில கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதியான கிராமங்கள் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு நல்ல முறையில் விவசாயம் செய்யப்பட்டது. சமீபத்தில் ஏற்பட்ட புயல்,

[திரு. ஆ. கு. சுப்பையா] [23rd January 1964

வெள்ளம் காரணமாக, மகசூல் எதிர்பார்த்த அளவு இல்லாமல் குறைந்து போயிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 30 மூட்டை மதிப்புப் பார்த்ததில் 20 மூட்டை கூட காணுத நிலைமை இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மனதில் கொண்டுதான், விவசாயிகளுக்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்கிறபோது, விவசாயிகள் தங்களுடைய சாகுபடிச் செலவுக்காக வாங்கியுள்ள கடன்களையெல்லாம் ஈடுபடுத்த அரசாங்கம் நல்ல நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்ற இந்த நிலைமையில் கூற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணமாக இந்த சமயத்தில் தான் குத்தகைக்காரர்கள், விவசாயத் தொழிலாளிகள், நடுத்தரமாக இருக்கக் கூடிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் தங்களுடைய நெல்லை விற்பனை செய்து தாங்கள் வாங்கியிருக்கக் கூடிய கடன்களைக் கொடுக்கும் காலம். கடன்களைக் கொடுப்பது மாத்திரம் அல்ல, சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய வரிகளையும் இப்போது தான் கொடுக்க வேண்டும். விலையும் சரியாக இல்லை, கண்டுமுதலும் சரியாக இல்லை, வெள்ளத்திஞல் எல்லாம் நீர்ச்சாவியாகப் போய் விட்டது. வாங்கியிருக்கிற கடன்களையெல்லாம், குறைந்த விலைக்கு நெல்லை விற்று கொடுக்க முடியுமா என்று யோசிக்கவேண்டும்.

அது மாத்திரமல்லாமல் இன்றைய தினம் விவசாயிகள் தங்களுடைய நெல்லை அதிகமான விலைக்கு எங்கு வாங்குகிருர்களோ அங்கு கொண்டு கொடுக்க லாரியில் ஏற்றிக் கொண்டு போனுல் அதைத் தடை செய்து விடுகிருர்கள். உதாரணமாக தஞ்சையிலிருக்கிற ஒரு நிலச்சுவாந்தார் தன்னுடைய நெல்லில் 100 மூட்டைகளை திருச்சியில் ஒருவருக்கு விற்கவேண்டுமென்ருல், அங்கே மூட்டை 20 ரூபாய்க்கு எடுத்துக்கொள்கிருர்களென்ருல், அந்த நெல்லை கொண்டுபோனுல் அதிகாரிகள் தடை செய்து விடுகிருர்கள். அம்மாதிரி கொண்டு போய் எங்கு அதிகமான விலை கிடைக்கிறதோ அங்கு கொண்டு போய்க் கொடுக்க விவசாயிகளுக்கு பரிபூர்ண உரிமை இருக்கவேண்டும். இப்போது அதைத் தடுக்கக் கூடிய முறை ஏற்பட்டிருக்கிறது. நெல்லை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கவேண்டுமென்று சொல்லுவதோடு, எனக்கு முன்னுல் பேசிய கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல, நிரந்தரமாக மூட்டை 20 ரூபாய்க்கு விற்க, விவசாயிகளுக்கு தேவையானபோது திரும்ப வாங்கிக்கொள்ள ஒரு உத்திரவாதத்தை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகிய கீழத் தஞ்சையில் அநேக கிராமங்களில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதமாகிவிட்டதால், அவர்களுக்கெல்லாம் வரி வஜா செய்யவேண்டுமென்று முன்னுல் குறிப்பிட்டோம், அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில்

23rd January 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

ஒன்றும் குறிப்பிடவில்லை. இந்த ஆண்டு அடிஷனல் சர்சார்ஜ் ஜையும் சேர்த்து வசூலிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. உண்மையிலேயே விளையாத துரதிருஷ்ட நிலைமை இருக்கும் போது வரிகளை எப்படி கொடுப்பது? ஆகையால் வரிகளை வஜா செய்தும், அதே போல குத்தகைக்காரர்கள் குத்தகையை அளக்க முடியாமல் இருக்கின்ற காரணத்தினால் தள்ளு படி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அதே போலத் தான் கடனும். விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும் தனி நபர்களிடமிருந்தும் கடன்களை வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கடன்களையெல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கு உத்திரவாதமாக அவர்கள் உற் பத்தி செய்யும்படியான விவசாய பொருள்களுக்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங் கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், ஸார், இதில் உள்ள முக்கியமான பிரச்னை என்ன என்றால், அரசாங்கம் தங்களுக்கு ஸ்டாக் ஏற்படுத்தவேண்டும் என்று கொள் முதல் செய்யவேண்டியிருக்கிறது. ஸ்டாக் ஏற்படுத்தட்டும். இதற் காக ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். என்ன உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்றால் தஞ்சை ஜில்லாவிலே மில் காரர்கள் தாங்கள் வாங்குவதில் 20 சதவிகிதம் அரசாங்கத் திற்குக் கொடுத்துவிடவேண்டும், இதர ஜில்லாக்களில் 15 சத விகிதம் கொடுத்து விடவேண்டும் என்று உத்திரவு போட் டிருக்கிறார்கள். அதற்கு விலையையும் நிர்ணயித்திருக்கிறார்கள். 17½ ரூபாய் 48 படி கொண்ட மூட்டைக்கு என்று போட் டிருக்கிறார்கள். இப்போது இந்த 17½ ரூபாய் சரியா என்று பார்த்தால், இது ரொம்பவும் குறைச்சலான தொகை. ஃபேர் ப்ரைஸ் என்று சொல்ல முடியாது. காண்டீட் ப்ரைஸ் ஏற் படுத்தவேண்டும். இது ரொம்ப குறைச்சல். இந்த விலை கூடாது. இப்போது 21 ரூபாய், 22 ரூபாய்க்கு விற்கிறது. அரசாங்கம் 17½ ரூபாய்க்கு கொடுக்கவேண்டும் என்று சொன்ன வுடனே வியாபாரிகள் எல்லா நெல்லையும் 17½ ரூபாய்க்கே விவசாயிகளிடமிருந்து வாங்குகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன் தான் 22 ரூபாய்க்கு வாங்கினீர்களே இப்போது 17½ ரூபாய்க்கு கேட்கிறீர்களே என்று விவசாயிகள் கேட்டால், அரசாங்கமே உத்திரவு போட்டிருக்கிறது, விலை நிர்ணயம் செய்தாகி விட்டது என்று சொல்லி வாங்குகிறார்கள். லாண்ட் ஸீலிங் வந்த பிறகு 30 ஏக்கருக்கு மேல் யாருக்கும் இல்லை. 20-30 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் வேண்டுமானால் உடனடி யாக விற்க வேண்டிய நிலையில் இருக்க மாட்டார்கள். 4 ஏக்கர் 5 ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள் விற்காமல் முடி யாது. அதை விற்றுத் தான் வரி கொடுக்கவேண்டும். அம் மாதிரி விற்கும்போது அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதி லுள்ள கஷ்டங்களை விளக்கி கனம் அங்கத்தினர்கள் சொல்லி விட்டார்கள். முதல் மந்திரிக்கும் மற்றவர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். என்ன பண்ணுவது நீங்களே சொல் லுங்கள் என்று கேட்கலாம். நான் ஒன்று சொல்லுகிறேன்.

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [23rd January 1964

மில்காரர்களிடமிருந்து 20 சதவிகிதம் 15 சதவிகிதம் வாங்கு வானேன்? அரசாங்கமே கொள்முதல் செய்யவேண்டும். மில் காரர்களிடம் வாங்க வேண்டாம். அங்கங்கே தாலூகா ஆஃபீஸ்கள் இருக்கின்றன. விவசாயிகள் அரசாங்கத்திடம் நேரடியாகக் கொடுக்கலாம் என்று சொல்லலாம். இப்போது இருக்கிற விலை யை பார்த்தால் 21 ரூபாய் இருக்கிறது. குறைந்தபட்சம் 20 ரூபாய் என்று நிர்ணயம் செய்யலாம். அந்த மாதிரி வைத்தால் விவசாயிகள் வியாபாரிகளிடம் போக மாட்டார்கள். டார்கெட் எவ்வளவு என்று வைத்து கொள் முதல் செய்ய லாம். எந்த அளவுக்கு வாங்கவேண்டுமென்று தோன்றுகிறதோ வாங்கி விட்டு நிறுத்திக்கொள்ளலாம். இப்போது 17½ ரூபாய் கொடுக்கிறோம். 20 ரூபாய் கொடுத்தால் 2½ ரூபாய் சப்ஸிடி கொடுத்த மாதிரி இருக்கும். 2½ ரூபாய் விவ சாயிகளுக்குத் தான் போகிறது. சாதாரணமான விவசாயச் செலவைப் பார்த்தால் எவ்வளவு ஆகிறது என்று தெரியும். 20 ரூபாய் என்று நிர்ணயிப்பதில் தவறு இல்லை. அதோடு இந்த வருஷம் எல்லா ஜில்லாக்களிலும்—இங்கே பேசும்போது தஞ்சை ஜில்லா தஞ்சை ஜில்லா என்று சொல்லுகிறார்கள்—தஞ்சை ஜில்லாவில் மட்டும் தான் நெல் விளைகிறது என்பதல்ல. எல்லா ஜில்லாக்களிலும் நெல் விளைகிறது. தாங்கள் நெல்லை விற்றுத்தான் ஆகவேண்டிய நிலை இருக்கிறது. மற்ற ஜில்லாக் களில் பார்த்தால் இன்னும் ரொம்ப மோசமான நிலைமை இருக்கிறது. பாதி கூட விளைச்சல் இல்லை. கொஞ்சமாவது விற்றுத்தான் ஆகவேண்டும். 'மிடில்மென்'-ஐ நாம் 'எலிமினேட்' செய்யவேண்டுமென்று சொல்லுகிறோம். டெமாக்ரடிக் சோஷ லிஸ தத்துவத்தில் இது ஒரு முக்கியமான தத்துவம். மத் தியில் உள்ளவர்களை ஒழிப்பது முக்கியமான தத்துவம். மத்தி யிலே இருப்பவர்கள், மில்காரர்கள், வியாபாரிகள் லாபம் அடைகிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு லாபம் கிடைப்ப தில்லை. கடைசிவரைக்கும் விவசாயிகளிடமிருந்து ரூபாய் 17½-க் குத் தான் வாங்குகிறார்கள். பின்னால் அவர்கள் இதை ரூபாய் 25, 30-க்கு விற்கப்போகிறார்கள். கூடிய சீக்கிரத் தில் இந்த நிலைமையை நாம் பார்க்கப் போகிறோம். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், மில்காரர்கள் கொள்முதல் செய்யாமல், அரசாங்கமே வாங்கவேண்டும். ரூபாய் 20 விலைக்கு தாலுகா ஆபீசில் கொண்டு வந்து போடுங்கள் என்று சொல்லி விடலாம். தாலுகா ஆபீஸ் மூலம் அரசாங்கமே நேரிடையாக விவ சாயிகளிடமிருந்து வாங்கிவிடலாம். அல்லது, லெவி ஸிஸ் டத்தைக் கொண்டு வாருங்கள். 5 ஏகருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் ஒரு ஏகருக்கு இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டால், எல்லோரும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இது ஒரு முக்கியமான பிரச்னை. இது இப்பொழுதே உடனே பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். இப்பொழுதுதான் ஆர்டர் போட்டிருக் கிறார்கள். இதை 'சேஞ்ஜ்' பண்ணுவதானால், உடனே செய்ய வேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகளுக்கு உண்மை யிலேயே நன்மை செய்யலாம். எந்த வரி போட்டாலும் அது

23rd January 1964] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

விவசாயிகள் தலையில் போய் தான் விழுகிறது. விவசாயிகள் கஷ்டமான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் நாட்டுக்கு நன்மை செய்கிறார்கள், உற்பத்தியைப் பெருக்கி நகரத்தில் வாழ்கிற மக்களுக்கு, அவர்கள் சாப்பாட்டிற்காக, கஷ்டப்படுகிறார்கள். நகரத்தில் வாழும் மக்களின் கஷ்டத்தைப் போக்குவதற்காக, பொது மக்களின் சௌகரியத்திற்காக, விலை கண்டிரோல், கொள்முதல் ஆகியவைகளைக் கொண்டுவந்திருக்கிறோம். 100-க்கு 80 பேர்களாக இருக்கக்கூடிய விவசாயிகளின் கஷ்டத்தைக் கவனிக்கவேண்டும். 20 சதவிகிதம் உள்ளவர்களின் கஷ்டத்தை மட்டும் கவனித்தால் போதாது. 20 சதவிகிதம் உள்ளவர்களுக்கு நன்மை செய்வதற்காக, 80 சதவிகிதம் உள்ள விவசாயிகளுக்கு கஷ்டம் கொடுக்கக்கூடாது. விவசாயிகளின் கஷ்டத்தை புறக்கணிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன்:** நெல் கொள்முதல், நெல் விலை என்ற திட்டத்தைப்பற்றி அரசாங்கம் வெளியிட்டிருக்கிற அறிக்கை மிக குழப்பமான நிலையில் இருக்கிறது. அதை ஒட்டி, முதல் அமைச்சர் அவர்கள் தஞ்சைக்குச் சென்ற பொழுது அங்கே நெல் ஆலை முதலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் அளித்த பதில் மேலும் குழப்பமாக இருக்கிறது. அதற்குப் பிறகு இந்தச் சட்ட மன்றத்தில் நேற்று கவர்னர் அவர்களுடைய உரையின் மீது நடந்த விவாதத்திற்கு அவர்கள் விடை அளித்தபொழுது, நான் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் தந்த விளக்கம் தெளிவானதாக இல்லை. அதை ஒட்டி அவர்களை நிருபர்கள் அணுகியபொழுது, அவர்கள் அளித்த விடை மேலும் குழப்பமாக இருக்கிறது. ஆகவே, இந்த குழப்பமான நிலைமையை அமைச்சர் அவர்கள் போக்கவேண்டுமென்று நான் மிக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அறிக்கை இப்பொழுது சர்க்காருக்கு இத்தனை பெர்சண்டு இன்ன விலைக்கு விற்கவேண்டும் என்ற அளவோடு நிற்கிறது. அந்த பெர்சண்டு கொடுத்து விட்டு, மீதியை எந்த அளவுக்கு விற்பது என்பதைப்பற்றி அந்த அறிக்கையிலே திட்டவட்டமாக சொல்லப்படவில்லை. அரிசி சர்க்காருக்குக் கொடுக்கிற நேரத்தில் இன்ன விலைக்குக் கொடுக்கவேண்டுமென்று தான் இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறதே ஒழிய, விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் வாங்குகிற நேரத்தில் என்ன விலைக்கு வாங்கவேண்டும் என்ற நிலை அங்கே இல்லை. அதனால் எத்தகைய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை இதற்கு முன்பு பேசிய நண்பர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். வியாபாரிகள் சர்க்காருக்கு இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று சர்க்கார் கூறுகிற காரணத்தினால், அவர்கள் விவசாயிகளிடமிருந்து வாங்குகிற நேரத்தில் அந்த விலையை கணக்கில் வைத்துக்கொண்டு. அவர்களிடம் விலையைக் குறைத்து வாங்குகிறார்கள். அப்படி வாங்குகிறபொழுது விவசாயிகளுக்கு விலை மிகக் குறைந்து போய்விடுகிறது. இதைத் தெளிவாக்க

வேண்டும். அமைச்சர் அவர்கள் தஞ்சையில் சொல்லுகிறபொழுது 'நீங்கள் எங்களுக்கு விற்பதற்கு மட்டும்தான் இந்த விலையே ஒழிய மற்றபடி வரையறை இல்லை' என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி என்று சொன்னால், வியாபாரிகள் சர்க்காருக்குக் கொடுக்கிற 15 சதவிகிதம், 20 சதவிகிதம் போக மீதியை அவர்கள் தங்கள் இஷ்டம் போல் விற்கலாமா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாக்கவேண்டும். நேற்று தந்த பதில் தெளிவாக இல்லை.

அடுத்து, இவர்கள் இந்த விலைக்கு விற்கவேண்டுமென்று, விற்கின்ற விலையை நிர்ணயித்துவிட்டு, வாங்கவேண்டிய விலையை நிர்ணயிக்காததினாலே, விவசாயிகளிடத்திலே எந்த விலைக்கும் வாங்கலாம் என்ற ஒரு நிலை உருவாகியிருக்கிறது. வியாபாரிகள் விவசாயிகளிடத்தில் சென்று, உங்களுடைய பொருள்களுக்கு என்ன விலை என்று கேட்டு வாங்குகின்ற நிலையில் இல்லை. விவசாயிகள் வியாபாரிகளிடம் பொருள்களை கொண்டுவந்து போட்டு, வியாபாரிகள் உங்களுடைய நெல்லை இன்ன விலைக்குத்தான் ஏற்றுக்கொள்ளுவோம் என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறது வியாபாரம். ஆகவே, வியாபாரிகள் சொல்லுகின்ற விலைக்கு விவசாயிகள் விற்கவேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் என்ன விலைக்கு வாங்கவேண்டும், விற்கவேண்டும் என்ற வரையறையை சர்க்கார் செய்யப்போவதாக இப்பொழுது சொல்லப்படுகிறது. சர்க்கார் இம்மாதிரி செய்யும் நேரத்தில், சர்க்காருக்குக் கொடுக்கிற 20 சதவிகிதம், 15 சதவிகிதம் அளவுக்கு மட்டிலும் நீங்கள் விவசாயிகளிடம் இன்ன விலைக்கு வாங்கவேண்டும், சர்க்காருக்குக் கொடுத்தது போக மற்ற பகுதியை இன்ன விலைக்கு வாங்கவேண்டும் என்று சர்க்கார் வரையறை செய்யப்போகிறதா? அல்லது எல்லா நெல்லையுமே இன்ன விலைக்கு வாங்கி இன்ன விலைக்கு விற்க வேண்டும் என்று வரையறை செய்யப் போகிறதா? அப்படி வரையறை செய்கிற பொழுது சர்க்கார் கொடுத்திருக்கிற விலைக்குத்தான் வியாபாரிகள் அரிசியை விற்கின்றார்களா என்பதைப் பார்ப்பதற்கு என்ன அமைப்பை அரசாங்கம் ஏற்படுத்தப்போகிறது? அதே முறையில் இவ்வளவு பகுதிதான் இன்ன விலைக்கு விவசாயிகளிடத்தில் வாங்க வேண்டும். இவ்வளவு பகுதிக்கு இவ்வளவு விலை கூட கொடுத்து வாங்கவேண்டும் என்ற வரையறை வகுத்து விட்டால் அந்த வரையறையின்படி வியாபாரிகள் வாங்குகிறார்களா என்று கண்காணிக்க அரசாங்கம் என்ன செய்யப்போகிறது? அது தெளிவாக்கப்படவேண்டும்.

இன்னொன்றும் கூற விரும்புகிறேன். அரசாங்கம் அரிசிக் கொள் முதலை இந்த நேரம் பார்த்தே கொண்டுவருகிறது. அறுவடையாகும் நேரத்தில் தான் கொண்டுவருகிறது. அறுவடையான நெல்லை விவசாயி வீட்டிலேயே வைத்துக்கொண்டு இருக்க முடியாது. அறுவடை காலத்தில் தான் திருவிழா, திருமணம், ஆகியவைகள் நடக்கின்றன. அந்த நேரத்தில் தான் விவசாயி சர்க்காருக்கு வரி கட்டவேண்டியிருக்கிறது.

23rd January 1964 *[புலவர் கா. கோவிந்தன்]*

சர்க்காரிடமிருந்து வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நெல்லை அறுவடையான உடனே விற்றாக வேண்டும். கூட்டுறவு சங்கங்களில் வைத்துக்கொள்ளலாம் என்றால், அறுவடை ஆன அன்றே மூட்டைகளை வைத்துவிட்டு உடனே பணத்தை வாங்கிக் கொண்டு போகக்கூடிய நிலையில் கூட்டுறவு இயக்கம் இல்லை, விவசாயிகள் எப்படியும் நெல்லை விற்றாக வேண்டும் என்ற நெருக்கடியை உண்டாக்கியிருப்பதால், வியாபாரிகள் அந்த நேரத்தை பயன்படுத்திக்கொண்டு, விவசாயிகள் தலையில் கையை வைத்து, தங்கள் இஷ்டப்படி குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள். இந்த நிலைமையை சிந்தித்துப் பார்த்துத் திட்டம் செய்ய வேண்டும்.

இப்பொழுது மார்கெட் நிலவரப்படி கிச்சிலிச் சம்பா அரிசி ரூபாய் 0-14-0, 0-15-0 விலைக்கு விவசாயி விற்கவேண்டிய நிலைமையில் கட்டுபிடியாகிறது. ஆனால், அதே அரிசி சென்னை நகரத்தில் ரூபாய் 1—8—0 விற்கிறது. இடையிலே படி ஒன்றுக்கு 9 அணா வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தை விவசாயியும் அனுபவிக்கவில்லை, உண்ணுகின்ற நகர மக்களும் அனுபவிக்கவில்லை. இடையிலே இருப்பவர்கள் அனுபவிக்கிறார்கள். இதை எப்படி தடுப்பது என்பதற்கு சர்க்கார் செயல் முறைகளை வகுக்கவேண்டும். விவசாயிகள் தலையில் கையை வைக்கின்ற திட்டத்தை உருவாக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சர்க்கார் நெல் கொள்முதல் செய்ய வேண்டிய நிலைமை இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு சங்கங்கள் பல லட்சக்கணக்கான மூட்டைகளை வாங்குகின்றன. அந்த சங்கங்கள் சாதாரணமாக வியாபாரிகள் வியாபார நோக்கம் கொண்டு நெல்லை எப்படி வாங்கி, விற்கிறார்களோ; அப்படித் தான் வாங்கி விற்கின்றன. சர்க்கார் பண உதவி செய்யும் கூட்டுறவு இயக்கம், வியாபாரிகள் வாங்குவதைவிட ரூபாய் 2 அதிகமாக விலை கொடுத்து வாங்குவதில்லை. விற்கின்ற நேரத்திலும், வியாபாரி ரூபாய் 1½-க்கு விற்றால், ரூபாய் 1—6—0, 1—4—0 என்று சொல்லி குறைத்து விற்பதில்லை. வியாபாரி என்ன விலைக்கு வாங்குகிறானோ அதே விலைக்குத்தான் அந்த சங்கங்கள் விவசாயிகளிடத்தில் வாங்குகின்றன. வியாபாரி என்ன விலைக்கு விற்கிறானோ, அதே விலைக்குத் தான் விற்கின்றன. அப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கம் சர்க்கார் பணம் கொண்டு பெரும் அளவில் நெல் கொள்முதல் செய்து வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அங்கே பெரிய ஊழல்கள் நடக்கின்றன. வாங்குகின்ற இடத்திலே, மார்க்கெட்டில் ரூபாய் 24-க்கு மூட்டை போகிறது என்று சொன்னால், அங்கே மண்டி ஏஜெண்டிடம் ரூபாய் 24½-க்கு பில் போடும்படி அந்த மானேஜர்கள் கேட்கிறார்கள். மண்டிக்காரர்கள் மூலம் தான் மூட்டைகளை வாங்குகிற காரணத்திலே, தங்களுக்கும் ஒரு கமிஷன் வருகிறது என்ற காரணத்தினாலும் கூட்டுறவு இயக்கத்தில் நாள் ஒன்றுக்கு 100, 200 மூட்டைகள் விற்கின்ற காரணத்தினாலும்

மண்டிக்காரர்களும் அம்மாதிரி விலை கூட்டி, பில் போட்டுக் கொடுக்கிறார்கள். அப்படி வாங்குகின்ற நேரத்திலே, இடையிலே இருப்பவர்களுக்கு பணம் போகிறது. ஒரு மூட்டைக்கு 4 அணா, 8 அணா மானேஜர் கைக்கு போய்ச் சேருகிறது. மேலும், சாதாரணமாக வாங்குகின்ற பச்சை நெல்லை 3 காய்ச்சல் போடவேண்டும். அப்படிப் போடாமல் ஒரு காய்ச்சலோடு நிறுத்திவிடுகிறார்கள். அப்படிச் செய்தால் அரிசி நிச்சயம் மக்கிப் போகும். இப்படிப்பட்ட ஊழல்கள் அங்கே நடக்கின்றன. சர்க்கார் பெரிய முதலீடு கொடுத்து, கூட்டுறவு இயக்கத்தில் வாங்கிவைத்திருக்கிற அந்த மூட்டைகளை சர்க்கார் தங்களுடைய ஸ்டாக் ஆக்கிக்கொண்டு விட்டால், நேரிடைக் கொள்முதல் வேண்டியதில்லை எனக் கூறுகிறேன்.

இன்னொரு நிலை என்ன வென்றால், சர்க்கார் தனக்குக் கொடுப்பதற்கு இவ்வளவு விலை, மற்றபடி பொதுத் துறையிலே விற்பதற்கு இன்ன விலை என இருவிதமாகச் சொல்லுவது பொருத்தமா? ஒரே நேரத்தில் இரண்டு விலையைச் செயல்படுத்துவது நியாயமா? அந்த முறையை நல்ல முறையில் அமுலாக்க முடியுமா என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும், அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டும். குழப்ப நிலையை தெளிவு படுத்தவேண்டும். சர்க்கார் தங்களுக்குள்ளேயே தெளிவாக்கிக் கொள்ளாத ஒரு திட்டத்தை வெளியிடுவது, அதுவும் உணவுத் துறையிலே வெளியிடுவது நெருப்போடு விளையாடுவது போல் ஆகும் என்பதை அரசு உணர்ந்து, இதற்கு உடனே பரிகாரம் தேடிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. நா. மகாலிங்கம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நமது அரசாங்கம் நமது மாகாணத்தில் ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக வியாபாரிகள், விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல்லை வாங்குகிறார்கள் என்று இந்த சட்ட சபையிலே சொல்லப்பட்டது. இதற்கு பதிலாக வேறொரு வகையிலே இதே அளவு உணவு தான்யத்தை சர்க்கார் பெற முடியுமா என்று சிந்தித்துப் பார்ப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். நம்முடைய மாகாணத்தில் சுமார் 35 லட்சம் எக்கர் நஞ்சை பூமி இருக்கிறது. ஒவ்வொரு நஞ்சை பூமிக்கும் ரூபாய் 17½ முதல் 25 வரை வருஷக் கந்தாயம் இருக்கிறது. இந்த கந்தாயத்திற்கு பதிலாக விவசாயிகள் எக்கருக்கு ஒரு மூட்டை நெல் சர்க்கார் நிர்ணயிக்கிற விலைக்கு கொடுத்துவிடவேண்டும் என்று சொன்னால் ஒரு லட்சம் டன் அல்லது அதற்கு மேலாக 1½ லட்சம் டன் கூட இந்த முப்பத்தைந்து லட்சம் எக்கரிலிருந்து பெற முடியும். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு சர்க்கார் ஒரு விலையை நிர்ணயம் செய்கிறது. ஆகவே, கந்தாயத்திற்குப் பதிலாக கூட்டுறவு சொசைட்டிகளிலோ, அல்லது சர்க்கார் கிடங்குகளிலோ, நெல்லை கொடுத்துவிட்டால் போதும்,

23rd January 1964] [திரு. நா. மகாலிங்கம்]

அதன் மூலமாக கந்தாயம் செலுத்தப்படுவதாக இருக்கும் என்று ஒரு உத்தரவை அரசாங்கம் பிறப்பித்தால், வருஷத்திற்கு 1½ லட்சம் டன் சுலபமாக வந்துவிடும். இன்னும் அதிக அரிசி தேவை என்றால் ஒரு மூட்டை என்று இருப்பதை 1½ மூட்டையாக உயர்த்தினால் மேற்கொண்டு 50 சதம் அதிகமாக கிடைக்கும். இப்பொழுது வியாபாரிகளிடமிருந்து வாங்குவது என்று சொன்னால் அவர்கள் அதிக விலைக்கு வாங்கியிருந்தால் சர்க்காருக்கு 20 சத விகிதம் குறைந்த விலையில் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, மேற்கொண்டு வியாபாரிகள் வாங்கக்கூடிய நெல்லை குறைந்த விலைக்கு வாங்கினால்தான் அவர்களுக்கு கட்டுப்படியாகும். இந்த மாதிரி நிலையிலே மார்க்கெட்டிலே விலை குறைவதற்குக் காரணம் இருக்கிறது. இது பற்றி சிந்தித்து விவசாயிகளிடமிருந்து கந்தாயம் வாங்குவதற்கு பதிலாக தானிய ரூபமாக சர்க்கார் அவர்களுக்கு வேண்டிய நெல்லையும் அரிசியையும் வாங்கிக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதிக்கப்பட்ட பிரச்னையானது அரசாங்கம் ஓரளவு உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதைப்பற்றியது. சென்ற ஆண்டிலே, கட்டாயம் இல்லாமல் மில்காரர்களிடமிருந்து 50,000 டன் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டிலே, கட்டாயமாக மில்காரரிடமும், வியாபாரிகளிடமும் கொள்முதல் செய்வதைப்பற்றித்தான் பிரச்னை. இதற்கு முன்பு இரண்டு மூன்று ஆண்டுகளிலே இந்த அரசாங்கம் கொள்முதல் செய்யவில்லை. இப்படி கொள்முதல் செய்வது எதற்காக என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். விலை ஏறாமல் இருந்தால் நியாய விலைக்கடைகளுக்கு அவசியம் இருக்காது. நெல்லை வாங்கி சாப்பிடுகிறவர்களுடைய சக்திக்கு மேல் விலை ஏறுவதால்தான் நியாய விலைக் கடைகளை திறக்கவேண்டியிருக்கிறது. விலை எவ்வளவு ஏறினாலும் விவசாயிகளுக்கு நல்லதுதான். ஆனால், விவசாயிகளுக்குக் கட்டுபடி ஆகவேண்டும் என்றாலும், பொதுவாக இந்த விலை ஏற்றம் கவலை அளிக்கிறது. இதைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் அளிக்கக்கூடிய வகையிலே விலை ஏறினால் அந்த அளவுக்கு வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு விலை உயருகிறது. உணவு தானிய விலையைப் பொறுத்துத்தான் மற்ற பண்டங்களின் விலை ஏறுகிறது. இதனால் ஒரு சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே, இதை எவ்வாறு தவிர்க்க வேண்டும் என்பதிலே நாம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, உற்பத்தி செய்கிறவர்களைப் பொறுத்தவரையில் விலை ஒன்றாக இருக்கிறது, அதை வாங்கி கொள்முதல் செய்து வியாபாரம் செய்யும்பொழுது, அதற்கும் இதற்கும் விலை சம்பந்தமில்லாமல் இருக்கிறது. ஆகவே, அதிக லாபத்தை நடுவிலே இருக்கிறவர்கள் பெறுகிறார்கள். விவசாயிகளுக்கு நல்ல விலையை அளிக்காமல் நடுவிலே இருக்கிறவர்கள் அதிக லாபம் பெறுவதை எவ்வாறு தடுக்க வேண்டும் என்பதிலே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நேற்று குறிப்பிட்டேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [23rd January 1964

, மேலும், நியாய விலைக்கடைகள் இருக்கவேண்டிய அவசியம் இருந்தாலும், அவைகளுக்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து தான்யத்தை பெற்றுக் கொண்டிருந்தோம். ஆகவேதான் நாம் கொள்முதல் செய்யவில்லை. ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் தலையிட்டு கொள்முதல் செய்யாத காலத்திலும், விலை ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இதே தஞ்சை ஜில்லாவில் சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது. அப்பொழுது கொள்முதல் ஒன்றும் இல்லை. விலை திடீரென்று ரொம்பவும் இறங்கியது. அப்பொழுது ஓரளவு நெல்லை ஏற்றுமதி செய்யவேண்டும், வெளி நாட்டுக்குக்கூட ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற உற்பத்திகூட அப்பொழுது இல்லை. இருந்தாலும் கொள்முதல் ரொம்பக் குறைந்தது. அப்படிக் குறைந்தபொழுது ஏற்றுமதி கூட ஓரளவு செய்தோம். அப்பொழுது நான் ஆராய்ந்து பார்த்ததிலே அறுவடைக்காலம், கல்யாணக் காலம், கிஸ்து கட்டவேண்டிய காலம் இவைகளில் வியாபாரிகள் கட்டுப்பாடாக இருந்து குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து வாங்குகிறார்கள் என்று எனக்குப் புலப்பட்டது. வியாபாரிகள் தங்களுடைய லாபத்தையே பெரிதாகக் கருதி கட்டுப்பாடாக இருந்து விலையை குறைக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது என்பதை விவசாயிகள் உணராமல் இருக்க முடியாது. அவர்களுடைய பிரதிநிதிகளும் உணராமல் இருக்க முடியாது. கொள்முதல் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பே விலை குறைந்தது. அதற்கும் முன்பு சற்று அதிகமாயிருந்தது. அதுவும் கவலையைக் கொடுத்தது. விலையேற்றம் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்றாலும், இவ்வளவு அதிகமாயிருக்கிறதே என்று தோன்றியது. அப்பொழுது அதிக மழை பெய்து கொண்டிருந்தது. அந்த அளவுக்கு அதிகமாயிருந்த விலை பின்னர் அறுவடை ஆனதும் ஓரளவு குறைந்தது. அப்படி ஓரளவு குறைந்தபோது கொள்முதல் உத்தரவு போடவில்லை. கொள்முதல் செய்வதிலே, இப்பொழுது இருக்கிற நிலையிலே மத்திய அரசாங்கத்தை நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே நாம் ஓரளவு ஸ்டாக் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே சென்ற ஆண்டிலும் கொள்முதல் செய்தோம். இந்த ஆண்டு ஒரு லட்சம் டன்னுக்குக் குறையாமல் செய்யவேண்டும் என்று ஏற்பாடு இருக்கிறது. கனம் அங்கத்தினர் தியாகராசப் பிள்ளை அவர்கள், அப்படிக் கொள்முதல் செய்து வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறோம் என்று சொன்னார். அப்படி ஒன்றும் இல்லை. நாம் கொள்முதல் செய்வதை மத்திய அரசாங்கத்தின் ஸ்டாக்குக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பர்த்தியாக அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்கிறோம். நமக்கு ஒரு லட்சம் டன்னுக்குக் குறையாமல் இருந்தால் போதும். அதை அப்படியே நாம் வினியோகம் செய்வதில்லை. (திரு. மீ. கலியாணசுந்தரம்: குறுக்கீடு.) இந்த ஆண்டு ஒரு லட்சம் டன் போதும் என்று நினைக்கிறேன். சென்ற ஆண்டு 50,000 டன் கொள்முதல் செய்தோம். அப்படிக் கொள்முதல் செய்வதை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டு அதைவிட நல்ல அரிசியை வாங்கி நியாய விலைக் கடைகளுக்குக்

23rd January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

கொடுத்து வருகிறோம். நியாயமான விலைக்குத்தான் கொடுக்கிறோம். என்ன விலைக்கு வாங்குகிறோமோ அந்த விலைக்கு அதிகமாகப் போவதில்லை. ஆகவே, நாம் இங்கே கொள்முதல் செய்வது வேறொரு மாநிலத்திற்காக என்று யாரும் நினைக்கவேண்டியதில்லை.

அடுத்தபடியாக, மொத்தத்திலே விளைச்சல் குறைந்திருக்கிறது என்று தஞ்சை ஜில்லாவிலே சொன்னார்கள். மழை அதிகமாகப் பெய்த காரணத்தினாலோ அல்லது பூச்சித் தொல்லையினாலோ விளைச்சல் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்று கேள்விப் பட்டேன். அப்படி விளைச்சல் குறைந்திருக்கும்பொழுது 20 சதவிகிதம் கொள்முதல் செய்யலாமா என்று கேட்டார்கள். கொள் முதல் என்றால் அது தமிழ்நாட்டிலே புழங்குவதற்காகத்தான். தஞ்சை ஜில்லாவிலேகூட நியாய விலைக் கடைகள் வைக்கவேண்டியிருக்கிறது. இங்கே நாம் சாப்பிடுகிற அரிசியை குறைத்துக் கொண்டு எங்கேயோ எடுத்துக்கொண்டு போகிறோம் என்பதல்ல. வியாபாரிகள் கோயம்புத்தூருக்கு, சேலத்திற்கு நெல் அனுப்புகிறார்கள். கேரளா நாட்டிற்கும் அனுப்புகிறார்கள். அப்படி விற்கப்படுகிற தானியத்தில் 20 சதவிகிதம் நாம் கொள்முதல் செய்கிறோம். தஞ்சை ஜில்லாவிலே விளைச்சல் குறைந்திருக்கிறது. ஆகையினால் ஏன் 20 சதவிகிதம் செய்யவேண்டும் என்று கேட்டார்கள். அரிசியை மட்டும் கொள்முதல் செய்வதைவிட நெல்லாக கொள்முதல் செய்யலாம் என்று தெரிவித்தார்கள். நெல்லையும் சேர்த்து கொள்முதல் செய்யவேண்டும் என்பதுதான் இப் பொழுது போடப்பட்டிருக்கும் உத்தரவு. இப்பொழுது நெல் வைத்திருக்கிறவர்களிடமும், அரிசி வியாபாரிகளிடமும், நெல், அரிசி இரண்டிலும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதிலே கனம் அங்கத்தினர் தண்டாயுதபாணி பிள்ளை ஒன்று சொன்னார்கள். முன்பு எல்லாம் விவசாயிகள் தானியங்களை கூட்டுறவு சங் கங்களிலே வைத்து, உடனடியாக குறைந்த விலைக்கு விற்க வேண்டிய அவசியம் இல்லாமல், கடன் வாங்கி வந்தார்கள்; இப்பொழுது அப்படிச் செய்ய முடியவில்லை. அப்பொழுது உடனடியாக விற்று விடாமல் அவசியத்திற்குக் கடன் வாங்கிக் கொண்டு பின்னால் நல்ல விலை ஏறும்போது விற்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. இப்பொழுது அப்படி இல்லை என்று சொன்னார்கள். உண்மையான நிலைமையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். அந்த மாதிரி கடன் வாங்க வாய்ப்பு இப்பொழுதும் இருக்கிறது. கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கி வைத்துக் கொண்டு அவசரம் அவசரமாக குறைந்த விலைக்கு விற்காமல் இருக்கலாம். இப் பொழுதும் தானியத்தை ஈடாக வைத்து கடனைப் பெற்றுக் கொள் ளலாம். அப்படி கூட்டுறவு சங்கங்கள் கொடுக்க வேண்டும் என்று தான் நான் விரும்புகிறேன். அதற்காக வேண்டிய உதவிகளையும் சர்க்கார் அளிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1-00 p.m.

கனம் அங்கத்தினர் ராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள், கூட்டுறவு சங்கத்தை நடத்துகிறவர்கள், கூட்டுறவு சங்கத்திலே நஷ்டம்தான் வருகிறது என்று. ஏன் நஷ்டம் வர வேண்டும்?

கூட்டுறவு சங்கத்திலே நஷ்டம் வருகிறது என்றால் அது சரியாக நடைபெறவில்லை என்றுதான் நினைக்க வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகள் லாபத்திலே குறியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக லாபத்தில்தான் அக்கரை இருக்கிறது. ஆனால் கூட்டுறவு சங்கங்களுக்கு அப்படி அல்ல. அதனால்தான் கூட்டுறவு சங்கங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும், ஊக்கம் அளிக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். கூட்டுறவு சங்கங்களே தானியங்களை வாங்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இப்பொழுதுகூட கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளை பாதிக்கும் நோக்கத்தோடு தானியங்களை வாங்கி வைத்துக்கொண்டு இருக்கக்கூடாது. ஆனால் விவசாயிகளுக்கு உதவியாக தானியங்களை வாங்கி நியாய விலைக்கு விற்க வேண்டும். லாபத்தில் அக்கரை இல்லாமல், விவசாயிகளை பாதிக்காத வகையில் தானியங்களை வாங்க வேண்டும். அப்படி கூட்டுறவு சங்கங்கள் அரசாங்கத்தின் அனுமதியின்பேரில்—அரசாங்கம் அனுமதிக்கிறது, மேலும் அனுமதிக்கும்—தானியத்தை வாங்கி வைத்துக் கொண்டு நியாயமான விலைக்கு விற்பதனால் புரொக்யூர்மெண்டு இல்லை என்று சொல்லியிருக்கிறோம். அந்த மாதிரி கூட்டுறவு சங்கங்கள் விஷயத்தில் ஒரு உத்தரவு போட்டிருக்கிறோம். அப்படி கூட்டுறவு சங்கங்கள் கொள் முதல் செய்யலாம். இப்பொழுது மில்காரர்கள் 20 சதவிகிதம் கொள் முதல் என்பதால் குறைந்த விலைக்கு வாங்கப் போகிறோம் என்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் எதிர்பார்ப்பது என்னவென்றால் அவர்கள் விவசாயிகளுக்கு சாதகமாக நடந்துகொண்டு நியாயமான விலைக்கு விற்பதானால் புரொக்யூர்மெண்ட் இல்லை என்பதோடு அவர்களுக்கு வேண்டிய நிதி உதவியும் அளிக்க தயாராக இருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் அரசாங்கத்தின் அனுமதியின்பேரில் தானியங்களை வாங்கி விற்றால் அதற்கு புரொக்யூர்மெண்ட் பண்ணப்போவது இல்லை. மற்ற வியாபாரிகளிடம் புரொக்யூர்மெண்ட் பண்ணுகிறோம். இதைச் சாக்காக வைத்துக் கொண்டு மில்காரர்கள் விலையைக் குறைக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர் அவர்கள் கூறுவதில் ஒரு விஷயம் தெரியவேண்டும். இப்பொழுது விலைவாசிகளை கட்டுப்படுத்த மத்திய சர்க்காரின் திட்டத்தின்கீழ் மொத்தமாக கொள்முதல் செய்ய அரசாங்கம் பண உதவி கொடுத்தும் கூட்டுறவு சங்கங்களை டீலர் என்று கருதி 15 சதவிகிதம் புரொக்யூர்மெண்ட் இருக்கிறதாக ஒரு சொசைட்டியிலிருந்து எனக்கு கடிதம் வந்திருக்கிறது. அவர்களுக்கு "உங்களுக்கு புரொக்யூர்மெண்ட் கிடையாது" என்று தெரிவிக்கலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கத்தின் அனுமதியின் பேரில்—அனுமதி என்றுகூட சொல்லவில்லை--கோரிக்கையின் பேரில் கூட்டுறவு சங்கங்களின் தானியங்களை வாங்கும்பொழுது புரொக்யூர்மெண்ட் கிடையாது.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கம் வியாபாரிகளைப்போல லாப நோக்கம் இல்லாமல் இயங்குவதால் அவர்களிடம் அரசாங்கம் புரொக்யூர்மெண்ட் பண்ணுவ

என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் கூட்டுறவு இயக்கம் லாப நோக்கம் இல்லாமல் வாங்குகிறதா இல்லையா என்று எப்படி நிர்ணயிப்பது? வியாபாரிகளின் விலையைவிட எவ்வளவு குறைவாக கூட்டுறவு இயக்கம் வாங்க வேண்டும் என்று நிர்ணயிப்பது அறிவிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது வேறு விஷயம். பொதுவாக கூட்டுறவு சங்கங்களைப் பற்றி பல கருத்துக்கள் இருக்கின்றன. இப்பொழுது நம் முன் இருக்கும் பிரச்னை தானியங்கள் எப்படி விற்கப்படுகிறது, நியாய விலைக்கு விற்கப்பட வேண்டும், என்பதுதான். லாபத்தை எதிர்பார்த்து விற்பனை நடந்தால் அப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தானியங்களை வாங்குவதுபற்றி, கொள்முதல்பற்றி சொல்லுகிறேன். கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் எப்படி நடந்தால் ப்ரொக்யூர்மெண்ட் இல்லை என்று சொன்னேன். மில்காரர்கள் இதைச் சாக்காக சொல்லி குறைந்த விலைக்கு கேட்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் செய்ய முன் வரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். கூட்டுறவு சங்கங்கள் முன் வந்து நியாயவிலைக்கு வாங்கினால் ப்ரொக்யூர்மெண்ட் கிடையாது என்கிறோம். அவர்கள் மார்க்கெட் பிரைஸ்படி வாங்கலாம். ஆகையால்தான் ப்ரொக்யூர்மெண்ட் பண்ணுவது இல்லை என்று சொல்லுகிறோம். இப்படியெல்லாம் பல வசதிகளை அளித்தும் கூட்டுறவு சங்கங்கள் நடத்துவதில் லாபம் இல்லை, நஷ்டம்தான் வந்துவிட்டது என்று சொல்வதானால் கூட்டுறவு சங்கங்களை சரியாக நடத்தவில்லை என்றுதான் அர்த்தம்........

MR. DEPUTY SPEAKER: The period of one hour is coming to a close.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கு என்ன செய்ய முடியும். கூட்டுறவு சங்கங்கள் நடத்துவதில் நஷ்டம் வந்தது என்றால், நஷ்டம் வராமல் நடத்த வேண்டும். தவறாக உள்ள நிலைமையை விளக்கினால் அதில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

இந்த சந்தர்ப்பத்திலே கனம் அங்கத்தினர் தண்டாயுதபாணி பிள்ளை சொன்ன யோசனை சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன் இப்பொழுது மில்காரர்கள் விலையைக் குறைத்துக் கேட்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். அதற்காக விவசாயிகள் இடத்திலேயே தானியங்களை வாங்கலாம் என்றால் அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. கனம் அங்கத்தினர் திரு. ராமலிங்கம் சொன்னார்கள். ஐந்து ஏக்கருக்கு மேல் இருக்கும் விவசாயிகளிடத்தில் வாங்குங்கள் என்று. சாதாரணமாக ஐந்து ஏக்கர் வைத்திருப்பவர்கள் குத்தகைக்கு வைத்துக் கொண்டிருந்தால் குத்தகைதாரர்களிடம் வாங்குவது சரியாகாது. அப்படி வாங்குவதானால் அவர்களுடைய 40 சதவிகிதத்தில்தான் வாங்க வேண்டும். ஆகவே ஐந்து ஏக்கர் காரரிடம் வாங்குவது கஷ்டமானது, தொல்லை கொடுக்கக்கூடியது. அப்படி வாங்குவதானால் எல்லாரிடமும் வாங்க வேண்டும். தாரதம்யம் காட்ட முடியாது. சரி, ஐந்து ஏக்கர் ரொம்பக் குறைவு, பத்து ஏக்கரா வைத்துக் கொண்

டால்கூட தானியங்கள் வரவே வராது. அவர்களுடைய 40 சத விகிதத்தில்தான் வாங்க வேண்டும். அதுவும் போதாது. அப்பொழுதுகூட விவசாயிகளின் விலை ரொம்பக் குறையும். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கடமை.

கனம் அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் நியாயவிலை கொடுத்து விடுங்கள் என்றும், நியாய விலை கடைக்கு சப்ஸிடி வேண்டும் என்றும் சொன்னார்கள். சப்ஸிடி என்றால் மறுபடியும் விவசாயியின் பணத்தில் இருந்துதான் கொடுக்க வேண்டும். இப்படி எல்லாவற்றுக்கும் சப்ஸிடி என்றால் அது சாத்தியமானது அல்ல. கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் இப்பொழுதுதான் வாங்கவேண்டுமா என்று கேட்டார்கள். விலை குறைவாக இருக்கும்போது வாங்குவதுதான் நலம். அவசியமான அளவுக்கு விவசாயிகளுக்கு கஷ்டம் கொடுக்காத முறையில் அவர்களுக்கு கட்டுப்படியாகும் விலையில் வாங்கப்படுகிறது. பிரைஸ் ஸபோர்ட்கூட கொடுக்கிறோம், அப்படி கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். ஆகவே ஏதோ மில்காரர்கள் குறைத்துக் கொடுக்கிறார்கள், மில்காரர்களிடம் போகாதீர்கள், விவசாயிகளிடம் வாங்குங்கள் என்றால், விவசாயிகளிடம் வாங்குவதில் சிரமம் இருக்கிறது. கஷ்டம் இருக்கிறது. மில்காரர்கள் விலையைக் குறைக்கிறார்கள் என்றால் அதைத் தவிர்க்க வழிவகை காண வேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு. மகாலிங்கம் அவர்கள், 'கிஸ்தியாக வாங்கிக் கொள்ளுங்கள்' என்ற ஒரு யோசனையைச் சொன்னார்கள். அதுவும் 'லெவி' போல, விவசாயிகளிடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்குவதாகத்தான் இருக்கும். அதுதான் விவசாயிகளுக்கு அதிகத் தொல்லையைக் கொடுக்கும் என்ற கவலை அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆனால், நேற்று நான் குறிப்பிட்டது போல, இதையெல்லாம் தவிர்க்கக்கூடிய வகையில், விவசாயிகளிடத்திலிருந்து வாங்கக் கூடியதற்கு அதிக பட்ச விலை என்ன என்று நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு உத்தரவு பிறப்பிக்கலாமா என்பதுபற்றி இப்பொழுது அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அப்படி அதிக பட்ச விலை நிர்ணயம் செய்து அந்த விலைக்கு விவசாயிகளிடத்திலே வாங்கலாம். கொள்முதல் செய்வது என்பது மில்காரர்களிடத்திலே வாங்குவது—விவசாயிகளிடத்திலிருந்து வாங்க என்ன அதிகபட்ச விலை வைக்கலாம் என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். அது நியாயமான விலையாகத்தான் இருக்கும். நியாயமான விலையாகத்தான் இருக்கவேண்டும். அம்மாதிரி வேறொரு உத்தரவு பிறப்பிக்க முடியாதா, பிறப்பிக்கவேண்டுமா என்பதைப்பற்றித்தான் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. அவ்வாறு நாம் உத்தரவு பிறப்பித்துவிட்டால், அநேகமாக இப்பொழுது ஏற்பட்டுக்கொண்டிருக்கிற சங்கடங்களும் கவலையும் நீங்கும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன். இதற்குமேல் இந்தச் சபையின் நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

திரு. எம். தண்டாயுதபாணி எழுந்தார்.

23rd January 1964]

MR. DEPUTY SPEAKER : The time allotted for the discussion has come to a close and it cannot be extended.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நெல் அறுவடை செய்யும்போது கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைட்டியிலே நெல் மூட்டைகளை அடமானம் வைத்திருந்து, நான்கைந்து மாதங்கள் கழித்து நெல் விலை ஏறும்போது, நெல்லை விற்க கூட்டுறவு சங்கங்கள் வழிவகை செய்கின்றன. ஆனால், பிற்பாடு ஐந்து மாதங்களுக்குப்பின் அந்த நெல்லை விலை அதிகமாக ஏறியிருக்கும் நிலையில் வியாபாரி எப்படி வாங்கக்கூடிய நிலை ஏற்படும் என்றால் அதிகமான விலைக்கு விற்க அவனுக்கு உரிமை இருந்தால்தான் வாங்க முடியும். ஆனால், இப்பொழுது நிர்ணயம் செய்திருக்கும் அடிப்படையில் இருபது க்விண்டாலுக்கு மேல், நிர்ணயித்த விலைக்குமேல், அந்த வியாபாரி விற்கக்கூடாது

கனம் திரு. எம். பக்தவத்சலம் : க்விண்டாலைப்பற்றிக் கனம் அங்கத்தினர் கவலைப்படவேண்டாம். கூட்டுறவு சங்கத்திற்காக கனம் அங்கத்தினர் பரிந்து பேசவேண்டாம். கூட்டுறவு சங்கங்கள் தாராளமாக விவசாயிகளுக்கு உதவி வரலாம். வரவேண்டுமென்று நான் சொல்கிறேன்.

THE MOTOR VEHICLES (MADRAS AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 1 OF 1964)—*cont.*

MR. DEPUTY SPEAKER : Now the discussion on the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) will be resumed.

* திரு. து. ப. அழகமுத்து : உதவித் தலைவர் அவர்களே, மோட்டார் வாகனத் திருத்த மசோதாவை நான் பொதுவாக வரவேற்று, வந்திருக்கும் திருத்தத்திலே உள்ள ஒன்றிரண்டு சந்தேகங்களுக்கு விளக்கம் கோருவதற்காக நான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம் என்று நினைக்கிறேன்.

இதிலே 'வேரியேஷன்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவரை நடைமுறையிலே 'வேரியேஷன்' என்று கூறினால், 'எக்ஸ்டென்ஷன்', 'டீவியேஷன்' முதலியவைகளைக் குறிக்கக் கூடிய சொல்லாக இருந்து வந்தது. ஆனால், இப்பொழுது அதைப் பிரித்து, 'வேரியேஷன்', 'எக்ஸ்டென்ஷன்', 'கர்ட்டெய்ல்மென்ட்' என்று தனித்தனியாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'வேரியேஷன்' என்பதற்கு விளக்கம்

"Provided that in the case of (1) variation the terminus shall not be altered and the distance covered by the variation shall not exceed twenty-four kilometres".

23rd January 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

வைத்து யோசனை செய்வது நல்லது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் செல்வராஜன் அவர்கள் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி எழுதி அனுப்பினுல் அதைப் பற்றி பொதுவாக விதிகள் ஏற்படுத்த வேண்டுமானல் செய்யத் தயாராக இருக்கிறோம். அல்லது தனிப்பட்ட முறையில் அதிகாரிகளுக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கவேண்டுமென்றலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

ஆகையால் இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is :—

"That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

VI—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

80. Notification issued with G.O. Ms. No. 1744, Public (Services-A), dated 11th November 1963 amending the Madras Public Service Commission Regulations, 1954 relating to the exclusion from the Commission's purview the posts of Salesman, Grade II, Service Centre for Manufacture of Electrical Goods, Industrial Estate, Guindy. (*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India*). 2-00 p.m.

B. Reports, notifications and other papers.

* 32. Annexure to the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964.

* Circulated to Members on 21st January 1964.

APPENDIX

[VIDE ANSWER TO STARRED QUESTION No. 74 ON PAGE 2]

A.—Seventy children out of 335 children in the Panchayat Union Elementary School, Pudupatti, had midday meals, on 10–10–1963. The midday meals supplied on that day consisted of boiled rice kanjee, thuvayal prepared out of multi-purpose food and milk reconstituted from milk powder. Out of the 70 children who took the midday meals 52 were affected with vomiting and purging and they were admitted in the Government Erskine Hospital, Madurai, on the night of 10–10–1963. Fifty out of 52 children were discharged on 11–10–1963. Only the remaining two required intravenous Saline Glucose and they too were also discharged on 12–10–1963. All the affected children are reported to be in normal health and are attending school.

2. The reports of the Director of Public Health and the Director of Public Instruction reveal that the kitchen and the store-room of the midday meal centre in question were kept clean and the vessels were found hygienic, that the water used for cooking was taken only from the usual well and that there was nothing to suspect about the water. The District Health Officer has taken samples of the milk powder and the multi-purpose food and has sent them for analysis. As a precautionary measure, the Panchayat Union Commissioner, Alanganallur, on the advice of the District Health Officer, issued instructions to all the schools in his panchayat union to suspend the serving of midday meal until the results of the analysis of milk powder and multi-purpose food are received from the Analyst. However, the supply of midday meal has been revived in the midday meal centres from Monday 14th October without using milk powder and multi-purpose food. Subsequently the District Health Officer has instructed the Panchayat Union Commissioner to revive the consumption of milk reconstituted from milk powder as the milk powder was not the cause of the food poisoning. The samples of CARE Milk Powder Multi-purpose food and par boiled rice, which were analysed by the Government Analyst, Guindy, were found to be free from chemical poison.

பதில்: அக்டோபர் மாதம் 10-ம் தேதியன்று புதுப்பட்டி பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியைச் சேர்ந்த 335 மாணவர்களில் 70 மாணவர்கள் மதிய உணவு உட்கொண்டனர். அன்றைய மதிய உணவில் பரிமாறிய உணவு, புழுங்கலரிசிக் கஞ்சி, பலநோக்க உணவிலிருந்து தயாரித்த துவையல், பால் பவுடரிலிருந்து தயாரித்த பால். மதிய உணவு உட்கொண்ட 70 மாணவர்களில் 52 சிறுவர்களுக்கு வாந்தி, பேதி கண்டது. அவர்கள் 10-10-1963 இரவு மதுரை அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். சேர்க்கப்பட்ட 52 சிறுவர்களில், 50 சிறுவர்கள் 11-10-1963-ல் மருத்துவ மனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப் பட்டனர். எஞ்சிய இரண்டு சிறுவர்களுக்கு மட்டும் "இன்ட்ரா

23rd January 1964]

வினஸ் ஸலைன் குளுகோஸ்" செலுத்த வேண்டியிருந்தது, அவர்களும் 12-10-1963-ல் மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டனர். பாதிக்கப்பட்ட எல்லாச் சிறுவர்களும் சாதாரண நிலையை அடைந்துவிட்டதுமன்றி, பள்ளிக்கும் சரிவர வந்துகொண்டிருக்கின்றனர்.

2. மதிய உணவு நிலையத்தின் சமையல் அறையும், பண்டகசாலையும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன என்றும், சமையல் பாத்திரங்கள் சுகாதாரமான முறையில் இருந்தன என்றும் பொதுச் சுகாதாரத் துறை டைரக்டரும், கல்வித்துறை டைரக்டரும் அனுப்பியுள்ள அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது. சமையலுக்குப் பயன்படுத்திய நீரும் வழக்கமான கிணற்றிலிருந்தே எடுக்கப்பட்டது. எனவே, நீரில் ஏதாவது கலந்திருக்குமோ என்ற ஐயத்திற்கும் இடமில்லை. பால் பவுடர், பலநோக்கு உணவு இவற்றின் மாதிரிகளை மாவட்டச் சுகாதார அதிகாரி பரிசோதனைக்கு அனுப்பியுள்ளார். மாவட்ட சுகாதார அதிகாரியின் ஆலோசனைப்படி, அலங்கநல்லூர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பால் பவுடர், பலநோக்கு உணவு ஆகியவற்றைப் பரிசோதித்து முடிவு தெரியும் வரையில் மதிய உணவை நிறுத்திவைக்குமாறு தமது பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளனர். ஆயினும் அக்டோபர் 14-ம் தேதி திங்கட்கிழமை முதல், பால் பவுடரையும் பலநோக்கு உணவையும் பயன்படுத்தாமல், மீண்டும் மதிய உணவு போட ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் பின்னர், பால் பவுடரின் காரணமாக விஷம் கலந்திருக்க ஏதுவில்லாததால், பால் பவுடரிலிருந்து பால் தயாரிக்கும் வழக்கத்தை மீண்டும் தொடங்குமாறு மாவட்டச் சுகாதார அதிகாரி பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். கேர் பால் பவுடர், பலநோக்கு உணவு, புழுங்கல் அரிசி இவைகளின் மாதிரிகளை பரிசோதித்த கிண்டி உணவுப் பரிசோதனையாளர், அவைகளில் ஏதும் விஷம் கலந்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

TRUTH ALONE TRIUMPHS

LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS